## முன்னுரை

கிரேக்கு தேசத்தில் கொரிந்து மிகவும் முக்கியமான பட்டணம். தேசத்தின் மையப்பகுதியில் கொரிந்து பட்டணம் அமைந்திருக்கிறது. கிரேக்கு தேசத்தில் பெலபொனேசஸ் என்பது ஒரு முக்கியமான பகுதி. கொரிந்து பட்டணம் கிரேக்கு தேசத்தை இந்தப் பட்டணத்தோடு இணைக்கிறது. இதற்கு அருகில் இரண்டு துறைமுகப்பட்டணங்கள் உள்ளன. அவையாவன: 1. லீகோயம் 2. கெங்கிரேயா. லீகோயம் துறைமுகம் கொரிந்து பட்டணத்திற்கு அருகாமையிலுள்ளது. இங்கிருந்து இத்தாலியா தேசத்திற்கும், மேற்கத்தி தேசங்களுக்கும் வியாபாரம் நடைபெற்றது.

கெங்கிரேயா துறைமுகம் கொரிந்து பட்டணத்திலிருந்து அதிகத் தூரத்தில் அமைந்திருக்கிறது. அக்காலத்தில் இங்கிருந்து ஆசியா தேசத்திற்கு வியாபாரம் நடைபெற்றது. கொரிந்து பட்டணத்தைச் சுற்றிலும் ஏராளமான வணிகஸ்தலங்கள் இருந்தன. அதிக வியாபாரம் நடைபெற்றது. பொருளாதாரத்தில் சிறந்து விளங்கிற்று. ஐசுவரியம் பெருகியிருந்ததினால் பாவப்பழக்க வழக்கங்கள் வாழ்க்கைகளும் இங்கு பெருகியிருந்தது. இந்தப் பட்டணத்தில் அப்போஸ்தலர் பவுல் ஒரு சபையை ஸ்தாபித்தார். புறஜாதியாரில் அநேகர் இந்தச் சபையில் விசுவாசிகளாக இருந்தார்கள்.

கொரிந்துவிலுள்ள சபை விசுவாசிகளில் அநேகர் ஒரு காலத்தில் விக்கிரகாராதனைக் காரராயிருந்தார்கள். யூதமார்க்கத்திலிருந்து இயேசு கிறிஸ்துவைத் தங்கள் தேவனாக ஏற்றுக் கொண்டு இரட்சிக்கப்பட்ட ஒரு சிலரும் இந்தச் சபையில் விசுவாசிகளாயிருந் தார்கள். புறஜாதியாரின் எண்ணிக்கையோடு, யூத மார்க்கத்திலிருந்து வந்த விசுவாசிகளின் எண்ணிக்கையை ஒப்பிட்டுப் பார்க்கும் போது, இவர்கள் மிகவும் கொஞ்சம் பேராயிருந்தார்கள்.

கிறிஸ்பு என்பவர் ஜெபாலயத்திற்குத் தலைவர். இவர் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவில் விசுவாசம் வைத்திருந்தார். "ஜெப ஆலயத்தலைவனாகிய கிறிஸ்பு என்பவன் தன் வீட்டார் அனைவரோடும் கர்த்தரிடத்தில் விசுவாசமுள்ளவனானான். கொரிந்தியரில் அநேகரும் சுவிசேஷத்தைக் கேட்டு, விசுவாசித்து, ஞானஸ்நானம் பெற்றார்கள்" (அப் 18:8).

பவுல் கொரிந்து பட்டணத்தில் இரண்டு வருஷங்கள் தங்கியிருந்து ஊழியம் செய்தார். கர்த்தர் பவுலுக்குத் தரிசனமாகி இந்தப் பட்டணத்தில் தமக்கு அநேக ஜனங்கள் உண்டு என்று சொன்னார். "இராத்திரியிலே கர்த்தர் பவுலுக்குத் தரிசனமாகி: நீ பயப்படாமல் பேசு, மவுனமாயிராதே; நான் உன்னுடனேகூட இருக்கிறேன், உனக்குத் தீங்குசெய்யும்படி ஒருவனும் உன்மேல் கைபோடுவதில்லை; இந்தப் பட்டணத்தில் எனக்கு அநேக ஜனங்கள் உண்டு என்றார்" (அப் 18:9,10). கர்த்தரின் வார்த்தையினால் பவுல் உற்சாகமடைந்து, கொரிந்து பட்டணத்தில் உண்மையாய் ஊழியம் செய்தார்.

இரண்டு வருஷங்களுக்குப் பின்பு பவுல் மற்ற இடங்களில் ஊழியம் செய்வதற்காக கொரிந்து பட்டணத்தைவிட்டுப் புறப்பட்டுப்போனார். சிறிது காலத்திற்குப் பின்பு அவர் கொரிந்துவிலுள்ள விசுவாசிகளுக்கு இந்த நிருபத்தை எழுதினார். பவுல் இங்கு சபையை ஸ்தாபித்திருக்கிறார். சபையை நட்டியிருக்கிறார். புதிய சபைக்கு தண்ணீர் பாய்ச்சும் வண்ணமாக பவுல் இந்த நிருபத்தை எழுதியிருக்கிறார்.

பவுல் கொரிந்து சபையில் இல்லாத காலத்தில், சபைக்குள் சில பிரச்சனைகள் உண்டாயிற்று. குழப்பங்கள் உண்டாயிற்று. அவற்றையெல்லாம் சரிசெய்யும் வண்ணமாக பவுல் இந்த நிருபத்தை எழுதுகிறார். பெருமை, மாம்சத்தின் இச்சை, பிரிவினைகள், ஐசுவரியத்தின் மயக்கம், வேசித்தனங்களும் விபசாரங்களும், துன்மார்க்கமான சுபாவங்களும் கிரியைகளும் கொரிந்து சபையில் நிறைந்திருந்தது. அப்போஸ்தலர் பவுல் கொரிந்துவிலுள்ள விசுவாசிகளுக்கு இந்த நிருபத்தைப் பொதுவாக எழுதினாலும், அவர்களில் ஒரு சிலரைக் குறிப்பிட்டும் எழுதுகிறார். ஒரு சில விசுவாசிகளின் பெருமையினால் சபைக்குள் பிரிவினைகளும் குழப்பங்களும் உண்டாயிற்று.

ஒரு சிலர் ஐசுவரிய மயக்கத்தினால் நிறைந்திருந்தார்கள். வேறு சிலர் கிறிஸ்துவின் உபதேசத்தோடு கிரேக்க தத்துவ உபதேசங்களையும் கலந்து உபதேசித்தார்கள். விசுவாசிகள் மத்தியில் பிரச்சனைகள் வந்தபோது, அவர்களுடைய வழக்குகள் புறஜாதியாருடைய நீதிமன்றங்களில் விசாரிக்கப்பட்டது. அதிகமான வியாபாரங்களும், அதிகமான பொருளாதாரங்களும் கொரிந்து பட்டணத்தில் இருந்ததினால், அதிகமான பிரச்சனைகளும், அதிகமான வழக்குகளும் உண்டாயிற்று.

கொரிந்து சபையிலுள்ள விசுவாசிகளிடத்தில் ஒழுங்கும் கிரமமும் காணப்படவில்லை. கர்த்தருடைய பந்தியை அவர்கள் ஒழுங்காயும், கிரமமாயும் ஆசரிக்கவில்லை. கர்த்தருடைய பந்தியை அவர்கள் அசுத்தப்படுத்தினார்கள். கர்த்தருடைய சித்தத்திற்கு முக்கியத்துவம் கொடுப்பதற்குப் பதிலாக, அவர்களில் சிலர் தங்கள் மாம்ச இச்சைக்கு முக்கியத்துவம் கொடுத்தார்கள். ஒரு சிலர் தங்கள் தகப்பனின் மனைவியை தங்களுக்கு மனைவியாகக் கொண்டார்கள். கொரிந்து சபையில் இந்த அளவுக்கு துன்மார்க்கம் நிறைந்திருந்தது.

விசுவாசிகள் மத்தியில் வேசித்தனமும் விபச்சாரமும் நிறைந்திருந்தது. இவர்கள் ஒரு காலத்தில் விக்கிரகாராதனைக் காரராயிருந்தார்கள். இஸ்ரவேலின் காணியாட்சிக்குப் புறம்பானவர்களாயிருந்தார்கள். அக்காலத்தில் அவர்களிடத்தில் விக்கிரகாராதனையும், வேசித்தனமும் அதிகமாயிருந்தது. கிறிஸ்துவின் சபைக்கு வந்த பின்பு அவர்கள் விக்கிரகாராதனையை விட்டு விலகி வந்தார்கள். ஆனால் அவர்கள் வேசித்தனத்தையும் விபச்சாரத்தையும் விட்டு விலகிவரவில்லை. மாம்ச சிந்தையினால் நிறைந்திருந்தார்கள். பவுல் இவர்களுடைய துன்மார்க்கமான கிரியைகளுக்கு விரோதமாக இந்த நிருபத்தில் எச்சரித்து எழுதுகிறார்.

கொரிந்து சபையிலுள்ள விசுவாசிகளில் சிலர் அதிகம் கல்வி கற்றவர்கள். உலகப் பிரகாரமான ஞானிகளாகயிருக்கிறார்கள். கிறிஸ்துவின் உபதேசத்தைவிட இவர்கள் உலகஞானத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கிறார்கள். இயேசுகிறிஸ்து உயிர்த்தெழுந்தார் என்னும் உபதேசத்தை இவர்களில் ஒரு சிலர் விசுவாசிக்கவில்லை. அந்த உபதேசத்திற்கு விரோதமாகத் தர்க்கம்பண்ணினார்கள்.

கொரிந்து சபையில் பலவிதமான ஒழுங்கீனங்கள் காணப்பட்டது. இவையெல்லாவற்றையும் திருத்த வேண்டுமென்றும், ஒழுங்குபடுத்த வேண்டுமென்றும் தீர்மானித்து பவுல் இந்த நிருபத்தை அவர்களுக்கு எழுதுகிறார். பவுல் புறஜாதியாருக்கு அப்போஸ்தலராயிருக்கிறார். தேவன் அவரிடத்தில் அப்போஸ்தல ஊழியத்தையும், அப்போஸ்தல அதிகாரத்தையும் கொடுத்திருக்கிறார். பவுல் இந்த நிருபத்தை எழுதும்போது, தன்னுடைய அப்போஸ்தல அதிகாரத்தையும், அதோடு தான் அவர்கள்மீது வைத்திருக்கும் அன்பையும் சேர்த்து எழுதுகிறார்.

# 1 கொரிந்தியர் - விரிவுரை

# I CORINTHIANS - COMMENTARY

இந்த நிருபத்தின் ஆரம்பத்தில் கொரிந்துவிலுள்ள விசுவாசிகளுக்கு வாழ்த்துதல் சொல்லுகிறார். அதன்பின்பு அவர்களிடத்தில் காணப்படுகிற குழப்பங்களையும், ஒழுங்கீனங்களையும் அவர்களுக்கு விளக்கமாகச் சொல்லுகிறார். அதனிமித்தமாக அவர்களைக் கடிந்துகொள்கிறார். அவர்கள் மத்தியில் மனத்தாழ்மையும் உண்மையான அன்பும் காணப்படவேண்டுமென்று அவர்களுக்கு ஆலோசனை சொல்லுகிறார்.

முதல் நான்கு அதிகாரத்தில் கொரிந்து சபையில் காணப்படுகிற பிரச்சனைகளைப்பற்றியும், அவற்றை தீர்த்துவைப்பதற்கு தன்னுடைய ஆலோசனைகளையும் பவுல் விரிவாக எழுதுகிறார். ஐந்தாவது அதிகாரத்தில் விபச்சாரம் பண்ணுகிறவர்களைக் கடிந்துகொண்டு அவர்களுக்குப் புத்திசொல்கிறார்.

ஆறாவது அதிகாரத்தில் விசுவாசிகள் மத்தியில் காணப்படுகிற வழக்குகளைப்பற்றி பேசுகிறார். புறஜாதியாரின் நீதிபதிகள் மத்தியில் விசுவாசிகளுடைய வழக்குகள் விசாரிக்கப்படுவதைப் பவுல் கடிந்துகொள்கிறார். ஏழாவது அதிகாரத்தில் திருமண காரியங்களைக் குறித்து ஆலோசனை சொல்லுகிறார். எட்டாவது அதிகாரத்தில் விக்கிரகங்களுக்குப் படைக்கப் பட்டவைகளைப்பற்றி பவுல் எழுதுகிறார்.

ஒன்பதாவது அதிகாரத்தில் தன்னைப்பற்றியும், தன் ஊழியத்தைப்பற்றியும் பவுல் சுருக்கமாகச் சொல்லுகிறார். பத்தாவது அதிகாரத்தில் விக்கிரகாராதனைக்காரரோடு நமக்குள்ள ஐக்கியத்தைக் கட்டுப்படுத்துகிறார். விக்கிரங்களுக்கு படைக்கப்பட்டதை விசுவாசிகள் புசிக்கக்கூடாது என்று தடைபண்ணுகிறார். கொரிந்துவிலுள்ள விசுவாசிகள் கர்த்தருடைய பந்தியிலும் பிசாசுகளின் பந்தியிலும் பங்குபெறுவதைக் கண்டித்து உணர்த்துகிறார்.

பதினோராவது அதிகாரத்தில் ஆவிக்குரிய ஆராதனையைப்பற்றிச் சொல்லுகிறார். கர்த்தருடைய பந்தியில் கடைப்பிடிக்கப்படுகிற ஒழுங்குமுறைகளை விவரிக்கிறார். பன்னிரண்டாவது அதிகாரத்தில் பவுல் ஆவிக்குரிய வரங்களைப்பற்றி எழுதுகிறார். பதின்மூன்றாவது அதிகாரத்தில் அன்பின் முக்கியத்துவத்தைப்பற்றிச் சொல்லுகிறார்.

பதிநான்காவது அதிகாரத்தில் ஆவிக்குரிய வரங்களை சபையின் பக்திவிருத்திக்கேதுவாக எவ்வாறு பயன்படுத்தவேண்டுமென்று ஆலோசனை சொல்லுகிறார். பதினைந்தாவது அதிகாரத்தில் கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலைப்பற்றிய உபதேசத்தை விரிவாக எடுத்துச்சொல்லுகிறார். இந்த நிருபத்தின் முடிவில் பவுல் கொரிந்துவிலுள்ள விசுவாசிகளிடத்தில் ஒரு சில ஆலோசனைகளைச் சொல்லி, அவர்களுக்கு வாழ்த்துதல் சொல்லி இந்த நிருபத்தை நிறைவுசெய்கிறார்.

## 1 அதிகாரம்

முன்னுரை (1கொரி 1:1-9). கொரிந்து சபையில் பிரிவினைகள் (1கொரி 1:10-13). பவுலின் ஊழியம் (1கொரி 1:14-16). பவுலின் பிரசங்கம் (1கொரி 1:17-31).

### முன்னுரை 1கொரி 1 : 1-9

1கொரி 1:1. தேவனுடைய சித்தத்தினாலே இயேசு கிறிஸ்துவின் அப்போஸ்தலனாகும்படி அழைக்கப்பட்டவனாகிய பவுலும், சகோதரனாகிய சொஸ்தெனேயும்,

1கொரி 1:2. கொரிந்துவிலே கிறிஸ்து இயேசுவுக்குள் பரிசுத்தமாக்கப் பட்டவர்களாயும், பரிசுத்தவான்களாகும்படி அழைக்கப் பட்டவர்களாயுமிருக்கிற தேவனுடைய சபைக்கும், எங்களுக்கும் தங்களுக்கும் ஆண்டவராயிருக்கிற நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தை எங்கும் தொழுதுகொள்ளுகிற அனைவருக்கும் எழுதுகிறதாவது:

1கொரி 1:3. நம்முடைய பிதாவாகிய தேவனாலும் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினாலும் உங்களுக்குக் கிருபையும் சமாதானமும் உண்டாவதாக.

1கொரி 1:4. கிறிஸ்துவைப்பற்றிய சாட்சி உங்களுக்குள்ளே ஸ்திரப்படுத்தப்பட்டபடியே,

1கொரி 1:5. நீங்கள் இயேசுகிறிஸ்துவுக்குள்ளாய் எல்லா உபதேசத்திலும் எல்லா அறிவிலும், மற்றெல்லாவற்றிலும் சம் பூரணமுள்ளவர்களாக்கப் பட்டிருக்கிறபடியால்,

1கொரி 1:6. அவர் மூலமாய் உங்களுக்கு அளிக்கப்பட்ட தேவகிருபைக்காக, நான் உங்களைக் குறித்து எப்பொழுதும் என் தேவனை ஸ்தோத்திரிக்கிறேன்.

1கொரி 1:7. அப்படியே நீங்கள் யாதொரு வரத்திலும் குறைவில்லாதவர்களாய், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து வெளிப்படுவதற்குக் காத்திருக்கிறீர்கள்.

1கொரி 1:8. நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாளிலே நீங்கள் குற்றஞ் சாட்டப்படாதவர்களாயிருக்கும் படி முடிவு பரியந்தம் அவர் உங்களை ஸ்திரப்படுத்துவார்.

1கொரி 1:9. தம்முடைய குமாரனும் நம்முடைய கர்த்தருமாயிருக்கிற இயேசு கிறிஸ்துவுடனே ஐக்கியமாயிருப்பதற்கு உங்களை அழைத்த தேவன் உண்மையுள்ளவர்.

### இயேசுகிறிஸ்துவின் அப்போஸ்தலன்

தேவனுடைய சித்தத்தினாலே இயேசு கிறிஸ்துவின் அப்போஸ்தலனாகும்படி அழைக்கப் பட்டவனாகிய பவுலும், சகோதரனாகிய சொஸ்தெனேயும், கொரிந்துவிலே கிறிஸ்து இயேசுவுக்குள் பரிசுத்தமாக்கப் பட்டவர்களாயும், பரிசுத்தவான்களாகும்படி அழைக்கப் பட்டவர்களாயுமிருக்கிற தேவனுடைய சபைக்கும், எங்களுக்கும் தங்களுக்கும் ஆண்டவராயிருக்கிற நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தை எங்கும் தொழுதுகொள்ளுகிற அனைவருக்கும் எழுதுகிறதாவது: (1கொரி 1:1,2)

அப்போஸ்தலர் பவுல் கொரிந்தியருக்கு எழுதின முதலாவது நிருபத்தின் முன்னுரையாக இந்த வசனங்களை எழுதுகிறார். கொரிந்து பட்டணத்தில் பவுல் கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து ஊழியம் செய்தார். அப்போது அங்கு ஒரு சபையை ஸ்தாபித்தார். அந்தச் சபையிலுள்ள விசுவாசிகளில் அநேகர் பவுல்மீது சகோதர சிநேகத்தோடிருக்கிறார்கள். ஆனாலும் அவர்களில் சிலர் பவுலின் அப்போஸ்தல ஊழியத்தைக் குறித்து கேள்வி எழுப்புகிறார்கள் (1கொரி 9:1,2).

பவுல் கர்த்தருக்காக உண்மையாய் ஊழியம் செய்கிறவர். ஆனாலும் அவருடைய ஊழியத்தைப்பற்றியும் சிலர் கேள்வி கேட்கிறார்கள். பவுலைப்போலவே கர்த்தருடைய ஊழியக்காரர்களில் அநேகர் உண்மையாயும் பிரயோஜனமாயும் ஊழியம் செய்கிறார்கள். இவர்களைக் குறித்தும் ஒரு சிலர் கேள்வி கேட்பதுண்டு. தங்கள்மீது கூறப்படுகிற குற்றச்சாட்டுக்களுக்கு மத்தியில், ஊழியக்காரர்கள் தங்கள் நற்பெயரைக் காத்துக்கொள்ளவேண்டும்.

பவுல் தன்னுடைய அப்போஸ்தல ஊழியத்தைப்பற்றிச் சொல்லும்போது, "தேவனுடைய சித்தத்தினாலே இயேசு கிறிஸ்துவின் அப்போஸ்தலனாகும்படி அழைக்கப்பட்டவனாகிய பவுல்" என்று சொல்லுகிறார். அப்போஸ்தல ஊழியத்தை பவுல் தனக்கு மகிமையாக எடுத்துக்கொள்ளவில்லை. தேவன் தம்முடைய தெய்வீக சித்தத்தின் பிரகாரம் அப்போஸ்தல ஊழியத்தைத் தனக்குக் கொடுத்திருப்பதாக உறுதிபண்ணுகிறார்.

தன்னுடைய ஊழியத்தின்மீது ஒரு சிலர் குற்றம் சொல்லும்போது, பவுல் தன்மீது கூறப்படும் குற்றச்சாட்டுக்களுக்குப் பதில்சொல்ல வேண்டும். தன்னைப்பற்றியும், தான் செய்கிற ஊழியத்தைப்பற்றியும் அவர்களுக்கு எடுத்துச்சொல்லவேண்டும். கள்ளப்போதகர்கள் பவுலினுடைய ஊழியத்தின்மீது குற்றம்சொல்லி, தங்களுக்கு ஆதாயம் தேடப்பார்க்கிறார்கள்.

பவுலின் இருதயத்தில் பெருமையில்லை. தேவன் பவுலை நம்பி அப்போஸ்தல ஊழியத்தை அவரிடத்தில் ஒப்புக்கொடுத்திருக்கிறார். அவருக்கு அப்போஸ்தல அதிகாரத்தைக் கொடுத்திருக்கிறார். தனக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் ஊழியத்திற்கும் அதிகாரத்திற்கும் பவுல் உண்மையுள்ளவராயிருக்கிறார்.

பவுல் இந்த நிருபத்தை எழுதும்போது தன்னோடு சொஸ்தேனே என்பவரையும் சேர்த்துக்கொள்கிறார். இவர் பவுலுக்கு ஆவிக்குரிய சகோதரர். ஒரு காலத்தில் இவர் யூதருடைய ஜெபாலயத்திற்குத் தலைவராகயிருந்தார். அதன்பின்பு கிறிஸ்துவின் உபதேசத்தை ஏற்றுக்கொண்டு, கிறிஸ்துவை விசுவாசித்து, இரட்சிக்கப்பட்டார். இந்த நிருபத்தின் மற்ற வசனங்களிலெல்லாம் பவுல் தன்னுடைய பெயரை மாத்திரமே பயன்படுத்துகிறார். தான் மாத்திரமே கொரிந்துவிலுள்ள விசுவாசிகளுக்கு ஆலோசனை சொல்லுவது போலவே சொல்லுகிறார்.

கொரிந்துவிலே கிறிஸ்து இயேசுவுக்குள் பரிசுத்தமாக்கப் பட்டவர்களாயும், பரிசுத்தவான்களாகும்படி அழைக்கப் பட்டவர்களாயுமிருக்கிற தேவனுடைய சபைக்கும், கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தை எங்கும் தொழுதுகொள்கிற அனைவருக்கும் பவுல் இந்த நிருபத்தை எழுதுகிறார். எல்லா விசுவாசிகளும் இயேசுகிறிஸ்துவுக்குள் பரிசுத்தமாக்கப்பட்டவர்களாயிருக்கிறார்கள்.

ஞானஸ்நானத்தின் மூலமாய் விசுவாசிகள் தங்களைத் தேவனுக்கு ஒப்புக்கொடுத்து அர்ப்பணித்திருக்கிறார்கள். விசுவாசிகள் பரிசுத்தமாயில்லையென்றால் அது அவர்களுடைய தப்பிதம்தான். பரிசுத்தமில்லாதவர்கள் தங்களுக்குத் தாங்களே நிந்தையாயிருக் கிறார்கள். மற்றவர்களுக்கும் நிந்தையாயிருக்கிறார்கள்.

நாம் இயேசுகிறிஸ்துவுக்குள் பரிசுத்தமாக்கப் பட்டவர்களாயிருக்க வேண்டுமென்பது தேவனுடைய சித்தம். பவுல் இந்த நிருபத்தை கொரிந்துவிலுள்ள விசுவாசிகளுக்கு மாத்திரமல்ல, கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தை எங்கும் தொழுதுகொள்கிற அனைவரும் எழுதுகிறார். கர்த்தராகிய இயேசுகிறிஸ்து தங்களுக்கும் அவர்களுக்கும் ஆண்டவராயிருப்பதாக அறிக்கை செய்கிறார். எல்லா இடங்களிலும், எல்லா தேசங்களிலும், எல்லா ஊர்களிலும் தேவன் தமக்கு மீதியானவர்களை வைத்திருக்கிறார். அவர்களெல்லோரோடும் கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் ஐக்கியமாயிருக்கவேண்டும். அவர்களை இயேசுகிறிஸ்துவின் நாமத்தினிமித்தம் சந்திக்கவேண்டும். அவர்களுக்கு வாழ்த்துதல் சொல்லவேண்டும்.

## கிருபையும் சமாதானமும்

**நம்முடைய பிதாவாகிய தேவனாலும் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினாலும் உங்களுக்குக் கிருபையும் சமாதானமும் உண்டாவதாக (1கொரி 1:3).**

அப்போஸ்தலர் பவுல் கொரிந்துவிலுள்ள விசுவாசிகளுக்கு அப்போஸ்தல ஆசீர்வாதத்தைச் சொல்லுகிறார். " நம்முடைய பிதாவாகிய தேவனாலும் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினாலும் உங்களுக்குக் கிருபையும் சமாதானமும் உண்டாவதாக". கிருபையும் சமாதானமும் தேவன் நமக்குக் கொடுக்கிற சிலாக்கியங்கள். இவற்றின் மூலமாய் நாம் தேவனோடு ஒப்புவாகுகிறோம். கிருபையும் சமாதானமுமே எல்லா ஆசீர்வாதங் களுக்கும் ஆதாரமாயிருக்கிறது.

சுவிசேஷத்தின் மூலமாய் தேவன் நமக்கு இரண்டு சிலாக்கியங்களைத் தருகிறார். அவையாவன: 1. நாம் தேவனிடத்திலிருந்து சமாதானத்தைப் பெற்றுக்கொள்ளலாம். இந்த சமாதானம் கிறிஸ்துவிலும், கிறிஸ்துவின் மூலமாயும் நமக்கு உண்டாயிருக்கிறது. 2. தேவனுடைய சமாதானத்தைப் பெற்றுக்கொள்வதற்கு தேவன் நம்மைத் தகுதிப்படுத்துகிறார். தேவன் தம்முடைய கிருபையை நமக்கு முதலாவதாகத் தருகிறார். முதலாவது கிருபையும் அதன்பின்பு சமாதானமும் நமக்குக் கிடைக்கிறது. தேவனுடைய கிருபை நமக்குக் கிடைக்கும்போது, தேவனுடைய சமாதானத்தைப் பெற்றுக்கொள்வதற்கு நாம் தகுதியுள்ளவர்களாயிருக்கிறோம்.

## தேவனை ஸ்தோத்திரிக்கிறேன்

**கிறிஸ்துவைப்பற்றிய சாட்சி உங்களுக்குள்ளே ஸ்திரப்படுத்தப் பட்டபடியே, நீங்கள் இயேசுகிறிஸ்துவுக்குள்ளாய் எல்லா உபதேசத்திலும் எல்லா அறிவிலும், மற்றெல்லாவற்றிலும் சம்பூரணமுள்ள வர்களாக்கப்பட்டிருக்கிறபடியால், அவர் மூலமாய் உங்களுக்கு அளிக்கப்பட்ட தேவகிருபைக்காக, நான் உங்களைக் குறித்து எப்பொழுதும் என் தேவனை ஸ்தோத்திரிக்கிறேன் (1கொரி 1:4-6).**

அப்போஸ்தலர் பவுல் கொரிந்துவிலுள்ள விசுவாசிகளினி மித்தமாய் தேவனை ஸ்தோத்திரிக்கிறார். பவுல் தன்னுடைய நிருபங்களெல்லாவற்றிலும் தன்னுடைய சிநேகிதருக்காக தேவனை ஸ்தோத்திரிப்பதும், தேவனிடத்தில் ஜெபிப்பதும் வழக்கம். இந்த நிருபத்திலும் கொரிந்துவிலுள்ள விசுவாசிகளுக்காக பவுல் தேவனை ஸ்தோத்திரிக்கிறார். தேவனை ஸ்தோத்திரிப்பதற்கு இரண்டு காரணங்களையும் சொல்லுகிறார். அவையாவன : 1. அவர்கள் கிறிஸ்துவை விசுவாசிக்கிறார்கள். 2. அவர்கள் ஆவிக்குரிய வரங்களை அதிகமாய்ப் பெற்றிருக்கிறார்கள்.

கொரிந்துவிலுள்ள விசுவாசிகள் ஒரு காலத்தில் புறஜாதி ஜனங்களாயிருந்தார்கள். விக்கிரகாராதனைக் காராயிருந்தார்கள். இப்போதோ அவர்கள் மனந்திருந்தி, இயேசுகிறிஸ்துவை விசுவாசித்து, கிறிஸ்துவின் மூலமாய் இரட்சிக்கப் பட்டிருக்கிறார்கள். இயேசுகிறிஸ்துவின் மூலமாய் அவர்களுக்குத் தேவகிருபை அளிக்கப் பட்டிருக்கிறது (1கொரி 1:6). தேவனோடு விசுவாசத்தினால் இணைக்கப் பட்டிருக்கிறவர்கள் தேவனுடைய தெய்வீக கிருபைகளைப் பெற்றுக்கொள்வார்கள். தேவன் அவர்கள்மீது அதிகமாய் அன்புகூருவார்.

கொரிந்துவிலுள்ள விசுவாசிகள் ஆவிக்குரிய வரங்களை அதிகமாய்ப் பெற்றிருக்கிறார்கள். அவர்கள் யாதொரு வரத்திலும் குறைவில்லாதவர் களாயிருக்கிறார்கள் (1கொரி 1:7). பவுல் இங்கு இரண்டு வரங்களைக் குறிப்பிடுகிறார். அவையாவன: 1. உபதேசம், 2. அறிவு. இவர்கள் கிறிஸ்துவுக்குள்ளாய் எல்லா உபதேசத்திலும், எல்லா அறிவிலும் சம்பூரணமுள்ளவர்களாய் ஆக்கப் பட்டிருக்கிறார்கள்.

ஒரு சிலர் நன்றாய்ப் பேசுவார்கள். ஆனால் அவர்களுடைய பேச்சில் அறிவு இருக்காது. அவர்களுடைய வார்த்தைகளில் ஜீவன் இருக்காது. பிரயோஜனமில்லாதவற்றைப் பேசுவார்கள். வேறு சிலரோ அறிவில் சிறந்திருப்பார்கள். ஆனால் தங்களிடத்திலுள்ள அறிவை மற்றவர்களுக்கு வெளிப்படுத்திப் பேசமாட்டார்கள். இவர்களால் யாருக்கும் எந்தப் பிரயோஜனமும் இருக்காது. இவர்களுடைய அறிவு இவர்களுக்குள் மாத்திரம்தான் இருக்கும். தங்களிடத்திலுள்ள அறிவை மற்றவர்களுக்குப் பகிர்ந்து கொடுக்கமாட்டார்கள்.

தேவன் தம்முடைய பிள்ளைகளுக்கு பேச்சையும் அறிவையும் இணைத்துக் கொடுக்கிறார். கர்த்தருடைய பிள்ளைகள் பேச்சிலும் அறிவிலும் வல்லவர்களாக இருக்கவேண்டும். நம்முடைய பேச்சு ஞானமுள்ளதாகயிருக்க வேண்டும். மற்றவர்களுக்குப் பிரயோஜனமுண்டாகப் பேசவேண்டும். கிறிஸ்து நம்மோடு இருக்கும்போது மாத்திரமே நமக்கு இந்த வரங்கள் கொடுக்கப்படும். இந்த வரங்களையுடையவர்கள் கிறிஸ்து தங்களோடிருக்கிறார் என்பதற்கு சாட்சியாயிருக்கிறார்கள்.

நம்முடைய சபையில் ஆவியானவருடைய வரங்கள் அதிகமாய்க் கிரியை நடப்பிக்கவேண்டும். வரங்கள் அதிகரிக்கும்போதுதான் அங்கு தேவனுடைய ஊழியம் குறைவில்லாமல் சிறப்பாய் நடைபெறும். தேவனுடைய பிரசன்னம் சபையின் மத்தியிலிருக்கிறது என்பதற்கு ஆவியின் வரங்கள் சான்றாகயிருக்கிறது. ஆகையினால்தான் விசுவாசிகளாகிய நாம் யாதொரு வரத்திலும் குறைவில்லாதவர்களாயிருக்க வேண்டும் என்று பவுல் ஆலோசனை சொல்லுகிறார்.

## தேவன் உண்மையுள்ளவர்

**அப்படியே நீங்கள் யாதொரு வரத்திலும் குறைவில்லாதவர்களாய், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து வெளிப்படுவதற்குக் காத்திருக்கிறீர்கள். நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாளிலே நீங்கள் குற்றஞ்சாட்டப் படாதவர்களாயிருக்கும் படி முடிவு பரியந்தம் அவர் உங்களை ஸ்திரப்படுத்துவார். தம்முடைய குமாரனும் நம்முடைய கர்த்தருமாயிருக்கிற இயேசு கிறிஸ்துவுடனே ஐக்கியமாயிருப்பதற்கு உங்களை அழைத்த தேவன் உண்மையுள்ளவர் (1கொரி 1:7-9).**

கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து வெளிப்படுவதற்குக் காத்திருக்கிறோம். நாம் ஒவ்வொரு நாளும் காத்திருக்கிறோம். இந்த விசுவாசத்தோடு நாம் ஜீவிக்கிறோம். இயேசுகிறிஸ்து வெளிப்படுவதற்காக காத்திருப்பதே நம்முடைய விசுவாசத்தின் அஸ்திபாரம். இயேசுகிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாமெல்லோரும் விசுவாசத்தோடு காத்திருக்கவேண்டும். நம்முடைய எதிர்பார்ப்பு வலுவாயிருக்க வேண்டும். நம்முடைய விசுவாசம் வலுவாயிருந்தால்தான், நம்முடைய எதிர்பார்ப்பும் வலுவாயிருக்கும். விசுவாசமில்லாமல் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து வெளிப்படுவதற்கு காத்திருக்க முடியாது. விசுவாசமில்லாமல் காத்திருப்பதில் அர்த்தமில்லை.

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து வெளிப்படும்போது தேவன் தம்முடைய கிருபையை நமக்குக் காண்பிப்பார். இயேசுகிறிஸ்து வெளிப் படுவதற்கு காத்திருக்கிற விசுவாசிகளைப் பவுல் உற்சாகப்படுத்துகிறார். அவர்களுடைய விசுவாசத்தை வர்த்திக்கப் பண்ணுவதற்கு ஆதரவான வார்த்தைகளைப் பேசுகிறார். கிறிஸ்துவின் அன்பையும், வல்லமையையும், உண்மையையும் எடுத்துச் சொல்லி விசுவாசிகளை உற்சாகப்படுத்துகிறார்.

கர்த்தராகிய இயேசுகிறிஸ்து தாமே நம்முடைய இருதயங்களில் நற்கிரியையை ஆரம்பித்து வைத்திருக்கிறார். முடிவு பரிந்தம் அவர் நம்மை ஸ்திரப்படுத்துவார். நம்மை அழைத்த தேவன் உண்மையுள்ளவர். நமக்குள் நற்கிரியையை ஆரம்பித்து வைத்தவர், நிச்சயமாகவே அதை நிறைவேற்றுவார். அதை நிறைவேற்றாமல் பாதியில் நம்மை கைவிட்டுவிடமாட்டார். கர்த்தராகிய இயேசுகிறிஸ்து வெளிப்படுவதற்கு காத்திருக்கிறவர்கள் வெட்கப்பட்டுப் போவதில்லை. தேவன் அவர்களை பாதுகாத்துக்கொள்வார். கிறிஸ்துவின் நாளிலே நாம் குற்றம் சாட்டப் படாதவர்களாயிருப்போம். அதற்காக தேவன் நம்மை முடிவுபரியந்தம் ஸ்திரப்படுத்துவார்.

கர்த்தருடைய பிள்ளைகளாகிய எல்லோருக்குமே தேவன் இந்த மகிமையான சிலாக்கியத்தைக் கொடுக்கிறார். நம்முடைய எதிர்பார்ப்பு மகிமையுள்ளது. அவருடைய வருகைக்காக நாம் காத்திருக்கும்போது தேவன் நம்முடைய விசுவாசத்தை வர்த்திக்கப்பண்ணுகிறார். நம்முடைய நம்பிக்கைக்கு ஆதரவாயிருக்கிறார். தேவனே நம்மை அழைத்திருக்கிறவர். நம்மை அழைத்த தேவன் உண்மையுள்ளவர். அவர் ஒருபோதும் நம்மை கைவிட்டுவிடமாட்டார். நாம் தேவனுக்கு உண்மையுள்ள வர்களாயிருக்கும்போது, அவரும் நமக்கு உண்மையுள்ளவராயிருப்பார். இயேசு கிறிஸ்துவுடனே ஐக்கியமாயிருப்பதற்கு தேவன் நம்மை அழைத்திருக்கிறார். நம்முடைய அழைப்புக்கு நாம் உண்மையுள்ளவர்களாயிருக்க வேண்டும். நம்மை அழைத்த தேவன் உண்மையுள்ளவர்.

## பிரிவினைகள்
## 1கொரி 1 : 10-13

**1கொரி 1:10. சகோதரரே, நீங்களெல்லாரும் ஒரே காரியத்தைப் பேசவும், பிரிவினைகளில்லாமல் ஏகமனதும் ஏகயோசனையும் உள்ளவர்களாய்ச் சீர் பொருந்தியிருக்கவும் வேண்டுமென்று, நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே உங்களுக்குப் புத்திசொல்லுகிறேன்.**

**1கொரி 1:11. ஏனெனில், என் சகோதரரே, உங்களுக்குள்ளே வாக்குவாதங்கள் உண்டென்று குலோவேயாளின் வீட்டாரால் உங்களைக்குறித்து எனக்கு அறிவிக்கப்பட்டது.**

**1கொரி 1:12. உங்களில் சிலர்: நான் பவுலைச் சேர்ந்தவனென்றும், நான் அப்பொல்லோவைச் சேர்ந்தவனென்றும், நான் கேபாவைச் சேர்ந்தவனென்றும், நான் கிறிஸ்துவைச் சேர்ந்தவனென்றும் சொல்லுகிறபடியால், நான் இப்படிச் சொல்லுகிறேன்.**

**1கொரி 1:13. கிறிஸ்து பிரிந்திருக்கிறாரா? பவுலா உங்களுக்காகச் சிலுவையிலறையப் பட்டான்? பவுலின் நாமத்தினாலேயா ஞானஸ்நானம் பெற்றீர்கள்?**

## ஏகமனதும் ஏகயோசனையும்

**சகோதரரே, நீங்களெல்லாரும் ஒரே காரியத்தைப் பேசவும், பிரிவினைகளில்லாமல் ஏகமனதும் ஏகயோசனையும் உள்ளவர்களாய்ச் சீர் பொருந்தியிருக்கவும் வேண்டுமென்று, நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே உங்களுக்குப் புத்திசொல்லுகிறேன். ஏனெனில், என் சகோதரரே, உங்களுக்குள்ளே வாக்குவாதங்கள் உண்டென்று குலோவேயாளின் வீட்டாரால் உங்களைக்குறித்து எனக்கு அறிவிக்கப்பட்டது. உங்களில் சிலர்: நான் பவுலைச் சேர்ந்தவனென்றும், நான் அப்பொல்லோவைச் சேர்ந்தவனென்றும், நான் கேபாவைச் சேர்ந்தவனென்றும், நான் கிறிஸ்துவைச் சேர்ந்தவனென்றும் சொல்லுகிறபடியால், நான் இப்படிச் சொல்லுகிறேன் (1கொரி 1:10-12).**

கொரிந்துவிலுள்ள விசுவாசிகள் மத்தியில் பிரிவினை உண்டாயிருக்கிறது. அவர்களெல்லோரும் ஒரே காரியத்தைப் பேசவும், பிரிவினைகளில்லாமல் ஏகமனதும் ஏகயோசனையும் உள்ளவர்களாய் இருக்கவும்வேண்டும் என்று பவுல் அவர்களுக்குப் புத்தி சொல்லுகிறார். அவர்கள் மத்தியில் காணப்படுகிற பிரிவினைகளுக்காக பவுல் அவர்களைக் கடிந்துகொள்கிறார். கொரிந்தியர் மத்தியில் காணப்படுகிற பிரிவினைகள் பவுலின் கவனத்திற்கு வந்திருக்கிறது. அந்தப் பிரிவினையைப் போக்குவதற்கு பவுல் அன்பாய் ஆலோசனை சொல்லுகிறார். "நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே உங்களுக்குப் புத்திசொல்லுகிறேன்" என்று அன்பாய்ச் சொல்லுகிறார்.

அவர்களெல்லோரும் ஒரே காரியத்தைப் பேசவேண்டுமென்று பவுல் அவர்களுக்குப் புத்தி சொல்லுகிறார். மேலும் அவர்களெல்லோரும் பிரிவினைகளில்லாமல் ஏகமனதும் ஏகயோசனையும் உள்ளவர்களாய் சீர்பொருந்தியிருக்கவேண்டுமென்றும் பவுல் அவர்களுக்குப் புத்திசொல்லுகிறார். அவர்களுக்குள் கருத்து வேறுபாடுகள் இருக்கக்கூடாது. பிரிவினைகளும் மார்க்கப் பேதகங்களும் இருக்கக்கூடாது. அவர்கள் ஏகமனதோடும் ஏகயோசனையோடும் இருக்கவேண்டும்.

ஆவிக்குரிய விசுவாசிகள் மத்தியில் ஏகமனதும் ஏகயோசனையும் காணப்படவேண்டும். ஒரு சில காரியங்களைக்குறித்து விசுவாசிகள் மத்தியில் கருத்து வேறுபாடு ஏற்பட்டாலும், அவர்கள் ஒருவருக்கொருவர் அன்புகூருவதில் குறைவில்லாமலிருக்க வேண்டும். அவர்கள் உபதேசத்தினால் பிரிந்திருந்தாலும் அன்பினால் இணைந்திருக்க வேண்டும்.

கொரிந்துவிலுள்ள சபையார் மத்தியில் பிரிவினைகள் உண்டாவதற்கான காரணத்தையும் பவுல் இங்கு குறிப்பிடுகிறார். அவர்களிடத்தில் பெருமை காணப்படுகிறது. பெருமையின் விளைவினால் பிரிவினைகள் உண்டாயிற்று. கர்த்தர் ஒருவரே. ஆனால் நமக்கு ஊழியம் செய்கிற ஊழியக்காரர்கள் அநேகர். கொரிந்தியர் மத்தியில் ஊழியக்காரர்கள் நிமித்தமாய் பிரிவினை உண்டாயிற்று. பிரிவினையில்லாமல் ஏகமனதாயும் ஏகயோசனையாயிருக்க வேண்டிய விசுவாசிகள் வெவ்வேறு பிரிவினராகப் பிரிந்திருக்கிறார்கள். தங்களுடைய பிரிவுகளுக்கு வெவ்வேறு ஊழியக்காரர்களைத் தலைவர்களாக ஏற்படுத்தியிருக்கிறார்கள்.

ஒரு சிலர் நான் பவுலைச் சேர்ந்தவன் என்று சொல்லுகிறார்கள். வேறு சிலர் நான் அப்பொல்லோவைச் சேர்ந்தவனென்று சொல்லுகிறார்கள். வேறு சிலரோ நான் கேபாவைச் சேர்ந்தவனென்று சொல்லுகிறார்கள். கேபா என்னும் பெயர் பேதுருவின் பெயராகும். ஒரு சிலர் இவர்களில் யாரையும் சேராமல், தாங்கள் கிறிஸ்துவைச் சேர்ந்தவர்களென்று சொல்லுகிறார்கள்.

கிறிஸ்துவின் சுவிசேஷம் ஆசீர்வாதமானது. அது பிரிவினையை நீக்கி ஒற்றுமையைக் கொடுக்கும். குழப்பத்தை நீக்கி தெளிவைக்கொடுக்கும். பிரச்சனைகளை நீக்கி அமைதியையும் சமாதானத்தையும் கொடுக்கும். ஆனால் இங்குள்ள விசுவாசிகளோ தங்கள் ஊழியக்காரரினிமித்தமாய் பிரிந்திருந்து, சுவிசேஷத்தின் மெய்யான ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ள முடியாதவர்களாயிருக்கிறார்கள்.

சுவிசேஷத்தின் பரிசுத்தமான ஆசீர்வாதம் இவர்களுடைய பிரிவினைகளினால் பரிசுத்த குலைச்சலாயிற்று. நமக்குள் பிரிவினை இருக்கக்கூடாது. நாமெல்லோரும் ஒரே காரியத்தைப் பேசவேண்டும். ஒவ்வொரு விசுவாசியும் ஒவ்வொரு விதமாய்ப் பேசக்கூடாது. நாமெல்லோருமே கர்த்தருடைய ஒரே வாயாகயிருக்கிறோம். கர்த்தருடைய சிந்தையே நம்மிடத்திலிருக்க வேண்டும். நமக்குள்ளிருக்கிற பிரிவினைகளையும் கருத்து வேறுபாடுகளையும் நீக்கிப்போடவேண்டும்.

பெருமையிருக்கும் இடத்தில் குழப்பமிருக்கும். ஒருவனும் தன்னைக் குறித்துப் பெருமைப்படக்கூடாது. கொரிந்துவிலுள்ள விசுவாசிகள் தங்களுக்கு ஊழியம் செய்கிற ஊழியக்காரர்களைக் குறித்துப் பெருமைப்படுகிறார்கள். இதனிமித்தமாய் அவர்களுக்குள் பெருமையும், போட்டியும், பிரிவினையும் உண்டாயிற்று. விசுவாசிகள் தங்களுக்குள் பிரிந்திருந்திருக்கிறார்கள். அவர்கள் கிறிஸ்துவையும் அவருடைய அப்போஸ்தலர்களையும் பிரித்து விடுகிறார்கள். இணைந்து ஊழியம் செய்ய வேண்டியவர்களை, ஒருவருக்கொருவர் சத்துருக்களாகவும், போட்டியாளர்களாகவும் மாற்றிவிடுகிறார்கள்.

## கிறிஸ்து பிரிந்திருக்கிறாரா

**கிறிஸ்து பிரிந்திருக்கிறாரா? பவுலா உங்களுக்காகச் சிலுவையில்அறையப்பட்டான்? பவுலின் நாமத்தினாலேயா ஞானஸ்நானம் பெற்றீர்கள்? (1கொரி 1:13)**

கொரிந்துவிலுள்ள விசுவாசிகள் மத்தியில் பிரிவினைகள் காணப்படுகிறது. பவுல் அவர்களுடைய பிரிவினைகளிமித்தம் அவர்களைக் கடிந்துகொள்கிறார். பிரிவினைகளை நீக்குவதற்கு ஆவிக்குரிய ஆலோசனை சொல்லுகிறார். "கிறிஸ்து பிரிந்திருக்கிறாரா" என்று அவர்களிடத்தில் கேட்கிறார். கிறிஸ்து பிரிந்திருக்கவில்லை. அவர் பிரிவினையில்லாமல் ஒன்றாயிருக்கிறார். ஏகமனதோடும் ஏகயோசனையோடும் இருக்கிறார். கிறிஸ்துவிலுள்ள சிந்தையே அவருடைய பிள்ளைகளாகிய நம்மிடத்திலும் காணப்படவேண்டும். எல்லா விசுவாசிகளுக்கும் ஒரே இருதயமும், ஒரே மனமும், ஒரே சிந்தையும், ஒரே யோசனையும் உண்டாயிருக்கவேண்டும்.

"கிறிஸ்து பிரிந்திருக்கிறாரா" என்று ஒரு கேள்வியைக் கேட்டுவிட்டு, "பவுலா உங்களுக்காக சிலுவையில் அறையப்பட்டான்" என்றும் கேட்கிறார். பவுல் அவர்களுக்காக சிலுவையில் பலியாகச் செலுத்தப்படவில்லை. அவர்களுடைய பாவங்களை நிவிர்த்திபண்ணுவதற்காக பவுல் சிலுவையில் பாவநிவாரண பலியாக மரிக்கவில்லை.

இதைச் சொல்லிவிட்டு "பவுலின் நாமத்தினாலேயா ஞானஸ்நானம் பெற்றீர்கள்" என்றும் கேட்கிறார். கொரிந்துவிலுள்ள விசுவாசிகள் ஞானஸ்நானம் பெற்றபோது அவர்கள் பவுலின் நாமத்தினால் ஞானஸ்நானம் பெறவில்லை. அவர்கள் தங்கள் ஜீவனை பவுலுக்கு ஒப்புக்கொடுக்கவில்லை. அவர்கள் பவுலுக்கு ஊழியம் செய்வதாக வாக்குப்பண்ணவில்லை. பவுலின் சீஷர்களாகத் தங்களை ஒப்புக்கொடுக்கவில்லை. அவர்கள் கிறிஸ்துவின் நாமத்தினால் ஞானஸ்நானம் பெற்றார்கள். தங்கள் ஜீவனை கிறிஸ்துவுக்கே ஒப்புக்கொடுத்தார்கள்.

கர்த்தருடைய ஊழியக்காரர்கள் விசுவாசிகளுக்கு நன்மை செய்கிறவர்கள். சத்தியத்தைப் போதிக்கிறவர்கள். அவர்கள் மூலமாய் நமக்கு ஆசீர்வாதங்கள் உண்டாகவேண்டும். அவர்கள் கிறிஸ்துவின் நாமத்தினால் ஊழியம் செய்யவேண்டும். அவர்கள் கிறிஸ்துவின் ஊழியக்காரர்கள். ஊழியக்காரர்கள் கிறிஸ்துவுக்குப் பதிலாக இயேசுகிறிஸ்துவின் சிங்காசனத்தில் அமர்ந்துவிடக்கூடாது. நம்முடைய சபையில் பிரிவினை இருக்கக்கூடாது. நமக்கு ஏராளமான தலைகள் இல்லை. கிறிஸ்து மாத்திரமே சபைக்குத் தலையாகயிருக்கிறார். அவர் பிரிந்திருக்கவில்லை. அவர் பிரிவினைகளில்லாமல் ஒன்றாயிருக்கிறார். விசுவாசிகள் மத்தியில் பிரிவினையை உண்டுபண்ணுகிற எல்லா அந்தகார சக்திகளையும் நாம் நீக்கிப்போடவேண்டும்.

**பவுலின் ஊழியம்**
**1கொரி 1 : 14-16**

**1கொரி 1:14. என் நாமத்தினாலே ஞானஸ்நானங் கொடுத்தேனென்று ஒருவனும் சொல்லாதபடிக்கு,**

**1கொரி 1:15. நான் கிறிஸ்புவுக்கும் காயுவுக்குமேயன்றி, உங்களில் வேறொருவனுக்கும் ஞானஸ்நானங் கொடுக்கவில்லை; இதற்காகத் தேவனை ஸ்தோத்திரிக்கிறேன்.**

**1கொரி 1:16. ஸ்தேவானுடைய வீட்டாருக்கும் நான் ஞானஸ்நானங் கொடுத்ததுண்டு. இதுவுமல்லாமல் இன்னும் யாருக்காவது நான் ஞானஸ்நானங் கொடுத்தேனோ இல்லையோ அறியேன்.**

கொரிந்தியர் மத்தியில் தான் செய்த ஊழியத்தைப் பவுல் இங்கு விவரிக்கிறார். விசுவாசிகளில் ஒரு சிலருக்கு மாத்திரமே பவுல் ஞானஸ்நானம் கொடுத்தார். மற்றப்படி அவர்களில் வேறொருவருக்கும் பவுல் ஞானஸ்நானம் கொடுக்கவில்லை. இதற்காக அவர் தேவனை ஸ்தோத்திரிக்கிறார். கிறிஸ்புவுக்கும் காயுவுக்கும் பவுல் ஞானஸ்நானம் கொடுத்தார். கிறிஸ்பு என்பவர் கொரிந்து பட்டணத்திலுள்ள ஜெபாலயத்துத் தலைவர் (அப் 18:8). ஸ்தேவானுடைய வீட்டாருக்கும் பவுல் ஞானஸ்நானம் கொடுத்தார். இவர்களைத் தவிர இன்னும் யாருக்காவது அவர் ஞானஸ்நானம் கொடுத்தாரா, இல்லையா என்பது பவுலுக்கு நினைவில் இல்லை.

ஞானஸ்நானம் கொடுப்பது தவறு அல்ல. இரட்சிக்கப்பட்ட எல்லோருக்குமே நாம் பிதா, குமாரன், பரிசுத்த ஆவியானவரின் நாமத்தினால் ஞானஸ்நானம் கொடுக்கவேண்டும். ஆனாலும் பவுல் விசுவாசிகளுக்கு ஞானஸ்நானம் கொடுக்காததற்காக தேவனை ஸ்தோத்திரிக்கிறார். ஞானஸ்நானம் கொடுப்பதற்கு பவுல் பகைஞரல்ல. ஆனாலும் இந்தச் சூழ்நிலையில் அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுக்காததற்காக தேவனை ஸ்தோத்திரிக்கிறார்.

இரட்சிக்கப்பட்ட விசுவாசிகளுக்கு பவுல் ஞானஸ்நானம் கொடுக்கவில்லையென்றாலும், பவுலோடு ஊழியம் செய்கிற மற்ற ஊழியக்காரர்கள் அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்தார்கள். பவுலோ தன்னுடைய நேரத்தை ஞானஸ்நானம் கொடுப்பதில் செலவு பண்ணாமல், சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதிலேயே செலவுபண்ணுகிறார். பவுல் ஓய்வில்லாமல் சுவிசேஷத்தைப் பிரசங்கம்பண்ணுவதினால் அவருக்கு ஞானஸ்நானம் கொடுக்க நேரமில்லாமல் போயிற்று.

ஞானஸ்நானத்தைக் கொடுக்கும்படி கிறிஸ்து தன்னை அனுப்பவில்லையென்றும், சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கவே அவர் தன்னை அனுப்பினாரென்றும் பவுல் அறிக்கை செய்கிறார்.

கர்த்தருடைய ஊழியக்காரர்களாகிய நாம் ஆத்துமாக்களை கிறிஸ்துவுக்காக ஆயத்தம்பண்ணுகிற ஊழியத்திலும், கிறிஸ்துவினுடைய நாமத்தை மகிமைப்படுத்துகிற ஊழியத்திலும் அதிகமாய் பங்குபெறவேண்டும். நாம் ஊழியத்திற்காகவே அழைக்கப் பட்டிருக்கிறோம். கிறிஸ்துவின் ஊழியத்தைச் செய்கிற நாம், நம்முடைய சுயநாமத்தின் பிரஸ்தாபத்திற்காக ஊழியம் செய்யக்கூடாது.

பவுல் கொரிந்தியர் மத்தியில் மூன்று சத்தியத்தைப் பிரசங்கம்பண்ணுகிறார். அவையாவன : 1. சுவிசேஷம் 2. சிலுவை 3. சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்து. இந்த உபதேசத்தைத் தவிர பவுல் வேறு எந்த உபதேசத்தையும் பிரசங்கம்பண்ணவில்லை. கிறிஸ்துவின் சிலுவை வீணாய்ப் போகாதபடிக்கு, சாதுரிய ஞானமில்லாமல் சுவிசேஷத்தைப் பிரசங்கம்பண்ணினார். சிலுவையில் இயேசுகிறிஸ்து அறையப்பட்டார். இதுவே நம்முடைய நம்பிக்கைகளுக்கும், சந்தோஷங்களுக்கும் ஆதாரம். கிறிஸ்துவின் மரணத்தினால் நாம் ஜீவிக்கிறோம். பவுல் பிரசங்கித்த செய்தியையே எல்லா ஊழியக்காரர்களும் பிரசங்கிக்கவேண்டும். பவுலுடைய பிரசங்கச் செய்தியின் பிரகாரம் எல்லா பரிசுத்தவான்களும் ஜீவிக்கவேண்டும்.

## பவுலின் பிரசங்கம்
## 1கொரி 1 : 17-31

**1கொரி 1:17. ஞானஸ்நானத்தைக் கொடுக்கும்படி கிறிஸ்து என்னை அனுப்பவில்லை; சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கவே அனுப்பினார்; கிறிஸ்துவின் சிலுவை வீணாய்போகாதபடிக்கு, சாதுரிய ஞானமில்லாமல் பிரசங்கிக்கவே அனுப்பினார்.**

**1கொரி 1:18. சிலுவையைப்பற்றிய உபதேசம் கெட்டுப்போகிறவர்களுக்குப் பைத்தியமாயிருக்கிறது, இரட்சிக்கப் படுகிற நமக்கோ அது தேவபெலனாயிருக்கிறது.**

**1கொரி 1:19. அந்தப்படி ஞானிகளுடைய ஞானத்தை நான் அழித்து, புத்திசாலிகளுடைய புத்தியை அவமாக்குவேன் என்று எழுதியிருக்கிறது.**

**1கொரி 1:20. ஞானி எங்கே? வேதபாரகன் எங்கே? இப்பிரபஞ்சத் தர்க்கசாஸ்திரி எங்கே? இவ்வுலகத்தின் ஞானத்தைத் தேவன் பைத்தியமாக்கவில்லையா?**

**1கொரி 1:21. எப்படியெனில், தேவஞானத்துக்கேற்றபடி உலகமானது சுயஞானத்தினாலே தேவனை அறியாதிருக்கையில், பைத்தியமாகத் தோன்றுகிற பிரசங்கத்தினாலே விசுவாசிகளை இரட்சிக்கத் தேவனுக்குப் பிரியமாயிற்று.**

**1கொரி 1:22. யூதர்கள் அடையாளத்தைக் கேட்கிறார்கள், கிரேக்கர் ஞானத்தைத் தேடுகிறார்கள்;**

**1கொரி 1:23. நாங்களோ சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவைப் பிரசங்கிக்கிறோம்; அவர் யூதருக்கு இடறலாயும் கிரேக்கருக்குப் பைத்தியமாயும் இருக்கிறார்.**

**1கொரி 1:24. ஆகிலும் யூதரானாலும் கிரேக்கரானாலும் எவர்கள் அழைக்கப் பட்டிருக்கிறார்களோ அவர்களுக்குக் கிறிஸ்து தேவபெலனும் தேவஞானமுமாயிருக்கிறார்.**

**1கொரி 1:25. இந்தப்படி, தேவனுடைய பைத்தியம் என்னப்படுவது மனுஷருடைய ஞானத்திலும் அதிக ஞானமாயிருக்கிறது; தேவனுடைய பலவீனம் என்னப்படுவது மனுஷருடைய பலத்திலும் அதிக பலமாயிருக்கிறது.**

**1கொரி 1:26. எப்படியெனில், சகோதரரே, நீங்கள் அழைக்கப்பட்ட அழைப்பைப் பாருங்கள்; மாம்சத்தின்படி ஞானிகள் அநேகரில்லை, வல்லவர்கள் அநேகரில்லை, பிரபுக்கள் அநேகரில்லை.**

**1கொரி 1:27. ஞானிகளை வெட்கப்படுத்தும்படி தேவன் உலகத்தில் பைத்தியமானவைகளைத் தெரிந்துகொண்டார்; பலமுள்ளவைகளை வெட்கப்படுத்தும் படி தேவன் உலகத்தில் பலவீனமானவைகளைத் தெரிந்துகொண்டார்.**

**1கொரி 1:28. உள்ளவைகளை அவமாக்கும்படி, உலகத்தின் இழிவானவைகளையும், அற்பமாய் எண்ணப் பட்டவைகளையும் இல்லாதவைகளையும், தேவன் தெரிந்துகொண்டார்.**

**1கொரி 1:29. மாம்சமான எவனும் தேவனுக்கு முன்பாகப் பெருமை பாராட்டாதபடிக்கு அப்படிச் செய்தார்.**

**1கொரி 1:30. அந்தப்படி, நீங்கள் அவராலே கிறிஸ்து இயேசுவுக்குட் பட்டிருக்கிறீர்கள். எழுதியிருக்கிறபடி மேன்மை பாராட்டுகிறவன் கர்த்தரைக் குறித்தே மேன்மைபாராட்டத்தக்கதாக,**

**1கொரி 1:31. அவரே தேவனால் நமக்கு ஞானமும் நீதியும் பரிசுத்தமும் மீட்புமானார்.**

## சாதுரிய ஞானமில்லாமல்

**ஞானஸ்நானத்தைக் கொடுக்கும்படி கிறிஸ்து என்னை அனுப்பவில்லை; சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கவே அனுப்பினார்; கிறிஸ்துவின் சிலுவை வீணாய்போகாதபடிக்கு, சாதுரிய ஞானமில்லாமல் பிரசங்கிக்கவே அனுப்பினார் (1கொரி 1:17).**

பவுல் கிறிஸ்துவின் சுவிசேஷத்தையும், கிறிஸ்துவின் சிலுவையையும் பிரசங்கம்பண்ணுகிறார். பவுலின் பிரசங்கத்தில் சாதுரிய ஞானம் வெளிப்படவில்லை. அவர் மனுஷருடைய ஞானத்தினால் பிரசங்கம்பண்ணவில்லை (1கொரி 2:4). சாதுரிய ஞானத்தினாலும், மனுஷருடைய ஞானத்தினாலும் பிரசங்கம்பண்ணினால் கிறிஸ்துவின் சிலுவை வீணாய்ப்போகும். சத்தியத்திற்கே முக்கியத்துவம் கொடுக்கவேண்டும். சாதுரிய ஞானத்திற்கும் மனுஷஞானத்திற்கும் முக்கியத்துவம் கொடுக்கக்கூடாது.

இயேசுகிறிஸ்து சிலுவையில் அறையப்பட்ட சத்தியம் மிகவும் எளிமையானது. இது சுவிசேஷத்தில் தெளிவாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது. தேவனுடைய கிருபையினால் நாம் சுவிசேஷத்தைப் பிரசங்கம்பண்ண வேண்டும். இதற்கு சாதுரிய ஞானத்தையும் மனுஷஞானத்தையும் அதிகமாய்ப் பயன்படுத்தவேண்டும் என்னும் அவசியமில்லை. பவுல் தெளிவான வார்த்தையினாலும், எளிமையான வார்த்தையினாலும் சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவைப் பிரசங்கம்பண்ணினார். எருசலேமில் சிலுவையில் அறையப்பட்ட இயேசுகிறிஸ்துவே, தேவகுமாரனாகவும் உலகஇரட்சகராகவும் இருக்கிறார் என்று ஆவியானவரின் பெலத்தினால் பிரசங்கம்பண்ணினார்.

மனுஷர் தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பவேண்டுமென்றும், தங்கள் பாவங்களை அறிக்கை செய்து அவற்றை விட்டுவிடவேண்டுமென்றும், இயேசு கிறிஸ்துவைத் தங்கள் ஆண்டவராகவும் இரட்சராகவும் விசுவாசித்து தங்கள் இருதயத்தில் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்றும் பவுல் பிரசங்கம்பண்ணினார். சத்தியத்தை விவரிப்பதற்கு அலங்காரமான வார்த்தைகள் தேவையில்லை. சத்தியம் தன்னில் தானே வல்லமையுள்ளது. அது வெளிச்சத்தைக் கொடுக்கக்கூடியது. சத்தியம் தன்னுடைய கம்பீர வல்லமையினால், மனுஷர் மத்தியில் தெளிவாய் வெளிப்படும். சத்தியத்தை வெளிப்படுத்துவதற்கு மனுஷருடைய உதவி தேவையில்லை.

சாதுரிய ஞானத்தினால் பேசுவதைவிட, மனுஷஞானத்தினால் பேசுவதைவிட, சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவை சாதாரண வார்த்தைகளினால் பேசினாலே போதுமானது. மனுஷஞானத்தைவிட சத்தியத்தை சாதாரணமாகப் பிரசங்கம்பண்ணுவது அதிக வல்லமையுள்ளது.

## சிலுவையைப்பற்றிய உபதேசம்

**சிலுவையைப்பற்றிய உபதேசம் கெட்டுப் போகிறவர்களுக்குப் பைத்தியமாயிருக்கிறது, இரட்சிக்கப் படுகிற நமக்கோ அது தேவபெலனாயிருக்கிறது (1கொரி 1:18).**

சிலுவையைப்பற்றிய உபதேசத்தின் விளைவு வித்தியாசமாகயிருக்கிறது. ஒரு சிலருக்கு இது தேவபலனாயிருக்கிறது. வேறு சிலருக்கோ இது பைத்தியமாயிருக்கிறது. கெட்டுப் போகிறவர்களுக்கு சிலுவையைப்பற்றிய உபதேசம் பைத்தியமாகயிருக்கிறது. இரட்சிக்கப்படுகிறவர்களுக்கோ இதே உபதேசம் தேவபெலனாயிருக்கிறது. இயேசுகிறிஸ்து யூதருக்கும் இடறலாயும் கிரேக்கருக்குப் பையத்தியமாயுமிருக்கிறார். ஆனாலும் எவர்கள் அழைக்கப் பட்டிருக்கிறார்களோ அவர்களுக்கு கிறிஸ்து தேவபலனும் தேவ ஞானமுமாயிருக்கிறார் (1கொரி 1:23,24).

இயேசுகிறிஸ்து யூதருக்கு இடறலாயிருக்கிறார். அவர்கள் இயேசு கிறிஸ்துவைப் புறக்கணித்துவிட்டார்கள். இயேசுகிறிஸ்துவை அவர்கள் ஒரு துரோகியைப் பார்ப்பதுபோலப் பார்த்தார்கள். அவரை ஒரு குற்றவாளியைப்போல நடத்தினார்கள். இயேசுகிறிஸ்து தம்முடைய தெய்வீக வல்லமையினால் அநேக அற்புதங்களையும் அடையாளங்களையும் நடப்பித்தார்.

ஆனால் அவர்களோ இயேசுகிறிஸ்து தங்களுக்கு விருப்பமான அடையாளங்களையும் அற்புதங்களையும் காண்பிக்கவேண்டும் என்று சொன்னார்கள்.

யூதர்கள் அடையாளத்தைக் கேட்டார்கள். இயேசுகிறிஸ்து நடப்பித்த அற்புதங்களையும், அவர் காண்பித்த அடையாளங்களையும் யூதர்களால் புரிந்துகொள்ள முடியவில்லை. அவர்களுடைய மனக்கண்கள் மங்கலாயிருந்தது. ஆகையினால் கிறிஸ்து அவர்களுக்கு இடறலாயிருக்கிறார்.

இயேசுகிறிஸ்து கிரேக்கருக்குப் பைத்தியமாயிருக்கிறார். சிலுவையில் அறையப்பட்ட இரட்சகரின் சரித்திரம் கிரேக்கருக்கு வேடிக்கையாகவும் விநோதமாகவும் இருக்கிறது. கிரேக்கர் ஞானத்தைத் தேடுகிறார்கள். இயேசுகிறிஸ்து சிலுவையில் அறையப்பட்ட சம்பவம் அவர்களுக்கு ஞானமாய்த் தெரியவில்லை. சிலுவையைப்பற்றிய உபதேசத்தில் அவர்கள் ஞானத்தைத் தேடினார்கள். ஒரு ஞானமும் அவர்களுக்குத் தெரியவில்லை. சிலுவையைப்பற்றிய உபதேசம் அவர்களுடைய ஞானத்தின் பிரகாரம் திருப்தி கொடுப்பதாகயில்லை. ஆகையினால் கிறிஸ்து அவர்களுக்குப் பைத்தியமாயிருக்கிறார்.

கிறிஸ்து சிலுவையில் தம் ஜீவனை ஒப்புக்கொடுத்தார். கிரேக்கருடைய பார்வையில் கிறிஸ்து தோற்றுப்போனவராகவும், மரித்தவராகவும், தன்னைத்தானே இரட்சித்துக்கொள்ள முடியாதவராகவும் தெரிகிறார். தன்னைத்தான் இரட்சித்துக்கொள்ள முடியாதவரால், மற்றவரை எவ்வாறு இரட்சிக்க முடியும் என்று கிரேக்கர்கள் மனுஷஞானத்தின் பிரகாரமாக சிந்திக்கிறார்கள்.

கிறிஸ்து நீதிமன்றத்தினால் குற்றவாளியாகத் தீர்க்கப்பட்டார். கலகக்காரரென்று அவர்மீது குற்றம் சொன்னார்கள். கிறிஸ்துவின் பிறப்பிலும் பெருமையில்லை. அவருடைய வாழ்க்கையும் எளிமையாகவே இருந்தது. அவரிடத்தில் ஆடம்பரமோ ஆரவாரமோ இல்லை. மிகவும் எளிமையாகயிருந்தார். இப்படிப்பட்ட எளிமையானவரை தங்களுடைய வாழ்க்கைக்கு முன்மாதிரியாக எப்படி ஏற்றுக்கொள்ள முடியும் என்று கிரேக்கர்கள் மனுஷஞானத்தின் பிரகாரமாய்ச் சிந்தித்தார்கள். மனுஷருடைய ஞானத்தினால் கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் புரிந்துகொள்ள முடியாது. கிறிஸ்துவின் சிலுவையைப் புரிந்துகொள்ள வேண்டுமென்றால் நமக்கு தேவகிருபையும் மனத்தாழ்மையும் வேண்டும்.

கிரேக்கர்களும் யூதர்களும் இரட்சிக்கப்படாமல் கெட்டுப்போகிறவர்கள். இவர்களுக்கு சிலுவையைப்பற்றிய உபதேசம் பைத்தியமாயிருக்கிறது. இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கிறவர்களுக்கோ, சிலுவையைப்பற்றிய உபதேசம் தேவபெலனாயிருக்கிறது, இயேசுகிறிஸ்து தேவனுடைய ஞானமாயிருக்கிறார். தேவனுடைய ஆவியானவரின் கிருபையைப் பெற்றிருக்கிறவர்களுடைய மனக்கண்கள் பிரகாசமானதாகயிருக்கும். அவர்கள் தேவனுடைய ஞானத்தையும் தேவனுடைய வல்லமையையும் பகுத்தறிவார்கள். கிறிஸ்துவின் உபதேசத்திலும், சிலுவையின் உபதேசத்திலும், கிறிஸ்துவின் கிரியைகளிலும் தேவனுடைய ஞானமும் வல்லமையும் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. இதை இரட்சிக்கப்படுகிறவர்கள் புரிந்துகொள்வார்கள்.

## ஞானிகளுடைய ஞானம்

**அந்தப்படி ஞானிகளுடைய ஞானத்தை நான் அழித்து, புத்திசாலிகளுடைய புத்தியை அவமாக்குவேன் என்று எழுதியிருக்கிறது. ஞானி எங்கே? வேதபாரகன் எங்கே? இப்பிரபஞ்சத் தர்க்கசாஸ்திரி எங்கே? இவ்வுலகத்தின் ஞானத்தைத் தேவன் பைத்தியமாக்கவில்லையா? எப்படியெனில், தேவஞானத்துக்கேற்றபடி உலகமானது சுயஞானத்தினாலே தேவனை அறியாதிருக்கையில், பைத்தியமாகத் தோன்றுகிற பிரசங்கத்தினாலே விசுவாசிகளை இரட்சிக்கத் தேவனுக்குப் பிரியமாயிற்று. யூதர்கள் அடையாளத்தைக் கேட்கிறார்கள், கிரேக்கர் ஞானத்தைத் தேடுகிறார்கள்; நாங்களோ சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவைப் பிரசங்கிக்கிறோம்; அவர் யூதருக்கு இடறலாயும் கிரேக்கருக்குப் பைத்தியமாயும் இருக்கிறார். ஆகிலும் யூதரானாலும் கிரேக்கரானாலும் எவர்கள் அழைக்கப்பட்டிருக்கிறார்களோ அவர்களுக்குக் கிறிஸ்து தேவபெலனும் தேவ ஞானமுமாயிருக்கிறார் (1கொரி 1:19-24).**

மனுஷருடைய ஞானத்தைவிட தேவனுடைய ஞானம் மேலானது. பழைய ஏற்பாட்டுக்காலத்தில் ஏசாயா தீர்க்கதரிசி ஞானிகளுடைய ஞானத்தைப்பற்றி தீர்க்கதரிசனமாக இப்படிச் சொல்லியிருக்கிறார். "ஆதலால் இதோ, நான் அற்புதமும் ஆச்சரியமுமான பிரகாரமாக இந்த ஜனங்களுக்குள்ளே ஒரு அதிசயத்தைச் செய்வேன்; அவர்களுடைய ஞானிகளின் ஞானம் கெட்டு, அவர்களுடைய விவேகிகளின் விவேகம் மறைந்துபோகும் என்று ஆண்டவர் சொல்லுகிறார்" *(ஏசா 29:14).*

ஏசாயாவின் தீர்க்கதரிசனத்தைப் பவுல் இங்கு மேற்கோளாக இவ்வாறு எழுதுகிறார். "அந்தப்படி ஞானிகளுடைய ஞானத்தை நான் அழித்து, புத்திசாலிகளுடைய புத்தியை அவமாக்குவேன் என்று எழுதியிருக்கிறது. ஞானி எங்கே? வேதபாரகன் எங்கே? இப்பிரபஞ்சத் தர்க்கசாஸ்திரி எங்கே? இவ்வுலகத்தின் ஞானத்தைத் தேவன் பைத்தியமாக்கவில்லையா?" *(1கொரி 1:19,20).*

இந்த உலகத்தில் ஏராளமான படிப்புக்கள் உள்ளன. ஏராளமான ஆராய்ச்சிகள் நடைபெறுகிறது. உயர்ந்த படிப்புக்களும் உயர்ந்த ஆராய்ச்சிகளும் தேவனுடைய வெளிப்பாட்டிற்கு உட்பட்டவையாகவே இருக்கும். இவை அனைத்தும் சிலுவையின் வெற்றியை உறுதிபண்ணும். தேவன் இந்த உலகத்தை இரட்சிப்பதற்குத் தம்முடைய ஞானத்தையே பயன்படுத்துகிறார். மனுஷருடைய ஞானத்தைப் பயன்படுத்தவில்லை. உலகமானது சுயஞானத்தினாலே தேவனை அறியவில்லை.

புறஜாதியார் தங்கள் ஞானத்திலும் தத்துவத்திலும் பெருமைப்படுகிறார்கள். விஞ்ஞான வளர்ச்சியில் மேன்மை பாராட்டுகிறார்கள். ஆனாலும் இவர்களுடைய உலகஞானத்தினால் தேவனை அறிந்துகொள்ள முடியாது. இவர்களுடைய ஞானம் கற்பனையானது. மனுஷருடைய ஞானம் மாயையானது. தேவனோ தம்மைப்பற்றி வெளிப்படுத்துவதற்கு உலகஞானத்தைப் பயன்படுத்தவில்லை.

சிலுவையைப்பற்றிய உபதேசம் உலகக்கத்தரால் பைத்தியமாக எண்ணப்படுகிறது. அவர்களுக்குப் பைத்தியமாகத் தோன்றுகிற இந்தப் பிரசங்கத்தினாலே விசுவாசிகளை இரட்சிக்கத் தேவனுக்குப் பிரியமாயிற்று. சிலுவையைப்பற்றிய உபதேசம் கெட்டுப் போகிறவர்களுக்குப் பைத்தியமாயிருக்கிறது. இரட்சிக்கப்படுகிறவர்களுக்கோ அது தேவபெலனாயிருக்கிறது.

## தேவனுடைய பைத்தியம் என்னப்படுவது

**இந்தப்படி, தேவனுடைய பைத்தியம் என்னப்படுவது மனுஷருடைய ஞானத்திலும் அதிக ஞானமாயிருக்கிறது; தேவனுடைய பலவீனம் என்னப்படுவது மனுஷருடைய பலத்திலும் அதிக பலமாயிருக்கிறது. எப்படியெனில், சகோதரரே, நீங்கள் அழைக்கப்பட்ட அழைப்பைப் பாருங்கள்; மாம்சத்தின்படி ஞானிகள் அநேகரில்லை, வல்லவர்கள் அநேகரில்லை, பிரபுக்கள் அநேகரில்லை (1கொரி 1:25,26).**

உலகப் பிரகாரமான ஞானத்தையுடைய மனுஷர்கள் தங்கள் சுயஞானத்தை நம்புகிறார்கள். கிறிஸ்துவையும், அவருடைய உபதேசத்தையும், சிலுவையையும் நம்புவதில்லை. இது அவர்களுடைய பார்வையில் பைத்தியமாய்த் தோன்றுகிறது. இரட்சிக்கப்பட்டிருக்கிற நாம் சிலுவையில் நமக்காக மரித்த இயேசுகிறிஸ்துவினால் பிழைத்திருக்கிறோம். நமக்காக சாபமான இயேசுகிறிஸ்துவினால் நாம் ஆசீர்வதிக்கப்படுகிறோம். நமக்காகப் பாவமான இயேசுகிறிஸ்துவினால் நாம் நீதிமானாக்கப்படுகிறோம். இந்த உபதேசம் உலகப்பிரகாரமான ஞானிகளுக்கு விநோதமாயிருக்கிறது. அவர்களுடைய பார்வையில் இது பைத்தியமாகயிருக்கிறது.

உலகப்பிரகாரமான ஜனங்கள் சுவிசேஷப்பிரசங்கத்தைக் கேட்கும்போது, அதை ஏளனம்பண்ணுகிறார்கள். தங்களுடைய ஞானத்திற்கேற்றபடி சுவிசேஷம் பிரசங்கிக்கப்படவில்லை என்று சுவிசேஷத்தின்மீது குறை சொல்லுகிறார்கள். சுவிசேஷப்பிரசங்கத்தில் ஞானம் வெளிப்படவில்லையென்று சொல்லி அதை ஏளனமாய்ப் பார்க்கிறார்கள்.

சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க தேவன் ஞானிகள் யாரையும் பயன்படுத்தவில்லை. மனுஷரை இரட்சிப்பதற்குத் தேவன் ஞானவார்த்தைகள் எதையும் பயன்படுத்தவில்லை. உலகப்பிரகாரமான ஞானிகளுக்கு பைத்தியமாய்த் தோன்றுகிற சிலுவையைப்பற்றிய உபதேசத்தினால், தம்மை விசுவாசிக்கிறவர்களை இரட்சிக்கவேண்டுமென்று தேவன் சித்தங்கொண்டிருக்கிறார். கிறிஸ்துவின் சுவிசேஷத்தில் சாதுரிய ஞானமோ, மனுஷஞானமோ வெளிப்படவில்லை. இவற்றில் தேறினவர்களைத் தம்முடைய ஊழியத்திற்குத் தேவன் பயன்படுத்தவுமில்லை.

தம்முடைய சுவிசேஷ ஊழியத்தைச் செய்வதற்கு இயேசுகிறிஸ்து ஒரு சில மீனவர்களைத் தெரிந்துகொண்டார். அவர்களிடத்தில் உலகப்பிரகாரமான ஞானமுமில்லை. சாதுரிய ஞானமுமில்லை. அவர்களுக்குச் சாதுரிய வார்த்தைகளைப் பயன்படுத்தவும் தெரியவில்லை. இயேசுகிறிஸ்து தம்முடைய ஊழியத்தைச் செய்வதற்கு சாதாரண மீனவர்களையே அபிஷேகம்பண்ணி, உலகம் முழுவதும் அனுப்பினார். இவர்கள் உலகத்தின் பார்வையில் சாதாரண ஜனங்கள். ஆனால் தேவனுடைய பார்வையிலோ விசேஷித்தவர்கள். கர்த்தராகிய கிறிஸ்துவானவர், தம்முடைய சீஷர்களை உலகம் முழுவதும் சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதற்காக அனுப்பினார்.

கிறிஸ்துவின் சீஷர்கள் உலகம் முழுவதும் சென்று சுவிசேஷத்தைப் பிரசங்கம்பண்ணினார்கள். இவர்கள் சாதாரண ஜனங்களாகயிருந்தபடியினால், உலகப்பிரகாரமான ஞானிகள் இவர்கள் மூலமாய்ப் பிரசங்கிக்கப்படுகிற சுவிசேஷத்தை ஏற்றுக்கொள்ளவில்லை. சுவிசேஷம் மேன்மையானதாகயிருந்தாலும், இதைப் பிரசங்கிக்கிறவர்கள் சாதாரண ஜனங்களாகயிருக்கிறார்கள். இதினிமித்தமாக உலகஞானிகள் சுவிசேஷத்தை ஏளனம்பண்ணி புறக்கணித்துவிட்டார்கள்.

கிறிஸ்துவின் சுவிசேஷமானது கெட்டுப் போகிறவர்களுக்குப் பைத்தியமாயிருக்கிறது. தேவனுடைய பைத்தியம் என்னப்படுவது மனுஷருடைய ஞானத்திலும் அதிக ஞானமாயிருக்கிறது. தேவனுடைய பலவீனம் என்னப்படுவது மனுஷருடைய பலத்திலும் அதிக பலமாயிருக்கிறது. கிறிஸ்துவின் உபதேசம் வெளித்தோற்றத்திற்கு பலவீனமாகத் தெரியலாம். மிகவும் சாதாரணமாகயிருக்கலாம். உலகப் பிரகாரமான ஞானிகளுக்கு கிறிஸ்துவின் சுவிசேஷத்தில் புதுமையோ, உலகஞானமோ இல்லாமல் தெரியலாம்.

ஆனால் தேவனோ ஞானிகளை வெட்கப்படுத்தும்படி உலகத்தில் பைத்தியமானவைகளைத் தெரிந்து கொண்டார். பலமுள்ளவைகளை வெட்கப்படுத்தும்படி தேவன் உலகத்தில் பலவீனமானவைகளைத் தெரிந்துகொண்டார். உள்ளவைகளை அவமாக்கும்படி, உலகத்தின் இழிவானவைகளையும், அற்பமாய் எண்ணப் பட்டவைகளையும், இல்லாதவைகளையும் தேவன் தெரிந்துகொண்டார்.

மாம்சத்தின் பிரகாரமாக ஞானியாகயிருக்கிறவன் தேவனுடைய பார்வையில் ஞானியாகயிருப்பதில்லை. தம்முடைய ஊழியத்தைச் செய்வதற்கு தேவன் சாதாரண ஜனங்களை அனுப்பினார். இவர்கள் உலகப்பிரகாரமான ஞானிகளல்ல. ஆனால் தேவனுடைய இரகசியத்தை இவர்கள் அறிந்திருந்தார்கள். சத்தியம் இவர்களுக்கு வெளிப்படுத்தப் பட்டிருந்தது. கிறிஸ்துவைப்பற்றிய சத்தியமே மெய்யான ஞானம். கர்த்தருக்குக் கீழ்ப்படிவதே ஞானத்திற்கு ஆரம்பம். கிறிஸ்துவின் சீஷர்கள் உலகப்பிரகாரமான பலவான்களோ அல்லது சமுதாயத்தில் உயர்ந்த அந்தஸ்துடைய பிரபுக்களோ அல்ல.

தேவன் மனுஷர் பார்க்கிற பிரகாரமாய் பார்க்கிறதில்லை. மனுஷன் முகத்தைப் பார்க்கிறான். தேவனோ மனுஷருடைய இருதயத்தைப் பார்க்கிறார். தேவன் இந்த உலகத்தில் பைத்தியமானவைகளையும், பலவீனமானவைகளையும், அற்பமாய் எண்ணப் பட்டவைகளையும், இல்லாதவைகளையும் தெரிந்துகொண்டார். கிறிஸ்துவின் சீஷர்களுக்கு உலகப்பிரகாரமான கல்வியறிவு இல்லை. அவர்களில் யாரும் அதிகமாய்ப் படித்தவர்களும் அல்ல. ஆனாலும் தம்முடைய சுவிசேஷத்தைப் பிரசங்கம்பண்ணுவதற்கு இயேசுகிறிஸ்து சாதாரண ஜனங்களையே பயன்படுத்தியிருக்கிறார்.

தம்முடைய ஞானத்தை மகிமைப்படுத்துவதற்கு சாதாரண ஜனங்களே போதுமென்று தேவன் தீர்மானம் செய்துவிட்டார். அவரே நீதியான நியாயாதிபதி. அவர் மனுஷர் அளக்கிற அளவின்படி அளப்பதில்லை. தேவனுடைய ஞானமும் மகிமையும் மனுஷருடைய பலவீனத்தினால் குறைந்துபோய்விடுவதில்லை. அவர் சர்வஞானமுள்ளவர். அவருடைய ஞானம் நித்திய காலமாய் நிலைத்திருக்கும்.

சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கிறவர்கள் உலகத்தில் பைத்தியமானவர்களாயும், பலவீனமானவர்களாயும் இருக்கிறார்கள். இவர்கள் மூலமாய் சுவிசேஷத்தைக் கேட்டு இரட்சிக்கப்படுகிறவர்களும், அவர்களைப் போலவே சாதாரண ஜனங்களாகவே இருக்கிறார்கள். பிரசங்கிக்கிறவர்கள் எப்படியோ, அப்படியே அதைக் கேட்கிறவர்களும் இருக்கிறார்கள். இவ்வுலகத்தில் ஞானிகளாகவும், பலவான்களாகவும், பிரபுக்களாகவும் இருக்கிறவர்களில் ஒரு சிலர் இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கலாம். இருப்பினும் விசுவாசிகளில் ஏராளமானோர் சாதாரணமான ஜனங்களே.

தேவன் தம்முடைய சித்தத்தின் பிரகாரம் சாதாரண ஜனங்களைக் கொண்டு, தம்முடைய சுவிசேஷத்தைப் பிரசங்கம்பண்ண சித்தங்கொண்டிருக்கிறார். இது தேவனுக்குப் பிரியமாயிற்று. கிறிஸ்துவின் சுவிசேஷம் சாதுரிய ஞானத்தையோ, உலகஞானத்தையோ சார்ந்திருக்கவில்லை. அது தேவனுடைய ஞானத்தையே சார்ந்திருக்கிறது.

## தெரிந்துகொண்டார்

**ஞானிகளை வெட்கப்படுத்தும்படி தேவன் உலகத்தில் பைத்தியமானவைகளைத் தெரிந்து கொண்டார்; பலமுள்ளவைகளை வெட்கப்படுத்தும்படி தேவன் உலகத்தில் பலவீனமானவைகளைத் தெரிந்துகொண்டார். உள்ளவைகளை அவமாக்கும்படி, உலகத்தின் இழிவானவைகளையும், அற்பமாய் எண்ணப் பட்டவைகளையும் இல்லாதவைகளையும், தேவன் தெரிந்துகொண்டார். மாம்சமான எவனும் தேவனுக்கு முன்பாகப் பெருமைபாராட்டாதபடிக்கு அப்படிச் செய்தார் (1கொரி 1:27-29).**

ஞானிகளையும், பலமுள்ளவைகளையும், உள்ளவைகளையும் வெட்கப்படுத்துவது தேவனுக்குச் சித்தமாயிற்று. மனுஷருடைய வீண்பெருமைக்குத் தேவன் எதிர்த்து நிற்கிறார். மனுஷருடைய ஞானத்தினால் தேவனுடைய ஊழியம் நிறைவேற்றப்பட வேண்டுமென்பது கிறிஸ்துவின் சித்தமல்ல. இந்த உலகத்தில் மாம்சத்தின்படி ஞானிகள், வல்லவர்கள், பிரபுக்கள் அநேகர் இல்லை. இவர்கள் எண்ணிக்கையில் சொற்பமானவர்கள்.

"ஞானிகளை வெட்கப்படுத்தும்படி தேவன் உலகத்தில் பைத்தியமானவைகளைத் தெரிந்து கொண்டார்; பலமுள்ளவைகளை வெட்கப்படுத்தும்படி தேவன் உலகத்தில் பலவீனமானவைகளைத் தெரிந்து கொண்டார். உள்ளவைகளை அவமாக்கும்படி, உலகத்தின் இழிவானவைகளையும், அற்பமாய் எண்ணப் பட்டவைகளையும் இல்லாதவைகளையும், தேவன் தெரிந்துகொண்டார்" (1கொரி 1:27,28).

யூதர்கள் தங்களுடைய யூதமார்க்கத்தைப் பற்றிப் பெருமைப்படுகிறார்கள். புறஜாதியாரை ஏளனமாய் நினைத்தார்கள். ஆனால் புறஜாதியாரையும் இரட்சிப்பது தேவனுக்குப் பிரியமாயிற்று. யூதர்கள் புறஜாதியாரைப்பற்றிச் சொல்லும்போது அவர்கள் இழிவானவர்களென்றும், இல்லாதவர்களென்றும் சொன்னார்கள். யூதர்கள் தங்கள் சுயஞானத்தில் பெருமைப்பட்டார்கள். ஆனால் தேவனோ மாம்சமான எவனும் தமக்கு முன்பாக பெருமை பாராட்டாதபடிக்கு இந்த உலகத்தின் இழிவானவைகளையும், இல்லாதவைகளையும் தெரிந்துகொண்டார்.

இப்போது யூதர்கள் பெருமைப்படுவதற்கு ஒன்றுமேயில்லை. அவர்களால் தேவனுக்கு முன்பாகப் பெருமைப்பட முடியாது. அவர் உலகத்தின் ஞானிகளையும் பலமுள்ளவைகளையும் வெட்கப்படுத்திவிட்டார். வெட்கப்பட்டுப் போனவர்கள் பெருமை பாராட்டமாட்டார்கள். யூதர்களிடத்தில் பெருமைப்படுவதற்கு ஒன்றுமேயில்லை. மனுஷருடைய இரட்சிப்புக்கு உலகஞானம் அவசியமில்லாமல் போயிற்று. உலகமானது தன்னுடைய சுயஞானத்தினாலே தேவனை அறிந்துகொள்ளவில்லை. அவர்களுக்கு பைத்தியமாய்த் தோன்றுகிற பிரசங்கத்தினாலே தேவன் விசுவாசிகளை இரட்சித்திருக்கிறார்.

தேவனுடைய தெய்வீக கிருபை மாத்திரமே சுவிசேஷத்தை மனுஷருக்கு வெளிப்படுத்துகிறது. தேவனுடைய கிருபை இருந்தால் மாத்திரமே மனுஷரால் சுவிசேஷத்தைப் புரிந்துகொள்ள முடியும். மனுஷன் தன் சுயஞானத்தினால் எவ்வளவுதான் முயற்சிபண்ணினாலும், தேவனைப்பற்றிய வெளிப்பாடுகளைப் புரிந்துகொள்ள முடியாது. சுவிசேஷத்தையும் அறிந்துகொள்ள முடியாது. தேவன் தாமே தம்முடைய கிருபையினால் நமக்கு தம்மைப்பற்றி வெளிப்படுத்தவேண்டும். அப்போதுதான் தேவனுடைய தெய்வீக சுபாவங்கள் நமக்குத் தெரியவரும்.

இருதயத்தில் பெருமையுள்ளவர்களுக்கு சுவிசேஷத்தினால் ஆசீர்வாதமுண்டாகாது. மனத்தாழ்மையுள்ளவர்கள் மாத்திரமே சுவிசேஷத்தின் ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்வார்கள். அவர்கள் மாத்திரமே இயேசுகிறிஸ்துவைத் தங்கள் இரட்சகராகவும் ஆண்டவராகவும் விசுவாசித்து ஏற்றுக்கொள்வார்கள்.

## மேன்மை பாராட்டுகிறவன்

**அந்தப்படி, நீங்கள் அவராலே கிறிஸ்து இயேசுவுக்குட்பட்டிருக்கிறீர்கள். எழுதியிருக்கிறபடி, மேன்மை பாராட்டுகிறவன் கர்த்தரைக் குறித்தே மேன்மைபாராட்டத்தக்கதாக, அவரே தேவனால் நமக்கு ஞானமும் நீதியும் பரிசுத்தமும் மீட்புமானார் (1கொரி 1:30,31).**

கிறிஸ்துவின் ஊழியக்காரர்கள் அவருடைய சுவிசேஷத்தைப் பிரசங்கம் பண்ணும்போது, கர்த்தருடைய கரம் அவர்களோடு கூடயிருக்கிறது. சுவிசேஷத்தின் செய்தியைக் கேட்கிறவர்களின் இருதயத்தில் கர்த்தருடைய கரம் வல்லமையாய்க் கிரியை செய்கிறது. ஊழியக்காரர்களுக்கும், விசுவாசிகளுக்கும் கர்த்தராகிய இயேசுகிறிஸ்து மகிமையுள்ளவராகயிருக்கிறார். மேன்மையுள்ளவராகயிருக்கிறார். நம்மிடத்தில் உள்ளவையெல்லாவற்றையும் நாம் தேவனிடமிருந்தே பெற்றிருக்கிறோம். நம்முடைய எல்லா ஆசீர்வாதங்களுக்கும் தேவனே ஊற்றின் கண்ணாகயிருக்கிறார். தேவனுடைய ஆசீர்வாதம் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய் நமக்குக் கடந்து வருகிறது. இயேசு கிறிஸ்துவே தேவனுக்கும் மனுஷருக்கும் மத்தியஸ்தராயிருக்கிறார்.

இயேசுகிறிஸ்துவே தேவனால் நமக்கு ஞானமும், நீதியும், பரிசுத்தமும், மீட்புமாயிருக்கிறார். நாம் பைத்தியமாயிருக்கிறோம். ஞானமில்லாதவர்களாயிருக்கிறோம். இயேசுகிறிஸ்து நமக்கு ஞானமாயிருக்கிறார். நாம் துன்மார்க்கராயும், குற்றவாளிகளாயும், நீதியில்லாதவர்களாயும் இருக்கிறோம். இயேசுகிறிஸ்து நமக்கு நீதியாயிருக்கிறார். அவர் நம்மை நீதிமானாக்குகிறார். நாம் பரிசுத்தமில்லாமல் அசுத்தமாயிருக்கிறோம். இயேசுகிறிஸ்து நமக்கு பரிசுத்தராயிருக்கிறார். அவர் நம்மை பரிசுத்தப்படுத்துகிறார். நாம் கட்டுண்டவர்களாயிருக்கிறோம். இயேசுகிறிஸ்து நமக்கு மீட்பாயிருக்கிறார்.

ஆகையினால் நம்மைக் குறித்து மேன்மைபாராட்டுவதற்கு நம்மிடத்தில் ஒன்றுமேயில்லை. மேன்மை பாராட்டுகிறவன் கர்த்தரைக் குறித்தே மேன்மை பாராட்டவேண்டும். மனுஷன் சிறுகவும் தேவன் பெருகவும் வேண்டும். நாம் தாழ்மையடையவும் தேவன் மகிமைப்படவும் வேண்டும். இதுவே சுவிசேஷத்தின் செய்தி. இதுவே தேவனுடைய சித்தமும் திட்டமுமாகும்.

# 2 அதிகாரம்

பவுல் கொரிந்தியருக்கு மிகவும் எளிமையாகவும் தெளிவாகவும் சுவிசேஷத்தை அறிவித்தார். அதை இந்த நிருபத்தில் அவர்களுக்கு நினைவுபடுத்துகிறார் (1கொரி 2:1-5). பவுல் கொரிந்தியருக்கு இரகசியமான தேவஞானத்தைப் பேசினார். மனுஷஞானம் போதிக்கிற வார்த்தைகளாலே பவுல் பேசவில்லை. ஆவிக்குரியவைகளை ஆவிக்குரியவைகளோடே சம்பந்தப் படுத்திக் காண்பிக்கிறார். ஜென்ம சுபாவமான மனுஷனுக்கும் ஆவிக்குரியவனுக்கும் பவுல் வித்தியாசம் காண்பிக்கிறார்.

## பவுலின் பிரசங்கம் 1கொரி 2 : 1-5

**1கொரி 2:1. சகோதரரே, நான் உங்களிடத்தில் வந்தபோது, தேவனைப்பற்றிய சாட்சியைச் சிறந்த வசனிப்போடாவது ஞானத்தோடாவது அறிவிக்கிறவனாக வரவில்லை.**

**1கொரி 2:2. இயேசு கிறிஸ்துவை, சிலுவையில் அறையப்பட்ட அவரையேயன்றி, வேறொன்றையும் உங்களுக்குள்வே அறியாதிருக்கத் தீர்மானித்திருந்தேன்.**

**1கொரி 2:3. அல்லாமலும் நான் பலவீனத்தோடும் பயத்தோடும் மிகுந்த நடுக்கத்தோடும் உங்களிடத்தில் இருந்தேன்.**

**1கொரி 2:4. உங்கள் விசுவாசம் மனுஷருடைய ஞானத்திலல்ல, தேவனுடைய பெலத்தில் நிற்கும்படிக்கு,**

**1கொரி 2:5. என் பேச்சும் என் பிரசங்கமும் மனுஷ ஞானத்திற்குரிய நய வசனமுள்ளதாயிராமல், ஆவியினாலும் பெலத்தினாலும் உறுதிப்படுத்தப்பட்டதாயிருந்தது.**

## தேவனைப்பற்றிய சாட்சி

**சகோதரரே, நான் உங்களிடத்தில் வந்தபோது, தேவனைப்பற்றிய சாட்சியைச் சிறந்த வசனிப்போடாவது ஞானத்தோடாவது அறிவிக்கிறவனாக வரவில்லை (1கொரி 2:1).**

பவுல் கொரிந்து சபையிலுள்ள விசுவாசிகளோடு கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தார். தேவனைப்பற்றிய சாட்சியை அவர்களுக்கு அறிவித்தார். இந்தச் சத்தியத்தை சிறந்த வசனிப்போடோ அல்லது ஞானத்தோடோ பவுல் அறிவிக்கவில்லை. பவுலின் பேச்சும் அவருடைய பிரசங்கமும் மனுஷஞானத்திற்குரிய நயவசனமுள்ளதாய் இருக்கவில்லை (1கொரி 2:4).

ஒரு சிலர் சத்தியத்தை அறிவிக்கும்போது சாதுரிய வார்த்தைகளையும், நயவசனிப்பையும் பயன்படுத்துகிறார்கள். அவர்கள் சத்தியத்திற்கு முக்கியத்துவம் கொடுப்பதற்குப் பதிலாக தங்களுடைய நயவசனிப்பான பிரசங்கத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கிறார்கள். பவுல் அப்படிப்பட்ட சாதுரிய வார்த்தைகள் எதையும் பயன்படுத்தவில்லை. இவையெல்லாம் மனுஷப் பிரகாரமாக முக்கியமானதாகயிருக்கலாம். தேவனுடைய ஞானத்தை அறிவிப்பதற்கு மனுஷஞானம் தேவையற்றது. பவுல் கொரிந்தியரிடம் தேவனைப்பற்றிய சாட்சியை அறிவித்தார். அதை சிறந்த வசனிப்போடோ அல்லது ஞானத்தோடோ அறிவிக்கவில்லை. ஆவியினாலும் தேவபெலத்தினாலும் சத்தியத்தை அறிவித்தார்.

கிறிஸ்துவின் சுவிசேஷத்தை அறிவிப்பதற்கு மனுஷருடைய தத்துவமோ, வார்த்தை ஞானமோ தேவையில்லை. தேவஞானமும் தேவவல்லமையுமே தேவை. விவாதத்தினாலோ, தத்துவத்தினாலோ சுவிசேஷத்தை அறிவிக்க நாம் முயற்சி பண்ணக்கூடாது. தேவனைப்பற்றிய சாட்சியை அறிவிப்பதற்கு விவாதம் பயன்படாது.

## சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்து

**இயேசு கிறிஸ்துவை, சிலுவையில் அறையப்பட்ட அவரையேயன்றி, வேறொன்றையும் உங்களுக்குள்ளே அறியாதிருக்கத் தீர்மானித்திருந்தேன் (1கொரி 2:2).**

அப்போஸ்தலர் பவுல் கொரிந்து சபையிலுள்ள விசுவாசிகளிடத்தில் சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவை மாத்திரமே பிரசங்கம்பண்ணினார். சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவை அன்றி வேறொன்றையும் அவர்களுக்குள்ளே அறியாதிருக்க பவுல் தீர்மானித்திருந்தார்.

இயேசுகிறிஸ்து, அவருடைய ஆள்தத்துவம், அவருடைய ஊழியம் ஆகியவையே சுவிசேஷத்தின் சாரமாகும். சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கிறவர்கள் இதற்கு முக்கியத்துவம் கொடுக்கவேண்டும். கிறிஸ்துவைப்பற்றியும், அவருடைய ஆள்தத்துவத்தைப்பற்றியும், அவருடைய ஊழியத்தைப்பற்றியும் நாம் பிரசங்கம்பண்ணவேண்டும். நம்முடைய பிரசங்கத்தில் இதுவே மையச்செய்தியாக இருக்கவேண்டும்.

பவுல் எங்கு பிரசங்கம்பண்ணினாலும், அவர் கிறிஸ்துவையும், கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டதையும் மாத்திரமே பிரசங்கம் பண்ணினார். பவுலுடைய பிரசங்கத்தில் வேறு எந்தச் செய்தியும் இருக்காது. அவர் தன்னைப்பற்றியோ, அல்லது மற்ற மனுஷரைப்பற்றியோ பிரசங்கம் பண்ணுவதில்லை. ஆகையினால்தான் இந்த நிருபத்தில் தன்னுடைய பிரசங்கத்தைப்பற்றிச் சொல்லும்போது, "இயேசு கிறிஸ்துவை, சிலுவையில் அறையப்பட்ட அவரையேயன்றி, வேறொன்றையும் உங்களுக்குள்ளே அறியாதிருக்கத் தீர்மானித்திருந்தேன்" என்று எழுதுகிறார்.

## பலவீனமும், பயமும், நடுக்கமும்

**அல்லாமலும் நான் பலவீனத்தோடும் பயத்தோடும் மிகுந்த நடுக்கத்தோடும் உங்களிடத்தில் இருந்தேன் (1கொரி 2:3).**

கொரிந்து சபையில் பவுலுக்கு விரோதமாக சில விசுவாசிகள் எழும்பியிருக்கிறார்கள். அவர்கள் பவுலின் மீது குற்றம் சொல்லுகிறார்கள். பவுலைப்பற்றி தப்பிதமாகப் பேசுகிறார்கள். பவுலின் சரீர தோற்றம் பலவீனமும், அவருடைய வசனம் அற்பமுமாய் இருக்கிறது என்று சொல்லுகிறார்கள் (2கொரி 10:10). பவுலின் சரீரம் ஒருவேளை அழகில்லாமல் இருக்கலாம். அவர் குள்ளமானவர் என்றும், மெலிந்த சரீரமுடையவர் என்றும் வேதபண்டிதர்கள் சொல்லுகிறார்கள். அவருடைய குரலும் தெளிவாகயிருக்காது. மிகவும் மெல்லிய சத்தத்தில் பேசக்கூடியவர். அவருக்கு உருவத்தில் குறைபாடு இருந்தாலும், அவர் பேசுகிற சத்தியத்தில் குறையில்லை.

பவுலுக்கு விரோதமாக பலர் சத்துருக்களாக எழும்பினார்கள். ஆனால் பவுலோ எந்த மனுஷருக்கும் பயப்படவில்லை. மிகவும் தைரியமாகச் சுவிசேஷத்தைப் பிரசங்கம்பண்ணினார். பவுல் ஒருபோதும் தன்னைப்பற்றி பெருமையாகப் பேசவில்லை. பவுலுக்கு விரோதமாக எழும்பினவர்களோ தங்களைப்பற்றி பெருமையாகப் பேசுகிறார்கள். பெருமையாக நினைக்கிறார்கள். பவுலோ மிகுந்த மனத்தாழ்மையோடு கர்த்தருடைய ஊழியத்தைச் செய்கிறார்.

பவுல் கொரிந்தியர் மத்தியில் பிரசங்கம் பண்ணும்போது, பலவீனத்தோடும், பயத்தோடும், மிகுந்த நடுக்கத்தோடும் இருந்ததாகச் சொல்லுகிறார். ஊழியக்காரர்களுடைய பயத்தையும், பலவீனத்தையும், நடுக்கத்தையும் ஜனங்களால் பார்க்க முடியாது. ஊழியக்காரர்கள் தேவனுக்கு முன்பாக மாத்திரமே பயத்தோடும் நடுக்கத்தோடும் இருப்பார்கள். மனுஷருக்கு முன்பாகவோ தைரியமாகச் சுவிசேஷத்தைப் பிரசங்கம்பண்ணுவார்கள். கர்த்தருடைய பார்வையில் தாங்கள் பலவீனமானவர்கள் என்பதை உணர்ந்து, கர்த்தருடைய ஊழியத்தைச் செய்ய பயப்படுவார்கள்.

தேவனோ தம்முடைய கிருபையினால் பலவீனமும், பயமும், நடுக்கமுமுள்ள ஊழியக்காரர்களை தம்முடைய சுவிசேஷத்தைப் பிரசங்கம்பண்ணுவதற்கு பயன்படுத்துகிறார். ஊழியக்காரர்களோ கர்த்தருடைய மகத்தான ஊழியத்தைச் செய்வதற்குத் தாங்கள் அபாத்திரராயிருப்பதாக நினைத்து, தேவனுக்கு முன்பாகத் தங்களைத் தாழ்த்துகிறார்கள்.

## ஆவியினாலும் பெலத்தினாலும்

**உங்கள் விசுவாசம் மனுஷருடைய ஞானத்திலல்ல, தேவனுடைய பெலத்தில் நிற்கும்படிக்கு, என் பேச்சும் என் பிரசங்கமும் மனுஷ ஞானத்திற்குரிய நய வசனமுள்ளதாயிராமல், ஆவியினாலும் பெலத்தினாலும் உறுதிப்படுத்தப் பட்டதாயிருந்தது (1கொரி 2:4,5).**

பவுல் கொரிந்தியரிடத்தில் இருந்தபோது பலவீனத்தோடும், பயத்தோடும், மிகுந்த நடுக்கத்தோடும் இருந்தார். ஆனாலும் அப்போஸ்தல அதிகாரத்தோடு அவர்களுக்கு கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பிரசங்கம்பண்ணினார். பவுலின் பிரசங்கம் ஆவியினாலும் பெலத்தினாலும் உறுதிப்படுத்தப்பட்டதாயிருந்தது.

கிறிஸ்துவின் சத்தியங்களைப் பவுல் அவர்களுக்குப் பிரசங்கம்பண்ணினார். பவுல் சாதாரண வஸ்திரங்களையே தரித்திருந்தார். அவருடைய பேச்சும் மனுஷஞானத்திற்குரிய நய வசனமுள்ளதாயிருக்கவில்லை. சாதாரண வார்த்தைகளினால் தெளிவாகப் பேசினார். பரிசுத்த ஆவியானவர் கிறிஸ்துவின் சுவிசேஷத்தைத் தனக்கு எப்படி வெளிப்படுத்தியிருக்கிறாரோ, அதை அப்படியே அவர்களுக்குப் பிரசங்கம் பண்ணினார். பரிசுத்த ஆவியானவர் கிரியை நடப்பிக்க வேண்டுமென்றும், வசனத்தை அற்புதங்களினாலும் அடையாளங்களினாலும் உறுதிபண்ண வேண்டுமென்றும் பவுல் எதிர்பார்த்தார்.

நம்முடைய விசுவாசம் மனுஷருடைய ஞானத்தில் நிற்கக்கூடாது. அது தேவனுடைய பெலத்தில் நிற்கவேண்டும். மனுஷருடைய விவாதத்திறமையினால் நாம் கவர்ந்து இழுக்கப்படக்கூடாது. மனுஷருடைய சாதுரிய வார்த்தையில் நாம் மயங்கிவிடக்கூடாது. மனுஷஞானமோ, நயவசனிப்போ நமக்கு முக்கியமல்ல. இயேசுகிறிஸ்துவைப்பற்றிய சத்தியமே நமக்கு முக்கியம். கிறிஸ்துவைப்பற்றியும், அவரை சிலுவையில் அறைந்தது பற்றியும் சாதாரண வார்த்தைகளினால் பிரசங்கம்பண்ணினாலே போதுமானது. இந்தச் சத்தியம் ஆவியினாலும் பெலத்தினாலும் உறுதிபண்ணப்படும். ஊழியம் கர்த்தருடையது. தேவன் தம்முடைய தெய்வீக வல்லமையினால் தம்முடைய வசனத்தையும், வார்த்தையையும், சத்தியத்தையும் உறுதிபண்ணுவார்.

## தேவனுடைய ஆவி 1கொரி 2 : 6-13

**1கொரி 2:6. அப்படியிருந்தும், தேறினவர்களுக்குள்ளே ஞானத்தைப் பேசுகிறோம்; இப்பிரபஞ்சத்தின் ஞானத்தையல்ல, அழிந்து போகிறவர்களாகிய இப்பிரபஞ்சத்தின் பிரபுக்களுடைய ஞானத்தையுமல்ல,**

**1கொரி 2:7. உலகத் தோற்றத்திற்கு முன்னே தேவன் நம்முடைய மகிமைக்காக ஏற்படுத்தினதும், மறைக்கப் பட்டதுமாயிருந்த இரகசியமான தேவஞானத்தையே பேசுகிறோம்.**

**1கொரி 2:8. அதை இப்பிரபஞ்சத்துப் பிரபுக்களில் ஒருவனும் அறியவில்லை; அறிந்தார்களானால், மகிமையின் கர்த்தரை அவர்கள் சிலுவையில் அறையமாட்டார்களே.**

**1கொரி 2:9. எழுதியிருக்கிறபடி: தேவன் தம்மில் அன்பு கூருகிறவர்களுக்கு ஆயத்தம்பண்ணினவைகளைக் கண் காணவுமில்லை, காது கேட்கவுமில்லை, அவைகள் மனுஷனுடைய இருதயத்தில் தோன்றவுமில்லை.**

**1கொரி 2:10. நமக்கோ தேவன் அவைகளைத் தமது ஆவியினாலே வெளிப்படுத்தினார்; அந்த ஆவியானவர் எல்லாவற்றையும் தேவனுடைய ஆழங்களையும், ஆராய்ந்திருக்கிறார்.**

**1கொரி 2:11. மனுஷனிலுள்ள ஆவியேயன்றி மனுஷரில் எவன் மனுஷனுக்குரியவைகளை அறிவான்? அப்படிப்போல, தேவனுடைய ஆவியேயன்றி, ஒருவனும் தேவனுக்குரியவைகளை அறியமாட்டான்.**

**1கொரி 2:12. நாங்களோ உலகத்தின் ஆவியைப் பெறாமல், தேவனால் எங்களுக்கு அருளப்பட்டவைகளை அறியும்படிக்குத் தேவனிலிருந்து புறப்படுகிற ஆவியையே பெற்றோம்.**

**1கொரி 2:13. அவைகளை நாங்கள் மனுஷஞானம் போதிக்கிற வார்த்தைகளாலே பேசாமல், பரிசுத்த ஆவி போதிக்கிற வார்த்தைகளாலே பேசி, ஆவிக்குரியவைகளை ஆவிக்குரிய வைகளோடே சம்பந்தப்படுத்திக் காண்பிக்கிறோம்.**

**ஞானம்**

**அப்படியிருந்தும், தேறினவர்களுக்குள்ளே ஞானத்தைப் பேசுகிறோம்; இப்பிரபஞ்சத்தின் ஞானத்தையல்ல, அழிந்து போகிறவர்களாகிய இப்பிரபஞ்சத்தின் பிரபுக்களுடைய ஞானத்தையுமல்ல, (1கொரி 2:6)**

அப்போஸ்தலர் பவுல் கொரிந்தியர்களிடம் ஞானத்தைப்பற்றிப் பேசுகிறார். பவுல் பேசுவது மனுஷஞானமல்ல. இப்பிரபஞ்சத்தின் ஞானமுமல்ல. இரகசியமான தேவஞானத்தை அவர்களிடத்தில் பேசுகிறார். தேவஞானமே மெய்யான ஞானம். தேவஞானம் ஒரு பொக்கிஷம். தேவஞானத்தைவிட உயர்ந்த ஞானம் வேறு எதுவுமில்லை.

பவுல் தேறினவர்களுக்குள்ளே தேவஞானத்தைப் பேசுகிறார். கிறிஸ்துவின் உபதேசத்தை தெய்வீக உபதேசமாக ஏற்றுக் கொள்கிறவர்கள் தேறினவர்களாகயிருக்கிறார்கள். அவர்கள் கிறிஸ்துவின் சத்திய வசனங்களை கருத்தாய் ஆராய்ந்து பார்ப்பார்கள். சுவிசேஷத்தின் செய்தியில் மெய்யான ஞானம் மறைந்திருப்பதை கண்டுகொள்வார்கள். நம்முடைய பிரசங்கச் செய்தி உலகத்தாருக்குப் பைத்தியமாகத் தெரியலாம். ஆனால் தேறினவர்களுக்கோ அதுவே ஞானமாகயிருக்கும்.

ஒரு சிலர் தங்களை ஞானிகளென்று சொல்லிக்கொள்கிறார்கள். தங்களிடத்தில் இப்பிரபஞ்சத்தின் ஞானம் அதிகமாயிருப்பதாக நினைக்கிறார்கள். இப்பிரபஞ்சத்தின் பிரபுக்களிடத்தில் உலகஞானம் அதிகமாயிருப்பதாகச் சொல்லுகிறார்கள். பவுல் ஞானத்தைப் பேசுகிறார். ஆனால் அவர் இப்பிரபஞ்சத்தின் ஞானத்தைப் பேசவில்லை. அழிந்துபோகிறவர்களாகிய இப்பிரபஞ்சத்தின் பிரபுக்களுடைய ஞானத்தையும் பேசவில்லை. மறைக்கப்பட்டிருந்த இரகசியமான தேவஞானத்தையே பேசுகிறார்.

பவுல் பேசுவது இப்பிரபஞ்சத்தின் ஞானமல்ல. இது தெய்வீக ஞானம். இப்பிரபஞ்சத்தின் மனுஷர் தங்களுடைய ஞானத்தினால் தேவஞானத்தைக் கண்டுபிடிக்க முடியாது. அவர்களால் தேவனுடைய சத்தியத்தைப் புரிந்துகொள்ள முடியாது. இப்பிரபஞ்சத்தின் மனுஷன் உலக ஞானத்தைப் பெற்றிருக்கலாம். ஆனால் தேவஞானமோ அவனுக்குத் தூரமாயிருக்கிறது. தேவனுடைய ஆவியினால் வழிநடத்தப்படுகிறவர்களோ தேவஞானத்தைப் புரிந்துகொள்கிறார்கள்.

தேவனுடைய நியாயத்தீர்ப்பும், உலகத்தின் நியாயத்தீர்ப்பும் வெவ்வேறானது. இவ்விரண்டும் ஒன்றல்ல. பிரபஞ்சத்தின் ஞானமும், தேவஞானமும் வெவ்வேறானவை. பவுல் இப்பிரபஞ்சத்தின் ஞானத்தைப் பேசவில்லை. அவர் தேவஞானத்தைப் பேசுகிறார். தேவஞானமானது மறைக்கப்பட்ட இரகசியமாயிருக்கிறது. இதன் ஆழத்தை பவுல் வெளிப்படுத்துகிறார். மறைவாயிருந்த இரகசியத்தை பவுல் வெளிப்படுத்திக் காண்பிக்கிறார். தேவஞானத்தின் ஆழத்தையும், நீளத்தையும், அகலத்தையும் மனுஷஞானத்தினால் அளக்க முடியாது. தேவஆவியினாலும், பெலத்தினாலும் நாம் வழிநடத்தப்படும்போது, தேவஞானம் நமக்குத் தெளிவுபடுத்தப்படும்.

## இரகசியமான தேவஞானம்

**உலகத் தோற்றத்திற்கு முன்னே தேவன் நம்முடைய மகிமைக்காக ஏற்படுத்தினதும், மறைக்கப் பட்டதுமாயிருந்த இரகசியமான தேவஞானத்தையே பேசுகிறோம் (1கொரி 2:7).**

தேவஞானம் எப்போது உண்டாயிற்று என்பதை பவுல் இங்கு எழுதுகிறார். தேவன் தம்முடைய ஞானத்தை எப்போது, எதற்காக ஏற்படுத்தினார் என்பதையும் பவுல் இங்கு தெளிவுபடுத்துகிறார். தேவஞானமானது உலகத்தோற்றத்திற்கு முன்னேயிருந்தது. தேவன் நம்முடைய மகிமைக்காக தம்முடைய தேவஞானத்தை ஏற்படுத்தினார். தேவஞானம் வெளிப்படவேண்டும் என்பது தேவனுடைய அநாதி தீர்மானத்தில் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

தேவன் தம்முடைய ஞானத்தை நம்முடைய மகிமைக்காக ஏற்படுத்தியிருக்கிறார். தேவனுடைய ஞானம் அப்போஸ்தலருடைய மகிமைக்காகவும், விசுவாசிகளுடைய மகிமைக்காகவும் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இதுவரை மறைக்கப்பட்டதாயிருந்த இரகசியமான தேவஞானமானது அப்போஸ்தலருக்கும், விசுவாசிகளுக்கும் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. இது நாமெல்லோருக்கும் கிடைத்திருக்கிற பெரிய சிலாக்கியம்.

தேவனுடைய ஞானமானது சுவிசேஷத்தின் மூலமாய் நமக்கு வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. இனிமேல் வரப்போகிற உலகத்தில் நாம் நித்திய மகிமையையும், நித்திய சந்தோஷத்தையும் பெற்றுக்கொள்வோம். இந்த ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்வதற்கு சுவிசேஷத்தின் உபதேசம் நம்மை ஆயத்தம்பண்ணுகிறது.

## இப்பிரபஞ்சத்துப் பிரபுக்கள்

**அதை இப்பிரபஞ்சத்துப் பிரபுக்களில் ஒருவனும் அறியவில்லை; அறிந்தார்களானால், மகிமையின் கர்த்தரை அவர்கள் சிலுவையில் அறையமாட்டார்களே (1கொரி 2:8).**

இப்பிரபஞ்சத்தில் அநேக பிரபுக்கள் இருக்கிறார்கள். உலகஞானமுள்ளவர்களும் அநேகர் இருக்கிறார்கள். ஆனாலும் தேவஞானத்தை இப்பிரபஞ்சத்துப் பிரபுக்களில் ஒருவனும் அறியவில்லை. "இப்பிரபஞ்சத்துப் பிரபுக்கள்" என்னும் வார்த்தை ரோமப்பேரரசின் தேசாதிபதியையும், யூதமார்க்கத்து தலைவர்களையும் குறிக்கிறது. இவர்கள் சமுதாயத்தில் உயர்ந்த அந்தஸ்திலிருக்கிறவர்கள். உலகத்திற்கு இவர்கள் பெரியவர்களாகயிருந்தாலும், தேவஞானத்தை அறியாதவர்களாகவே இருக்கிறார்கள்.

இயேசுகிறிஸ்து மகிமையின் கர்த்தராகயிருக்கிறார். பிரபஞ்சத்தின் பிரபுக்கள் கிறிஸ்துவின் மகிமையை அறிந்துகொள்ளவில்லை. ஆகையினால் அவர்கள் மகிமையின் கர்த்தரை விரோதிக்கிறார்கள். இயேசுகிறிஸ்துவை சிலுவையில் அறைந்தவர்களுக்கு அவர் மகிமையின் கர்த்தர் என்பது தெரியாது. இந்தச் சத்தியம் அவர்களுக்குத் தெரிந்திருந்தால், அவர்கள் இயேசு கிறிஸ்துவை சிலுவையில் அறைந்திருக்க மாட்டார்கள். தங்களுடைய கைகளை இயேசுகிறிஸ்துவுக்கு விரோதமாக நீட்டியிருக்கமாட்டார்கள்.

தாங்கள் செய்கிறது இன்னதென்பதையும், தாங்கள் சிலுவையில் அறைகிறவர் இன்னரென்பதையும் அவர்கள் அறியாதிருந்தார்கள். ஆகையினால்தான் இயேசுகிறிஸ்து அவர்களுக்காக ஜெபித்தபோது, "பிதாவே இவர்களுக்கு மன்னியும். தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே" (லூக் 23:34) என்று கூறி ஜெபித்தார்.

## எழுதியிருக்கிறபடி.

**எழுதியிருக்கிறபடி: தேவன் தம்மில் அன்புகூருகிறவர்களுக்கு ஆயத்தம்பண்ணினவைகளைக் கண் காணவுமில்லை, காது கேட்கவுமில்லை, அவைகள் மனுஷனுடைய இருதயத்தில் தோன்றவுமில்லை (1கொரி 2:9).**

தேவனுடைய தெய்வீக வெளிப்பாடு இல்லாமல், தேவனைப்பற்றி யாரும் அறிந்துகொள்ள முடியாது. மனுஷ ஞானத்தினாலோ, மனுஷபுத்தியினாலோ யாராலும் தேவனைப் புரிந்துகொள்ள முடியாது. இந்தச் சத்தியத்தை ஏசாயா ஏற்கெனவே இவ்வாறு முன்னறிவித்திருக்கிறார். "தேவனே, உமக்குக் காத்திருக்கிறவர்களுக்கு நீர் செய்பவைகளை, நீரேயல்லாமல் உலகத்தோற்றம் முதற்கொண்டு ஒருவரும் கேட்டதுமில்லை; செவியால் உணர்ந்ததுமில்லை, அவைகளைக் கண்டதுமில்லை" (ஏசா 64:4).

செப்துவஜிந்த் பதிப்பில், "உமக்குக் காத்திருக்கிறவர்களுக்கு" என்னும் வாக்கியம் "உமது கிருபைக்குக் காத்திருக்கிறவர்களுக்கு" என்று மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது. பவுல் ஏசாயாவின் தீர்க்கதரிசனத்தை இங்கு மேற்கோளாகச் சொல்லுகிறார். நாம் தேவனுக்காகக் காத்திருக்கும்போது, அவர்மீது நாம் வைத்திருக்கிற அன்பை உறுதிபண்ணுகிறோம். இதைப் பவுல் சொல்லும்போது "தேவன் தம்மில் அன்புகூருகிறவர்களுக்கு" என்று எழுதுகிறார். தேவனுக்கு காத்திருக்கிறவர்கள் மாத்திரமே, அவரில் அன்புகூருகிறார்கள்.

தமக்குக் காத்திருக்கிறவர்களுக்கும், தம்மில் அன்புகூருகிறவர்களுக்கும் தேவன் ஒரு சில ஆசீர்வாதங்களை ஆயத்தம் பண்ணிவைத்திருக்கிறார். அப்போஸ்தலர் பவுல் இங்கு உலகப்பிரகாரமான ஆசீர்வாதங்கள் எதையும் சொல்லவில்லை. சுவிசேஷத்தில் வெளிப்படுத்தப்பட்டிருக்கிற தெய்வீக வெளிப்பாட்டைக் குறித்தே பவுல் இங்கு பேசுகிறார். தம்மில் அன்பு கூருகிறவர்களுக்குத் தேவன், சுவிசேஷத்தில் தம்மை வெளிப்படுத்துகிறார்.

சுவிசேஷத்தில் தெய்வீக சத்தியங்கள் விரிவாக எழுதப்பட்டிருக்கிறது. மறைக்கப்பட்டிருந்த இரகசியமான தேவஞானம் சுவிசேஷத்தில் வெளிப்படுத்தப் பட்டிருக்கிறது. மனுஷருடைய சுயஞானத்தினாலோ, சுயபுத்தியினாலோ அறிந்துகொள்ள முடியாத தெய்வீக இரகசியங்களெல்லாம், சுவிசேஷத்தில் தெளிவாக விவரிக்கப்பட்டிருக்கிறது. இந்த இரகசியங்களை உலகப்பிரகாரமான ஜனங்களுடைய கண்காணவுமில்லை. அவர்களுடைய காது கேட்கவுமில்லை. அவைகள் அவர்களுடைய இருதயத்தில் தோன்றவுமில்லை.

மனுஷருடைய சுயஞானத்தினால் தேவரகசியத்தைப் புரிந்துகொள்ள முடியுமென்றால், நமக்கு தெய்வீக வெளிப்பாடு தேவைப்படாது. மனுஷஞானம் மாத்திரமே போதுமானது. ஆனால் மனுஷஞானத்தினால் தேவரகசியத்தைப் புரிந்துகொள்ள முடியாது. தேவனுடைய ரகசியங்களெல்லாம் மனுஷருடைய இயல்பான அறிவுக்கும், உலகப்பிரகாரமான ஞானத்திற்கும் அப்பாற்பட்டது. தேவனுடைய வெளிப்பாடு நமக்குக் கிடைத்தால் மாத்திரமே அவருடைய தெய்வீக இரகசியங்களை நம்மால் புரிந்துகொள்ள முடியும். தேவரகசியத்தைப் புரிந்துகொள்வதற்கு வேறு வழிகள் எதுவும் மனுஷருக்கு நியமிக்கப்படவில்லை.

## ஆவியானவர்

**நமக்கோ தேவன் அவைகளைத் தமது ஆவியினாலே வெளிப்படுத்தினார்; அந்த ஆவியானவர் எல்லாவற்றையும் தேவனுடைய ஆழங்களையும், ஆராய்ந்திருக்கிறார். மனுஷனிலுள்ள ஆவியேயன்றி மனுஷரில் எவன் மனுஷனுக்குரியவைகளை அறிவான்? அப்படிப்போல, தேவனுடைய ஆவியேயன்றி, ஒருவனும் தேவனுக்குரியவைகளை அறியமாட்டான் (1கொரி 2:10,11).**

தேவன் தம்முடைய தெய்வீக இரகசியங்களை தம்முடைய ஆவியினாலே நமக்கு வெளிப்படுத்தியிருக்கிறார். வேத வாக்கியங்களெல்லாம் தேவஆவியினாலே ஏவப்பட்டு நமக்கு அருளப்பட்டிருக்கிறது. அதே ஆவியினாலேயே ஏவப்பட்டு அப்போஸ்தலர் பவுல் நமக்கு இந்தச் சத்தியத்தை வெளிப்படுத்துகிறார். பவுல் நமக்கு உபதேசிக்கிற சத்தியம் தேவஆவியினால் தேவன் அவருக்கு வெளிப்படுத்தியிருக்கும் சத்தியமாகும்.

தேவஆவியானவர் எல்லாவற்றையும், தேவனுடைய ஆழங்களையும் ஆராய்ந்திருக்கிறார். மனுஷனுடைய ஆவி மனுஷனுக்குரியவைகளை அறியும். அப்படிப்போல, தேவனுடைய ஆவியே தேவனுக்குரியவைகளை அறியும்.

அப்போஸ்தலர் பவுல் பரிசுத்த ஆவியானவரின் சுபாவங்களை இந்த வசனத்தில் தெளிவுபடுத்துகிறார். ஆவியானவருடைய தெய்வத்துவத்தை உறுதிபண்ணுகிறார். பரிசுத்த ஆவியானவர் சர்வஞானமுள்ளவர். அவர் எல்லாவற்றையும், தேவனுடைய ஆழங்களையும் ஆராய்ந்திருக்கிறார். அவர் தேவனுடைய ஆழங்களுக்குள் பிரவேசிக்கிறார். அவருடைய இரகசிய ஆலோசனைகளுக்குள் பிரவேசித்து அவற்றை அறிந்திருக்கிறார். தேவனுடைய ஆவியேயன்றி, ஒருவனும் தேவனுக்குரியவைகளை அறியமாட்டான். தேவனால் மாத்திரமே தேவனுக்குரியவைகளை அறிந்துகொள்ள முடியும். தேவனிடத்தில் மாத்திரமே தேவஞானம் இருக்கும்.

மனுஷனிலுள்ள ஆவியேயன்றி மனுஷரில் எவனும் மனுஷனுக்குரியவைகளை அறியமாட்டான். அப்படிப் போலவே, தேவனுடைய ஆவியேயன்றி ஒருவனும் தேவனுக்குரியவைகளை அறியமாட்டான். மனுஷனுடைய ஆவியும் மனுஷனுக்குரியவைகளும் ஒன்றாயிருக்கிறது. அவை நெருங்கிய ஐக்கியத்திலிருக்கிறது. அப்படிப்போலவே தேவனுடைய ஆவியும், தேவனுக்குரியவைகளும் ஒன்றாயிருக்கிறது. நெருங்கிய ஐக்கியத்திலிருக்கிறது.

ஆவியானவர் தேவனோடு ஒன்றாயிருக்கிறார். ஆகையினால் தேவனுடைய ஆவியானவர் தேவனுக்குரியவைகளை அறிந்திருக்கிறார். பரிசுத்த ஆவியானவரே தேவனுக்குரியவைகளை நமக்கு வெளிப்படுத்துகிறார். ஆவியானவருடைய வெளிப்பாடு இல்லாமல் தேவனுடைய இரகசிய ஆலோசனைகளையும், அவருடைய தெய்வீக திட்டங்களையும் நம்மால் புரிந்துகொள்ள முடியாது.

## தேவனிலிருந்து புறப்படுகிற ஆவி

**நாங்களோ உலகத்தின் ஆவியைப் பெறாமல், தேவனால் எங்களுக்கு அருளப்பட்டவைகளை அறியும்படிக்குத் தேவனிலிருந்து புறப்படுகிற ஆவியையே பெற்றோம் (1கொரி 2:12).**

அப்போஸ்தலர் பவுல் தேவனுடைய ஆவியினால் இதுவரையிலும் மறைக்கப்பட்டிருந்த இரகசியமான தேவஞானத்தைப் பெற்றிருக்கிறார். பவுல் உலகத்தின் ஆவியைப் பெறவில்லை. அவர் தேவனிடத்திலிருந்து புறப்படுகிற ஆவியைப் பெற்றிருக்கிறார். தேவனால் அவருக்கு அருளப்பட்டவைகளை அறியும்படி, அவர் தேவனிடத்திலிருந்து புறப்படுகிற ஆவியைப் பெற்றிருக்கிறார்.

பவுலும் மற்ற அப்போஸ்தலர்களும் கர்த்தருடைய சத்தியத்தைப் பிரசங்கம்பண்ணும்போது, அதை அவர்கள் தங்களுடைய சுயஞானத்தினால் பிரசங்கம்பண்ணவில்லை. சுயபுத்தியினால் பேசவில்லை. தங்களுடைய சுயசெய்தியை அவர்கள் உபதேசம்பண்ணவில்லை. தேவன் பரிசுத்த ஆவியானவர் மூலமாய் அவர்களுக்கு அருளியிருக்கிறவர்களை, அப்போஸ்தலர்கள் பேசுகிறார்கள். ஆவியானவரால் ஏவப்பட்டு வெளிப்படுத்தப்பட்டிருக்கிற தெய்வீக இரகசியத்தை மாத்திரமே அவர்கள் பேசுகிறார்கள். இரட்சிப்புக்கேற்ற சுவிசேஷத்தை அவர்கள் அறிவிக்கிறார்கள். தம்முடைய சுவிசேஷத்தைத் தேவன் தம்முடைய கிருபையினால் அவர்களுக்கு வெளிப்படுத்தியிருக்கிறார்.

தேவனுடைய சுவிசேஷம் அற்புதமானது. ஆச்சரியமானது. ஆசீர்வாதமானது. ஆத்துமாக்களை இரட்சிக்கக்கூடிய நற்செய்தியுடையது. தேவன் இந்த சுவிசேஷத்தை அப்போஸ்தலருடைய கையில் ஒப்புக்கொடுத்தார். மனுஷருடைய ஆத்துமாக்களை இரட்சிக்கவேண்டும் என்னும் நோக்கத்திற்காகவே தேவன் தம்முடைய சுவிசேஷத்தைத் தங்களுக்குக் கொடுத்தார் என்பது அப்போஸ்தலருக்குத் தெரியாது. அவர்கள் தேவனிடத்திலிருந்து புறப்படுகிற பரிசுத்த ஆவியானவரை பெற்றுக்கொள்ளும் வரையிலும், சுவிசேஷத்தின் இரகசியத்தை அவர்கள் அறியாதவர்களாகவே இருந்தார்கள். ஆவியானவரைப் பெற்றுக்கொண்ட பின்போ, ஆத்துமாக்களை இரட்சிப்பதற்காகவே தேவன் தம்முடைய சுவிசேஷத்தைத் தங்களுக்குக் கொடுத்திருக்கிறார் என்னும் இரகசியத்தை அப்போஸ்தலர்கள் புரிந்துகொண்டார்கள்.

## பரிசுத்தஆவி போதிக்கிற வார்த்தைகள்

**அவைகளை நாங்கள் மனுஷஞானம் போதிக்கிற வார்த்தைகளாலே பேசாமல், பரிசுத்த ஆவி போதிக்கிற வார்த்தைகளாலே பேசி, ஆவிக்குரியவைகளை ஆவிக்குரியவைகளோடே சம்பந்தப் படுத்திக் காண்பிக்கிறோம் (1கொரி 2:13).**

அப்போஸ்தலர்கள் தேவஞானத்தைப் போதிக்கிறார்கள். இந்த ஞானத்தை தேவஆவியானவரே அவர்களுக்குக் கொடுத்திருக்கிறார். மனுஷஞானம் போதிக்கிற வார்த்தைகளாலே அவர்கள் தேவஞானத்தைப் போதிக்கவில்லை. அதற்குப் பதிலாக பரிசுத்த ஆவி போதிக்கிற வார்த்தைகளாலே தேவஞானத்தைப் பேசுகிறார்கள். ஆவிக்குரிய வைகளை ஆவிக்குரியவைகளோடே சம்பந்தப் படுத்திக் காண்பிக்கிறார்கள். ஆவிக்குரிய சத்தியத்திற்கு அவர்கள் மாம்சப்பிரகாரமான வியாக்கியானம் எதுவும் கொடுக்கவில்லை. ஆவிக்குரிய வைகளை மாம்சத்திற்குரியவைகளோடு அவர்கள் சம்பந்தப்படுத்தவில்லை. கிறிஸ்துவின் சுவிசேஷத்தைத் தெளிவாக பிரசங்கம்பண்ணுகிறார்கள். பரிசுத்த ஆவியானவர் அவர்களுக்குக் கொடுத்திருக்கிற உபதேசத்தை, ஆவியானவருடைய பெலத்தினால் பிரசங்கம்பண்ணுகிறார்கள்.

தேவனுடைய சத்தியங்களை உபதேசம்பண்ணுவதற்கு மனுஷஞானம் தேவையில்லை. சாதுரிய வார்த்தைகள் தேவையில்லை. பரிசுத்த ஆவியானவர் கொடுக்கிற பெலமே நமக்குப் போதுமானது. ஆவியானவர் நமக்குப் போதிப்பதை நாம் அப்படியே போதித்தால் அதுவே கேட்கிறவர்களுக்குத் தேவபெலனாயிருக்கும். நாம் எளிமையாகப் போதித்தாலும் ஆவியினால் நிறைந்து போதிக்கவேண்டும்.

நாம் கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பிரசங்கம் பண்ணும்போது, ஆவிக் குரியவைகளை ஆவிக்குரியவைகளோடு சம்பந்தப்படுத்திக் காண்பிக்கவேண்டும். வெளிப்பாட்டின் ஒரு பகுதியை மற்றொரு பகுதியினால் விவரிக்கவேண்டும். ஆவிக்குரிய ஒரு சத்தியத்தை மற்றொரு சத்தியத்தினால் விளக்கவேண்டும். ஆவிக்குரிய காரியங்களை ஒன்று சேர்க்கும்போது, தேவனுடைய இரகசியத்தைத் தெளிவாகப் புரிந்துகொள்வதற்கு அவை உதவியாகயிருக்கும்.

மனுஷ ஞானத்தினால் தேவஞானத்தைப் புரிந்துகொள்ள முடியாது. தேவஞானத்தைப் புரிந்துகொள்வதற்கு தத்துவங்களையும், விஞ்ஞானங்களையும் பயன்படுத்தினால் நமக்குத் தெளிவு உண்டாகாது. குழப்பமே உண்டாகும். ஆவியானவருடைய வார்த்தையே அவருடைய சத்தியத்தின் பொருளை தெளிவாக விளக்கிக் கூறும்.

## தேவஞானம்
## 1கொரி 2 : 14-16

**1கொரி 2:14. ஜென்ம சுபாவமான மனுஷனோ தேவனுடைய ஆவிக்குரியவைகளை ஏற்றுக் கொள்ளான்; அவைகள் அவனுக்குப் பைத்தியமாகத் தோன்றும்; அவைகள் ஆவிக்கேற்றப் பிரகாரமாய் ஆராய்ந்து நிதானிக்கப் படுகிறவைகளானதால், அவைகளை அறியவுமாட்டான்.**

**1கொரி 2:15. ஆவிக்குரியவன் எல்லாவற்றையும் ஆராய்ந்து நிதானிக்கிறான்; ஆனாலும் அவன் மற்றொருவனாலும் ஆராய்ந்து நிதானிக்கப்படான்.**

**1கொரி 2:16. கர்த்தருக்குப் போதிக்கத்தக்கதாக அவருடைய சிந்தையை அறிந்தவன் யார்? எங்களுக்கோ கிறிஸ்துவின் சிந்தை உண்டாயிருக்கிறது.**

## ஜென்ம சுபாவமான மனுஷன்

**ஜென்ம சுபாவமான மனுஷனோ தேவனுடைய ஆவிக்குரியவைகளை ஏற்றுக் கொள்ளான்; அவைகள் அவனுக்குப் பைத்தியமாகத் தோன்றும்; அவைகள் ஆவிக்கேற்றப் பிரகாரமாய் ஆராய்ந்து நிதானிக்கப் படுகிறவைகளானதால், அவைகளை அறியவுமாட்டான் (1கொரி 2:14).**

மனுஷன் பாவசுபாவமுள்ளவன். சாபத்தினால் நிறைந்திருக்கிறான். மனுஷனுடைய ஜென்மசுபாவம் பாவமுள்ளதாயிருக்கிறது. பாவசுபாவமுள்ள மனுஷன் இன்னும் தேவனுடைய ஆவியினால் புதுப்பிக்கப்படவில்லை. அவன் தேவனுடைய வெளிச்சத்தைப் பெறவில்லை. அவன் இன்னும் பரிசுத்தமாக்கப்படவில்லை. ஆகையினால் ஜென்மசுபாவமான மனுஷனால் தேவனுடைய ஆவிக்குரியவைகளை ஏற்றுக்கொள்ள முடியாது. அவைகள் அவனுக்குப் பைத்தியமாய்த் தோன்றும்.

ஜென்மசுபாவமான மனுஷனுடைய சிந்தை துன்மார்க்கம் நிறைந்ததாயிருக் கிறது. தேவனுடைய சிந்தையை கேட்பதற்கோ, அதைப் பெற்றுக் கொள்வதற்கோ அவன் விரும்புவதில்லை. மனுஷனுக்குள் பரிசுத்த ஆவியானவர் கிரியை செய்தால் மாத்திரமே அவனுடைய மனம் புதுப்பிக்கப்படும். அவனுடைய இருதயம் பரிசுத்தமாக்கப்படும். அவனுடைய சிந்தை சுத்திகரிக்கப்படும். அப்போதுதான் பரிசுத்த ஆவியானவரின் சத்தியத்தையும், பரிசுத்தத்தையும் அவன் புரிந்துகொள்வான்.

மனுஷனுக்குள் பரிசுத்த ஆவியானவருடைய கிரியை நடைபெறவில்லையென்றால், அந்த மனுஷன் ஆவிக்குரிய வெளிச்சத்திற்கு வரமாட்டான். அவனால் ஆவிக்குரியவைகளைப் புரிந்துகொள்ள முடியாது. ஆவிக்குரியவைகளை ஆவிக்கேற்ற பிரகாரமாய் ஆராய்ந்து நிதானிக்கவேண்டும். அவனுக்கோ அவ்வாறு நிதானிப்பதற்கு, அவனுக்குள் பரிசுத்த ஆவியானவரின் கிரியை நடைபெறவில்லை. அவனுக்கு ஆவியானவரின் அநுக்கிரகம் இன்னும் கிடைக்கவில்லை.

ஜென்மசுபாவமான மனுஷன் பாவமனுஷனாகயிருந்தாலும், அவர்களில் சிலர் உலக ஞானமுள்ளவர் களாகயிருக்கிறார்கள் (1கொரி 1:19,20). உலகஞானத்தினால் தேவஞானத்தைப் புரிந்துகொள்ள முடியாது. மனுஷஞானமுள்ளவன் எதையும் விசுவாசத்தினால் பெற்றுக் கொள்ளமாட்டான். சகலவற்றையும் தன்னுடைய சுயஞானத்தினாலும், உலகஞானத்தினாலும் ஆராய்ந்து நிதானிக்கவேண்டும் என்று சொல்லுவான். ஆவிக்குரிய காரியங்களை உலகப்பிரகாரமாய் ஆராய்ந்து நிதானிக்க முடியாது. அவற்றை ஆவிக்கேற்ற பிரகாரமாய் மாத்திரமே ஆராய்ந்து நிதானிக்கவேண்டும். அவனுக்கோ ஆவியானவர் அருளப்படவில்லை (1கொரி 2:4-6).

புறஜாதிமார்க்கத்தார் கிரேக்கருடைய தத்துவங்களைப் படிக்கிறார்கள். தத்துவ ஞானமே சிறந்த ஞானமென்று அக்காலத்தில் பெருமையோடு சொன்னார்கள். தத்துவமும், கிரேக்கருடைய கல்வியும், உலகஞானமும் ஆவிக்குரியவைகளல்ல. இவை உலகப் பிரகாரமானவைகள். உலகஞானத்தைப் பெற்றிருக்கிறவன் தேவனுடைய ஆவியானவரை பெற்றுக் கொள்ளமாட்டான். ஆவியில்லாதவன் ஆவிக்குரியவைகளை ஏற்றுக் கொள்ளவுமாட்டான்.

விஞ்ஞான ரீதியாக சோதித்துப் பார்த்து நிரூபிப்பதுபோல தேவனுடைய வெளிப்பாட்டை நிரூபிக்க முடியாது. விஞ்ஞானத்தின் கோட்பாடுகள் ஆவிக்குரிய சத்தியங்களைத் தெளிவுபடுத்தாது. அவர்களுக்கு ஆவிக்குரிய காரியங்கள் பைத்தியமாய்த் தோன்றும். அவன் உலகஞானத்தினால் நிறைந்திருக்கிறான். ஆகையினால் தேவன் வெளிப்படுத்துகிற இரகசியத்தைப் புரிந்துகொள்வதற்குத் தேவையான தேவஞானம் அவனிடத்திலில்லாமல் போயிற்று.

## ஆவிக்குரியவன்

**ஆவிக்குரியவன் எல்லாவற்றையும் ஆராய்ந்து நிதானிக்கிறான்; ஆனாலும் அவன் மற்றொருவனாலும் ஆராய்ந்து நிதானிக்கப்படான் (1கொரி 2:15).**

ஆவிக்குரியவன் எல்லாவற்றையும் ஆராய்ந்து நிதானிக்கிறான். இவன் பரிசுத்த ஆவியானவரால் புதுப்பிக்கப் பட்டிருக்கிறான். பரிசுத்தமாக்கப் பட்டிருக்கிறான். இவனிடத்தில் மனுஷஞானமும் இருக்கிறது. தேவஞானமும் இருக்கிறது. ஆகையினால் இவன் உலகப்பிரகாரமான காரியங்களையும் ஆராய்ந்து நிதானிக்கிறான். ஆவிக்குரிய காரியங்களையும் ஆராய்ந்து நிதானிக்கிறான். இவனுக்கு உலகஞானமும் புரிந்திருக்கிறது. ஆவிக்குரிய ஞானமும் புரிந்திருக்கிறது.

ஆவிக்குரியவனுடைய மனம் புதுப்பிக்கப்பட்டிருக்கிறது. இவனுடைய இருதயம் பரிசுத்தமாக்கப்பட்டிருக்கிறது. இவனால் பரிசுத்தத்தின் மெய்யான சத்தியத்தை நிதானித்து அறிய முடிகிறது. அதே வேளையில் இவன் உலகப்பிரகாரமான காரியங்களையும் நிதானித்து அறிகிறான். இவனைப்பற்றி பவுல் சொல்லும்போது, “ஆவிக்குரியவன் எல்லாவற்றையும் ஆராய்ந்து நிதானிக்கிறான்” என்று சொல்லுகிறார்.

மேலும் "ஆவிக்குரியவன் மற்றொருவனாலும் ஆராய்ந்து நிதானிக்கப்படான்" என்றும் பவுல் சொல்லுகிறார். இவன் எல்லாவற்றையும் ஆராய்ந்து நிதானிப்பான். ஆனால் இவனை யாரும் ஆராய்ந்து நிதானிக்கமாட்டார்கள். ஜென்மசுபாவமான மனுஷனுக்கு ஆவிக்குரிய மனுஷனைப்பற்றி ஒன்றும் தெரியாது. அவனுக்கு ஆவிக்குரிய காரியங்களும் தெரியாது. ஆவிக்குரிய மனுஷனைப்பற்றியும் தெரியாது.

ஆவிக்குரியவனோ தன்னுடைய உலகஞானத்தைச் சார்ந்திருக்கமாட்டான். இவனிடத்தில் உலகஞானமும் இருக்கிறது. தேவஞானமும் இருக்கிறது. ஆகையினால் இவன் ஆவிக்குரியவைகளையும் நிதானிக்கிறான். உலகத்திற்குரியவை களையும் நிதானிக்கிறான். தேவனுடைய வெளிப்பாட்டை விசுவாசிக்கிறான். விசுவாசிக்கிறவர்களுக்கு மாத்திரமே தேவஞானம் கிடைக்கிறது. ஆவிக்குரியவன் உலகஞானம் உடையவனாகயிருந்தாலும், தேவ ஞானத்தையும் உடையவனாகயிருப் பதினால், தேவனுடைய வெளிப்பாடுகளை விசுவாசத்தோடு ஏற்றுக்கொள்கிறான். தேவனுக்குரியவைகள் அவனுக்கு சத்தியமாய்த் தோன்றுகிறது. இவை இவனுக்குப் பைத்தியமாய்த் தோன்றவில்லை.

தத்துவத்திலும், விஞ்ஞானத்திலும் ஆவிக்குரியவன் எவ்வளவுதான் தேர்ச்சி பெற்றவனாகயிருந்தாலும், அவையெல்லாவற்றையும் தேவனுடைய வெளிப்பாட்டின் ஆதாரத்திலேயே வியாக்கியானம்பண்ணுகிறான். இவனுக்கு உலகஞானத்தைவிட தேவஞானமே முக்கியமாய்த் தெரியும். உலகஞானமுள்ளவர்கள் பைத்தியமென்று சொல்லுகிறதை, தேவஞானமுள்ளவன் அதை சத்தியமென்று விசுவாசத்தோடு ஏற்றுக்கொள்கிறான்.

## கிறிஸ்துவின் சிந்தை

**கர்த்தருக்குப் போதிக்கத்தக்கதாக அவருடைய சிந்தையை அறிந்தவன் யார்? எங்களுக்கோ கிறிஸ்துவின் சிந்தை உண்டாயிருக்கிறது (1கொரி 2:16).**

கர்த்தருக்கு யாராலும் போதிக்க முடியாது. அவருக்குப் போதிக்கத்தக்கதாக கர்த்தருடைய சிந்தையை அறிந்தவர் ஒருவருமில்லை. தேவனுடைய ஆவியைப் பெற்றிருக்கிற நம்மாலும், ஆவியானவரால் ஏவப்படுகிற நம்மாலும் கர்த்தருக்குப் போதிக்கமுடியாது. கர்த்தருடைய சிந்தையை, அவருக்குப் போதிக்கத்தக்கதாக யாரும் பெற்றிருக்கவில்லை.

கர்த்தருக்குப் போதிக்கத்தக்கதாக அவருடைய சிந்தையை அறிந்தவன் யார் என்னும் கேள்வியை கேட்டுவிட்டு, பவுல் மற்றொரு சத்தியத்தையும் இங்கு சொல்லுகிறார். "எங்களுக்கோ கிறிஸ்துவின் சிந்தை உண்டாயிருக்கிறது" என்று அறிவிக்கிறார். கிறிஸ்துவின் சிந்தையே கர்த்தருடைய சிந்தை. இயேசுகிறிஸ்துவின் பிள்ளைகளாகிய நமக்கு கிறிஸ்துவின் சிந்தை உண்டாயிருக்கிறது. இது நமக்குக் கிடைத்திருக்கிற பெரிய சிலாக்கியம். ஏனெனில் கிறிஸ்துவின் சிந்தையை உடையவர்களாகிய நாம், கர்த்தருடைய சிந்தையையும் உடையவர்களாகயிருக்கிறோம்.

# 3 அதிகாரம்

கொரிந்துவிலுள்ள விசுவாசிகள் மாம்சத்திற்குரியவர்களாக இருக்கிறார்கள். அவர்களுக்குள் பிரிவினைகள் காணப்படுகிறது (1கொரி 3:1-4). அவர்கள் மத்தியில் காணப்படுகிற குறைபாடுகளை நீக்கிப்போடுவதற்கு பவுல் இந்த அதிகாரத்தில் ஆலோசனைகளைச் சொல்லுகிறார். கர்த்தருடைய ஊழியக்காரர்களை ஊழியக்காரர்களாக மாத்திரமே மதிக்கவேண்டும் (1கொரி 3:5). தேவனே எல்லோருக்கும் மேலானவர் (1கொரி 3:6-10). ஒரே அஸ்திபாரத்தின் மீதே எல்லா ஊழியக்காரர்களும் கட்டியெழுப்புகிறார்கள் (1கொரி 3:11-15).

ஒவ்வொரு விசுவாசியும் தேவனுடைய ஆலயமாயிருக்கிறார்கள் (1கொரி 3:16-17). விசுவாசிகள் மனத்தாழ்மையோடிருக்க வேண்டும் (1கொரி 3:18-21). நாம் மனுஷரைக்குறித்து மேன்மை பாராட்டாமல், கர்த்தரைக் குறித்தே மேன்மை பாராட்டவேண்டும் (1கொரி 3:22-23).

## மாம்சத்துக்குரியவர்கள் 1கொரி 3 : 1-4

**1கொரி 3:1. மேலும், சகோதரரே, நான் உங்களை ஆவிக்குரியவர்களென்று எண்ணி உங்களுடனே பேசக்கூடாமல், மாம்சத்துக்குரிய வர்களென்றும், கிறிஸ்துவுக்குள் குழந்தைகளென்றும் எண்ணிப் பேச வேண்டியதாயிற்று.**

**1கொரி 3:2. நீங்கள் பெலனில்லாத வர்களானதால், உங்களுக்குப் போஜனங்கொடாமல், பாலைக் குடிக்கக் கொடுத்தேன்; இன்னமும் நீங்கள் மாம்சத்துக்குரியவர்களாயிருக்கிற படியால், இப்பொழுதும் உங்களுக்குப் பெலனில்லை.**

**1கொரி 3:3. பொறாமையும் வாக்குவாதமும் பேதகங்களும் உங்களுக்குள் இருக்கிறபடியால், நீங்கள் மாம்சத்திற்குரியவர்களாயிருந்து மனுஷமார்க்கமாய் நடக்கிறீர்களல்லவா?**

**1கொரி 3:4. ஒருவன் நான் பவுலைச் சேர்ந்தவனென்றும், வேறொருவன் நான் அப்பொல்லோவைச் சேர்ந்தவனென்றும் சொல்லுகிறபடியால் நீங்கள் மாம்சத்திற்குரியவர்களல்லவா?**

## கிறிஸ்துவுக்குள் குழந்தைகள்

**மேலும், சகோதரரே, நான் உங்களை ஆவிக்குரியவர்களென்று எண்ணி உங்களுடனே பேசக்கூடாமல், மாம்சத்துக்குரிய வர்களென்றும், கிறிஸ்துவுக்குள் குழந்தைகளென்றும் எண்ணிப் பேச வேண்டியதாயிற்று (1கொரி 3:1).**

கொரிந்துவிலுள்ள விசுவாசிகள் பெலனில்லாதவர்களாயிருக் கிறார்கள். ஆவிக்குரிய ஜீவியத்தில் அவர்கள் புதுப்பிக்கப் பட்டிருக்கிறார்கள். இரட்சிக்கப்பட்டு புதிய ஜீவனைப் பெற்றிருக்கிறார்கள். ஆயினும் அவர்களுடைய ஜீவியத்தின் பல பகுதிகளில் குறைபாடுகள் காணப்படுகிறது. அவர்களை ஆவிக்குரியவர்கள் என்று எண்ணி பவுலால் அவர்களுடனே பேசக்கூடாமற்போயிற்று. ஏனெனில் அவர்கள் மாம்சத்திற்குரிய வர்களாயிருக்கிறார்கள். கிறிஸ்துவுக்குள் குழந்தைகளாயிருக்கிறார்கள்.

கொரிந்துவிலுள்ள விசுவாசிகளிடத்தில் மாம்சபாவம் அதிகமாய்க் காணப்படுகிறது. அவர்களுடைய பேச்சிலும் செயலிலும் பாவம் நிறைந்திருக்கிறது. அவர்கள் இன்னும் கிறிஸ்துவுக்குள் குழந்தைகளாகவே இருக்கிறார்கள். கிறிஸ்தவ மார்க்கத்தின் ஆரம்ப உபதேசத்தை மாத்திரமே அவர்கள் பெற்றிருக்கிறார்கள். அதற்குமேல் அவர்கள் வளர்ச்சி பெறவில்லை. அவர்களுடைய ஆவிக்குரிய ஜீவியத்தில் வளர்ச்சியில்லாமல், ஆவிக்குரிய குழந்தைகளைப்போல இருக்கிறார்கள். இப்படிப்பட்டவர்களிடத்தில் ஆழமான சத்தியங்களை உபதேசம்பண்ண முடியாது. அவர்களுக்கு ஆரம்ப சத்தியங்களையே உபதேசம்பண்ணவேண்டும்.

### பால்

**நீங்கள் பெலனில்லாதவர்களானதால், உங்களுக்குப் போஜனங்கொடாமல், பாலைக் குடிக்கக் கொடுத்தேன்; இன்னமும் நீங்கள் மாம்சத்துக்கு உரியவர்களாயிருக்கிறபடியால், இப்பொழுதும் உங்களுக்குப் பெலனில்லை (1கொரி 3:2).**

கொரிந்துவிலுள்ள விசுவாசிகள் பெலனில்லாதவர்களாயிருக் கிறார்கள். அவர்களால் திடமானபோஜனத்தைப் புசிக்க முடியவில்லை. நல்ல ஆகாரத்தைப் புசிப்பதற்கு அவர்களுக்குப் பெலனில்லை. ஆகையினால் பவுல் அவர்களுக்கு போஜனம் கொடுக்காமல், பாலைக் குடிக்கக்க கொடுப்பதாக எழுதுகிறார்.

கர்த்தருடைய ஊழியக்காரர்கள் தங்களுடைய பிரசங்கத்தைக் கேட்கிறவர்களின் ஆவிக்குரிய வளர்ச்சியை அறிந்து வைத்திருக்க வேண்டும். அவர்களால் எந்த அளவு புரிந்துகொள்ள முடியும் என்பது பிரசங்கியாருக்குத் தெரிந்திருக்கவேண்டும். அவர்களுடைய ஆவிக்குரிய வளர்ச்சி என்ன, அவர்களுக்கு எப்படிப்பட்ட சத்தியத்தைப் போதித்தால் அவர்கள் புரிந்துகொள்வார்கள் என்பதையெல்லாம் பிரசங்கியார் அறிந்து வைத்திருக்க வேண்டும்.

இயற்கையாகவே குழந்தைகளாக இருக்கிறவர்கள் புருஷர்களாக வளர்ச்சி பெறுவார்கள். இயற்கையின் வளர்ச்சி நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்திலும் காணப்படவேண்டும். கிறிஸ்துவுக்குள் குழந்தைகளாக இருக்கிறவர்கள், கிறிஸ்துவுக்குள் பூரண புருஷராக வளரவேண்டும். நம்மிடத்தில் ஆவிக்குரிய வளர்ச்சி காணப்படவில்லையென்றால் நாம் ஆவிக்குரிய குழந்தைகளாகவே இருப்போம். தேவனுடைய கிருபையிலும், அவரை அறிகிற அறிவிலும் நாம் வளர்ச்சி பெறவேண்டும்.

### பொறாமையும் வாக்குவாதமும்

**பொறாமையும் வாக்குவாதமும் பேதகங்களும் உங்களுக்குள் இருக்கிறபடியால், நீங்கள் மாம்சத்திற்கு உரியவர்களாயிருந்து மனுஷமார்க்கமாய் நடக்கிறீர்களல்லவா? ஒருவன் நான் பவுலைச் சேர்ந்தவனென்றும், வேறொருவன் நான் அப்பொல்லோவைச் சேர்ந்தவனென்றும் சொல்லுகிறபடியால் நீங்கள் மாம்சத்திற்குரியவர்களல்லவா? (1கொரி 3:3,4)**

கொரிந்துவிலுள்ள விசுவாசிகள் மாம்சத்திற்குரியவர்களாயிருக் கிறார்கள். அவர்கள் மனுஷமார்க்கமாய் நடக்கிறார்கள். அவர்களுக்குள் பிரிவினை காணப்படுகிறது. அவர்கள் மத்தியில் அநேக ஊழியக்காரர்கள் ஊழியம் செய்கிறார்கள். ஒரு சில, விசுவாசிகள் கர்த்தரைச் சார்ந்து கொள்வதற்குப் பதிலாக, ஊழியக்காரர்களைச் சார்ந்து கொள்கிறார்கள். இதனால் அவர்களுக்குள் பொறாமையும், வாக்குவாதமும், பேதகங்களும் உண்டாயிற்று.

ஒருவன் நான் பவுலைச் சேர்ந்தவனென்றும், வேறொருவன் நான் அப்பொல்லோவைச் சேர்ந்தனென்றும் சொல்லுகிறான். மார்க்ககாரியங்களைக் குறித்து வாக்குவாதமோ, கருத்து வேறுபாடோ இருக்கக்கூடாது. இவையெல்லாம் மாம்ச சுபாவங்கள். ஒற்றுமையும் சமாதானமும் ஆவிக்குரிய சுபாவங்கள்.

கொரிந்தியர்களுக்குள் பொறாமையும் வாக்குவாதமும், பேதகங்களும் இருக்கிறது. இதனால் தாங்கள் மாம்சத்திற்குரியவர்களென்று தங்கள் சுபாவத்தின் மூலமாய் வெளிப்படுத்துகிறார்கள். கிறிஸ்துவின் மெய்யான உபதேசம் மனுஷர் மத்தியில் சமாதானத்தை உண்டுபண்ணும். குழப்பத்தை உண்டுபண்ணாது.

கொரிந்தியர்கள் மனுஷமார்க்கமாய் நடக்கிறார்கள். மாம்சத்திற்குரியவர்களாயிருக்கிறார்கள். கிறிஸ்துவில் சீஷராய் நடக்கவேண்டியவர்கள் சாதாரண மனுஷரைப்போல நடக்கிறார்கள். விசுவாசிகளாகிய நம்முடைய பேச்சிலும், செய்கையிலும் பரிசுத்தம் காணப்படவேண்டும். உலகத்தாரையும் நம்மையும் பரிசுத்தம் வேறுபிரிக்கிறது. நமக்குள் பரிசுத்தமில்லை யென்றால், நமக்கும் உலகப்பிரகாரமான ஜனங்களுக்கும் வித்தியாசம் இருக்காது. நாம் மாம்சத்திற்குரியவர்களைப்போல இருப்போம். மனுஷமார்க்கமாய் நடப்பதுபோல நடப்போம்.

## ஊழியக்காரர்
## 1கொரி 3 : 5-10

**1கொரி 3:5. பவுல் யார்? அப்பொல்லா யார்? கர்த்தர் அவனவனுக்கு அருள் அளித்தபடியே நீங்கள் விசுவாசிக்கிறதற்கு ஏதுவாயிருந்த ஊழியக்காரர்தானே.**

**1கொரி 3:6. நான் நட்டேன், அப்பொல்லா நீர்ப்பாய்ச்சினான். தேவனே விளையச் செய்தார்.**

**1கொரி 3:7. அப்படியிருக்க, நடுகிறவனாலும் ஒன்றுமில்லை, நீர்பாய்ச்சுகிறவனாலும் ஒன்றுமில்லை, விளையச்செய்கிற தேவனாலே எல்லாமாகும்.**

**1கொரி 3:8. மேலும் நடுகிறவனும் நீர்பாய்ச்சுகிறவனும் ஒன்றாயிருக்கிறார்கள்; அவனவன் தன் தன் வேலைக்குத் தக்கதாய்க் கூலியைப் பெறுவான்.**

**1கொரி 3:9. நாங்கள் தேவனுக்கு உடன் வேலையாட்களாயிருக்கிறோம்; நீங்கள் தேவனுடைய பண்ணையும், தேவனுடைய மாளிகையுமாயிருக்கிறீர்கள்.**

**1கொரி 3:10. எனக்கு அளிக்கப்பட்ட தேவகிருபையின்படியே புத்தியுள்ள சிற்பாசாரியைப்போல அஸ்திபாரம் போட்டேன். வேறொருவன் அதின் மேல் கட்டுகிறான். அவனவன் தான் அதின்மேல் இன்னவிதமாய்க் கட்டுகிறானென்று பார்க்கக்கடவன்.**

## பவுல் யார்

**பவுல் யார்? அப்பொல்லா யார்? கர்த்தர் அவனவனுக்கு அருள் அளித்தபடியே நீங்கள் விசுவாசிக்கிறதற்கு ஏதுவாயிருந்த ஊழியக்காரர்தானே (1கொரி 3:5).**

கொரிந்துவிலுள்ள விசுவாசிகள் மத்தியில் பொறாமையும் வாக்குவாதமும், பேதகங்களும், பிரிவினைகளும் காணப்படுகிறது. இந்த பிரச்சனைகளைத் தீர்த்துவைப்பதற்கு பவுல் நல்ல ஆலோசனைகளைச் சொல்லுகிறார். கொரிந்தியர் மத்தியில் ஒரு சில ஊழியக்காரர்கள் ஊழியம் செய்கிறார்கள். கொரிந்தியர்கள் ஊழியக்காரர்களை மதிக்கிறார்கள். ஆனால் ஊழியக்காரர்களுக்குரிய மரியாதையைக் கொடுப்பதைவிட, மிகவும் அதிகமான மரியாதையைக் கொடுக்கிறார்கள்.

அவர்கள் கிறிஸ்துவைச் சார்ந்துகொள்வதற்குப் பதிலாக, ஊழியக்காரர்களைச் சார்ந்து கொள்கிறார்கள். இதனால் ஊழியக்காரர் களினிமித்தமாய் அவர்களுக்குள் பிரிவினை உண்டாயிற்று. இந்தப் பிரிவினை நீங்கவேண்டுமென்றால், கொரிந்துவிலுள்ள விசுவாசிகள் ஊழியக்காரர்களை ஊழியக்காரர்களாய் மாத்திரம் பாவித்தால் போதுமானது.

பவுல் இந்தப் பிரச்சனையைப் பற்றிச் சொல்லும்போது, "பவுல் யார்? அப்பொல்லோ யார்" என்று கேட்கிறார். இவர்கள் கர்த்தருடைய ஊழியக்காரர்கள். கொரிந்தியர் மத்தியில் கர்த்தருடைய ஊழியத்தைச் செய்வதற்காக அனுப்பப்பட்டவர்கள். கர்த்தர் ஒவ்வொருவனுக்கும் கிருபையளிக்கிறார். அதுபோலவே ஊழியக்காரர்களுக்கும் கிருபையளிக்கிறார். ஊழியக்காரர்கள் தேவனுடைய கருவிகளாகயிருக்கிறார்கள். நம்முடைய விசுவாசத்தைக் கட்டியெழுப்புவதற்கு அவர்கள் ஊழியம் செய்கிறார்கள். கர்த்தரைப்பற்றி நாம் புரிந்துகொள்வதற்கு அவர்கள் நமக்குப் போதிக்கிறார்கள். ஆவிக்குரிய ஜீவியத்தில் நாம் வளர்ச்சி பெறுவதற்கு சத்தியங்களை நமக்கு உபதேசிக்கிறார்கள்.

கர்த்தருடைய ஊழியக்காரர்களை நாம் மதிக்கவேண்டும். எந்தச் சூழ்நிலையிலும் அவர்களை உதாசீனப்படுத்தி அவமதித்துவிடக்கூடாது. ஊழியக்காரர்களுக்கு உரிய மரியாதையைக் கொடுக்கவேண்டும். அதே வேளையில் ஊழியக்காரர்களை தேவனுடைய சிங்காசனத்தில் தூக்கி வைத்துவிடவும் கூடாது. கர்த்தருக்குரியதை கர்த்தருக்கும், ஊழியக்காரருக்குரியதை ஊழியக்காரருக்கும் கொடுக்கவேண்டும்.

தேவன் அப்போஸ்தலருக்கு தம்முடைய வரங்களையும், ஆவிக்குரிய வல்லமையையும் கொடுத்திருக்கிறார். அப்போஸ்தலர்கள் இயேசுகிறிஸ்துவின் நாமத்தினால் அற்புதங்களையும் அடையாளங்களையும் செய்கிறார்கள். இவையெல்லாவற்றையும் அவர்கள் தங்கள் சுயபலத்தினால் செய்யவில்லை. தேவனே அவர்களுக்கு கிருபைகளையும், வரங்களையும், பெலத்தையும் கொடுக்கிறவர். அவர்கள் தேவனிடத்திலிருந்து பெற்றுக் கொள்ளவில்லையென்றால், அவர்களிடத்தில் ஒன்றும் இருக்காது. ஆகையினால் ஊழியக்காரர்கள் மிகுந்த கவனத்தோடு ஊழியம் செய்யவேண்டும். தங்களுடைய ஊழியமும் உபதேசமும் தேவனுக்குரியது என்பதை உறுதிபண்ணவேண்டும்.

## தேவனே விளையச்செய்தார்

**நான் நட்டேன், அப்பொல்லா நீர்ப்பாய்ச்சினான். தேவனே விளையச் செய்தார். அப்படியிருக்க, நடுகிறவனாலும் ஒன்றுமில்லை, நீர்பாய்ச்சுகிறவனாலும் ஒன்றுமில்லை, விளையச்செய்கிற தேவனாலே எல்லாமாகும் (1கொரி 3:6,7).**

பவுலும் அப்பொல்லோவும் கர்த்தருடைய ஊழியக்காரர்கள். தங்களுடைய ஊழியத்தைப்பற்றிச் சொல்லும்போது, தான் நட்டதாகவும், அப்பொல்லோ நீர்பாய்ச்சியதாகவும் பவுல் சொல்லுகிறார். இவ்விரண்டுமே முக்கியமான ஊழியங்கள். இவ்விருவருமே தேவவரம் பெற்ற ஊழியர்கள். கர்த்தர் ஒவ்வொரு ஊழியக்காரரையும் ஒவ்வொரு ஊழியத்தில் பயன்படுத்துகிறார். ஊழியக்காரர்களெல்லோரும் ஒருவருக்கொருவர் இணைந்து ஊழியம் செய்யவேண்டும். பிரிந்துவிடக்கூடாது. விசுவாசிகளைப் பிரித்துவிடவும் கூடாது.

தேவன் பவுலை நடுகிற ஊழியத்தில் பயன்படுத்துகிறார். நடுகிற ஊழியம் முக்கியமானது. நட்டால் மாத்திரம் போதாது. அதற்கு நீர் பாய்ச்சவும் வேண்டும். தேவன் அப்பொல்லோவை நீர்பாய்ச்சுகிற ஊழியத்தில் பயன்படுத்துகிறார். ஊழியக்காரர்கள் நட்டாலும், நீர்பாய்ச்சினாலும், விளைச்சல் இல்லையென்றால் பிரயோஜனமில்லை. ஊழியக்காரர்களால் விளையச் செய்ய வைக்க முடியாது. தேவனே விளையச் செய்கிறவர். தேவனே விளைச்சலைத் தருகிறவர். தேவனே அறுவடையைத் தருகிறவர்.

நம்முடைய ஊழியம் ஜெயமுள்ளதாகயிருக்க வேண்டுமென்றால், நாம் தேவனிடமிருந்து தெய்வீக ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ளவேண்டும். ஏனெனில் நடுகிறவனாலும் ஒன்றுமில்லை. நீர்பாய்ச்சுகிறவனாலும் ஒன்றுமில்லை. விளையச்செய்கிற தேவனாலே எல்லாம் ஆகும். தேவனுடைய கிருபையில்லாமல் எந்த ஊழியக்காரராலும், எந்த ஊழியத்தையும், ஜெயமாய்ச் செய்ய முடியாது. தேவன் விளைச்சலைக் கொடுத்தால் மாத்திரமே, நாம் நட்டதற்கும், நீர்பாய்ச்சியதற்கும் பலன் கிடைக்கும்.

தேவனே நம்முடைய ஊழியத்தில் ஆத்தும அறுவடையைத் தருகிறவர். கர்த்தர் நமக்குக் கொடுக்கிற ஊழியத்தை நாம் உண்மையாய்ச் செய்யவேண்டும். நம்முடைய சுயமுயற்சியினால் ஊழியம் நடைபெறும் என்று எதிர்பார்க்கக்கூடாது. தேவனுடைய கிருபையில்லாமல் நம்மால் ஒன்றும் முடியாது என்னும் மனத்தாழ்மை நமக்குள் காணப்படவேண்டும். தேவனால் எல்லாம் ஆகுமென்று அவரை விசுவாசிக்கவேண்டும்.

## வேலைக்குத்தக்கதாய் கூலி

**மேலும் நடுகிறவனும் நீர் பாய்ச்சுகிறவனும் ஒன்றாயிருக்கிறார்கள்; அவனவன் தன் தன் வேலைக்குத் தக்கதாய்க் கூலியைப் பெறுவான் (1கொரி 3:8).**

கிறிஸ்துவின் ஊழியக்காரர்கள் வெவ்வேறு விதமான ஊழியங்களைச் செய்தாலும் அவர்கள் கிறிஸ்துவுக்குள் ஒன்றாயிருக்கிறார்கள். நடுகிறவனும் நீர்பாய்ச்சுகிறவனும் ஒன்றாயிருக்கிறார்கள் என்று பவுல் சொல்லுகிறார். ஒரே கர்த்தரே அவர்களைத் தம்முடைய ஊழியத்திற்கு அழைத்திருக்கிறார். அவரே ஊழியக்காரர்களைத் தம்முடைய ஊழியத்தில் பயன்படுத்துகிறார்.

ஊழியம் கர்த்தருடையது. கர்த்தருடைய ஊழியத்தில் ஊழியக்காரர்கள் ஒவ்வொரு பகுதியாகச் செய்கிறார்கள். ஊழியக்காரர்கள் ஒருவருக்கொருவர் இசைந்து, இணைந்து செயல்படவேண்டும். தங்களுக்குள் பிரிந்துவிடக்கூடாது. தங்களுக்கென்று ஒரு கூட்டத்தைச் சேர்த்துக்கொண்டு ஜனங்களைப் பிரித்துவிடக்கூடாது.

கர்த்தருடைய உண்மையுள்ள ஊழியக்காரர்களெல்லோரும் கிறிஸ்துவுக்குள் ஒன்றாயிருக்கிறார்கள். அவர்களெல்லோரும் இணைந்து தேவனுடைய பிரதான ஊழியத்தில் ஈடுபடுகிறார்கள். கிறிஸ்துவின் சிந்தையே ஊழியக்காரர்களிடத்தில் காணப்படுகிறது. கிறிஸ்துவின் சித்தத்தின் பிரகாரமும், திட்டத்தின் பிரகாரமும், ஊழியக்காரர்கள், கர்த்தர் தங்களுக்குக் கொடுத்திருக்கிற ஊழியத்தை உண்மையாய்ச் செய்கிறார்கள்.

தம்முடைய உண்மையுள்ள ஊழியக்காரர்களுக்கு தேவன் ஆசீர்வாதமான பிரதிபலன்களைக் கொடுக்கிறார். எல்லோருக்கும் ஒன்றுபோல் ஆசீர்வாதம் கொடுக்காமல், அவனவனுடைய ஊழியத்திற்குத்தக்கதாய் கர்த்தர் பிரதிபலனைக் கொடுக்கிறார். அவனவன் தன் தன் வேலைக்குத்தக்கதாய் கூலியைப் பெற்றுக்கொள்வதுபோல, கர்த்தருடைய ஊழியக்காரர்களும், தங்களுடைய ஊழியத்திற்குத் தக்கதாய் ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்கிறார்கள்.

சிறுக விதைக்கிறவர்கள் சிறுக அறுப்பார்கள். அதிகமாய் விதைக்கிறவர்கள் அதிகமாய் அறுப்பார்கள். அதுபோலவே கர்த்தருக்காக அதிகமாய் ஊழியம் செய்கிறவர்கள் அதிகமான ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்வார்கள். கர்த்தருடைய ஊழியத்தில் அதிக உண்மையாய் ஊழியம் செய்கிறவர்கள் மேன்மையான பலனைப் பெற்றுக்கொள்வார்கள்.

## தேவனுக்கு உடன் வேலையாட்கள்

**நாங்கள் தேவனுக்கு உடன் வேலையாட்களாயிருக்கிறோம்; நீங்கள் தேவனுடைய பண்ணையும், தேவனுடைய மாளிகையுமாயிருக்கிறீர்கள் (1கொரி 3:9).**

கர்த்தருடைய ஊழியக்காரர்கள் தேவனுக்கு உடன் வேலையாட்களாயிருக்கிறார்கள். தேவனே இவர்களைத் தம்முடைய ஊழியத்தில் பயன்படுத்துகிறார். ஊழியக்காரர்களெல்லோரும் தேவனோடு இணைந்து ஊழியம் செய்கிறார்கள். ஒவ்வொரு ஊழியக்காரரும் என்ன ஊழியம் செய்யவேண்டுமென்பது தேவனுக்குத் தெரியும். ஊழியக்காரருடைய ஊழியம் வீணாய்ப் போய்விடாதவாறு, தேவன் மிகுந்த கவனத்தோடு ஒவ்வொரு ஊழியக்காரரையும் பயன்படுத்துகிறார். நம்முடைய பிரயாசங்கள் வீணாய்ப் போய்விடக்கூடாது என்பதில் தேவன் மிகுந்த கவனம் செலுத்துகிறார்.

தேவனுடைய நியாயத்தீர்ப்பு சத்தியத்தின் பிரகாரம் இருக்கும். தம்முடைய ஊழியக்காரர்கள் தமக்கு எப்படி ஊழியம் செய்கிறார்களோ, அப்படியே அவர் அவர்களை ஆசீர்வதிக்கிறார். நம்முடைய உண்மைக்கும் உத்தமத்திற்கும், கடின உழைப்புக்கும் தேவன் வெகுமதிகளைக் கொடுக்கிறார். ஒவ்வொரு ஊழியக்காரரும், தான் செய்த ஊழியத்திற்குத் தக்கதாய், தேவனிடத்திலிருந்து வெகுமதிகளைப் பெற்றுக்கொள்வார். தேவன் நீதியுள்ளவர். தம்முடைய ஊழியக்காரர்களை ஆசீர்வதிப்பதிலும் அவருடைய நீதி வெளிப்படும்.

தேவன் தம்முடைய ஊழியக்காரர்மீது எப்போதும் கண்ணோக்கமாயிருக்கிறார். அவர்களைத் தம்முடைய பண்ணையிலும் மாளிகையிலும் வேலையாட்களாய்ப் பயன்படுத்துகிறார். நாம் தேவனுடைய பண்ணையும், தேவனுடைய மாளிகையுமாயிருக்கிறோம் என்று பவுல் விசுவாசிகளைப்பற்றிச் சொல்லுகிறார்.

விசுவாசிகள் யாரும் பவுலுடைய பண்ணையோ, அப்பொல்லோவுடைய பண்ணையோ அல்ல. அவர்கள் பவுலுடைய மாளிகையோ அல்லது அப்பொல்லோவுடைய மாளிகையோ அல்ல. விசுவாசிகளெல்லோரும் தேவனுடைய பண்ணையும் தேவனுடைய மாளிகையுமாயிருக்கிறார்கள். எல்லாம் தேவனுக்குரியது. கர்த்தருடைய ஊழியக்காரர்கள் விசுவாசிகள் மத்தியில் தேவனுடைய ஊழியத்தைச் செய்கிறார்கள். தேவனுக்கு உடன் வேலையாட்களாயிருக்கிறார்கள்.

## தேவகிருபை

**எனக்கு அளிக்கப்பட்ட தேவகிருபையின்படியே புத்தியுள்ள சிற்பாசாரியைப்போல அஸ்திபாரம் போட்டேன். வேறொருவன் அதின் மேல் கட்டுகிறான். அவனவன் தான் அதின்மேல் இன்னவிதமாய்க் கட்டுகிறானென்று பார்க்கக்கடவன் (1கொரி 3:10).**

தேவனுடைய மாளிகையில் கட்டுகிறவர்களாக ஊழியம் செய்வது மிகப்பெரிய சிலாக்கியம். கட்டுகிறவர்களுக்கு தலைவராகயிருப்பது அதைவிட பெரிய மேன்மை புத்தியுள்ள சிற்பாசாரியால் மாத்திரமே அஸ்திபாரம் போட முடியும். ஞானமுள்ளவர்கள் மாத்திரமே தேவனுடைய ராஜ்யத்தை கட்டியெழுப்புகிற ஊழியத்தில் பங்கு பெறமுடியும். அப்போஸ்தலர் பவுல் தன்னை புத்தியுள்ள சிற்பாசாரியைப்போல அஸ்திபாரம் போட்டதாகச் சொல்லுகிறார். தன்னைப்பற்றி பவுல் பெருமையாகப் பேசவில்லை. தேவகிருபைக்கு முக்கியத்துவம் கொடுத்து இப்படிச் சொல்லுகிறார்.

தேவகிருபையினால் பவுல் புத்தியுள்ள சிற்பாசாரியைப்போல கர்த்தருக்கு ஊழியம் செய்கிறார். தேவகிருபையே பவுலுக்கு இந்த ஞானத்தைக் கொடுத்திருக்கிறது. ஆவிக்குரிய ஜீவியத்தில் நமக்குப் பெருமை இருக்கக்கூடாது. அதே வேளையில் தேவனுடைய கிருபைகளை நாம் அசட்டை செய்து விடவும் கூடாது.

தேவன் நமக்குக் கொடுத்திருக்கும் கிருபைகளை பணிவோடு ஏற்றுக்கொண்டு, அவருக்கு நன்றியுள்ளவர்களாக இருக்கவேண்டும். தேவனுக்கு மகிமை உண்டாகும் விதமாக தேவகிருபையை மேன்மைப்படுத்த வேண்டும். தேவன் நமக்குக் கொடுத்திருக்கும் கடமைகளை உண்மையோடு நிறைவேற்ற வேண்டும். தேவகிருபையினால் அவற்றை நேர்த்தியாய்ச் செய்யவேண்டும்.

தேவன் தம்முடைய ஊழியக்காரர்களுக்கு வரங்களையும் கிருபைகளையும் கொடுத்திருக்கிறார். ஊழியக்காரர்கள் அதைக் குறித்து பெருமை பாராட்டக்கூடாது. பெருமை பாராட்டுவதற்குப் பதிலாக, தேவன் தங்களுக்குக் கொடுத்திருக்கும் ஊழியத்தைச் செய்வதற்குத் தங்களைத் தகுதிப்படுத்திக் கொள்ளவேண்டும். ஊழியத்தில் ஜெயமுண்டாகும்போது நம்முடைய திறமைகளை நினைத்துப் பெருமைப்படக்கூடாது. அதற்குப் பதிலாக தேவகிருபைக்காக அவரை நன்றியோடு துதிக்கவேண்டும். தேவகிருபையில்லாமல் நம்மால் ஒன்றும் செய்ய முடியாது என்பதை அங்கீகரிக்கவேண்டும்.

பவுல் அஸ்திபாரம் போட்டிருக்கிறார். வேறொருவர் அதின்மேல் கட்டுகிறார். கொரிந்தியர் மத்தியில் பவுல் சபையின் அஸ்திபாரத்தைப் போட்டிருக்கிறார். அவர்கள் மத்தியில் பவுலே ஆரம்ப ஊழியத்தைச் செய்தவர். அவர்களுடைய இரட்சிப்புக்காக பவுல் அதிகமாய்ப் பிரயாசப்பட்டு ஊழியம் செய்தார். தன்னுடைய மேன்மையையும், மரியாதையையும் மற்றவர்கள் அபகரித்துக்கொள்ள பவுல் அனுமதிக்கவில்லை. தன்னுடைய நற்பெயருக்கு களங்கம் உண்டாக பவுல் விரும்பவில்லை.

கர்த்தருடைய ஊழியக்காரர்களாகிய நாம், நம்முடைய நற்சாட்சியைக் குறித்த விஷயத்தில் மிகவும் எச்சரிப்போடிருக்கவேண்டும். நமக்குள் மனத்தாழ்மை இருக்கவேண்டும். அதே வேளையில் சமுதாயத்திலும், ஊழியத்திலும் நம்முடைய நற்பெயரைக் கெடுக்க எத்தனிக்கும் அந்தகார சக்திகளுக்கு எதிர்த்து நிற்கவேண்டும். அப்போதுதான் நம்முடைய ஊழியம் பிரயோஜனமுள்ளதாகயிருக்கும்.

பவுல் போட்ட அஸ்திபாரத்தின்மீது மற்றவர்கள் கட்டுகிறார்கள். அந்த அஸ்திபாரத்தின்மேல் தாங்கள் என்னவிதமாய்க் கட்டுகிறோம் என்பதை அவர்கள் நோக்கிப்பார்க்கவேண்டும். நல்ல அஸ்திபாரத்தின்மீது வெவ்வேறு விதமாகக் கட்டிடத்தைக் கட்டலாம். அழகுபடுத்தலாம். கட்டிடத்தின் உயரத்தைக் கூட்டலாம். நாம் எவ்வளவு கட்டினாலும் அஸ்திபாரம் அதைத் தாங்குமா என்பதைச் சோதித்துப் பார்க்கவேண்டும்.

நாம் கட்டும்போது அதில் என்னென்ன பொருட்களை சேர்க்கிறோம் என்பதைக் குறித்தும் கவனிக்கவேண்டும். யாரும் பொன்னையும் மண்ணையும் ஒன்றாகக் கலக்கமாட்டார்கள். கர்த்தருடைய ஊழியக்காரர்கள் தேவனுடைய மாளிகையைக் கட்டும்போது மிகவும் கவனமாய்க் கட்டவேண்டும். தங்கள் சுயவிருப்பத்தின் பிரகாரம் எதையும் கட்டக்கூடாது. இயேசுகிறிஸ்துவே சபைக்கு அஸ்திபாரமாகயிருக்கிறார். தேவனுடைய தெய்வீக வெளிப்பாடே நம்முடைய ஊழியத்திற்கு அஸ்திபாரமாகயிருக்கிறது. அதை நம்முடைய சுயஇஷ்டத்தின் பிரகாரம் வியாக்கியானம் பண்ணக்கூடாது. அஸ்திபாரம் எப்படிப்பட்டது என்பதை ஆராய்ந்து பார்த்து, தேவனுடைய தெய்வீக திட்டத்தின் பிரகாரம் தேவனுடைய மாளிகையைக் கட்டவேண்டும்.

## அஸ்திபாரமாகிய இயேசு கிறிஸ்து
## 1கொரி 3 : 11-15

**1கொரி 3:11. போடப்பட்டிருக்கிற அஸ்திபாரமாகிய இயேசுகிறிஸ்துவை அல்லாமல் வேறே அஸ்திபாரத்தைப் போட ஒருவனாலும் கூடாது.**

**1கொரி 3:12. ஒருவன் அந்த அஸ்திபாரத்தின் மேல் பொன், வெள்ளி, விலையேறப்பெற்ற கல், மரம், புல், வைக்கோல் ஆகிய இவைகளைக் கட்டினால்,**

**1கொரி 3:13. அவனவனுடைய வேலைப்பாடு வெளியாகும்; நாளானது அதை விளங்கப்பண்ணும். ஏனெனில் அது அக்கினியினாலே வெளிப்படுத்தப்படும்; அவனவனுடைய வேலைப்பாடு எத்தன்மையுள்ளதென்று அக்கினியானது பரிசோதிக்கும்.**

**1கொரி 3:14. அதின்மேல் ஒருவன் கட்டினது நிலைத்தால், அவன் கூலியைப் பெறுவான்.**

**1கொரி 3:15. ஒருவன் கட்டினது வெந்துபோனால் அவன் நஷ்டமடைவான்; அவனோ இரட்சிக்கப்படுவான். அதுவும் அக்கினியிலகப்பட்டுத் தப்பினது போலிருக்கும்.**

## வேறே அஸ்திபாரம்

**போடப் பட்டிருக்கிற அஸ்திபாரமாகிய இயேசுகிறிஸ்துவை அல்லாமல் வேறே அஸ்திபாரத்தைப் போட ஒருவனாலும் கூடாது (1கொரி 3:11).**

பவுல் தனக்கு அளிக்கப்பட்ட தேவகிருபையின்படியே புத்தியுள்ள சிற்பாசாரியைப்போல அஸ்திபாரம் போட்டார். தான் எப்படிப்பட்ட அஸ்திபாரத்தைப் போட்டாரென்பதை பவுல் இங்கு விவரிக்கிறார். இயேசு கிறிஸ்துவே அஸ்திபாரமாகயிருக்கிறார். இயேசுகிறிஸ்துவையல்லாமல் வேறே அஸ்திபாரத்தைப்போட ஒருவனாலும் கூடாது. இயேசுகிறிஸ்துவின் உபதேசமும் அவருடைய மத்தியஸ்த ஊழியமும் நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்திற்கு அஸ்திபாரமாகயிருக்கிறது. மற்றவையெல்லாம் இந்த அஸ்திபாரத்தின் மீது கட்டியெழுப்பப்படுகிறது. நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்திற்கு இயேசு கிறிஸ்துவே அஸ்திபாரமாகயிருக்கிறார். நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தை வேறு அஸ்திபாரத்தின்மீது கட்டினால், நாம் மணலின்மீது வீடுகட்டுகிறவர்களைபோல இருப்போம். நாம் கட்டியது நிலைக்காது.

## பொன், வைக்கோல்

**ஒருவன் அந்த அஸ்திபாரத்தின் மேல் பொன், வெள்ளி, விலையேறப்பெற்ற கல், மரம், புல், வைக்கோல் ஆகிய இவைகளைக் கட்டினால், (1கொரி 3:12)**

ஒரு சிலர் இயேசுகிறிஸ்துவில் வெளிப்படுத்தப்பட்டிருக்கிற சத்தியத்தை மாத்திரம் பற்றிக்கொள்கிறார்கள். சில ஊழியக்காரர்கள் இயேசுகிறிஸ்துவையும், அவருடைய உபதேசத்தையும் மாத்திரமே பிரசங்கம்பண்ணுகிறார்கள். இப்படிப்பட்டவர்கள் கிறிஸ்துவாகிய அஸ்திபாரத்தின்மேல் பொன், வெள்ளி, விலையேறப்பெற்ற கல் ஆகியவற்றை பயன்படுத்திக் கட்டுகிறார்கள். இந்தக் கட்டிடம் கிறிஸ்துவாகிய நல்ல அஸ்திபாரத்தின் மீது கட்டப்படுகிறது.

வேறு சிலரோ கிறிஸ்துவாகிய அஸ்திபாரத்தின்மீது மரம், புல், வைக்கோல் ஆகியவைகளை வைத்துக் கட்டுகிறார்கள். அஸ்திபாரம் கிறிஸ்துதான். நல்ல அஸ்திபாரத்தின்மீதுதான் கட்டுகிறார்கள். ஆனால் இவர்கள் கட்டுவதற்கு நல்ல பொருட்களைப் பயன்படுத்தவில்லை. இவர்களிடத்தில் கிறிஸ்துவின் சிந்தை காணப்படவில்லை. கிறிஸ்துவின் சித்தத்தையும், திட்டத்தையும் விட்டு தூர விலகிப்போய், தங்களுடைய சுயஇஷ்டத்தின் பிரகாரமாய் கட்டிடம் கட்டுகிறார்கள்.

ஆகையினால் இவர்கள் கட்டியது கிறிஸ்துவாகிய நல்ல அஸ்திபாரத்தின்மீது கட்டப்பட்டாலும், இது அக்கினியினால் சோதிக்கப்படும்போது நிலைத்து நிற்காது.

நாம் ஒவ்வொருவரும் கிறிஸ்துவுக்காக செய்த ஊழியம் அக்கினியினால் சோதிக்கப்படும். நாமெல்லோருமே கிறிஸ்துவாகிய அஸ்திபாரத்தின் மீதுதான் கட்டியிருக்கிறோம். ஆனாலும் கட்டுவதற்கு நாம் எப்படிப்பட்ட பொருட்களைப் பயன்படுத்தினோம் என்பதை அக்கினியானது சோதித்துப் பார்க்கும்.

## வேலைப்பாடு வெளியாகும்

**அவனவனுடைய வேலைப்பாடு வெளியாகும்; நாளானது அதை விளங்கப்பண்ணும். ஏனெனில் அது அக்கினியினாலே வெளிப்படுத்தப்படும்; அவனவனுடைய வேலைப்பாடு எத்தன்மையுள்ளதென்று அக்கினியானது பரிசோதிக்கும் (1கொரி 3:13).**

அவனவனுடைய வேலைப்பாடு அவனவனுக்கும் வெளிப்படுத்தப்படும். மற்றவர்களுக்கும் வெளிப்படுத்தப்படும். சில ஊழியக்காரர்களின் தவறான உபதேசத்தினால் ஒரு சிலர் சத்தியத்தை விட்டு தவறான பாதையில் வழிநடத்தப்பட்டிருப்பார்கள். வேறு சிலரோ ஊழியக்காரரின் தவறான உபதேசத்திலிருந்து தப்பித்து, கிறிஸ்துவின் மெய்யான உபதேசத்தைப் பற்றிக்கொள்வார்கள். சோதிக்கப்படும் நாளின்போது நாம் சோதிக்கப்படுவோம். மெய்யான வெளிச்சத்தில் நம்முடைய ஊழியம் சோதித்துப் பார்க்கப்படும். அந்த நாளில் நாம் எதையும் மறைக்கவும் முடியாது. மாய்மாலம் பண்ணவும் முடியாது. ஏனெனில் அது அக்கினியினால் வெளிப்படுத்தப்படும். நாளானது அதை விளங்கப்பண்ணும்.

ஒவ்வொருவனுடைய வேலைப்பாடு எத்தன்மையுள்ளது என்று அக்கினியானது பரிசோதிக்கும். மகாநாளின் நியாயத்தீர்ப்பின்போது நம்முடைய கிரியைகளெல்லாம் நியாயந்தீர்க்கப்படும். "ஆனதால், கர்த்தர் வருமளவும் நீங்கள் காலத்துக்கு முன்னே யாதொன்றைக் குறித்தும் தீர்ப்புச்சொல்லாதிருங்கள்; இருளில் மறைந்திருக்கிறவைகளை அவர் வெளியரங்கமாக்கி, இருதயங்களின் யோசனைகளையும் வெளிப்படுத்துவார்; அப்பொழுது அவனவனுக்குரிய புகழ்ச்சி தேவனால் உண்டாகும்" (1கொரி 4:5).

நியாயத்தீர்ப்பு நாளின்போது நம்முடைய கிரியைகளெல்லாம் சோதித்துப் பார்க்கப்படும். நியாயத்தீர்ப்பு நாள் ஒவ்வொரு மனுஷனையும் வேறு பிரிக்கும். ஒவ்வொரு மனுஷனுடைய வேலைப்பாடுகளையும் வேறு பிரித்து வித்தியாசம் காண்பிக்கும். அக்கினியானது தங்கத்தையும் களிம்பையும் வேறு பிரிப்பதுபோல நியாயத்தீர்ப்பு நாள் மனுஷருடைய கிரியைகளை வேறுபிரிக்கும். அக்கினியினால் உலோகங்கள் உருக்கப்பட்டு வேறு பிரிக்கப்படுவதுபோல, நம்முடைய கிரியைகளெல்லாம் நியாயத்தீர்ப்பு நாளின்போது வேறுபிரிக்கப்படும். அக்கினிக்கு முன்பாக நாம் எதையும் மறைக்க முடியாது. அந்நாளில் நம்மால் மாய்மாலம் பண்ணவும் முடியாது.

## கட்டினது நிலைத்தால்

**அதின்மேல் ஒருவன் கட்டினது நிலைத்தால், அவன் கூலியைப் பெறுவான் (1கொரி 3:14).**

மனுஷருடைய வேலைப்பாடுகள் அக்கினியினால் சோதிக்கப்படும்போது ஒரு சிலருடைய வேலைப்பாடுகள் நிலைக்கும். ஒரு சிலர் கட்டினது நிலைக்கும். அவர்கள் மெய்யான அஸ்திபாரமாகிய கிறிஸ்துவின்மீது கட்டியிருக்கிறார்கள். அந்த அஸ்திபாரத்தின்மீது பொன், வெள்ளி, விலையேறப்பெற்ற கல் போன்ற நல்ல பொருட்களை வைத்துக் கட்டியிருக்கிறார்கள். ஒழுங்காகவும், நேர்த்தியாகவும் கட்டியிருக்கிறார்கள்.

அஸ்திபாரமும் அதின்மீது கட்டியெழுப்பப்பட்டிருக்கிற கட்டடமும் நேர்த்தியாய் இணைக்கப்பட்டிருக்கிறது. அது ஒரே கட்டடமாக இருக்கிறது. அஸ்திபாரம் ஒன்றாகவும், இவர்கள் கட்டியது வேறொன்றாகவும் பிரிந்திருக்கவில்லை. கிறிஸ்துவாகிய அஸ்திபாரத்தின்மீது நேர்த்தியாக கட்டியிருக்கிறவர்களுடைய கட்டடம் நிலைக்கும். அவர்கள் தேவனிடமிருந்து வெகுமதியைப் பெறுவார்கள். முறைப்படி நேர்த்தியாய் கட்டியவர் தன் கூலியைப் பெறுவார். நியாயத்தீர்ப்பு நாளின்போது அவருக்கு கனமும், மேன்மையும் உண்டாகும். நித்திய மகிமை அவர் தலையின்மீது சூட்டப்படும்.

கிறிஸ்துவின் ஊழியக்காரர்கள் உண்மையாய் ஊழியம் செய்யவேண்டும். கிறிஸ்துவாகிய அஸ்திபாரத்தின்மீதே நம்முடைய ஊழியம் கட்டியெழுப்பப்படவேண்டும். ஊழியத்தைக் கட்டுவதற்கு கிறிஸ்துவில் வெளிப்படுத்தப்பட்டிருக்கிற மெய்யான சத்தியத்தை மாத்திரமே பயன்படுத்த வேண்டும். கிறிஸ்துவின் உபதேசத்தை மாத்திரமே சொல்லவேண்டும். நமக்குப் பிரியமான சுயஉபதேசத்தைப் பிரசங்கம்பண்ணக்கூடாது. நம்முடைய சொந்தக் கற்பனைகள் மரம், புல், வைக்கோல் போலவே இருக்கும். அக்கினியால் சோதிக்கப்படும்போது இவையெல்லாம் நிலைக்காது.

கிறிஸ்துவுக்காக உண்மையாய் ஊழியம் செய்கிறவர்கள் மகாநாளின் நியாயத்தீர்ப்பின் போது கனப்படுத்தப்படுவார்கள். தேவனுடைய நித்தியத்திற்குள் பிரவேசிப்பார்கள். அந்நாளில் நம்முடைய கண்ணீர்கள், கவலைகள், சஞ்சலங்கள் எல்லாம் நீக்கப்படும். நமக்கு நித்திய சந்தோஷமும், நித்திய கனமும் கொடுக்கப்படும்.

## கட்டினது வெந்துபோனால்

**ஒருவன் கட்டினது வெந்துபோனால் அவன் நஷ்டமடைவான்; அவனோ இரட்சிக்கப்படுவான். அதுவும் அக்கினியிலகப்பட்டுத் தப்பினதுபோலிருக்கும் (1கொரி 3:15).**

கிறிஸ்துவாகிய அஸ்திபாரத்தின்மீது நாம் கட்டியது அக்கினியினால் சோதிக்கப்படும். நாம் கட்டியது நிலைத்தால் நாம் கூலியைப் பெறுவோம். நாம் கட்டியது வெந்துபோனால் நாம் நஷ்டமடைவோம். நியாயத்தீர்ப்பு நாளின்போது நம்முடைய மாய்மாலங்களெல்லாம் நீக்கப்படும். நம்முடைய இரகசியங்களெல்லாம் வெளிப்படுத்தப்படும். இதுவரையிலும் வெளிஉலகத்திற்குத் தெரியாமலிருந்த நம்முடைய இரகசியமான காரியங்களெல்லாம் நியாயத்தீர்ப்பு நாளின்போது, உள்ளது உள்ளபடியே வெளிப்படுத்தப்படும். எதையும் நம்மால் மறைக்க முடியாது.

நாம் கட்டினது வெந்துபோனால் நாம் நஷ்டமடைவோம். இயேசுகிறிஸ்துவே நமக்கு அஸ்திபாரமாகயிருக்கிறார். அந்த அஸ்திபாரத்தின்மீதுதான் நாம் கட்டியிருக்கிறோம். ஆனால் நாம் கட்டுவதற்கு எப்படிப்பட்ட பொருட்களை பயன்படுத்தினோம் என்பது அந்நாளில் சோதித்துப் பார்க்கப்படும். அஸ்திபாரத்தின்மீது பொன், வெள்ளி, விலையேறப்பெற்ற கல் ஆகியவற்றை வைத்து நாம் கட்டியிருந்தால், அது நிலைக்கும். அஸ்திபாரத்தின்மீது மரம், புல், வைக்கோல் ஆகியவற்றை வைத்து நாம் கட்டியிருந்தால் அது வெந்துபோகும். நாம் உண்மையாக கட்டியிருக்கலாம். கடினமாக உழைத்திருக்கலாம். ஆனால் நாம் கட்டுவதற்குப் பயன்படுத்திய பொருள் நல்ல பொருட்களல்ல. அக்கினியினால் நிலைத்து நிற்கக்கூடிய பொருட்களல்ல. அது அக்கினியில் வெந்துபோகக்கூடிய பொருட்கள்.

நாம் ஆவிக்குரிய ஜீவியத்தில் நல்லவர்களாக இருக்கலாம். கர்த்தருக்காக உண்மையாய் ஊழியம் செய்கிறவர்களாகயிருக்கலாம். ஆனாலும் நம்முடைய ஊழியத்தினால் நமக்கு ஆசீர்வாதம் கிடைக்காமலும் போய்விடலாம். நம்முடைய ஊழியம் அக்கினியால் சோதித்துப் பார்க்கப்படும்போது நிலைத்து நிற்கவில்லையென்றால், நாம் கட்டியது வெந்துபோகும். நாம் கட்டியது எல்லாமே நமக்கு நஷ்டமாகிவிடும். நாம் செய்த ஊழியத்தினால் நமக்கு ஒரு வெகுமதியும் கிடைக்காது. நாம் இரட்சிக்கப் பட்டவர்களாகத்தான் இருப்போம். ஆனாலும் கிறிஸ்துவுக்காக நாம் செய்த ஊழியம் எதுவும் நிலைத்து நிற்காது. நாம் செய்த ஊழியத்தினால் நமக்கு ஆசீர்வாதம் கிடைக்காது. எல்லாம் நஷ்டமாகிவிடும்.

கிறிஸ்துவாகிய அஸ்திபாரத்தின் மீதுதான் இவர்கள் கட்டியிருக்கிறார்கள். ஆனால் இவர்கள் மரத்தையும், புல்லையும், வைக்கோலையும் பயன்படுத்தியிருக்கிறார்கள்.இவையெல்லாம் அக்கினியில் வெந்து போயிற்று. நாம் கட்டியது நிலைக்கவேண்டுமென்றால், அக்கினியில் வெந்துபோகாத தரமான பொருட்களைப் பயன்படுத்தவேண்டும். கர்த்தருடைய ஊழியக்காரர்களாகிய நமக்கு இந்த வாக்கியம் எச்சரிப்பாகவும் ஆலோசனையாகவும் சொல்லப்பட்டிருக்கிறது. நம்முடைய ஊழியத்தில் உண்மை இருக்கவேண்டும்.

கர்த்தருடைய ஊழியத்தை நம்முடைய சுயவிருப்பப்படி செய்யக்கூடாது. ஊழியத்தில் மாய்மாலம் இருக்கக்கூடாது. நாம் செய்வது யாருக்கும் தெரியாது என்று இறுமாப்பாயிருக்கக்கூடாது. நியாயத்தீர்ப்பு நாளின்போது எல்லாம் சோதிக்கப்படும்.

நியாயத்தீர்ப்பு நாளில் நாம் அக்கினியிலிருந்து தப்பித்தால் மாத்திரம் போதாது. நாம் கட்டியது நிலைத்திருக்க வேண்டும். தேவன் நீதியுள்ளவர். நீதியாய் நியாயந்தீர்க்கிறவர். நியாயத்தீர்ப்பு நாளில் தேவனுடைய கிருபையையும் இரக்கத்தையும் நம்மால் காணமுடியாது. அந்நாளில் அவருடைய நீதி மாத்திரமே வெளிப்படும்.

நாம் கட்டியது வெந்துபோனால் நமக்கு நஷ்டமுண்டாகும். நாம் இரட்சிக்கப்படுவோம். அதுவும் அக்கினியில் அகப்பட்டு தப்பினதுபோல தப்பிப்போம். எரிகிற அடுப்பிலிருந்து ஒரு கொள்ளியை வெளியே எடுத்ததுபோல நாம் தப்பித்திருப்போம். நாம் தப்பித்தது தவிர, நமக்கு வேறு நன்மை எதுவும் உண்டாகாது. நம்முடைய ஊழியம் ஆசீர்வாதமாகயிருக்க வேண்டுமென்றால், நாம் கிறிஸ்துவாகிய அஸ்திபாரத்தின்மீதும் கட்டவேண்டும். கிறிஸ்துவின் சித்தத்தின் பிரகாரமாகவும், அவருடைய திட்டத்தின் பிரகாரமாகவும் கட்டவேண்டும்.

## தேவனுடைய ஆலயம்
## 1கொரி 3 : 16-17

**1கொரி 3:16. நீங்கள் தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்களென்றும், தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருக்கிறாரென்றும் அறியாதிருக்கிறீர்களா?**

**1கொரி 3:17. ஒருவன் தேவனுடைய ஆலயத்தைக் கெடுத்தால், அவனை தேவன் கெடுப்பார்; தேவனுடைய ஆலயம் பரிசுத்தமாயிருக்கிறது; நீங்களே அந்த ஆலயம்.**

கொரிந்து சபையிலுள்ள கள்ளப்போதகர்கள் பரிசுத்தமாய் ஜீவிக்காமல் அசுத்தராயிருக்கிறார்கள். இவர்கள் அசுத்தராயிருப்பது மாத்திரமல்ல, கொரிந்து சபையிலுள்ளவர்களிடம், எப்படி வேண்டுமானாலும் ஜீவிக்கலாம் என்று சொல்லி அவர்களுக்குத் தவறாக உபதேசம்பண்ணுகிறார்கள்.

இந்த நிருபத்தின் ஒரு பகுதியில் பவுல் கொரிந்து சபையிலுள்ள அசுத்தத்தைக் குறிப்பிட்டு எழுதுகிறார். "வயிற்றுக்குப் போஜனமும், போஜனத்துக்கு வயிறும் ஏற்கும்; ஆனாலும் தேவன் இதையும் அதையும் அழியப்பண்ணுவார். சரீரமோ வேசித்தனத்திற்கல்ல, கர்த்தருக்கே உரியது; கர்த்தரும் சரீரத்திற்கு உரியவர். தேவன் கர்த்தரை எழுப்பினாரே, நம்மையும் தமது வல்லமையினாலே எழுப்புவார். உங்கள் சரீரங்கள் கிறிஸ்துவின் அவயங்களென்று அறியீர்களா? அப்படியிருக்க, நான் கிறிஸ்துவின் அவயங்களை வேசியின் அவயவங்களாக்கலாமா? அப்படிச் செய்யலாகாதே. வேசியோடு இசைந்திருக்கிறவன் அவளுடனே ஒரே சரீரமாயிருக்கிறானென்று அறியீர்களா? இருவரும் ஒரே மாம்சமாயிருப்பார்கள் என்று சொல்லியிருக்கிறதே. அப்படியே கர்த்தரோடிசைந்திருக்கிறவனும், அவருடனே ஒரே ஆவியாயிருக்கிறான். வேசித்தனத்திற்கு விலகியோடுங்கள். மனுஷன் செய்கிற எந்தப் பாவமும் சரீரத்திற்குப் புறம்பாயிருக்கும்; வேசித்தனஞ் செய்கிறவனோ தன் சுயசரீரத்திற்கு விரோதமாய்ப் பாவஞ்செய்கிறான். உங்கள் சரீரமானது நீங்கள் தேவனாலே பெற்றும் உங்களில் தங்கியும் இருக்கிற பரிசுத்த ஆவியினுடைய ஆலயமாயிருக்கிறதென்றும், நீங்கள் உங்களுடையவர்களல்லவென்றும் அறியீர்களா? கிரயத்துக்குக் கொள்ளப்பட்டீர்களே; ஆகையால் தேவனுக்கு உடையவைகளாகிய உங்கள் சரீரத்தினாலும் உங்கள் ஆவியினாலும் தேவனை மகிமைப்படுத்துங்கள்" (1கொரி 6:13-20).

கொரிந்துவிலுள்ள விசுவாசிகளைப் பற்றி பவுல் ஏற்கெனவே சொன்னபோது, "நீங்கள் தேவனுடைய மாளிகையாயிருக்கிறீர்கள்" (1கொரி 3:9) என்று சொன்னார். இப்போது அவர்களை "நீங்கள் தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்கள்" என்று சொல்லுகிறார். "நீங்கள் தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்களென்றும், தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருக்கிறாரென்றும் அறியாதிருக்கிறீர்களா? ஒருவன் தேவனுடைய ஆலயத்தைக் கெடுத்தால், அவனை தேவன் கெடுப்பார்; தேவனுடைய ஆலயம் பரிசுத்தமாயிருக்கிறது; நீங்களே அந்த ஆலயம்" (1கொரி 3:16,17).

கள்ளப் போதகர்களின் கள்ளஉபதேசம் மரம், புல், வைக்கோல் ஆகியவற்றினால் கட்டப்படுவதைப் போன்றது. அக்கினியினால் சோதிக்கப்படும்போது இவையெல்லாம் வெந்துபோகும். கிறிஸ்துவாகிய அஸ்திபாரத்தின்மீது இவர்கள் கட்டினாலும், இவர்கள் கட்டியது நிலைக்காது. அக்கினியில் வெந்துபோகும். இதைக் கட்டியவர்கள் அக்கினியிலிருந்து தப்பித்துக்கொள்வார்கள். ஆனால் இவர்களுக்கோ ஒரு பலனும் கிடைக்காது.

துர்உபதேசத்தைப் போதிக்கிறவர்கள் தேவனுக்குச் சத்துருக்களாக இருக்கிறார்கள். தேவனுக்கு கோபத்தை உண்டுபண்ணுகிறார்கள். இவர்களுடைய துன்மார்க்கத்தினிமித்தமாயும், துர் உபதேசத்தினிமித்தமாயும், தேவன் இவர்கள்மீது கோபங்கொண்டு இவர்களை அழித்துப்போடுவார். ஏனெனில் ஒருவன் தேவனுடைய ஆலயத்தைக் கெடுத்தால் அவனைத் தேவன் கெடுப்பார். தேவனுடைய ஆலயம் பரிசுத்தமாயிருக்கிறது. நாமே அந்த ஆலயம். தேவனுடைய ஆவியானவர் நம்மில் வாசமாயிருக்கிறார்.

ஆவிக்குரிய சபைகள் தேவனுடைய ஆலயங்களாயிருக்கிறது. தேவன் பரிசுத்தவான்கள் மத்தியில், பரிசுத்த ஆவியானவராக வாசம்பண்ணுகிறார். ஒவ்வொரு விசுவாசியும் ஜீவனுள்ள ஆலயமாகயிருக்கிறார்கள். ஜீவனுள்ள ஆலயத்தில் ஜீவனுள்ள தேவன் வாசம்பண்ணுகிறார். கிறிஸ்துவின் ஆவியானவர் மெய்யான விசுவாசிகள் எல்லோருடைய இருதயத்திலும் வாசம்பண்ணுகிறார். தேவனுடைய ஆலயம் பரிசுத்தமானது. பரிசுத்தமான பயன்பாட்டிற்காக பரிசுத்த ஆலயம் வேறுபிரிக்கப்பட்டிருக்கிறது. தேவனைத் துதிப்பதும், தேவனை ஆராதிப்பதும், தேவனை மகிமைப்படுத்துவதும் மாத்திரமே தேவனுடைய பரிசுத்த ஸ்தலத்தில் நடைபெறவேண்டும். உலகப்பிரகாரமான காரியங்களுக்கு தேவனுடைய பரிசுத்த ஆலயத்தில் இடங்கொடுக்கக்கூடாது.

கர்த்தருடைய பரிசுத்தவான்கள் தேவனுடைய ஆலயமாகயிருக்கிறபடியினால், நாமெல்லோருமே தேவனுக்காகவும், அவருடைய ஊழியத்திற்காகவும் வேறுபிரிக்கப்பட்டிருக்கிறோம். உலகப் பிரகாரமான பழக்க வழக்கங்களிலிருந்து நாம் வேறுபிரிக்கப்பட்டு, கர்த்தருடைய பரிசுத்தமான ஊழியத்திற்கு சுத்திகரிக்கப் பட்டிருக்கிறோம். பரிசுத்தவான்களெல்லோரும் தேவனுக்கு பரிசுத்தமாயிருக்கிறார்கள். கிறிஸ்தவ ஊழியம் ஒரு பரிசுத்தமான ஊழியம். நம்முடைய இருதயத்திலும், நம்முடைய பேச்சிலும், நம்முடைய பழக்க வழக்கங்களிலும் பரிசுத்தம் இருக்கவேண்டும். பரிசுத்தமில்லாமல் கர்த்தரை ஆராதிப்பது இயலாத காரியம்.

## ஞானிகள்
## 1கொரி 3 : 18-20

**1கொரி 3:18. ஒருவனும் தன்னைத் தானே வஞ்சியாதிருப்பானாக; இவ்வுலகத்திலே உங்களில் ஒருவன் தன்னை ஞானியென்று எண்ணினால் அவன் ஞானியாகும்படிக்கு பைத்தியக்காரனாகக்கடவன்.**

**1கொரி 3:19. இவ்வுலகத்தின் ஞானம் தேவனுக்கு முன்பாகப் பைத்தியமாயிருக்கிறது. அப்படியே, ஞானிகளை அவர்களுடைய தந்திரத்திலே பிடிக்கிறாரென்றும்,**

**1கொரி 3:20. ஞானிகளுடைய சிந்தனைகள் வீணாயிருக்கிறதென்று கர்த்தர் அறிந்திருக்கிறாரென்றும் எழுதியிருக்கிறது.**

## தன்னைத்தானே வஞ்சிப்பது

**ஒருவனும் தன்னைத்தானே வஞ்சியாதிருப்பானாக; இவ்வுலகத்திலே உங்களில் ஒருவன் தன்னை ஞானியென்று எண்ணினால் அவன் ஞானியாகும் படிக்கு பைத்தியக்காரனாகக் கடவன் (1கொரி 3:18).**

கொரிந்து சபையில் துர்உபதேசங்களும், அசுத்தமும் நிறைந்திருக்கிறது. ஊழியக்காரர்களும் விசுவாசிகளும் சுய பெருமையிலிருக்கிறார்கள். அவர்கள் தங்களைத் தாங்களே தாழ்த்தவேண்டும். ஒருவனும் தன்னைத்தானே வஞ்சித்துவிடக்கூடாது. சுவிசேஷத்தின் சத்தியம் மிகவும் எளிமையானது. ஆனால் கொரிந்துவிலுள்ள விசுவாசிகளோ எளிமையான சத்தியத்தைக் கடினமாக்குகிறார்கள். சுயஞானத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து தேவஞானத்தை அவமாக்குகிறார்கள்.

மனுஷ ஞானத்திற்கும், உலகஞானத்திற்கும் அதிகமுக்கியத்துவம் கொடுக்கிறவர்கள் தங்களைத் தாங்களே வஞ்சித்துக்கொள்வார்கள். இவ்வுலகத்திலே ஒருவன் தன்னை ஞானியென்று எண்ணினால் அவன் ஞானியாகும்படிக்கு பைத்தியக்காரனாகக்கடவன் என்று பவுல் சொல்லுகிறார். அவன் தன்னுடைய அறியாமையை உணர்ந்துகொள்ள வேண்டும். தன்னுடைய மதியீனத்திற்காக வருத்தப்பட வேண்டும். புலம்பவேண்டும். தன் சுயபுத்தியின்மேல் யாரும் நம்பிக்கை வைத்திருக்கவும்கூடாது. அதன்மீது சார்ந்திருக்கவும் கூடாது.

நம்முடைய ஞானத்தை நாம் ஆளுகை செய்யவேண்டும். ஞானம் நம்மை ஆளுகை செய்யக்கூடாது. தேவனுடைய ஆலோசனைக்குக் கீழ்ப்படிந்து அவருடைய வார்த்தையின் பிரகாரம் நாம் ஜீவிக்கவேண்டும். கர்த்தருக்குப் பயந்து ஜீவிக்கும்போது நாம் மெய்யான ஞானத்தைப் பெற்றுக்கொள்வோம். அந்த ஞானமே நித்திய ஞானமாகயிருக்கும்.

தங்களுடைய சொந்த ஞானத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்காதவர்கள், தேவஞானத்திற்குத் தங்களை ஒப்புக்கொடுப்பார்கள். தங்களுடைய சுயவல்லமையைவிட தேவனுடைய வல்லமையே மேன்மையானது என்று அங்கீகரித்து, தேவனுக்குக் கீழ்ப்படிவார்கள். ஆனால் இருதயத்தில் பெருமையுள்ளவர்களோ கர்த்தருடைய ஆலோசனையை மதிக்கமாட்டார்கள். தேவஞானத்தைவிட தங்கள் சுயஞானமே பெரியது என்று விவாதம் பண்ணுவார்கள். இப்படிப்பட்டவர்கள் தேவஞானத்திலும் குறை கண்டுபிடிப்பார்கள். நாம் உண்மையில் ஞானிகளாக இருக்கவேண்டுமென்றால், தேவஞானத்திற்கு முன்பாக நம்மைத் தாழ்த்தி, வெறுமையாக்க வேண்டும். ஏனெனில் இவ்வுலகத்தின் ஞானம் தேவனுக்கு முன்பாக பைத்தியமாயிருக்கிறது.

## இவ்வுலகத்தின் ஞானம்

**இவ்வுலகத்தின் ஞானம் தேவனுக்கு முன்பாகப் பைத்தியமாயிருக்கிறது. அப்படியே, ஞானிகளை அவர்களுடைய தந்திரத்திலே பிடிக்கிறாரென்றும், (1கொரி 3:19)**

தேவஞானத்தை மனுஷஞானத்தோடு ஒப்பிடக்கூடாது. இதை ஒப்பிட்டுப் பார்க்கவும் முடியாது. நம்முடைய மனுஷவல்லமையை தேவவல்லமையோடு ஒப்பிட்டுப் பார்ப்பது ஞானமான செயல் அல்ல. நாம் ஞானத்திலும், பெலத்திலும் குறைவுள்ளவர்கள். தேவனோ சர்வஞானமுள்ளவர். அவர் சர்வவல்லமையுள்ளவர். குறைவானதை வைத்து நிறைவானதை ஒப்பிட்டுப் பார்க்க முடியாது. அநித்தியமானதைக் கொண்டு நித்தியமானதை அளந்து பார்க்க முடியாது. நாம் நம்மை தேவனோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது, நம்முடைய ஞானம் தேவனுக்கு முன்பாக பைத்தியமாகயிருக்கும். ஏனெனில் நம்மால் முடியாததை நாம் செய்ய முயற்சிபண்ணுகிறோம். தேவன் ஞானிகளை அவர்களுடைய தந்திரத்தினால் பிடிக்கிறார்.

## ஞானிகளுடைய சிந்தனைகள்

**ஞானிகளுடைய சிந்தனைகள் வீணாயிருக்கிறதென்று கர்த்தர் அறிந்திருக்கிறாரென்றும் எழுதியிருக்கிறது (1கொரி 3:20).**

மனுஷருடைய எல்லா சிந்தனைகளையும் தேவன் நன்றாய் அறிந்திருக்கிறார். அவருக்கு மறைவானது ஒன்றுமேயில்லை. நம்முடைய இரகசிய ஆலோசனைகளும், இரகசியமான திட்டங்களும் தேவனுக்கு வெளியரங்கமாகத் தெரியும். நம்முடைய சிந்தனைகளெல்லாம் வீணானவை என்பதையும் அறிந்திருக்கிறார். மெய்யான ஞானமுள்ளவன் தேவனிடமிருந்து கற்றுக் கொள்ளவேண்டுமென்று விரும்புவான். மனுஷஞானம் ஒன்றுமில்லையென்று அங்கீகரித்து, தேவஞானமே பிரதானமானது என்று சொல்லுவான். தேவனுடைய பாதபடியில் அமர்ந்திருந்து கற்றுக்கொள்ளும்போது மாத்திரமே நமக்கு மெய்யான ஞானம் கிடைக்கும். தன்னுடைய மனுஷஞானத்தைத் தேவஞானத்தோடு ஒப்பிட்டுப் பார்க்கிறவன் பைத்தியக்காரனாயிருக்கிறான்.

## கிறிஸ்து தேவனுடையவர் 1கொரி 3 : 21-23

**1கொரி 3:21. இப்படியிருக்க, ஒருவனும் மனுஷரைக் குறித்து மேன்மை பாராட்டாதிருப்பானாக; எல்லாம் உங்களுடையதே;**

**1கொரி 3:22. பவுலாகிலும், அப்பொல்லோவாகிலும், கேபாவாகிலும், உலகமாகிலும், ஜீவனாகிலும் மரணமாகிலும் நிகழ்காரியங்களாகிலும், வருங்காரியங்களாகிலும், எல்லாம் உங்களுடையது;**

**1கொரி 3:23. நீங்கள் கிறிஸ்துவினுடையவர்கள்; கிறிஸ்து தேவனுடையவர்.**

## மனுஷரைக்குறித்து மேன்மை பாராட்டுவது

**இப்படியிருக்க, ஒருவனும் மனுஷரைக் குறித்து மேன்மை பாராட்டாதிருப்பானாக; எல்லாம் உங்களுடையதே; (1கொரி 3:21)**

விசுவாசிகள் ஊழியக்காரர்களுக்கு மதிப்புக் கொடுக்கவேண்டும். ஆனால் அளவுக்கு அதிகமான மதிப்பு கொடுக்கவேண்டிய தேவையில்லை. எல்லா ஊழியக்காரர்களும் கர்த்தருடைய உடன் வேலையாட்களாகயிருக்கிறார்கள். ஆகையினால் நாம் மனுஷரைக்குறித்து மேன்மை பாராட்டக்கூடாது. ஊழியக்காரரும் மனுஷர்தான் என்பதை நாம் நினைவுகூரவேண்டும். தேவனுக்குரிய கனத்தையும் மரியாதையையும் நாம் தேவனுக்கு மாத்திரமே கொடுக்கவேண்டும். அதை எந்த ஊழியக்காரருக்கும் கொடுத்து நம்மை நாமே கெடுத்துப்போடக்கூடாது.

ஊழியக்காரர்களுக்கு நாம் அதிக முக்கியத்துவம் கொடுக்காமலிருக்க வேண்டுமென்றால், எல்லா மனுஷரும் பலவீனமானவர்கள் என்பதை நாம் புரிந்து வைத்திருக்கவேண்டும். ஊழியக்காரரும் மனுஷர்கள்தான் என்பதை நாம் அறிந்திருக்கவேண்டும். மனுஷருடைய ஞானம் தேவனுக்கு முன்பாக பைத்தியமாயிருக்கிறது என்பதையும் உணரவேண்டும்.

ஊழியக்காரர்கள் ஒருவருக்கொருவர் போட்டியாளர்களாக இருக்கக்கூடாது. ஒருவருக்கொருவர் இணைந்து ஊழியம் செய்யவேண்டும். கிறிஸ்துவோடு உடன்வேலையாட்களாக ஊழியம் செய்யவேண்டும். கிறிஸ்துவானவரே தம்முடைய ஊழியக்காரர்களை நியமித்திருக்கிறார். சபையில் பக்திவிருத்தி உண்டாவதற்காக ஊழியக்காரர்கள் இணைந்து ஊழியம் செய்யவேண்டும். இதுவே அவர்களுடைய பிரதான கரிசனையாகயிருக்கவேண்டும். தங்களுக்கென்று ஒரு கூட்டத்தைச் சேர்த்துக்கொண்டு சபையைப் பிரித்துவிடக்கூடாது.

## எல்லாம் உங்களுடையது

**பவுலாகிலும், அப்பொல்லோவாகிலும், கேபாவாகிலும், உலகமாகிலும், ஜீவனாகிலும் மரணமாகிலும் நிகழ்காரியங்களாகிலும், வருங்காரியங்களாகிலும், எல்லாம் உங்களுடையது; (1கொரி 3:22)**

பவுல், அப்பொல்லோ, கேபா ஆகிய எல்லா ஊழியக்காரர்களும் விசுவாசிகளுக்கு உரியவர்கள். விசுவாசிகளுடைய ஆவிக்குரிய பிரயோஜனங்களுக்காக ஊழியம் செய்ய வேண்டியவர்கள். கர்த்தர் நம்முடைய ஆவிக்குரிய பிரயோஜனத்திற்காகவே ஊழியக்காரர்களை நியமித்திருக்கிறார் என்னும் சிந்தனை நம்முடைய இருதயத்தில் எப்போதும் நிரம்பியிருக்கவேண்டும்.

மெய்யான விசுவாசிகளுக்கு கர்த்தர் ஆவிக்குரிய ஐசுவரியங்களைக் கொடுக்கிறார். அவையெல்லாம் "உங்களுடையது" என்று சொல்லி பவுல் விசுவாசிகளை உற்சாகப்படுத்துகிறார். இந்த உலகம் விசுவாசிகளுடையது. ஜீவன் விசுவாசிகளுடையது. இந்த ஜீவன் மூலமாக நாம் பரலோகத்தின் ஜீவனைப் பெற்றுக்கொள்ள ஆயத்தப்படுகிறோம். மரணமும் நம்முடையது. மரணத்தின் மூலமாக பரலோகத்தின் ஜீவனை சுதந்தரிக்கிறோம். இப்படிப்பட்ட சத்திய உபதேசங்களை உபதேசம்பண்ணுகிற ஊழியக்காரர்கள், நம்மை பிதாவின் வீட்டிற்கு வழிநடத்துவார்கள்.

நிகழ்காரியங்கள் நம்முடையவை. நம்முடைய ஆவிக்குரிய பாதையில் இவையெல்லாம் நமக்கு ஆதரவாகயிருக்கும். வருங்காரியங்களும் நம்முடையவை. நம்முடைய ஆவிக்குரிய பிரயாணத்தின் முடிவில் வருங்காரியங்கள் நம்மைப் பெலப்படுத்தும். எல்லாம் நம்முடையவை. காலமும் நித்தியமும் நம்முடையவை. பூமியும் பரலோகமும் நம்முடையவை. ஜீவனும் மரணமும் நம்முடையவை. இவையெல்லாவற்றையும் கர்த்தர் நமக்குக் கொடுத்து நம்மை ஆசீர்வதிக்கிறார். இந்த ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்கிற நாம் கிறிஸ்துவினுடையவர்கள் என்பதை மறந்துவிடக்கூடாது.

## நீங்கள் கிறிஸ்துவினுடையவர்கள்

**நீங்கள் கிறிஸ்துவினுடையவர்கள்; கிறிஸ்து தேவனுடையவர் (1கொரி 3:23).**

எல்லாம் நம்முடையது. நாம் கிறிஸ்துவினுடையவர்களாய் இருப்பதினால் மாத்திரமே இவையெல்லாம் நம்முடையதாயிற்று. நித்திய காலத்தின் சந்தோஷத்தை எதிர்பார்த்து, நிகழ்காலத்தில் பரிசுத்தமாய் ஜீவிக்கிறவர்கள் கிறிஸ்துவுக்குரியவர்கள். கிறிஸ்து தேவனுடையவர். கிறிஸ்து என்னும் பெயருக்கு "அபிஷேகம் பண்ணப்பட்டவர்" என்று பொருள். கிறிஸ்து தேவனுடைய அபிஷேகம்பண்ணப்பட்டவர். தேவனால் அபிஷேகம்பண்ணப்பட்டவர். தேவனால் பிரதிஷ்டைபண்ணப்பட்டவர்.

கிறிஸ்துவானவர் தேவனுக்கும் மனுஷருக்கும் மத்தியஸ்தராயிருக்கிறார். பாவத்தில் மூழ்கியிருக்கிற ஜனங்களை தமது கிருபையினால் மன்னித்து அவர்களை தேவனோடு ஒப்புரவாக்குகிறார். ஒப்புரவாக்கப்பட்ட ஜனங்கள் மத்தியில் தேவனுடைய கிருபையின் ஐசுவரியத்தை ஆசீர்வாதமாகப் பொழிந்தருளுகிறார். இதுவே சுவிசேஷத்தின் சாரம்.

# 4 அதிகாரம்

அப்போஸ்தலர் பவுல் தன்னைப்பற்றியும், தன்னுடைய உடன்ஊழியர்களைப்பற்றியும் எழுதுகிறார் (1கொரி 4:1-6). பெருமையையும் சுயமேன்மையையும் குறித்து பவுல் எச்சரித்துச் சொல்லுகிறார் (1கொரி 4:7-13). கிறிஸ்து இயேசுவுக்குள் பவுல் அவர்களுக்கு ஆவிக்குரிய தகப்பனாகயிருக்கிறார் (1கொரி 4:14-16). தீமோத்தேயுவை அவர்களிடத்திற்கு அனுப்புகிறார் (1கொரி 4:17-21).

## கிறிஸ்துவின் ஊழியக்காரர் 1கொரி 4 : 1-6

**1கொரி 4:1. இப்படியாக, எந்த மனுஷனும் எங்களைக் கிறிஸ்துவின் ஊழியக்காரரென்றும், தேவனுடைய இரகசியங்களின் உக்கிராணக்காரரென்றும் எண்ணிக் கொள்ளக் கடவன்.**

**1கொரி 4:2. மேலும், உக்கிராணக்காரன் உண்மையுள்ளவனென்று காணப்படுவது அவனுக்கு அவசியமாம்.**

**1கொரி 4:3. ஆயினும் நான் உங்களாலேயாவது மனுஷருடைய நியாயநாளின் விசாரணையினாலேயாவது தீர்ப்பைப் பெறுவது எனக்கு மிகவும் அற்பகாரியமாயிருக்கிறது; நானும் என்னைக் குறித்துத் தீர்ப்புச் சொல்லுகிறதில்லை.**

**1கொரி 4:4. என்னிடத்தில் நான் யாதொரு குற்றத்தையும் அறியேன்; ஆகிலும் அதினாலே நான் நீதிமானாகிறதில்லை; என்னை நியாயம் விசாரிக்கிறவர் கர்த்தரே.**

**1கொரி 4:5. ஆனதால், கர்த்தர் வருமளவும் நீங்கள் காலத்துக்கு முன்னே யாதொன்றைக் குறித்தும் தீர்ப்புச்சொல்லாதிருங்கள்; இருளில் மறைந்திருக்கிறவைகளை அவர் வெளியரங்கமாக்கி, இருதயங்களின் யோசனைகளையும் வெளிப்படுத்துவார்; அப்பொழுது அவனவனுக்குரிய புகழ்ச்சி தேவனால் உண்டாகும்.**

**1கொரி 4:6. சகோதரரே, எழுதப்பட்டதற்கு மிஞ்சி எண்ணவேண்டாமென்று நீங்கள் எங்களாலே கற்றுக்கொள்ளவும், ஒருவனும் ஒருவனிமித்தம் மற்றொருவனுக்கு விரோதமாய் இறுமாப்படையாதிருக்கவும், நான் உங்கள் நிமித்தமும் என்னையும் அப்பொல்லாவையும் திருஷ்டாந்தமாக வைத்து, இவைகளை எழுதினேன்.**

### உக்கிராணக்காரர்

**இப்படியாக, எந்த மனுஷனும் எங்களைக் கிறிஸ்துவின் ஊழியக்காரரென்றும், தேவனுடைய இரகசியங்களின் உக்கிராணக்காரரென்றும் எண்ணிக் கொள்ளக்கடவன் (1கொரி 4:1).**

கர்த்தர் தனக்குக் கொடுத்த ஊழியத்தைப் பவுல் நல்லமுறையில் நிறைவேற்றி வருகிறார். தன்னுடைய ஊழியத்தினிமித்தமாய் கொரிந்துவிலுள்ள விசுவாசிகள் தனக்குக் கொடுக்கவேண்டிய மரியாதையைக் கொடுக்கவேண்டும் என்று பவுல் அவர்களுக்கு ஆலோசனை சொல்லுகிறார். கிறிஸ்துவின் ஊழியக்காரர்களுக்கு உரிய மரியாதையைக் கொடுக்கவேண்டும். கிறிஸ்துவின் ஊழியக்காரர்கள் தேவனுடைய ரகசியங்களுக்கு உக்கிராணக்காரர்களாக இருக்கிறார்கள்.

ஊழியக்காரர்களைப் பொறுத்தளவில் நாம் மிகுந்த கவனத்தோடிருக்க வேண்டும். அவர்களை அதிகமாய்ப் புகழ்ந்துவிடவும்கூடாது. அவமானப்படுத்திவிடவும் கூடாது. அவர்கள் கர்த்தருடைய ஊழியக்காரர்கள் மாத்திரமே. நம்முடைய ஜீவியத்திற்கு அவர்கள் ஆண்டவர்களல்ல. நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து மாத்திரமே நமக்கு ஆண்டவராகயிருக்கிறார். அவர்கள் கிறிஸ்துவின் ஊழியக்காரர்கள். கிறிஸ்துவின் உபதேசத்தை மாத்திரமே அவர்கள் நமக்குப் போதிக்கவேண்டும். ஊழியக்காரர்கள் தங்களுடைய சொந்தக் கொள்கைகளையோ, கோட்பாடுகளையோ விசுவாசிகள் மத்தியில் போதிக்கக்கூடாது.

அப்போஸ்தலர்களை நாம் அவமானப்படுத்திவிடவும் கூடாது. அவர்களுக்குக் கொடுக்கவேண்டிய மரியாதையைக் கொடுக்காமல் அவர்களை அலட்சியம்பண்ணக்கூடாது. அவர்கள் கிறிஸ்துவின் ஊழியக்காரர்கள். இந்த உலகப்பிரகாரமான காரியங்களுக்கு அவர்கள் உக்கிராணக்காரரல்ல. தேவனுடைய இரகசியங்களுக்கு அவர்கள் உக்கிராணக்காரர் களாயிருக்கிறார்கள். ஊழியக்காரர்கள் தங்களுக்கு மதிப்பும் மரியாதையும் கிடைக்கும் என்று எதிர்பார்த்து கர்த்தருடைய ஊழியத்தைச் செய்வதில்லை. ஆனாலும் அவர்கள் செய்கிற ஊழியம் மேன்மையானது. அவர்களுடைய ஊழியத்தினிமித்தமாய் விசுவாசிகளாகிய நாம் அவர்களுக்குரிய கனத்தையும் மரியாதையையும் கொடுக்கவேண்டும். நம்முடைய கனத்திற்கும் மரியாதைக்கும் அவர்கள் பாத்திரராயிருக்கிறார்கள்.

**உண்மையுள்ளவன்**

**மேலும், உக்கிராணக்காரன் உண்மையுள்ளவனென்று காணப்படுவது அவனுக்கு அவசியமாம் (1கொரி 4:2).**

கிறிஸ்துவின் ஊழியக்காரர்கள் தேவனுடைய இரகசியங்களுக்கு உக்கிராணக்காரராயிருக்கிறார்கள். உக்கிராணக்காரன் உண்மையுள்ளவன் என்று காணப்படுவது அவனுக்கு அவசியமாயிருக்கிறது. உக்கிராணக்காரன் உண்மையுள்ளவனாகவும், நம்பிக்கைக்குப் பாத்திரவானாகவும் இருக்கவேண்டும். கிறிஸ்துவின் குடும்பத்தில் உக்கிராணக்காரர்களாயிருக்கிறவர்கள், தங்களுக்கு நியமிக்கப்பட்டிருக்கிற ஊழியத்தை உக்கிராணத்துவ உத்திரவாதத்தோடு நிறைவேற்றவேண்டும். கர்த்தர் தங்களுக்கு எதைக் கட்டளையிட்டிருக்கிறாரோ அதை அவர்கள் உண்மையாய் நிறைவேற்ற வேண்டும். கர்த்தர் தங்களுக்கு வெளிப்படுத்தியிருக்கிற சத்தியத்தை அவர்கள் உண்மையாய்ப் போதிக்கவேண்டும்.

உக்கிராணக்காரர்கள் உண்மை உள்ளவர்களாயும், நல்மனச்சாட்சி உள்ளவர்களாயும், மனுஷர் மத்தியில் நற்சாட்சி பெற்றவர்களாயும் இருக்கவேண்டும். கிறிஸ்துவின் உக்கிராணக்காரர்களாக ஊழியம் செய்கிற ஊழியக்காரர்களிடத்தில் தவறு எதுவும் காணப்படக்கூடாது. மற்றவர்கள் ஊழியக்காரர்களை நோக்கிப் பார்ப்பார்கள். மற்ற ஊழியக்காரர்களும் இவர்களை நோக்கிப் பார்ப்பார்கள். ஊழியக்காரர்களிடத்தில் சிறு தவறு காணப்பட்டாலும் அது எல்லோருடைய பேச்சிற்கும், விமர்சனத்திற்கும் இடங்கொடுக்கும். மற்றவர்கள் அவர்களைக் குறித்து நியாயந்தீர்ப்பார்கள். கர்த்தரே நம்மை நியாயந்தீர்க்கிறவர். ஆனாலும் மனுஷர் பார்வையிலும் நாம் உண்மையுள்ளவர்களாயிருக்க வேண்டும். மனுஷர் மத்தியிலும் நாம் நற்சாட்சி பெற்றிருக்கவேண்டும்.

## நியாயம் விசாரிக்கிறவர் கர்த்தரே

**ஆயினும் நான் உங்களாலேயாவது மனுஷருடைய நியாய நாளின் விசாரணையினாலேயாவது தீர்ப்பைப் பெறுவது எனக்கு மிகவும் அற்பகாரியமாயிருக்கிறது; நானும் என்னைக் குறித்துத் தீர்ப்புச் சொல்லுகிறதில்லை. என்னிடத்தில் நான் யாதொரு குற்றத்தையும் அறியேன்; ஆகிலும் அதினாலே நான் நீதிமானாகிறதில்லை; என்னை நியாயம் விசாரிக்கிறவர் கர்த்தரே (1கொரி 4:3,4).**

ஊழியக்காரர்கள் மனுஷர் மத்தியில் நற்சாட்சி பெற்று ஊழியம் செய்யும்போது, அவர்களுடைய ஊழியம் பிரயோஜனமுள்ளதாயிருக்கும். நற்சாட்சியுள்ளவர்கள் ஊழியத்தின் சரியான பாதையில் முன்னேறிச் செல்கிறார்கள். அதே வேளையில் நமக்கு நற்பெயர் உண்டாகவேண்டும் என்பதற்காக, நாம் மனுஷரைப் பிரியப்படுத்துகிறவர்களாக இருக்கக் கூடாது. மனுஷனைப் பிரியப்படுத்துகிறவன் கிறிஸ்துவின் ஊழியக்காரனல்ல (கலா 1:10).

கிறிஸ்துவுக்கு உண்மையாய் ஊழியம் செய்கிறவர், மனுஷருடைய தீர்ப்புக்களைக் குறித்துக் கவலைப்படமாட்டார். ஜனங்கள் தன்னை தூஷித்தாலும், தன்மீது அவதூறான வார்த்தைகளைச் சொன்னாலும், உண்மையுள்ள ஊழியக்காரர் கர்த்தர் நிமித்தமாய் அதைச் சகித்துக்கொள்வார். தாங்கிக்கொள்வார். நம்மை நியாயம் விசாரிக்கிற அதிகாரம் மனுஷருக்கு இல்லை. கர்த்தரே நம்மை நியாயம் விசாரிக்கிறவர்.

மனுஷர் தங்கள் இஷ்டம்போல பிறரை நியாயம் விசாரிப்பார்கள். நீதியின்படி தீர்ப்புச் செய்யாமல் தோற்றத்தின்படி தீர்ப்புச் செய்வார்கள். அவசரப்பட்டு தீர்ப்பு சொல்லிவிடுவார்கள். பவுல் தன்னைக் குறித்து தீர்ப்பு சொல்லுகிறதில்லை என்று எழுதுகிறார். தன்னிடத்தில் யாதொரு குற்றத்தையும் தான் அறியவில்லை என்றும் சொல்லுகிறார். பவுல் தன்னை ஆராய்ந்து பார்க்கும்போது, அவரால் அவரிடத்தில் ஒரு குற்றத்தையும் காணமுடியவில்லை. தன்னிடத்தில் குற்றம் இல்லாதிருந்தாலும், தான் அதினால் நீதிமானாகிறதில்லை என்று பவுல் அறிக்கை செய்கிறார். ஏனெனில் தன்னை நியாயம் விசாரிக்கிறவர் கர்த்தரே என்பதை அவர் அறிந்து வைத்திருக்கிறார்.

நம்மை நியாயம் விசாரிக்கிறவர் கர்த்தரே. அவருடைய தீர்ப்பே நீதியானது. அதுவே முடிவான தீர்ப்பு. மனுஷர் நம்மைப்பற்றி எப்படி தீர்ப்பு செய்தாலும், கர்த்தர் நம்மைப்பற்றி எப்படி தீர்ப்பு செய்கிறார் என்பது மிகவும் முக்கியம். அவர் நம்மை எப்படி பார்க்கிறாரோ அப்படியே நாம் இருக்கிறோம். அவர் நம்மை எப்படி தீர்ப்பு செய்கிறாரோ அப்படியே நம்முடைய சுபாவங்களும் இருக்கிறது. கர்த்தருக்கு மறைவான காரியம் ஒன்றுமில்லை.

## நீங்கள் தீர்ப்பு சொல்லாதிருங்கள்

**ஆனதால், கர்த்தர் வருமளவும் நீங்கள் காலத்துக்கு முன்னே யாதொன்றைக் குறித்தும் தீர்ப்புச் சொல்லாதிருங்கள்; இருளில் மறைந்திருக்கிறவைகளை அவர் வெளியரங்கமாக்கி, இருதயங்களின் யோசனைகளையும் வெளிப்படுத்துவார்; அப்பொழுது அவனவனுக்குரிய புகழ்ச்சி தேவனால் உண்டாகும் (1கொரி 4:5).**

கொரிந்தியர்கள் மற்றவர்களை நியாயம் விசாரிக்கிறார்கள். மற்றவர்களைக் குறித்து தங்களுடைய தீர்ப்புக்களை உடனே சொல்லிவிடுகிறார்கள். பவுல் அவர்களுடைய தீர்ப்புக்கு விரோமாகப் பேசுகிறார். நம்மை நியாயம் விசாரிக்கிறவர் கர்த்தரே என்று அவர்களுக்கு உபதேசம்பண்ணுகிறார். கர்த்தர் வருமளவும் அவர்கள் யாதொன்றைக் குறித்தும் தீர்ப்பு சொல்லக்கூடாது.

கர்த்தர் வரும்போது அவர் நம்மை நியாயம் விசாரிப்பார். அதுவே நியாய விசாரிப்புக்காலம். அப்போது கர்த்தர் இருளில் மறைந்திருக்கிறவைகளை வெளியரங்கமாக்குவார். இருதயங்களின் யோசனைகளை வெளிப்படுத்துவார். அவர் வரும் வேளையே நியாயம் விசாரிக்கிற வேளை. அதற்கு முன்னே மனுஷர் யாதொன்றைக் குறித்தும் அல்லது யாரைக்குறித்தும் தீர்ப்பு சொல்லக்கூடாது. அப்படி தீர்ப்பு சொல்லுகிறவர்கள் தேவனுடைய சிங்காசனத்தில் அமர்ந்துகொண்டு, தங்களை தேவனுடைய ஸ்தானத்திற்கு உயர்த்துகிறவர்கள்.

இப்பிரபஞ்சத்தின் ஜனங்கள் துணிகரமாய்ப் பாவம் செய்கிறார்கள். கர்த்தர் செய்கிற வேலையை தங்களுக்கும் செய்ய உரிமை உண்டு என்று ஆணவமாய் நினைக்கிறார்கள். கர்த்தரே மனுஷரை நியாயம் விசாரிக்கவேண்டும். ஆனால் மனுஷரோ மற்ற மனுஷரை நியாயம் விசாரிக்கும் அதிகாரம் தங்களுக்கும் இருப்பதாக நினைக்கிறார்கள். கர்த்தருடைய நியாய விசாரிப்புக்காலம் வருமுன்னே, மனுஷர் தங்களுக்கு இஷ்டமான காலத்தில், தங்களுக்கு இஷ்டமான பிரகாரம், மனுஷரை நியாயம் விசாரிக்கிறார்கள்.

எல்லோரையும் நியாயம் விசாரிக்கிறவர் கர்த்தரே. கர்த்தர் மனுஷரால் நியாயம் விசாரிக்கப்படுகிறவர்களையும், மனுஷரை நியாயம் விசாரிக்கிறவர்களையும் நீதியாய் நியாயம் விசாரிப்பார். ஆகையினால் நாம் மற்றவர்களை நியாயம் விசாரிக்கும் காரியங்களில் மிகவும் எச்சரிக்கையாயிருக்கவேண்டும். நம்மை நாமே அக்கறையோடு நியாயம் விசாரித்துக்கொள்ளவேண்டும்.

கர்த்தர் வரும்போது அவர் இருளில் மறைந்திருக்கிறவைகளை வெளியரங்கமாக்குவார். இருதயங்களின் யோசனைகளை வெளிப்படுத்துவார். மனுஷருடைய இரகசியமான பாவங்களெல்லாம் அந்நாளில் வெளிப்படுத்தப்படும். அவர்களுடைய இருதயங்களில் இதுவரையிலும் மறைவாக மறைத்து வைக்கப்பட்டிருக்கிற இரகசியங்களெல்லாம் வெளியரங்கமாக்கப்படும். கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவே எல்லா இருதயங்களையும், இருதயங்களின் ஆலோசனைகளையும் வெளியரங்கமாக வெளிப்படுத்துவார்.

கர்த்தராகிய இயேசுகிறிஸ்து இருதயங்களின் ஆலோசனைகளையெல்லாம் அறிந்து வைத்திருக்கிறார். இல்லையென்றால் அவரால் இருதயங்களின் யோசனைகளை வெளிப்படுத்த முடியாது. ஆகையினால் நாம் மற்றவர்களை நியாயந்தீர்க்கிற காரியத்தில் மிகவும் எச்சரிக்கையாயிருக்க வேண்டும். ஏனெனில் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து நம்மையும் தம்முடைய நாளில் நியாயந்தீர்ப்பார். அந்நாளில் அவரே நியாயாதிபதியாக நீதியாய்த் தீர்ப்பு செய்வார். நம்முடைய இரகசியமான காரியங்கள் எதையும் கர்த்தருக்கு முன்பாக மறைக்க முடியாது.

நாம் நியாயாதிபதியாகிய கர்த்தருடைய சமுகத்திற்கு வரும்போது அவனவனுக்குரிய புகழ்ச்சி தேவனால் உண்டாகும். யாரெல்லாம் தேவனுடைய புகழ்ச்சியைப் பெறுவதற்கு தகுதி உடைவர்களாயிருக்கிறார்களோ, அவர்களுக்கு மாத்திரமே தேவனால் புகழ்ச்சி உண்டாகும். விசுவாசிகளாகிய நாம் அநீதியான சமுகத்தார் மத்தியில் வசிக்கவேண்டிய சூழ்நிலை உண்டாகலாம். நமக்கு விரோதமாக அநீதியான காரியங்கள் நடைபெறலாம். இப்படிப்பட்ட சூழ்நிலைகளில் நாம் நீடிய பொறுமையோடிருக்கவேண்டும்.

ஏனெனில் கர்த்தர் தம்முடைய நாளில் நிச்சயமாய் வருவார். அந்நாளில் அவர் நீதியாய்த் தீர்ப்புச் செய்வார். நமக்கு விரோதமாக அநீதியாய்த் தீர்ப்பு சொன்னவர்களுடைய இருதயங்களின் யோசனைகளை கர்த்தர் வெளிப்படுத்துவார். நம்மீது சத்துருக்கள் தீர்ப்பு சொன்னார்கள். கர்த்தரோ அவர்கள்மீது நீதியான தீர்ப்பைச் சொல்லுவார். அந்நாள் வரையிலும் நாம் பொறுமையோடு காத்திருக்கவேண்டும்.

## இறுமாப்படையாதிருக்க

**சகோதரரே, எழுதப்பட்டதற்கு மிஞ்சி எண்ணவேண்டாமென்று நீங்கள் எங்களாலே கற்றுக்கொள்ளவும், ஒருவனும் ஒருவனிமித்தம் மற்றொருவனுக்கு விரோதமாய் இறுமாப்படையாதிருக்கவும், நான் உங்கள் நிமித்தமும் என்னையும் அப்பொல்லோவையும் திருஷ்டாந்தமாக வைத்து, இவைகளை எழுதினேன் (1கொரி 4:6).**

அப்போஸ்தலர் பவுல் கொரிந்தியருக்கு ஆலோசனை சொல்லும்போது தன்னுடைய பெயரையும், அப்பொல்லோவின் பெயரையும் பயன்படுத்துகிறார். இதற்கான காரணத்தை பவுல் இங்கு சொல்லுகிறார். இருவருடைய பெயரும் திருஷ்டாந்தமாகப் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. அவர்கள் நிமித்தமாகவே பவுல் தன்னையும், அப்பொல்லோவையும் திருஷ்டாந்தமாக வைத்து இந்த நிருபத்தை எழுதுகிறார்.

மற்றவர்களுடைய பெயரைப் பயன்படுத்தினால் அவர்கள் மனம் புண்படுவதற்கு வாய்ப்புள்ளது. ஆகையினால் மற்ற அப்போஸ்தலருடைய பெயரை பவுல் பயன்படுத்தவில்லை. அதற்குப் பதிலாக தன்னுடைய உண்மையான உடன்ஊழியரான அப்பொல்லோவின் பெயரை பவுல் பயன்படுத்துகிறார். அவருடைய பெயரைப்பற்றிச் சொல்லும்போது, தன்னைப்பற்றியும் சேர்த்துச் சொல்லுகிறார். இதனால் ஊழியக்காரர்கள் மத்தியில் மனவருத்தமும், கருத்து வேறுபாடும் உண்டாகாது.

அப்போஸ்தலர்கள் எழுதப்பட்டதற்கு மிஞ்சி எண்ணக்கூடாது. ஒருவரும் மற்றவருக்கு விரோதமாய் இறுமாப்பு அடையக்கூடாது. அப்போஸ்தலர்கள் தங்களைப்பற்றி நிதானித்துப் பார்க்கும்போது, தங்களைக் கிறிஸ்துவின் ஊழியக்காரர்களாக மாத்திரமே பார்க்கவேண்டும். அதற்குமேல் தங்களைப் பெருமைப்படுத்தக்கூடாது. கர்த்தருக்குரிய கனத்தையும், அதிகாரத்தையும் நமக்குச் சொந்தமாக்கிக் கொள்ளக்கூடாது. இயேசுகிறிஸ்துவே ஆண்டவர். அப்போஸ்தலர்கள் அவருடைய ஊழியக்காரர்கள். ஊழியக்காரர்கள் தங்கள் எஜமானுக்குரிய கனத்தையும் மேன்மையையும் தங்களுக்குச் சொந்தமாக அபகரித்துக்கொள்ளக்கூடாது.

ஊழியக்காரர்கள் எழுதப்பட்டதற்கு மிஞ்சி எண்ணக்கூடாது. ஊழியக்காரர்கள் மத்தியில் கருத்துவேறுபாடு வருவதற்கு இருதயத்தில் காணப்படுகிற பெருமையே முக்கிய காரணமாகயிருக்கிறது. பெருமையினால் சண்டை சச்சரவுகள் உண்டாகிறது. தேவன் தம்முடைய ஊழியக்காரர்களெல்லோரையும் தம்முடைய பண்ணையில் வேலைக்காரராகப் பயன்படுத்துகிறார். தம்முடைய மாளிகையைக் கட்டுவதற்கு அவர்களைப் பயன்படுத்துகிறார். ஊழியக்காரர்களெல்லோரும் தேவனுடைய வேலையை இணைந்து செய்யவேண்டும். தேவனுக்கு உடன்ஊழியராக பணிபுரியவேண்டும்.

ஒருவருக்கொருவர் விரோதமாக வேலை செய்தால் வேலை சரியாக நடைபெறாது. பண்ணையின் பராமரிப்பு நன்றாயிராது. தேவனுடைய மாளிகை நேர்த்தியாகக் கட்டி முடிக்கப்படாது. கர்த்தர் தம்முடைய ஊழியக்காரர் ஒவ்வொருவருக்கும் வெவ்வேறு விதமான தாலந்துகளையும் தகுதிகளையும் கொடுத்திருக்கிறார். அதன்பிரகாரம் கர்த்தர் அவர்களை தம்முடைய சித்தத்தின் பிரகாரமாக தம்முடைய ஊழியத்தில் பயன்படுத்துகிறார். இதில் நாம் பெருமைப்படுவதற்கு ஒன்றுமில்லை. கர்த்தருடைய ஊழியத்தை நாம் செய்வது நம்முடைய சிலாக்கியம். ஊழிய வாய்ப்புக்காக நாம் கர்த்தருக்கு நன்றியுள்ளவர்களாக இருக்கவேண்டும்.

## பெருமையும் சுயமேன்மையும் 1கொரி 4 : 7-13

**1கொரி 4:7. அன்றியும் உன்னை விசேஷித்தவனாகும்படி செய்கிறவர் யார்? உனக்கு உண்டாயிருக்கிறவைகளில் நீ பெற்றுக் கொள்ளாதது யாது? நீ பெற்றுக் கொண்டவனானால் பெற்றுக்கொள்ளாதவன் போல் ஏன் மேன்மைபாராட்டுகிறாய்?**

**1கொரி 4:8. இப்பொழுது திருப்தி அடைந்திருக்கிறீர்களே, இப்பொழுது ஐசுவரியவான்களாயிருக் கிறீர்களே, எங்களையல்லாமல் ஆளுகிறீர்களே; நீங்கள் ஆளுகிறவர்களானால் நலமாயிருக்கும்; அப்பொழுது உங்களுடனே கூட நாங்களும் ஆளுவோமே.**

**1கொரி 4:9. எங்களுக்குத் தோன்றுகிறபடி தேவன் அப்போஸ்தலர்களாகிய எங்களை மரணத்துக்குக் குறிக்கப்பட்டவர்கள் போலக் கடைசியானவர்களாய்க் காணப்படப்பண்ணினார்; நாங்கள் உலகத்துக்கும் தூதருக்கும் மனுஷருக்கும் வேடிக்கையானோம்.**

**1கொரி 4:10. நாங்கள் கிறிஸ்துவினிமித்தம் பைத்தியக்காரர், நீங்கள் கிறிஸ்துவில் புத்திசாலிகள்; நாங்கள் பலவீனர், நீங்கள் பலவான்கள்; நீங்கள் கனவான்கள், நாங்கள் கனவீனர்.**

**1கொரி 4:11. இந்நேரம் வரைக்கும் பசியுள்ளவர்களும், தாகமுள்ளவர்களும், நிர்வாணிகளும், குட்டுண்டவர்களும், தங்க இடமில்லாதவர்களுமாயிருக்கிறோம்.**

**1கொரி 4:12. எங்கள் கைகளினால் வேலைசெய்து, பாடுபடுகிறோம்; வையப்பட்டு, ஆசீர்வதிக்கிறோம்; துன்பப்பட்டு, சகிக்கிறோம்.**

**1கொரி 4:13. தூஷிக்கப்பட்டு, வேண்டிக்கொள்ளுகிறோம்; இந்நாள் வரைக்கும் உலகத்தின் குப்பையைப் போலவும், எல்லாரும் துடைத்துப் போடுகிற அழுக்கைப்போலவுமானோம்.**

## ஏன் மேன்மை பாராட்டுகிறாய்

**அன்றியும் உன்னை விசேஷித்தவனாகும்படி செய்கிறவர் யார்? உனக்கு உண்டாயிருக்கிறவைகளில் நீ பெற்றுக் கொள்ளாதது யாது? நீ பெற்றுக் கொண்டவனானால் பெற்றுக்கொள்ளாதவன் போல் ஏன் மேன்மைபாராட்டுகிறாய்? (1கொரி 4:7)**

பெருமைக்கும், மேன்மை பாராட்டுவதற்கும் விரோதமாக பவுல் இங்கு எச்சரித்துக் கூறுகிறார். தேவனே நம்மை விசேஷித்தவர்களாக ஆக்கியிருக்கிறார். அவரே நமக்கு விசேஷித்த தகுதிகளையும், விசேஷித்த வரங்களையும் கொடுத்திருக்கிறார். இவையெல்லாம் தேவனுக்குரியது. இதைச் சொல்லும்போது, "உன்னை விசேஷித்தவனாகும்படி செய்கிறவர் யார்? உனக்கு உண்டாயிருக்கிறவைகளில் நீ பெற்றுக்கொள்ளாதது யாது" என்று அப்போஸ்தலர் பவுல் ஒரு கேள்வி கேட்கிறார்.

இந்த நிருபத்தில் பவுல் இப்போது ஊழியக்காரர்களிடம் நேரடியாகப் பேசுகிறார். இவர்கள் கொரிந்துவிலுள்ள பிரிவினைகளுக்கு காரணமாயிருக்கிறார்கள். இந்த ஊழியக்காரர்கள் தங்களுக்குக்கென்று ஒரு பிரிவை ஏற்படுத்தி, அதற்குத் தலைவராயிருக்கிறார்கள்.

எல்லா வரங்களும் தேவனிடமிருந்தே வருகிறது. விசேஷித்த கிருபைகளும் அவரிடமிருந்தே வருகிறது. ஆகையினால் ஊழியக்காரர்கள் தங்களுடைய விசேஷித்த வரங்களைக் குறித்து மேன்மை பாராட்ட ஒன்றுமேயில்லை. நம்முடைய சுயபக்தியினாலோ, சுயபுத்தியினாலோ நாம் விசேஷித்த வரங்களைப் பெற்றுக்கொள்வதில்லை. தேவனே தம்முடைய கிருபையினால் நமக்கு வரங்களையும் தாலந்துகளையும் கொடுத்திருக்கிறார். நம்மிடத்திலுள்ளது, நாம் செய்வது, நாம் இருப்பது ஆகிய எல்லாமே தேவனுடைய சுத்தக்கிருபை. ஊழியக்காரர்கள் ஒருவரும் மேன்மை பாராட்டக்கூடாது. கர்த்தரிடமிருந்து வரங்களையும் தாலந்துகளையும் பெற்றுக்கொண்டவர்கள், ஒன்றைக் குறித்தும் மேன்மை பாராட்டக்கூடாது. தேவனுடைய கிருபையை மாத்திரமே நாம் மேன்மையாகப் பேசவேண்டும். நம்மிடத்திலுள்ள பெருமையும், மேன்மை பாராட்டுதலும் நம்மைவிட்டு நீங்கிப்போகவேண்டும். தேவனிடத்தில் பெற்றுக்கொண்டதை, அவரிடத்திலிருந்து பெற்றுக் கொள்ளவில்லையென்றும், நம்மிடத்திலுள்ளது நம்முடைய சுயமுயற்சியினாலும், சுயபுத்தியினாலும், நாமே சுயமாய்ச் சம்பாதித்து என்று மேன்மை பாராட்டிச் சொல்லக்கூடாது.

## எங்களையல்லாமல் ஆளுகிறீர்களே

**இப்பொழுது திருப்தி அடைந்திருக்கிறீர்களே, இப்பொழுது ஐசுவரியவான் களாயிருக்கிறீர்களே, எங்களையல்லாமல் ஆளுகிறீர்களே; நீங்கள் ஆளுகிறவர்களானால் நலமாயிருக்கும்; அப்பொழுது உங்களுடனே கூட நாங்களும் ஆளுவோமே (1கொரி 4:8).**

அப்போஸ்தலர் பவுல் ஊழியக்காரர்களிடத்தில் தாழ்மை காணப்படவேண்டும் என்று வலியுறுத்திச் சொல்லுகிறார். இந்த ஆலோசனையை எதிர்மறை வார்த்தைகளைப் பயன்படுத்தி "இப்பொழுது திருப்தியடைந்திருக்கிறீர்களே, இப்பொழுது ஐசுவரியவான் களாயிருக்கிறீர்களே, எங்களையல்லாமல் ஆளுகிறீர்களே" என்று இவ்வாறு சொல்லுகிறார்.

ஊழியக்காரர்களிடத்தில் போதுமான அளவு மாத்திரமல்ல, அளவுக்கு அதிகமாகவும் இருக்கிறது. ஆவிக்குரிய வரங்கள் அவர்களிடத்தில் தாராளமாயிருக்கிறது. திருப்தி அடைந்திருக்கிறார்கள். வரங்களில் ஐசுவரியவான்களாயிருக்கிறார்கள். இதற்காக அவர்கள் சந்தோஷப் படுகிறார்கள். தங்களை மேன்மை பாராட்டுகிறார்கள். ஆனால் அவர்கள் "எங்களையல்லாமல் மேன்மை பாராட்டுகிறார்கள்" என்று பவுல் அவர்கள்மீது குற்றம் சுமத்துகிறார்.

ஊழியக்காரர்களுக்கு ஆவிக்குரிய நிலமையில் முன்னேற்றமும் வளர்ச்சியும் உண்டாயிருக்கிறது. போதுமென்ற திருப்தியோடு இருந்த நிலையிலிருந்து இப்போது அவர்கள் ஐசுவரிய நிலைக்கு உயர்த்தப்பட்டிருக்கிறார்கள். ஐசுவரியத்தை அதிகமாய்ப் பெற்றுக்கொண்டவர்கள் இப்போது பிரபுக்களாக உயர்ந்திருக்கிறார்கள். ஞானத்திலும் ஆவிக்குரிய வரங்களிலும் அதிகமாய் வளர்ச்சி பெற்றிருக்கிறார்கள். தேவன் தம்முடைய கிருபையினால் கொரிந்தியருக்கு அதிக வளர்ச்சியையும், அதிக ஆசீர்வாதங்களையும் கொடுத்திருக்கிறார்.

பவுல் கொரிந்தியரைப்பற்றிச் சொல்லும்போது, "அவர்கள் ராஜாக்களைப்போல ஆளுகிறார்கள்" என்று பொருள்படுமாறு சொல்லுகிறார். தேவனிடமிருந்து வரங்களையும் தாலந்துகளையும் பெற்றுக்கொண்டவர்கள், அவற்றை தேவனுடைய நாமமகிமைக்காகவே ஆளுகை செய்யவேண்டும். மற்ற ஊழியக்காரர்களும் தேவனுடைய வரங்களைப் பயன்படுத்தவேண்டும். ஒரு ஊழியக்காரரிடத்தில் கர்த்தர் கொடுத்திருக்கிற வரங்கள், மற்ற ஊழியக்காரர்களுக்கும் பிரயோஜனமாயிருக்க வேண்டும். ஆனால் கொரிந்துவிலுள்ள ஊழியக்காரர்களோ, தங்களையல்லாமல் ஆளுவதாக, பவுல் அவர்கள்மீது குற்றம் சொல்லுகிறார்.

கொரிந்தியர்கள் சபையின் பக்திவிருத்திக்காக ஆவிக்குரிய வரங்களைப் பயன்படுத்தவேண்டும். ஆனால் அவர்களோ தங்கள் சுயமேன்மைக்காகவும், சுய பெருமைக்காகவும் அவற்றைப் பயன்படுத்துகிறார்கள். தங்களைப்பற்றி அவர்கள் அறியாத வர்களாகயிருக்கிறார்கள். தாங்கள் கர்த்தருடைய உடன்வேலையாட்கள் என்னும் சத்தியத்தை அவர்கள் புரிந்துகொள்ளவேண்டும். தாங்கள் கர்த்தரல்ல என்றும், தாங்கள் கர்த்தருடைய ஊழியக்காரர்கள் மாத்திரமே என்பதையும் அவர்கள் புரிந்துகொள்ளவேண்டும். இந்த உண்மையான சத்தியத்தை அவர்கள் புரிந்துகொண்டால் அவர்களுக்குள் பெருமை இருக்காது. அவர்கள் தங்களைப்பற்றி மேன்மை பாராட்டமாட்டார்கள்.

கொரிந்துவிலுள்ள ஊழியக்காரர்களின் இருதயம் இறுமாப்படைந்திருக்கிறது. ஆவிக்குரிய வரங்களில் அவர்கள் ஐசுவரியவான் களாயிருக்கிறார்கள். ஆகையினால் அவர்கள் தங்களைத்தாங்களே உயர்த்தி, மற்றவர்கள் மத்தியில் தங்களைப் பெருமைப் படுத்துகிறார்கள். அவர்களிடத்தில் உண்மையான அன்பும், மனத்தாழ்மையும் இருக்குமென்றால், அவர்கள் மற்ற அப்போஸ்தலரையும் தங்களோடு சேர்த்துகொண்டு ஆளுகை செய்வார்கள். மற்றவர்களைவிட தாங்கள் பெரியவர்களென்று எண்ணி மேன்மை பாராட்டமாட்டார்கள்.

கர்த்தருடைய ஊழியக்காரர்கள் கிருபையில் வளர்ச்சி பெறவேண்டும். நம்முடைய ஊழிய வளர்ச்சிக்கு நம்மிடத்தில் காணப்படுகிற பெருமையே தடையாகயிருக்கிறது. கர்த்தருடைய ஊழியத்தை நேர்த்தியாகவும், ஞானமாகவும் செய்ய முடியாதவாறு, பெருமை நம்மை ஆளுகை செய்கிறது. தேவஆவியானவர் நம்மை ஆளுகை செய்யும்போது நம்முடைய ஊழியம் கர்த்தருடைய சித்தத்தின் பிரகாரமாகவும் அவருடைய விருப்பத்தின் பிரகாரமாகவும் நடைபெறும். பெருமை நம்மை ஆளுகை செய்யும்போது, நாம் நம்முடைய சுயவிருப்பத்தின் பிரகாரமாக காரியங்களை நடப்பிப்போம்.

ஊழியக்காரர்களிடத்தில் மனத் தாழ்மை இருக்கவேண்டும். ஆவிக்குரிய வரங்களில் தாங்கள் ஐசுவரியவான்களாகயிருப்பதாக பெருமை பாராட்டக்கூடாது. ஊழியக்காரியங்களில் தாங்கள் மற்றவர்களை ஆளுகை செய்வதாகவும் நினைக்கக்கூடாது. நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து ஊழியம் கொள்ளுவதற்கு வராமல் ஊழியம் செய்வதற்காகவே வந்தார். அவருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றுகிற நாமும், கர்த்தருடைய முன்மாதிரியின் பிரகாரமாக ஊழியம் செய்யவேண்டும்.

## மரணத்திற்குக் குறிக்கப் பட்டவர்கள்

**எங்களுக்குத் தோன்றுகிறபடி, தேவன் அப்போஸ்தலர்களாகிய எங்களை மரணத்துக்குக் குறிக்கப் பட்டவர்கள் போலக் கடைசியானவர்களாய்க் காணப்படப் பண்ணினார்; நாங்கள் உலகத்துக்கும் தூதருக்கும் மனுஷருக்கும் வேடிக்கையானோம் (1கொரி 4:9).**

பவுல் கொரிந்துவிலுள்ள ஊழியக்காரர்களைப்பற்றிச் சொல்லிவிட்டு இப்போது தன்னைப்பற்றியும், தன்னுடைய சொந்த சூழ்நிலைகளைப்பற்றியும் சொல்லுகிறார். தன்னுடைய உடன்ஊழியரைப் பற்றியும், கொரிந்துவிலுள்ள ஊழியக்காரர்களைப் பற்றியும் பவுல் ஒப்பிட்டுப் பேசுகிறார்.

அப்போஸ்தலராகிய தாங்கள் மரணத்திற்குக் குறிக்கப்பட்டவர்களாகவும், கடைசியானவர்களாகவும் இருப்பதாகச் சொல்லுகிறார். தேவனே தங்களை இப்படி காணப்படப்பண்ணியதாகவும் சொல்லுகிறார். இந்தப் பிரபஞ்சத்தில் அப்போஸ்தலர்களுக்கு பல பிரச்சனைகளும் உபத்திரவங்களும் உண்டாயிற்று. அப்போஸ்தலருக்கு வந்த துன்பத்தைப்போல உலகப்பிரகாரமான மனுஷர் யாருக்கும் இவ்வளவு வேதனைகளும் துன்பங்களும் வரவில்லை.

பவுல் தன்னுடைய நிலமையைப்பற்றிச் சொல்லும்போது ரோமாபுரியில் நடைபெறுகிற வீரவிளையாட்டுக்களை மனதில் வைத்து இதைத் தெளிவுபடுத்துகிறார். அக்காலத்தில் வீரர்கள் மத்தியில் விளையாட்டுப் போட்டிகள் நடைபெறும். இந்தப் போட்டியை ஏராளமான ஜனங்கள் பார்த்து ரசிப்பார்கள். ஒருவன் போட்டியில் தோற்றுப்போனால் அவன் அங்கேயே மரித்துப்போவான். போட்டியில் வெற்றி பெற்றவன் ஜீவன் தப்பித்துப் பிழைப்பான்.

ஆனாலும் ஜெயித்தவனுடைய ஜீவனுக்கும் பாதுகாப்பு இருக்காது. ஏனெனில் ஒருவன் ஒரு போட்டியில் ஜெயிக்கும்போது, அது அவனுக்கு முடிவான போட்டியல்ல. ஜெயித்தவன் தொடர்ந்து மற்ற போட்டிகளில் பங்குபெறவேண்டும். அவர்கள் குற்றவாளிகளாகயிருந்தால், சாகும் வரையிலும் போட்டியில் பங்குபெறவேண்டும். அக்காலத்தில் குற்றவாளிகளை, "மரணத்திற்குக் குறிக்கப்பட்டவர்கள்" என்று சொல்லுவது வழக்கம். பவுல் தன்னைப்பற்றியும், தன்னுடைய உடன்ஊழியர்களைப்பற்றியும் சொல்லும்போது, "அப்போஸ்தலர்கள் மரணத்திற்குக் குறிக்கப்பட்டவர்கள்" என்று சொல்லுகிறார்.

தேவனே அப்போஸ்தலர்களாகிய தங்களை மரணத்திற்குக் குறிக்கப்பட்டவர்களாக நியமித்திருக்கிறார் என்று பவுல் தங்களைப்பற்றிச் சொல்லுகிறார். அவர் தங்களை கடைசியானவர்களாய் காணப்படப் பண்ணினார் என்றும் சொல்லுகிறார். கடைசி போட்டிகளில் பங்குபெறுகிறவர்கள் அதிகமாய்க் களைத்துப்போயிருப்பார்கள். இதற்கு முந்திய போட்டிகளில் பங்குபெற்றதினால் உண்டான களைப்பும் சோர்வும், காயங்களும் அவர்களை வேதனைப்படுத்தும். அவர்கள் தங்களுடைய வஸ்திரங்கள் கிழிந்து நிர்வாணிகளாயிருப்பார்கள். கடைசி போட்டிகளில், கடைசி வரையிலும் போட்டியிடுகிறவர்கள் நிர்வாணத்தோடே போட்டியிட வேண்டியதாயிருக்கும்.

தேவன் அப்போஸ்தலர்களைக் கடைசியானவர்களாய் காணப்படப் பண்ணினார் என்று பவுல் தங்களைப்பற்றிச் சொல்லுகிறார். அப்போஸ்தலர்களுக்கு மரண ஆபத்துக்கள் தொடர்ந்து வந்துகொண்டேயிருந்தது. தேவனே இந்த ஆபத்துக்கள் வழியாக அப்போஸ்தலர்களை வழிநடத்துகிறார். ஒவ்வொரு ஆபத்தான சூழ்நிலையிலும் அப்போஸ்தலர்கள் தேவனுடைய கிருபையையே சார்ந்திருக்கவேண்டும். தேவனுடைய வல்லமை வெளிப்படுமாறு கர்த்தருடைய சமுகத்தில் விண்ணப்பம்பண்ணவேண்டும். தேவன் தம்முடைய சத்திய வார்த்தைகளை அடையாளங்களினாலும், அற்புதங்களினாலும் உறுதிபண்ண வேண்டுமென்று விசுவாசத்தோடு காத்திருக்கவேண்டும்.

அப்போஸ்தலர்கள் கர்த்தருக்காக இந்த வேதனைகளையெல்லாம் சகித்துக்கொள்கிறார்கள். ஆபத்தான விளையாட்டுப் போட்டிகளில் பங்குபெறுகிறவர்களைப்போல, தாங்கள் ஆபத்துக்களைத் தொடர்ந்து சந்தித்து வருவதாகப் பவுல் சொல்லுகிறார். “நாங்கள் உலகத்திற்கும், தூதருக்கும், மனுஷருக்கும் வேடிக்கையானோம்” என்றும் சொல்லுகிறார். அப்போஸ்தலர்கள் உலகத்தாருக்கு ஒரு காட்சிப்பொருளைப்போல இருக்கிறார்கள். தங்களுடைய பாடுகளுக்கும், உபத்திரவங்களுக்கும், பொறுமைக்கும் மனுஷரும் தேவதூதரும் சாட்சிகளாக இருக்கிறார்கள். கிறிஸ்துவுக்காக தாங்கள் பக்திவைராக்கியமாயிருப்பதினால் தங்களுக்கு ஏற்பட்ட பாடுகளையும் உபத்திரவங்களையும் தேவதூதரும் மனுஷரும் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள்.

அப்போஸ்தலரின் பாடுகள் ஏதோ ஒரு மூலையில் மறைவாக நடைபெறவில்லை. விளையாட்டுப்போட்டி நடைபெறுகிற இடத்தில் எல்லோரும் வேடிக்கை பார்ப்பதுபோல, தாங்கள் அனுபவிக்கிற வேதனைகளையும், துன்பங்களையும் எல்லோரும் வேடிக்கை பார்ப்பதாக பவுல் சொல்லுகிறார். வேதனைகள் அதிகமாயிருந்தாலும் தேவனுடைய கிருபையினாலும், அவருடைய பலத்தினாலும் இவையெல்லாவற்றையும் பொறுமையோடு சகித்துக்கொண்டதாக பவுல் சாட்சியாக எழுதுகிறார். ஊழியக்காரருடைய ஊழியம் கடினமானது. ஆனாலும் அது மகிமையுள்ளது. நாம் நடக்கிற பாதை கடினமானது. ஆனாலும் அதுவே நித்திய ஜீவனுக்குப் போகும் மகிமையான பாதை.

உபத்திரவங்களை நாம் பொறுமையோடு சகித்துக்கொள்ளும்போது, உலகப்பிரகாரமான ஜனங்கள் நம்மைப் பார்க்கிறார்கள். நம்முடைய பொறுமை அவர்களுக்கு ஆச்சரியமாக இருக்கிறது. ஒரு சிலர் நம்மீது பரிதாபப்படுகிறார்கள். வேறு சிலர் நம்மை ஏளனமாய்ப் பேசுகிறார்கள். கர்த்தருடைய ஊழியக்காரர்கள் மேன்மை பாராட்டாமல் மனத்தாழ்மையாயிருக்கும்போது, எல்லா சூழ்நிலைகளிலும் கர்த்தருக்கு ஊழியம் செய்வார்கள். பாடுகளையும் வேதனைகளையும் பொறுமையோடு சகித்துக்கொள்வார்கள்.

## கிறிஸ்துவினிமித்தம் பைத்தியக்காரர்

**நாங்கள் கிறிஸ்துவினிமித்தம் பைத்தியக்காரர், நீங்கள் கிறிஸ்துவில் புத்திசாலிகள்; நாங்கள் பலவீனர், நீங்கள் பலவான்கள்; நீங்கள் கனவான்கள், நாங்கள் கனவீனர் (1கொரி 4:10).**

கொரிந்துவிலுள்ள மற்ற ஊழியக்காரர்களையும் தன்னையும் பவுல் இங்கு ஒப்பிட்டு எழுதுகிறார். கிறிஸ்துவினிமித்தம் தானும் தன்னுடைய உடன் ஊழியரும் பைத்தியக்காரராயிருப்பதாகவும், கொரிந்துவிலுள்ள ஊழியக்காரர்கள் கிறிஸ்துவில் புத்திசாலிகளாயிருப்பதாகவும் சொல்லுகிறார். தாங்கள் பலவீனரென்றும், அவர்கள் பலவான்களென்றும், தாங்கள் கனவீனரென்றும் அவர்கள் கனவான்களென்றும் தங்களைத் தாழ்த்தியும், அவர்களை உயர்த்தியும் எழுதுகிறார்.

கிறிஸ்துவினிமித்தமாயும், அவருடைய சுவிசேஷத்தினிமித்தமாயும் ஊழியக்காரராகிய நாம் இந்த உலகத்திற்கு பைத்தியக்காரரைப்போல இருக்கிறோம். இதனால் சுவிசேஷத்திற்கு மேன்மை உண்டாகுமென்றால் நாம் பைத்தியக்காரராயிருப்பதில் தவறு ஒன்றுமில்லை என்று பவுல் தன்னுடைய ஊழியத்தைப்பற்றிச் சொல்லுகிறார். சுவிசேஷம் எப்படியாவது அறிவிக்கப்படவேண்டுமென்று பவுல் வாஞ்சையோடிருக்கிறார். தன்னைப்பற்றி பவுல் தாழ்மையாகச் சொன்னாலும், கொரிந்துவிலுள்ள ஊழியக்காரர்களைப் பற்றி மேன்மையாகவே சொல்லுகிறார். அவர்கள் கிறிஸ்துவில் புத்திசாலிகள் என்று அறிக்கை செய்கிறார்.

பவுலும் மற்ற ஊழியக்காரரும் வேதனைகளையும், பாடுகளையும், உபத்திரவங்களையும் அனுபவிக்கும்போது கொரிந்துவிலுள்ள ஊழியக்காரர்கள் பாதுகாப்பாகவும், சந்தோஷமாகவும், எந்தவித பிரச்சனையும் இல்லாமலிருக்கிறார்கள். பவுலின் பிரச்சனை வேறு. அவர்களுடைய சூழ்நிலை வேறு. எல்லா விசுவாசிகளுக்கும் சூழ்நிலைகள் ஒன்றுபோலிருப்பதில்லை. யுத்தத்தில் முன்னணியில் போர்செய்கிறவர்களுக்கே அதிகக் காயமுண்டாகும். கர்த்தருடைய ஊழியக்காரர்களில் முன்னணியில் நின்று அதிகமாய் ஊழியம் செய்கிறவர்களுக்கே உபத்திரவங்கள் வரும். வேதனைகள் வரும். இப்படிப்பட்ட ஊழியக்காரர்களே அதிகமான பாடுகளை முந்தி அனுபவிப்பார்கள்.

ஒரு சில ஊழியக்காரர்கள் கர்த்தருக்காக முன்னணியில் நின்று ஊழியம் செய்யமாட்டார்கள். தங்களுக்கு ஒரு உபத்திரவமும் வரவில்லையென்றும், கர்த்தருடைய பார்வையில் தாங்கள் மேன்மையானவர்களென்றும் தங்களைப்பற்றிப் பெருமையாகச் சொல்லுவார்கள். தாங்கள் பலவான்களென்றும், கனவான்களென்றும் தங்களைப்பற்றி தாங்களே மதிப்பீடு செய்வார்கள். இவர்கள் கிறிஸ்துவின் ஊழியத்தில் இன்னும் முன்னணியத்திற்குப் போகாதவர்கள்.

முன்னணியத்தில் ஊழியம் செய்கிறவர்களுக்குத்தான் பாடுகள் அதிகமாயிருக்கும். ஆனால் இவர்களோ கடினமான ஊழியங்களில் பங்குபெறாமல், தங்களைப்பற்றிப் பெருமையாகப் பேசிக்கொள்கிறார்கள். அதுமாத்திரமல்ல கிறிஸ்துவுக்காக மெய்யாகவே பாடனுபவிக்கிறவர்களை பலவீனரென்றும், கனவீனரென்றும் தூஷிக்கிறார்கள். இப்படிப்பட்டவர்களுடைய மனக்கண்கள் மங்கிப்போயிருக்கிறது.

## பசியுள்ளவர்களும் தாகமுள்ளவர்களும்

**இந்நேரம் வரைக்கும் பசியுள்ளவர்களும், தாகமுள்ளவர்களும், நிர்வாணிகளும், குட்டுண்டவர்களும், தங்க இடமில்லாதவர்களுமாயிருக்கிறோம். எங்கள் கைகளினால் வேலைசெய்து, பாடுபடுகிறோம்; வையப்பட்டு, ஆசீர்வதிக்கிறோம்; துன்பப்பட்டு, சகிக்கிறோம். தூஷிக்கப்பட்டு, வேண்டிக் கொள்ளுகிறோம்; இந்நாள்வரைக்கும் உலகத்தின் குப்பையைப்போலவும், எல்லாரும் துடைத்துப் போடுகிற அழுக்கைப் போலவுமானோம் (1கொரி 4:11-13).**

பவுல் தன்னுடைய பாடுகளையும், தன்னுடைய உடன்ஊழியர்களின் பாடுகளையும் இங்கு சுருக்கமாகச் சொல்லுகிறார். இவர்கள் பசி உள்ளவர்களாகவும், தாகமுள்ளவர்களாகவும், நிர்வாணி களாகவும், குட்டுண்டவர்களாகவும், தங்க இடமில்லாதவர்களாகவும் இருக்கிறார்கள். இந்நாள் வரைக்கும் உலத்தின் குப்பையைப்போலவும், எல்லாரும் துடைத்துப்போடுகிற அழுக்கைப்போலவும் ஆனார்கள். தேவனுடைய ராஜ்யத்தில் அப்போஸ்தல ஊழியம் செய்கிறவர்களுக்கு தங்க இடமில்லை. பசியுள்ளவர்களாகவும் தாகமுள்ளவர்களாகவும் இருக்கிறார்கள். நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்கோ தம்முடைய தலைசாய்க்கவும் இடமில்லை (லூக் 9:58). இயேசுகிறிஸ்துவின் அப்போஸ்தலருக்கு கிறிஸ்துவைப்போன்ற வருமையில்லை. கிறிஸ்து நமக்காக தரித்திரரானார்.

அப்போஸ்தலர்கள் தேவனிடத்தில் அன்புகூருகிறார்கள். கிறிஸ்துவின் சுவிசேஷத்தை எல்லா சூழ்நிலைகளிலும் உண்மையாய்ப் பிரசங்கம்பண்ணுகிறார்கள். தங்களுடைய சுயவசதியை, சுயமேன்மையை அவர்கள் தேடவில்லை. எல்லாவற்றையும் தியாகம்பண்ணி, கிறிஸ்துவின் நாமமகிமைக்காக ஊழியம் செய்கிறார்கள். தங்களையே வெறுமையாக்கி கிறிஸ்துவுக்குள் தங்களை அர்ப்பணித்திருக்கிறார்கள். கிறிஸ்துவினிமித்தமாக எல்லா பாடுகளையும், வேதனைகளையும், உபத்திரவங்களையும் சகித்துக் கொள்கிறார்கள். தேவன்மீது இவர்கள் அன்புகூருவதினால் இவர்களால் இவற்றையெல்லாம் சகித்துக்கொள்ள முடிகிறது.

கிறிஸ்துவுக்காக ஊழியம் செய்தால் தங்களுக்கு உலகப்பிரகாரமான ஆசீர்வாதம் கிடைக்குமென்று அப்போஸ்தலர்கள் எதிர்பார்க்கவில்லை. ஏராளமான ஆத்துமாக்கள் இரட்சிக்கப்பட்டால் இந்தப் பிரபஞ்சத்தில் தங்களுக்கு ஏராளமான ஐசுவரியங்களும், ஏராளமான சொத்து சுகங்களும் கிடைக்குமென்று எதிர்பார்த்து இவர்கள் ஊழியம் செய்யவில்லை. கிறிஸ்துவுக்காக ஊழியம் செய்ததினிமித்தம், இவர்கள் இந்நாள் வரைக்கும் உலகத்தின் குப்பையைப்போலவும், எல்லாரும் துடைத்துப்போடுகிற அழுக்கைப்போலவும் ஆனார்கள். இந்த உலகத்தில் ஜீவிப்பதற்கு தகுதியற்றவர்களைப் போல நடத்தப்பட்டார்கள்.

அப்போஸ்தலருக்கு இந்த உலகத்தில் போஜனமும் வஸ்திரமும் கிடைக்கவில்லை. திரளான ஐசுவரியம் அவர்களிடத்திலில்லை. பசி உள்ளவர்களாயும், தாகமுள்ளவர்களாயும், நிர்வாணிகளாயும் இருந்து கர்த்தருக்கு உண்மையாய் ஊழியம் செய்தார்கள். இவர்களுக்குத் தங்குவதற்குக்கூட நல்ல இடமில்லை. எல்லாரும் துடைத்துப்போடுகிற அழுக்கைபோல இருக்கிறார்கள். யாருமே இவர்களுக்கு ஆதரவு கொடுக்கவில்லை. துடைத்துப்போட்ட அழுக்கை வெளியே தூக்கியெறிவதுபோல, அப்போஸ்தலரைத் தூக்கியெறிகிறார்கள். அப்போஸ்தலர்கள் தங்களுடைய ஆண்டவருக்காக இவையெல்லாவற்றையும் சகித்துக் கொண்டு அவருக்கு ஊழியம் செய்கிறார்கள். கிறிஸ்துவின் முன்மாதிரியை பாடுகளை அனுபவிப்பதிலும் பின்பற்றுகிறார்கள்.

கிறிஸ்துவுக்கு சிநேகமாக இருக்கிறவர்களை இந்த உலகம் பகைக்கும். அவர்கள் இந்த உலகத்தில் ஜீவிப்பதற்கே தகுதியற்றவர்களென்று உலகத்தார் அவர்களை தூஷிப்பார்கள். கர்த்தருடைய பிள்ளைகளை உலகம் ஏற்றுக்கொள்ளாது. உலகத்தாரின் பார்வைக்கு கர்த்தருடைய ஊழியக்காரர்கள் குப்பையைப்போல இருப்பார்கள். இவையெல்லாவற்றிற்கு மத்தியிலும் அப்போஸ்தலர்கள் கிறிஸ்துவுக்குச் சாட்சியாய் ஜீவிக்கிறார்கள்.

உலகத்தார் ஊழியக்காரர்களைத் திட்டுகிறார்கள். ஆனால் ஊழியக்காரர்களோ உலகத்தாரை ஆசீர்வதிக்கிறார்கள். உலகத்தார் இவர்களைத் துன்பப்படுத்துகிறார்கள். ஊழியக்காரர்கள் தங்கள் துன்பங்களைச் சகித்துக்கொள்கிறார்கள். கர்த்தருடைய பிள்ளைகள் எல்லாவிதமான உபத்திரவங்களிலும் கிறிஸ்துவுக்கு உண்மையுள்ளவர்களாக ஜீவிக்கவேண்டும். தங்கள் நல்மனச்சாட்சியைக் காத்துக்கொள்ளவேண்டும். கிறிஸ்துவின் நாமம் நம்மூலமாய் தூஷிக்கப்படுவதற்கு நாம் காரணமாயிருக்கக்கூடாது. மற்றவர்கள் நம்மை தூஷித்தாலும் நாம் அவர்களை ஆசீர்வதிக்கவேண்டும். நாம் அவர்களுக்காக ஜெபிக்கவேண்டும்.

## புத்திசொல்லுகிறேன்
## 1கொரி 4 : 14-16

**1கொரி 4:14. உங்களை வெட்கப்படுத்தும்படிக்கு நான் இவைகளை எழுதவில்லை, நீங்கள் எனக்குப்பிரியமான பிள்ளைகளென்று உங்களுக்குப் புத்திசொல்கிறேன்.**

**1கொரி 4:15. கிறிஸ்துவுக்குள் பதினாயிரம் உபாத்தியாயர்கள் உங்களுக்கு இருந்தாலும் தகப்பன்மார் அநேகர் உங்களுக்கு இல்லையே; கிறிஸ்து இயேசுவுக்குள் சுவிசேஷத்தினால் நான் உங்களைப் பெற்றேன்.**

**1கொரி 4:16. ஆகையால், என்னைப் பின்பற்றுகிறவர்களாகுங்க ளென்று உங்களுக்குப் புத்தி சொல்லுகிறேன்.**

## பிரியமான பிள்ளைகள்

**உங்களை வெட்கப்படுத்தும் படிக்கு நான் இவைகளை எழுதவில்லை, நீங்கள் எனக்குப்பிரியமான பிள்ளைகளென்று உங்களுக்குப் புத்திசொல்கிறேன் (1கொரி 4:14).**

கொரிந்துவிலுள்ள விசுவாசிகளுக்கு பவுல் ஆவிக்குரிய தகப்பனாயிருக்கிறார். அதற்குரிய மரியாதையை அவர்கள் தனக்குக் காண்பிக்கவேண்டும் என்று அவர்களுக்குப் புத்திசொல்லுகிறார். இந்த நிருபத்தில் பவுல் ஒரு சில கடின வார்த்தைகளைப் பயன்படுத்தினாலும், அவர்களை வெட்கப்படுத்தும்படிக்கு அவர் அந்த வார்த்தைகளை எழுதவில்லை. அவர்களுக்கு புத்திசொல்லும் வண்ணமாகவே பவுல் இந்த வார்த்தைகளை எழுதுகிறார். வார்த்தைகளினால் அவர்களை எச்சரிக்கிறார்.

பொதுவாக நாம் யாருக்காவது புத்திசொன்னால், அவர்கள் உடனே நம்முடைய புத்திமதியை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். தங்கள் மனது புண்படுவதாகச் சொல்லிவிடுவார்கள். ஆனாலும் புத்திசொல்லுகிறவர் மெய்யான அன்போடும், மெய்யான அக்கறையோடும் சொல்லவேண்டும். அப்போதுதான் அவர்களுடைய மனதில் புத்திமதியின் வார்த்தைகள் பதியும். அவர்களுக்குள் நல்ல மாற்றமுண்டாகும்.

கடின வார்த்தைகளைத் தொடர்ந்து பயன்படுத்தினால், நம்முடைய வார்த்தைக்கு மதிப்பு இருக்காது. அவர்கள் நம்மை தங்களுடைய பகைஞர்போல பார்ப்பார்கள். நம்முடைய ஐக்கியத்திலிருந்து பிரிந்துபோய்விடுவதற்கு வழிவகை தேடுவார்கள். நம்முடைய ஆலோசனைகளுக்குக் கீழ்ப்படிவதற்குப் பதிலாக, எதிர்த்து நிற்பார்கள். நம்மை தங்கள் சிநேகிதராகப் பார்ப்பதற்குப் பதிலாக சத்துருவாக பார்ப்பார்கள். வார்த்தையில் அன்பு இல்லையென்றால் ஒரு நன்மையும் உண்டாகாது. யாரையும் வெட்கப்படுத்திவிடவேண்டும் என்பது நம்முடைய நோக்கமாயிருக்கக்கூடாது.

### சுவிசேஷத்தினால் பெற்றேன்

**கிறிஸ்துவுக்குள் பதினாயிரம் உபாத்தியாயர்கள் உங்களுக்கு இருந்தாலும் தகப்பன்மார் அநேகர் உங்களுக்கு இல்லையே; கிறிஸ்து இயேசுவுக்குள் சுவிசேஷத்தினால் நான் உங்களைப் பெற்றேன் (1கொரி 4:15).**

கொரிந்துவிலுள்ள விசுவாசிகளுக்கு பவுல் ஆவிக்குரிய தகப்பனாகயிருக்கிறார். அவர்கள் பவுலுக்கு பிள்ளைகளாகயிருக்கிறார்கள். இந்த உறவுக்கான ஆதாரத்தை பவுல் வெளிப்படுத்துகிறார். பவுல் அவர்களை கிறிஸ்து இயேசுவுக்குள் சுவிசேஷத்தினால் பிள்ளைகளாகப் பெற்றிருக்கிறார்.

பவுலின் ஊழியத்தினால் அவர்கள் இரட்சிக்கப்பட்டிருக்கிறார்கள். இப்போது விசுவாசிகளாகிய அவர்கள் பவுலுக்கு ஆவிக்குரிய பிள்ளைகளாகயிருக்கிறார்கள். மறுபடியும் பிறந்திருக்கிறார்கள். அவர்களுடைய புதிய பிறப்புக்கு பவுல் ஒரு கருவியாகப் பயன்படுத்தப்பட்டிருக்கிறார். ஆகையினால் பவுல் கொரிந்துவிலுள்ள விசுவாசிகளைத் தன்னுடைய பிள்ளைகளைப்போலவும், தன்னை அவர்களுடைய ஆவிக்குரிய தகப்பனைப்போலவும் பாவித்து இந்த நிருபத்தில் எழுதுகிறார்.

ஊழியக் காரர்களுக்கும் விசுவாசிகளுக்கும் இடையில் இப்படிப்பட்ட நல்ல ஐக்கியம் காணப்படவேண்டும். ஊழியக்காரர்கள் விசுவாசிகளை கிறிஸ்து இயேசுவுக்குள் சுவிசேஷத்தினால் பெற்றிருக்கிறார்கள். விசுவாசிகள் ஊழியக்காரர்களைத் தங்கள் தகப்பன்மாரைப்போல நேசிக்கவேண்டும். அதுபோலவே ஊழியக்காரர்களும் விசுவாசிகளைத் தங்கள் பிள்ளைகளைப்போல நேசித்து ஆதரிக்கவேண்டும்.

### என்னைப் பின்பற்றுகிறவர்களாகுங்கள்

**ஆகையால், என்னைப் பின்பற்றுகிற வர்களாகுங்களென்று உங்களுக்குப் புத்தி சொல்லுகிறேன் (1கொரி 4:16).**

பவுல் கொரிந்தியருக்கு ஒரு விசேஷித்த புத்திமதியைச் சொல்லுகிறார். "ஆகையால் என்னைப் பின்பற்றுகிறவளாகுங்கள்" என்று அவர்களுக்குப் புத்திசொல்லுகிறார். எல்லா விஷயத்திலும் கொரிந்தியர்கள் பவுலைப் பின்பற்ற வேண்டியதில்லை. எந்த விஷயத்தில் அவர்கள் தன்னைப் பின்பற்றவேண்டும் என்பதையும் பவுல் தெளிவாகச் சொல்லுகிறார். "நான் கிறிஸ்துவைப் பின்பற்றுகிறதுபோல, நீங்கள் என்னைப் பின்பற்றுகிற வர்களாயிருங்கள்" (1கொரி 11:1). இந்த விஷயத்தில் கொரிந்தியர்கள் பவுலைப் பின்பற்றினால் போதுமானது.

பவுல் கிறிஸ்துவை உண்மையாய்ப் பின்பற்றினார். அவருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றி தனக்கு நியமிக்கப்பட்டிருந்த இலக்கை நோக்கி முன்னேறிச் சென்றார். கிறிஸ்து இல்லாமல் கொரிந்தியர்கள் பவுலுக்கு சீஷர்களாக முடியாது. கிறிஸ்துவே பிரதானம். கிறிஸ்து இல்லையென்றால் ஊழியம் இல்லை. ஊழியக்காரரும் இல்லை. விசுவாசிகளும் இல்லை. பவுல் இந்தச் சத்தியத்தை உணர்ந்தவராக, தன்னுடைய ஜீவியத்தில் அவர் கிறிஸ்துவை உண்மையாய்ப் பின்பற்றுகிறார்.

விசுவாசிகள் ஊழியக்காரர்களைப் பின்பற்றுகிறார்கள். இதனால் ஊழியக்காரர்கள் தங்கள் ஆவிக்குரிய ஜீவியத்திலும், பொது வாழ்க்கையிலும் மிகவும் கவனமாயிருக்கவேண்டும். தங்களுடைய பேச்சிலும், செயலிலும் ஊழியக்காரர்கள் கிறிஸ்துவைப் பிரதிபலிக்கவேண்டும். கிறிஸ்துவின் சிந்தையே ஊழியக்காரரிடத்திலும் இருக்கவேண்டும். அப்போதுதான் விசுவாசிகள் ஊழியக்காரரைப் பின்பற்றும்போது, அவர்கள் இயேசுகிறிஸ்துவைப் பின்பற்றுவார்கள்.

தங்கள் மூலமாக இரட்சிக்கப்பட்டவர்கள் தங்களைப்போல ஆகவேண்டுமென்று ஊழியக்காரர்கள் பிரயாசப்படவேண்டும். ஊழியக்காரர்களின் ஜீவியம் அதற்கேற்ற பிரகாரமாக சாட்சியுள்ள ஜீவியமாக இருக்கவேண்டும். தங்களுடைய வார்த்தையினாலும், ஜீவியத்தினாலும், ஊழியக்காரர்கள் விசுவாசிகளை வழிநடத்தவேண்டும். அவர்களுக்கு முன்பாக ஊழியக்காரர்கள் நடந்துசென்று, பரலோகத்திற்குப் போகும் பாதையை அவர்களுக்குக் காண்பிக்கவேண்டும். பரலோகத்திற்குப் போகும்பாதை இதுதான் என்று வார்த்தையினால் சொன்னால் மாத்திரம் போதாது. ஊழியக்காரர்கள் அந்தப் பாதையின் வழியாய் நடந்துசென்று, விசுவாசிகளுக்கு முன்மாதிரியாயிருக்க வேண்டும்.

## தீமோத்தேயு
## 1கொரி 4 : 17-21

**1கொரி 4:17. இதினிமித்தமாக, எனக்குப் பிரியமும், கர்த்தருக்குள் உண்மையுமுள்ள என் குமாரனாகிய தீமோத்தேயுவை உங்களிடத்தில் அனுப்பினேன்; நான் எங்கும் எந்தச் சபையிலும் போதித்துவருகிற பிரகாரம் கிறிஸ்துவுக்குள்ளான என் நடக்கைகளை அவன் உங்களுக்கு ஞாபகப்படுத்துவான்.**

**1கொரி 4:18. நான் உங்களிடத்திற்கு வருகிறதில்லை என்கிறதாகச் சிலர் இறுமாப்படைந்திருக்கிறார்கள்.**

**1கொரி 4:19. ஆகிலும் கர்த்தருக்குச் சித்தமானால் நான் சீக்கிரமாய் உங்களிடத்திற்கு வந்து, இறுமாப்படைந்திருக்கிறவர்களுடைய பேச்சையல்ல, அவர்களுடைய பெலத்தையே அறிந்து கொள்வேன்.**

**1கொரி 4:20. தேவனுடைய ராஜ்யம் பேச்சிலே அல்ல, பெலத்திலே உண்டாயிருக்கிறது.**

**1கொரி 4:21. உங்களுக்கு என்னவேண்டும்? நான் பிரம்போடு உங்களிடத்தில் வர வேண்டுமோ? அல்லது அன்போடும் சாந்தமுள்ள ஆவியோடும் வரவேண்டுமோ?**

## ஞாபகப்படுத்துவான்

**இதினிமித்தமாக, எனக்குப் பிரியமும், கர்த்தருக்குள் உண்மையுமுள்ள என் குமாரனாகிய தீமோத்தேயுவை உங்களிடத்தில் அனுப்பினேன்; நான் எங்கும் எந்தச் சபையிலும் போதித்துவருகிறபிரகாரம் கிறிஸ்துவுக்குள்ளான என் நடக்கைகளை அவன் உங்களுக்கு ஞாபகப்படுத்துவான் (1கொரி 4:17).**

பவுல் கொரிந்தியர் மத்தியில் தீமோத்தேயுவை அனுப்புகிறார். அவரை அனுப்புவதற்கான காரணத்தையும் பவுல் இங்கு குறிப்பிடுகிறார். தான் எங்கும், எந்த சபையிலும் போதித்து வருகிற பிரகாரம் கிறிஸ்துவுக்குள்ளான தன் நடக்கைகளை தீமோத்தேயு அவர்களுக்கு ஞாபகப்படுத்துவார். விசுவாசிகள் எவ்வளவுதான் நல்ல உபதேசங்களை கேட்டிருந்தாலும் அதை அவர்கள் மறந்துவிடுவதற்கு வாய்ப்புள்ளது. ஆகையினால் ஏற்கெனவே சொல்லப்பட்ட உபதேசத்தை அடிக்கடி அவர்களுக்கு ஞாபகப்படுத்தவேண்டும்.

பவுலின் உபதேசம் ஒன்றுபோலிருக்கிறது. அவர் ஓரிடத்தில் ஒரு மாதிரியாகவும், வேறொரு இடத்தில் வேறொரு மாதிரியாகவும் போதிக்கவில்லை. ஒரு சபையில் ஒரு உபதேசத்தையும் வேறொரு சபையில் வேறொரு உபதேசத்தையும் பவுல் போதிக்கவில்லை. அவர் எங்கும், எந்த சபையிலும் ஒரே சத்தியத்தையே போதித்து வருகிறார். தான் உபதேசித்த சத்தியத்தின் பிரகாரம் எல்லா வேளையிலும், எல்லா இடங்களிலும் சாட்சியாய் ஜீவித்தும் வருகிறார்.

கிறிஸ்துவின் சத்தியம் ஒன்றுதான். அது ஒருபோதும் மாறுவதில்லை. ஒரு அப்போஸ்தலர், ஒரு காலத்தில், ஒரு இடத்தில் கிறிஸ்துவின் சத்தியத்தை எப்படி போதித்தாரோ, அப்படியே மற்ற அப்போஸ்தலர்களும், தங்களுடைய காலங்களில், தங்களுடைய ஊழியஸ்தலங்களில் போதித்து வருகிறார்கள். அப்போஸ்தலர் உபதேசித்த அதே உபதேசத்தை, பவுல் எல்லா சபைகளிலும், தன் ஊழியகாலம் முழுவதிலும் போதித்து வருகிறார்.

பவுல் கொரிந்தியர் மத்தியில் தீமோத்தேயுவை அனுப்புகிறார். தீமோத்தேயுவின் குணாதிசயத்தைப்பற்றிச் சொல்லும்போது, அவரைத் தன்னுடைய பிரியமான குமாரன் என்று குறிப்பிடுகிறார். தீமோத்தேயு பவுலுக்கு ஆவிக்குரிய குமாரனாயிருக்கிறார். அவனைப் போலவே கொரிந்துவிலுள்ள விசுவாசிகளெல்லோரும், பவுலுக்கு ஆவிக்குரிய பிள்ளைகளாகவே இருக்கிறார்கள்.

ஒரே தகப்பனுடைய பிள்ளைகளிடத்தில் ஒரே மாதிரியான இருதயம் இருக்கவேண்டும். தீமோத்தேயு கர்த்தருக்குள் உண்மையுள்ளவனாக இருக்கிறார். நம்பிக்கைக்குப் பாத்திரமானவர். கர்த்தருக்குப் பயப்படுகிறவர். எல்லா ஊழியக்காரர்களும் தீமோத்தேயுவைப்போல நற்சாட்சி பெற்றிருக்கவேண்டும். ஊழியக்காரர்களெல்லோரும் கர்த்தருக்குள் உண்மையுள்ளவர்களாயிருப்பது மிகவும் அவசியம். நாம் உண்மையுள்ளவர்களாக இருந்தால்தான் நம்முடைய பிரசங்கச் செய்தியில் ஜீவன் இருக்கும். உண்மையிருக்கும் இடத்தில்தான் ஆவியானவர் கிரியை நடப்பிப்பார். சத்தியத்தைப் பிரசங்கிக்கிறவர்களுடைய ஜீவியத்திலும் சத்தியம் இருக்கவேண்டும்.

## தேவனுடைய ராஜ்யம்

**நான் உங்களிடத்திற்கு வருகிறதில்லை என்கிறதாகச் சிலர் இறுமாப்படைந்திருக்கிறார்கள். ஆகிலும் கர்த்தருக்குச் சித்தமானால் நான் சீக்கிரமாய் உங்களிடத்திற்கு வந்து, இறுமாப்படைந்திருக்கிறவர்களுடைய பேச்சையல்ல, அவர்களுடைய பெலத்தையே அறிந்து கொள்வேன். தேவனுடைய ராஜ்யம் பேச்சிலே அல்ல, பெலத்திலே உண்டாயிருக்கிறது (1கொரி 4:18-20).**

பவுல் கொரிந்தியர் மத்தியில் மறுபடியும் வரமாட்டார் என்று ஒரு சிலர் நினைத்துக்கொண்டிருக்கிறார்கள். இந்தச் சிந்தனையினால் அவர்கள் இறுமாப்படைந்திருக்கிறார்கள். அவர்களைக் கடிந்துகொள்ளும் விதமாக, "நான் சீக்கிரமாய் உங்களிடத்திற்கு வருவேன்" என்று பவுல் சொல்லுகிறார். தன்னுடைய வருகையைப்பற்றிச் சொல்லும்போது, "கர்த்தருக்குச் சித்தமானால்" என்னும் வார்த்தையையும் பயன்படுத்துகிறார். கர்த்தருக்குச் சித்தமான காரியம் மாத்திரமே வாய்க்கும். தேவனுடைய சித்தத்தின் பிரகாரமாகவே நாம் திட்டமிடவேண்டும், செயல்படவேண்டும். தேவன் கொடுக்கிற பராமரிப்பின் பிரகாரமாகவே நம்முடைய நோக்கங்களெல்லாம் நிறைவேறும். நம்முடைய திட்டங்களைப்பற்றிச் சிந்திக்கும்போதும், பிறரிடத்தில் சொல்லும்போதும், "கர்த்தருக்குச் சித்தமானால்" என்னும் வாக்கியத்தையும் சேர்த்தே சொல்லிப் பழகிக்கொள்ளவேண்டும்.

பவுல் கொரிந்தியர் மத்தியில் வரும்போது அங்கு என்ன நடைபெறும் என்பதையும் அவர்களுக்கு எடுத்துச்சொல்லுகிறார். அவர் அங்கு வந்து, இறுமாப்படைந்திருக்கிற வர்களுடைய பேச்சையல்ல, அவர்களுடைய பெலத்தையே அறிந்துகொள்வார். பவுல் அவர்களைச் சோதித்துப் பார்ப்பார். மாய்மாலக்காரரைச் சோதித்து அவர்களுடைய மாய்மாலத்தை வெளிப்படுத்துவார்.

கொரிந்தியரில் சிலர் கள்ளப்போதகர்களாக இருக்கிறார்கள். துர்உபதேசம்பண்ணுகிறார்கள். தாங்கள் கள்ளஉபதேசத்தைச் சொன்னாலும், இதைச் சொல்லுவதற்கு தெய்வீக அதிகாரமும், தெய்வீக அங்கீகாரமும் இருப்பதாகவும் சொல்லுகிறார்கள். பவுல் அங்கு வந்து, அவர்களுடைய உபதேசத்தைச் சோதித்துப் பார்ப்பார். அதில் தெய்வீக அதிகாரமும், தெய்வீக அங்கீகாரமும் இருக்கிறதா என்பதை சோதித்துப் பார்த்து அதன் உண்மை நிலையை கொரிந்தியருக்கு வெளிப்படுத்திக் காண்பிப்பார்.

மனுஷர் மத்தியில் அவர்களுடைய உபதேசம் ஆத்தும இரட்சிப்பை உண்டுபண்ணக்கூடியதா என்பதையும் பவுல் சோதித்துப் பார்ப்பார். ஏனென்றால் தேவனுடைய ராஜ்யம் பேச்சிலே அல்ல பெலத்திலே உண்டாயிருக்கிறது. தெய்வீக சத்தியம் மனுஷருடைய மனதில் பதியும். அது அவர்களுடைய பேச்சிலும் செயலிலும், சுபாவத்திலும் வெளிப்படும்.

ஊழியக்காரருடைய உபதேசத்தை நாம் எளிதாகச் சோதித்துப் பார்க்கலாம். அதைக் கேட்போரின் இருதயத்தில் தெய்வீக வல்லமை கிரியை நடப்பிக்கிறதா என்பதை ஆராய்ந்து பார்க்கவேண்டும். மனுஷருடைய இருதயங்களில் மாற்றமுண்டாயிருக்கிறதா என்பதையும் ஆராய்ந்து பார்க்கவேண்டும். அவர்களுடைய உபதேசம் மெய்யாகவே தேவனுடைய உபதேசமா என்பதை நிதானித்துப் பார்க்கவேண்டும். தேவனிடத்திலிருந்து வருகிற உபதேசம் தெய்வீக உபதேசமாகவே இருக்கும். அது மனுஷருடைய ஆத்துமாவை இரட்சிப்புக்கு நேராக வழிநடத்தும். அது மனுஷருடைய இருதயத்தில் கிரியை செய்யும். மனுஷருடைய சுபாவமும் சாயலும் மாறும். அது தேவசாயலுக்கு ஏற்றாற்போல் மாற்றடையும். அப்போதுதான் அது தேவனிடத்திலிருந்து வந்திருக்கிற தெய்வீக உபதேசமென்று நிரூபிக்கப்படும்.

**அன்போடும் சாந்தமுள்ள ஆவியோடும்**

**உங்களுக்கு என்னவேண்டும்? நான் பிரம்போடு உங்களிடத்தில் வர வேண்டுமோ? அல்லது அன்போடும் சாந்தமுள்ள ஆவியோடும் வரவேண்டுமோ? (1கொரி 4:21)**

கர்த்தருக்குச் சித்தமானால் தான் சீக்கிரமாய் கொரிந்தியரிடத்திற்கு வருவதாகப் பவுல் சொல்லுகிறார். தான் அவர்களிடத்திற்கு எப்படி வரவேண்டும் என்பதையும் அவர்களிடத்தில் கேட்கிறார். "நான் பிரம்போடு உங்களிடத்தில் வரவேண்டுமோ? அல்லது அன்போடும் சாந்தமுள்ள ஆவியோடும் வரவேண்டுமோ" என்று பவுல் குறிப்பிட்டுக் கேட்கிறார். பவுலை அவர்கள் எப்படி பார்க்கவிரும்புகிறார்கள் என்பதே இந்தக் கேள்வியின் பொருள். பவுலை அன்பு நிறைந்தவராகப் பார்க்க விரும்புகிறார்களா அல்லது கண்டிப்பு நிறைந்தவராக பார்க்க விரும்புகிறார்களா என்பதை அவர்களே தீர்மானம் செய்துகொள்ளவேண்டும்.

துணிகரமாய்ப் பாவம் செய்கிறவர்களை கண்டித்து உணர்த்தவேண்டும். அவர்களிடத்தில் அன்பான, மென்மையான வார்த்தைகளைப் பேசுவதற்குப் பதில், கடினமான வார்த்தைகளைக் கண்டிப்புடன் பேசவேண்டும். நம்முடைய குடும்பங்களிலும், ஆவிக்குரிய ஐக்கியங்களிலும் அன்புக்கும், பாசத்திற்கும் நாம் அதிகமாய் இடங்கொடுக்கவேண்டும். அதே வேளையில் நாம் பிரம்பைக் கையாட வேண்டியதிருந்தாலும், கர்த்தருடைய நாமமகிமைக்காகவும், நம்முடைய பிள்ளைகளின் பிரயோஜனத்திற்காகவும், விசுவாசிகளின் ஆவிக்குரிய நன்மைக்காகவும், பிரம்பைக் கையாடுவதில் தயக்கம் காண்பிக்கக்கூடாது.

பிரம்பைக் கையாடவேண்டுமென்று விசுவாசிகளும் விரும்பக்கூடாது. ஊழியக்காரரும் விரும்பக்கூடாது. பிரம்பு தவிர்க்கப்பட வேண்டிய ஒரு ஆயுதம். நம்முடைய ஆவிக்குரிய சுபாவம் பிரம்பைக் கையாடுவதைத் தேவையற்றதாக்க வேண்டும். ஆனாலும் விசுவாசிகள் மத்தியில் கீழ்ப்படியாமையும், துன்மார்க்கமும், துணிகரமான பாவங்களும் நிறைந்திருக்கும்போது பிரம்பைக் கையாடவேண்டிய அவசியம் உண்டாகிறது.

பவுல் கொரிந்தியரிடத்தில் பிரம்போடுதான் வரவேண்டுமென்று தீர்மானம்பண்ணவில்லை. தான் எப்படி வரவேண்டுமென்று அவர்களிடத்திலேயே கேட்கிறார். அன்போடும், சாந்தமுள்ள ஆவியோடும் அவர்களிடத்தில் வருவதற்கும் பவுல் ஆயத்தமாயிருக்கிறார். பவுலின் எச்சரிப்பு வார்த்தைகளைக் கேட்டு கொரிந்தியர் மனந்திரும்பினால், பவுல் அவர்களிடத்தில் அன்போடும் சாந்தமுள்ள ஆவியோடும் வருவார். அவர்கள் மனந்திரும்பாமல் தொடர்ந்து துணிகரமான பாவங்களைச் செய்து வந்தால், அவர்களிடத்திற்கு பிரம்போடுதான் வருவார்.

தன்னுடைய அப்போஸ்தல அதிகாரத்தைக் காண்பிப்பதற்காக, பவுல் பிரம்போடு அவர்களிடத்தில் வரவேண்டுமென்று விரும்பவில்லை. அவர்கள் தன்னுடைய உபதேசத்தை ஏற்றுக்கொள்ள மனதாயிருந்தால் அன்போடும் சாந்தமுள்ள ஆவியோடும் தான் அவர்கள் மத்தியில் வரவேண்டுமென்று விரும்புகிறார். ஆனால் அவர்களுடைய இருதயம் தொடர்ந்து கடினமாயிருக்கும்போது, அவர்களைத் துன்மார்க்கத்தில் விட்டுவிடுவதற்குப் பதிலாக, பிரம்போடு வந்து, அவர்களை திருத்தவேண்டுமென்று பவுல் தீர்மானம்பண்ணுகிறார்.

கர்த்தருடைய ஊழியக்காரர்கள் அன்பின் ஆவியோடும், தாழ்மையோடும் ஊழியம் செய்யவேண்டும். அதே வேளையில் ஊழியக்காரர்கள் தங்களுடைய அப்போஸ்தல அதிகாரத்தை நீதியாய் நிலைநிறுத்தவும் வேண்டும்.

## 5 அதிகாரம்

கொரிந்து சபையில் விபசாரம் பண்ணுகிறவன் ஒருவன் இருக்கிறான். சபையார் அவனை சபையைவிட்டு நீக்கிவிடாமல் இன்னும் தங்களோடு வைத்திருக்கிறார்கள். பவுல் அவர்களுடைய செயலைக் கண்டிக்கிறார் (1கொரி 5:1-6). விசுவாசிகள் பரிசுத்தமாயிருக்கவேண்டும். புளித்த மாவை புறம்பே களித்துப்போடவேண்டும் (1கொரி 5:7,8). விபசாரக்காரரோடு கலந்திருக்கக்கூடாது (1கொரி 5:9-13).

### புளித்தமா
### 1கொரி 5 : 1-6

**1கொரி 5:1. உங்களுக்குள்ளே விபசாரம் உண்டென்று பிரசித்தமாய்ச் சொல்லப்படுகிறதே; ஒருவன் தன் தகப்பனுடைய மனைவியை வைத்துக்கொண்டிருக்கிறானே; அது அஞ்ஞானிகளுக்குள்ளும் சொல்லப் படாத விபசாரமாயிருக்கிறதே.**

**1கொரி 5:2. இப்படிப்பட்ட காரியஞ்செய்தவனை நீங்கள் உங்களைவிட்டு நீக்காமலும் துக்கப்படாமலும், இறுமாப் படைந்திருக்கிறீர்கள்.**

**1கொரி 5:3. நான் சரீரத்தினாலே உங்களுக்குத் தூரமாயிருந்தும், ஆவியினாலே உங்களோடே கூட இருக்கிறவனாய், இப்படிச் செய்தவனைக் குறித்து நான் கூட இருக்கிறது போல,**

**1கொரி 5:4. நீங்களும், என்னுடைய ஆவியும், நமது கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் அதிகாரத்தோடே கூடிவந்திருக்கையில்,**

**1கொரி 5:5. அப்படிப்பட்டவனுடைய ஆவி கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாளிலே இரட்சிக்கப்படும்படி, மாம்சத்தின் அழிவுக்காக, நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே அவனைச் சாத்தானுக்கு ஒப்புக்கொடுக்க வேண்டுமென்று தீர்ப்புச் செய்கிறேன்.**

**1கொரி 5:6. நீங்களும் மேன்மை பாராட்டுகிறது நல்லதல்ல; கொஞ்சம் புளித்தமா பிசைந்த மா முழுவதையும் புளிப்பாக்குமென்று அறியீர்களா?**

### விபசாரம்

**உங்களுக்குள்ளே விபசாரம் உண்டென்று பிரசித்தமாய்ச் சொல்லப்படுகிறதே; ஒருவன் தன் தகப்பனுடைய மனைவியை வைத்துக்கொண்டிருக்கிறானே; அது அஞ்ஞானிகளுக்குள்ளும் சொல்லப் படாத விபசாரமாயிருக்கிறதே (1கொரி 5:1).**

கொரிந்து சபை விசுவாசிகளில் ஒருவன் விபசாரம்பண்ணுகிற பாவத்தைச் செய்கிறான். இந்தப் பாவம் எல்லா இடங்களிலும் தெரிந்திருக்கிறது. இதனால் அவர்களுக்கு அவமானம் உண்டாயிற்று. விசுவாசிகள் மத்தியில் எந்தப் பாவம் காணப்பட்டாலும் அது உடனே வெளியே தெரிந்துவிடும். உலகப்பிரகாரமான ஜனங்கள் விசுவாசிகளைக் கவனமாய்க் கவனித்துக்கொண்டிருக்கி றார்கள். விசுவாசிகளிடத்தில் காணப்படுகிற பாவத்தைக் கண்டுபிடித்து, அதை உடனே எல்லோருக்கும் அறிவித்துவிடுவார்கள். ஆகையினால் கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் மிகவும் கவனமாய் ஜீவிக்கவேண்டும். நாம் யாருக்கும் மறைவாயில்லை. ஏராளமான கண்கள் நம்மை நோக்கிப் பார்த்துக் கொண்டிருக்கிறது.

கொரிந்து சபையில் விபசாரம் பண்ணுகிற பாவத்தைச் செய்கிறவன் பெரிய அநியாயக்காரனாகயிருக்கிறான். அவன் அஞ்ஞானிகளுக்குள்ளும், புறஜாதிகளுக்குள்ளும் சொல்லப்படாத பாவத்தைச் செய்கிறான். அவன் தன்னுடைய தகப்பனுடைய மனைவியை வைத்துக் கொண்டிருக்கிறான். இப்படிப்பட்ட விபசார பாவத்தைப் புறஜாதியார்கூட செய்யத் தயங்குவார்கள். ஆனால் கொரிந்து சபையிலுள்ள விசுவாசி ஒருவன் இப்படிப்பட்ட பாவத்தைச் செய்கிறான். சபையாரும் அவனை சபையை விட்டு நீக்கிவிடாமல் தங்களோடு இன்னும் சேர்த்து வைத்திருக்கிறார்கள்.

புறஜாதியார் இஸ்ரவேலின் காணியாட்சிக்குப் புறம்பானவர்கள். அவர்களுக்கு கர்த்தருடைய பரிசுத்தம் என்றால் என்ன என்று தெரியாது. பரிசுத்தமாய் ஜீவிக்கவேண்டும் என்னும் அக்கரையும் அவர்களுக்கு இல்லை. அப்படிப்பட்டவர்கள்கூட, யாரும் தங்கள் தகப்பனுடைய மனைவியை திருமணம் செய்து கொள்ளமாட்டார்கள். இப்படிப்பட்ட திருமண உறவு புறஜாதியார் மத்தியிலும் தடைபண்ணப்பட்டிருக்கிறது. புறஜாதியாரும் இந்தப் பாவத்தை அருவருப்பார்கள். ஆனால் கொரிந்து சபையிலுள்ள ஒருவன், புறஜாதியாரும் அருவருக்கிற பாவத்தை துணிகரமாகச் செய்திருக்கிறான்.

இக்காலத்தில்கூட நம்முடைய சபைகள் நல்ல சபைகளாக இருக்கலாம். பெரிய சபைகளாக இருக்கலாம். ஆவிக்குரிய காரியங்களில் உற்சாகமுள்ளதாக இருக்கலாம். ஆனாலும் இப்படிப்பட்ட சபைகளிலும் பரிசுத்த குறைவு இருப்பதற்கு வாய்ப்புள்ளது. கொரிந்து சபையில் காணப்பட்டதுபோல துணிகரமான பாவத்தைச் செய்கிறவர்களும் நம்முடைய சபைகளில் இருப்பதற்கு வாய்ப்புள்ளது. கர்த்தர் நல்லவர். சபையும் நல்லது. அதுபோலவே விசுவாசிகளும் நல்லவர்களாக இருக்கவேண்டும். தங்கள் நற்சாட்சியைக் காத்துக்கொள்ளவேண்டும்.

## இறுமாப்படைந்திருக்கிறீர்கள்

**இப்படிப்பட்ட காரியஞ் செய்தவனை நீங்கள் உங்களைவிட்டு நீக்காமலும் துக்கப்படாமலும், இறுமாப் படைந்திருக்கிறீர்கள் (1கொரி 5:2).**

கொரிந்து சபையில் ஒருவன் மோசமான விபசார பாவத்தில் ஈடுபட்டிருக்கிறான். சபையார் அவனை தங்கள் ஐக்கியத்தைவிட்டு நீக்கிவிடவில்லை. அவனை நீக்குவதற்குப் பதிலாக சபையார் தங்கள் இருதயத்தில் இறுமாப்படைந்திருக்கிறார்கள். பெருமை பாராட்டுகிறார்கள் (1கொரி 5:6). ஒருவேளை தன் தகப்பனுடைய மனைவியை வைத்துக்கொண்டிருக்கிற இந்த மனுஷன் சமுதாயத்தில் பிரபல்யமானவனாக இருக்கலாம். எல்லாருக்கும் மேலாக முக்கியமானவனாக இருக்கலாம். மிகப்பெரிய ஐசுவரியவானாகக்கூட இருக்கலாம். இப்படிப்பட்டவன் விபசாரம் பாவம் செய்து தன் ஆவிக்குரிய ஜீவியத்தில் விழுந்துவிடுகிறான்.

சபையார் இவனுடைய வீழ்ச்சிக்காக துக்கப்படவேண்டும். இவனைக் கண்டித்து உணர்த்தவேண்டும். இவனுக்கு ஆவிக்குரிய புத்திமதிகளைச் சொல்ல வேண்டும். ஆனால் சபையாரோ விழுந்துபோன மனுஷனுக்கு ஆவிக்குரிய ரீதியாக எந்தவித உதவியும் செய்யவில்லை. அதற்குப் பதிலாக அந்த மனுஷனைக்குறித்து சபையார் தங்கள் இருதயங்களில் இறுமாப்படைந்திருக்கிறார்கள். அவனைப் புகழ்ந்து பேசுகிறார்கள். அவனைக் குறித்து மேன்மை பாராட்டுகிறார்கள்.

இறுமாப்பும் பெருமையும் நம்மை அழிவுக்கு நேராக வழிநடத்தும். நாம் எல்லோருக்கும் முக்கியத்துவம் கொடுக்கவேண்டும். எல்லோரையும் மதிக்கவேண்டும். சில சமயங்களில் நம்முடைய இருதயத்தில் இறுமாப்பும் சுயபெருமையும் நிறைந்திருக்கும்.

இவை வரும்போது பிறருக்கு நாம் மதிப்பு கொடுக்கமாட்டோம். நம்மை நாமே உயர்வாக நினைப்போம். மற்றவர்களை ஏளனம் பண்ணுவோம்.

ஒரு சிலர் மற்றவர்களை அதிகமாய்ப் புகழுவார்கள். அதிகமாய்ப் போற்றுவார்கள். அவர்களுக்குக் கொடுக்கவேண்டிய மரியாதையைவிட அதிக மரியாதையைக் கொடுப்பார்கள். அவர்கள் தங்களோடு பழகுவது தங்களுக்கு பெருமை என்று நினைப்பார்கள். அவர்களைக்குறித்து இவர்கள் இறுமாப்படைந்திருப்பார்கள். அவர்கள் பாவம் செய்தாலும், அவர்களுடைய பாவம் இவர்களுடைய கண்களுக்குத் தெரியாது. சில சமயங்களில் அவர்களுடைய பாவங்களுக்கு தாங்களே காரணமென்று பரிதாபப்படுவார்கள்.

சில சமயங்களில் துன்மார்க்கர் தங்கள் இருதயங்களில் இறுமாப்போடிருப்பார்கள். தாங்கள் என்ன செய்தாலும் தங்களைத் தட்டிக்கேட்பதற்கு ஒருவருமில்லை என்று ஆணவத்தோடிருப்பார்கள். பக்திவானும் பரிசுத்தவானும் ஒருவனும் கிடையாது என்று சொல்லி, தன்னைப்போலவே மற்றவர்களும் பாவிகளென்று தீர்மானம் பண்ணிவிடுவார்கள். பாவிகள் மனந்திரும்பவேண்டும். தங்கள் பாவங்களைக்குறித்து வருத்தப்பட வேண்டும். துக்கப்படவேண்டும். இருதயத்தில் இறுமாப்பு இருக்கக்கூடாது.

மற்றவர்கள் பாவம் செய்யும்போது நாம் இறுமாப்பாகயிருப்பது மிகப்பெரிய பாவம். பாவம் செய்கிறவர்களைக் கண்டித்து உணர்த்தாமல், அவர்களைக் குறித்து மேன்மை பாராட்டுவது அநியாயம். கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் பரிசுத்தத்தை நேசிக்கவேண்டும். பாவத்தை வெறுக்கவேண்டும். இதில் குழப்பம் உண்டானால் சபையில் குழப்பம் வந்துவிடும். குழப்பம் வந்தால் பிரிவினையும் வந்துவிடும்.

விசுவாசிகள் மத்தியில் குழப்பமும் பிரிவினையும் இருக்கும்போது, அது பாவிகளுக்கு சாதகமாகயிருக்கும். பாவிகளின் பாவங்களைக் குறித்து நாம் மேன்மை பாராட்டினால் அவர்கள் மனந்திரும்புவதற்கு வாய்ப்பேயில்லை. ஆகையினால் மற்றவர்களுடைய பாவங்கள் நமக்குத் துக்கமாயிருக்க வேண்டும்.

## சாத்தானுக்கு ஒப்புக்கொடுக்க வேண்டும்

**நான் சரீரத்தினாலே உங்களுக்குத் தூரமாயிருந்தும், ஆவியினாலே உங்களோடே கூட இருக்கிறவனாய், இப்படிச் செய்தவனைக் குறித்து நான் கூட இருக்கிறது போல, நீங்களும், என்னுடைய ஆவியும், நமது கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் அதிகாரத்தோடே கூடிவந்திருக்கையில், அப்படிப்பட்டவனுடைய ஆவி கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாளிலே இரட்சிக்கப்படும்படி, மாம்சத்தின் அழிவுக்காக, நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே அவனைச் சாத்தானுக்கு ஒப்புக்கொடுக்க வேண்டுமென்று தீர்ப்புச் செய்கிறேன் (1கொரி 5:3-5).**

பாவம் செய்கிறவனை என்ன செய்யவேண்டுமென்று பவுல் இங்கு ஆலோசனை சொல்லுகிறார். விசுவாசிகள் பாவம் செய்கிறவனை தங்கள் ஐக்கியத்தைவிட்டு நீக்கிப்போடவேண்டும். அத்துடன் அவனை இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே சாத்தானுக்கு ஒப்புக்கொடுத்துவிடவேண்டும்.

பவுல் இப்போது சரீரத்தினாலே கொரிந்து சபையிலுள்ள விசுவாசிகளுக்கு தூரமாயிருக்கிறார். ஆனாலும் அவர் தன்னுடைய ஆவியினாலே அவர்களோடே கூடயிருக்கிறார். பவுல் தூரமிருந்தாலும் நீதியாய்த் தீர்ப்புச்செய்கிறார்.

அவர் தூரயிருப்பதினால் அநியாயமாய்த் தீர்ப்பு செய்கிறாரென்றோ, அல்லது உண்மை நிலமையை தீர விசாரியாமல் அவசரப்பட்டு ஏனோதானோ வென்று தீர்ப்பு செய்கிறாரென்றோ, அவர்மீது யாரும் குற்றம் சொல்லமுடியாது.

கொரிந்து சபையார் மத்தியில் விபசாரம் செய்தவனைப்பற்றி பவுல் சொல்லும்போது, "இப்படிப்பட்ட காரியஞ் செய்தவன்" என்று குறிப்பிடுகிறார். இவன் துணிகரமாக இந்தப் பாவத்தைச் செய்திருக்கிறான். இவனுடைய பாவம் அநேகருக்கு வெளியரங்கமாய்த் தெரிந்திருக்கிறது. பாவம் செய்தவனை கண்டித்து உணர்த்தவேண்டும். அவனுடைய குற்றத்தை அவனுக்குப் புரியவைக்கவேண்டும். அவனுடைய பாவத்தைப்பற்றி அவனுக்குச் சொன்னால் மாத்திரம் போதாது, அவனுக்குக் கிடைக்கப்போகிற தண்டனையைப்பற்றியும் சொல்லவேண்டும்.

இப்படிப்பட்ட காரியம் செய்தவனை சாத்தானுக்கு ஒப்புக்கொடுக்க வேண்டுமென்று பவுல் தீர்ப்பு செய்கிறார். இதைச் சொல்லும்போது "நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே" இப்படிச் செய்யவேண்டும் என்றும் சொல்லுகிறார். யாருக்கும் தெரியாமல் இரகசியமாக இவனை சாத்தானுக்கு ஒப்புக்கொடுக்கக்கூடாது. சபையாரெல் லோருக்கும் நடுவில், அப்போஸ்தல ரெல்லோரும் தங்கள் ஆவியினாலே அவர்களோடு கூடயிருக்கையில், இப்படிப்பட்ட காரியம் செய்தவனை சாத்தானுக்கு ஒப்புக் கொடுக்கவேண்டும் என்று பவுல் சொல்லுகிறார்.

"சாத்தானுக்கு ஒப்புக் கொடுக்க வேண்டும்" என்று பவுல்சொல்லுவதை வேதபண்டிதர்கள் பலவிதமாக வியாக்கியானம் பண்ணுகிறார்கள். சபையின் ஐக்கியத்திலிருந்து பாவம் செய்தவனை விலக்கி வைப்பதுதான் சாத்தானுக்கு ஒப்புக்கொடுப்பது என்று ஒரு சிலர் வியாக்கியானம் சொல்லுகிறார்கள்.

அவனை சபையை விட்டு வெளியேற்றிவிட்டால், அவன் மனந்திரும்பு வான் என்றும், அவனுடைய மாம்சமான சிந்தனைகள் மரித்துப்போகும் என்று ஒரு சிலர் வியாக்கியானம் சொல்லுகிறார்கள்.

ஒருவன் தன்னை கிறிஸ்துவின் விசுவாசி என்று சொல்லிக்கொண்டு, அவன் பாவத்தில் ஜீவிக்கிறவனா யிருந்தால், அவன் இரண்டு எஜமானுக்கு ஊழியம் செய்கிறான். அவன் கிறிஸ்துவை விசுவாசிப்பதினால் கிறிஸ்துவையும் தன்னுடைய எஜமானாக நினைக்கிறான். அவன் பாவத்தில் ஜீவிப்பதினால் சாத்தானையும் தன்னுடைய எஜமானாக நினைக்கிறான். இப்படிப்பட்டவனை சபையிலிருந்து வெளியேற்றி சாத்தானுக்கு ஒப்புக்கொடுத்து விடவேண்டும்.

இதைச் செய்யும்போது கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினால் செய்யவேண்டும். அவனுக்கு இதுவரையிலும் இயேசுகிறிஸ்துவும், சாத்தானும் ஆக இரண்டு எஜமான்கள் இருந்தார்கள். இனிமேல் அவனுக்கு சாத்தான் மாத்திரமே எஜமானாக இருக்கட்டும் என்று தீர்ப்பு செய்து, அவனைச் சாத்தானுக்கே ஒப்புக்கொடுத்துவிடவேண்டும். இதை இயேசுவின் நாமத்தினால் செய்யவேண்டும்.

இப்படிப்பட்ட காரியம் செய்தவனை சபையைவிட்டு வெளியேற்றும்போது மறைவாகவோ, இரகசியமாகவோ செய்யக்கூடாது. எல்லோரும் கூடிவந்திருக்கும்போது, எல்லோருக்கும் முன்பாக, இப்படிப்பட்டவனை, சபையின் ஐக்கியத்திலிருந்து நீக்கிப்போடவேண்டும். சபையில் எல்லோரும் கூடிவந்திருக்கும் போது, அங்கு தேவனுடைய பரிசுத்த பிரசன்னம் அதிகமாய் நிறைந்திருக்கும். எல்லோருக்கும் முன்பாக இப்படிப்பட்ட காரியம் செய்தவனை, சபையின் ஐக்கியத்திலிருந்து நீக்கிப்போடும்போது, இந்தச் செய்கைக்கு முழுசபையும் அங்கீகாரம் கொடுக்கிறது.

எல்லோருமாகச் சேர்ந்து தன்னை தங்கள் ஐக்கியத்திலிருந்து நீக்கிப்போடுவதினால், இப்படிப்பட்ட பாவமான காரியம் செய்தவனுடைய இருதயத்தில் நல்ல மாற்றமுண்டாகும். அவன் மனந்திரும்பி இரட்சிக்கப்படுவதற்கு நல்ல வாய்ப்புக்கள் கிடைக்கும்.

இப்படிப்பட்ட காரியம் செய்தவனை சாத்தானுக்கு ஒப்புக்கொடுக்கவேண்டுமென்று பவுல் சொல்லும்போது, அவனை சபையின் ஐக்கியத்திலிருந்து நீக்கிப் போடுவதை மாத்திரமல்ல, அத்துடன் வேறு சில காரியங்களையும் தன்னுடைய மனதில் வைத்து இதைச் சொல்லுகிறார் என்று வேதபண்டிதர்களில் வேறு சிலர் கருத்து சொல்லுகிறார்கள். சபையாரெல்லோரும் கூடிவந்திருக்கும்போது அவர்களிடத்தில் ஆவிக்குரிய அதிகாரமுள்ளது. பரிசுத்த ஆவியானவர் சபைக்கு அற்புத வல்லமையைக் கொடுத்திருக்கிறார். இப்படிப்பட்ட காரியம் செய்தவனை சபையார் சாத்தானுக்கு ஒப்புக்கொடுக்கும் போது, அவர்கள் தங்களிடத்திலுள்ள அற்புதமான வல்லமையினால், அவனை சாத்தானுடைய வல்லமைக்கு ஒப்புக் கொடுக்கிறார்கள். பவுல் இதையே மாம்சத்தின் அழிவுக்காக ஒப்புக்கொடுப்பது என்று சொல்லுகிறார்.

மாம்சம் அழியும்போதுதான் ஆவி இரட்சிக்கப்படும். ஆவி இரட்சிக்கப்படுவதற்காக மாம்சம் அழிந்துபோவது நல்லதுதான். இவனுடைய ஆவி கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாளிலே இரட்சிக்கப்படவேண்டும். அதற்காக இவனுடைய மாம்சம் அழிய வேண்டும். இதற்காகவே இவனை சாத்தானுக்கு ஒப்புக்கொடுக்கவேண்டுமென்று பவுல் தீர்ப்பு சொல்லுகிறார்.

## மேன்மை பாராட்டுகிறது

**நீங்களும் மேன்மை பாராட்டுகிறது நல்லதல்ல; கொஞ்சம் புளித்தமா பிசைந்த மா முழுவதையும் புளிப்பாக்குமென்று அறியீர்களா? (1கொரி 5:6)**

சபையில் ஒருவர் உயர்ந்த அந்தஸ்துள்ளவராகவும், ஐசுவரியவானாகவும், பிரபலஸ்தராகவும் இருக்கும்போது, அவருடைய ஒவ்வொரு பேச்சும், ஒவ்வொரு செய்கையும் சபையாரெல்லோருக்கும் தெரியவரும். அவருடைய சுபாவம் சபையார் எல்லாருடைய மத்தியிலும் மிகவும் சீக்கிரத்தில் பரவும். அவருடைய செல்வாக்கு அதிகமாயிருப்பதினால் அவருடைய சுபாவம் விரிந்தும், வேகமாயும் பரவும். ஆகையினால் இப்படிப்பட்டவர்கள் மிகவும் எச்சரிக்கையோடு ஜீவிக்கவேண்டும். சபையாரும் இவர்களுடைய உலகப்பிரகாரமான மேன்மைகளை நினைத்து மேன்மை பாராட்டக்கூடாது. அது நல்லதல்ல. ஏனெனில் கொஞ்சம் புளித்தமா பிசைந்த மா முழுவதையும் புளிப்பாக்கிவிடும். ஒரு மனுஷனுடைய தீய சுபாவம் சபையாரெல்லார் மத்தியிலும் வேகமாக பரவிவிடும். இந்த ஒரு மனுஷனுடைய புளித்தமா, பிசைந்த மாவாகிய சபையாரெல்லாரையும் புளிப்பாக்கிவிடும்.

## பஸ்காவாகிய கிறிஸ்து
## 1கொரி 5 : 7-8

**1கொரி 5:7. ஆகையால், நீங்கள் புளிப்பில்லாதவர்களாயிருக்கிறபடியே, புதிதாய்ப் பிசைந்த மாவாயிருக்கும்படிக்கு, பழைய புளித்த மாவைப் புறம்பே கழித்துப்போடுங்கள். ஏனெனில் நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்து நமக்காக பலியிடப்பட்டிருக்கிறாரே.**

**1கொரி 5:8. ஆதலால் பழைய புளித்தமாவோடே அல்ல, துர்க்குணம் பொல்லாப்பு என்னும் புளித்தமாவோடும் அல்ல, துப்புரவு உண்மை என்னும் புளிப்பில்லாத அப்பத்தோடே பண்டிகையை ஆசரிக்கக் கடவோம்.**

கொரிந்து சபையிலுள்ள விசுவாசிகள் பரிசுத்தமாயிருக்க வேண்டுமென்று பவுல் அவர்களுக்கு ஆலோசனை சொல்லுகிறார். இந்த ஆலோசனை கொரிந்து சபையிலுள்ள எல்லா விசுவாசிகளுக்கும் பொதுவாகவும் சொல்லப்படுகிறது. அதே வேளையில் அந்தச் சபையின் விசுவாசிகள் ஒவ்வொருவருக்கும் தனித்தனியாகவும் சொல்லப்படுகிறது.

சபையின் விசுவாசிகள் பழைய புளித்தமாவை புறம்பே கழித்துப்போடவேண்டும். அவர்கள் புதிதாய்ப் பிசைந்த மாவாயிருக்கும்படிக்கு பழைய புளித்தமாவை புறம்பே கழித்துப்போடவேண்டும். அந்தப் பொல்லாதவனை அவர்களை விட்டு தள்ளிப்போடவேண்டும் (1கொரி 5:13) என்பதையே பவுல் இவ்வாறு சொல்லுகிறார்.

பவுலின் ஆலோசனை சபையிலுள்ள ஒவ்வொரு விசுவாசிக்கும் சொல்லப்படுகிறது. அவர்கள் இருதயத்திலும் ஜீவியத்திலும் காணப்படுகிற எல்லா அசுத்தத்தையும் புறம்பே கழித்துப்போடவேண்டும். விசுவாசிகள் பரிசுத்தமாய் ஜீவிப்பதில் கவனம் செலுத்தவேண்டும். தாங்களும் பரிசுத்தமாயிருக்கவேண்டும். அதே வேளையில் விசுவாசிகளின் ஐக்கியத்தில் அசுத்தமாயிருக்கிறவர்களைப் புறம்பே கழித்துப்போடவும் வேண்டும்.

துர்க்குணம், பொல்லாப்பு ஆகிய பாவசுபாவங்களை ஒவ்வொரு விசுவாசியும் தங்களைவிட்டுப் புறம்பே கழித்துப்போடவேண்டும். பாவசுபாவமாகிய புளித்தமாவானது விசுவாசியின் சிந்தையையும், இருதயத்தையும் அசுத்தப்படுத்திவிடும். ஆகையினால் இப்படிப்பட்ட துர்க்குணத்திலிருந்து ஒவ்வொரு விசுவாசியும் விலகி பரிசுத்தமாய் ஜீவிக்கவேண்டும்.

கிறிஸ்தவ மார்க்கத்தில் அன்பே பிரதானம். தேவன் அன்பாகவே இருக்கிறார் (1யோவா 4:16). அன்பு தேவனுடைய சுபாவம். ஒவ்வொரு விசுவாசியும் அன்பை தரித்துக்கொள்ள வேண்டும். அன்பே நம்மை அலங்கரிக்கிற ஆபரணம்.

கொரிந்து சபையும், சபையிலுள்ள ஒவ்வொரு விசுவாசியும் பரிசுத்தமாயும் இருக்கவேண்டும். அசுத்தத்தையும் புறம்பே கழித்துப்போடவேண்டும். இதற்கான காரணத்தையும் பவுல் இங்கு கொரிந்தியருக்குச் சொல்லுகிறார். நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்து நமக்காகப் பலியிடப்பட்டிருக்கிறார். யூதர்கள் பஸ்காவை அடித்துக் கொன்றபின்பு, புளிப்பில்லா அப்பப் பண்டிகையை ஆசரிப்பார்கள். அதை அவர்கள் ஏழுநாட்களுக்கு ஆசரிப்பது வழக்கம்.

விசுவாசிகளாகிய நாமும் புளிப்பில்லா அப்பப்பண்டிகையை பரிசுத்தமாய் ஆசரிக்கவேண்டும். யூதர்களைப்போல இதை நான்கு நாட்களுக்கு ஆசரித்தால் போதாது. நம்முடைய ஜீவியகாலமெல்லாம் புளிப்பில்லா அப்பப்பண்டிகையை பரிசுத்தமாய் ஆசரிக்கவேண்டும். ஒவ்வொரு விசுவாசியின் ஜீவியம் முழுவதும் புளிப்பில்லா அப்பப் பண்டிகையாகவே இருக்கவேண்டும். துப்புரவு, உண்மை என்னும் புளிப்பில்லாத அப்பத்தோடே நாம் பண்டிகையை ஆசரிக்கவேண்டும். துர்க்குணம், பொல்லாப்பு என்னும் புளித்தமாவை புறம்பே கழித்துப்போடவேண்டும்.

ஒவ்வொரு விசுவாசியும் தேவனுக்கு முன்பாகவும், மனுஷருக்கு முன்பாகவும் குற்றமில்லாதவராகவும், நன்னடத்தையுள்ளவராகவும் ஜீவிக்கவேண்டும். நம்முடைய மீட்பராகிய இயேசுகிறிஸ்து நமக்காக சிலுவையில் பலியிடப்பட்டார். அவருடைய இருதயம் துப்புரவாயும் உண்மையாயும் இருந்தது. அவர் கிருபை நிறைந்தவராகயிருந்தார். அவரிடத்தில் பாவம் காணப்படவில்லை.

நம்முடைய அசுத்தத்தை தேவகுமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தினால் மாத்திரமே கழுவி சுத்தப்படுத்த முடியும். நம்மிடத்திலுள்ள துர்க்குணம் பொல்லாப்பு என்னும் புளித்தமாவை புறம்பே கழித்துப்போட்டு, நம்முடைய இருதயத்தை இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தினால் சுத்தப்படுத்தவேண்டும்.

## பொல்லாதவன் 1கொரி 5 : 9-13

**1கொரி 5:9. விபசாரக்காரரோடே கலந்திருக்கக் கூடாதென்று நிருபத்தில் உங்களுக்கு எழுதினேன்.**

**1கொரி 5:10. ஆனாலும், இவ்வுலகத்திலுள்ள விபசாரக்காரர், பொருளாசைக்காரர், கொள்ளைக்காரர், விக்கிரகாராதனைக்காரர் இவர்களோடு எவ்வளவும் கலந்திருக்கக் கூடாதென்று நான் எழுதவில்லை; அப்படியானால் நீங்கள் உலகத்தைவிட்டு நீங்கிப்போக வேண்டியதாயிருக்குமே.**

**1கொரி 5:11. நான் உங்களுக்கு எழுதினதென்னவென்றால், சகோதரனென்னப்பட்ட ஒருவன் விபசாரக்காரனாயாவது, பொருளாசைக்காரனாயாவது, விக்கிரகாராதனைக்காரனாயாவது, உதாசினனாயாவது, வெறியனாயாவது, கொள்ளைக்காரனாயாவது அவனோடே கலந்திருக்கக் கூடாது; அப்படிப்பட்டவனுடனே கூடப்புசிக்கவுங் கூடாது.**

**1கொரி 5:12. புறம்பே இருக்கிறவர்களைக் குறித்துத் தீர்ப்புச் செய்கிறது என் காரியமா? உள்ளே இருக்கிறவர்களைக் குறித்தல்லவோ நீங்கள் தீர்ப்புச் செய்கிறீர்கள்?**

**1கொரி 5:13. புறம்பே இருக்கிறவர்களைக் குறித்து தேவனே தீர்ப்புச் செய்வார். ஆகையால் அந்த பொல்லாதவனை உங்களைவிட்டுத் தள்ளிப்போடுங்கள்.**

### விபசாரக்காரர்

**விபசாரக்காரரோடே கலந்திருக்கக் கூடாதென்று நிருபத்தில் உங்களுக்கு எழுதினேன் (1கொரி 5:9).**

விசுவாசிகள் விபசாரக்காரரோடே கலந்திருக்கக்கூடாது என்று பவுல் ஆலோசனை சொல்லுகிறார். இதை ஒரு நிருபத்தில் அவர்களுக்கு எழுதியதாக இங்கு குறிப்பிடுகிறார். அந்த நிருபம் இதற்கு முன்பு எழுதப்பட்டது என்றும், அது காணாமல் போய்விட்டது என்றும் வேதபண்டிதர்களில் ஒரு சிலர் சொல்லுகிறார்கள். வேறு சிலரோ, பவுல் எழுதிய அந்தச் செய்தி, இந்த நிருபத்தில்தான் எழுதப்பட்டிருப்பதாகவும் சொல்லுகிறார்கள். இந்த இடத்தில் விபசாரக்காரரைக் குறித்து எச்சரிப்பது மிகவும் அவசியமாயிற்று.

ஒருவர் சபையில் அங்கத்தினாராக இருந்துகொண்டு, அவர் விபசாரக் காரராகவோ, பொருளாசைக்காரராகவோ, கொள்ளைக்காரராகவோ, விக்கிரகாரா தனைக்காரராகவோ இருக்கக்கூடாது. இப்படிப்பட்டவர்களோடு விசுவாசிகள் கலந்திருக்கவும் கூடாது. அவர்களோடே கூட புசிக்கவும் கூடாது (1கொரி 5:11).

விசுவாசிகள் இப்படிப்பட்ட துன்மார்க்கரோடே ஐக்கியம் வைத்திருக்கக்கூடாது. அவர்களோடு எந்த உறவும் வைத்திருக்கக் கூடாது. விசுவாசிகள் இவர்களைவிட்டு விலகிப்போகும்போது, துன்மார்க்கருக்கு மிகுந்த அவமானம் உண்டாகும். தான் விலக்கி வைக்கப்பட்டதை நினைத்து, தன்னுடைய பாவங்களுக்காக இவன் ஒரு வேளை மனந்திரும்பலாம். தன்னுடைய துன்மார்க்கத்தை உணரலாம். ஆகையினால் இப்படிப்பட்டவர்களோடு கலந்திருக்காமல் விலகியே இருக்கவேண்டும்.

சபையிலுள்ள விசுவாசிகள் துன்மார்க்கராகயிருந்தாலும் நமக்கு கிறிஸ்துவுக்குள் சகோதரராகவே இருக்கிறார்கள். இவர்கள் கிறிஸ்துவுக்குள் சகோதரர் என்று என்னப்பட்டவர்கள். ஆனால் இவர்கள் உண்மையில் கிறிஸ்தவ சகோதரர்களல்ல. இவர்கள் விசுவாசிகளோடு ஐக்கியம் வைத்திருக்க தகுதியற்றவர்கள். துன்மார்க்கர் துன்மார்க்கருடைய கூட்டத்தோடு சேர்ந்துகொள்ளவேண்டும். விசுவாசிகள் இவர்களோடு ஐக்கியம் வைத்திருக்கக்கூடாது.

**உலகம்**

**ஆனாலும், இவ்வுலகத்திலுள்ள விபசாரக்காரர், பொருளாசைக்காரர், கொள்ளைக்காரர், விக்கிரகாராதனைக் காரர் இவர்களோடு எவ்வளவும் கலந்திருக்கக் கூடாதென்று நான் எழுதவில்லை; அப்படியானால் நீங்கள் உலகத்தைவிட்டு நீங்கிப்போக வேண்டியதாயிருக்குமே. நான் உங்களுக்கு எழுதினதென்னவென்றால், சகோதரனென்னப்பட்ட ஒருவன் விபசாரக்காரனாயாவது, பொருளா சைக்காரனாயாவது, விக்கிரகாரா தனைக்காரனாயாவது, உதாசின னாயாவது, வெறியனாயாவது, கொள்ளைக்காரனாயாவது அவனோடே கலந்திருக்கக் கூடாது; அப்படிப் பட்டவனுடனே கூடப்புசிக்கவுங் கூடாது (1கொரி 5:10,11).**

விசுவாசிகள் விபசாரக்காரரோடே கலந்திருக்கக்கூடாது என்று பவுல் எழுதுகிறார். அதே வேளையில் தன்னுடைய ஆலோசனைக்கு ஒரு வரம்பையும் வகுக்கிறார். விசுவாசிகள் இவ்வுலகத்திலுள்ள விபசாரக்காரரோடு எவ்வளவும் கலந்திருக்கக்கூடாது என்று பவுல் கட்டுப்பாடு பண்ணவில்லை. இவ்வுலகத்திலுள்ள விபசாரக்காரர் வேறு. சபையிலுள்ள விபசாரக்காரர் வேறு. பவுல் இவ்விரண்டு விதமான விபசாரக்காரரைக் குறித்து வெவ்வேறு விதமான ஆலோசனைகளைச் சொல்லுகிறார். இவ்வுலகத்திலுள்ள விபசாரக்காரரோடு விசுவாசிகள் எவ்வளவும் கலந்திருக்கக்கூடாது என்று பவுல் சொல்லவில்லை. இவர்களோடு புசிக்கவும் கூடாது என்று பவுல் கட்டுப்பாடு பண்ணவுமில்லை.

உலகப்பிரகாரமான ஜனங்களுக்குப் பாவத்தைப்பற்றித் தெரியாது. பரிசுத்தத்தைப் பற்றியும் தெரியாது. அவர்களுக்கு சத்தியம் உபதேசிக்கப் படவில்லை. ஆகையினால் அவர்கள் தங்கள் விருப்பப்பிரகாரம் ஜீவிக்கிறார்கள். இவர்கள் எண்ணிக்கையில் அநேகராயிருக்கிறார்கள். விசுவாசிகள் இவ்வுலகத்திலுள்ள பாவிகளோடு எவ்வளவும் கலந்திருக்கக்கூடாது என்று தீர்மானம்பண்ணினால், விசுவாசிகள் இவ்வுலகத்தைவிட்டு நீங்கிப்போக வேண்டியதாயிருக்கும்.

உலகத்தில் பாவிகள்தான் அநேகராயிருக்கிறார்கள். அவர்களோடு பேசக்கூடாது, பழகக்கூடாது, புசிக்கக்கூடாது என்று நாம் தீர்மானம்பண்ணினால், இந்த உலகத்தில் நமக்கு யாருமே இருக்கமாட்டார்கள். நாம் இந்த உலகத்திலிருக்கும் வரையிலும் இவர்களோடு பேசலாம், பழகலாம், புசிக்கலாம். இவர்களை ஒட்டுமொத்தமாக ஒதுக்கி வைத்துவிட முடியாது. இவர்களை ஒதுக்கி வைக்கவேண்டுமென்றால், நாம் தான் இவ்வுலகத்தைவிட்டு ஒதுங்கிப்போகவேண்டும்.

நாம் இந்தப் பிரபஞ்சத்தில் ஜீவிக்கிற வரையிலும் புறஜாதி ஜனங்கள் மத்தியில் ஜீவிக்கிறோம். ஆகையினால் அவர்களோடு பேசி, பழகி, புசிக்கவேண்டிய அவசியம் நமக்கு உண்டாகிறது. அவர்களோடு நாம் பழகினாலும் நம்முடைய பரிசுத்தத்தை விட்டுக்கொடுத்துவிடக் கூடாது. அவர்களிடத்திலுள்ள பாவக்கறைகள் நம்மிடத்திற்கு வந்துவிடக்கூடாது.

இவ்வுலகத்திலுள்ள விபசாரக் காரரோடு நாம் கலந்திருக்கலாம் என்று பவுல் சொல்லும்போது, சபையிலுள்ள விபசாரக்காரரோடு நாம் கலந்திருக்கக் கூடாது என்றும் கண்டிப்பாய்ச் சொல்லுகிறார். "சகோதரன் என்னப்பட்ட ஒருவன்" என்னும் வார்த்தை சபையிலுள்ள விசுவாசியைக் குறிக்கிறது. ஒரு விசுவாசி விபசாரக்காரனாக இருக்கும்போது, மற்ற விசுவாசிகள் அவனோடு கலந்திருக்கக் கூடாது. அவனோடு புசிக்கவும் கூடாது.

## புறம்பேயிருக்கிறவர்கள்

**புறம்பே இருக்கிறவர்களைக் குறித்துத் தீர்ப்புச் செய்கிறது என் காரியமா? உள்ளே இருக்கிறவர்களைக் குறித்தல்லவோ நீங்கள் தீர்ப்புச் செய்கிறீர்கள்? புறம்பே இருக்கிறவர்களைக் குறித்து தேவனே தீர்ப்புச் செய்வார். ஆகையால் அந்த பொல்லாதவனை உங்களைவிட்டுத் தள்ளிப்போடுங்கள் (1கொரி 5:12,13).**

உலகப்பிரகாரமான ஜனங்கள் சபைக்குப் புறம்பே இருக்கிறார்கள். விசுவாசிகள் புறம்பேயிருக்கிற அவிசுவாசிகளைக் குறித்து தீர்ப்பு சொல்லக்கூடாது. அவர்களைத் தேவனுடைய நியாயத்தீர்ப்புக்கு ஒப்புக்கொடுக்கவேண்டும் (1கொரி 5:13).

விசுவாசிகள் சபைக்குள்ளே இருக்கிறவர்கள். இவர்கள் சுவிசேஷத்தின் பிரமாணத்திற்குக் கீழ்ப்படிந்து ஜீவிக்கவேண்டியவர்கள். விசுவாசிகள் தேவனுடைய தீர்ப்புக்கும் உட்பட்டவர்கள், சபையிலுள்ள மற்ற விசுவாசிகளுடைய தீர்ப்புக்கும் உட்பட்டவர்கள். விசுவாசிகள் பாவம் செய்யும்போது தேவனும் அவர்களை நியாயத்தீர்ப்பு செய்வார். மற்ற விசுவாசிகளும் அவர்களை நியாயத்தீர்ப்பு செய்வார்கள். தேவனுடைய பிரமாணத்திற்கு விரோதமாகப் பாவம் செய்கிற விசுவாசிகள் தண்டிக்கப் படவேண்டும். அவர்களுக்கு அவமானம் உண்டாக்கவேண்டும். சபையின் ஐக்கியத்திலிருந்து அவர்களை வெளியேற்ற வேண்டும்.

சபைக்குப் புறம்பே இருக்கிற அவிசுவாசிகளை நாம் தீர்ப்புச் செய்யக்கூடாது. அவர்கள் ஏற்கெனவே சபைக்குப் புறம்பேதான் இருக்கிறார்கள். அவர்களை மறுபடியும் சபைக்குப் புறம்பாக்க வேண்டிய அவசியமில்லை. ஆனால் சபைக்குள்ளே இருக்கிற விசுவாசிகளைக்குறித்து நாம் கவனத்தோடிருக்கவேண்டும்.

சபைக்குள்ளே சகோதரன் என்னப்பட்ட ஒருவன் விபரச்சார காரனாயாவது, மற்ற எந்தவிதமான பாவங்களை செய்கிறவனாயாவது இருந்தால் அவனோடே கலந்திருக்கக் கூடாது. அப்படிப்பட்டவனோடே புசிக்கவும் கூடாது. அப்படிப்பட்ட பொல்லாதவனை விசுவாசிகள் தங்களுடைய ஐக்கியத்திலிருந்து தள்ளிப்போடவேண்டும். சபைக்குப் புறம்பே இருக்கிறவர்களைக்குறித்து தேவனே தீர்ப்புச் செய்வார். சபைக்குள்ளே இருக்கிறவர்களைக்குறித்து தேவனும், விசுவாசிகளும் தீர்ப்புச்செய்யவேண்டும்.

## 6 அதிகாரம்

விசுவாசிகளுக்கு வழக்கு உண்டாகும்போது, அவர்கள் வழக்காடும்படி அநீதக்காரரிடத்தில் போவதை பவுல் கண்டிக்கிறார் (1கொரி 6:1-8). பலவிதமான பாவங்களைக்குறித்து பவுல் எச்சரிக்கிறார் (1கொரி 6:9-11). வேசித்தனத்தைக்குறித்து பவுல் கடுமையாக எச்சரிக்கிறார்.

### வழக்காடுதல்
### 1கொரி 6 : 1-8

1கொரி 6:1. உங்களில் ஒருவனுக்கு வேறொருவனோடே வழக்குண்டானால், வழக்காடும்படி அவன் பரிசுத்தவான்களிடத்தில் போகாமல், அநீதக்காரரிடத்தில் போகத் துணிகிறதென்ன?

1கொரி 6:2. பரிசுத்தவான்கள் உலகத்தை நியாயந்தீர்ப்பார்களென்று அறியீர்களா? உலகம் உங்களால் நியாயந்தீர்க்கப்படுவதாயிருக்க, அற்ப வழக்குகளைத் தீர்க்க நீங்கள் அபாத்திரரா?

1கொரி 6:3. தேவதூதர்களையும் நியாயந்தீர்ப்போமென்று அறியீர்களா? அப்படியிருக்க, இந்த ஜீவனுக் கேற்றவைகளை நீங்கள் தீர்த்துக் கொள்ளக் கூடாதிருக்கிறது எப்படி?

1கொரி 6:4. இந்த ஜீவனுக்கேற்ற வழக்குகள் உங்களுக்கு இருந்தால், தீர்ப்புச்செய்கிறதற்கு, சபையில் அற்பமாய் எண்ணப்பட்டவர்களை நியமித்துக்கொள்ளுங்கள்.

1கொரி 6:5. உங்களுக்கு வெட்கம் உண்டாகும்படி இதைச் சொல்லுகிறேன். சகோதரனுக்கும் சகோதரனுக்கும் உண்டான வழக்கைத் தீர்க்கத்தக்க விவேகி ஒருவனாகிலும் உங்களுக்குள் இல்லையா?

1கொரி 6:6. சகோதரனோடே சகோதரன் வழக்காடுகிறான், அவிசுவாசிகளுக்கு முன்பாகவும் அப்படிச் செய்கிறான்.

1கொரி 6:7. நீங்கள் ஒருவரோடொருவர் வழக்காடுகிறது எவ்விதத்திலும் குற்றமாயிருக்கிறது. அப்படிச் செய்கிறதைவிட நீங்கள் ஏன் அநியாயத்தைச் சகித்துக்கொள்ளு கிறதில்லை, ஏன் நஷ்டத்தைப் பொறுத்துக் கொள்ளுகிறதில்லை?

1கொரி 6:8. நீங்களே அநியாயஞ்செய்கிறீர்கள், நஷ்டப் படுத்துகிறீர்கள்; சகோதரருக்கும் அப்படிச் செய்கிறீர்களே.

### அநீதக்காரர்

உங்களில் ஒருவனுக்கு வேறொருவனோடே வழக்குண்டானால், வழக்காடும்படி அவன் பரிசுத்தவான்களிடத்தில் போகாமல், அநீதக்காரரிடத்தில் போகத் துணிகிறதென்ன? (1கொரி 6:1).

கொரிந்து சபையில் விசுவாசி களிடையே வழக்கு உண்டாயிற்று. தங்கள் வழக்குகளை விசாரிக்கும் படியாகவும், வழக்காடும்படியாகவும் அவர்கள் பரிசுத்தவான்களிடத்தில் போகவில்லை. அதற்குப் பதிலாக வழக்காடும்படி அவர்கள் அநீதக்காரரி டத்தில் துணிந்து போகிறார்கள். சிறிய காரியமாகயிருந்தாலும், விசுவாசிகள் பிறருடைய தப்பிதங்களை மன்னிக்காமல், உடனே நீதிமன்றத்திற்கு அவர்களை அழைத்துக்கொண்டு போகிறார்கள். கொரிந்து சபையின் விசுவாசிகளிடத்தில் இப்படிப்பட்ட சுபாவம் இருப்பதை பவுல் கண்டிக்கிறார்.

சகோதரனோடே சகோதரன் வழக்காடுகிறான். அவிசுவாசிகளுக்கு முன்பாகவும் அப்படிச் செய்கிறான் (1கொரி 6:6). விசுவாசிகள் மத்தியில் சகோதர சிநேகம் முறிந்துபோயிற்று. விசுவாசிகள் தங்களுடைய நன்மையை மாத்திரம் பார்க்கக்கூடாது. பிறருடைய நன்மையையும் கவனிக்கவேண்டும். விசுவாசிகள் ஒருவரொருவர் வழக்காடக்கூடாது. ஏனெனில் நாமெல்லோருமே கிறிஸ்துவுக்குள் சகோதரராகயிருக்கிறோம்.

கொரிந்து சபையிலுள்ள விசுவாசிகள் மற்ற விசுவாசிகளோடு வழக்காடுகிறார்கள். விசுவாசிகள் மற்ற விசுவாசிகளோடு ஏற்பட்டிருக்கிற வழக்குகளை வழக்காடும்படி, பரிசுத்தவான்களிடத்தில் போகாமல், அநீதக்காரரிடத்தில் போகத் துணிக்கிறார்கள். இவர்களுடைய இந்தக் கிரியை சபைக்கு அவமானத்தை உண்டாக்குகிறது. சபையின் நற்பெயருக்கு இவர்கள் களங்கம் ஏற்படுத்துகிறார்கள்.

பவுல் இவர்களுக்கு ஆலோசனை சொல்லும்போது, "நீங்கள் ஒருவரோடொருவர் வழக்காடுகிறது எவ்விதத்திலும் குற்றமாயிருக்கிறது" (1கொரி 6:7) என்று சொல்லுகிறார். தங்களுடைய வழக்குகளை பரிசுத்தவான்களிடத்தில் போய் தீர்த்துக்கொள்வதற்குப் பதிலாக, அநீதக்காரரிடத்தில் வழக்காடும்படி போவது எவ்விதத்திலும் குற்றமாயிருக்கிறது என்றும் சொல்லுகிறார்.

விசுவாசிகள் ஒருவரோடொருவர் வழக்காடக்கூடாது. தங்களுக்குப் பிறர் செய்கிற அநியாயத்தைச் சகித்துக் கொள்ளவேண்டும். பிறரால் தங்களுக்கு ஏற்பட்டிருக்கிற நஷ்டத்தைப் பொறுத்துக் கொள்ளவேண்டும் (1கொரி 6:7). நமக்கு விரோதமாக யாராவது தீங்குசெய்தால் நாம் அதை மன்னிக்கவேண்டும். பிறர் செய்கிற அநியாயத்தை வழக்காடு வதற்குப் பதிலாக, அதை சகித்துக் கொள்வது விசுவாசிக்கு மகிமையும் மேன்மையுமானது.

## உலகத்தை நியாயந்தீர்ப்பார்கள்

**பரிசுத்தவான்கள் உலகத்தை நியாயந் தீர்ப்பார்களென்று அறியீர்களா? உலகம் உங்களால் நியாயந்தீர்க்கப்படுவதாயிருக்க, அற்ப வழக்குகளைத் தீர்க்க நீங்கள் அபாத்திரரா? தேவ தூதர்களையும் நியாயந்தீர்ப்போமென்று அறியீர்களா? அப்படியிருக்க, இந்த ஜீவனுக்கேற்றவைகளை நீங்கள் தீர்த்துக் கொள்ளக் கூடாதிருக்கிறது எப்படி? (1கொரி 6:2,3)**

கொரிந்து சபையின் விசுவாசி களிடத்தில் காணப்படுகிற முரண் பாடுகளை பவுல் இங்கு அவர்களுக்கு உணர்த்தி சொல்லுகிறார். பரிசுத்த வான்கள் உலகத்தை நியாயந்தீர்ப்பார்கள். அவர்கள் தேவதூதர்களையும் நியாயந்தீர்ப்பார்கள். அப்படியிருக்கும்போது அவர்களால் இந்த ஜீவனுக்கேற்றவைகளை நியாயந்தீர்த்துக்கொள்ள முடியும். ஆனால் கொரிந்துவிலுள்ள விசுவாசிகளோ இந்தச் சத்தியத்தை அறியாதவர்களாக யிருக்கிறார்கள்.

நம்முடைய ஜீவனுக்கேற்ற விஷயங்களில் நாம் அதிகக்கவனம் செலுத்துகிறோம். இதில் ஒரு சிறிய தவறு நடந்துவிட்டாலும், அதை உடனே வழக்காடும்படி புறஜாதி நீதிபதிகளிடத்திற்கு முன்பாக விரைந்து போகிறோம். நம்முடைய வழக்குகளை நாமே தீர்த்துக்கொள்ளவேண்டும். வழக்கு இருந்தாலும் அதைச் சகித்துக் கொள்ளவேண்டும். நமக்கு விரோதமாகத் தீங்கு செய்தவர்களை மன்னிக்கவேண்டும்.

பரிசுத்தவான்களால் உலகத்தையும், தேவதூதர்களையும் நியாயந்தீர்க்க முடியும். அப்படியிருக்கும்போது இந்த ஜீவனுக்கேற்ற வழக்குகளை அவர்களால் நிச்சயம் நியாயந்தீர்க்க முடியும். ஆனால் அவர்களோ தங்களுடைய வழக்குகளை தேவனுடைய பிரமாணத்தின்படி தீர்த்துக்கொள்ளாமல், புறஜாதியாரின் பிரமாணத்தின்படி தீர்த்துக்கொள்ள முயற்சி செய்கிறார்கள்.

இவர்கள் சபையில் அங்கத்தினராகயிருக்கிறார்கள். ஆனால் இவர்களை கிறிஸ்துவின் பிரமாணம் ஆளுகை செய்யவில்லை. அதற்குப் பதிலாக உலகத்தின் பிரமாணம் இவர்களை ஆளுகை செய்கிறது.

தங்களுடைய வழக்குகளைத் தீர்ப்பதற்கு அநீதக்காரரிடத்தில் போகிறவர்கள் கர்த்தருடைய பிரதான கட்டளைக்குக் கீழ்ப்படியாதவர்கள். கர்த்தருக்குக் கீழ்ப்படியாத இவர்கள் துன்மார்க்கமான உலகத்தின் கட்டளையை அங்கீகரித்து அதற்குக் கீழ்ப்படிய விரும்புகிறார்கள்.

பரிசுத்தவான்கள் தங்கள் விசுவாசத்தினாலும், பரிசுத்த ஜீவியத்தினாலும் இந்த உலகத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கிறார்கள். அநீதக்காரர் நீதிபதிகளாக இருக்கும்போது, விசுவாசிகளும் நீதிபதிகளாக இருக்கமுடியும். இது விசுவாசிகளுக்குக் கிடைத்திருக்கிற சிலாக்கியம். நியாயம் விசாரிக்கிற சிலாக்கியத்தைப் பெற்றிருக்கிற விசுவாசிகளாகிய நீதிபதிகள், தேவனுக்குப் பயந்து நியாயமான தீர்ப்புகளைச் சொல்லவேண்டும். இவர்களால் உலகத்தாரை நியாயம் விசாரிக்க முடியும்.

## ஜீவனுக்கேற்ற வழக்குகள்

**இந்த ஜீவனுக்கேற்ற வழக்குகள் உங்களுக்கு இருந்தால், தீர்ப்புச்செய்கிறதற்கு, சபையில் அற்பமாய் எண்ணப்பட்டவர்களை நியமித்துக்கொள்ளுங்கள். உங்களுக்கு வெட்கம் உண்டாகும்படி இதைச் சொல்லுகிறேன். சகோதரனுக்கும் சகோதரனுக்கும் உண்டான வழக்கைத் தீர்க்கத்தக்க விவேகி ஒருவனாகிலும் உங்களுக்குள் இல்லையா? (1கொரி 6:4,5)**

தீர்ப்புச் செய்கிறதற்கு சபையில் அற்பமாய் எண்ணப்பட்டவர்கள் என்பது புறஜாதி நீதிபதிகளைக் குறிக்கிறது என்று வேதபண்டிதர்கள் அர்த்தம் சொல்லுகிறார்கள். விசுவாசிகளுக்குள்ளே வழக்கு உண்டாகும்போது, அந்தச் சபையில், அவர்களுடைய வழக்குகளை தீர்ப்பதற்கு விவேகியான விசுவாசி நிச்சயம் ஒருவர் இருப்பார். கர்த்தருடைய பார்வையில் விசுவாசியே விவேகியாக இருக்கிறார். உலகப்பிரகாரமான நீதிபதியோ கர்த்தருடைய பார்வையில் அற்பமானவராய் எண்ணப்படுகிறார்.

பவுல் இந்த வசனத்தில் தான் சொல்ல விரும்புகிற சத்தியத்தை எதிர்மறை வார்த்தைகளினால் விளக்குவதாக வேதபண்டிதர்கள் விளக்கம் சொல்லுகிறார்கள். விசுவாசிகளுக்குள் வழக்கு உண்டாகும்போது, தங்களுடைய வழக்குகளைத் தீர்த்து வைப்பதற்கு, சபையில் அற்பமாய் எண்ணப்பட்டவரே போதுமானவராகயிருக்கிறார். உலகப்பிரகாரமான விவேகியாரும் விசுவாசிகளின் வழக்குகளைத் தீர்த்து வைக்கத் தேவையில்லை.

ஏனெனில் விசுவாசிகளுக்குள் வழக்குகளும், வாக்குவாதங்களும், விரோதங்களும் உண்டாகக்கூடாது. மெய்யான விசுவாசி அநியாயத்தைச் சகித்துக்கொள்வார். நஷ்டத்தைப் பொறுத்துக்கொள்வார். விசுவாசிகளுக்குள் வழக்குகள் உண்டாகக்கூடாது. அப்படியே உண்டானாலும், சபையில் அற்பமாய் எண்ணப்பட்டவர்களால்கூட அவர்களுடைய வழக்குகளைத் தீர்த்துவைக்க முடியும். கொரிந்துவிலுள்ள விசுவாசிகளுக்கு வெட்கமுண்டாகும்படி பவுல் இந்த ஆலோசனையைச் சொல்லுகிறார்.

### சகித்துக்கொள்வது

**சகோதரனோடே சகோதரன் வழக்காடுகிறான், அவிசுவாசிகளுக்கு முன்பாகவும் அப்படிச் செய்கிறான். நீங்கள் ஒருவரோடொருவர் வழக்காடுகிறது எவ்விதத்திலும் குற்றமாயிருக்கிறது. அப்படிச் செய்கிறதைவிட நீங்கள் ஏன் அநியாயத்தைச் சகித்துக் கொள்ளுகிறதில்லை, ஏன் நஷ்டத்தைப் பொறுத்துக் கொள்ளுகிறதில்லை? நீங்களே அநியாயஞ்செய்கிறீர்கள், நஷ்டப்படுத்துகிறீர்கள்; சகோதரருக்கும் அப்படிச் செய்கிறீர்களே (1கொரி 6:6-8)**

கொரிந்து சபையிலுள்ள விசுவாசிகள் மத்தியில் ஒருவனுக்கு வேறொருவனோடு வழக்கு உண்டாகும்போது, அவன் வழக்காடும்படி பரிசுத்தவான்களிடத்தில் போவதில்லை. அநீதக்காரரிடத்தில் போகத் துணிகிறான். இதைத் தீர்த்துவைப்பதற்கு பவுல் இரண்டு ஆலோசனைகளைச் சொல்லுகிறார். அவையாவன : 1. சகோதரனுக்கும் சகோதரனுக்கும் உண்டான வழக்கை தீர்க்கதக்க விவேகி ஒருவனை சபையில் கண்டுபிடிக்க வேண்டும். 2. பிறருக்கு எதிராக வழக்காடுவதைவிட, அவர்கள் செய்த அநியாயத்தைச் சகித்துக்கொள்ள வேண்டும். நஷ்டத்தைப் பொறுத்துக் கொள்ளவேண்டும்.

கொரிந்துவிலுள்ள விசுவாசிகள் சுயபெருமையிலிருக்கிறார்கள். மற்ற எல்லாரையும்விட தாங்களே ஞானிகளென்று இறுமாப்பாயிருக்கிறார்கள். தங்களுக்கு எல்லாம் தெரியுமென்று பெருமைப்படுகிறார்கள். இவர்களுக்கு இடையே வழக்கு உண்டாகும்போது, இவர்களுடைய வழக்குகளைத் தீர்க்கத்தக்க ஞானமுள்ள விவேகி தங்கள் சபையில் ஒருவருமில்லையென்று தீர்மானம் செய்திருக்கிறார்கள்.

விசுவாசிகள் சண்டையிடுவதும், புறஜாதி நியாயாதிபதிகள் அவர்களை நியாயம் விசாரித்துத் தீர்ப்பு செய்வதும் சபைக்கு வெட்கம் உண்டாகக்கூடிய காரியம். அதிலும் விசேஷமாக தங்களை ஞானிகளென்று சொல்லிக்கொள்ளும் விசுவாசிகளை, அநீதக்காரர் நியாயம் விசாரிப்பது மிகவும் அவமானமான காரியம்.

விசுவாசிகளிடத்தில் பொறுமையும் சகிப்புத் தன்மையும் காணப்படவேண்டும். விசுவாசிகள் தங்களுடைய நன்மையை மாத்திரம் பாராமல் பிறருடைய நன்மையையும் பார்க்கவேண்டும். நம்மை நேசிப்பதுபோல நாம் பிறரையும் நேசிக்கவேண்டும். விசுவாசிகள் மத்தியில் வழக்கு உண்டாகக்கூடாது. அவ்வாறு உண்டானாலும் நமக்கு எதிராக மற்ற விசுவாசி செய்த அநியாயத்தைச் சகித்துக்கொள்ளவேண்டும். நஷ்டத்தைப் பொறுத்துக்கொள்ளவேண்டும். இப்படிச் செய்யாமல் விசுவாசிகள் ஒருவரோடொருவர் வழக்காடுகிறது எவ்விதத்திலும் குற்றமாயிருக்கிறது.

தங்களுக்குள்ள வழக்குகளை சமாதானமாகத் தீர்த்துக்கொள்ள வாய்ப்பிருக்கும்போது, வழக்காடும்படி அநீதக்காரரிடத்தில் துணிந்துபோவது விசுவாசிகளுக்குக் குற்றமாயிருக்கிறது. மிகவும் பெரிய பிரச்சனையென்றால், தேசத்துப் பிரமாணத்தின்படி நியாயம் பெறுவதற்கு, நீதிமன்றத்திற்குப் போகலாம். மற்றப்படி சிறு சிறு வழக்குகளையெல்லாம் சகித்துக்கொள்ளாமல், பொறுத்துக் கொள்ளாமல் நீதிமன்றத்திற்குப்போவது எவ்விதத்திலும் குற்றமாயிருக்கிறது.

விசுவாசிகள் மத்தியிலேயே சட்டம் தெரிந்தவர்கள் இருப்பார்கள். பொறுமையோடு கேட்டு, நீதியாய்த் தீர்ப்பு செய்கிற மூப்பர்களும் இருப்பார்கள். நம்முடைய வழக்குகளைத் தீர்த்து வைப்பதற்கு இவர்களே போதுமானவர்கள். இவற்றிற்கும் மேலாக, நம்மிடத்தில் சகிப்புத் தன்மையும் பொறுமையும் காணப்பட வேண்டும்.

நமக்கு விரோதமாகப் பிறர் செய்த தப்பிதங்களை நாம் மன்னிக்கவேண்டும். அநியாயத்தைச் சகித்துக்கொள்வதும், நஷ்டத்தைப்பொறுத்துக் கொள்வதும் விசுவாசியின் நற்குணம்.

விசுவாசிகள் சிறிய காரியங்களை சகித்துக்கொள்ள வேண்டும். மற்றவர்களுக்கு கோபம் உண்டாக்கக்கூடாது. மற்றவர்களுக்கு நஷ்டம் உண்டாக்ககூடாது. மற்றவர்களுக்கு விரோதமாக நாம் அநியாயம் செய்யக்கூடாது. விசுவாசிகள் தங்கள் இருதயத்திலும் சிந்தையிலும் சமாதானத்தோடிருக்க வேண்டும். தங்களுடைய உற்றார் உறவினர்கள், சுற்றத்தார் மத்தியில் சமாதானத்தோடு ஜீவிக்கவேண்டும். வழக்காடி ஜெயம்பெறுவதைவிட சகித்துக்கொண்டு, பொறுத்துக்கொள்வதே மெய்யான ஜெயம்.

கொரிந்து சபையிலுள்ள விசுவாசிகள் அநியாயத்தைச் சகித்துக்கொள்கிறதில்லை. நஷ்டத்தைப் பொறுத்துக்கொள்கிறதில்லை. அவர்களே அநியாயம் செய்கிறார்கள். அவர்களே நஷ்டப்படுத்துகிறார்கள். உலகத்தாருக்கு மாத்திரமல்ல, சகவிசுவாசிகளுக்கும் அநியாயம் செய்கிறார்கள். உலகத்தாருக்கு அநியாயம் செய்வது தவறு. விசுவாசிகளுக்கு அநியாம் செய்வது மிகப்பெரிய தவறு.

## அநியாயக்காரர் 1கொரி 6 : 9-11

**1கொரி 6:9. அநியாயக்காரர் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப் பதில்லையென்று அறியீர்களா? வஞ்சிக்கப்படாதிருங்கள்; வேசிமார்க்கத் தாரும், விக்கிரகாராதனைக்காரரும், விபசாரக்காரரும், சுயபுணர்ச்சிக் காரரும், ஆண்புணர்ச்சிக்காரரும்,**

**1கொரி 6:10. திருடரும், பொருளாசைக்காரரும், வெறியரும், உதாசினரும், கொள்ளைக்காரரும் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப் பதில்லை.**

**1கொரி 6:11. உங்களில் சிலர் இப்படிப்பட்டவர்களாயிருந் தீர்கள்; ஆயினும் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலும், நமது தேவனுடைய ஆவியினாலும் கழுவப்பட்டீர்கள், பரிசுத்தமாக்கப் பட்டீர்கள், நீதிமான்களாக்கப் பட்டீர்கள்.**

### சுதந்தரிப்பதில்லை

**அநியாயக்காரர் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லை யென்று அறியீர்களா? வஞ்சிக்கப் படாதிருங்கள்; வேசிமார்க்கத்தாரும், விக்கிரகாராதனைக்காரரும், விபசாரக் காரரும், சுயபுணர்ச்சிக்காரரும், ஆண்புணர்ச்சிக்காரரும், திருடரும், பொருளாசைக்காரரும், வெறியரும், உதாசினரும், கொள்ளைக்காரரும் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப் பதில்லை (1கொரி 6:9,10).**

கொரிந்து சபையிலுள்ள விசுவாசிகள் இரட்சிக்கப்படுவதற்கு முன்பாக துன்மார்க்கமாக ஜீவித்தார்கள். இரட்சிக்கப்பட்ட பின்பு அவர்கள் மறுபடியும் பாவத்தில் விழுந்துவிடக்கூடாது. அநியாயக்காரர் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிக்கமாட்டார்கள். துணிகரமான பாவங்களுக்கு விரோதமாக பவுல் இங்கு எச்சரித்துக் கூறுகிறார்.

பவுலின் உபதேசம் மிகவும் தெளிவாக இருக்கிறது. சத்தியத்தை எளிமையாகவும் உறுதியாகவும் சொல்லுகிறார். அநியாயக்காரர் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்ப தில்லை என்று தெளிவாகச் சொல்லு கிறார். கொரிந்துவிலுள்ள எல்லா விசுவாசிகளும் இந்தச் சத்தியத்தை தெரிந்து வைத்திருக்கவேண்டும். கொரிந்து சபையிலுள்ள விசுவாசிகள் மத்தியிலே காணப்படுகிற ஒரு சில பாவங்களையும் பவுல் குறிப்பிட்டுச் சொல்லுகிறார்.

விக்கிரகாராதனை முதலாவது கற்பனைக்கும் இரண்டாவது கற்பனைக்கும் விரோதமான பாவம். வேசிமார்க்கத்தாரும், விபசாரக்காரரும் சுயபுணர்ச்சிக்காரரும், ஆண்புணர்ச்சிக் காரரும் ஏழாவது கற்பனைக்கு விரோதமாகப் பாவம் செய்கிறார்கள். திருடர் எட்டாவது கற்பனைக்கு விரோதமாகவும் உதாசீனர் ஒன்பதாவது கற்பனைக்கு விரோதமாகவும், வெறியரும் பொருளாசைக்காரரும் பத்தாவது கற்பனைக்கு விரோதமாகவும் பாவம் செய்கிறவர்கள். இப்படிப்பட்ட அநியாயக் காரருக்கு பரலோகம் நியமிக்கப்படவில்லை. இவர்களால் பரலோகத்திற்குள் பிரவேசிக்க முடியாது. பரலோகத்திற்குச் செல்லும்பாதை இவர்களுக்கு அடைக்கப்பட்டிருக்கும்.

பவுல் அவர்களுக்கு ஆலோசனை சொல்லும்போது, "வஞ்சிக்கப்படாதிருங்கள்" என்று சொல்லி அவர்களை எச்சரிக்கிறார். இவர்களுக்குச் சத்தியம் ஏற்கெனவே அறிவிக்கப்பட்டிருக்கிறது. பாவத்திலிருந்து விடுதலை பெற்று இவர்கள் இரட்சிக்கப் பட்டிருக்கிறார்கள். இரட்சிக்கப்பட்ட இவர்கள் மறுபடியும் பாவத்தில் விழுந்து விடக்கூடாது. இரட்சிக்கப்பட்டவர்கள் பாவத்திற்கு மரித்து கிறிஸ்துவில் பிழைத்திருக்கி றார்கள். துன்மார்க்கரோ கிறிஸ்துவில் மரித்து பாவத்தில் பிழைத்திருக்கிறார்கள். இப்படிப்பட்டவர்கள் பிசாசின் பிள்ளைகளாகயிருக்கிறார்கள். ஆனாலும் தாங்களும் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்போம் என்று இவர்கள் இறுமாப்பாயிருக்கிறார்கள். இப்படி விசுவாசிப்பதும், இப்படி பிரசங்கம் பண்ணுவதும் மாய்மாலம். மாம்சத்தை விதைக்கிறவர்கள் மாம்சத்தைத்தான் அறுவடை செய்ய முடியும். மாம்சத்தை விதைத்து நித்திய ஜீவனை அறுவடை செய்யலாம் என்று எதிர்பார்ப்பது வீணான நம்பிக்கை.

## பரிசுத்தமாக்கப்பட்டீர்கள்

**உங்களில் சிலர் இப்படிப் பட்டவர்களாயிருந்தீர்கள்; ஆயினும் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலும், நமது தேவனுடைய ஆவியினாலும் கழுவப்பட்டீர்கள், பரிசுத்தமாக்கப்பட்டீர்கள், நீதிமான் களாக்கப்பட்டீர்கள் (1கொரி 6:11).**

தேவனுடைய கிருபையும், சுவிசேஷமும் கொரிந்து சபையிலுள்ள விசுவாசிகளின் இருதயத்தில் மிகப்பெரிய மாற்றத்தை உண்டுபண்ணியிருக்கிறது. இரட்சிக்கப்படுவதற்கு முன்பு இவர்களில் சிலர் இப்படிப்பட்ட அநியாயக்கார ராயிருந்தார்கள். மிகவும் மோசமாயி ருந்தவர்கள்கூட, இரட்சிக்கப்பட்ட பின்பு, பரிசுத்தமாய் ஜீவிக்கிறார்கள். தேவகிருபையினாலேயே மனுஷருடைய ஆத்துமாவில் இப்படிப்பட்ட மகிமையான மாற்றம் உண்டாயிருக்கிறது. துணிகரமான பாவிகளைக்கூட சுவிசேஷம் பரிசுத்தவான்களாக்குகிறது. சாத்தானின் பிள்ளைகளாயிருந்தவர்களை தேவன் தம்முடைய கிருபையினால், தமக்குப் பிரியமான பிள்ளைகளாக மாற்றியிருக்கிறார்.

கொரிந்துவிலுள்ள விசுவாசிகள் இரட்சிக்கப்படுவதற்கு முன்பு இருந்ததுபோல, இப்போது பாவத்தில் ஜீவிக்கவில்லை. இவர்கள் கழுவப் பட்டிருக்கிறார்கள். பரிசுத்தமாக்கப் பட்டிருக்கிறார்கள். நீதிமான்களாக்கப் பட்டிருக்கிறார்கள். கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலும், தேவனுடைய ஆவியினாலும் இவர்கள் கழுவப்பட்டிருக்கிறார்கள். கழுவப்படும் போது நமக்குள்ளிருக்கிற எல்லா குற்றவுணர்வுகளும், அசுத்தங்களும், பாவக்கறைகளும் நம்மைவிட்டு நீங்கும்.

தேவனுடைய ஆவியினால், இயேசுகிறிஸ்துவின் நாமத்தினால் அவர்கள் பரிசுத்தமாக்கப் பட்டிருக்கிறார்கள். நீதிமான்களாக்கப் பட்டிருக்கிறார்கள். கிறிஸ்துவின் மூலமாய் தங்கள் பாவக்கறைகளிலிருந்து கழுவப்பட்டு, தேவனோடு ஒப்புரவாகி யிருக்கிறவர்கள், தேவனுடைய ஆவியினால் பரிசுத்தமாக்கப் பட்டுமிருக்கிறார்கள். இவர்கள் தேவனுடைய பார்வையில் நீதிமான்களாக் கப்பட்டிருக்கிறார்கள். தேவனுடைய கிருபையினால் இவர்கள் பரிசுத்தமாக்கப் பட்டிருக்கிறார்கள்.

## வேசித்தனம்
## 1கொரி 6 : 12-20

**1கொரி 6:12. எல்லாவற்றையும் அநுபவிக்க எனக்கு அதிகாரமுண்டு, ஆகிலும் எல்லாம் தகுதியாயிராது; எல்லாவற்றையும் அநுபவிக்க எனக்கு அதிகாரமுண்டு, ஆகிலும் நான் ஒன்றிற்கும் அடிமைப்படமாட்டேன்.**

**1கொரி 6:13. வயிற்றுக்குப் போஜனமும், போஜனத்துக்கு வயிறும் ஏற்கும்; ஆனாலும் தேவன் இதையும் அதையும் அழியப்பண்ணுவார். சரீரமோ வேசித்தனத்திற்கல்ல, கர்த்தருக்கே உரியது; கர்த்தரும் சரீரத்திற்கு உரியவர்.**

**1கொரி 6:14. தேவன் கர்த்தரை எழுப்பினாரே, நம்மையும் தமது வல்லமையினாலே எழுப்புவார்.**

**1கொரி 6:15. உங்கள் சரீரங்கள் கிறிஸ்துவின் அவயவங்களென்று அறியீர்களா? அப்படியிருக்க, நான் கிறிஸ்துவின் அவயங்களை வேசியின் அவயவங்களாக்கலாமா? அப்படிச் செய்யலாகாதே.**

**1கொரி 6:16. வேசியோடு இசைந்திருக்கிறவன் அவளுடனே ஒரே சரீரமாயிருக்கிறானென்று அறியீர்களா? இருவரும் ஒரே மாம்சமாயிருப்பார்கள் என்று சொல்லியிருக்கிறதே.**

**1கொரி 6:17. அப்படியே கர்த்தரோடிசைந்திருக்கிறவனும், அவருடனே ஒரே ஆவியாயிருக்கிறான்.**

**1கொரி 6:18. வேசித்தனத்திற்கு விலகியோடுங்கள். மனுஷன் செய்கிற எந்தப் பாவமும் சரீரத்திற்குப் புறம்பாயிருக்கும்; வேசித்தனஞ் செய்கிறவனோ தன் சுயசரீரத்திற்கு விரோதமாய்ப் பாவஞ்செய்கிறான்.**

**1கொரி 6:19. உங்கள் சரீரமானது நீங்கள் தேவனாலே பெற்றும் உங்களில் தங்கியும் இருக்கிற பரிசுத்த ஆவியினுடைய ஆலயமாயிருக்கிற தென்றும், நீங்கள் உங்களுடையவர் களல்லவென்றும் அறியீர்களா?**

**1கொரி 6:20. கிரயத்துக்குக் கொள்ளப்பட்டீர்களே; ஆகையால் தேவனுக்கு உடையவைகளாகிய உங்கள் சரீரத்தினாலும் உங்கள் ஆவியினாலும் தேவனை மகிமைப் படுத்துங்கள்.**

## ஒன்றிற்கும் அடிமைப்பட மாட்டேன்

**எல்லாவற்றையும் அநுபவிக்க எனக்கு அதிகாரமுண்டு, ஆகிலும் எல்லாம் தகுதியாயிராது; எல்லாவற்றையும் அநுபவிக்க எனக்கு அதிகாரமுண்டு, ஆகிலும் நான் ஒன்றிற்கும் அடிமைப்படமாட்டேன் (1கொரி 6:12).**

கொரிந்து சபையிலுள்ள விசுவாசிகள் மத்தியில் போஜனத்தைக்குறித்து கருத்து வேறுபாடுகளும், பிரிவினைகளும் உண்டாயிற்று. பவுல் வேசித்தனத்திற்கு விரோதமாக எச்சரித்து எழுதும்போது, போஜனத்தினால் ஏற்பட்டிருக்கிற பிரச்சனையைக் குறித்தும் எழுதியிருக்கிறார். வேசித்தனத்தையும் போஜனத்தையும் பவுல் இங்கு இணைத்துச் சொல்லுவதற்கு ஒரு காரணமுண்டு. ஒரு சில போஜனங்கள் வேசித்தனத்தோடு கலந்திருக்கிறது.

இப்படிப்பட்ட போஜனங்களை நாம் விலக்கவேண்டுமென்று ஆதித்திருச்சபை தலைவர்கள் ஏற்கெனவே தீர்மானம் செய்திருக்கிறார்கள் (அப் 15).

ஆனால் கொரிந்து சபையிலுள்ள விசுவாசிகளில் சிலர், "எல்லாவற்றையும் அநுபவிக்க எனக்கு அதிகாரமுண்டு" என்று பொறுப்பில்லாமல் சொல்லுகிறார்கள். போஜனத்தைப்பற்றிச் சொல்லும்போது, வேசித்தனத்தையும் இதில் சேர்த்துக்கொள்கிறார்கள். பவுல் இதைப்பற்றி அவர்களுக்கு ஆலோசனை சொல்லும்போது, "எல்லாவற்றையும் அனுபவிக்க எனக்கு அதிகாரமுண்டு, ஆகிலும் எல்லாம் தகுதியாயிராது" என்று சொல்லுகிறார்.

கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் நம்முடைய அதிகாரத்தை மாத்திரம் பார்த்துக்கொண்டிருக்கக் கூடாது. விசுவாசிகளாகிய நமக்கு எது தகுதியானது என்பதையும் யோசித்துப் பார்க்கவேண்டும். நமக்கு அதிகாரமுண்டு என்பதற்காக, நமக்கு தகுதியாயிராத எல்லாவற்றையும் செய்து கொண்டிருக்கக்கூடாது. நாம் எதற்கும் அடிமைப்பட்டு விடவும் கூடாது. நமக்கு அதிகாரமுண்டு என்று சொல்லி ஆட்டம் போடவும் கூடாது. நம்முடைய ஆவிக்குரிய ஜீவியம் நிதானமாயிருக்க வேண்டும். சீராய் நடக்கவேண்டும்.

பவுல் தன்னுடைய அதிகாரத்தைப்பற்றிச் சொல்லும்போது, "எல்லாவற்றையும் அநுபவிக்க எனக்கு அதிகாரமுண்டு, ஆகிலும் நான் ஒன்றிற்கும் அடிமைப்படமாட்டேன்" என்று சொல்லுகிறார். கிறிஸ்துவுக்குள் நமக்கு விடுதலை உண்டு. கிறிஸ்து நம்மை அடிமைத்தனத்திலிருந்து விடுவித்திருக்கிறார். நம்முடைய விடுதலையில் நாம் உறுதியோடிருக்கவேண்டும். அதே வேளையில் நமக்கு விடுதலை உண்டு என்பதற்காக, நமக்குத் தகுதியாயிராதது எல்லாவற்றையும் செய்து கொண்டிருக்கக்கூடாது.

எந்தப் போஜனத்தையும் புசிப்பதற்கு நமக்கு அதிகாரமுண்டு. அதற்காக பெருந்தீனி உண்டு நம்முடைய சரீரத்தின் ஆரோக்கியத்தைக் கெடுத்துப்போடக் கூடாது. கர்த்தர் தங்களுக்குக் கொடுத்திருக்கும் அதிகாரத்தை, தங்கள் இஷ்டம்போல பயன்படுத்துகிறவர்கள் கட்டுப்பாடில்லாமல் பாவத்தில் விழுந்துவிடுவார்கள். ஆகையினால் நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தில், "நிற்கிறோம் என்று சொல்லுகிறவர்கள்" விழாதிருக்கும்படி எச்சரிக்கையோடிருக்கவேண்டும்.

## சரீரமோ கர்த்தருக்கே உரியது

**வயிற்றுக்குப் போஜனமும், போஜனத்துக்கு வயிறும் ஏற்கும்; ஆனாலும் தேவன் இதையும் அதையும் அழியப்பண்ணுவார். சரீரமோ வேசித்தனத்திற்கல்ல, கர்த்தருக்கே உரியது; கர்த்தரும் சரீரத்திற்கு உரியவர் (1கொரி 6:13).**

மனுஷன் கண்டதையெல்லாம் புசிக்கவேண்டுமென்று பேராசைப்பட்டு, பெருந்தீனி உண்டு, தன் சரீரத்தைக் கெடுத்துப்போடக்கூடாது. வயிற்றுக்குப் போஜனமும், போஜனத்திற்கு வயிறும் ஏற்கும். ஆனாலும் வயிற்றுக்கு ஒரு குறிப்பிட்ட அளவு போஜனம் மாத்திரமே ஏற்கும். அளவுக்கு மீறிய போஜனத்தை வயிறு ஏற்காது. வயிற்றுக்குப் போஜனமும், போஜனத்திற்கு வயிறும் ஏற்கும் என்பதற்காக, வயிற்றில் போஜனத்தை மேலும் மேலும் திணித்துக்கொண்டிருக்கக் கூடாது. நம்முடைய போஜனத்தின் அளவில் ஒரு கட்டுப்பாடு இருக்கவேண்டும். தேவையான அளவு மாத்திரம் புசிக்கவேண்டும். அதிகம் புசிக்கவேண்டுமென்று பேராசைப்படக் கூடாது. அளவுக்கு அதிகமான போஜனத்தை விலக்கி வைக்கவேண்டும்.

தேவன் இதையும் அதையும் அழியப்பண்ணுவார். போஜனத்தையும், புசிக்கவேண்டும் என்னும் தேவையையும் தேவன் அழித்துப்போடுவார். ஒரு காலம் வரும், அப்போது நமக்குப் போஜனம் தேவைப்படாது. புசிக்கவேண்டும் என்னும் அவசியம் நமக்கு உண்டாகாது.

பவுல் போஜனத்தைப்பற்றிச் சொல்லும்போது, வேசித்தனத்தைப்பற்றியும் சொல்லி விசுவாசிகளை எச்சரிக்கிறார். சரீரம் வேசித்தனத்திற்கல்ல. கர்த்தருக்கே உரியது. கர்த்தரும் சரீரத்திற்குரியவர். வயிறும் போஜனமும் ஒன்றுக்கொன்று உரியது. ஆனால் சரீரமும் வேசித்தனமும் ஒன்றுக்கொன்று உரியதல்ல.

நம்முடைய சரீரம் வேசித்தனத்திற் குரியதல்ல. இது கர்த்தருக்குரியது. கொரிந்து பட்டணத்திலுள்ள புறஜாதியார் மத்தியில் வேசித்தனப்பாவம் தாராளமாய் நடைபெறுகிறது. தங்கள் சரீரம் வேசித்தனத்திற்குரியது என்று அவர்கள் சொல்லுகிறார்கள். பவுல் அவர்களுடைய உபதேசத்தைத் திருத்துகிறார். சரீரம் வேசித்தனத்திற்குரியதல்ல என்று தெளிவுபடுத்துகிறார். வேசித்தனத்திற்காக சரீரம் சிருஷ்டிக்கப்படவில்லை. சரீரம் கர்த்தருக்கே உரியது. கர்த்தருக்காகவே நம்முடைய சரீரம் சிருஷ்டிக்கப் பட்டிருக்கிறது.

நம்முடைய சரீரங்கள் கிறிஸ்துவின் அவயவங்களாயிருக்கிறது. நாம் கிறிஸ்துவின் அவயவங்களை வேசியின் அவயவங்களாக்கக்கூடாது. கர்த்தர் சரீரத்திற்குரியவர். கர்த்தர் நம்முடைய சரீரத்திற்கு ஆண்டவராகயிருக்கிறார். நம்முடைய சரீரத்தை ஆளுகை செய்யும் அதிகாரம் கர்த்தருக்கு உண்டு. கர்த்தருக்கே உரிதான நம்முடைய சரீரத்தை, நம்முடைய சுயஇஷ்டத்தின் பிரகாரமாக பயன்படுத்தக்கூடாது. நம்முடைய சரீரத்தின் மூலமாய் நாம் கிறிஸ்துவை மகிமைப்படுத்தவேண்டும். கிறிஸ்துவின் நாமம் தூஷிப்பதற்கு நம்முடைய சரீரத்தை ஒரு கருவியாகப் பயன்படுத்தக்கூடாது. நம்முடைய சரீரத்தைப் பொருத்த விஷயத்தில் மிகவும் எச்சரிப்பாயிருக்கவேண்டும்.

## தேவன் கர்த்தரை எழுப்பினாரே

**தேவன் கர்த்தரை எழுப்பினாரே, நம்மையும் தமது வல்லமையினாலே எழுப்புவார் (1கொரி 6:14).**

“கர்த்தரும் சரீரத்திற்கு உரியவர்” என்னும் வாக்கியத்தை வேதபண்டிதர்கள் இவ்வாறு வியாக்கியானம்பண்ணு கிறார்கள். கர்த்தர் சரீரத்தின் உயிர்த்தெழுதலுக்கும், மகிமைப் படுதலுக்கும் உரியவர். நம்முடைய சரீரம் மகிமையுள்ளது. தேவன் கர்த்தரை எழுப்பினார். அதே தேவன் நம்மையும் தமது வல்லமையினால் எழுப்புவார். நம்முடைய சரீரம் உயிரோடெழுப்பப்படுவது, நம்முடைய சரீரத்திற்குக் கிடைத்திருக்கும் மேன்மையும் மகிமையும் ஆகும். இப்படிப்பட்ட மகிமையான சரீரத்தைப் பாவத்தினால் தீட்டுப்படுத்தக்கூடாது. நம்முடைய சரீரத்தை நாம் பரிசுத்தமாக வைத்திருக்கவேண்டும். கிறிஸ்துவின் மகிமையுள்ள சரீரத்திற்கு ஒப்பாக நம்முடைய சரீரமும் மாற்றப்படும். அதற்கேற்ற வண்ணமாக நம்முடைய சரீரங்களை பரிசுத்தமாய்க் காத்துக் கொள்ளவேண்டும். வேசித்தனத்திலிருந்து விலகி ஜீவிக்கவேண்டும்.

## கிறிஸ்துவின் அவயவங்கள்

**உங்கள் சரீரங்கள் கிறிஸ்துவின் அவயங்களென்று அறியீர்களா? அப்படியிருக்க, நான் கிறிஸ்துவின் அவயங்களை வேசியின் அவயவங்களாக்கலாமா? அப்படிச் செய்யலாகாதே (1கொரி 6:15).**

நம்முடைய சரீரம் மகிமையுள்ளது. தேவன் நம்முடைய சரீரத்தை ஏற்கெனவே மகிமைப்படுத்தியிருக்கிறார். நம்முடைய சரீரங்கள் கிறிஸ்துவின் அவயவங்களா யிருக்கிறது. நம்முடைய ஆத்துமா விசுவாசத்தினால் கிறிஸ்துவோடு இணைக்கப்பட்டிருக்கிறது. தேவனுடைய சரீரத்தில் நம்முடைய சரீரங்களெல்லாம் அவயவங்களாகயிருக்கிறது.

நம்முடைய சரீரமும், ஆத்துமாவும் கிறிஸ்துவோடு இணைந்திருக்கிறது. ஆகையினால் கிறிஸ்துவின் அவயவங்களை நாம் வேசியின் அவயவங்களாக்ககூடாது. நம்முடைய சரீரங்கள் வேசியின் அவயவங்களாகும் போது கிறிஸ்துவின் நாமம் தூஷிக்கப்படும். நம்முடைய சரீரமும் மகிமையை இழந்துபோகும். ஏனெனில் வேசியோடு இசைந்திருக்கிறவன் அவளுடனே ஒரே சரீரமாயிருக்கிறான். இருவரும் ஒரே மாம்சமாயிருப்பார்கள். இதுவரையிலும் கிறிஸ்துவின் அவயவமாயிருந்த சரீரம், இப்போது அது வேசியோடு இசைந்திருப்பதினால், அது வேசியின் அவயவமாயிற்று. இந்தச் சரீரம் தேவமகிமையை இழந்துபோயிற்று.

## கர்த்தரோடு இசைந்திருக் கிறவன்

**வேசியோடு இசைந்திருக்கிறவன் அவளுடனே ஒரே சரீரமாயிருக்கிறானென்று அறியீர்களா? இருவரும் ஒரே மாம்சமாயிருப்பார்கள் என்று சொல்லியிருக்கிறதே. அப்படியே கர்த்தரோடிசைந்திருக்கிறவனும், அவருடனே ஒரே ஆவியாயிருக்கிறான் (1கொரி 6:16,17).**

வேசியோடு இசைந்திருக்கிறவன் அவளுடனே ஒரே சரீரமாயிருக்கிறான். இருவரும் ஒரே மாம்சமாயிருப்பார்கள். அப்படியே கர்த்தரோடு இசைந்திருக்கிறவனும் அவருடனே ஒரே ஆவியாயிருக்கிறான். கர்த்தருடைய பிள்ளைகள் கிறிஸ்துவின் மூலமாய் தேவனோடு இணைந்திருக்கிறார்கள். விசுவாசத்தினால் பரிசுத்த ஆவியானவரின் வல்லமையில் பங்குபெறுகிறார்கள். கிறிஸ்துவோடு ஐக்கியமாயிருக்கிறவர்கள் அவருடனே ஒரே ஆவியாயிருக்கிறார்கள். வேசியோடு இசைந்திருக்கிறவன் அவளுடனே ஒரே சரீரமாயிருப்பதுபோல, கர்த்தரோடு இசைந்திருக்கிறவனும் அவருடனே ஒரே ஆவியாயிருக்கிறான்.

நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தில் மாய்மாலம் இருக்கக்கூடாது. தேவனுக்கும் நமக்கும் இடையிலுள்ள ஐக்கியம் சீராகவும், பரிசுத்தமாகவும் இருக்கவேண்டும். கர்த்தருடைய பிள்ளைகள் ஒரே நேரத்தில் வேசியோடும் கர்த்தரோடும் இசைந்திருக்க முடியாது. வேசியோடு இசைந்திருக்கிறவன் அவளுடனே ஒரே சரீரமாயிருப்பான். அதன்பின்பு அவனால் கர்த்தரோடு இசைந்திருப்பது கூடாத காரியம். ஆகையினால் விசுவாசிகள் வேசித்தனத்திற்கு விலகி ஓடவேண்டும்.

பொதுவாக யுத்தம் செய்துதான் ஜெயம்பெற முடியும். ஆனால் வேசித்தனத்தைப் பொறுத்தவரையில், அதிலிருந்து விலகி ஓடித்தான் ஜெயம் பெற முடியும். யுத்தம்பண்ணாமல் யுத்தத்திலிருந்து விலகி ஓடுகிறவன் கோழை என்றும், தோற்றுப்போனவனென்றும் அறிவிக்கப் படுவான். ஆனால் வேசித்தனத்திற்கு விலகி ஓடுகிறவனோ ஜெயம் பெற்றவனாக அறிவிக்கப்படுவான்.

## வேசித்தனத்திற்கு விலகி ஓடுங்கள்

**வேசித்தனத்திற்கு விலகியோடுங்கள். மனுஷன் செய்கிற எந்தப் பாவமும் சரீரத்திற்குப் புறம்பாயிருக்கும்; வேசித்தனஞ் செய்கிறவனோ தன் சுயசரீரத்திற்கு விரோதமாய்ப் பாவஞ்செய்கிறான் (1கொரி 6:18).**

வேசித்தனப்பாவம் மிகவும் மோசமானது. வேசித்தனம் செய்கிறவன் தன் சுயசரீரத்திற்கு விரோதமாய்ப் பாவம் செய்கிறான். மற்ற பாவங்களெல்லாம் சரீரத்திற்குப் புறம்பாயிருக்கும். வேசித்தனம் செய்கிறவன் தன் சுயசரீரத்தைக் கெடுத்துப்போடுகிறான். கர்த்தராகிய இயேசுகிறிஸ்து நம்முடைய பாவங்களை மன்னித்து, நம்மை இரட்சித்து, நம்மைத் தேவனோடு ஒப்புரவாக்கியிருக்கிறார்.

ஆனால் மனுஷனோ வேசித்தனம் செய்து, தேவன் தனக்குக் கொடுத்திருக்கிற பெரிய ஆசீர்வாதத்தை இழந்துபோகிறான். நம்முடைய சரீரத்திற்கு விரோதமாக நாம் பாவம் செய்யும்போது, நம்முடைய சரீரத்தை நாமே அழித்துப்போடுகிறோம். ஆகையினால் நாம் வேசித்தனத்திற்கு விலகி ஓடவேண்டுமென்று பவுல் ஆலோசனை சொல்லுகிறார்.

## பரிசுத்த ஆவியினுடைய ஆலயம்

**உங்கள் சரீரமானது நீங்கள் தேவனாலே பெற்றும் உங்களில் தங்கியும் இருக்கிற பரிசுத்த ஆவியினுடைய ஆலயமாயிருக் கிறதென்றும், நீங்கள் உங்களுடையவர் களல்லவென்றும் அறியீர்களா? (1கொரி 6:19)**

விசுவாசிகளுடைய சரீரம் பரிசுத்த ஆவியினுடைய ஆலயமாயிருக்கிறது. இந்த ஆலயத்தில் தேவன் தங்கியிருக்கிறார். நம்முடைய சரீரத்தை நாம் தேவனாலே பெற்றிருக்கிறோம். தேவன் நமக்குள் பரிசுத்த ஆவியானவராக வாசம்பண்ணுகிறார். கிறிஸ்துவானவரும் ஆவியானவரும் ஒன்றாயிருக்கிறார்கள். கிறிஸ்துவோடு ஐக்கியமாயிருக்கிறவன் ஆவியானவரோடும் ஐக்கியமாயிருக் கிறான். நம்முடைய சரீரங்களை நாம் தேவனுக்கு ஒப்புக்கொடுக்கும்போது, தேவன் நம்முடைய சரீரத்தில் தங்கியிருக்கிறார். பரிசுத்த ஆவியானவராக அவர் நம்முடைய சரீரத்தில் தங்கியிருக்கிறார்.

தேவன் தங்கியிருக்கிற வாசஸ்தலமே ஆலயம் என்று அழைக்கப்படுகிறது. தேவனுடைய பரிசுத்தமான காரியங்கள் அவருடைய ஆலயத்தில் நடைபெறும். தேவனுடைய ஆலயம் பரிசுத்த ஆவியினுடைய ஆலயமாகும். தேவன் நமக்குள் தங்கியிருப்பதினால், நாம் நம்முடையவர்களல்ல. நாம் தேவனுக்காக, தேவனால் ஆளுகை செய்யப்படுகிறோம்.

தேவன் நம்மை கிரயத்திற்கு வாங்கியிருக்கிறார். பவுல் இந்தச் சத்தியத்தைச் சொல்லும்போது, “கிரயத்திற்குக் கொள்ளப்பட்டீர்கள்” என்று சொல்லுகிறார். நம்முடைய சரீரமானது தேவனாலே சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறது. தேவனுக்காகவே சிருஷ்டிக்கப் பட்டிருக்கிறது. தேவனுக்காகவே கிரயத்திற்குக் கொள்ளப்பட்டிருக்கிறது. நம்முடைய சரீரம் பரிசுத்த ஆவியினுடைய ஆலயமாயிருக்கிறது. பரிசுத்தமாயிருக்க வேண்டிய தேவனுடைய ஆலயத்தை நாம் அசுத்தப்படுத்தக்கூடாது. தேவனுடைய பரிசுத்தமான காரியங்கள் நடைபெற வேண்டிய நம்முடைய சரீரத்தில், வேசித்தனம் நடைபெறக்கூடாது.

பரிசுத்த ஆவியினுடைய ஆலயம் பரிசுத்தமாயிருக்கவேண்டும். நம்முடைய சரீரம் தேவனுக்குரியது. நாம் தேவனுக்குரியவர்கள். தேவன் நம்முடைய சரீரத்தில் தங்கியிருக்கும் வண்ணமாக, நம்முடைய சரீரத்தைப் பரிசுத்தப்படுத்தவேண்டும். தேவன் நம்முடைய சரீரத்தைத் தம்முடைய ஆலயமாகப் பயன்படுத்திக்கொள்ளும் வண்ணமாக, நாம் பரிசுத்தமாயிருக்க வேண்டும்.

## தேவனை மகிமைப்படுத்துங்கள்

**கிரயத்துக்குக் கொள்ளப் பட்டீர்களே; ஆகையால் தேவனுக்கு உடையவைகளாகிய உங்கள் சரீரத்தினாலும் உங்கள் ஆவியினாலும் தேவனை மகிமைப்படுத்துங்கள் (1கொரி 6:20).**

நாம் தேவனுக்கு உடையவர்கள். நம்முடைய தேவனை நாம் நம்முடைய சரீரத்தினாலும், நம்முடைய ஆவியினாலும் மகிமைப்படுத்தவேண்டும். தேவனே நம்முடைய சரீரத்தையும் ஆவியையும் சிருஷ்டித்தவர். தேவனே இவை இரண்டையும் கிரயத்திற்குக் கொண்டிருக் கிறவர். ஆகையினால் இந்தப் பாத்திரங்களை நம்முடைய கர்த்தர் பயன்படுத்துவதற்கு ஏற்ற பாத்திரங்களாக நாம் சுத்தப்படுத்தவேண்டும்.

# 1 கொரிந்தியர் - விரிவுரை
# I CORINTHIANS - COMMENTARY

நம்முடைய சரீரம் மாத்திரமல்ல, நம்முடைய ஆவியும் ஆத்துமாவும் கர்த்தருக்குப் பரிசுத்தமாயிருக்கவேண்டும். நாம் தேவனுக்கு உடையவர்கள். ஆகையால் நம்முடைய சரீரத்தினாலும், நம்முடைய ஆவியினாலும் தேவனை மகிமைப்படுத்தவேண்டும். சரீரமும் ஆவியும் சுத்தமாகயிருக்கவேண்டும். இவை இரண்டின் மூலமாக தேவன் மகிமையடைய வேண்டும்.

நம்முடைய சரீரமோ அல்லது நம்முடைய ஆவியோ பாவத்தினால் அசுத்தப்படும்போது, தேவனுக்கு அவமதிப்பு உண்டாகும். ஆகையினால் கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் வேசித்தனத்தைவிட்டு மாத்திரமல்ல, எல்லா பாவங்களையும்விட்டு விலகி ஓடவேண்டும். நம்முடைய சரீரங்களை தேவனுடைய மகிமைக்காகவும், தேவனுடைய ஊழியத்திற்காகவும் பயபக்தியோடு பயன்படுத்தவேண்டும்.

# 7 அதிகாரம்

கொரிந்து சபையிலுள்ள விசுவாசிகள் மத்தியில் திருமண காரியங்களைக் குறித்து சில சந்தேகங்கள் உண்டாயிற்று. பவுல் அவர்களுடைய சந்தேகங்களுக்கு இந்த அதிகாரத்தில் பதில் சொல்லுகிறார். வேசித்தனம் இல்லாத படிக்கு திருமணம் நியமிக்கப்பட்டிருக்கிறது (1கொரி 7:1-9). விவாகம்பண்ணிக்கொண்டவர்கள் தங்கள் விவாக உறவில் நிலைத்திருக்க வேண்டும். அவிசுவாசியோடு விவாகம் நடைபெற்றிருந்தாலும், விவாகத்தை முறித்துப்போடாமல் விவாக உறவைத் தொடரவேண்டும் (1கொரி 7:10-16).

ஒருவர் கர்த்தருடைய பிள்ளையாகயிருப்பதினால், எல்லா காரியங்களிலும் மாறுபட்டு ஜீவிக்க வேண்டும் என்னும் அவசியமில்லை. அவனவன் தான் அழைக்கப்பட்ட நிலமையில் நிலைத்திருக்க வேண்டும் (1கொரி 7:17-20). விவாகமில்லாமல் இருக்கிறது மனுஷருக்கு நலமாயிருக்கும். ஆனாலும் விவாகம் பண்ணினாலும் அது பாவமல்ல (1கொரி 7:21-25). கன்னிகைகள் விவாகம் பண்ணலாம் (1கொரி 7:36-38). தன் புருஷன் மரித்தபின்பு கைம்பெண்ணாயிருக்கிறவள் விவாகம் பண்ணிக்கொள்ளலாம் (1கொரி 7:39-40).

## வேசித்தனம் இராதபடிக்கு 1கொரி 7:1-9

**1கொரி 7:1. நீங்கள் எனக்கு எழுதின காரியங்களைக் குறித்து நான் எழுதுகிறதென்னவென்றால், ஸ்திரீயைத் தொடாமலிருக்கிறது மனுஷனுக்கு நல்லது.**

**1கொரி 7:2. ஆகிலும் வேசித்தனம் இராதபடிக்கு அவனவன் தன் சொந்த மனைவியையும், அவளவள் தன் சொந்த புருஷனையும் உடையவர்களாயிருக்கவேண்டும்.**

**1கொரி 7:3. புருஷன் தன் மனைவிக்குச் செய்ய வேண்டிய கடமையைச் செய்யக் கடவன்; அப்படியே மனைவியும் தன் புருஷனுக்குச் செய்யக்கடவள்.**

**1கொரி 7:4. மனைவியானவள் தன் சுயசரீரத்திற்கு அதிகாரியல்ல, புருஷனே அதற்கு அதிகாரி; அப்படியே புருஷனும் தன் சுயசரீரத்திற்கு அதிகாரியல்ல, மனைவியே அதற்கு அதிகாரி.**

**1கொரி 7:5. உபவாசத்திற்கும் ஜெபத்திற்கும் தடையிராதபடிக்கு இருவரும் சிலகாலம் பிரிந்திருக்க வேண்டுமென்று சம்மதித்தாலன்றி, ஒருவரைவிட்டு ஒருவர் பிரியாதிருங்கள்; உங்களுக்கு விரதத்துவம் இல்லாமையால் சாத்தான் உங்களைத் தூண்டி விடாதபடிக்கு, மறுபடியும் கூடி வாழுங்கள்.**

**1கொரி 7:6. இதை நான் கட்டளையாகச் சொல்லாமல், யோசனையாகச் சொல்லுகிறேன்.**

**1கொரி 7:7. எல்லா மனுஷரும் என்னைப் போலவே இருக்க விரும்புகிறேன். ஆகிலும் அவனவனுக்கு தேவனால் அருளப்பட்ட அவனவனுக்குரிய வரமுண்டு; அது ஒருவனுக்கு ஒருவிதமாயும், மற்றொருவனுக்கு வேறுவிதமாயும் இருக்கிறது.**

**1கொரி 7:8. விவாகமில்லாதவர்களையும், கைம்பெண்களையும் குறித்து நான் சொல்லுகிறது என்னவென்றால், அவர்கள் என்னைப்போல இருந்து விட்டால் அவர்களுக்கு நலமாயிருக்கும்.**

**1கொரி 7:9. ஆகிலும் அவர்கள் விரத்தராயிருக்கக் கூடாதிருந்தால் விவாகம் பண்ணக் கடவர்கள்; வேகிறதைப் பார்க்கிலும் விவாகம் பண்ணுகிறது நலம்.**

## ஸ்திரீயை தொடாமலிருக்கிறது

**நீங்கள் எனக்கு எழுதின காரியங்களைக் குறித்து நான் எழுதுகிற தென்னவென்றால், ஸ்திரீயைத் தொடாமலிருக்கிறது மனுஷனுக்கு நல்லது (1கொரி 7:1).**

கொரிந்து சபையிலுள்ள விசுவாசிகளில் சிலர் பவுலுக்கு நிருபங்களை எழுதியிருக்கிறார்கள். ஆவிக்குரிய காரியங்களில் தங்களுக்கு உண்டாயிருக்கும் சந்தேகத்தைத் தெளிவுபடுத்துமாறு அவரிடத்தில் கேட்டிருக்கிறார்கள். பவுல் அவர்கள் எழுதின காரியங்களைக்குறித்து இந்த அதிகாரத்தில் பதில் சொல்லுகிறார். விசுவாசிகளுக்கு உண்டாகும் ஆவிக்குரிய சந்தேகங்களை ஊழியக்காரர்கள் தீர்த்து வைக்க ஆயத்தமாயிருக்க வேண்டும். இதற்கு முந்திய அதிகாரத்தில் வேசித்தனத்தைக்குறித்து பவுல் எச்சரித்து எழுதியிருந்தார். வேசித்தனத்தை விட்டு விலகி ஓடவேண்டுமென்று அவர்களுக்கு ஆலோசனை சொன்னார். இந்த அதிகாரத்திலோ விவாகம்பண்ணுவதைக் குறித்து உபதேசம்பண்ணுகிறார்.

ஸ்திரீயைத் தொடாமலிருக்கிறது மனுஷனுக்கு நல்லது. விவாகம் பண்ணாமலேயே குடும்ப உறவிலிருந்து பிரிந்திருப்பது மனுஷனுக்கு நல்லது என்று பவுல் ஆலோசனை சொல்லுகிறார். ஸ்திரீயைத் தொடாமலிருப்பது என்னும் வாக்கியத்திற்கு, “எந்த ஸ்திரீயையும் தன்னுடைய மனைவியாக விவாகம் பண்ணாதிருப்பது” என்று பொருள்.

“நல்லது” என்னும் வார்த்தைக்கு “தேவனுடைய சிந்தைக்கு இசைந்தது” என்று பொருள். ஆதித்திருச்சபையிலுள்ள விசுவாசிகள் எல்லா காரியங்களிலும் தீவிரமாயிருந்தார்கள். கற்பிலும், விவாகமில்லாமல் இருப்பதிலும் அவர்கள் தீவிர ஆர்வம் காண்பித்தார்கள். விவாகம்பண்ணுவது பாவம் என்று கூட ஒரு சிலர் சொன்னார்கள். தங்களிடத்தில் தேவனுடைய சிந்தையிருப்பதே பிரதானம் என்று அவர்கள் அக்கரையோடு ஜீவித்தார்கள்.

விசுவாசிகள் விவாகம்பண்ணாமல் தனிமையாயிருப்பது நல்லது. அது விசுவாசிகளின் ஆவிக்குரிய ஜீவியத்திற்கு பிரயோஜனமாயிருக்கும். விவாகம் பண்ணாமல் தனிமையிலிருக்கிறவர்கள் தங்கள் கற்பைக் காத்துக்கொள்ள வேண்டும். கற்பைக் காத்துக்கொள்ள முடிகிறவர்கள், விவாகம் பண்ணாமலிருப்பது, அவர்களுக்கு நன்மையாகவே இருக்கும்.

## வேசித்தனம் இராதபடிக்கு

**ஆகிலும் வேசித்தனம் இராதபடிக்கு அவனவன் தன் சொந்த மனைவியையும், அவளவள் தன் சொந்த புருஷனையும் உடையவர்களாயிருக்க வேண்டும். புருஷன் தன் மனைவிக்குச் செய்ய வேண்டிய கடமையைச் செய்யக் கடவன்; அப்படியே மனைவியும் தன் புருஷனுக்குச் செய்யக் கடவள். மனைவியானவள் தன் சுயசரீரத்திற்கு அதிகாரியல்ல, புருஷனே அதற்கு அதிகாரி; அப்படியே புருஷனும் தன் சுயசரீரத்திற்கு அதிகாரியல்ல, மனைவியே அதற்கு அதிகாரி. உபவாசத்திற்கும் ஜெபத்திற்கும் தடையிராதபடிக்கு இருவரும் சில்காலம் பிரிந்திருக்க வேண்டுமென்று சம்மதித்தாலன்றி, ஒருவரைவிட்டு ஒருவர் பிரியாதிருங்கள்; உங்களுக்கு விரதத்துவம் இல்லாமையால் சாத்தான் உங்களைத் தூண்டி விடாதபடிக்கு, மறுபடியும் கூடி வாழுங்கள் (1கொரி 7:2-5).**

விசுவாசிகளுக்குள் வேசித்தனம் இருக்கக் கூடாது. வேசித்தனம் இருக்கக்கூடாது என்பதற்காகவே தேவன் தம்முடைய தெய்வீக ஞானத்தினால், மனுஷர் மத்தியிலே விவாகத்தை உண்டு பண்ணியிருக்கிறார். விவாகம் பண்ணியவர்கள் தங்களுக்குள் இணைந் திருக்க வேண்டும். வேசித்தனம் பண்ணக் கூடாது. விவாகம்பண்ணிக் கொண்டவர்கள், ஒருவருக்கொருவர் செய்துகொள்ள வேண்டிய கடமையைச் செய்யவேண்டும். மனைவி புருஷனுக்குரிய கடமையையும், புருஷன் மனைவிக்குரிய கடமையையும் செய்யவேண்டும்.

புருஷனும் மனைவியும் ஒருவரை விட்டு ஒருவர் பிரியாதிருக்கவேண்டும். பிரியவேண்டுமென்றால் இருவருடைய சம்மதத்தின்படி சில காலம் பிரிந்திருக்கலாம். பிரிந்திருப்பதற்கும் முக்கியமான காரணம் இருக்கவேண்டும். உபவாசத்திற்கும் ஜெபத்திற்கும் தடையிராதபடிக்கு அவர்கள் சில காலம் பிரிந்திருக்கலாம். அதற்கும் அவர்கள் இருவரும் சம்மதித்திருக்க வேண்டும். ஆவிக்குரிய காரியங்களில் புருஷனும் மனைவியும் ஈடுபட்டிருக்கும் போது, அவற்றில் அதிகக் கவனம் செலுத்துவதற்காக, புருஷனும் மனைவியும் பிரிந்திருக்கலாம். இவர்கள் சட்டத்தின்படி விவாகத்தினால் இணைக்கப் பட்டிருக்கிறார்கள். ஆனாலும் ஆவிக்குரிய காரியங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து, தங்களுடைய மாம்சத்தின் ஆசைகளை நிறைவேற்றாமல், சிறிது காலம் விலகியிருக்கிறார்கள்.

### விரத்தர்

**இதை நான் கட்டளையாகச் சொல்லாமல், யோசனையாகச் சொல்லுகிறேன். எல்லா மனுஷரும் என்னைப் போலவே இருக்க விரும்புகிறேன். ஆகிலும் அவனவனுக்கு தேவனால் அருளப்பட்ட அவனவனுக்குரிய வரமுண்டு; அது ஒருவனுக்கு ஒருவிதமாயும், மற்றொருவனுக்கு வேறுவிதமாயும் இருக்கிறது. விவாகமில்லாத வர்களையும், கைம்பெண்களையும் குறித்து நான் சொல்லுகிறது என்ன வென்றால், அவர்கள் என்னைப்போல இருந்து விட்டால் அவர்களுக்கு நலமாயிருக்கும். ஆகிலும் அவர்கள் விரத்தராயிருக்கக் கூடாதிருந்தால் விவாகம் பண்ணக் கடவர்கள்; வேகிறதைப் பார்க்கிலும் விவாகம் பண்ணுகிறது நலம் (1கொரி 7:6-9).**

வேசித்தனம் இராதபடிக்கு புருஷனும் ஸ்திரீயும் விவாகம்பண்ணிக் கொள்ள வேண்டும் என்று பவுல் ஆலோசனை சொல்கிறார் (1கொரி 7:2). ஆனாலும் தன்னுடைய ஆலோசனைக்கு ஒரு வரம்பையும் கொடுக்கிறார். ஒவ்வொரு மனுஷனும் விவாகம் பண்ண வேண்டுமென்று பவுல் கட்டாயம் பண்ணவில்லை. பவுல் விவாகம் பண்ணவில்லை. எல்லா மனுஷரும் தன்னைப்போலவே, விவாகம்பண்ணாமல் இருக்கவேண்டுமென்று விரும்புகிறார்.

ஒவ்வொரு மனுஷனுடைய சுபாவமும் வித்தியாசமாகயிருக்கும். ஒரு சிலரால் தங்கள் சரீரத்தின் இச்சைகளை அடக்கிக்கொள்ள முடியும். சிலரால் அடக்கிக் கொள்ள முடியாது. கட்டுப்பாடோடு ஜீவிக்க முடிகிறவர்கள் விவாகமில்லாமல் தனிமையிலிருப்பது நல்லது.

விவாகத்தைப்பற்றிச் சொல்லும்போது பவுல் தன்னுடைய ஆலோசனையை யார் மீதும் திணிக்கவில்லை. தன்னுடைய ஆலோசனைக்குட்படவேண்டுமென்று பவுல் யாரையும் கட்டாயப்படுத்தவுமில்லை. விவாகம் பண்ணாமல் இருக்கிறவர்கள் வேசித்தனமில்லாமலும் இருக்கவேண்டும். ஏனெனில் வேகிறதைப் பார்க்கிலும் விவாகம் பண்ணுகிறது நலம். விவாகமில்லாதவர்களாய் இருக்கிறவர்கள் விரத்தராயிருக்கவேண்டும். தங்களுடைய சரீரத்தின் ஆசைகளைக் கட்டுப்படுத்த வேண்டும். விரதத்துவத்தில் இருக்க வேண்டும். விரத்தராயிருக்கக் கூடாதிருந்தால் அவர்கள் விவாகம் பண்ணிக்கொள்ளலாம்.

## அவிசுவாசி
## 1கொரி 7 : 10-16

1கொரி 7:10. விவாகம் பண்ணிக் கொண்டவர்களுக்கு நானல்ல, கர்த்தரே கட்டளையிடுகிறதாவது: மனைவியானவள் தன் புருஷனை விட்டுப் பிரிந்து போகக் கூடாது.

1கொரி 7:11. பிரிந்துபோனால் அவள் விவாகமில்லாதிருக்கக்கடவள்; அல்லது புருஷனோடே ஒப்புரவாகக்கடவள். புருஷனும் தன் மனைவியைத் தள்ளிவிடக்கூடாது.

1கொரி 7:12. மற்றவர்களைக்குறித்துக் கர்த்தர் அல்ல, நானே சொல்லுகிறதாவது: சகோதரனொருவனுடைய மனைவி அவிசுவாசியாயிருந்தும், அவனுடனே வாசமாயிருக்க அவளுக்குச் சம்மதமிருந்தால் அவன் அவளைத் தள்ளிவிடாதிருக்கக்கடவன்.

1கொரி 7:13. அப்படியே ஒரு ஸ்திரீயினுடைய புருஷன் அவிசுவாசியாயிருந்தும், அவளுடனே வாசமாயிருக்க அவனுக்குச் சம்மதமிருந்தால், அவள் அவனைத் தள்ளி விடாதிருக்கக்கடவள்.

1கொரி 7:14. என்னத்தினாலெனில், அவிசுவாசியான புருஷன் தன் மனைவியால் பரிசுத்தமாக்கப்படுகிறான்; அவிசுவாசியான மனைவியும் தன் புருஷனால் பரிசுத்தமாக்கப்படுகிறாள். இல்லாவிட்டால் உங்கள் பிள்ளைகள் அசுத்தமாயிருக்குமே; இப்பொழுதோ அவைகள் பரிசுத்தமாயிருக்கின்றன.

1கொரி 7:15. ஆகிலும் அவிசுவாசி பிரிந்து போனால் பிரிந்து போகட்டும், இப்படிப்பட்ட விஷயத்தில், சகோதரனாவது சகோதரியாவது அடிமைப் பட்டவர்களல்ல. சமாதானமாயிருக்கும்படிக்கே தேவன் நம்மை அழைத்திருக்கிறார்.

1கொரி 7:16. மனைவியானவளே, நீ உன் புருஷனை இரட்சிப்பாயோ அல்லவோ உனக்கு எப்படித்தெரியும்? புருஷனே, நீ உன் மனைவியை இரட்சிப்பாயோ அல்லவோ உனக்கு எப்படித் தெரியும்?

## விவாகம்பண்ணிக் கொண்டவர்கள்

விவாகம் பண்ணிக் கொண்டவர்களுக்கு நானல்ல, கர்த்தரே கட்டளையிடுகிறதாவது: மனைவியானவள் தன் புருஷனை விட்டுப் பிரிந்து போகக் கூடாது. பிரிந்து போனால் அவள் விவாகமில்லாதிருக்கக் கடவள்; அல்லது புருஷனோடே ஒப்புரவாகக்கடவள். புருஷனும் தன் மனைவியைத் தள்ளிவிடக் கூடாது (1கொரி 7:10,11).

ஆதித்திருச்சபையின் காலத்தில் விசுவாசிகளுக்கும் அவிசுவாசிகளுக்குமிடையே விவாகம் நடைபெற்றிருக்கிறது. மோசேயின் பிரமாணத்தின்படி இப்படிப்பட்டவர்கள் விவாகரத்து செய்து கொள்ளலாம். விசுவாசிகள் மத்தியில் மோசேயின் பிரமாணத்தைக் குறித்தும், தங்கள் காலத்தில் பழக்கத்திலிருந்த சமுதாயத்தின் பிரமாணத்தைக்குறித்தும் குழப்ப முண்டாயிற்று. விவாக வாழ்க்கையில் அவர்கள் தெளிவில்லாதவர்களாகயிருந்தார்கள். விசுவாசிகளும் அவிசுவாசிகளும் விவாகத்தில் இணைக்கப்பட்டிருக்கும் போது, மேலும் இணைந்து வாழ வேண்டுமா, அல்லது பிரிந்துவிட வேண்டுமா என்று அவர்கள் மத்தியில் பல்வேறு உபதேசங்கள் உண்டாயிற்று. பவுல் இந்தப் பிரச்சனைக்கு தீர்வு சொல்லுகிறார்.

விவாக கடமை அவர்களுடைய ஜீவிய காலம் முழுவதற்கும் உரியது. ஒரு புருஷனும் ஸ்திரீயும் விவாகத்தில் இணைக்கப்படும்போது, அவர்கள் தங்கள் ஜீவியகாலம் முழுவதும் விவாக உறவில் இணைக்கப்படுகிறார்கள். மனைவியானவள் தன் புருஷனை விட்டுப் பிரிந்து போகக் கூடாது (1கொரி 7:10). அது போலவே புருஷனும் தன் மனைவியைத் தள்ளிவிடக்கூடாது (1கொரி 7:11).

விவாகம்பண்ணியவர்கள் பிரிந்து போகக்கூடாது என்று கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவும் உபதேசம் பண்ணுகிறார். "நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; வேசித்தன முகாந்தரத்தினாலொழிய தன் மனைவியைத் தள்ளிவிடுகிறவன், அவளை விபசாரஞ்செய்யப்பண்ணுகிறவனாயிருப்பான்; அப்படித் தள்ளிவிடப்பட்டவளை விவாகம் பண்ணுகிறவனும் விபசாரஞ் செய்கிறவனாயிருப்பான்" (மத் 5:32).

இயேசு கிறிஸ்து அனுமதித்திருக்கிற காரணத்தின் நிமித்தம் மாத்திரமே விவாகம்பண்ணியவர்கள் பிரிந்துபோகலாம். வேசித்தன முகாந்தரம் இருந்தால் மாத்திரம் புருஷனும் மனைவியும் பிரியலாம். மற்றபடி விவாகம் பண்ணியவர்கள் பிரிந்துபோகக்கூடாது.

புருஷனும் மனைவியும் சண்டை போட்டுக் கொள்ளக் கூடாது. அவர்களிடத்தில் கருத்து வேறுபாடும் உண்டாகக்கூடாது. சண்டை சச்சரவுகள் ஏதாவது உண்டானால் உடனே அவர்கள் ஒப்புரவாகிவிட வேண்டும். கோபத்தில் நிலைத்திருக்கக் கூடாது. இவர்கள் இருவரும் தங்கள் ஜீவியகாலம் முழுவதும் இணைந்திருக்க வேண்டியவர்கள். புருஷனும் மனைவியும் தங்கள் பாரத்தை ஒருவர்மீது ஒருவர் சுமத்த முயற்சி பண்ணக்கூடாது. பாரத்தை மற்றவர்மீது சுமத்துவதற்குப் பதிலாக, மற்றவருடைய பாரத்தை தங்கள் தோள்களின்மீது சுமந்துகொள்ள வேண்டும். குடும்ப பாரத்தை புருஷனும் மனைவியும் பங்கிட்டுக்கொள்ளும்போது பாரத்தின் சுமை எளிதாகயிருக்கும். ஆகையினால் தங்களால் முடிந்தவரையிலும் புருஷனும் மனைவியும் ஒருவருக்கொருவர் உதவியாயும் ஒத்தாசையாயும் இருக்க வேண்டும்.

## தள்ளிவிடாதிருக்கக்கடவன்

**மற்றவர்களைக்குறித்துக் கர்த்தர் அல்ல, நானே சொல்லுகிறதாவது: சகோதரனொருவனுடைய மனைவி அவிசுவாசியாயிருந்தும், அவனுடனே வாசமாயிருக்க அவளுக்குச் சம்மதமிருந்தால் அவன் அவளைத் தள்ளிவிடாதிருக்கக் கடவன். அப்படியே ஒரு ஸ்திரீயினுடைய புருஷன் அவிசுவாசியாயிருந்தும், அவளுடனே வாசமாயிருக்க அவனுக்குச் சம்மதமிருந்தால், அவள் அவனைத் தள்ளிவிடாதிருக்கக் கடவள் (1கொரி 7:12,13).**

விவாகத்தில் இணைக்கப்பட்டவர்களில் ஒருவர் விசுவாசியாகவும், மற்றவர் அவிசுவாசியாகவும் இருப்பதற்கு வாய்ப்புள்ளது. இப்படிப்பட்ட சூழ்நிலையில் அவர்கள் என்ன செய்யவேண்டுமென்று பவுல் ஆலோசனை சொல்லுகிறார். இந்த ஆலோசனை கர்த்தருடைய ஆலோசனை அல்ல என்றும், தன்னுடைய சொந்த ஆலோசனை மாத்திரமே என்றும் பவுல் அங்கீகரிக்கிறார். பவுல் தானாகவே இதைச் சொன்னாலும், தேவ ஆவியானவரே, அவருக்கு ஞானத்தைக் கொடுத்து, அவரை ஏவி, இந்த ஆலோசனையை சொல்ல வைக்கிறார். பவுலிடத்திலும் தேவனுடைய ஆவி உண்டு. ஆகையினால் பவுல் தன்னுடைய அபிப்பிராயத்தைச் சொன்னாலும், அந்த அபிப்பிராயம் தேவனுடைய ஆவியானவரால் அங்கீகாரம் பண்ணப் பட்டதாகயிருக்கிறது (1கொரி 7:4).

விவாகத்தில் இணைக்கப் பட்டிருக்கிறவர்களில் ஒருவர் விசுவாசியாகவும், மற்றொருவர் அவிசுவாசியாகவும் இருக்கும் போது, அவர்கள் விவாக உறவை தொடர சம்மதமிருந்தால், யாரும் யாரையும் தள்ளிவிடாதிருக்க வேண்டும். அவர்கள் பிரிந்திருக்கக் கூடாது. ஒருவர் விசுவாசியாகயிருப்பதினால் அவர் தன்னுடைய விவாக உறவை தள்ளிவிடலாமென்று தேவன் அங்கீகாரம் கொடுக்கவில்லை. கிறிஸ்தவ உபதேசம் திருமண உறவை பிரிக்காது. அது திருமண உறவை வலுப்படுத்தும். கிறிஸ்தவ உபதேசம் கணவனையும் மனைவியையும் பிரிக்காது. அது அவர்கள் இருவரையும் நெருங்கிய ஐக்கியத்தில் இணைக்கும்.

விசுவாசியும் அவிசுவாசியும் விவாகத்தில் இணைக்கப்பட்ட பின்பு, அவிசுவாசி பிரிந்துபோனால் பிரிந்து போகட்டும் என்று பவுல் ஆலோசனை சொல்லுகிறார். இப்படிப்பட்ட விஷயத்தில் புருஷனாவது, மனைவியாவது அடிமைப்பட்டவர்களல்ல. மனைவி யானவள் புருஷனை விட்டுப் பிரிந்து போனால் அவள் விவாகமில்லாதிருக்க வேண்டும் என்று பவுல் ஆலோசனை சொல்லுகிறார் (1கொரி 7:19).

## பரிசுத்தமாயிருக்கின்றன

**என்னத் தினாலெனில், அவிசுவாசியான புருஷன் தன் மனைவியால் பரிசுத்த மாக்கப்படுகிறான்; அவிசுவாசியான மனைவியும் தன் புருஷனால் பரிசுத்தமாக்கப் படுகிறாள். இல்லாவிட்டால் உங்கள் பிள்ளைகள் அசுத்தமாயிருக்குமே; இப்பொழுதோ அவைகள் பரிசுத்தமாயிருக்கின்றன. ஆகிலும் அவிசுவாசி பிரிந்து போனால் பிரிந்து போகட்டும், இப்படிப்பட்ட விஷயத்தில், சகோதரனாவது சகோதரியாவது அடிமைப் பட்டவர்களல்ல. சமாதானமாயிருக்கும் படிக்கே தேவன் நம்மை அழைத்திருக்கிறார். மனைவியானவளே, நீ உன் புருஷனை இரட்சிப்பாயோ அல்லவோ உனக்கு எப்படித்தெரியும்? புருஷனே, நீ உன் மனைவியை இரட்சிப்பாயோ அல்லவோ உனக்கு எப்படித் தெரியும்? (1கொரி 7:14-16)**

விவாகத்தில் இணைக்கப் பட்டிருக்கிறவர்களில் ஒருவர் விசுவாசியாகவும், ஒருவர் அவிசுவாசியாகவும் இருக்கும் போது, இவர்கள் இருவரும் சேர்ந்து வாசமாயிருக்க இருவருக்கும் சம்மதமாயிருந்தால், யாரும் யாரையும் தள்ளிவிடாமல், விவாக உறவில் நீடித்திருக்க வேண்டும். இந்த ஆலோசனைக்கு பவுல் காரணத்தையும் சொல்லுகிறார். விவாக உறவானது புருஷனாலும் மனைவியாலும் பரிசுத்தமாக்கப்படுகிறது. புருஷன் தன் மனைவியால் பரிசுத்தமாக்கப்படுகிறான். மனைவி தன் புருஷனால் பரிசுத்தமாக்கப்படுகிறாள்.

இவர்களுடைய விவாக உறவில் ஒருவர் விசுவாசியாகவும், ஒருவர் அவிசுவாசியாகவும் இருந்தாலும், இவர்கள் பரிசுத்தமாயிருப்பார்களென்றால், அவர்களுடைய விவாக உறவும் அவர்களுக்கு பரிசுத்தமாயிருக்கும். மனைவியினிமித்தமாக புருஷனும், புருஷன் நிமித்தமாக மனைவியும் பரிசுத்த மாக்கப்படுகிறார்கள்.

இவர்கள் பரிசுத்தமாக்கப்படா விட்டால் இவர்களுடைய பிள்ளைகள் அசுத்தமாயிருக்கும் (1கொரி 7:10). விவாகத்தில் இணைந்திருக்கிறவர்களில் ஒருவர் விசுவாசியாகவும், ஒருவர் அவிசுவாசியாகவும் இருக்கும் போது, அவர்களுடைய பிள்ளைகள் இவ்வுலகத்திற்குரியவர்களல்ல. அவர்கள் கர்த்தருடைய சபைக்கே உரியவர்கள். விவாகத்தில் இணைக்கப் பட்டிருக்கிறவர்கள் பிரியாதிருக்கும் போது, அவர்களுடைய பிள்ளைகள் பரிசுத்தமாயிருக்கின்றன.

தேவன் தம்முடைய பிள்ளைகளை சமாதானமாயிருக்கும் படிகே அழைத்திருக்கிறார். விசுவாசியும் அவிசுவாசியும் விவாகத்தில் இணைக்கப்படும் போது, அவிசுவாசியாகயிருக்கிறவர் இரட்சிக்கப் படுவதற்கு வாய்ப்புள்ளது. அவருடைய இரட்சிப்புக்கு விசுவாசியாகயிருக்கிறவர் ஒரு கருவியாக பயன்படுத்தப்படுகிறார். தன்னுடைய சாட்சியுள்ள ஜீவியத்தினி மித்தம், தன்னுடைய வாழ்க்கைத் துணையை இரட்சிப்புக்கு நேராக வழிநடத்துகிறார்.

விசுவாசியானவர், அவிசுவாசியான தன்னுடைய வாழ்க்கைத்துணையிடம் அன்பு கூரும்போது, அவிசுவாசியானவர் தேவனுடைய அன்பை ருசிபார்ப்பார். தேவனுடைய இரட்சிப்பின் கிருபையினால் இரட்சிக்கப்படுவார். மனைவியானவள் தன் புருஷனையும், புருஷனானவன் தன் மனைவியையும் இரட்சிப்பதற்கு வாய்ப்புள்ளது. தேவனால் கூடாத காரியம் ஒன்றுமில்லை.

புருஷனோ அல்லது மனைவியோ இரட்சிக்கப்படுவார்களா இல்லையா என்பது நமக்குத் தெரியாது. நம்முடைய சாட்சியினால் அவர்களை இரட்சிக்க முடியுமா அல்லது முடியாதா என்பதும் நமக்குத் தெரியாது. ஆனாலும் விசுவாசத்தோடு முயற்சி பண்ண வேண்டும். இரட்சிக்கப்படும் போது, அவிசுவாசியாயிருக்கிற மனைவியினுடைய ஆத்துமாவும் அல்லது கணவனுடைய ஆத்துமாவும் இரட்சிக்கப்படுகிறது. ஆகையினால் விசுவாசியும் அவிசுவாசியும் விவாக உறவில் வாசமாயிருக்க இருவருக்கும் சம்மதம் இருந்தால், யாரும் யாரையும் தள்ளிவிடக்கூடாது. சேர்ந்து வாழவேண்டும். கர்த்தருடைய நாமத்தை மகிமைப்படுத்தவேண்டும்.

## அழைக்கப்பட்ட நிலைமை
## 1கொரி 7 : 17-24

**1கொரி 7:17. தேவன் அவனவனுக்குப் பகிர்ந்தபடியோ, கர்த்தர் அவனவனை அழைத்தபடியோ, அப்படியே அவனவன் நடக்கக்கடவன். எல்லாச் சபைகளிலேயும் இப்படியே திட்டம் பண்ணுகிறேன்.**

**1கொரி 7:18. ஒருவன் விருத்தசேதனம் பெற்றவனாய் அழைக்கப்பட்டிருந்தால், விருத்த சேதனமில்லாதவனாயிருக்க வகை தேடானாக; ஒருவன் விருத்த சேதனமில்லாதவனாய் அழைக்கப்பட்டிருந்தால், விருத்த சேதனம் பெறாதிருப்பானாக.**

**1கொரி 7:19. விருத்தசேதனமும் ஒன்றுமில்லை, விருத்தசேதன மில்லாமையும் ஒன்றுமில்லை; தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்ளுகிறதே காரியம்.**

**1கொரி 7:20. அவனவன் தான் அழைக்கப்பட்ட நிலைமையிலே நிலைத்திருக்கக் கடவன்.**

**1கொரி 7:21. அடிமையாய் நீ அழைக்கப்பட்டிருந்தால், கவலைப் படாதே; நீ சுயாதீனனாகக்கூடுமானால் அதை நலமென்று அநுசரித்துக்கொள்.**

**1கொரி 7:22. கர்த்தருக்குள் அழைக்கப் பட்ட அடிமையானவன் கர்த்தருடைய சுயாதீனனாயிருக்கிறான்; அப்படியே அழைக்கப்பட்ட சுயாதீனன் கிறிஸ்துவினுடைய அடிமையாயிருக்கிறான்.**

**1கொரி 7:23. நீங்கள் கிரயத்துக்குக் கொள்ளப்பட்டீர்கள்; மனுஷருக்கு அடிமைகளாகாதிருங்கள்.**

**1கொரி 7:24. சகோதரரே, அவனவன் தான் அழைக்கப்பட்ட நிலைமையிலே தேவனுக்கு முன்பாக நிலைத்திருக்கக் கடவன்.**

## தேவன் பகிர்ந்தது

**தேவன் அவனவனுக்குப் பகிர்ந்தபடியோ, கர்த்தர் அவனவனை அழைத்தபடியோ, அப்படியே அவனவன் நடக்கக்கடவன். எல்லாச் சபைகளிலேயும் இப்படியே திட்டம் பண்ணுகிறேன் (1கொரி 7:17).**

பவுல் எல்லா விசுவாசிகளுக்கும் பொதுவான திட்டத்தை இங்கு சொல்லுகிறார். தேவன் ஒவ்வொரு விசுவாசிக்கும் ஒரு அளவைப் பகிர்ந்து கொடுத்திருக்கிறார். ஒவ்வொரு விசுவாசியையும் ஒவ்வொரு ஊழியத்திற்காக அழைத்திருக்கிறார். ஒவ்வொரு விசுவாசியும் அதன் பிரகாரமாகவே நடக்க வேண்டும். கர்த்தருடைய பிள்ளைகள் ஒவ்வொருவரும் தங்கள் பேச்சிலும் கிரியையிலும் கர்த்தரை மகிமைப்படுத்த வேண்டும். காலத்தைப் பிரயோஜனப்படுத்திக்கொள்ள வேண்டும். கர்த்தர் தங்களை அழைத்த அழைப்புக்கு உண்மையுள்ளவர்களாக நடக்கவேண்டும்.

அப்போஸ்தலர் பவுல் கொரிந்துவிலுள்ள விசுவாசிகளுக்கு இந்த நிருபத்தை எழுதினாலும், இங்கு கூறியிருக்கிற ஆலோசனையை எல்லா சபைகளிலுமுள்ள, எல்லா விசுவாசிகளுக்கும் பொதுவாகச் சொல்லுகிறார். எல்லா சபைகளிலேயும் இப்படியே திட்டம் பண்ணுகிறேன் என்று சொல்லி, பவுல் தன்னுடைய ஆலோசனையை எல்லா விசுவாசிகளுக்கும் பொதுவான தாக்குகிறார்.

### விருத்தசேதனம்

**ஒருவன் விருத்தசேதனம் பெற்றவனாய் அழைக்கப்பட்டிருந்தால், விருத்தசேதனமில்லாதவனாயிருக்க வகைதேடானாக; ஒருவன் விருத்தசேதனமில்லாதவனாய் அழைக்கப்பட்டிருந்தால், விருத்தசேதனம் பெறாதிருப்பானாக. விருத்தசேதனமும் ஒன்றுமில்லை, விருத்தசேதனமில்லாமையும் ஒன்றுமில்லை; தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்ளுகிறதே காரியம். அவனவன் தான் அழைக்கப்பட்ட நிலைமையிலே நிலைத்திருக்கக்கடவன் (1கொரி 7:18-20).**

கர்த்தர் ஒவ்வொரு விசுவாசியையும் அழைத்து, ஒவ்வொருவருக்கும் தம்முடைய கிருபையை பகிர்ந்து கொடுத்திருக்கிறார். கர்த்தருடைய கிருபையின் அளவு ஒவ்வொரு, விசுவாசிக்கும் வித்தியாசமாகயிருக்கலாம். ஒவ்வொரு விசுவாசியையும் ஒவ்வொரு ஊழியத்திற்கு அழைத்திருக்கலாம். அவற்றில் ஒரு குறிப்பிட்ட சம்பவத்தை பவுல் இங்கு குறிப்பிடுகிறார்.

மோசேயின் பிரமாணத்தின்படி யூதர்கள் விருத்தசேதனம் பெற்றுக் கொண்டார்கள். புறஜாதியாரும் விருத்தசேதனம் பெற்றுக் கொள்ள வேண்டும் என்று யூதர்கள் கட்டாயப்படுத்தினார்கள். பவுல் இதைப் பற்றிச் சொல்லும்போது, விருத்தசேதனமும் ஒன்றுமில்லை, விருத்தசேதனமில்லாமையும் ஒன்றுமில்லை என்று தெளிவாகச் சொல்லுகிறார். இருதயத்தில் பரிசுத்தமில்லாமல், பாரம்பரிய சடங்குகளை புறம்பாக ஆசரிப்பதினால் பிரயோஜனம் ஒன்றுமில்லை. பக்தி இருதயத்தில் இருக்க வேண்டும். தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்கிறதே காரியம். ஆகையினால் ஒவ்வொரு விசுவாசியும், அவனவன் தான் அழைக்கப்பட்ட நிலைமையிலே நிலைத்திருக்க வேண்டும்.

### அடிமையும் சுயாதீனனும்

**அடிமையாய் நீ அழைக்கப்பட்டிருந்தால், கவலைப்படாதே; நீ சுயாதீனனாகக்கூடுமானால் அதை நலமென்று அநுசரித்துக் கொள். கர்த்தருக்குள் அழைக்கப்பட்ட அடிமையானவன் கர்த்தருடைய சுயாதீனனாயிருக்கிறான்; அப்படியே அழைக்கப்பட்ட சுயாதீனன் கிறிஸ்துவினுடைய அடிமையாயிருக்கிறான். நீங்கள் கிரயத்துக்குக் கொள்ளப்பட்டீர்கள்; மனுஷருக்கு அடிமைகளாகாதிருங்கள் (1கொரி 7:21-23).**

பவுல் விருத்தசேதனத்தைப்பற்றிச் சொல்லிவிட்டு, அடிமைத்தனத்தையும் சுயாதீனத்தையும் பற்றி இங்கு உபதேசிக்கிறார். ஒரு சில விசுவாசிகள் அடிமையாய் அழைக்கப்பட்டிருக்கலாம். அதற்காக அவர்கள் கவலைப்படக் கூடாது. விசுவாசிகளாகிய நாம் நம்முடைய அழைப்புக்கு உண்மையுள்ளவர்களாக இருக்கவேண்டும். நம்முடைய கடமையிலும், ஊழியத்திலும், நம்பிக்கையிலும் நாம் நேர்மையாகவும் உண்மையாகவும் நடந்துகொள்ளவேண்டும். ஒரு சிலர் சுயாதீனராக இருக்கிறார்கள். அதையும் வேண்டாமென்று ஒதுக்கி வைத்துவிடக் கூடாது. சுயாதீனர் ஆகக்கூடுமானால் அதை அவர் நலம் என்று அநுசரித்துக்கொள்ளவேண்டும்.

அடிமைத்தனத்திலிருப்பதை விட சுயாதீனத்திலிருக்கும் போது பல நன்மைகள் இருக்கும். சுயாதீனமாயிருப்பது ஒரு சிலாக்கியம். நாம் அடிமையாயிருந்தாலும், சுயாதீனனாயிருந்தாலும், தேவன் நம்மை ஏற்றுக்கொள்ள வேண்டும். நமக்கும் தேவனுக்கும் நடுவில் எதுவும் தடையாக இருக்கக்கூடாது.

கர்த்தருக்குள் அழைக்கப்பட்ட அடிமையானவன் கர்த்தருடைய சுயாதீனனாயிருக்கிறான். அப்படியே கர்த்தருக்குள் அழைக்கப்பட்ட சுயாதீனன் கிறிஸ்துவினுடைய அடிமையாயிருக்கிறான். சுயாதீனன் மனுஷனுக்கு அடிமையாயிருக்க வேண்டியதில்லை. ஆனாலும் அவன் கிறிஸ்துவுக்கு அடிமையாயிருக்கவேண்டும். கிறிஸ்துவின் சித்தத்திற்கு மதிப்பு கொடுத்து அதற்குக் கீழ்ப்படியவேண்டும். அடிமையானவன் தன்னுடைய எஜமானின் சித்தத்திற்குக் கீழ்ப்படிவதை விட, தேவனுடைய சித்தத்திற்குக் கீழ்ப்படிவதே அவசியம் என்று நினைத்து, அதற்குக் கீழ்ப்படிய வேண்டும். கிறிஸ்துவின் ஊழியக்காரர்களுக்கு உலகப்பிரகாரமான எஜமான் யாருமில்லை. ஊழியக்காரர்களுக்கு கிறிஸ்துவானவரே கட்டளை கொடுக்கிறார்.

## நிலைத்திருக்கக்கடவன்

**சகோதரரே, அவனவன் தான் அழைக்கப்பட்ட நிலைமையிலே தேவனுக்கு முன்பாக நிலைத்திருக்கக் கடவன் (1கொரி 7:24).**

அப்போஸ்தலர் பவுல் கொரிந்தியருக்கு ஏற்கெனவே சொன்ன தன்னுடைய ஆலோசனையை இங்கு மறுபடியுமாக சொல்லுகிறார். ஒவ்வொரு விசுவாசியும் தேவனுக்கு முன்பாக நிலைத்திருக்க வேண்டும். தேவன் தன்னை அழைத்திருக்கிற நிலைமையிலே அவன் நிலைத்திருக்க வேண்டும். சூழ்நிலைகள் மாறலாம். ஆனால் தேவனுடைய கிருபையும் அவருடைய பிரசன்னமும் மாறாது. நாம் எப்படிப்பட்ட சூழ்நிலையிலிருந்தாலும், தேவன் நம்மை அழைத்திருக்கிற நிலைமையில், தேவனுக்கு முன்பாக நிலைத்திருக்க வேண்டும். அடிமையானவனும் தேவனுக்கு முன்பாக நிலைத்திருக்க வேண்டும். சுயாதீனனும் தேவனுக்கு முன்பாக நிலைத்திருக்கவேண்டும். தேவனுடைய கிருபையும் சிலாக்கியமும் சூழ்நிலைக்கு அடிமைப்பட்டிருக்காது. தேவனுடைய கிருபையை அடிமைப்படுத்த யாராலும் முடியாது.

## விவாகமில்லாமலிருக்கிறது 1கொரி 7 : 25-35

**1கொரி 7:25. அன்றியும் கன்னிகைகளைக் குறித்து, கர்த்தரால் எனக்குக் கட்டளை இல்லை. ஆகிலும் நான் உண்மையுள்ளவனாயிருக்கிறதற்குக் கர்த்தரால் இரக்கம் பெற்று, என் அபிப்பிராயத்தைத் தெரியப்படுத்துகிறேன்.**

**1கொரி 7:26. அதென்னவெனில், இப்பொழுது உண்டாயிருக்கிற துன்பத்தினிமித்தம் விவாகமில்லாமலிருக்கிறது மனுஷனுக்கு நலமாயிருக்குமென்று எண்ணுகிறேன்.**

**1கொரி 7:27. நீ மனைவியோடே கட்டப்பட்டிருந்ததால், அவிழ்க்கப்பட வகைதேடாதே; நீ மனைவி இல்லாதவனாயிருந்தால், மனைவியைத் தேடாதே.**

**1கொரி 7:28. நீ விவாகம் பண்ணினாலும் பாவமல்ல; கன்னிகை விவாகம் பண்ணினாலும் பாவமல்ல. ஆகிலும் அப்படிப்பட்டவர்கள் சரீரத்திலே உபத்திரவப்படுவார்கள்; அதற்கு நீங்கள் தப்பவேண்டுமென்றிருக்கிறேன்.**

**1கொரி 7:29. மேலும், சகோதரரே, நான் சொல்லுகிறதென்னவெனில், இனிவரும் காலம் குறுகினதானபடியால், மனைவிகளுள்ளவர்கள் மனைவிகளில்லாதவர்கள்போலவும்,**

**1கொரி 7:30. அழுகிறவர்கள் அழாதவர்கள் போலவும் சந்தோஷப் படுகிறவர்கள் சந்தோஷப்படாதவர்கள் போலவும், கொள்ளுகிறவர்கள் கொள்ளாதவர்கள் போலவும்,**

**1கொரி 7:31. இவ்வுலகத்தை அனுபவிக்கிறவர்கள் அதைத் தகாதவிதமாய் அனுபவியாதவர்கள் போலவும் இருக்க வேண்டும்; இவ்வுலகத்தின் வேஷம் கடந்து போகிறதே.**

**1கொரி 7:32. நீங்கள் கவலையற்றவர்களாயிருக்க விரும்புகிறேன். விவாகமில்லாதவன் கர்த்தருக்கு எப்படிப் பிரியமாயிருக்கலாமென்று, கர்த்தருக்குரியவைகளுக்காகக் கவலைப்படுகிறான்.**

**1கொரி 7:33. விவாகம் பண்ணினவன் தன் மனைவிக்கு எப்படிப் பிரியமாயிருக்கலாமென்று, உலகத்திற்குரியவைகளுக்காகக் கவலைப்படுகிறான்.**

**1கொரி 7:34. அதுபோல, மனைவியானவளுக்கும் கன்னிகைக்கும் வித்தியாசமுண்டு. விவாகமில்லாதவள் சரீரத்திலும் ஆத்துமாவிலும் பரிசுத்தமாயிருக்கும்படி, கர்த்தருக்குரியவைகளுக்காகக் கவலைப்படுகிறாள்; விவாகம் பண்ணினவள் தன் புருஷனுக்கு எப்படிப் பிரியமாயிருக்கலாமென்று, உலகத்திற்குரியவைகளுக்காகக் கவலைப்படுகிறாள்.**

**1கொரி 7:35. இதை நான் உங்களைக் கண்ணியில் அகப்படுத்த வேண்டுமென்று சொல்லாமல், உங்களுக்குத் தகுதியாயிருக்குமென்றும், நீங்கள் கவலையில்லாமல் கர்த்தரைப் பற்றிக் கொண்டிருக்க வேண்டுமென்றும், உங்கள் சுயப்பிரயோஜனத்துக்காகவே சொல்லுகிறேன்.**

## கன்னிகைகள்

**அன்றியும் கன்னிகைகளைக் குறித்து, கர்த்தரால் எனக்குக் கட்டளை இல்லை. ஆகிலும் நான் உண்மையுள்ளவனாயிருக்கிறதற்குக் கர்த்தரால் இரக்கம் பெற்று, என் அபிப்பிராயத்தைத் தெரியப் படுத்துகிறேன் (1கொரி 7:25).**

அப்போஸ்தலர் பவுல் கன்னிகைகளைக் குறித்து தன்னுடைய அபிப்பிராயத்தைத் தெரியப்படுத்துகிறார். இயேசுகிறிஸ்து கன்னிகைகளைக்குறித்து எந்தப் பிரமாணத்தையும் கொடுக்கவில்லை. அவர்களைக்குறித்து கர்த்தரால் தனக்கு கட்டளையில்லை என்று பவுல் தெரியப்படுத்துகிறார். கர்த்தர் கட்டளை கொடுக்கா விட்டாலும், பவுல் பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்ட அப்போஸ்தலராக, தன்னுடைய அபிப்பிராயத்தை தெரியப்படுத்துகிறார்.

## விவாகமில்லாமலிருக்கிறது

**அதென்னவெனில், இப்பொழுது உண்டாயிருக்கிற துன்பத்தினிமித்தம் விவாகமில்லாமலிருக்கிறது மனுஷனுக்கு நலமாயிருக்குமென்று எண்ணுகிறேன் (1கொரி 7:26).**

விவாகமில்லாமலிருக்கிறதை விசுவாசிகள் தெரிந்துகொள்ள வேண்டும் என்று பவுல் ஆலோசனை சொல்லுகிறார். பவுலின் வார்த்தைகள் மென்மையாக இருக்கிறது. அதே சமயத்தில் தன்னுடைய வார்த்தைகளை அப்போஸ்தல அதிகாரத்தோடும் வெளிப்படுத்துகிறார். ஊழியக்காரர்கள் தங்களுடைய சொந்தக் கருத்துக்களை தங்கள் இஷ்டம்போல தெரிவிக்கக் கூடாது. கடின வார்த்தைகளைப் பேசாமல், நிதானமான வார்த்தைகளைப் பேசவேண்டும். அதே வேளையில் கர்த்தர் தங்களுக்குக் கொடுத்திருக்கும் அப்போஸ்தல அதிகாரத்தை இழந்துபோகவும் கூடாது.

விவாகம் பண்ணியவர்களுக்கு பலவிதமான பிரச்சனைகள் வரும். விவாகம் பண்ணினவன் தன் மனைவிக்காகவும், உலகத்திற்குரிய வைகளுக்காகவும் கவலைப்படுகிறான். அவனைப் போலவே அவனுடைய மனைவியும் கவலைப்படுகிறாள் (1கொரி 7:33,34). கவலைப்படு கிறவர்களுடைய நிலமை மிகவும் பரிதாபமானது. இந்தக் கவலை விவாகம்பண்ணியதினால் உண்டாயிற்று. விவாகம் பண்ணியவர்கள் சரீரத்திலே உபத்திரவப்படுவார்கள். ஆகையினால் விவாகமில்லாமலிருப்பது மனுஷனுக்கு நலமாயிருக்குமென்று பவுல் எண்ணுகிறார்.

### விவாகம்பண்ணினாலும் பாவமல்ல

**நீ மனைவியோடே கட்டப் பட்டிருந்ததால், அவிழ்க்கப்பட வகை தேடாதே; நீ மனைவி இல்லாதவனாயிருந்தால், மனைவியைத் தேடாதே. நீ விவாகம் பண்ணினாலும் பாவமல்ல; கன்னிகை விவாகம் பண்ணினாலும் பாவமல்ல. ஆகிலும் அப்படிப்பட்டவர்கள் சரீரத்திலே உபத்திரவப்படுவார்கள்; அதற்கு நீங்கள் தப்பவேண்டுமென்றிருக்கிறேன் (1கொரி 7:27,28).**

விவாகமில்லாமலிருக்கிறது மனுஷனுக்கு நலமாயிருக்குமென்று பவுல் எண்ணினாலும், விவாகம் பண்ணிய வர்களை பவுல் கடிந்துகொள்ளவுமில்லை. விவாகம்பண்ணுவது பாவமல்ல என்று அறிவிக்கிறார். அதே வேளையில் ஒருவன் மனைவி இல்லாதவனாயிருந்தால் அவன் மனைவியைத் தேடக்கூடாது என்றும் ஆலோசனை சொல்லுகிறார். மேலும், ஒருவன் மனைவியோடே கட்டப் பட்டிருந்தால், அவிழ்க்கப்பட வகை தேடக்கூடாது என்றும் பவுல் தன் அபிப்பிராயத்தைச் சொல்லுகிறார். விவாகத்தில் இணைக்கப் பட்டிருக்கிறவர்கள், தங்களுடைய விவாக உறவில் நிலைத்திருக்கவேண்டும்.

புருஷனும் மனைவியும் தங்களுக்கு நியமிக்கப்பட்டிருக்கிற விவாகக் கடமைகளை நிறைவேற்ற வேண்டும். தேவனுடைய சமுகத்தில் இவர்கள் புருஷனும் மனைவியுமாக இணைந் திருக்கிறார்கள். தேவன் இவர்களிடம் விவாக உறவை நம்பி ஒப்புக் கொடுத்திருக்கிறார். விவாகம் பண்ணியவர்கள் தேவனுடைய நம்பிக்கைக்கு பாத்திரவான்களாகவும், உண்மையுள்ளவர்களாகவும் இருக்க வேண்டும். விவாகம்பண்ணுவது பாவமல்ல. ஆனாலும் விவாகம் பண்ணியவர்கள் சரீரத்திலே உபத்திரவப்படுவார்கள்.

### இனிவரும் காலம் குறுகினது

**மேலும், சகோதரரே, நான் சொல்லுகிறதென்னவெனில், இனிவரும் காலம் குறுகினதான படியால், மனைவிகளுள்ளவர்கள் மனைவிகளில்லாதவர்கள் போலவும், அழுகிறவர்கள் அழாதவர்கள் போலவும் சந்தோஷப்படுகிறவர்கள் சந்தோஷப் படாதவர்கள் போலவும், கொள்ளுகிறவர்கள் கொள்ளாதவர்கள் போலவும், இவ்வுலகத்தை அனுபவிக்கிறவர்கள் அதைத் தகாதவிதமாய் அனுபவியாதவர்கள் போலவும் இருக்க வேண்டும்; இவ்வுலகத்தின் வேஷம் கடந்து போகிறதே (1கொரி 7:29-31).**

விசுவாசிகள் இப்பிரபஞ்சத்திற்குரிய வர்களல்ல. உலகத்திற்கு ஒத்த வேஷம் தரிக்காமல் பரிசுத்தமாய் ஜீவிக்க வேண்டியவர்கள். விசுவாசிகள் இப்பிரபஞ்சத்தின் ஆசாபாசங்களுக்கு விலகியே ஜீவிக்க வேண்டும். உலகத்தினால் கறைபடாமல் தங்கள் பரிசுத்தத்தைக் காத்துக்கொள்ள வேண்டும். ஆகையினால் மனைவிகள் உள்ளவர்கள் மனைவிகள் இல்லாதவர்கள் போல இருக்கவேண்டும். இனிவரும் காலம் குறுகினது. அக்காலத்தில் மனுஷருக்கு ஒரு உறவும் இருக்காது. ஆகையினால் பிள்ளைகள்உள்ளவர்கள்கூட பிள்ளைகள் இல்லாதவர்கள் போல இருக்கவேண்டும்.

இக்காலத்தில் நமக்கு ஆறுதலாகவும் சந்தோஷமாகவும் இருக்கிற காரியங்கள், வரும்காலத்தில் நமக்கு பிரச்சனையாகவும் துக்கமாகவும் இருக்கும். இனிமேல் நாம் அழவேண்டிய காலம் வரும். ஆகையினால் இப்போது அழுகிறவர்கள் அழாதவர்கள் போல இருக்கவேண்டும். இருதயத்தில் வருத்தம் இருந்தாலும், நாம் சந்தோஷப்பட வேண்டும். நம்முடைய துக்கம் இனிமேல் சந்தோஷமாக மாறும். துக்கத்தின் முடிவு சந்தோஷம்.

ஆகையினால் சந்தோஷப்படுகிறவர்கள் சந்தோஷப்படாதவர்கள் போல இருக்க வேண்டும். நாம் பூமிக்குரியவர்களல்ல. இது நமக்கு நிலையான வாசஸ்தலமுமல்ல. இந்தப் பூமியில் நமக்கு பங்குமில்லை. பாத்தியமுமில்லை. ஆகையினால் கொள்ளுகிறவர்கள் கொள்ளாதவர்கள் போல இருக்கவேண்டும். வாங்குவதும் கொள்ளுவதும் நம்முடைய இருதயத்தின் பிரதான ஆசையாகயிருக்கக் கூடாது. உலகப்பிரகாரமான காரியங்களில் சிக்கிக் கொள்கிறவர்கள் பரலோகத்தின் காரியங்களைச் சிந்தித்துப் பார்க்க மாட்டார்கள். உலகமே போதுமென்று நினைக்கிறவர்கள் பரலோகத்தை விரும்பமாட்டார்கள்.

இவ்வுலகத்தை அனுபவிக்கிறவர்கள் அதைத் தகாதவிதமாய் அனுபவியாதவர்கள் போல இருக்க வேண்டும். நாம் உலகத்தை அனுபவிக்கலாம். ஆனால் அதைத் தகாதவிதமாய் அனுபவிக்கக் கூடாது. சக்கரத்திற்கு எண்ணெய் போடும்போது சக்கரம் இலகுவாக இயங்கும். அதே வேளையில் நெருப்பில் எண்ணெய் ஊற்றும்போது அது பற்றியெறியும். இந்த உலகத்தின்மீது நாம் வைத்திருக்கிற ஆசை நெருப்பில் எண்ணெய் ஊற்றுவது போன்றது. நாம் கர்த்தருக்குக் கீழ்ப்படிந்து இந்த உலகத்தை தகுந்த விதமாய் அனுபவிப்பது, சக்கரத்திற்கு எண்ணெய் ஊற்றுவது போன்றது.

நம்முடைய இருதயங்களிலிருந்து உலகப்பிரகாரமான சிந்தனைகள் நீங்கிப்போகவேண்டும். இந்த உலகத்தின் காரியங்கள் நம்முடைய கைக்கு வரும்போது, அவற்றை நம்முடைய இஷ்டப்பிரகாரம் அனுபவிக்கக் கூடாது. தகாதவிதமாய் அனுபவிக்கக் கூடாது. கர்த்தருக்குக் கீழ்ப்படிந்து, கர்த்தருடைய சித்தத்தின் பிரகாரம், கர்த்தருடைய நாமம் தூஷிக்கப்படாதவாறு, மிகுந்த எச்சரிப்போடு இந்த உலகத்தை தகுதியாய் அனுபவிக்கவேண்டும்.

நாம் இந்த உலகத்தில் தகாதவிதமாய் அனுபவிக்கக் கூடாது என்பதற்கு பவுல் இரண்டு காரணங்களைச் சொல்லுகிறார். அவையாவன: 1. இனி வரும் காலம் குறுகினதாயிருக்கிறது. 2. இவ்வுலகத்தின் கவலைகளில் நாம் சிக்கிக்கொள்ளக் கூடாது. இனிவரும் காலம் குறுகினதாயிருக்கிறபடியினால், இந்த உலகத்தை அனுபவிக்கவேண்டுமென்று நம்முடைய இருதயத்திற்கு நாம் கட்டளை கொடுக்கக்கூடாது. நம்முடைய இருதயம் உலகக்காரியங்களில் மயங்கித் திரியக் கூடாது. இந்த உலகக்காரியங்களெல்லாமே ஒரு வேஷமாகவே இருக்கிறது. இதில் உண்மை எதுவுமில்லை. உலகத்தின் வேஷம் சீக்கிரத்தில் கடந்துபோகப்போகிறது. அப்போது நம்முடைய உலகசந்தோஷமும், உலகசிற்றின்பங்களும், உலகத்தின் ஆசாபாசங்களும், உலகத்தின் உறவுகளும் கடந்துபோகும். எதுவும் நிலைத்திருக்காது. நிலைக்காத ஒன்றுக்காக நாம் கவலைப்படக்கூடாது.

## கர்த்தரைப்பற்றிக்கொண்டிருக்க வேண்டும்

**நீங்கள் கவலையற்றவர்களாயிருக்க விரும்புகிறேன். விவாகமில்லாதவன் கர்த்தருக்கு எப்படிப் பிரியமாயிருக்கலாமென்று, கர்த்தருக்குரியவைகளுக்காகக் கவலைப்படுகிறான். விவாகம் பண்ணினவன் தன் மனைவிக்கு எப்படிப் பிரியமாயிருக்கலாமென்று, உலகத்திற்குரியவைகளுக்காகக் கவலைப்படுகிறான். அதுபோல, மனைவியானவளுக்கும் கன்னிகைக்கும் வித்தியாசமுண்டு. விவாகமில்லாதவள் சரீரத்திலும் ஆத்துமாவிலும் பரிசுத்தமாயிருக்கும்படி, கர்த்தருக்குரியவைகளுக்காகக் கவலைப்படுகிறாள்; விவாகம் பண்ணினவள் தன் புருஷனுக்கு எப்படிப் பிரியமாயிருக்கலாமென்று, உலகத்திற்குரியவைகளுக்காகக் கவலைப்படுகிறாள். இதை நான் உங்களைக் கண்ணியில் அகப்படுத்த வேண்டுமென்று சொல்லாமல், உங்களுக்குத் தகுதியாயிருக்குமென்றும், நீங்கள் கவலையில்லாமல் கர்த்தரைப் பற்றிக்கொண்டிருக்க வேண்டுமென்றும், உங்கள் சுயப்பிரயோஜனத்துக்காகவே சொல்லுகிறேன் (1கொரி 7:32-35).**

நாம் கவலையில்லாமல் கர்த்தரைப் பற்றிக் கொண்டிருக்க வேண்டும். உலகத்தின் கவலைகள் நம்மை நிரப்பும்போது, நம்மால் கவலையில்லாமல் கர்த்தரைப் பற்றிக்கொள்ள முடியாது. கர்த்தர் நமக்கு அனுமதிக்கிற காரியத்தை மாத்திரமே இந்த உலகத்தில் செய்ய வேண்டும். கர்த்தர் நமக்கு நியமித்திருக்கிற கடமைகளை நேர்த்தியாய்ச் செய்து முடிக்கவேண்டும். உலகக்காரியங்களில் நம்மை அதிகமாய் ஈடுபடுத்துவது பாவமாகவே இருக்கும். நாம் கவலையில்லாமல் கர்த்தரைப் பற்றிக் கொண்டிருக்க வேண்டியவர்கள். உலகத்தைப் பற்றிக் கொண்டிருக்கிறவர்களால் கர்த்தரைக் கவலையில்லாமல் பற்றிக்கொண்டிருக்க முடியாது.

விவாகம் பண்ணினவன் தன் மனைவிக்கு எப்படி பிரியமாயிருக்கலாம் என்று உலகத்திற்குரியவைகளுக்காக கவலைப்படுகிறான். அதுபோலவே விவாகம்பண்ணினவள் தன் புருஷனுக்கு எப்படி பிரியமாயிருக்கலாமென்று உலகத்திற்குரியவைகளுக்காக கவலைப் படுகிறாள். விவாகம் பண்ணியவர்கள் ஒருவருக்கொருவரும், உலகத்திற்குரிய வைகளுக்கும் கவலைப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். உலகக்கவலை நீங்கினால்தான் இவர்களால் கர்த்தரைக் கவலையில்லாமல் பற்றிக்கொள்ள முடியும்.

விவாகமில்லாதவர்கள் தங்கள் சரீரத்திலும் ஆத்துமாவிலும் பரிசுத்தமா யிருக்கும்படி, கர்த்தருக்குரிய வைகளுக்காகக் கவலைப்படுகிறார்கள். கர்த்தருக்கு எப்படி பிரியமாய் இருக்கலாமென்று கர்த்தருக்குரிய வைகளுக்காக கவலைப்படுகிறார்கள். தங்கள் சரீரத்திலும் ஆத்து மாவிலும் பரிசுத்தமாயிருக்க வேண்டு மென்று நாடுகிறார்கள்.

விவாகம் பண்ணியவர்களோ கர்த்தருக்குரியவைகளுக்காக கவலைப் படுவதில்லை. தங்களுக்காகவும், உலகத்திற்குரியவைகளுக்காகவும் கவலைப்படுகிறார்கள். இவர்கள் தங்கள் சரீரத்திலும் ஆத்துமாவிலும் பரிசுத்தமா யிருப்பதில்லை. விவாகம்பண்ணிய வர்களால் தங்களுடைய பரிசுத்தத்தில் கவனம் செலுத்த முடியவில்லை. தங்களுடைய விவாக உறவை சந்தோஷப்படுத்துவதில் கவனம் செலுத்துகிறார்கள்.

மனைவி தன் புருஷனுக்கு எப்படி பிரியமாயிருக்கலாமென்றும், புருஷன் தன் மனைவிக்கு எப்படி பிரியமாயிருக்கலாமென்றும் கவலைப் படுகிறார்கள். சூழ்நிலை இப்படி இருப்பதினால், விவாகமில்லாமலிருக்கிறது மனுஷனுக்கு நலமாயிருக்கும் என்று பவுல் ஆலோசனை சொல்லுகிறார். ஒருவன் மனைவில்லாதவனாயிருந்தால் அவன் மனைவியைத் தேடவேண்டாமென்றும் பவுல் ஆலோசனை சொல்லுகிறார்.

ஒரு சிலர் விவாகமில்லாமல் இருந்து, தங்களுடைய ஆசைகளை கட்டுப்படுத்த முடியாமல், வெந்து கொண்டிருப்பார்கள். பாவத்தில் விழுந்து விடுவார்கள். இப்படிப்பட்டவர்கள் வேகிறதைப்பார்க்கிலும் விவாகம்பண்ணுகிறதே நலம் என்றும் பவுல் ஆலோசனை சொல்லுகிறார். ஒருவன் விவாகமில்லாமலிருப்பதினால் கர்த்தரை கவலையில்லாமல் பற்றிக் கொள்ள முடியாமல் போகலாம். இப்படிப்பட்டவர்கள் விவாகம் பண்ணினாலும் பாவமல்ல. ஏனெனில் கர்த்தரைக் கவலையில்லாமல் பற்றிக்கொண்டிருப்பதே முக்கியம்.

நாம் தேவனுக்கு ஊழியம் செய்யவேண்டும். நம்முடைய ஊழியத்திற்கு விவாகம் தடையாக இருக்கக்கூடாது. புருஷனும் மனைவியுமாக இணைந்து கர்த்தருக்கு ஊழியம் செய்யவேண்டும். விவாக உறவு கர்த்தரைப்பற்றிக் கொள்வதற்கு ஆதாரவாயும் உதவியாயும் இருக்க வேண்டும். பிரச்சனையாயிருந்து விடக்கூடாது. கர்த்தரைப் பற்றிக் கொள்வதற்கு தங்களுடைய விவாக உறவு தடையாயில்லாதவாறு விசுவாசிகள் மிகுந்த எச்சரிப்போடு ஜீவிக்கவேண்டும். கர்த்தரைப் பிரியப்படுத்துகிறபடி தங்களுடைய விவாக உறவை அமைத்துக்கொள்ளவேண்டும்.

## கன்னிகைப்பருவம்
## 1கொரி 7 : 36-38

**1கொரி 7:36. ஆகிலும் ஒருவன் தன் புத்திரியின் கன்னிகைப்பருவம் கடந்துபோனதினாலே, அவள் விவாகம் பண்ணாமலிருப்பது அவளுக்குத் தகுதியல்லவென்றும், அவள் விவாகம் பண்ணுவது அவசியமென்றும் நினைத்தால், அவன் தன் மனதின்படி செய்யக்கடவன்; அது பாவமல்ல, விவாகம் பண்ணட்டும்.**

**1கொரி 7:37. ஆயினும் அதற்கு அவசியத்தைக் காணாமல், தன் இருதயத்திலே உறுதியுள்ளவனாயும், சுயசித்தத்தின்படி செய்ய அதிகாரமுள்ளவனாயுமிருந்து, தன் புத்திரியின் கன்னிகைப் பருவத்தைக் காக்கவேண்டும் என்று தன் இருதயத்தில் தீர்மானிக்கிறவன் நன்மை செய்கிறான்.**

**1கொரி 7:38. இப்படியிருக்க, அவளை விவாகம்பண்ணிக் கொடுக்கிறவனும் நன்மை செய்கிறான்; கொடாமலிருக்கிறவனும் அதிக நன்மை செய்கிறான்.**

பெற்றோர் தங்கள் பிள்ளைகளுக்கு ஏற்ற காலத்தில் விவாகம்பண்ணிக் கொடுக்க வேண்டும். ஒரு சில கன்னிகைகளுக்கு விவாகம்பண்ணுவதில் காலதாமதம் ஏற்படலாம். அவர்களுடைய கன்னிகைப்பருவம் கடந்துபோகலாம். தன் மகளுக்கு விவாகம் பண்ணுவது அவசியமென்று அவளுடைய தகப்பன் நினைத்தால், அவன் அவளுக்கு விவாகம் செய்து கொடுக்கலாம். அது பாவமல்ல. ஏற்ற துணையைத் தேர்ந்தெடுத்து தன் மகளுக்கு விவாகக்காரியங்களை ஒழுங்கு செய்யலாம்.

கன்னிகையாக இருக்கிறவள், தான் விவாகம் செய்யாமல், கன்னிகையாகவே இருந்துவிட வேண்டும் என்று தீர்மானிக்கும்போது, அவளுடைய தகப்பன் அவளுக்கு விவாகம் செய்து வைக்காமல், அவள் கன்னிகையாகவே இருந்து விடுவதற்கு உதவிபுரியலாம். இதுவும் பாவமல்ல. தன் மகளை விவாகம் பண்ணிக் கொடுக்கிறவன் நன்மை செய்கிறான். அவளுக்கு விவாகம் பண்ணிக் கொடாமலிருக்கிறவனும் அதிக நன்மை செய்கிறான்.

## கைம்பெண்
## 1கொரி 7 : 39-40

**1கொரி 7:39. மனைவியானவள் தன் புருஷன் உயிரோடிருக்குங் காலமளவும் பிரமாணத்தினால் கட்டப் பட்டிருக்கிறாள்; தன் புருஷன் மரித்த பின்பு தனக்கு இஷ்டமானவனாயும் கர்த்தருக்குட்பட்டவனாயுமிருக்கிற எவனையாகிலும் விவாகம் பண்ணிக் கொள்ள விடுதலையாயிருக்கிறாள்.**

# 1 கொரிந்தியர் - விரிவுரை
# I CORINTHIANS - COMMENTARY

BELLWETHER INTERNATIONAL

GOOD NEWS PUBLISHERS

**1கொரி 7:40. ஆகிலும் என்னுடைய அபிப்பிராயத்தின்படி அவள் அப்படியே இருந்துவிட்டால் பாக்கியவதியாயிருப்பாள். என்னிடத்திலும் தேவனுடைய ஆவி உண்டென்று எண்ணுகிறேன்.**

புருஷனும் மனைவியும் விவாக உறவில் இணைக்கப்படும்போது, இந்த உறவு அவர்களுடைய ஜீவியகாலம் முழுவதற்கும் அவர்களைக் கட்டுப்படுத்துகிறது. தன் புருஷன் உயிரோடிருக்கும் காலமளவும் மனைவியானவள் விவாகப் பிரமாணத்தினால் கட்டப்பட்டிருக்கிறாள். தன் புருஷன் மரித்தபின்பு, அவளுக்கு விவாகம் பண்ணிக் கொள்ள விடுதலை உண்டு. ஆனாலும் அவள் விவாகம்பண்ணிக் கொள்ள விரும்புகிறவன் கர்த்தருக்குட்பட்டவனாயிருக்கவேண்டும்.

தன் புருஷன் மரித்தபின்பு மனைவியானவள் மறுபடியும் திருமணம் செய்து கொள்ளாமல் அப்படியே இருந்துவிட்டால் அவள் பாக்கியவதியாயிருப்பாள் என்று பவுல் தன்னுடைய அப்பிராயத்தைச் சொல்லுகிறார். விவாகமில்லாதவர்கள் கர்த்தருக்கு எப்படி பிரியமாயிருக்கலாம் என்று கர்த்தருக்குரியவைகளுக்காக கவலைப்படுவார்கள். அவர்களைப்போலவே தன் புருஷன் மரித்தபின்பு, மறுபடியும் விவாகம் செய்து கொள்ளாதவள், கர்த்தருக்கு எப்படி பிரியமாயிருக்கலாமென்று கர்த்தருக்குரியவைகளுக்காக கவலைப்படுவாள். அவளுடைய ஜீவியத்தில் அமைதியும் சமாதானமும் நிரம்பியிருக்கும். கர்த்தருக்கு ஊழியம் செய்ய விவாகம் தடையாயிருக்காது.

## 8 அதிகாரம்

விக்கிரகங்களுக்கு படைக்கப்பட்டதைப் புசிப்பது சம்மந்தமாக பவுல் இந்த அதிகாரத்தில் உபதேசம்பண்ணுகிறார். அறிவு இறுமாப்பை உண்டாக்குமென்று எச்சரித்துச் சொல்லுகிறார் (1கொரி 8:1-3). உலகத்திலே விக்கிரகமானது ஒன்றுமில்லை. அது மாயை (1கொரி 8:4-6). பலவீனமுள்ள சகோதரரைக் குறித்து கரிசனையுடன் இருக்க வேண்டும் (1கொரி 8:7-13).

### அறிவு
### 1கொரி 8 : 1-3

**1கொரி 8:1. விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்டவைகளைக் குறித்த விஷயத்தில், நம்மெல்லாருக்கும் அறிவு உண்டென்று நமக்குத் தெரியுமே. அறிவு இறுமாப்பை உண்டாக்கும், அன்போ பக்திவிருத்தியை உண்டாக்கும்.**

**1கொரி 8:2. ஒருவன் தான் ஏதேனும் ஒன்றை அறிந்தவனென்று எண்ணிக் கொள்வானானால், ஒன்றையும் அறிய வேண்டியபிரகாரமாக அவன் இன்னும் அறியவில்லை.**

**1கொரி 8:3. தேவனில் அன்பு கூருகிறவனெவனோ, அவன் தேவனால் அறியப்பட்டிருக்கிறான்.**

### விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்டவைகள்

**விக்கிரகங்களுக்குப் படைக்கப் பட்டவைகளைக் குறித்த விஷயத்தில், நம்மெல்லாருக்கும் அறிவுஉண்டென்று நமக்குத் தெரியுமே. அறிவு இறுமாப்பை உண்டாக்கும், அன்போ பக்திவிருத்தியை உண்டாக்கும் (1கொரி 8:1).**

புறஜாதி மார்க்கத்தார் விக்கிரகங்களுக்குப் பலிகளைச் செலுத்தி, பலியிடப்பட்ட போஜனத்தை விருந்தாகப் புசிப்பது வழக்கம். அவர்கள் விக்கிரகக் கோவிலிலே பலிகளைச் செலுத்துவார்கள். பலியிடப்பட்ட போஜனத்தை அந்தக் கோவிலிலேயே பந்தியில் அமர்ந்து புசிப்பார்கள் (1கொரி 8:10). பந்தியில் மீதமுள்ள போஜனம் ஆசாரியருக்குரியது. அவர் அதைத் தன்னுடைய வீட்டிற்கு எடுத்துச் செல்வார். தன்னிடத்தில் மீதமாக உள்ள போஜனங்களை கடைகளில் கிரயத்திற்கு விற்றுவிடுவார் (1கொரி 10:25).

விக்கிரகங்களுக்கு பலியிடப்பட்ட போஜனம் அசுத்தமானது. யூதர்களுக்கு இது அருவருப்பானது. ஏனெனில் மோசேயின் பிரமாணத்தின்படி இந்தப் போஜனம் சுத்திகரிக்கப்படவில்லை. புறஜாதியாரோடு சேர்ந்து, விக்கிரகங் களுக்குப் படைக்கப்பட்டதைப் புசிப்பது மிகவும் அருவருப்பானது என்று விசுவாசிகளில் சிலர் நினைத்தார்கள். வேறு சிலரோ விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்டதைப் புசிப்பதில் தவறு ஒன்றுமில்லை என்று தீர்மானித்து, அதை மற்ற போஜனம் போலவே புசித்தார்கள். இதனால் விசுவாசிகள் மத்தியில் கருத்து வேறுபாடுகள் உண்டாயிற்று.

விக்கிரகங்களுக்குப் படைக்கப் பட்டதை விசுவாசிகள் புசிக்கலாமா? புறஜாதியார் விக்கிரகக் கோவில்களுக்கு விசுவாசிகளை அழைக்கும் போது, அவர்கள் அங்குபோய் அவர்களுடைய பந்தியில் கலந்து கொள்ளலாமா? கொரிந்தியரில் சிலர் விக்கிரகக் கோவில்களுக்குப் போய், அவர்களுடைய பந்தியில் பங்குபெறலாம் என்று சொல்லுகிறார்கள். உலகத்திலே விக்கிரகமானது ஒன்றுமில்லை என்றும், ஒருவரேயன்றி வேறொரு தேவன் இல்லையென்றும் தாங்கள் அறிந்திருப்பதாகச் சொல்லுகிறார்கள் (1கொரி 8:4).

தங்களுடைய சுய அறிவில் கொரிந்தியர்கள் பெருமை யோடிருக்கிறார்கள். பவுல் அவர்களுக்கு ஆலோசனை சொல்லும்போது, "அறிவு இறுமாப்பை உண்டாக்கும், அன்போ பக்திவிருத்தியை உண்டாக்கும்" என்று எச்சரித்துச் சொல்லுகிறார்.

## ஒன்றையும் அறியவில்லை

**ஒருவன் தான் ஏதேனும் ஒன்றை அறிந்தவனென்று எண்ணிக் கொள்வானானால், ஒன்றையும் அறிய வேண்டியபிரகாரமாக அவன் இன்னும் அறியவில்லை (1கொரி 8:2).**

நமக்கு அறிவைவிட அன்பே முக்கியமானது. நாம் தேவனிடத்திலும் அன்புகூரவேண்டும். மனுஷரிடத்திலும் அன்புகூரவேண்டும். அன்பு மாத்திரமே பக்திவிருத்தியை உண்டாக்கும். நம்முடைய அறிவோ பக்தி விருத்தியை உண்டாக்காமல், நமக்குள் இறுமாப்பை உண்டாக்கும். அறியாமையிலிருக் கிறவர்கள் இறுமாப்படையமாட்டார்கள். இறுமாப்புடையவர்கள், தங்களுக்கு எல்லாம் தெரியும் என்றும், தாங்கள் எல்லாவற்றையும் அறிந்தவர்களென்றும் எண்ணிக்கொள்வார்கள்.

அறிவினால் இறுமாப்படைந்த வர்களை பவுல் எச்சரிக்கிறார். ஒருவனும் தனக்கு எல்லாம் தெரியும் என்று நினைக்கக்கூடாது. எல்லாவற்றையும் தான் அறிந்திருப்பதாக இறுமாப் போடிருக்கக் கூடாது. அப்படி இறுமாப் போடிருக்கிறவர்கள் ஒன்றையும் அறிய வேண்டிய பிரகாரமாக இன்னும் அறியவில்லை. தனக்கு எல்லாம் தெரியு மென்று இறுமாப்போடிருக்கிறவர்களுக்கு ஒன்றும் தெரியாது. இவர்களுக்கு உலக அறிவு இருக்கலாம். ஆனால் இந்த அறிவினால் ஒரு நன்மையும் உண்டாகாது.

## தேவனில் அன்புகூருகிறவன்

**தேவனில் அன்புகூருகிறவனெவனோ, அவன் தேவனால் அறியப் பட்டிருக்கிறான் (1கொரி 8:3).**

அன்பு பக்திவிருத்தியை உண்டாக்கும். நாம் தேவனிடத்தில் அன்பு கூரவேண்டும். தேவனில் அன்பு கூருகிறவன் எவனோ அவன் தேவனால் அறியப்பட்டிருக்கிறான். தம்மிடத்தில் அன்பு கூருகிறவனை தேவன் அங்கீகரிக்கிறார். அவனை ஏற்றுக்கொள்கிறார். அவன்மீது பிரியமாகயிருக்கிறார். தேவனிடத்திலும் மனுஷரிடத்திலும் அன்பு கூருகிறவன் தேவனுடைய கிருபைகளையும், இரக்கங்களையும், சிலாக்கியங்களையும், ஆசீர்வாதங்களையும் அதிகமாய்ப் பெற்றுக் கொள்வார்கள்.

நம்முடைய அறிவை நினைத்து நாமே பெருமைப்படுவதினால் நமக்கு ஒரு பயனும் உண்டாகாது. நம்மைப்பற்றி பெருமையாக நினைப்பதினால் நமக்கு மேன்மையில்லை. தேவன் நம்மை அறிந்திருக்கவேண்டும். தேவன் நம்மை அங்கீகரிக்க வேண்டும். இதுவே உண்மையான ஆசீர்வாதம். நாம் தேவனிடத்தில் அன்புகூரும்போது, தேவன் நம்மை அறிந்துகொள்கிறார். நம்மை அங்கீகரிக்கிறார்.

## கிறிஸ்து என்னும் ஒரே கர்த்தர் 1கொரி 8 : 4-6

**1கொரி 8:4. விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்டவைகளைப் புசிக்கிற விஷயத்தைப் பற்றி, உலகத்திலே விக்கிரகமானது ஒன்றுமில்லையென்றும் ஒருவரேயன்றி வேறொரு தேவன் இல்லையென்றும் அறிந்திருக்கிறோம்.**

**1கொரி 8:5. வானத்திலேயும் பூமியிலேயும் தேவர்கள் என்னப்படுகிறவர்கள் உண்டு; இப்படி அநேக தேவர்களும் அநேக கர்த்தாக்களும் உண்டாயிருந்தாலும்,**

**1கொரி 8:6. பிதாவாகிய ஒரே தேவன் நமக்குண்டு, அவராலே சகலமும் உண்டாயிருக்கிறது; அவருக்கென்று நாமும் உண்டாயிருக்கிறோம். இயேசு கிறிஸ்து என்னும் ஒரே கர்த்தரும் நமக்குண்டு; அவர் மூலமாய்ச் சகலமும் உண்டாயிருக்கிறது, அவர் மூலமாய் நாமும் உண்டாயிருக்கிறோம்.**

உலகத்திலே விக்கிரகமானது ஒன்றுமில்லை. விக்கிரகங்கள் மாயை. அவற்றிற்கு ஜீவனில்லை. புறஜாதியார் விக்கிரகங்களை தெய்வம் என்று சொல்லுகிறார்கள். ஆனால் அவற்றில் தெய்வத்துவத்தின் சுபாவம் எதுவும் காணப்படுவதில்லை. இவையெல்லாம் கற்பனையான தெய்வங்கள். புறஜாதியார் விக்கிரங்களை தெய்வம் என்று சொன்னாலும், அவை மெய்யாகவே தெய்வங்களல்ல. ஏனெனில் இந்த உலகத்திலே ஒருவரேயன்றி வேறொரு தேவன் இல்லை.

இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கிறவர்களாகிய நாம் அந்த ஒரே தெய்வத்தை அறிந்திருக்கிறோம். இயேசு கிறிஸ்துவே மெய்யான தேவன். வானத்திலேயும் பூமியிலேயும் அநேக தேவர்களும், அநேக கர்த்தாக்களும் இருக்கிறார்கள். ஆனாலும் விசுவாசிகளாகிய நமக்கு ஒரே ஒரு தேவன் மாத்திரமே இருக்கிறார். இயேசுகிறிஸ்து என்னும் ஒரே கர்த்தரே அவர். அவராலே சகலமும் உண்டாயிருக்கிறது. நாமும் அவருக்கென்று உண்டாயிருக்கிறோம்.

மெய்யான தேவனை நாம் அறிந்திருப்பது, நாம் பெற்றிருக்கிற மிகப்பெரிய சிலாக்கியம். தேவனுக்கும் மனுஷருக்கும் இயேசு கிறிஸ்து மத்தியஸ்தராகயிருக்கிறார். இந்தச் சத்தியத்தை அறிந்திருக்கிற விசுவாசிகளாகிய நாம் மெய்யாகவே பாக்கியவான்கள். பிதாவாலே சகலமும் உண்டாயிருக்கிறது. அவையெல்லாம் இயேசு கிறிஸ்துவின் மூலமாய் உண்டாயிருக்கிறது. பிதாவுக்கென்று நாம் உண்டாயிருக்கிறோம். இயேசுகிறிஸ்துவின் மூலமாய் நாம் உண்டாயிருக்கிறோம்.

ஆகையினால் உலகத்திலே விக்கிரகமானது ஒன்றுமில்லை என்பதையும் அறிந்திருக்கிறோம். இயேசு கிறிஸ்து ஒருவரேயன்றி வேறொரு தேவன் இல்லையென்றும் அறிந்திருக்கிறோம்.

## பலவீனமுள்ள சகோதரன் 1கொரி 8 : 7-13

**1கொரி 8:7. ஆகிலும், இந்த அறிவு எல்லாரிடத்திலும் இல்லை. சிலர் இன்றைய வரைக்கும் விக்கிரகத்தை ஒரு பொருளென்று எண்ணி, விக்கிரகத்துக்குப் படைக்கப்பட்டதைப் புசிக்கிறார்கள்; அவர்களுடைய மனச்சாட்சி பலவீனமாயிருப்பதால் அசுசிப்படுகிறது.**

**1கொரி 8:8. போஜனமானது நம்மை தேவனுக்கு உகந்தவர்களாக்கமாட்டாது; என்னத்தினாலெனில், புசிப்பதினால் நமக்கு ஒரு மேன்மையுமில்லை, புசியாதிருப்பதினால் நமக்கு ஒரு குறைவுமில்லை.**

**1கொரி 8:9. ஆகிலும் இதைக் குறித்து உங்களுக்கு உண்டாயிருக்கிற அதிகாரம் எவ்விதத்திலும் பலவீனருக்கு தடுக்கலாகாதபடிக்குப் பாருங்கள்.**

**1கொரி 8:10. எப்படியெனில், அறிவுள்ளவனாகிய உன்னை விக்கிரகக் கோவிலிலே பந்தியிருக்க ஒருவன் கண்டால், பலவீனனாயிருக்கிற அவனுடைய மனச்சாட்சி விக்கிரகங்களுக்குப் படைக்கப் பட்டவைகளைப் புசிப்பதற்குத் துணிவு கொள்ளுமல்லவா?**

**1கொரி 8:11. பலவீனமுள்ள சகோதரன் உன் அறிவினிமித்தம் கெட்டுப் போகலாமா? அவனுக்காகக் கிறிஸ்து மரித்தாரே.**

**1கொரி 8:12. இப்படிச் சகோதரருக்கு விரோதமாய்ப் பாவஞ்செய்து, பல வீனமுள்ள அவர்களுடைய மனச் சாட்சியைப் புண்படுத்துகிறதினாலே, நீங்கள் கிறிஸ்துவுக்கு விரோதமாய்ப் பாவஞ்செய்கிறீர்கள்.**

**1கொரி 8:13. ஆதலால் போஜனம் என் சகோதரனுக்கு இடறலுண்டாக்கினால், நான் என் சகோதரனுக்கு இடறலுண்டாக்காத படிக்கு, என்றைக்கும் மாம்சம் புசியாதிருப்பேன்.**

## பலவீனமான மனச்சாட்சி

**ஆகிலும், இந்த அறிவு எல்லாரிடத்திலும் இல்லை. சிலர் இன்றையவரைக்கும் விக்கிரகத்தை ஒரு பொருளென்று எண்ணி, விக்கிரகத்துக்குப் படைக்கப்பட்டதைப் புசிக்கிறார்கள்; அவர்களுடைய மனச்சாட்சி பலவீனமாயிருப்பதால் அசுசிப்படுகிறது (1கொரி 8:7).**

விக்கிரகங்களுக்கு படைக்கப் பட்டவைகளைக் குறித்த விஷயத்தில் விசுவாசிகளெல்லோருக்கும் அறிவு இல்லை. சிலருடைய அறிவு அவர்களுக்கு இறுமாப்பைஉண்டாக்குகிறது. உலகத்திலே விக்கிரகமானது ஒன்றுமில்லை என்று சொல்லி விக்கிரகங்களுக்குப் படைக்கப் பட்டதைப் புசிக்கிறார்கள். இவர்கள் விக்கிரகத்தை ஒரு பொருள் என்று எண்ணுகிறார்கள். விக்கிரகக் கோவிலுக்குப் போய் விக்கிரகத்திற்குப் படைக்கப்பட்டதைப் புசிக்கிறார்கள். புறஜாதி சிநேகிதரோடு விக்கிரகங் களுக்குப் படைக்கப்பட்ட போஜனத்தை, அவர்களோடு பந்தியில் அமர்ந்து புசிக்கிறார்கள். ஏனெனில் உலகத்திலே விக்கிரகமானது ஒன்றுமில்லை என்று இவர்கள் தீர்மானித்திருக்கிறார்கள்.

எல்லாவற்றையும் புசிக்க தங்களுக்கு அதிகாரமுண்டு என்று இவர்கள் நினைக்கிறார்கள். இவர்களுடைய செய்கை மனச்சாட்சியில் பலவீனமுள்ள விசுவாசிகளுக்கு பிரச்சனையா யிருக்கிறது. விக்கிரகமானது ஒன்று மில்லையென்று எல்லோரும் நினைப்பதில்லை. பலவீனமுள்ள விசுவாசி விக்கிரகத்திற்கு படைக்கப்பட்ட போஜனத்தைக் குறித்து தெளிவில்லா மலிருக்கிறார். ஒரு சிலர் இந்த விஷயத்தில் குழப்பத்திலிருக்கிறார்கள். இவர்களுக்கு சத்தியம் தெளிவாக தெரியவில்லை. இவர்களுடைய மனச்சாட்சி பலவீனமாயிருப்பதினால், அது அசுசிப்படுகிறது.

தேவனைப் பற்றியும், விக்கிரகத்தைப் பற்றியும் பலவீனமான விசுவாசி இன்னும் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை. ஆகையினால் இவர்கள் விக்கிரகத்திற்குப் படைக்கப்பட்டதைப் புசிக்கும் போது, அவர்களுடையஇருதயத்தில் குற்றவுணர்வு உண்டாகிறது. விக்கிரகாராதனையில் தாங்கள் பங்குபெற்றுவிட்டோமோ என்று அவர்களுடைய மனச்சாட்சி அவர்களைக் குற்றப்படுத்துகிறது. இப்படிப்பட்ட பலவீனமானவர்கள் தங்களுடைய மனச்சாட்சியை அசுத்தப்படுத்துகிறார்கள்.

பலமுள்ள விசுவாசிகள் பலவீனமுள்ள விசுவாசிகளுக்கு இடறலாயிருக்கக்கூடாது. அவர்களுடைய மனச்சாட்சியை அசுசிப்படுத்துவதற்கு, பலமுள்ளவிசுவாசிகள் காரணமாயிருக்கக் கூடாது. மிகுந்த கவனத்தோடு இந்த விஷயத்தில் நடந்து கொள்ளவேண்டும். ஏனெனில் உலகத்திலே விக்கிரகமானது ஒன்றுமில்லை என்றும், ஒருவரேயன்றி வேறொரு தேவன் இல்லையென்றும் புரிந்துகொள்கிற அறிவு எல்லாரிடத்திலும் இல்லை.

## போஜனமானது

**போஜனமானது நம்மை தேவனுக்கு உகந்தவர்களாக்கமாட்டாது; என்னத்தினாலெனில், புசிப்பதினால் நமக்கு ஒரு மேன்மையுமில்லை, புசியாதிருப்பதினால் நமக்கு ஒரு குறைவுமில்லை (1கொரி 8:8).**

ஒருவன் புசிப்பதினாலோ அல்லது பானம் பண்ணுவதினாலோ பாவம் செய்து விடுவதில்லை. ஏனெனில் போஜனமானது நம்மை தேவனுக்கு உகந்தவர்கள் ஆக்கவுமாட்டாது. தேவனுக்கு சத்துருக்களாக்கவுமாட்டாது. புசிப்பதினால் நமக்கு ஒரு மேன்மையுமில்லை. புசியாதிருப்பதினால் நமக்கு ஒரு குறைவுமில்லை.

கொரிந்து சபையிலுள்ள விசுவாசிகளில் சிலர் விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்டவைகளைக் குறித்த விஷயத்தில் தங்களுக்கு அறிவு உண்டு என்று இறுமாப்பாயிருக்கிறார்கள். விக்கிரகமானது ஒன்றுமில்லை என்று தீர்மானித்து, விக்கிரகக் கோவிலிலே, விக்கிரகங்களுக்கு படைக்கப்பட்ட போஜனத்தை, விக்கிராராதனைக் காரரோடு பந்தியில் அமர்ந்து புசிக்கிறார்கள். இதனால் இவர்களுடைய மனச்சாட்சி அசுத்தப்படுவதில்லை. ஏனெனில் தங்களுக்கு விக்கிரகத்தைப் பற்றிய அறிவு உண்டு என்று இறுமாப்பாயிருக்கிறார்கள்.

பலவீனமான விசுவாசிகளைவிட, தாங்கள் விசுவாசத்தில் பலமுள்ளவர்களென்று பெருமைப்பட்டு, விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்டவற்றைப் புசிக்கிறார்கள். இப்படி புசிப்பது இவர்களுடைய விசுவாசத்திற்குச் சாட்சி கொடுக்காது. ஏனெனில் போஜனமானது நம்மை தேவனுக்கு உகந்தவர்களாக்க மாட்டாது. தேவனைப் பொறுத்தவரையில் நாம் ஒன்றை புசிப்பதும், புசியாமலிருப்பதும் அற்பகாரியம். தேவனுடைய சமுகத்தில் விக்கிரகத்திற்கு படைக்கப்பட்டதைப் புசிப்பதினால் நமக்கு ஒரு மேன்மையும் வந்துவிடப்போவதில்லை. அவற்றைப் புசியாதிருப்பதினால் நாம் தேவனுடைய சமுகத்தில் குறைந்து போகப் போவதுமில்லை.

## பலவீனருக்குத் தடுக்கல்

**ஆகிலும் இதைக் குறித்து உங்களுக்கு உண்டாயிருக்கிற அதிகாரம் எவ்விதத்திலும் பலவீனருக்கு தடுக்கலாகாதபடிக்குப் பாருங்கள். எப்படியெனில், அறிவுள்ளவனாகிய உன்னை விக்கிரகக் கோவிலிலே பந்தியிருக்க ஒருவன் கண்டால், பலவீனனாயிருக்கிற அவனுடைய மனச்சாட்சி விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்டவைகளைப் புசிப்பதற்குத் துணிவுகொள்ளுமல்லவா? பலவீனமுள்ள சகோதரன் உன் அறிவினிமித்தம் கெட்டுப்போகலாமா? அவனுக்காகக் கிறிஸ்து மரித்தாரே. இப்படிச் சகோதரருக்கு விரோதமாய்ப் பாவஞ்செய்து, பலவீனமுள்ள அவர்களுடைய மனச்சாட்சியைப் புண்படுத்துகிறதினாலே, நீங்கள் கிறிஸ்துவுக்கு விரோதமாய்ப் பாவஞ்செய்கிறீர்கள் (1கொரி 8:9-12).**

கொரிந்துவிலுள்ள விசுவாசிகளில் சிலர் தங்களுக்கு எல்லாவற்றையும் புசிப்பதற்கு அதிகாரமுள்ளது என்று நினைக்கிறார்கள். பவுல் அவர்களுடைய விடுதலையைக் குறித்து எச்சரித்துச் சொல்லுகிறார். விசுவாசிகளுக்கு விடுதலை உண்டு. ஆனால் நம்முடைய விடுதலையைப் பயன்படுத்தும்போது நாம் யாருக்கும் தடுக்கலாகயிருக்கக்கூடாது. அதிலும் விசேஷமாக பலவீனருக்கு நாம் ஒருபோதும் தடுக்கலாயிருக்கக்கூடாது.

பலவீனமுள்ள சகோதரன் நம்முடைய அறிவின் நிமித்தம் கெட்டுப்போகக்கூடாது. நமக்கு உண்டாயிருக்கிற அதிகாரம் எவ்விதத்திலும் பலவீனருக்கு தடுக்கலாயிருக்கக் கூடாது. ஏனெனில் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து அவனுக்காகவும் மரித்திருக்கிறார். இயேசு கிறிஸ்து தம்முடைய கிருபையினாலும், இரக்கத்தினாலும் பலவீனருக்காகவும் மரித்தார். கிறிஸ்து பாவிகள்மீது இரக்கம் காண்பிக்கிறார்.

கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் கிறிஸ்துவைப் போலவே, பலவீனமான விசுவாசிகள்மீது இரக்கம் காண்பிக்க வேண்டும்.அவர்களிடத்தில் கரிசனையோடு நடந்துகொள்ள வேண்டும். அவர்கள் நிமித்தமாக நம்மை நாமே வெறுக்க வேண்டும். நம்முடைய ஆசைகளை வெறுக்க வேண்டும். நம்முடைய போஜனங்களை வெறுக்கவேண்டும்.

கிறிஸ்துவின் அன்பு நம்மிடத்தில் காணப்பட வேண்டும். தேவனிடத்தில் அன்பு கூருகிறவன், அவருடைய பிள்ளைகளிடத்திலும் அன்புகூருவான். கர்த்தருடைய பிள்ளைகள் யாருக்கும் தடுக்கலாகயிருக்கமாட்டார்கள். தனக்குண்டாயிருக்கிற அதிகாரத்தை பலவீனருக்கு தடுக்கலாகப் பயன்படுத்தமாட்டான்.

நாம் மற்ற விசுவாசிகளுக்கு விரோதமாகப் பாவம் செய்யக் கூடாது. பலவீனமுள்ள அவர்களுடைய மனச்சாட்சியை புண்படுத்தக் கூடாது. அப்படிச்செய்தால் நாம் மற்ற சகோதரர்களுக்கு விரோதமாக மாத்திரமல்ல, கிறிஸ்துவுக்கு விரோதமாகவும் பாவம் செய்கிறோம். விசுவாசிகளுக்கு காயம் உண்டாக்குகிறவர்கள் கிறிஸ்துவுக்கு காயம் உண்டாக்குகிறார்கள். கிறிஸ்து யாருக்காக சிலுவையில் மரித்தாரோ, அவர்களுக்கு நாம் ஒருபோதும் தடுக்கலாகயிருக்கக் கூடாது. நம்மூலமாக அவர்கள் இடறலடையக்கூடாது. கிறிஸ்துவிடத்தில் காணப்படுகிற அன்பு நம்மிடத்திலும் காணப்படவேண்டும். நமக்காக பாடுகளை அனுபவித்த கிறிஸ்துவுக்கு விரோதமாக நாம் பாவம் செய்யக்கூடாது.

## மாம்சம் புசியாதிருப்பேன்

**ஆதலால் போஜனம் என் சகோதரனுக்கு இடறலுண்டாக்கினால், நான் என் சகோதரனுக்கு இடறலுண்டாக்காதபடிக்கு, என்றைக்கும் மாம்சம் புசியாதிருப்பேன் (1கொரி 8:13).**

விசுவாசிகளாகிய நாம் மற்ற விசுவாசிகளைக் குறித்த விஷயத்தில் மிகவும் எச்சரிப்பாய் ஜீவிக்கவேண்டும். கிறிஸ்துவுக்குள் நமக்கு அதிகாரமுண்டாயிருக்கிறது என்பது மெய்தான். ஆனால் இந்த அதிகாரத்தை மற்ற விசுவாசிகளுக்கு தடுக்கலாகப் பயன்படுத்தக் கூடாது. மற்ற விசுவாசிகளின் ஆத்துமா காயப்படுவதற்கோ அல்லது அழிந்துபோவதற்கோ நாம் காரணமாயிருக்கக் கூடாது. பிற விசுவாசிகளுக்கு நாம் தடுக்கலாயிருக்கும் போது, நம்முடைய கர்த்தரும் இரட்சகருமாகிய கிறிஸ்துவுக்கு விரோதமாய்ப் பாவம் செய்கிறோம். ஏனெனில் நம்முடைய மீட்பராகிய இயேசுகிறிஸ்து நமக்காகச் சிலுவையில் மரித்ததுபோல, அவர்களுக்காகவும் மரித்திருக்கிறார்.

ஆகையினால் நம்முடைய பேச்சும், கிரியைகளும் மற்ற விசுவாசிகளுக்கு இடறலாகயிருக்குமென்றால், நாம் அப்படிப்பட்ட பேச்சுக்களையும் கிரியைகளையும் நம்மைவிட்டு நீக்கிப்போடவேண்டும். எந்த சூழ்நிலையிலும் மற்றவர்கள் பாவம் செய்வதற்கு நாம் காரணமாயிருக்கக்கூடாது. நம்முடைய பாவங்களை நாம் நீக்கிப்போடுவதில் நாம் மிகுந்த கவனத்தோடிருக்கவேண்டும். ஏனெனில் நாம் மற்ற விசுவாசிகளுடைய மனதைப் புண்படுத்தும் போது, கிறிஸ்துவுக்கு விரோதமாய்ப் பாவம் செய்கிறோம்.

போஜனவிஷயத்தில் நாம் எப்படி நடந்துகொள்ளவேண்டுமென்று பவுல் தன்னையே நமக்கு முன்மாதிரியாகக் காண்பிக்கிறார். தன்னுடைய போஜனம் மற்ற விசுவாசிகளுக்கு இடறல் உண்டாக்குமானால், என்றைக்கும் அந்தப் போஜனத்தை தான் புசியாதிருப்பதாகச் சொல்லுகிறார். தான் புசிக்கிற மாம்சம் மற்ற விசுவாசிகளுக்கு இடறல் உண்டாக்காதபடிக்கு, தான் என்றைக்கும் மாம்சம் புசியாதிருப்பேன் என்று அறிக்கை செய்கிறார். பவுல் இந்த ஆலோசனையை தன்னையே முன்மாதிரியாக வைத்துச் சொல்லுகிறார். கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் மற்ற விசுவாசிகளுக்கு விரோதமாக பாவம் செய்யக்கூடாது. மற்ற விசுவாசிகளின் மனச்சாட்சியை புண்படுத்தக் கூடாது. நம்முடைய விடுதலை மற்ற விசுவாசிகளுக்கு தடுக்கலாயிருக்கக் கூடாது.

புசிக்கிற மாம்சம் மற்ற விசுவாசிகளுக்கு இடறல் உண்டாக்காத படிக்கு, தான் என்றைக்கும் மாம்சம் புசியாதிருப்பேன் என்று அறிக்கை செய்கிறார். பவுல் நமக்கு இந்த ஆலோசனையை தன்னையே முன்மாதிரியாக வைத்துச் சொல்லுகிறார். கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் மற்ற விசுவாசிகளுக்கு விரோதமாக பாவம் செய்யக்கூடாது. மற்ற விசுவாசிகளின் மனச்சாட்சியை புண்படுத்தக்கூடாது. நம்முடைய விடுதலை மற்ற விசுவாசிகளுக்கு தடுக்கலாகயிருக்கக் கூடாது.

# 9 அதிகாரம்

அப்போஸ்தலர் பவுல் தன்னுடைய அப்போஸ்தல ஊழியத்தையும், அப்போஸ்தல அதிகாரத்தையும் உறுதிபண்ணுகிறார் (அப் 9:1,2). தான் செய்கிற ஊழியத்தைப்பற்றி கேட்கப்பட்ட கேள்விகளுக்கு அப்போஸ்தலர் பவுல் மாறுத்தரம் சொல்லுகிறார் (அப் 9:3-14). அப்போஸ்தலர் பவுல் தனக்குண்டாயிருக்கிற அப்போஸ்தல அதிகாரத்தை முற்றிலும் செலுத்தவில்லை (அப் 9:15-18). எல்லோரையும் கிறிஸ்துவுக்கு ஆதாயப்படுத்திக்கொள்ளும் படிக்கு, பவுல் எல்லோருக்கும் எல்லாமானார் (அப் 9:19-23). கர்த்தருடைய பிள்ளைகளெல்லோரும் அழிவில்லாத கிரீடத்தைப் பெறும்படிக்கு பந்தயச்சாலையிலே ஓடவேண்டும் (அப் 9:24-27).

## அப்போஸ்தல ஊழியம் 1கொரி 9 : 1,2

**1கொரி 9:1. நான் அப்போஸ்தலனல்லவா? நான் சுயாதீனனல்லவா? நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை நான் தரிசிக்கவில்லையா? கர்த்தருக்குள் நீங்கள் என் கிரியையாயிருக்கிறீர்களல்லவா?**

**1கொரி 9:2. நான் மற்றவர்களுக்கு அப்போஸ்தலனாயிரா விட்டாலும், உங்களுக்கல்லவோ அப்போஸ்தலனா யிருக்கிறேன்; கர்த்தருக்குள் நீங்கள் என் அப்போஸ்தல ஊழியத்திற்கு முத்திரையாயிருக்கிறீர்களே.**

அப்போஸ்தலர் பவுலுக்கு சபைக்குள்ளேயிருந்தும், வெளியேயிருந்தும் எதிர்ப்புக்களும் பிரச்சனைகளும் உண்டாயிற்று. சபைக்குள்ளே யிருக்கிறவர்கள் பவுலுக்கு விரோதமாக எழும்பியிருக்கிறார்கள். அவருடைய ஊழியத்தை சோர்வடையச் செய்ய முயற்சிபண்ணுகிறார்கள். பவுலின் அப்போஸ்தல ஊழியத்தையும், அப்போஸ்தல அதிகாரத்தையும் அங்கீகரிக்காமல், அவற்றைக் குறித்து அவரிடத்தில் கேள்வி கேட்கிறார்கள்.

அப்போஸ்தலர் பவுல் தன்னுடைய அப்போஸ்தல ஊழியத்தையும், அப்போஸ்தல அதிகாரத்தையும் அவர்களிடத்தில் உறுதிப்படுத்துகிறார். "நான் அப்போஸ்தலனல்லவா, நான் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவைத் தரிசிக்கவில்லையா" என்று பவுல் அவர்களிடத்தில் கேள்வி கேட்கிறார். உயிர்த்தெழுந்த இயேசுகிறிஸ்துவைத் தங்கள் கண்களால் தரிசித்தவர்கள் மாத்திரமே அப்போஸ்தலர்களென்று அங்கீகரிக்கப்படுகிறார்கள். பவுல் உயிர்த்தெழுந்த இயேசுகிறிஸ்துவைத் தரிசித்திருக்கிறார். ஆகையினால் அவர்களுடைய எதிர்பார்ப்பின் பிரகாரம் பவுல் அப்போஸ்தராக அங்கீகரிக்கப்பட வேண்டும்.

"நான் சுயாதீனனல்லவா" என்று அவர்களிடத்தில் கேள்வி கேட்கிறார். ஊழியம் செய்கிறவர்களுக்கு விசுவாசிகள் உதவிசெய்யவேண்டும். பவுலோ தன்னுடைய சொந்தக் கைகளினால் வேலை செய்து, தன்னை போஷித்துப் பராமரிக்கிறார். எந்த விஷயத்திலும் பவுல் கொரிந்து சபையிலுள்ள விசுவாசிகளைச் சார்ந்திராமல், சுயாதீனனாகவே இருக்கிறார்.

கொரிந்தியர் மத்தியில் பவுலின் ஊழியம் மிகவும் பிரயோஜனமாயிருக்கிறது. ஏராளமான ஆத்துமாக்கள் அவருடைய ஊழியத்தின் மூலமாய் இரட்சிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் பவுலின் அப்போஸ்தல ஊழியத்திற்கு, கர்த்தருக்குள் முத்திரையாயிருக்கிறார்கள். கொரிந்து சபையிலுள்ளவர்கள் அப்போஸ்தலர் பவுலுக்கு மதிப்பும் மரியாதையும் காண்பிக்கவேண்டும். ஏனெனில் அவர் மற்றவர்களுக்கு அப்போஸ்தலனா யிராவிட்டாலும், கொரிந்தியருக்கு அப்போஸ்தலனாயிருக்கிறார். அவர்களும் பவுலின் அப்போஸ்தல ஊழியத்திற்கு முத்திரையாயிருக்கிறார்கள்.

பவுலின் ஊழியத்தின் மூலமாய் இரட்சிக்கப்பட்டவர்கள், அவருடைய அப்போஸ்தல ஊழியத்தைக் குறித்தோ, அல்லது அவருடைய அப்போஸ்தல அதிகாரத்தைக்குறித்தோ சந்தேகப்படக் கூடாது. ஊழியக்காரரைக்குறித்து இதுபோல தேவையில்லாத கேள்விகளைக் கேட்கிறவர்கள், ஊழியக்காரர்களுக்கு மரியாதை கொடுக்கமாட்டார்கள்.

## பவுலின் மாறுத்தரம்
## 1கொரி 9 : 3-14

**1கொரி 9:3. என்னை நியாயம் விசாரிக்கிறவர்களுக்கு நான் சொல்லுகிற மாறுத்தரமாவது;**

**1கொரி 9:4. புசிக்கவும் குடிக்கவும் எங்களுக்கு அதிகாரமில்லையா?**

**1கொரி 9:5. மற்ற அப்போஸ்தலரும், கர்த்தருடைய சகோதரரும், கேபாவும், செய்கிறதுபோல, மனைவியாகிய ஒரு சகோதரியைக் கூட்டிக்கொண்டு திரிய எங்களுக்கும் அதிகாரமில்லையா?**

**1கொரி 9:6. அல்லது, கைத்தொழில் செய்யாதிருக்கிறதற்கு எனக்கும் பர்னபாவுக்கும் மாத்திரந்தானா அதிகாரமில்லை?**

**1கொரி 9:7. எவன் தன் சொந்தப்பணத்தைச் செலவழித்து, தண்டிலே சேவகம் பண்ணுவான்? எவன் திராட்சத் தோட்டத்தை உண்டாக்கி, அதின் கனியில் புசியாதிருப்பான்? எவன் மந்தையை மேய்த்து, அதின் பாலைச் சாப்பிடாதிருப்பான்?**

**1கொரி 9:8. இவைகளை மனுஷர் வழக்கத்தின்படி சொல்லுகிறேனோ? நியாயப்பிரமாணமும் இவைகளைச் சொல்லுகிறதில்லையா?**

**1கொரி 9:9. போரடிக்கிற மாட்டை வாய்கட்டாயாக என்று மோசேயின் பிரமாணத்திலே எழுதியிருக்கிறதே. தேவன் மாடுகளுக்காகவே கவலையாயிருக்கிறாரோ?**

**1கொரி 9:10. நமக்காகத்தான் இதைச் சொல்லுகிறாரோ? உழுகிறவன் நம்பிக்கையோடே உழவும், போரடிக்கிறவன் தான் நம்புகிறதில் பங்கடைவேன் என்கிற நம்பிக்கையோடே போரடிக்கவும் வேண்டியதே, ஆகையால், அது நமக்காகவே எழுதியிருக்கிறது.**

**1கொரி 9:11. நாங்கள் உங்களுக்கு ஞானநன்மைகளை விதைத்திருக்க, உங்கள் சரீரநன்மைகளை அறுத்தால் அது பெரிய காரியமா?**

**1கொரி 9:12. மற்றவர்கள் உங்களிடத்திலே இந்த அதிகாரத்தைச் செலுத்தினால், அவர்களிலும் நாங்கள் அதிகமாய்ச் செலுத்தலாமல்லவா? அப்படியிருந்தும், கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்கு யாதொரு தடையும் உண்டாகாதபடிக்கு, நாங்கள் இந்த அதிகாரத்தை செலுத்தாமல் எல்லாப்பாடும்படுகிறோம்.**

**1கொரி 9:13. ஆசாரிய ஊழியஞ் செய்கிறவர்கள் தேவாலயத்திற் குரியவைகளில் புசிக்கிறார்களென்றும், பலிபீடத்தை அடுத்துப் பணிவிடை செய்கிறவர்களுக்குப் பலிபீடத்திலுள்ளவைகளில் பங்கு உண்டென்றும் அறியீர்களா?**

**1கொரி 9:14. அந்தப்படியே சுவிசேஷத்தை அறிவிக்கிறவர்களுக்குச் சுவிசேஷத்தினால் பிழைப்பு உண்டாகவேண்டுமென்று கர்த்தரும் கட்டளையிட்டிருக்கிறார்.**

தன்னுடைய அப்போஸ்தல ஊழியத்தையும், அப்போஸ்தல அதிகாரத்தையும் அங்கீகரியாமல், சந்தேகப்பட்டு, அதைப்பற்றி தன்னிடத்தில் கேள்வி கேட்கும் கொரிந்தியருக்கு, பவுல் இந்த வசனப்பகுதியில் மாறுத்தரம் சொல்லுகிறார். மனுஷர் மத்தியில் இயல்பாக காணப்படுகிற காரியங்களை எடுத்துக்காட்டாகச் சொல்லி, பவுல் தன்னுடைய அப்போஸ்தல அதிகாரத்தை உறுதிபண்ணுகிறார். இந்த உலகத்தில் மனுஷர் பலவிதமான வேலைகளைச் செய்கிறார்கள். அவர்கள் தங்கள் வேலைக்குரிய கூலியைப் பெற்றுக் கொள்கிறார்கள். அது அவர்களுக்கு நியாயமாகக் கொடுக்கப்பட வேண்டிய சம்பளம். வேலை செய்கிறவர்களுக்குத் தங்கள் கூலியைப் பெற்றுக்கொள்கிற உரிமையிருக்கிறது.

தண்டிலே சேவகம் பண்ணுகிறவனுக்கு சம்பளம் கொடுக்கப்படும். திராட்சத்தோட்டத்தை உண்டாக்குகிறவன் அதின் கனியில் புசிப்பான். மந்தையை மேய்க்கிறவன் அதின் பாலைச் சாப்பிடுவான். இவை மனுஷருடைய வழக்கம். நியாயப்பிரமாணமும் இதை உறுதிபண்ணுகிறது. போரடிக்கிற மாட்டை வாய்க்கட்டாயாக என்று மோசேயின் பிரமாணத்திலே எழுதியிருக்கிறது. மனுஷருடைய வழக்கத்தின்படியும், மோசேயின் பிரமாணத்திலே எழுதியிருக்கிறபடியும், அப்போஸ்தலருக்கு புசிக்கவும் குடிக்கவும் அதிகாரமுள்ளது. தாங்கள் ஊழியம் செய்கிற மனுஷரிடத்தில், அந்த ஊழியத்தின் பலனை அனுபவிக்க ஊழியக்காரருக்கு அனுமதியுள்ளது.

ஊழியக்காரர்கள் விசுவாசிகளுக்கு ஞானநன்மைகளை விதைக்கிறார்கள். அவர்கள் சரீர நன்மைகளை அறுக்கிறார்கள். சுவிசேஷத்தை அறிவிக்கிறவர்களுக்கு சுவிசேஷத்தினாலே பிழைப்பு உண்டாகவேண்டும்.

போரடிக்கிற மாட்டை வாய்க்கட்டாயாக என்பது பழைய ஏற்பாட்டுக்காலத்தில், மோசேயின் பிரமாணத்தில் எழுதப்பட்டிருக்கிறது. இந்தப் பிரமாணம் பழைய ஏற்பாட்டுக் காலத்திற்கு மாத்திரம் உரியது என்று சொல்லி, புதிய ஏற்பாட்டுக் காலத்தில் இதை ஏற்றுக்கொள்ளாமல் தள்ளிவிடக் கூடாது. தேவன் மாடுகளுக்காக மாத்திரம் கவலையாயிருக்கவில்லை. வேலை செய்கிறவர்களுக்கு உரிய சம்பளம் கொடுக்கவேண்டும் என்பதை மனுஷருக்கு உபதேசம் பண்ணுவதற்காகவே, தேவன் போரடிக்கிற மாட்டை வாய்க்கட்டாயாக என்று சொல்லுகிறார். மாட்டைவிட, தேவன் மனுஷர்மீதே அதிக அக்கரையோடிருக்கிறார்.

வேலை செய்கிறவர்களுக்கு உரிய பங்கு கிடைக்கவேண்டும். அவர்களுடைய வேலைக்குத் தகுந்த ஊதியத்தை அவர்களுக்குக் கொடுக்கவேண்டும். திராட்சத் தோட்டத்தை உண்டாக்குகிறவனுக்கு அதின் கனியில் புசிக்கிற உரிமை கொடுக்கப்படவேண்டும். அதுபோலவே மந்தையை மேய்க்கிறவனுக்கு அதின் பாலைச் சாப்பிடுகிற உரிமையும் கொடுக்கப்படவேண்டும்.

ஊழியக்காரர்கள் நம்முடைய ஆத்துமாக்களின் நன்மைக்காக ஊழியம் செய்கிறார்கள். கர்த்தருடைய வசனத்தினால் நம்முடைய ஆத்துமாக்களைப் போஷிக்கிறார்கள். மிகுந்த பாரத்தோடு ஊழியக்காரர்கள் ஊழியம் செய்யும்போது அவர்களுடைய வாய்களை கட்டிப்போடக்கூடாது. ஊழியக்காரர்களிடத்திலிருந்து ஆத்தும நன்மைகளைப் பெற்றவர்கள், அவர்களுக்கு சரீரப்பிரகாரமான உதவிகளைச் செய்யவேண்டும். ஊழியக்காரர்களுக்கு புசிக்கவும் குடிக்கவும் உதவிபுரியவேண்டும். தங்களிடத்திலிருந்து பெற்றுக்கொள்ள ஊழியக்காரர்களுக்கு எந்த உரிமையும் இல்லையென்று சொல்லி, ஊழியக்காரருடைய வாய்களைக் கட்டிப்போட்டுவிடக்கூடாது.

விசுவாசிகள் ஊழியக்காரர்களைப் பராமரிக்கவேண்டும். உழுகிறவன் நம்பிக்கையோடே உழவேண்டும். போரடிக்கிறவனும் தான் நம்புகிறதில் பங்கடைவேன் என்கிற நம்பிக்கையோடே போரடிக்கவேண்டும். உழுகிறவனுக்கும், போரடிக்கிறவனுக்கும் விளைச்சலில் உரிய பங்கு கிடைக்கவேண்டும். தங்களுக்கு உரிய பங்கு கிடைக்கும் என்னும் நம்பிக்கையும் வேலை செய்கிறவர்களுக்கு உண்டாகவேண்டும்.

ஊழியக்காரர்கள் ஜனங்களுக்கு ஆவிக்குரிய நன்மைகளை விதைக்கிறார்கள். அவர்களுடைய ஜீவியத்தில் ஆவிக்குரிய ஆசீர்வாதங்களை அறுவடை செய்கிறார்கள். உலகப்பிரகாரமாக உழுகிறவர்களுக்கும், போரடிக்கிறவர்களுக்கும் உரிய பங்கு கிடைப்பதுபோல, ஆவிக்குரிய ஆசீர்வாதங்களை ஜனங்கள் மத்தியில் விதைத்து போரடிக்கிற ஊழியக்காரர்களுக்கு, அந்த ஆசீர்வாதத்தில் உரிய பங்கு கிடைக்கவேண்டும்.

விசுவாசிகள் ஊழியக்காரர்கள் மூலமாக ஏராளமான நன்மைகளைப் பெற்றுக்கொண்டு, ஊழியக்காரர்களை ஆசீர்வதிக்கிற விஷயத்தில் கஞ்சத்தனம் காண்பிக்கக்கூடாது. ஊழியக்காரர்கள் விசுவாசிகளுக்கு ஞானநன்மைகளை விதைக்கிறார்கள். சரீர நன்மைகளை விசுவாசிகளிடத்திலிருந்து அறுவடை செய்வதற்கு ஊழியக்காரர்களுக்கு அனுமதியிருக்கிறது.

மற்ற ஊழியக்காரர்கள் கொரிந்து சபையிலுள்ள விசுவாசிகளிடத்தில் தங்களுடைய அப்போஸ்தல அதிகாரத்தைச் செலுத்துகிறார்கள். அவர்களிடத்திலிருந்து சரீர நன்மைகளை ஏராளமாய்ப் பெற்றுக்கொள்கிறார்கள். அவர்கள் பெற்றுக்கொள்ளும்போது, பவுலும், பவுலின் உடன்ஊழியரும் கொரிந்து சபையாரிடத்திலிருந்து சரீர நன்மைகளை அதிகமாய்ப் பெற்றுக் கொள்ள அவர்களுக்கு அனுமதியிருக்கிறது. மற்ற ஊழியக்காரர்கள் அவர்களிடத்தில் அப்போஸ்தல அதிகாரத்தைச் செலுத்தும்போது, அவர்களைவிட தங்களுக்கு அப்போஸ்தல அதிகாரத்தை அதிகமாய்ச் செலுத்துகிற உரிமையிருப்பதாக பவுல் மாறுத்தரம் சொல்லுகிறார்.

தன்னுடைய அப்போஸ்தல அதிகாரத்தை கொரிந்தியர்மீது செலுத்துவதினால், கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்கு யாதொரு தடையும் உண்டாகக்கூடாது என்பதில் பவுல் அதிகக்கவனம் செலுத்துகிறார். அதினிமித்தமாக, பவுல் அவர்கள்மீது தன்னுடைய அப்போஸ்தல அதிகாரத்தை செலுத்தவில்லை. எல்லா பாடுகளையும் பவுலே சகித்துக்கொள்கிறார். தாங்கிக்கொள்கிறார்.

ஆசாரிய ஊழியம் செய்கிறவர்கள் தேவாலயத்திற்குரியவைகளில் புசிப்பதற்கு பங்குள்ளது. பலிபீடத்தை அடுத்து பணிவிடை செய்கிறவர்களுக்கு பலிபீடத்திலுள்ளவைகளில் பங்கு உண்டு. இது பழைய ஏற்பாட்டு பிரமாணமாகயிருந்தாலும், இயேசு கிறிஸ்துவும் இந்தப் பிரமாணத்தை புதிய ஏற்பாட்டுக்காலத்தில் உறுதிபண்ணுகிறார். "சுவிசேஷத்தை அறிவிக்கிறவர்களுக்கு சுவிசேஷத்தினாலே பிழைப்பு உண்டாகவேண்டும்" என்று கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவும் கட்டளையிட்டிருக்கிறார். அப்படியிருந்தும் பவுல் இவைகளில் ஒன்றையும் அனுபவிக்கவில்லை.

## அப்போஸ்தல அதிகாரத்தைச் செலுத்தாமல் 1கொரி 9 : 15-18

**1கொரி 9:15. அப்படியிருந்தும், நான் இவைகளில் ஒன்றையும் அநுபவிக்கவில்லை; இப்படி எனக்கு நடக்க வேண்டுமென்று இவைகளை நான் எழுதுகிறதில்லை. என் மேன்மை பாராட்டலை ஒருவன் அவத்தமாக்குகிறதைப் பார்க்கிலும் சாகிறது எனக்கு நலமாயிருக்கும்.**

**1கொரி 9:16. சுவிசேஷத்தை நான் பிரசங்கித்து வந்தும், மேன்மை பாராட்ட எனக்கு இடமில்லை; அது என்மேல் விழுந்த கடமையாயிருக்கிறது; சுவிசேஷத்தை நான் பிரசங்கியாதிருந்தால், எனக்கு ஐயோ.**

**1கொரி 9:17. நான் உற்சாகமாய் அப்படிச் செய்தால் எனக்குப் பலன் உண்டு; உற்சாகமில்லாதவனாய்ச் செய்தாலும், உக்கிராண உத்தியோகம் எனக்கு ஒப்புவிக்கப்பட்டிருக்கிறதே.**

**1கொரி 9:18. ஆதலால் எனக்குப் பலன் என்ன? நான் சுவிசேஷத்தை பிரசங்கிக்கையில் அதைப்பற்றி எனக்கு உண்டாயிருக்கிற அதிகாரத்தை முற்றிலும் செலுத்தாமல், கிறிஸ்துவின் சுவிசேஷத்தைச் செலவில்லாமல் ஸ்தாபிப்பதே எனக்குப் பலன்.**

பழைய ஏற்பாட்டு பிரமாணத்தின்படியும், புதிய ஏற்பாட்டு பிரமாணத்தின்படியும், சுவிசேஷத்தை அறிவிக்கிறவர்களுக்கு சுவிசேஷத்தினாலே பிழைப்பு உண்டாகவேண்டும். ஞானநன்மைகளை விதைக்கிறவர்களுக்கு சரீர நன்மைகளை அறுவடைசெய்யும் உரிமை உண்டு. அப்படியிருந்தும் பவுல் இவைகளில் ஒன்றையும் அனுபவிக்கவில்லை. தனக்கு சரீரப்பிரகாரமான நன்மைகள் கொடுக்கப்படவேண்டும் என்பதை வலியுறுத்துவதற்காக பவுல் இந்த வசனங்களை எழுதவுமில்லை.

பவுல் சம்பளத்திற்கு ஊழியம் செய்யவில்லை. பவுல் தன்னைத்தானே வெறுத்து, இயேசுகிறிஸ்துவின் சிலுவையைச் சுமந்து, அவரைப் பின்பற்றி, அவருக்காக ஊழியம் செய்கிறார். ஆத்துமாக்களை கிறிஸ்துவுக்காக ஆதாயப்படுத்துவது மாத்திரமே பவுலின் ஊழியம். இரட்சிக்கப்பட்டவர்கள் மூலமாய் தனக்கு பிழைப்பு உண்டாக வேண்டுமென்று, பவுல் விசுவாசிகளைச் சார்ந்து ஊழியம் செய்யவில்லை.

தான் செய்கிற சுவிசேஷ ஊழியத்தை பவுல் இங்கு விவரித்துச் சொல்லுகிறார். அவர் சுவிசேஷத்தைப் பிரசங்கித்துவந்தும், மேன்மை பாராட்ட அவருக்கு இடமில்லை. பணத்திற்காக அவர் ஊழியம் செய்யவில்லை. சுவிசேஷ ஊழியம் செய்வது தன்மேல் விழுந்த கடமையாயிருக்கிறது என்றும், சுவிசேஷத்தை தான் பிரசங்கியாதிருந்தால் தனக்கு ஐயோ என்றும் பவுல் தன்னுடைய ஊழியத்தைப்பற்றி விவரித்துச் சொல்லுகிறார். ஊழியத்திற்காக வேறுபிரிக்கப்பட்டவர்கள் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கவேண்டும். ஊழியம் செய்கிறேன் என்று சொல்லியும், கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பிரசங்கியாதவர்களுக்கு ஐயோ.

ஊழியக்காரர்கள் விசுவாசிகளிடத்திலிருந்து நன்மைகளைப் பெற்றுக்கொள்ளக்கூடாது என்று பவுல் எந்தத் தடையும் பண்ணவில்லை. சுவிசேஷத்தை அறிவிக்கிறவர்களுக்கு சுவிசேஷத்தினாலே பிழைப்பு உண்டாகவேண்டும் என்பதை பவுலும் அங்கீகரிக்கிறார். ஞானநன்மைகளை விதைக்கிற ஊழியக்காரர்கள் சரீர நன்மைகளை அறுவடைபண்ணலாம் என்று பவுலும் அங்கீகரிக்கிறார். ஆனாலும் பவுல் இவைகளில் ஒன்றையும் அனுபவிக்கவில்லை.

பவுல் பல தேசங்களில் சுவிசேஷத்தைப் பிரசங்கம்பண்ணினார். எல்லா தேசங்களிலும் விசுவாசிகள் மூலமாய் பவுலுக்கு உதவி கிடைக்கவில்லை. அவர்கள் மத்தியில் ஞானநன்மைகளை பவுல் விதைத்திருந்தாலும், அவர்களிடத் திலிருந்து சரீர நன்மைகளை பவுலால் அறுவடை செய்யமுடியவில்லை.

எல்லா ஊழியக்காரர்களுக்கும், ஊழியம் செய்கிற எல்லா இடங்களிலுமுள்ள விசுவாசிகளிடத்தி லிருந்து உதவி கிடைக்காது. சில விசுவாசிகளிடத்திலிருந்து ஊழியக் காரர்கள் ஒன்றும் எதிர்பார்க்க முடியாது. அப்படிப்பட்ட சூழ்நிலையில்கூட, ஊழியக்காரர்கள் கிறிஸ்துவின் சுவிசேஷத்தை உண்மையாய்ப் பிரசங்கம் பண்ணவேண்டும். சரீர நன்மைகளை அறுவடை செய்வதற்கு வாய்ப்பு இல்லையென்பதற்காக, அங்கு ஞானநன்மைகளை விதைக்காமல் விட்டுவிடக்கூடாது. ஏனெனில் சுவிசேஷத்தைப் பிரசங்கம்பண்ணுவது எல்லா ஊழியக்காரர்கள்மீதும் விழுந்த கடமையாயிருக்கிறது.

ஊழியக்காரர்கள் சில இடங்களில் ஊழியம் செய்யும்போது, விசுவாசிகள் மூலமாய் அதிக நன்மைகள் உண்டாகும். அவற்றைப் பெற்றுக்கொள்கிற உரிமை ஊழியக்காரருக்கு உண்டு. சில விசுவாசிகளிடத்தில் ஊழியக்காரர்கள் உரிமையோடு தங்கள் பங்கை கேட்கலாம். விசுவாசிகள் ஊழியக்காரர்களைப் போஷிக்கவேண்டும். தங்களுடைய ஆத்துமாக்களுக்கு ஊழியம் செய்கிற ஊழியக்காரர்களின் சரீர நன்மைகளை விசுவாசிகள் கவனிக்கவேண்டும். ஆனால் பவுலோ, இவையெல்லாவற்றையும் அனுபவிப்பதற்கு தனக்கு உரிமையிருந்தாலும், இவைகளில் ஒன்றையும் அவர் அனுபவிக்கவில்லை. சுவிசேஷத்தைத் தான் பிரசங்கித்து வந்தும், மேன்மை பாராட்ட தனக்கு இடமில்லை என்று சொல்லிவிடுகிறார்.

சுவிசேஷ ஊழியத்தை தான் உற்சாகமாய்ச் செய்தால் தனக்குப் பலன் உண்டு என்று பவுல் அங்கீகரிக்கிறார். இந்தப் பலன் மனுஷரிடத்திலிருந்து வருவதில்லை. தேவனிடத்திலிருந்து வருகிறது. கர்த்தருக்காக ஊழியம் செய்கிறவர்கள் கர்த்தரிடத்திலிருந்து பலனைப் பெற்றுக்கொள்வார்கள். நாம் செய்கிற ஊழியத்தை உற்சாகமாய்ச் செய்யவேண்டும். முழுமனதோடும், முழுஇருதயத்தோடும் ஊழியம் செய்யவேண்டும். உற்சாகமாய் ஊழியம் செய்யவில்லையென்றால், நம்மால் கர்த்தரிடத்திலிருந்து பலனைப் பெற்றுக்கொள்ள முடியாது. கர்த்தருடைய கிருபையும் நம்மைவிட்டு நீங்கிப்போகும். சரீரத்தில் ஜீவனும் ஆவியும் இல்லையென்றால் அது பிரேதமாகவே இருக்கும். அதுபோலவே நாம் செய்கிற ஊழியத்தில் முழுமையான ஈடுபாடும், முழுஉற்சாகமும் காண்பிக்கவில்லையென்றால், அது ஜீவனுள்ள ஊழியமாகயிராது.

கர்த்தர் தம்முடைய ஊழியக்காரரிடத்தில் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கிற உக்கிராண உத்தியோகத்தை ஒப்புக் கொடுத்திருக்கிறார். உக்கிராணக்காரர்களெல்லோரும் தங்கள் எஜமானுக்கு கணக்கு ஒப்புவிக்கவேண்டும். நாம் உற்சாகமில்லாமல், சோம்பேறியாக ஊழியம் செய்தால், நம்முடைய கர்த்தருக்கு நாம் கணக்கு ஒப்புவிக்கவேண்டும்.

கர்த்தருடைய ஊழியத்தைச் செய்கிறவர்களுக்கு அப்போஸ்தல அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஊழியக்காரர்கள் தங்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற அப்போஸ்தல அதிகாரத்தை துஷ்பிரயோகம் பண்ணக்கூடாது. தேவன் ஒரு விசேஷித்த நோக்கத்திற்காகவே ஊழியக்காரர்களுக்கு இந்த அதிகாரத்தைக் கொடுத்திருக்கிறார். பவுல் தனக்கு உண்டாயிருக்கிற அதிகாரத்தை விசுவாசிகளிடத்தில் முற்றிலும் செலுத்தவில்லை. அப்போஸ்தல அதிகாரத்தை செலுத்தாமல், கிறிஸ்துவின் சுவிசேஷத்தை ஸ்தாபிப்பதே தனக்குப் பலன் என்று பவுல் சொல்லுகிறார். தனக்கு அதிகாரமிருந்தும் பவுல் அந்த அதிகாரத்தைப் பயன்படுத்தவில்லை. ஊழியக்காரர்களுக்கு கர்த்தர் அனுமதித்திருக்கிற ஆசீர்வாதங்களை அநுபவிக்கிற உரிமையிருந்தும், பவுல் அவைகளில் ஒன்றையும் அனுபவிக்கவில்லை.

## எல்லாருக்கும் அடிமை 1கொரி 9 : 19-23

**1கொரி 9:19. நான் ஒருவருக்கும் அடிமைப்படாதவனாயிருந்தும், நான் அதிக ஜனங்களை ஆதாயப்படுத்திக் கொள்ளும்படிக்கு, என்னைத்தானே எல்லாருக்கும் அடிமையாக்கினேன்.**

**1கொரி 9:20. யூதரை ஆதாயப்படுத்திக் கொள்ளும்படிக்கு யூதருக்கு யூதனைப் போலவும் நியாயப்பிரமாணத்துக்குக் கீழ்ப்பட்டவர்களை ஆதாயப்படுத்திக் கொள்ளும்படிக்கு நியாயப் பிரமாணத்துக்குக் கீழ்ப்பட்டவனைப் போலவுமானேன்.**

**1கொரி 9:21. நியாயப் பிரமாணமில்லாதவர்களை ஆதாயப் படுத்திக் கொள்ளும்படிக்கு அவர்களுக்கு நியாயப்பிரமாணம் இல்லாதவனைப் போலவுமானேன். அப்படியிருந்தும், நான் தேவனுக்கு முன்பாக நியாயப்பிரமாணமில்லாதவனாயிராமல், கிறிஸ்துவின் பிரமாணத்துக் குள்ளானவனாயிருக்கிறேன்.**

**1கொரி 9:22. பலவீனரை ஆதாயப்படுத்திக் கொள்ளும்படிக்குப் பலவீனருக்குப் பலவீனனைப் போலானேன்; எப்படியாகிலும் சிலரை இரட்சிக்கும்படிக்கு நான் எல்லாருக்கும் எல்லாமானேன்.**

**1கொரி 9:23. சுவிசேஷத்தில் நான் உடன் பங்காளியாகும்படிக்கு, அதினிமித்தம் இப்படிச் செய்கிறேன்.**

பவுல் தன்னுடைய சுயாதீனத்தை உறுதிப்படுத்துகிறார். அவர் ஒருவருக்கும் அடிமைப்படாதவர். ரோமப்பேரரசின் பிரஜையாக விடுதலையோடு பிறந்திருக்கிறார். அவர் ஒருவருக்கும் அடிமைப்படாதவராகயிருந்தும், அவர் தன்னைத்தானே எல்லோருக்கும் அடிமையாக்குகிறார். அதிக ஜனங்களை ஆதாயப்படுத்திக்கொள்ளுவதே பவுலின் பிரதான வாஞ்சை.

எல்லா ஜனங்களுக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பது தன்மேல் விழுந்த கடமையென்று பவுல் தீர்மானித்திருக்கிறார். இதற்காக அவர் எல்லாருக்கும் எல்லாமாகயிருக்கிறார். யூதருக்கும், நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டவர்களுக்கும் அவர் யூதனைப்போலானார். அவர்களை கிறிஸ்துவுக்கு ஆதாயப்படுத்திக் கொள்ளும்படியாகவே பவுல் அவர்களைப்பேலானார்.

நியாயப்பிரமாணமில்லாத புறஜாதியாரை கிறிஸ்துவுக்கு ஆதாயப்படுத்திக்கொள்ளும் படிக்கு, அவர்களுக்கு நியாயப் பிரமாணமில்லாதவனைப் போலவும் ஆனார். புறஜாதியார் தங்கள் அறியாமையினால் பல காரியங்களை அறியாதிருக்கிறார்கள். அவர்களையும் கிறிஸ்துவுக்காக ஆதாயப்படுத்தவேண்டும். அதற்காக பவுல் அவர்களில் ஒருவரைப்போல இருந்து, அவர்கள் மத்தியில் ஊழியம் செய்கிறார். புறஜாதியார் மத்தியில் ஊழியம் செய்யும்போது, தன்னை நியாயப் பிரமாணத்திற்கு அடிமைப்படாதவராக காண்பித்துக்கொள்கிறார்.

நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டவர்கள், மோசேயின் நியாயப்பிரமாணத்தைப் பற்றி பெருமைப்படுகிறார்கள். யூதர்கள் தாங்கள் யூதர்களாக பிறந்ததினிமித்தமாக பெருமைப்படுகிறார்கள். பவுல் புறஜாதியார் மத்தியில் ஊழியம் செய்யும்போது யூதருக்குரிய எந்தப் பெருமையுமில்லாமல், அவர்கள் மத்தியில் தன்னையும் ஒரு புறஜாதியாரைப்போல பாவித்து ஊழியம் செய்கிறார்.

பலவீனரை ஆதாயப்படுத்திக் கொள்ளும்படிக்கு, பலவீனருக்கு பலவீனனைப்போல ஆனார். அவர்களுடைய பலவீனங்களினிமித்தம் பவுல் அவர்களை நியாயந்தீர்க்கவில்லை. அவர்களை வெறுத்து ஒதுக்கிவிடவில்லை. அவர்களைப்பற்றி விவாதம்பண்ணவில்லை. அதற்குப் பதிலாக பவுல் அவர்களில் ஒருவராக, பலவீனனைப்போல ஆனார். எப்படியாகிலும் சிலரை இரட்சிக்கும்படிக்கு, பவுல் எல்லாருக்கும் எல்லாமானார். ஆத்துமாக்கள் இரட்சிக்கப்பட வேண்டுமென்பதே பவுலின் பிரதான நோக்கம். அதற்காகப் பவுல் தன்னைத்தானே வெறுக்கிறார்.

எல்லோரையும் ஆதாயப்படுத்திக்கொள்ளும்படிக்கு, பவுல் தன்னுடைய உரிமைகளையெல்லாம் விட்டுக்கொடுக்கிறார். ஆனால் தேவனுடைய உரிமைகளை அவர் ஒருபோதும் விட்டுக்கொடுக்கவில்லை. தேவனுடைய மகத்துவத்தை, மகிமையை, மேன்மையை, மாட்சிமையை பவுல் சிறிதும் விட்டுக்கொடுக்கவில்லை. மற்றவர்களின் நன்மைக்காக பவுல் தன்னுடைய உரிமைகளை விட்டுக்கொடுக்கிறார். அதே வேளையில் அவர் தேவனிடத்தில் பக்திவைராக்கியமாகவே இருக்கிறார்.

பவுல் எல்லாருக்கும் எல்லாமானார். இதற்கான காரணத்தையும் பவுல் இங்கு தெளிவுபடுத்துகிறார். சுவிசேஷத்தில் தான் உடன்பங்காளியாகும்படிக்கே பவுல் இப்படிச் செய்கிறார். தேவனுக்காக பக்தி வைராக்கியமாகயிருக்கிறார். மனுஷருடைய ஆத்தும இரட்சிப்பில் பவுலின் முழுமூச்சாகயிருக்கிறது. அவர்களுடைய இரட்சிப்பையே மனதில் வைத்திருக்கிறார். மனுஷருடைய இரட்சிப்பே பவுலுக்கு பிரதானமாயிருக்கிறது. ஆகையினால் அவர்கள் மத்தியில் தன்னுடைய உரிமைகளையும், அதிகாரத்தையும், சிலாக்கியங்களையும் செலுத்தாமல், தானும் அவர்களைப்போலாகி, அவர்கள் மத்தியில் ஊழியம் செய்கிறார்.

## அழிவில்லாத கிரீடம்
## 1கொரி 9 : 24-27

**1கொரி 9:24. பந்தயச் சாலையில் ஓடுகிறவர்களெல்லாரும் ஓடுவார்கள்; ஆகிலும், ஒருவனே பந்தயத்தைப் பெறுவானென்று அறியீர்களா? நீங்கள் பெற்றுக்கொள்ளத்தக்கதாக ஓடுங்கள்.**

**1கொரி 9:25. பந்தயத்திற்குப் போராடுகிற யாவரும் எல்லாவற்றிலேயும் இச்சையடக்கமாயிருப்பார்கள். அவர்கள் அழிவுள்ள கிரீடத்தைப் பெறும்படிக்கு அப்படிச் செய்கிறார்கள். நாமோ அழிவில்லாத கிரீடத்தைப் பெறும்படிக்கு அப்படிச் செய்கிறோம்.**

**1கொரி 9:26. ஆதலால் நான் நிச்சயமில்லாதவனாக ஓடேன்; ஆகாயத்தை அடிக்கிறவனாகச் சிலம்பம்பண்ணேன்.**

**1கொரி 9:27. மற்றவர்களுக்குப் பிரசங்கம் பண்ணுகிற நான்தானே ஆகாதவனாய்ப் போகாதபடிக்கு, என் சரீரத்தை ஒடுக்கிக் கீழ்ப்படுத்துகிறேன்.**

கர்த்தருடைய பிள்ளைகளுக்கு அழிவில்லாத கிரீடம் காத்துக் கொண்டிருக்கிறது. பவுல் இந்த வசனப்பகுதியில் அழிவில்லாத கிரீடத்தைப் பற்றி விவரிக்கிறார். பந்தயச் சாலையில் ஓடுகிறவர்கள் எல்லாரும் ஓடுவார்கள். ஆகிலும் ஒருவனே பந்தயத்தைப் பெறுவான்.

நம்முடைய ஆவிக்குரிய ஜீவியமும் பந்தயச் சாலையில் ஓடுகிற ஓட்டத்தைப் போலவே இருக்கிறது. ஓட்டத்தின் முடிவில் ஒருவனே பந்தயத்தைப் பெறுவான். ஆகையால் நாம் அந்தப் பந்தயத்தை பெற்றுக்கொள்ளத்தக்கதாக ஓடவேண்டும். பந்தயத்தில் நாம் நன்றாக ஓடினால் தோற்றுப்போகமாட்டோம். நம்முடைய ஆவிக்குரிய ஓட்டம் ஒரு மகிமையான பந்தயச்சாலையில் ஓடுகிற ஓட்டத்தைப்போல இருக்கிறது. பரலோகத்துக்குள் யார் முதலாவதாக பிரவேசிக்கப் போகிறார்கள் என்பதை எதிர்பார்த்து, நாம் எல்லோரும் ஓடவேண்டும்.

பந்தயத்திற்குப் போராடுகிறவர்கள் எப்படி இருக்க வேண்டுமென்று பவுல் இங்கு விவரிக்கிறார். அவர்கள் எல்லாற்றிலேயும் இச்சையடக்கமாய் இருக்கவேண்டும். போஜனவிஷயத்தில் மிகவும் கட்டுப்பாடோடு புசிக்கவேண்டும். பந்தயத்தில் போராடுகிறவார்கள் கடினமான உடற்பயிற்சிகளை மேற்கொள்ளவேண்டும். தங்கள் சரீரங்களை ஆரோக்கியமாக வைத்திருக்கவேண்டும். மிகுந்த கட்டுப்பாடோடு ஜீவிக்க வேண்டும். பெருந்தீனி உண்ணாமல் கட்டுப்பாடோடு போஜனம்பண்ணவேண்டும்.

அவர்கள் கட்டுப்பாடோடு இருந்தால் மாத்திரம் போதாது. தங்கள் உடலை வருத்தி அநேக பயிற்சிகளை மேற்கொள்ளவேண்டும். பந்தயச்சாலையில் போராடுகிறவர்கள் அதற்குரிய போர் பயிற்சிகளை மேற்கொள்ளவேண்டும். ஆகாயத்தில் சிலம்பம் அடித்து பழகவேண்டும்.

நம்முடைய ஆவிக்குரிய யுத்தத்தில் நாம் எந்த மனுஷரோடும் யுத்தம் பண்ணப்போவதில்லை. ஆகையால் நமக்கு சிலம்பம் பண்ணுகிற பயிற்சி தேவையில்லை. எந்த மனுஷரும் நமக்கு சத்துரு அல்ல. நாம் நம்மை நேசிப்பதுபோல எல்லோரையும் நேசிக்கவேண்டும். நம்முடைய சத்துருக்களையும் சிநேகிக்கவேண்டும்.

அப்போஸ்தலர் பவுல், நம்முடைய சரீரத்தையே நமக்கு சத்துரு என்று குறிப்பிடுகிறார். நம்முடைய சரீரத்தை நாம் ஆளுகை செய்யவேண்டும். நாம் எல்லாவற்றிலேயும் இச்சையடக்கமாய் இருக்கவேண்டும். நம்முடைய சரீரத்திற்கு கடினமான பயிற்சிகளை கொடுத்து அதை நமக்குக் கீழ்ப்படுத்தவேண்டும்.

பந்தயத்தில் போராடி வெற்றிபெறுகிறவர்களுக்கு கிரீடங்கள் சூட்டப்படும். இந்தக் கிரீடத்தை ஒலிவமரத்து இலைகளினால் செய்திருப்பார்கள். இது அழிவுள்ள கிரீடம். பந்தயத்திற்கு போராடுகிறவர்கள் அழிவுள்ள கிரீடத்தை பெறும்படிக்கு எல்லாவற்றிலேயும் இச்சையடக்கமாய் இருக்கிறார்கள். கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் அழிவில்லாத கிரீடத்தை பெறும்படிக்கு அப்படிச் செய்கிறோம்.

பந்தயத்திற்கு போராடுகிறவர்களை திரளான ஜனங்கள் வேடிக்கைபார்ப்பார்கள். எல்லோரும் பார்த்து தங்களை பாராட்டி புகழவேண்டும் என்பதற்காக போராடுகிறவர்கள் தங்களுடைய சரீரங்களை கட்டுக்கோப்பாக வைத்திருப்பார்கள். மனுஷருடைய புகழ்ச்சியும், அழிந்துபோகிற கிரீடமுமே இவர்களுடைய இலக்கு.

உலகப்பிரகாரமான ஜனங்கள், அழிந்துபோகிற கிரீடத்திற்காக எல்லாவற்றிலேயும் இச்சையடக்கமாய் இருக்கும்போது, அழிவில்லாத கிரீடத்தை பெறும்படிக்கு பிரயாசப்படுகிற நாம், அவர்களைவிட அதிகமாய் எல்லாவற்றிலேயும் மிகுந்த இச்சையடக்கமாய் இருக்கவேண்டும். நம்முடைய மாம்சத்தில் இச்சைகளுக்கு இடம் கொடுக்ககூடாது.

பந்தயச்சாலையில் ஓடுகிறவர்கள் எல்லாரும் ஓடுவார்கள். ஆகிலும் ஒருவனே பந்தயத்தைப் பெறுவான். ஓடுகிற எல்லோருக்கும் பந்தயத்தைப் பெறுகிற நிச்சயம் இருக்காது. அவர்கள் நிச்சயம் இல்லாதவர்களாகவே ஓடுகிறார்கள். ஒருவன் மாத்திரம் பந்தயத்தைப் பெறுவான். மற்றவர்களுக்கு ஒன்றும் கிடைக்காது. ஒருவன் மாத்திரமே கிரீடத்தைப் பெறுவான். மற்றவர்களுக்கு கிரீடம் கிடைக்காது.

ஆனால் நம்முடைய ஆவிக்குரிய ஓட்டம் நிச்சயம் அல்லாத ஓட்டம் அல்ல. நாம் எல்லோருமே பெற்றுக்கொள்ளத்தக்கதாக ஓடவேண்டும். நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தை ஓடிமுடிக்கிற எல்லா விசுவாசிகளும் பந்தயத்தைப் பெறுவார்கள். எல்லோருமே கிரீடத்தைப் பெறுவார்கள். நாம் பெறுகிற கிரீடம் அழிவில்லாதது. நம்முடைய ஓட்டத்தை நிச்சயம் இல்லாதவர்களாக ஓடக்கூடாது. கர்த்தர் நமக்கு நியமித்திருக்கிற பாதையில், விசுவாசத்தோடு, பெற்றுக்கொள்வோம் என்னும் நிச்சயத்தோடு ஓடவேண்டும்.

கிரேக்கர்கள் பந்தயச்சாலையில் ஓடும்போது, கடைசிவரையிலும் ஓடுவார்கள். பந்தயத்தை பெறமுடியாமல் போனாலும், தங்கள் ஓட்டத்தை ஓடிமுடிப்பார்கள். கடைசியாக ஓடுகிறவனும் தனக்கு நியமிக்கப்பட்ட இலக்கை ஓடிமுடிப்பான். இவனுக்கு பந்தயத்தைப் பெறும் நிச்சயம் இல்லை. கிரீடம் கிடைக்கும் என்னும் நிச்சயமும் இல்லை. ஆனாலும் இவன் தன் ஓட்டத்தை ஓடிமுடிப்பான். இவனுக்கு முடிவில் ஒன்றும் கிடைக்காது.

கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாமோ, நம்முடைய ஆவிக்குரிய ஓட்டத்தை நிச்சயத்தோடு ஓடவேண்டும். கிரீடத்தை பெற்றுக்கொள்ளும்படிக்கு ஓடவேண்டும். ஆவிக்குரிய ஓட்டத்தை ஓடிமுடிக்கிற எல்லோருக்குமே பந்தயமும், கிரீடமும் கொடுக்கப்படும். ஆகையினால் நாம் பெற்றுக்கொள்ளத்தக்கதாக, நிச்சயத்தோடு ஓடவேண்டும். எல்லாவற்றிலேயும் இச்சையடக்கத்தோடு இருந்து, பரிசுத்தத்தோடும் விசுவாசத்தோடும் ஓடவேண்டும். மாம்சத்தின் இச்சைகளுக்கு இடம்கொடுக்காமல் நம்முடைய சரீரத்தை பரிசுத்தமாய் காத்துக்கொள்ளவேண்டும்.

நிற்கிறேன் என்று எண்ணுகிறவர்கள்கூட விழுந்துவிடுவதற்கு வாய்ப்புள்ளது. மற்றவர்களுக்கு பிரசங்கம் பண்ணுகிறவார்கள் கூட ஆகாதவர்களாய் போவதற்கு வாய்ப்புள்ளது. ஆகையினால் கர்த்தருடைய பிள்ளைகள் எல்லோரும் தங்களுடைய ஆவிக்குரிய ஓட்டத்தை மிகுந்த கவனத்தோடும், எச்சரிப்போடும் ஓடவேண்டும். பவுல் இதைப் பற்றி சொல்லும்போது, தன்னுடைய சரீரத்தை ஒடுக்கி கீழ்ப்படுத்துவதாக சொல்லுகிறார்.

கர்த்தருடைய ஊழியக்காரர்களாகிய நாம் மற்றவர்களுக்கு இரட்சிப்பின் சுவிசேஷத்தை அறிவிக்கிறோம். அவர்களுக்கு பரலோகத்திற்குப் போவதற்கு பாதையை காண்பிக்கிறோம். நம்முடைய ஊழியத்தின் மூலமாக இரட்சிக்கப்பட்டவர்கள் பரலோகத்துக்குப் போகும்போது, நாம் பரலோகத்துக்குப் போகவில்லை என்றால், நம்முடைய நிலமை மிகவும் பரிதாபமாக இருக்கும்.

ஆகையினால் கர்த்தருடைய ஊழியத்தை செய்கிற ஒவ்வொரு ஊழியக்காரரும் பரிசுத்தமாயும், பயபக்தியாயும், கர்த்தருக்கு பயந்தும் ஜீவிக்கவேண்டும். நம்முடைய சரீரத்தின் இச்சைகளுக்கு நாம் இடம் கொடுக்காதவாறு, நம்முடைய சரீரத்தை ஒடுக்கி கீழ்ப்படுத்தவேண்டும். மற்றவர்களுக்கு பிரசங்கம் பண்ணுகிற நாம் ஆகாதவர்களாய் போய்விடாதவாறு மிகவும் எச்சரிக்கையாய் ஜீவிக்கவேண்டும். மற்றவர்களும் பரலோகம் போகவேண்டும். நாமும் பரலோகம் போகவேண்டும். மற்றவர்களை பரலோகத்திற்குப் போக வழிநடத்தவேண்டும். நாமும் கர்த்தர் நியமித்திருக்கிற பாதையில் பரலோகம் செல்லவேண்டும்.

# 10 அதிகாரம்

அப்போஸ்தலர் பவுல் யூதர்களை எடுத்துக்காட்டாகச் சொல்லி, கொரிந்து சபையிலுள்ள விசுவாசிகளை எச்சரிக்கிறார் (1கொரி 10:1-14). விக்கிரகங்களுக்கு படைக்கப்பட்டதை புசிப்பதுபற்றி பவுல் ஆலோசனை சொல்லுகிறார் (1கொரி 10:15-22). நம்முடைய மனச்சாட்சியினிமித்தம் நாம் ஒன்றையும் விசாரிக்கவேண்டியதில்லை யென்றும், கடையிலே விற்கப்படுகிற எதையும் வாங்கிப் புசிக்கலாம் என்றும் பவுல் ஆலோசனை சொல்லுகிறார் (1கொரி 10:23-33).

## நம்முடைய பிதாக்கள்
## 1கொரி 10 : 1-5

**1கொரி 10:1. இப்படியிருக்க, சகோதரரே, நீங்கள் எவைகளை அறிய வேண்டுமென்றிருக்கிறேனென்றால்; நம்முடைய பிதாக்களெல்லாரும் மேகத்துக்குக் கீழாயிருந்தார்கள், எல்லாரும் சமுத்திரத்தின் வழியாய் நடந்துவந்தார்கள்.**

**1கொரி 10:2. எல்லாரும் மோசேக்குள்ளாக மேகத்தினாலும் சமுத்திரத்தினாலும் ஞானஸ்நானம் பண்ணப்பட்டார்கள்.**

**1கொரி 10:3. எல்லாரும் ஒரே ஞானபோஜனத்தைப் புசித்தார்கள்.**

**1கொரி 10:4. எல்லாரும் ஒரே ஞானபானத்தைக் குடித்தார்கள். எப்படியெனில், அவர்களோடே கூடச் சென்ற ஞானக்கன்மலையின் தண்ணீரைக் குடித்தார்கள்; அந்தக் கன்மலை கிறிஸ்துவே.**

**1கொரி 10:5. அப்படியிருந்தும், அவர்களில் அதிகமானபேர்களிடத்தில் தேவன் பிரியமாயிருந்ததில்லை; ஆதலால் வனாந்தரத்திலே அவர்கள் அழிக்கப்பட்டார்கள்.**

கொரிந்து சபையிலுள்ள விசுவாசிகளில் சிலர் ஆவிக்குரிய காரியங்களில் முன்னேற்றமில்லாமல் சோர்வடைந்திருக்கிறார்கள். தாங்கள் நிற்பதாகவும், விழுவதற்கு வாய்ப்பில்லை யென்றும் இறுமாப்பாயிருக்கிறார்கள். பவுல் அவர்களை எச்சரிப்பதற்கு, யூதர்களை எடுத்துக்காட்டாகச் சொல்லுகிறார். யூதர்கள் தேவனுடைய சமுகத்தில் அநேக சிலாக்கியங்களை அனுபவித்தார்கள். ஆனாலும் அவர்களில் அநேகர் தேவனுடைய கோபாக்கினையினால் தண்டிக்கப்பட்டார்கள்.

தேவனுடைய தெய்வீக பராமரிப்பு யூதருக்கு அதிகமாய்க் கிடைத்தது. ஆனாலும் முடிவில் அவர்களில் அநேகர் வனாந்தரத்திலே அழிக்கப்பட்டார்கள். அவர்களுக்கு ஏற்பட்ட அனுபவம் நமக்கு எச்சரிப்பாக இங்கு சொல்லப்பட்டிருக்கிறது. யூதர்களுடைய சிலாக்கியங்கள் சிலவற்றை பவுல் இந்த அதிகாரத்தில் விவரித்துச் சொல்லுகிறார்.

யூதர்கள் எகிப்து தேசத்தில் அடிமைகளாகயிருந்தார்கள். தேவன் அவர்களுடைய கூக்குரலைக்கேட்டு, அவர்கள்மீது மனதிரங்கி, தம்முடைய கிருபையினாலும் இரக்கத்தினாலும், அவர்களை எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுவித்தார். தேவன் அவர்களை செங்கடல் வழியாக அற்புதமாக வழிநடத்தினார். எகிப்தியர்கள் அவர்களைப் பிடிக்க பின்தொடர்ந்து வந்தார்கள். ஆனால் அவர்களோ செங்கடலின் ஆழத்திலே மூழ்கி மாண்டுபோனார்கள். தேவனுடைய ஜனமாகிய யூதருக்கு செங்கடல் தப்பிப்பதற்கு ஒரு பாதையாக மாறிற்று. ஆனால் எகிப்தியருக்கோ அது அடக்கம்பண்ணுகிற கல்லறையாயிற்று.

யூதர்களை எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுவிப்பதற்கு தேவன் அநேக அற்புதங்களைச் செய்தார். அவர்கள் தேவனுக்கு மிகவும் பிரியமானவர்களாக இருந்தார்கள். சபையில் நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற நியமங்கள் அவர்களுக்கும் கொடுக்கப்பட்டது. யூதர்களெல்லோரும் மோசேக்குள்ளாக, மேகத்தினாலும் சமுத்திரத்தினாலும் ஞானஸ்நானம் பண்ணப்பட்டார்கள். அவர்களெல்லாரும் ஒரே ஞானபோஜனத்தைப் புசித்தார்கள். இது யூதர்களுக்கு கிடைத்த மிகப்பெரிய சிலாக்கியம்.

தேவனுடைய சிலாக்கியத்தை அதிகமாய்ப் பெற்று அனுபவித்த யூதர்களெல்லோரும் இரட்சிக்கப் பட்டிருப்பார்கள் என்றுதான் அக்காலத்து ஜனங்கள் நினைத்தார்கள். யூதர்களும் அப்படியே நினைத்து இறுமாப்பாயிருந்தார்கள். ஆனால் காரியம் வேறுவிதமாக வித்தது. அவர்களை விடுவிக்க தேவன் அநேக அற்புதங்களைச் செய்தபோதிலும், அவர்களில் அதிகமான பேர்களிடத்தில் தேவன் பிரியமாயிருந்ததில்லை. ஆதலால் வனாந்தரத்திலே அவர்கள் அழிக்கப்பட்டார்கள்.

கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் இந்தப் பிரபஞ்சத்தில் ஆவிக்குரிய சிலாக்கியங்களை அதிகமாகப் பெற்றிருக்கலாம். அவற்றை அதிகமாக அனுபவிக்கலாம். இதனால் நமக்கு நித்திய ஜீவன் உறுதியாகக் கிடைக்கும் என்னும் நிச்சயமில்லை. ஆவிக்குரிய ஆசீர்வாதங்களைப் பெற்றவர்கள், எச்சரிப்போடு ஜீவிக்கவில்லையென்றால், நித்திய ஜீவனைப்பெற்றுக்கொள்ளாமல் போய்விடுவதற்கு வாய்ப்புள்ளது. ஆகையினால் தேவன் தம்முடைய கிருபையினால் நமக்குக் காண்பிக்கும் சிலாக்கியத்திற்காக, நாம் பெருமைப்படக்கூடாது.

**திருஷ்டாந்தங்கள்**
**1கொரி 10 : 6-14**

**1கொரி 10:6. அவர்கள் இச்சித்தது போல நாமும் பொல்லாங்கானவைகளை இச்சியாதபடிக்கு, இவைகள் நமக்குத் திருஷ்டாந்தங்களாயிருக்கிறது.**

**1கொரி 10:7. ஜனங்கள் புசிக்கவும் குடிக்கவும் உட்கார்ந்து விளையாட எழுந்திருந்தார்கள் என்று எழுதியிருக்கிறபடி, அவர்களில் சிலர் விக்கிரகாராதனைக்காரர் ஆனது போல நீங்களும் ஆகாதிருங்கள்.**

**1கொரி 10:8. அவர்களில் சிலர் வேசித்தனம் பண்ணி, ஒரே நாளில் இருபத்துமூவாயிரம் பேர் விழுந்துபோனார்கள்; அதுபோல நாமும் வேசித்தனம் பண்ணாதிருப்போமாக.**

**1கொரி 10:9. அவர்களில் சிலர் கிறிஸ்துவைப் பரீட்சை பார்த்து, பாம்புகளால் அழிக்கப்பட்டார்கள்; அதுபோல நாமும் கிறிஸ்துவைப் பரீட்சைபாராதிருப்போமாக.**

**1கொரி 10:10. அவர்களில் சிலர் முறுமுறுத்து, சங்காரக்காரனாலே அழிக்கப்பட்டார்கள்; அதுபோலவே நீங்களும் முறுமுறுக்காதிருங்கள்.**

**1கொரி 10:11. இவைகளெல்லாம் திருஷ்டாந்தங்களாக அவர்களுக்குச் சம்பவித்து; உலகத்தின் முடிவுகாலத்திலுள்ள நமக்கு எச்சரிப்புண்டாக்கும்படி எழுதப்பட்டும் இருக்கிறது.**

**1கொரி 10:12. இப்படியிருக்க, தன்னை நிற்கிறவனென்று எண்ணுகிறவன் விழாதபடிக்கு எச்சரிக்கையாயிருக்கக் கடவன்.**

**1கொரி 10:13. மனுஷருக்கு நேரிடுகிற சோதனையேயல்லாமல் வேறே சோதனை உங்களுக்கு நேரிடவில்லை. தேவன் உண்மையுள்ளவராயிருக்கிறார்; உங்கள் திராணிக்கு மேலாக நீங்கள் சோதிக்கப்படுகிறதற்கு அவர் இடங்கொடாமல், சோதனையைத் தாங்கத்தக்கதாக, சோதனையோடு கூட அதற்குத் தப்பிக்கொள்ளும் படியான போக்கையும் உண்டாக்குவார்.**

**1கொரி 10:14. ஆகையால் எனக்குப் பிரியமானவர்களே, விக்கிரகாராதனைக்கு விலகி ஓடுங்கள்.**

இஸ்ரவேல் ஜனங்கள் தேவனுக்கு விரோதமாக அநேக பாவங்களைச் செய்தார்கள். நமக்கு எச்சரிப்புண்டாகும்படி பவுல் அவர்களுடைய பாவங்களை இங்கு ஒவ்வொன்றாகக் குறிப்பிடுகிறார். கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் பொல்லாங்கானவைகளை இச்சிக்கக் கூடாது. இஸ்ரவேல் ஜனங்கள் வனாந்தரத்தில் பிரயாணம் செய்தபோது தேவன் அவர்களுக்கு மன்னாவைப் புசிக்கக்கொடுத்தார். ஆனால் அவர்களோ இறைச்சியை இச்சித்தார்கள்.

"பின்பு அவர்களுக்குள் இருந்த பல ஜாதியான அந்நிய ஜனங்கள் மிகுந்த இச்சையுள்ளவர்களானார்கள்; இஸ்ரவேல் புத்திரரும் திரும்ப அழுது, நமக்கு இறைச்சியைப் புசிக்கக்கொடுப்பவர் யார்? நாம் எகிப்திலே கிரயமில்லாமல் சாப்பிட்ட மச்சங்களையும், வெள்ளரிக்காய்களையும், கொம்மட்டிக்காய்களையும், கீரைகளையும், வெண்காயங்களையும், வெள்ளைப் பூண்டுகளையும் நினைக்கிறோம். இப்பொழுது நம்முடைய உள்ளம் வாடிப்போகிறது; இந்த மன்னாவைத் தவிர, நம்முடைய கண்களுக்கு முன்பாக வேறொன்றும் இல்லையே என்று சொன்னார்கள்" (எண் 11:4-6).

நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தில் மாம்சத்தின் இச்சைகளுக்கு இடங்கொடுக்கக் கூடாது. பொல்லாங்கானவைகளை நாம் இச்சிக்கக்கூடாது. நம்முடைய மாம்ச சரீரத்தை நாம் ஆளுகை செய்யவேண்டும். மாம்சம் நம்மை ஆளுகை செய்யக்கூடாது. நாம் மாம்சத்திற்கு அடிமையாகயிருக்கும்போது, மாம்சத்தின் இச்சை நம்மை எங்கு அழைத்துச் செல்லும் என்பது நமக்கே தெரியாது. நம்முடைய மாம்ச சரீரம் நம்முடைய கட்டுப்பாட்டிற்குள் இராது.

பவுல் விக்கிரகாராதனையைக் குறித்து எச்சரித்து எழுதுகிறார். கொரிந்தியர் மத்தியிலே விக்கிரகாராதனை அதிகமாய்க் காணப்பட்டது. புறஜாதி தெய்வங்களுக்கு பலியாகச் செலுத்தப்பட்டதை கொரிந்து சபையிலுள்ள விசுவாசிகள் புசித்தார்கள். அவர்களுடைய விக்கிரகக் கோவில்களிலே விசுவாசிகளும் பந்தியில் அமர்ந்தார்கள். இஸ்ரவேல் ஜனங்கள் வனாந்தரத்தில் பிரயாணம் பண்ணியபோது புசிக்கவும், குடிக்கவும், உட்கார்ந்து விளையாட எழுந்திருந்தார்கள். அவர்களில் சிலர் விக்கிரகாராதனைக்காரரானார்கள். அவர்களைப்போல கொரிந்து சபையிலுள்ள விசுவாசிகள் விக்கிரகாராதனைக்காரராக ஆகக்கூடாது என்று பவுல் எச்சரிக்கிறார்.

வேசித்தனத்திற்கு விரோதமாகவும் பவுல் எச்சரித்துச் சொல்லுகிறார். கொரிந்தியரில் அநேகர் வேசித்தனப்பாவத்தைச் செய்கிறார்கள். அவர்களில் அநேகர் வேசித்தனத்திற்கு அடிமையாகயிருக்கிறார்கள். கொரிந்து பட்டணத்தில் வேசித்தனப்பாவம் மிகவும் அதிகமாய்க் காணப்பட்டது. அந்தப் பட்டணம் முழுவதுமே பாவத்தினால் நிறைந்திருக்கிறது. இப்படிப்பட்ட பட்டணத்தில் ஜீவிக்கிற கொரிந்து சபையாரிடம், பவுல் வேசித்தனத்தைக்குறித்து எச்சரித்துச் சொல்லுகிறார். இஸ்ரவேல் ஜனங்களில் சிலர் வேசித்தனம்பண்ணி, ஒரே நாளில் இருபத்து மூவாயிரம்பேர் விழுந்து போனார்கள். அதுபோல நாமும் வேசித்தனம் பண்ணாதிருப்போமாக என்று பவுல் எச்சரித்துச்சொல்லுகிறார்.

இஸ்ரவேல் ஜனங்களில் சிலர் கிறிஸ்துவைப் பரீட்சை பார்த்தார்கள். கர்த்தருக்கு எரிச்சலை மூட்டினார்கள் (1கொரி 10:22). கிறிஸ்துவைப் பரீட்சை பார்த்த யூதர்கள் பாம்புகளால் அழிக்கப்பட்டார்கள்.

"ஜனங்கள் தேவனுக்கும் மோசேக்கும் விரோதமாகப் பேசி: நாங்கள் வனாந்தரத்திலே சாகும்படி நீங்கள் எங்களை எகிப்து தேசத்திலிருந்து வரப்பண்ணினதென்ன? இங்கே அப்பமும் இல்லை, தண்ணீரும் இல்லை; இந்த அற்பமான உணவு எங்கள் மனதுக்கு வெறுப்பாயிருக்கிறது என்றார்கள். அப்பொழுது கர்த்தர் கொள்ளிவாய்ச் சர்ப்பங்களை ஜனங்களுக்குள்ளே அனுப்பினார்; அவைகள் ஜனங்களைக் கடித்ததினால் இஸ்ரவேலருக்குள்ளே அநேக ஜனங்கள் செத்தார்கள்" (எண் 21:5,6).

புதிய ஏற்பாட்டுக்காலத்தில் ஜீவிக்கிற நாம் கிறிஸ்துவைப் பரீட்சை பார்த்து அழிந்துபோய்விடக்கூடாது. நாம் தேவனை பரீட்சை பார்க்கும்போது, அவர் நம்மை பழைய பாம்பாகிய சாத்தானிடத்தில் ஒப்புக்கொடுத்துவிடுவார்.

இஸ்ரவேல் ஜனங்களில் சிலர் முறுமுறுத்தார்கள். அவர்களைப்போலவே கொரிந்தியரில் சிலரும் முறுமுறுக்கிறார்கள். வனாந்தரத்தில் பிரயாணம் செய்த இஸ்ரவேலரைப்போல கொரிந்து சபையார் முறுமுறுக்கக்கூடாது என்று பவுல் எச்சரிக்கிறார் (1கொரி 10:10). இஸ்ரவேலர் வனாந்தரத்தில் கானான் தேசத்தை நோக்கிப் பிரயாணம் செய்தார்கள். வழியில் அவர்களுக்குச் சோர்வு உண்டாயிற்று. தங்களுக்கு சோர்வு உண்டாகும் போதெல்லாம் மோசேக்கு விரோதமாக முறுமுறுத்தார்கள். தங்களை வழிநடத்திய தலைவர்களுக்கு விரோதமாக முதுகைக் காண்பித்தார்கள். தேவனுக்கு விரோதமாகவும் முறுமுறுத்தார்கள்.

பழைய ஏற்பாட்டுக்காலத்தில் நடந்ததுபோலவே இப்போது கொரிந்துசபையிலும் நடைபெறுகிறது. கொரியந்தியரில் சிலர் பவுலுக்கு விரோதமாக முறுமுறுக்கிறார்கள். இதன் மூலமாய் பவுலினிடத்தில் வாசமாயிருக்கிற கிறிஸ்துவின் ஆவியானவருக்கு விரோதமாகவும் முறுமுறுக்கிறார்கள். கிறிஸ்தவ ஊழியக்காரர்களுக்கு விரோதமாக முறுமுறுக்கிறவர்கள், கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்கு விரோதமாகவும் முறுமுறுக்கிறார்கள்.

பழைய ஏற்பாட்டில் நடைபெற்ற சம்பவங்களெல்லாம் அவர்களுக்கு திருஷ்டாந்தங்களாக சம்பவித்தது. உலகத்தின் முடிவு காலத்திலுள்ள நமக்கு இது எச்சரிப்பு உண்டாகும்படி எழுதப்பட்டிருக்கிறது. இஸ்ரவேலர்கள் தேவனுக்கு விரோதமாகப் பாவம் செய்தார்கள். தேவனுடைய கரத்திலிருந்து தண்டனையைப் பெற்றுக்கொண்டார்கள். சுவிசேஷத்தின் காலத்தில் ஜீவிக்கிற நாம் கிறிஸ்துவுக்கு விரோதமாகப் பாவம் செய்தால், கிறிஸ்துவானவர் நம்மை ஆக்கினைக்குள்ளாகத்தீர்ப்பார்.

வேதத்தில் எழுதப்பட்டிருக்கிற எல்லா சத்தியமும் நம்முடைய பிரயோஜனத்திற்காகவே எழுதப் பட்டிருக்கிறது. ஒரு வார்த்தையும் வீணாய் எழுதப்படவில்லை. வேதவாக்கியத்திலிருந்து நாம் தெய்வீக ஞானத்தையும் ஆவிக்குரிய எச்சரிப்புக்களையும் பெற்றுக்கொள்ள வேண்டும்.

எகிப்து தேசத்திலிருந்து விடுவிக்கப்பட்ட இஸ்ரவேலர்கள் இருதயத்தில் இறுமாப்பாயிருந்தார்கள். கர்த்தர் தங்களை நேசிக்கிறாரென்றும், தங்களைக் கர்த்தருடைய சமுகத்திலிருந்து யாராலும் விலக்கி வைக்க முடியாது என்றும் இருதயத்தில் பெருமைப்பட்டார்கள். ஆனால் அவர்களோ தேவனுக்கு விரோதமாகப் பாவம் செய்தபோது, தேவனே அவர்களைத் தம்முடைய சமுகத்திலிருந்து விலக்கி வைத்துவிட்டார். தேவனை விட்டு விலகிப்போவதற்கு அவர்களே காரணமானார்கள். பவுல் பழைய ஏற்பாட்டு சம்பவத்தை இங்கு நினைவுபடுத்தி எழுதி, கொரிந்து சபையிலுள்ள விசுவாசிகளை எச்சரிக்கிறார். தன்னை நிற்கிறவனென்று எண்ணுகிறவன் விழாதபடிக்கு எச்சரிக்கையாயிருக்கக்கடவன் என்று சொல்லுகிறார் (1கொரி 10:12).

கர்த்தருடைய பிள்ளைகளில் அநேகர் விழுந்துபோனார்கள். ஆகையினால் நாமும் விழுந்துபோவதற்கு வாய்ப்புள்ளது. நம்முடைய ஆவிக்குரிய ஓட்டத்தில் நாம் மிகுந்த கவனத்தோடு ஓடவேண்டும். கவனமில்லாமல் தாறுமாறாக ஜீவிக்கும்போது, நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தில் நாம் விழுந்துவிடுவதற்கு வாய்ப்புள்ளது. நம்முடைய தப்பிதங்களினால் நாம் விழும்போது, நாம் விழாதபடி தேவன் நம்மை பாதுகாப்பார் என்று வேதத்தில் அவர் எங்கும் வாக்குப்பண்ணவில்லை. ஆகையினால் நிற்கிறவன் என்று எண்ணுகிறவன் விழாதபடிக்கு எச்சரிக்கையாயிருக்க வேண்டும். தேவனுடைய பாதுகாப்பை நமக்கு சாதகமாக்கி, நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தில் நாம் மிகுந்த எச்சரிப்போடு ஜீவிக்கவேண்டும்.

கொரிந்து சபையிலுள்ள விசுவாசிகளை பவுல் எச்சரித்தாலும், அவர்களுக்கு ஆறுதலான வார்த்தைகளையும் சொல்லுகிறார். நாம் விழுந்து விடுவது தேவனுக்குப் பிரியமானதல்ல. நம்முடைய அழிவில் தேவன் பிரியப்படுகிறவரல்ல. நம்முடைய சோதனையின் மூலமாக நாம் ஆவிக்குரிய ஜீவியத்தில் பலப்படுத்தப்படுகிறோம். மனுஷருக்கு நேரிடுகிற சாதாரண சோதனைகளே விசுவாசிகளாகிய நமக்கும் நேரிடுகிறது. வேறு சோதனை எதுவும் நமக்கு நேரிடுகிறதில்லை. தேவன் நம்முடைய திராணிக்கு மேலாக நம்மை சோதிக்கமாட்டார். அவர் நம்மை சோதிக்கும்போது, சோதனையைத் தாங்கத்தக்கதாக, சோதனையோடுகூட அதற்கு தப்பிக்கொள்ளும்படியான போக்கையும் உண்டாக்குவார் (1கொரி 10:13).

உலகப்பிரகாரமான ஜனங்கள் சோதிக்கப்படுகிறார்கள். ஆனால் அவர்களுக்கு தப்பிக்கொள்ளும்படியான போக்கு உண்டாக்கப்படவில்லை. அவர்கள் சோதனையில் முறிந்து விழுந்து அழிந்துபோவார்கள். அவர்களால் சோதனையைத் தாங்கிக்கொள்ள முடியாது. மனுஷர் சோதனையில் விழலாம். இந்த உலகமே சோதனையைத் தாங்கமுடியாமல் கீழே விழுந்துவிடலாம். ஆனாலும் தேவன் தம்முடைய பிள்ளைகளுக்கு உண்மையுள்ளவராகவே இருக்கிறார். நம்முடைய பெலமும் பாதுகாப்பும் தேவனிடத்திலுள்ளது. அவர் உண்மையுள்ளவர். ஞானமுள்ளவர்.

நம்மால் எவ்வளவு சோதனையைத் தாங்கமுடியும் என்பது நம்முடைய தேவனுக்குத் தெரியும். எல்லா வேளையிலும், விசேஷமாக சோதனை வேளையில், நாம் கர்த்தரையே சார்ந்திருக்கவேண்டும். அப்போது நமக்கு ஏற்பட்டிருக்கிற சோதனையிலிருந்து தப்பிக்கொள்ளும்படியான போக்கை அவர் நமக்கு உண்டாக்குவார். நமக்கு நேரிடும் சோதனை எவ்வளவு இருளான பள்ளத்தாக்காக இருந்தாலும், அங்கும் நமக்கு தேவனுடைய வெளிச்சம் கிடைக்கும். நம்மை இருளில் தடுமாறுகிறதற்கு விடமாட்டார்.

சோதனை எவ்வளவு கடினமாகயிருந்தாலும் கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் கலங்கி தவிக்க வேண்டிய அவசியம் இல்லை. ஏனெனில் எல்லா சூழ்நிலைகளிலும் கர்த்தர் நம்மை பாதுகாக்கிறவர். நம்மை கரம்பிடித்து வழிநடத்துகிறவர். நமக்கு தப்பிக்கொள்ளும்படியான போக்கை உண்டாக்குகிறவர்.

பவுல் கொரிந்தியருக்கு ஆலோசனை சொல்லும்போது, விக்கிரகாராதனைக்கு விலகி ஓடுங்கள் என்று சொல்லுகிறார். விக்கிரகாராதனை மெய்யான தேவனுக்கு விரோதமான பாவம். நமக்கு நேரிடுகிற சோதனைகளில் நாம் கர்த்தரைப் பற்றிக்கொள்ளவேண்டும். அவர் நம்மை கரம்பிடித்து வழிநடத்துவதற்கு உண்மையுள்ளவர். கர்த்தரை சந்தேகப்பட்டு விக்கிரகங்களைப் பற்றிக்கொள்ளக்கூடாது. விக்கிரகாராதனை மனுஷருக்கு நேரிடுகிற சோதனை. நம்மை பாதுகாக்க கர்த்தர் உண்மையுள்ளவர். ஆகையினால் கர்த்தருடைய பிள்ளைகளுக்கு விக்கிரகாராதனை தேவையற்றது. கொரிந்து சபையிலுள்ள சிலர் கர்த்தரைப் பின்பற்றுவதை விட்டுவிட்டு, விக்கிரகாராதனையில் ஈடுபடுகிறார்கள். அவர்களை எச்சரிக்கும் விதமாக, விக்கிரகாராதனைக்கு விலகி ஓடுங்கள் என்று பவுல் சொல்லுகிறார்.

## விக்கிரகாராதனை
## 1கொரி 10 : 15-22

**1கொரி 10:15. உங்களைப் புத்திமான்களென்று எண்ணிப் பேசுகிறேன்; நான் சொல்லுகிறதை நீங்களே நிதானித்துப்பாருங்கள்.**

**1கொரி 10:16. நாம் ஆசீர்வதிக்கிற ஆசீர்வாதத்தின் பாத்திரம் கிறிஸ்துவினுடைய இரத்தத்தின் ஐக்கியமாயிருக்கிறதல்லவா? நாம் பிட்கிற அப்பம் கிறிஸ்துவினுடைய சரீரத்தின் ஐக்கியமாயிருக்கிறதல்லவா?**

**1கொரி 10:17. அந்த ஒரே அப்பத்தில் நாமெல்லாரும் பங்கு பெறுகிறபடியால், அநேகரான நாம் ஒரே அப்பமும் ஒரே சரீரமுமாயிருக்கிறோம்.**

**1கொரி 10:18. மாம்சத்தின்படியான இஸ்ரவேலரைப்பாருங்கள்; பலிகளைப் புசிக்கிறவர்கள் பலிபீடத்தோடே ஐக்கியமாயிருக்கிறார்களல்லவா?**

**1கொரி 10:19. இப்படியிருக்க, விக்கிரகம் ஒரு பொருளென்றும், விக்கிரகத்துக்குப் படைக்கப்பட்டது ஒரு பொருளென்றும் நான் சொல்லுகிறேனோ?**

**1கொரி 10:20. அஞ்ஞானிகள் பலியிடுகிறவைகளை தேவனுக்கு அல்ல, பேய்களுக்கே பலியிடுகிறார்களென்று சொல்லுகிறேன்; நீங்கள் பேய்களோடே ஐக்கியமாயிருக்க எனக்கு மனதில்லை.**

**1கொரி 10:21. நீங்கள் கர்த்தருடைய பாத்திரத்திலும் பேய்களுடைய பாத்திரத்திலும் பானம்பண்ணக் கூடாதே; நீங்கள் கர்த்தருடைய போஜனபந்திக்கும் பேய்களுடைய போஜனபந்திக்கும் பங்குள்ளவர்களாயிருக்கக் கூடாதே.**

**1கொரி 10:22. நாம் கர்த்தருக்கு எரிச்சலை மூட்டலாமா? அவரிலும் நாம் பலவான்களா?**

பவுல் இந்த வசனப்பகுதியில் விக்கிரகாராதனைக்கு விரோதமாக கொரிந்தியரை எச்சரிக்கிறார். அவர்களுக்கு ஆலோசனை சொல்லும்போது, அவர்களை புத்திமான்களென்று எண்ணி பேசுகிறார். தான் சொல்லுகிறதை நிதானித்துப் பார்க்குமாறு அவர்களை வேண்டிக்கொள்கிறார். கர்த்தருடைய பந்தியை ஒரு எடுத்துக்காட்டாகச் சொல்லி, பவுல் தன்னுடைய விவாதத்தை ஆரம்பிக்கிறார்.

கர்த்தருடைய பந்தியில் நாம் ஆசீர்வதிக்கிற ஆசீர்வாதத்தின் பாத்திரம் கிறிஸ்துவினுடைய இரத்தத்தின் ஐக்கியமாயிருக்கிறது. நாம் பிட்கிற அப்பம் கிறிஸ்துவினுடைய சரீரத்தின் ஐக்கியமாயிருக்கிறது. கர்த்தருடைய பந்தியில் பங்குபெறுகிற நாம் கிறிஸ்துவோடு பரிசுத்த ஐக்கியத்தில் இணைக்கப்படுகிறோம். கர்த்தருடைய பந்தியில் பங்குபெறுவதற்கு கர்த்தர் நம்மை விருந்தினராக அழைத்திருக்கிறார் என்றும், நாம் அவருடைய உடன்படிக்கையின் ஜனங்களென்றும் இதன் மூலமாய் அங்கீகரிக்கிறோம். கர்த்தருடைய பந்தியில், அந்த ஒரே அப்பத்தில் நாம் எல்லாரும் பங்குபெறுகிறோம். ஆனபடியினால் அநேகரான நாம் ஒரே அப்பமும் ஒரே சரீரமுமாயிருக்கிறோம் (1கொரி 10:17).

அப்போஸ்தலர் பவுல் கர்த்தருடைய பந்தியை விவரிக்கும்போது, யூதருடைய ஆராதனையையும், அவர்களுடைய பாரம்பரிய பழக்க வழக்கங்களையும் இங்கு குறிப்பிடுகிறார். இஸ்ரவேலர்கள் தேவாலயத்தில் பலிகளைச் செலுத்தினார்கள். அந்தப் பலிகளை ஆசாரியரும், மாம்சத்தின் படியான இஸ்ரவேலரும் புசித்தார்கள். பலிகளைப் புசிக்கிறவர்கள் பலிபீடத்தோடே ஐக்கியமாயிருக்கிறார்கள். பலியாகச் செலுத்தப்பட்ட மாம்சத்தைப் புசிப்பது, கர்த்தருடைய ஆராதனையின் ஒரு பகுதியாகவே இஸ்ரவேலருக்கு இருந்தது. கர்த்தரை ஆராதிக்கும் விதமாகவே இஸ்ரவேலர் பலிகளைப் புசித்தார்கள் (1கொரி 10:18).

இஸ்ரவேலர் பலிசெலுத்தும் முறைமையை பவுல் விரிவாக எடுத்துச் சொல்லி, விக்கிரகாராதனைக்காரரோடு, விக்கிரகத்திற்குப் படைக்கப்பட்டதை புசிப்பது தவறானது என்று விளக்கிச் சொல்லுகிறார். விக்கிரகம் ஒரு பொருளல்ல. விக்கிரகத்திற்குப் படைக்கப்பட்டதும் ஒரு பொருளல்ல. ஆனால் விக்கிரத்திற்கு படைக்கப்பட்டதைப் புசிப்பது, விக்கிரகாராதனையில் பங்கு பெறுவதற்கு சமமமானது.

கர்த்தருடைய பந்தியில் பங்குபெறுகிறவர்கள் கிறிஸ்துவினுடைய சரீரத்தில் ஐக்கியமாகயிருக்கிறார்கள். அதுபோல விக்கிரத்திற்குப் படைக்கப் பட்டதை புசிக்கிறவர்கள் விக்கிரகத்தோடு ஐக்கியமாகயிருக்கிறார்கள். ஆகையினால் விக்கிரகங்களுக்கு பலியிடப்பட்டதை விக்கிரகாராதனைக்காரரோடு சேர்ந்து புசிக்கக்கூடாது. பவுல் விக்கிரகங்களை இங்கு பேய்கள் என்று குறிப்பிடுகிறார்.

விக்கிரகாராதனைக்காரர் தேவனுக்குப் பலியிடவில்லை. அவர்கள் பேய்களுக்குப் பலியிடுகிறார்கள். அவர்களுடைய பலிகளைப் புசிக்கிறவர்கள் பேய்களோடே ஐக்கியமாயிருக்கிறார்கள். கொரிந்தியரில் சிலர் விக்கிரத்திற்கு பலியிடப்பட்டதைப் புசிக்கிறார்கள். அவர்கள் கர்த்தரிடத்தில் ஐக்கியமாயிராமல் பேய்களிடத்தில் ஐக்கியமாயிருக்கிறார்கள் என்று பவுல் அவர்களுக்கு எடுத்துச்சொல்லுகிறார். அவர்கள் பேய்களோடே ஐக்கியமாயிருக்க தனக்கு மனதில்லை என்றும் தன் அபிப்பிராயத்தைச் சொல்லுகிறார் (1கொரி 10:20).

ஒருவர் கர்த்தருடைய பந்தியிலும், பேய்களுடைய பந்தியிலும் ஐக்கியமாயிருக்கக்கூடாது. யாரும் இரண்டு எஜமான்களுக்கு ஊழியம் செய்யமுடியாது. கர்த்தரையும் ஆராதனை செய்து, பேய்களையும் ஆராதனை செய்வது என்பது கிறிஸ்தவ உபதேசத்திற்கு விரோதமானது. ஒரே வேளையில் ஒருவர் கிறிஸ்துவோடும், பேய்களோடும் ஐக்கியமாயிருக்க முடியாது. ஏதாவது ஒரு ஐக்கியத்தைத்தான் பெற்றுக்கொள்ள முடியும். கிறிஸ்துவோடு ஐக்கியமாயிருக்க விரும்புகிறவர், பேய்களோடு தனக்குள்ள ஐக்கியத்தை விட்டு விலகி வந்துவிடவேண்டும்.

நாம் கர்த்தருடைய பாத்திரத்திலும் பேய்களுடைய பாத்திரத்திலும் பானம்பண்ணக்கூடாது. அதுபோலவே நாம் கர்த்தருடைய போஜன பந்திக்கும் பேய்களுடைய போஜன பந்திக்கும் பங்குள்ளவர்களாயிருக்கக் கூடாது. பேய்களோடு ஐக்கியமாயிருக்கிறவர்கள் கர்த்தருக்கு எரிச்சலை மூட்டுகிறார்கள். தேவன் தம்முடைய மகிமையை யாருக்கும் பங்கிட்டுக் கொடுக்கமாட்டார். அவர் எரிச்சலுள்ள தேவன். கர்த்தரை ஆராதிக்கிறவர்கள் அவரை மாத்திரமே ஆராதிக்கவேண்டும். கர்த்தருக்கு எரிச்சலை மூட்டுகிறவர்கள் தங்களைப் பலவான்களாக பாவித்துக்கொள்கிறார்கள். கர்த்தரைவிட பலவான் ஒருவருமில்லை. கர்த்தரே சர்வ வல்லமையுள்ளவர்.

கர்த்தருக்கு எரிச்சலை மூட்டுவது மனுஷருக்கு ஆபத்தானது. தேவனுடைய கோபத்திற்கு எதிர்த்து நிற்க முடிகிறவர்கள் மாத்திரமே அவருக்கு எரிச்சலை மூட்டலாம். ஆனால் மனுஷரால் தேவனுடைய கோபத்தைத் தாங்கமுடியாது. அவரிலும் நாம் பலவான்களல்ல. நம்முடைய பலத்தை தேவனுடைய பலத்தோடு சரிசமமாக ஒப்பிட்டுப் பார்க்கக்கூடாது. தேவனோடு ஒப்பிடுவதற்கு நாம் எம்மாத்திரம். பலவீனராகிய நாம் கர்த்தருக்கு எரிச்சலை மூட்டாமல், அவருடைய கிருபையின் நிழலில் பாதுகாப்பாகத் தங்கியிருக்கவேண்டும்.

## விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்டது

## 1கொரி 10 : 23-33

**1கொரி 10:23. எல்லாவற்றையும் அநுபவிக்க எனக்கு அதிகாரமுண்டு, ஆகிலும் எல்லாம் தகுதியாயிராது; எல்லாவற்றையும் அநுபவிக்க எனக்கு அதிகாரமுண்டு, ஆகிலும் எல்லாம் பக்திவிருத்தியை உண்டாக்காது.**

**1கொரி 10:24. ஒவ்வொருவனும் தன் சுயபிரயோஜனத்தைத் தேடாமல், பிறனுடைய பிரயோஜனத்தைத் தேடக்கடவன்.**

**1கொரி 10:25. கடையிலே விற்கப்படுகிற எதையும் வாங்கிப்புசியுங்கள்; மனச்சாட்சியினிமித்தம் நீங்கள் ஒன்றையும் விசாரிக்க வேண்டியதில்லை.**

**1கொரி 10:26. பூமியும் அதின் நிறைவும் கர்த்தருடையது.**

**1கொரி 10:27. அன்றியும் அவிசுவாசிகளில் ஒருவன் உங்களை விருந்துக்கு அழைக்கும்போது, போக உங்களுக்கு மனதிருந்தால், மனச்சாட்சியினிமித்தம் ஒன்றையும் விசாரியாமல், உங்கள் முன் வைக்கப்படுகிற எதையும் புசியுங்கள்.**

**1கொரி 10:28. ஆயினும் இது விக்கிரகங்களுக்குப் படைக்கப் பட்டதென்று ஒருவன் உங்களுக்குச் சொன்னால், அப்படி அறிவித்தவ னிமித்தமும் மனச்சாட்சியினிமித்தமும் புசியாதிருங்கள்; பூமியும் அதின் நிறைவும் கர்த்தருடையது.**

**1கொரி 10:29. உன்னுடைய மனச்சாட்சியைக் குறித்து நான் இப்படிச் சொல்லாமல், மற்றொருவனுடைய மனச்சாட்சியைக் குறித்தே சொல்லுகிறேன். என் சுயாதீனம் மற்றொருவனுடைய மனச்சாட்சியினாலே குற்றமாய் எண்ணப்படவேண்டுவதென்ன?**

**1கொரி 10:30. மேலும் நான் அதை ஸ்தோத்திரிப்புடனே அநுபவித்தால், ஸ்தோத்திரித்து அநுபவிக்கிற பொருளைக்குறித்து நான் தூஷிக்கப்படுவானேன்?**

**1கொரி 10:31. ஆகையால் நீங்கள் புசித்தாலும், குடித்தாலும், எதைச் செய்தாலும், எல்லாவற்றையும் தேவனுடைய மகிமைக்கென்று செய்யுங்கள்.**

**1கொரி 10:32. நான் என் சுயபிரயோஜனத்தைத் தேடாமல், அநேகருடைய பிரயோஜனத்தைத் தேடி, அவர்கள் இரட்சிக்கப்படும் படிக்கு, எவ்விதத்திலும் எல்லாருக்கும் பிரியமாய் நடக்கிறதுபோல;**

**1கொரி 10:33. நீங்களும் யூதருக்கும், கிரேக்கருக்கும், தேவனுடைய சபைக்கும் இடறலற்றவர்களாயிருங்கள்.**

விக்கிரகங்களுக்கு படைக்கப்பட்டதை விசுவாசிகள் புசிக்கலாமா என்பதைக் குறித்து பவுல் இங்கு ஆலோசனை சொல்லுகிறார். ஒரு காரியத்தை அனுபவிக்க நமக்கு அதிகாரமிருந்தாலும், விசுவாசிகளாகிய நமக்கு அது தகுதியானதா என்பதை நாம் ஆராய்ந்து பார்க்கவேண்டும். அது பக்திவிருத்தியை உண்டாக்குமா என்பதையும் யோசித்துப் பார்க்கவேண்டும். நமக்கு அதிகாரமுள்ளது எல்லாமே, நமக்கு தகுதியாயிருப்பதில்லை. அவையெல்லாமே பக்திவிருத்தியை உண்டாக்குவதுமில்லை.

நம்முடைய கிரியை பிறர் இடறுவதற்கு காரணமாயிருக்கக்கூடாது. நம்முடைய சுயபிரயோஜனத்தை மாத்திரம் நாம் தேடாமல், மற்றவர்களுடைய பிரயோஜனத்தையும் தேடவேண்டும். மற்றவர்களும் விசுவாசத்தில் வளரவேண்டும். அவர்களும் தங்கள் ஆவிக்குரிய ஜீவியத்தில் முதிர்ச்சியடையவேண்டும். இதற்கு நாம் உதவியாகயிருக்க வேண்டுமேயல்லாமல், தடையாகயிருக்கக்கூடாது.

ஒரு சிலர் எதுவும் பாவமில்லை என்று இறுமாப்பாகயிருப்பார்கள். சில காரியங்கள் வெளிப்படையாகப் பார்க்கும்போது பாவமாகத் தெரியாது. ஆனால் உள்ளுக்குள்ளே ஆபத்து இருக்கும். துணிகரமாக இப்படிப்பட்ட காரியங்களில் ஈடுபடுகிறவர்கள், தங்கள் கவனக்குறைவினால் பாவத்தில் விழுந்துவிடுவார்கள். தன்னை நிற்கிறவனென்று எண்ணுகிறவன் விழாதபடிக்கு எச்சரிக்கையாயிருக்க வேண்டும். தனக்கு எல்லாவற்றையும் அனுபவிக்க அதிகாரமுண்டு என்று இறுமாப்பாய் அனுபவிக்கிறவர்கள், சடுதியில் நாசமடைவார்கள். இவர்கள் தங்களுடைய சுயபிரயோஜனத்தை மாத்திரமே தேடுகிறவர்கள்.

கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாமோ நம்முடைய பிரயோஜனத்தையும் தேடவேண்டும், பிறருடைய பிரயோஜனத்தையும் நாட வேண்டும். நாமும் விழாதபடிக்கு எச்சரிக்கையாயிருக்க வேண்டும். மற்றவர்கள் விழுவதற்கு நாம் காரணமாயிராதபடிக்கும் எச்சரிக்கையாயிருக்க வேண்டும். ஆகையினால் நாம் செய்கிற ஒவ்வொரு காரியத்தையும் கர்த்தருடைய சமுகத்தில் அமர்ந்திருந்து, சிந்தித்துப் பார்த்து செயல்படவேண்டும் (1கொரி 10:23,24).

கடைகளில் விற்கப்படுகிற எதையும் வாங்கிப் புசிக்கலாம் என்றும், மனச்சாட்சியினிமித்தம் நாம் ஒன்றையும் விசாரிக்க வேண்டியதில்லையென்றும் பவுல் இங்கு ஆலோசனையாகச் சொல்லுகிறார். இறைச்சிக் கடைக்குப்போய், இறைச்சி வாங்கும்போது, கடைக்காரரிடம், இந்த இறைச்சி விக்கிரகத்திற்குப் படைக்கப்பட்டதா என்று கேள்வி கேட்கவேண்டிய அவசியமில்லை. இறைச்சி கடையில் விற்கப்படுகிற இறைச்சி பொதுவான உணவுக்காகவே விற்கப்படுகிறது. அதை எல்லோரும் சந்தேகப்படாமல் வாங்கிப் புசிக்கலாம். அதைத் தீவிரமாக ஆராய்ச்சி செய்துகொண்டிருக்கக்கூடாது. கடையில் விற்கப்படுகிற எதையும் வாங்கிப் புசிக்கலாம். பூமியும் அதின் நிறைவும் கர்த்தருடையது (1கொரி 10:25,26).

அவிசுவாசிகளில் சிலர் விசுவாசிகளாகிய நம்மை விருந்துக்கு அழைக்கலாம். நம்மை அழைக்கும்போது அவர்களுடைய விருந்திற்குப்போக நமக்கு மனதிருந்தால், நாம் போகலாம். மனச்சாட்சியினிமித்தம் ஒன்றையும் விசாரியாமல், நமக்கு முன்வைக்கப்படுகிற எதையும் புசிக்கலாம். புசிக்கத்தகுந்தது எதையும் புசிப்பதில் தவறில்லை.

நம்முடைய சிநேகிதர்கள் விசுவாசிகளாகவும் இருக்கலாம். அவிசுவாசிகளாகவும் இருக்கலாம். அவர்களுடைய அழைப்பை ஏற்று, அவர்கள் கொடுக்கும் விருந்தில் பங்குபெறும்போது, ஒன்றையும் விசாரியாமல் புசிக்கலாம். வீடுகளில் நடைபெறும் பொதுவான விருந்தை மாத்திரமே பவுல் இங்கு அனுமதிக்கிறார். இந்த விருந்து விக்கிரகாராதனை சம்பந்தப்பட்டதாக இருக்குமென்றால், விசுவாசிகள் இப்படிப்பட்ட விருந்துகளில் பங்குபெறுவதை தவிர்த்துவிடவேண்டும்.

பொதுவான விருந்துகளில் பொதுவான போஜனத்தைமாத்திரமே பரிமாறுவார்கள் என்று எதிர்பார்க்கவேண்டும். தேவையில்லாமல் தீவிர ஆராய்ச்சி செய்து, எல்லாவற்றையும் விசாரித்துக் கொண்டிருக்கக்கூடாது (1கொரி 10:27).

அவிசுவாசிகளின் விருந்தில் பங்குபெறும்போது, நமக்கு முன்பாக வைக்கப்பட்டிருக்கிற ஒரு பொருள், விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்டது என்று நமக்கு அறிவிக்கப்பட்டால், அதைப் புசிக்கக்கூடாது. அப்படி அறிவித்தவனின் நிமித்தமும், மனச்சாட்சியினிமித்தமும் நாம் அதைப் புசிப்பதைத் தவிர்த்துவிடவேண்டும். நம்முடைய மனச்சாட்சிக்கும் நாம் முக்கியத்துவம் கொடுக்கவேண்டும். நமக்கு இதை அறிவித்தவனுடைய விசுவாசத்திற்கும் முக்கியத்துவம் கொடுக்கவேண்டும். நம்முடைய மனச்சாட்சிக்கு நாம் முக்கியத்துவம் கொடுப்பதுபோலவே, பிறருடைய மனச்சாட்சிக்கும் நாம் முக்கியத்துவம் கொடுக்கவேண்டும். கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் இப்படிப்பட்ட காரியங்களில் மிகுந்த கவனத்தோடும் எச்சரிப்போடும் நடந்துகொள்ளவேண்டும் (1கொரி 10:28).

எல்லாவற்றையும் புசிக்கலாம் என்று நம்முடைய மனச்சாட்சி சொல்லலாம். ஆனாலும் நம்முடைய சுயாதீனம் மற்றவனுடைய மனச்சாட்சியினால் குற்றமாய் எண்ணப்படக்கூடாது. மற்றவருடைய மனச்சாட்சி புண்படும் வண்ணமாக நாம் நடந்துகொள்ளக்கூடாது. மற்றவர்கள் இடறிவிழுவதற்கு நம்முடைய சுயாதீனம் காரணமாயிருக்கக்கூடாது (1கொரி 10:29).

நாம் எதைச் செய்தாலும் எல்லாவற்றையும் தேவனுடைய மகிமைக்கென்றே செய்யவேண்டும். நாம் செய்கிற எந்தக் காரியமும் யூதருக்கோ, கிரேக்கருக்கோ, தேவனுடைய சபைக்கோ இடறலாயிருக்கக்கூடாது. கர்த்தருடைய பிள்ளைகளாகிய நமக்கு எது பிடிக்கும் என்பது முக்கியமல்ல. தேவனை எது மகிமைப்படுத்தும் என்பதுதான் முக்கியம். நாம் செய்கிறது நமக்கு நன்மை தருமா என்று பார்ப்பதைவிட, அது பிறருக்கு நன்மையாக இருக்குமா என்பதைப் பார்க்கவேண்டும்.

விசுவாசிகளாகிய நாம் நம்முடைய சுயபிரயோஜனத்தை மாத்திரம் தேடாமல் அநேகருடைய பிரயோஜனத்தைத் தேடவேண்டும். எல்லோரும் இரட்சிக்கப்படவேண்டும் என்னும் எண்ணம் நமக்குள் காணப்படவேண்டும். இதற்காக எவ்விதத்திலும், எல்லாருக்கும் நாம் பிரியமாய் நடக்க பிரயாசப்பட வேண்டும். பவுல் கொரிந்தியருக்கு இந்த ஆலோசனைகளையெல்லாம் சொல்லும்போது, தான் இவற்றிற்கு ஒரு முன்மாதிரியாக இருப்பதாக அறிக்கை செய்கிறார். அநேகர் இரட்சிக்கப்படும் படிக்கு, தான் எவ்விதத்திலும் எல்லாருக்கும் பிரியமாய் நடப்பதாக பவுல் தன்னுடைய நடக்கையைப்பற்றிச் சாட்சி சொல்லுகிறார்.

கர்த்தருடைய வசனத்தைப் பிரசங்கிக்கிறவர்கள் வெறும் வார்த்தைகளைச் சத்தமாய்ச் சொன்னால் மாத்திரம் போதாது. அவர்களுடைய ஜீவியமும் பிரசங்கமும் முரண்படாமல் இசைந்திருக்கவேண்டும். கர்த்தருடைய கற்பனைக்கு கீழ்ப்படிந்து சாட்சியாய் ஜீவிக்கவேண்டும். அப்போதுதான் ஊழியக்காரருடைய பிரசங்க வார்த்தையில் பெலனும் அதிகாரமும் இருக்கும். சாட்சியில்லாமல் பிரசங்கித்தால் அது ஏனோதானோவென்று இருக்கும்.

எல்லோரும் இரட்சிக்கப்படவேண்டும் என்று பிரசங்கிக்கிறவர்கள், அதற்கேற்ற பிரகாரமாக ஜீவிக்கவேண்டியதும் அவசியமாயிருக்கிறது (1கொரி 10:32). பவுல் யாருக்கும் இடறலாயிருக்கவில்லை. தன்னைப்போலவே கொரிந்து சபையிலுள்ள விசுவாசிகளும் யாருக்கும் இடறல் அல்லாதவர்களாய் இருக்குமாறு பவுல் ஆலோசனை சொல்லுகிறார் (1கொரி 10:33).

## 11 அதிகாரம்

கொரிந்து சபையில் ஒரு சில காரியங்கள் ஒழுங்கில்லாமல் நடைபெறுகிறது. பவுல் அவற்றை சீர்படுத்தி ஒழுங்குபடுத்தும்விதமாக இந்த அதிகாரத்தில் கொரிந்தியருக்கு ஆலோசனை சொல்லுகிறார். ஜெபம்பண்ணுகிறபோதும் தீர்க்கதரிசினம் சொல்லுகிறபோதும் ஸ்திரீகள் தங்கள் தலையை மூடிக்கொள்ளவேண்டும். தங்கள் புருஷருக்கு ஸ்திரீகள் கீழ்ப்பட்டவர்கள் என்பதை காண்பிக்கும் விதமாக, அக்காலத்தில், யூதர் மத்தியிலே இந்தப் பழக்கமுண்டாயிற்று.

ஸ்திரீ புருஷனிலிருந்து தோன்றினவள். ஸ்திரீ புருஷனுக்காக சிருஷ்டிக்கப்பட்டவள். ஆனாலும் ஸ்திரீயில்லாமல் புருஷனுமில்லை. புருஷனில்லாமல் ஸ்திரீயுமில்லை. சகலமும் தேவனால் உண்டாயிருக்கிறது (1கொரி 11:1-16).

கொரிந்து சபையில் பிரிவினைகள் உண்டாயிருக்கிறது. அன்பின் விருந்தில் ஒரு சிலர் முந்தி சாப்பிடுகிறார்கள். ஒருவர் பசியாயிருக்கும்போது, மற்றவர் வெறியாயிருக்கிறார். இப்படிச் செய்கிறது கர்த்தருடைய இராப்போஜனம் பண்ணுதல்ல (1கொரி 1:17-22). கர்த்தருடைய இராப்போஜனத்தை எவ்வாறு ஆசரிக்கவேண்டுமென்று பவுல் ஆலோசனை சொல்லுகிறார் (1கொரி 11:23-34).

### சகலமும் தேவனால் உண்டாயிருக்கிறது 1கொரி 11 : 1-16

**1கொரி 11:1. நான் கிறிஸ்துவைப் பின்பற்றுகிறது போல, நீங்கள் என்னைப் பின்பற்றுகிறவர்களாயிருங்கள்.**

**1கொரி 11:2. சகோதரரே, நீங்கள் எல்லாவற்றிலும் என்னை நினைத்துக் கொண்டு, நான் உங்களுக்கு ஒப்புவித்தபடி நீங்கள் கட்டளைகளைக் கைக்கொண்டு வருகிறதினிமித்தம் உங்களைப் புகழுகிறேன்.**

**1கொரி 11:3. ஒவ்வொரு புருஷனுக்கும் கிறிஸ்து தலையாயிருக் கிறாரென்றும் ஸ்திரீக்குப் புருஷன் தலையாயிருக்கிறானென்றும், கிறிஸ்துவுக்கு தேவன் தலையாயிருக்கிறாரென்றும், நீங்கள் அறியவேண்டுமென்று விரும்புகிறேன்.**

**1கொரி 11:4. ஜெபம் பண்ணுகிறபோதாவது, தீர்க்கதரிசனஞ் சொல்லுகிறபோதாவது, தன் தலையை மூடிக் கொண்டிருக்கிற எந்த புருஷனும் தன் தலையைக் கனவீனப்படுத்துகிறான்.**

**1கொரி 11:5. ஜெபம் பண்ணுகிறபோதாவது, தீர்க்கதரிசனஞ் சொல்லுகிறபோதாவது, தன் தலையை மூடிக் கொள்ளாதிருக்கிற எந்த ஸ்திரீயும் தன் தலையைக் கனவீனப்படுத்துகிறாள்; அது அவளுக்குத் தலை சிரைக்கப்பட்டது போலிருக்குமே.**

**1கொரி 11:6. ஸ்திரீயானவள் முக்காடிட்டுக் கொள்ளாவிட்டால் தலைமயிரையும் கத்தரித்துப் போடக்கடவள்; தலைமயிர் கத்தரிக்கப் படுகிறதும் சிரைக்கப்படுகிறதும் ஸ்திரீக்கு வெட்கமானால் முக்காடிட்டுக் கொண்டிருக்கக்கடவள்.**

**1கொரி 11:7. புருஷனானவன் தேவனுடைய சாயலும் மகிமையுமாயிருக்கிறபடியால், தன் தலையை மூடிக்கொள்ள வேண்டுவதில்லை; ஸ்திரீயானவள் புருஷனுடைய மகிமையாயிருக்கிறாள்.**

**1கொரி 11:8. புருஷன் ஸ்திரீயிலிருந்து தோன்றினவல்ல, ஸ்திரீயே புருஷனிலி ருந்து தோன்றினவள்.**

**1கொரி 11:9. புருஷன் ஸ்திரீக்காகச் சிருஷ்டிக்கப்பட்டவனல்ல, ஸ்திரீயே புருஷனுக்காகச் சிருஷ்டிக்கப்பட்டவள்.**

**1கொரி 11:10. ஆகையால் தூதர்களினிமித்தம் ஸ்திரீயானவள் தலையின்மேல் முக்காடிட்டுக்கொள்ள வேண்டும்.**

**1கொரி 11:11. ஆகிலும் கர்த்தருக்குள் ஸ்திரீயில்லாமல் புருஷனுமில்லை, புருஷனில்லாமல் ஸ்திரீயுமில்லை.**

**1கொரி 11:12. ஸ்திரீயானவள் புருஷனிலிருந்து தோன்றுகிறதுபோல, புருஷனும் ஸ்திரீயினால் தோன்றுகிறான்; சகலமும் தேவனால் உண்டாயிருக்கிறது.**

**1கொரி 11:13. ஸ்திரீயானவள் தேவனை நோக்கி ஜெபம் பண்ணுகையில், தன்தலையை மூடிக் கொள்ளாமலிருக்கிறது இலட்சணமாயிருக்குமோ என்று உங்களுக்குள்ளே நிதானித்துக் கொள்ளுங்கள்.**

**1கொரி 11:14. புருஷன் மயிரை நீளமாய் வளர்க்கிறது அவனுக்கு கனவீனமாயிருக்கிறதென்றும்,**

**1கொரி 11:15. ஸ்திரீ தன் மயிரை நீளமாய் வளர்க்கிறது அவளுக்கு மகிமையாயிருக்கிறதென்றும் சுபாவமே உங்களுக்குப் போதிக்கிறதில்லையா? தலைமயிர் அவளுக்கு முக்காடாகக் கொடுக்கப்பட்டிருக்கிறதே.**

**1கொரி 11:16. ஆகிலும் ஒருவன் வாக்குவாதஞ்செய்ய மனதாயிருந்தால் எங்களுக்கும் தேவனுடைய சபைகளுக்கும், அப்படிப்பட்ட வழக்கமில்லையென்று அறியக்கடவன்.**

## என்னைப் பின்பற்றுகிறவர்களாயிருங்கள்

**நான் கிறிஸ்துவைப் பின்பற்றுகிறது போல, நீங்கள் என்னைப் பின்பற்றுகிறவர்களாயிருங்கள் (1கொரி 11:1).**

பவுலின் பிரசங்கமும் அவருடைய ஜீவியமும் இசைவாயிருக்கிறது. கொரிந்தியர்கள் விசுவாசிக்கவேண்டிய சத்தியத்தை பவுல் அவர்களுக்குத் தெளிவாகப் பிரசங்கம்பண்ணுகிறார். அதே வேளையில் பவுலுடைய ஜீவியமும் அவருடைய பிரசங்கச் செய்திக்கு இசைவாய் அமைந்திருக்கிறது. ஆகையினால் அவர்கள் தங்கள் ஆவிக்குரிய ஜீவியத்தில் பவுலைப் பின்பற்றலாம்.

பவுலும் தன்னைப்பற்றி சாட்சியாகச் சொல்லுகிறார். "நான் கிறிஸ்துவைப் பின்பற்றுகிறதுபோல நீங்கள் என்னைப் பின்பற்றுகிறவர்களாயிருங்கள்" என்று தன்னுடைய ஆவிக்குரிய ஜீவியம் சுத்தமாயிருக்கிறது என்று சாட்சி சொல்லுகிறார். கர்த்தருடைய ஊழியக்காரர்களெல்லோருமே பவுலைப் போல சாட்சிசொல்லவேண்டும். தங்களுடைய ஜீவியத்தை விசுவாசிகள் பின்பற்றும் அளவுக்கு ஊழியக்காரரின் ஜீவியம் பரிசுத்தமாயும், சாட்சியாயும் இருக்கவேண்டும்.

தன்னை எல்லோரும் கண்ணை மூடிக்கொண்டு அப்படியே பின்பற்றவேண்டுமென்று பவுல் சொல்லவில்லை. தான் கிறிஸ்துவைப் பின்பற்றுகிறதுபோல, அவர்கள் தன்னைப் பின்பற்றவேண்டும் என்று மாத்திரமே சொல்லுகிறார். பவுல் கிறிஸ்துவைப் பின்பற்றுவதைத்தவிர வேறு எந்தவிஷயத்திலும் யாரும், அவரைப் பின்பற்ற வேண்டியதில்லை. பவுல் எந்தெந்த விஷயங்களில் கிறிஸ்துவைப் பின்பற்றுகிறாரோ, அந்தந்த விஷயங்களில் மாத்திரம், கொரிந்து சபையார் அவரைப் பின்பற்றினால் போதுமானது.

கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் மனுஷரையும், ஊழியக்காரர்களையும் பின்பற்றுவதில் மிகுந்த கவனத்தோடிருக்க வேண்டும். ஊழியக்காரரும் மனுஷரே. எல்லா மனுஷரும் குறைவுள்ளவர்கள். கிறிஸ்து மாத்திரம் நிறைவானவர். ஆகையினால் நம்முடைய ஜீவியத்தில் நாம் கிறிஸ்துவை மாத்திரமே பின்பற்றவேண்டும். ஊழியக்காரர்கள் கிறிஸ்துவை உண்மையாய்ப் பின்பற்றும்போது, அந்த விஷயங்களில் மாத்திரம் நாம் அவர்களைப் பின்பற்றலாம்.

## உங்களைப் புகழுகிறேன்

**சகோதரரே, நீங்கள் எல்லாவற்றிலும் என்னை நினைத்துக்கொண்டு, நான் உங்களுக்கு ஒப்புவித்தபடி நீங்கள் கட்டளைகளைக் கைக்கொண்டு வருகிறதினிமித்தம் உங்களைப் புகழுகிறேன் (1கொரி 11:2).**

பவுல் தன்னுடைய வார்த்தைகளினால் கொரிந்தியரைக் கடிந்துகொண்டாலும், அவர்களைப் புகழ்ந்தும் பேசுகிறார். அவர்கள் எல்லாவற்றிலும் பவுலை நினைத்துக்கொண்டிருக்கிறார்கள். பவுல் அவர்களுக்கு ஒப்புவித்தபடி கட்டளைகளைக் கைக்கொண்டு வருகிறார்கள். அவர்களிடத்தில் பல குறைகள் இருந்தாலும், அவர்களிடத்தில் காணப்படுகிற நற்குணத்தைக் கண்டுபிடித்து, பவுல் அவர்களை நல்வார்த்தைகளினால் புகழுகிறார்.

கர்த்தருடைய ஊழியக்காரர்களாகிய நாம் எப்போதும் எல்லோரையும் குறை சொல்லிக்கொண்டே இருக்கக்கூடாது. மற்றவர்களிடத்தில் காணப்படுகிற நற்குணங்களைத் தேடிக்கண்டுபிடித்து, அதினிமித்தமாக அவர்களைப் புகழவேண்டும்.

## புருஷனும் ஸ்திரீயும்

**ஒவ்வொரு புருஷனுக்கும் கிறிஸ்து தலையாயிருக்கிறாரென்றும் ஸ்திரீக்குப் புருஷன் தலையாயிருக்கிறானென்றும், கிறிஸ்துவுக்கு தேவன் தலையாயிருக்கிறாரென்றும், நீங்கள் அறியவேண்டுமென்று விரும்புகிறேன் (1கொரி 11:3).**

புருஷன் ஸ்திரீயை விட மேன்மையுள்ளவனாகயிருக்கிறான். ஒவ்வொரு புருஷனுக்கும் கிறிஸ்து தலையாயிருக்கிறார். மனுக்குலம் எல்லோருக்கும் அவரே தலையாகயிருக்கிறவர். தேவனே சர்வ ஆளுகையுள்ளவர். அவரே எல்லாவற்றிற்கும் மேலானவர். கிறிஸ்துவுக்கு தேவன் தலையாகயிருக்கிறார். கிறிஸ்து மனுக்குலத்தார் எல்லோருக்கும் தலையாகயிருக்கிறார்.

ஸ்திரீக்கு புருஷன் தலையாயிருக்கிறான். புருஷனுடைய ஸ்தானத்தை ஸ்திரீயானவள் அபகரித்துக் கொள்ள முயற்சிபண்ணக்கூடாது. கொரிந்து சபையில் ஸ்திரீகள் ஜெபம்பண்ணுகிறார்கள். தீர்க்கதரிசனம் சொல்லுகிறார்கள் (1கொரி 11:5). சபைகளில் ஸ்திரீகள் பேசாமலிருக்கக் கடவர்கள் (1கொரி 14:34). உபதேசம்பண்ணவும் புருஷன்மேல் அதிகாரம் செலுத்தவும் ஸ்திரீயானவளுக்கு பவுல் உத்தரவு கொடுக்கவில்லை. அவள் அமைதியாயிருக்கவேண்டுமென்று பவுல் ஆலோசனை சொல்லுகிறார் (1தீமோ 2:12).

அப்போஸ்தலர் பவுல் ஸ்திரீகளைக் குறைவாகப் பேசவில்லை. அவர்களுடைய ஊழியத்தைத் தடைபண்ணவுமில்லை. ஸ்திரீகள் தாங்கள் செய்யவேண்டிய ஊழியத்தை முறைப்படி செய்யவேண்டும். நாம் சகலவற்றையும் ஒழுங்காயும் கிரமமாயும் செய்து நிறைவேற்றவேண்டும். கர்த்தருடைய ஊழியம் பரிசுத்தமானது. அதைக் கவனத்தோடும் கண்ணியத்தோடும் செய்யவேண்டும். நாம் நல்லது செய்யவேண்டும். நல்லது செய்தால் மாத்திரம் போதாது. நல்லதை நன்றாகவும் செய்யவேண்டும்.

## ஜெபம்பண்ணுகிறபோது

**ஜெபம் பண்ணுகிறபோதாவது, தீர்க்கதரிசனஞ் சொல்லுகிறபோதாவது, தன் தலையை மூடிக் கொண்டிருக்கிற எந்த புருஷனும் தன் தலையைக் கனவீனப்படுத்துகிறான். ஜெபம் பண்ணுகிறபோதாவது, தீர்க்கதரிசனஞ் சொல்லுகிறபோதாவது, தன் தலையை மூடிக் கொள்ளாதிருக்கிற எந்த ஸ்திரீயும் தன் தலையைக் கனவீனப்படுத்துகிறாள்; அது அவளுக்குத் தலை சிரைக்கப்பட்டது போலிருக்குமே. ஸ்திரீயானவள் முக்காடிட்டுக் கொள்ளாவிட்டால் தலைமயிரையும் கத்தரித்துப் போடக்கடவள்; தலைமயிர் கத்தரிக்கப் படுகிறதும் சிரைக்கப்படுகிறதும் ஸ்திரீக்கு வெட்கமானால் முக்காடிட்டுக் கொண்டிருக்கக் கடவள். புருஷனானவன் தேவனுடைய சாயலும் மகிமையுமாயிருக்கிறபடியால், தன் தலையை மூடிக்கொள்ள வேண்டுவதில்லை; ஸ்திரீயானவள் புருஷனுடைய மகிமையாயிருக்கிறாள். புருஷன் ஸ்திரீயிலிருந்து தோன்றினவனல்ல, ஸ்திரீயே புருஷனிலிருந்து தோன்றினவள். புருஷன் ஸ்திரீக்காகச் சிருஷ்டிக்கப்பட்டவனல்ல, ஸ்திரீயே புருஷனுக்காகச் சிருஷ்டிக்கப்பட்டவள். ஆகையால் தூதர்களினிமித்தம் ஸ்திரீயானவள் தலையின்மேல் முக்காடிட்டுக்கொள்ள வேண்டும் (1கொரி 11:4-10).**

ஜெபம் பண்ணுகிறபோதும், தீர்க்கதரிசனம் சொல்லுகிறபோதும் ஸ்திரீகள் எப்படி நடந்துகொள்ள வேண்டுமென்றும், புருஷர்கள் எப்படி நடந்துகொள்ளவேண்டுமென்றும் பவுல் ஆலோசனை சொல்லுகிறார். ஸ்திரீகள் இந்த வேளைகளில் தங்கள் தலைகளை மூடிக்கொள்ளவேண்டும். புருஷர் இந்த வேளைகளில் தங்கள் தலைகளை மூடிக்கொள்ளக்கூடாது. பவுல் இதற்கான காரணத்தையும் சொல்லுகிறார்.

ஒவ்வொரு புருஷனுக்கும் கிறிஸ்து தலையாயிருக்கிறார் (1கொரி 11:3). ஜெபம்பண்ணுகிற போதும், தீர்க்கதரிசனம் சொல்லுகிறபோதும் தன் தலையை மூடிக்கொண்டிருக்கிற எந்தப் புருஷனும் தன் தலையை பலவீனப்படுத்தினான். கிறிஸ்துவே புருஷனுக்குத் தலையாகயிருக்கிறார். தன் தலையை மூடிக்கொள்கிறவன் கிறிஸ்துவைக் கனவீனப்படுத்துகிறான்.

ஜெபம் பண்ணுகிறபோதும், தீர்க்கதரிசனம் சொல்லுகிறபோதும், தன் தலையை மூடிக்கொள்ளாதிருக்கிற எந்த ஸ்திரீயும், தன் தலையை கனவீனப்படுத்துகிறாள். ஸ்திரீக்கு புருஷன் தலையாயிருக்கிறான். அவள் தன் புருஷனை கனவீனபபடுத்துகிறாள்.

தன் தலையை முக்காடிட்டுக்கொள்கிற ஸ்திரீ, தன் புருஷனுக்கு தான் கட்டுப்பட்டவள் என்பதைக் காண்பிக்கிறாள். தன் தலையை மூடிக்கொள்ளாதிருக்கிற ஸ்திரீ, தான் தன் புருஷனுக்கு கட்டுப்பட்டவளல்ல என்பதை வெளிப்படுத்துகிறாள். தேவனே புருஷனையும் ஸ்திரீயையும் சிருஷ்டித்திருக்கிறார். அவர்களை வெவ்வேறு ஸ்தானத்தில் வைத்திருக்கிறார். தேவன் தங்களுக்கு நியமித்திருக்கிற ஸ்தானத்தை புருஷனோ அல்லது ஸ்திரீயோ மாற்றிப்போடக்கூடாது. தேவன் நியமித்ததை மனுஷர் மீறக்கூடாது.

புருஷனானவன் தேவனுடைய சாயலும் மகிமையுமாயிருக்கிறான். ஆகையினால் புருஷன் தன் தலையை மூடிக்கொள்ள வேண்டியதில்லை. ஸ்திரீக்கு புருஷன் தலையாயிருக்கிறான். கிறிஸ்து புருஷனுக்குத் தலையாயிருக்கிறார். இந்த விஷயத்தில் புருஷனானவன் தேவனுடைய சாயலாகயிருக்கிறான். அதே வேளையில் ஸ்திரீயானவள் புருஷனுடைய மகிமையாயிருக்கிறாள் (1கொரி 11:7).

ஸ்திரீயானவள் தேவனுடைய சாயலாகயிருப்பதுபோல அவள் மனுஷனுடைய சாயலாகவும் இருக்கிறாள். ஏனெனில் ஸ்திரீயானவள் புருஷனிலிருந்து தோன்றியவள். புருஷன் ஸ்திரீயிலிருந்து தோன்றினவனல்ல. ஆகையினால் ஸ்திரீயானவள் புருஷனைப்போல இருக்கக் கூடாது. தேவன் தனக்கு நியமித்திருக்கிற ஸ்தானத்தில் அவள் நிலைத்திருக்க வேண்டும். தேவன் நம் எல்லோருக்குமே பணிவிடையின் ஆவிகளை நியமித்திருக்கிறார். அந்தத் தூதர்களிமித்தம் ஸ்திரீயானவள் தலையின்மேல் முக்காட்டிக்கொள்ள வேண்டும் என்று பவுல் ஆலோசனை சொல்லுகிறார்.

முக்காடு என்பது அதிகாரத்திற்கு அடையாளம். ஸ்திரீயானவள் தன் தலையின்மேல் முக்காடிட்டுக்கொள்ளும் போது, தன்மீது தன்னுடைய புருஷனுக்கு அதிகாரம் இருக்கிறது என்பதை அங்கீகரிக்கிறாள். முக்காடிட்டுக் கொள்ளாதவள் தன்மீது தன் புருஷனுடைய அதிகாரத்தை அங்கீகரியாதவளாக, தன் புருஷனை அவமதிக்கிறாள்.

## மயிரை நீளமாய் வளர்க்கிறது

**ஆகிலும் கர்த்தருக்குள் ஸ்திரீயில்லாமல் புருஷனுமில்லை, புருஷனில்லாமல் ஸ்திரீயுமில்லை. ஸ்திரீயானவள் புருஷனிலிருந்து தோன்றுகிறதுபோல, புருஷனும் ஸ்திரீயினால் தோன்றுகிறான்; சகலமும் தேவனால் உண்டாயிருக்கிறது. ஸ்திரீயானவள் தேவனை நோக்கி ஜெபம் பண்ணுகையில், தன்தலையை மூடிக் கொள்ளாமலிருக்கிறது இலட்சணமாயிருக்குமோ என்று உங்களுக்குள்ளே நிதானித்துக் கொள்ளுங்கள். புருஷன் மயிரை நீளமாய் வளர்க்கிறது அவனுக்கு கனவீனமாயிருக்கிறதென்றும், ஸ்திரீ தன் மயிரை நீளமாய் வளர்க்கிறது அவளுக்கு மகிமையாயிருக்கிறதென்றும் சுபாவமே உங்களுக்குப் போதிக்கிறதில்லையா? தலைமயிர் அவளுக்கு முக்காடாகக் கொடுக்கப்பட்டிருக்கிறதே. ஆகிலும் ஒருவன் வாக்குவாதஞ்செய்ய மனதாயிருந்தால் எங்களுக்கும் தேவனுடைய சபைகளுக்கும், அப்படிப்பட்ட வழக்கமில்லையென்று அறியக்கடவன் (1கொரி 11:11-16).**

ஸ்திரீயைவிட புருஷனானவன் அதிகாரமுள்ளவன் என்று சொல்லும்போது, புருஷன் தன் மனதில் இறுமாப்பாயிருக்கக்கூடாது. தேவன் தனக்குக் கொடுத்திருக்கும் அதிகாரத்திற்குமேல் அதிகமாய் ஸ்திரீயின்மேல் அதிகாரம் செலுத்தக்கூடாது. கர்த்தருக்குள் ஸ்திரீயில்லாமல் புருஷனுமில்லை. புருஷனில்லாமல் ஸ்திரீயுமில்லை. ஒருவருக்கொருவர் உதவியாகயிருப் பதற்காகவே தேவன் புருஷனையும் ஸ்திரீயையும் சிருஷ்டித்திருக்கிறார். ஸ்திரீயானவள் புருஷனிலிருந்து தோன்றுகிறதுபோல, புருஷனும் ஸ்திரீயினால் தோன்றுகிறான். சகலமும் தேவனால் உண்டாயிருக்கிறது.

புருஷனும் ஸ்திரீயும் ஒருவருக்கொருவர் ஆறுதலாயும், ஆசீர்வாதமாயும் இருக்கவேண்டும். ஒருவரையொருவர் அடிமைப்படுத்தி ஆளுகை செய்ய நினைக்கக்கூடாது. ஆணவமாயும் இறுமாப்பாயும் ஆளுகை செய்யக்கூடாது. தன்னுடைய ஸ்தானத்தை ஸ்திரீயானவள் புரிந்து நடந்துகொள்ள வேண்டுமென்பது தேவனுடைய சித்தம். அதே வேளையில் தேவன் தனக்குக் கொடுத்திருக்கிற அதிகாரத்தை ஸ்திரீயின்மீது தவறாகப் பயன்படுத்தக்கூடாது என்பதும் தேவனுடைய சித்தமாகவே இருக்கிறது.

ஸ்திரீயானவள் மயிரை நீளமாய் வளர்க்கிறாள். இது அவளுடைய தலையின்மேல் இயற்கையாகக் கொடுக்கப் பட்டிருக்கிற முக்காடாகயிருக்கிறது. ஸ்திரீ தன் மயிரை நீளமாய் வளர்க்கிறது அவளுக்கு மகிமையாயிருக்கிறது. புருஷன் தன் மயிரை நீளமாய் வளர்க்கக்கூடாது. அது அவனுக்கு கனவீனமாயிருக்கும். புருஷன் தன் மயிரை நீளமாய் வளர்க்கும்போது, அவன் தன் இயற்கையான சுபாவத்தில் ஸ்திரீயின் சுபாவத்தை வெளிப் படுத்துகிறான். தன்னை புருஷனைப்போல காண்பியாமல், ஸ்திரீயைப்போல காண்பிக்கிறான். நீளமான தலை மயிர் மென்மையான சுபாவத்திற்கும், ஸ்திரீயின் சுபாவத்திற்கும் அடையாளம்.

ஸ்திரீகளுக்கும் புருஷனுக்கும் பவுல் ஆலோசனை சொல்லும்போது, இது சம்பந்தமாக வாக்குவாதம் செய்யவேண்டாம் என்றும் ஆலோசனை சொல்லுகிறார். யாராவது ஒருவர் இது சம்பந்தமாக வாக்குவாதம் செய்ய மனதாயிருந்தால், எங்களுக்கும் தேவனுடைய சபைகளுக்கும் அப்படிப்பட்ட வழக்கமில்லையென்று விசுவாசிகள் சொல்லவேண்டும். வாக்குவாதம் செய்வதைவிட்டு விலகியிருக்கவேண்டும்.

## அன்பின் விருந்து
## 1கொரி 11 : 17-22

**1கொரி 11:17. உங்களைப் புகழாமல் இதைக்குறித்து உங்களுக்குக் கட்டளைகொடுக்கிறேன்; நீங்கள் கூடிவருதல் நன்மைக்கேதுவாயிராமல், தீமைக்கேதுவாயிருக்கிறதே.**

**1கொரி 11:18. முதலாவது, நீங்கள் சபையிலே கூடி வந்திருக்கும்போது, உங்களில் பிரிவினைகள் உண்டென்று கேள்விப்படுகிறேன்; அதில் சிலவற்றை நம்புகிறேன்.**

**1கொரி 11:19. உங்களில் உத்தமர்கள் இன்னாரென்று வெளியாகும்படிக்கு மார்க்கபேதங்களும் உங்களுக்குள்ளே உண்டாயிருக்க வேண்டியதே.**

**1கொரி 11:20. நீங்கள் ஓரிடத்தில் கூடிவரும்போது அவனவன் தன்தன் சொந்த போஜனத்தை முந்திச் சாப்பிடுகிறான்; ஒருவன் பசியாயிருக்கிறான், ஒருவன் வெறியாயிருக்கிறான்.**

**1கொரி 11:21. இப்படிச் செய்கிறது கர்த்தருடைய இராப்போஜனம் பண்ணுதலல்லவே.**

**1கொரி 11:22. புசிக்கிறதற்கும் குடிக்கிறதற்கும் உங்களுக்கு வீடுகள் இல்லையா? தேவனுடைய சபையை அசட்டைபண்ணி, இல்லாதவர்களை வெட்கப்படுத்துகிறீர்களா? உங்களுக்கு நான் என்ன சொல்லுவேன்? இதைக் குறித்து உங்களைப் புகழ்வேனோ? புகழேன்.**

கொரிந்து சபையார் கர்த்தருடைய இராப்போஜனத்தை முறையாகவும், கிரமமாகவும் அனுசரிக்கவில்லை. அவர்கள் மத்தியில் பிரிவினை உண்டாயிருக்கிறது. சபையின் நியமங்களை விசுவாசிகள் சரியாகக் கடைப்பிடிக்கவில்லை. கிறிஸ்துவின் நியமங்கள் நமக்கு நன்மை செய்யவில்லையென்றால், அவை நமக்கு தீமை செய்துவிடும். நம்முடைய பிரிவினையின் சுபாவங்களை நம்மைவிட்டு நீக்கிப்போடவேண்டும். இல்லையென்றால் அவை நமக்குள் வேரூன்றி வளர்ந்து, நம்முடைய இருதயங்களைக் கடினப்படுத்திவிடும்.

கொரிந்து சபையிலுள்ள விசுவாசிகள் சபையிலே கூடிவந்திருக்கும் போது, அவர்கள் ஐக்கியமாயிராமல் பிரிந்திருக்கிறார்கள். ஒருவருக்கொருவர் வாக்குவாதம்பண்ணுகிறார்கள். கொரிந்து சபையிலுள்ள விசுவாசிகள் மத்தியில் பிரிவினை உண்டாயிருப்பதை பவுலும் கேள்விப்படுகிறார். அதில் சிலவற்றை நம்பவும் செய்கிறார். விசுவாசிகள் மத்தியில் கள்ளப்போதகர்கள் எழும்பி, கள்ளஉபதேசத்தைப் போதகம் பண்ணுகிறார்கள். விசுவாசிகளை ஐக்கியப் படுத்தி ஒன்றுசேர்ப்பதற்குப் பதிலாக, அவர்களைப் பிரித்துவிடுகிறார்கள்.

சபையில் விசுவாசிகள் மத்தியில் அன்பு குறைந்துபோனால் பிரிவினை பெருகும். சபையார் மத்தியில் மார்க்கபேதங்கள் உண்டாயிருப்பதை கர்த்தரும் சில சமயங்களில் அங்கீகரிக்கிறார். அவர்களில் உத்தமர்கள் இன்னாரென்று வெளியாகும்படிக்கு மார்க்கபேதங்கள் கர்த்தருடைய சித்தத்தின் பிரகாரம் உண்டாகிறது. நம்முடைய இருதயம் கர்த்தருக்கு முன்பாக நேர்மையாகயிருந்தால் மாத்திரமே, அது தன்னுடைய தப்பிதங்களை உணர்ந்து திருந்தும். அப்போது தான் குணப்படாத இருதயம் குணப்படும். இல்லையென்றால் இருதயம் கடினப்படும்.

விசுவாசிகள் மத்தியில், தேவனுடைய தெய்வீக ஞானத்தினாலே, மார்க்க பேதங்கள் அனுமதிக்கப்படுகிறது. மார்க்க பேதங்கள் சபையில் இருக்கக்கூடாது. ஆனாலும் தேவன் அதை அனுமதித்து, தம்முடைய பிள்ளைகளைச் சுத்தப்படுத்துகிறார். யார் உத்தமர் என்பதை வெளிப்படுத்துகிறார்.

கொரிந்து சபையார் ஓரிடத்தில் கூடிவரும்போது, அவர்கள் மத்தியில் ஒழுக்கமும் கட்டுப்பாடும் இல்லை. ஒருவன் பசியாயிருக்கும்போது, மற்றொருவன் தன் போஜனத்தை முந்தி சாப்பிடுகிறான். யாரும் யாருக்கும் பொறுமையோடு காத்திருப்பதில்லை. ஒரு சிலருக்கு தேவைகள் சந்திக்கப்படவில்லை. ஆனால் வேறு சிலரோ தேவைக்குமேல் சேர்த்து வைத்திருக்கிறார்கள். தரித்திரருக்காக போஜனம் ஆயத்தம்பண்ணப்பட்டாலும், ஐசுவரியவான்கள் முந்தி சாப்பிட்டு தங்கள் வயிற்றை நிரப்புகிறார்கள்.

ஒருவன் பசியாயிருக்கிறான். ஒருவன் வெறியாயிருக்கிறான். இப்படிப்பட்டவர்கள் கர்த்தருடைய அன்பின் விருந்தை அசுத்தப்படுத்துகிறார்கள். இப்படிச் செய்கிறது கர்த்தருடைய இராப்போஜனம் பண்ணுகிறதல்ல என்று பவுல் தெளிவாகச் சொல்லுகிறார்.

அன்பின் விருந்தில் பங்குபெறுகிறவர்கள் தங்கள் அன்பை மற்றவர்கள்மீது வெளிப்படுத்திக் காண்பிக்கவேண்டும். இதற்காகவே சபையில் அன்பின் விருந்து நடத்தப்படுகிறது. ஆனால் சபையில் ஒரு சிலர் எந்த நோக்கத்திற்காக அன்பின் விருந்து நடத்தப்படுகிறதோ, அந்த நோக்கத்தையே கெடுத்துப்போடுகிறார்கள். இப்படிப்பட்டவர்கள் மற்றவர்கள் சாப்பிடுவதற்கு முன்பாக முந்தி சாப்பிடுகிறார்கள். மற்றவர்கள் பசியாயிருக்கும்போது இவர்கள் புசித்து வெறித்திருக்கிறார்கள்.

புசிப்பதற்கும் குடிப்பதற்கும் இவர்களுக்கு வீடுகள் இருக்கிறது. ஆனால் இவர்களோ தேவனுடைய சபையை அசட்டைபண்ணி இல்லாதவர்களை வெட்கப்படுத்துகிறார்கள். அவர்கள் வெறித்துப் புசிக்கவேண்டுமென்றால், தங்கள் வீடுகளிலேயே, தங்கள் இஷ்டப்படி புசிக்கலாம். சபையில் வந்து, ஒருவன் பசியாயிருக்கும்போது, இவர்கள் வெறித்துப் புசிப்பது சபைக்கு மகிமையைத் தராது. மார்க்கக் காரியங்கள் எல்லாவற்றையும் பயபக்தியாய் ஆசரிக்கவேண்டும்.

## கர்த்தருடைய இராப்போஜனம் 1கொரி 11 : 23-34

**1கொரி 11:23. நான் உங்களுக்கு ஒப்புவித்ததைக் கர்த்தரிடத்தில் பெற்றுக்கொண்டேன்; என்னவெனில், கர்த்தராகிய இயேசு தாம் காட்டிக்கொடுக்கப்பட்ட அன்று இராத்திரியிலே அப்பத்தை எடுத்து,**

**1கொரி 11:24. ஸ்தோத்திரம் பண்ணி, அதைப்பிட்டு; நீங்கள் வாங்கிப் புசியுங்கள், இது உங்களுக்காகப் பிட்கப்படுகிற என்னுடைய சரீரமாயிருக்கிறது; என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள் என்றார்.**

**1கொரி 11:25.** போஜனம் பண்ணினபின்பு, அவர் அந்தப்படியே பாத்திரத்தையும் எடுத்து: இந்தப் பாத்திரம் என் இரத்தத்தினாலாகிய புதிய உடன்படிக்கையாயிருக்கிறது; நீங்கள் இதைப் பானம்பண்ணும் போதெல்லாம் என்னை நினைவுகூரும்படி இதைச்செய்யுங்கள் என்றார்.

**1கொரி 11:26.** ஆகையால் நீங்கள் இந்த அப்பத்தைப் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம்பண்ணும் போதெல்லாம் கர்த்தர் வருமளவும் அவருடைய மரணத்தைத் தெரிவிக்கிறீர்கள்.

**1கொரி 11:27.** இப்படியிருக்க, எவன் அபாத்திரமாய்க் கர்த்தருடைய அப்பத்தைப் புசித்து, அவருடைய பாத்திரத்தில் பானம்பண்ணுகிறானோ, அவன் கர்த்தருடைய சரீரத்தையும் இரத்தத்தையும் குறித்துக் குற்றமுள்ளவனாயிருப்பான்.

**1கொரி 11:28.** எந்த மனுஷனும் தன்னைத்தானே சோதித்தறிந்து, இந்த அப்பத்தில் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம் பண்ணக்கடவன்.

**1கொரி 11:29.** என்னத்தினாலெனில், அபாத்திரமாய்ப் போஜனபானம் பண்ணுகிறவன், கர்த்தருடைய சரீரம் இன்னதென்று நிதானித்து அறியாததினால், தனக்கு ஆக்கினைத் தீர்ப்பு வரும்படி போஜனபானம் பண்ணுகிறான்.

**1கொரி 11:30.** இதினிமித்தம், உங்களில் அநேகர் பலவீனரும் வியாதியுள்ளவர்களுமாயிருக்கிறார்கள்; அநேகர் நித்திரையும் அடைந்திருக்கிறார்கள்.

**1கொரி 11:31.** நம்மை நாமே நிதானித்து அறிந்தால் நாம் நியாயந்தீர்க்கப்படோம்.

**1கொரி 11:32.** நாம் நியாயந்தீர்க்கப்படும் போது உலகத்தோடே ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படாதபடிக்கு, கர்த்தராலே சிட்சிக்கப்படுகிறோம்.

**1கொரி 11:33.** ஆகையால், என் சகோதரரே, நீங்கள் போஜனம் பண்ணக் கூடிவரும்போது, ஒருவருக்காக ஒருவர் காத்திருங்கள்.

**1கொரி 11:34.** நீங்கள் ஆக்கினைக் கேதுவாகக் கூடிவராதபடிக்கு, ஒருவனுக்குப் பசியிருந்தால் வீட்டிலே சாப்பிடக்கடவன். மற்றக் காரியங்களை நான் வரும்போது திட்டம் பண்ணுவேன்.

அப்போஸ்தலர் பவுல் கர்த்தருடைய இராப்போஜனத்தைப்பற்றிச் சொல்லும்போது, இந்த நியமத்தைக் கர்த்தரிடத்தில் தான் பெற்றுக்கொண்டதாகவும், அதையே அவர் கொரிந்தியருக்கு ஒப்புவித்ததாகவும் சொல்லுகிறார். கர்த்தருடைய இராப் போஜனத்தை, இயேசுகிறிஸ்துவானவரே ஸ்தாபனம் பண்ணியிருக்கிறார். கர்த்தராகிய இயேசு தாம் காட்டிக் கொடுக்கப்பட்ட அந்த இராத்திரியிலே இராப்போஜனம் பண்ணுவதை ஸ்தாபித்தார். அவர் பாடுகளுக்குள் பிரவேசிப்பதற்கு முன்பாக இந்த நியமத்தை ஸ்தாபனம்பண்ணியிருக்கிறார்.

கர்த்தராகிய இயேசுகிறிஸ்து இராப்போஜனத்தை ஆசரித்த விவரம் இங்கு விரிவாக சொல்லப்பட்டிருக்கிறது. இயேசுகிறிஸ்து அப்பத்தை எடுத்து ஸ்தோத்திரம் பண்ணி, அதைப் பிட்டார். அப்பத்தைப் பிட்டு "நீங்கள் வாங்கி புசியுங்கள் இது உங்களுக்காக பிட்கப்படுகிற என்னுடைய சரீரமாயிருக்கிறது. என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள்" என்றார்.

போஜனம் பண்ணினபின்பு, அவர் அந்தப்படியே பாத்திரத்தையும் எடுத்து: இந்தப் பாத்திரம் என் இரத்தத்தினாலாகிய புதிய உடன்படிக்கையாயிருக்கிறது; நீங்கள் இதைப் பானம்பண்ணும் போதெல்லாம் என்னை நினைவுகூரும்படி இதைச்செய்யுங்கள் என்றார் (1கொரி 11:24,25).

கர்த்தருடைய இராப்போஜனத்தில் அப்பமும் பாத்திரமும் பிரத்தியட்சமான அடையாளங்களாக இருக்கிறது. அப்பம் புசிக்கப்படுகிறது. இந்த அப்பம் கர்த்தருடைய சரீரம் என்றும் அழைக்கப்படுகிறது. இராப்போஜனத்தில் அப்பமும் பாத்திரமும் பயன்படுத்தப்படுகிறது. இது பரிசுத்தமான போஜனம்.

இயேசுகிறிஸ்து அந்தப்படியே பாத்திரத்தையும் எடுத்தார் என்று எழுதப்பட்டிருக்கிறது. பாத்திரத்திற்குள் என்ன இருந்தது என்று விவரமாகச் சொல்லப்படவில்லை. ஆனால் இந்தப் பாத்திரம் இயேசுகிறிஸ்துவினுடைய இரத்தத்தினாலாகிய புதிய உடன்படிக்கையாயிருக்கிறது.

இராப்போஜனத்தில் அப்பம் பிட்கப்பட்டு புசிக்கப்படுகிறது. பாத்திரத்தில் பானம்பண்ணப்படுகிறது. இவை இரண்டும் பிரத்தியட்சமான வெளிப்படையான அடையாளங்கள். இவை கிறிஸ்துவின் சரீரத்திற்கும் அவருடைய இரத்தத்திற்கும் அடையாளம். அப்பம் பிட்கப்படுவது இயேசுகிறிஸ்துவினுடைய பிட்கப்பட்ட சரீரத்திற்கு அடையாளம். பாத்திரமானது இயேசுகிறிஸ்து சிந்திய இரத்தத்திற்கு அடையாளம்.

இயேசுகிறிஸ்து அப்பத்தை எடுத்து, ஸ்தோத்திரம்பண்ணி அதைப்பிட்டு தம்முடைய சீஷர்கள் கையில் கொடுத்து, இதை வாங்கிப் புசியுங்கள் என்று சொன்னார். அந்தப்படியே பாத்திரத்தையும் எடுத்து, தம்முடைய சீஷர்களிடம் இதைப் பானம்பண்ணுமாறு சொன்னார். இந்த நியமத்தின் மூலமாக, கர்த்தராகிய இயேசுகிறிஸ்து தம்முடைய சரீரத்தையும், இரத்தத்தையும், தம்முடைய சீஷரிடத்தில் கொடுக்கிறார். இயேசுகிறிஸ்துவின் மரணத்தின் மூலமாய் உண்டாகக்கூடிய எல்லா ஆசீர்வாதங்களும், இதன் மூலமாய் அவருடைய சீஷர்களுக்குக் கொடுக்கப்படுகிறது.

இயேசுகிறிஸ்துவின் சீஷர்களைப் போல, கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாமும், இக்காலத்தில், கர்த்தருடைய பந்தியில் பங்குபெறும் போதெல்லாம், நமக்கும் அதே ஆசீர்வாதம் கொடுக்கப்படுகிறது. நாம் கர்த்தருடைய பந்தியில் பங்குபெற்று, அப்பத்தைப் புசித்து, பாத்திரத்தில் பானம்பண்ணும் போதெல்லாம், அவருடைய மரணத்தைத் தெரிவிக்கிறோம். கர்த்தரை நம்முடைய இரட்சகராகவும், ஆண்டவராகவும் அங்கீகரிக்கிறோம். நம்மை இயேசு கிறிஸ்துவிடம் ஒப்புக்கொடுக்கிறோம். நாம் கிறிஸ்துவுக்காக ஜீவிப்போம் என்று அங்கீகரிக்கிறோம்.

இயேசுகிறிஸ்துவை நினைவுகூரும் படியாகவே நாம் கர்த்தருடைய பந்தியில் பங்குபெறுகிறோம். கர்த்தராகிய இயேசுகிறிஸ்து நமக்காக கல்வாரி சிலுவையில் தம்முடைய ஜீவனை ஒப்புக்கொடுத்தார். கிறிஸ்துவின் மரணம் நம்முடைய சிந்தையில் மறந்துபோகாமல், பசுமையான நினைவாக இருக்கவேண்டும். கிறிஸ்துவின் மரணம் மாத்திரமல்ல. அவர் நமக்காக பிதாவினிடத்தில் பரிந்து பேசுவதையும் நாம் மறந்துபோகாமல் நினைவுகூரவேண்டும். அப்பத்தைப் புசித்து, பாத்திரத்தில் பானம்பண்ணும்போதெல்லாம் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவையும், அவர் நமக்காக மரித்ததையும் நினைவுகூருகிறோம்.

இயேசுகிறிஸ்துவின் சிலுவை மரணம் மிகவும் விசேஷமானது. நம்முடைய பாவங்களை நீக்கிப்போடுவதற்காக அவர் பாவநிவாரண பலியாக மரித்தார். கிறிஸ்துவின் கிருபையினால் நமக்கு மீட்பு உண்டாயிருக்கிறது. நாம் கிறிஸ்துவின் மரணத்தைத் தெரிவிக்கும்போது, அவர் நமக்காக பாவநிவாரண பலியாக மரித்தார் என்பதையும் தெரிவிக்கிறோம்.

கர்த்தருடைய பந்தியில் அப்பத்தைப் புசித்து, பாத்திரத்தில் பானம்பண்ணும் போதெல்லாம், நாம் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை நம்முடைய ஆண்டவராகவும், இரட்சகராகவும் அங்கீகாரம் பண்ணுகிறோம். நம்முடைய இரட்சிப்புக்கு நாம் இரட்சகராகிய இயேசுகிறிஸ்துவை மாத்திரமே சார்ந்திருக்கிறோம் என்பதை நினைவுகூருகிறோம். கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய் தேவனுடைய சமுகத்தில் நாம் அங்கீகரிக்கப்படுகிறோம் என்பதையும் அறிவிக்கிறோம். நாம் கிறிஸ்துவுக்குரியவர்கள் என்பதையும் இதன் மூலம் சாட்சியாய்ச் சொல்லுகிறோம்.

நம்முடைய சரீரத்தின் பசியைப் போக்குவதற்காக நாம் அன்றாடம் போஜனம்பண்ணுகிறோம். ஒவ்வொரு நாளிலும் ஒன்றுக்கு மேற்பட்ட தடவை புசிக்கிறோம். அதுபோலவே கர்த்தருடைய இராப்போஜனத்தில் நாம் அடிக்கடி பங்குபெறவேண்டும். நமக்கு ஆவிக்குரிய போஜனம் தேவை. எப்போதாவது ஒரு தடவை மாத்திரம் ஆவிக்குரிய போஜனத்தைப் பெற்றுக்கொண்டால் போதாது. நாம் அடிக்கடி ஆவிக்குரிய போஜனம்பண்ணவேண்டும்.

வாழ்க்கையில் ஒரு தடவை மாத்திரம் கர்த்தருடைய பந்தியில் பங்குபெற்றால் போதுமென்று நினைத்து, பந்தியில் பங்குபெறுவதை நிறுத்திவிடக்கூடாது. கர்த்தர் வருமளவும் அவரை நினைவுகூரும்படியாக, கர்த்தருடைய பந்தியில் அப்பத்தைப் புசித்து பாத்திரத்தில் பானம்பண்ணவேண்டும். கர்த்தருடைய பந்தி நமக்கு தற்காலிகமான நியமமாகக் கொடுக்கப்படவில்லை. இது கர்த்தர் வருமளவும், நித்திய நியமமாக நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

கர்த்தருடைய பந்தியில் பங்குபெறுகிறவர்கள் இருதயத்தில் பரிசுத்தத்தோடு பங்குபெறவேண்டும். கர்த்தருடைய அப்பத்தை அபாத்திரமாய்ப் புசிக்கிறவனுக்கும், அவருடைய பாத்திரத்தில் அபாத்திரமாய் பானம் பண்ணுகிறவனுக்கும் ஆக்கினைத்தீர்ப்பு வரும். அவன் கர்த்தருடைய சரீரத்தையும் இரத்தத்தையும் குறித்து குற்றமுள்ளவனாயிருப்பான் (1கொரி 11:27).

இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தினால் நம்முடைய பாவங்கள் கழுவப்படும். கர்த்தருடைய பந்தியில் அபாத்திரமாய்ப் பங்குபெற்றால், நம்முடைய பாவம் கழுவப்பட்டு நாம் சுத்திகரிக்கப்படுவதற்குப் பதிலாக, கர்த்தருடைய இரத்தத்தைக் குறித்து நாம் குற்றமுள்ளவர்களாயிருப்போம்.

கர்த்தருடைய பந்தியில் அபாத்திரமாய் போஜனபானம் பண்ணுகிறவன், தனக்கு ஆக்கினைத்தீர்ப்பு வரும்படி போஜனபானம் பண்ணுகிறான் (1கொரி 11:29). இப்படிப்பட்டவர்கள் தேவனை எரிச்சலடையச் செய்கிறார்கள். தங்களுக்குத் தாங்களே ஆக்கினையையும், தண்டனையையும் வருவித்துக்கொள்கிறார்கள்.

கர்த்தருடைய பந்தியில் அபாத்திரமாய்ப் பங்குபெற்றால் ஆக்கினைத்தீர்ப்பு வரும் என்று நினைத்து, பயந்து, கர்த்தருடைய பந்தியில் பங்குபெறாமல், அதை விட்டு விலகி ஒதுங்கிப் போய்விடக்கூடாது. நம்முடைய மனதைச் சோர்வடையச் செய்வதற்காக பவுல் இந்த எச்சரிப்பின் வார்த்தைகளை எழுதவில்லை. கர்த்தருடைய பந்தியில் பங்குபெறுவது விசுவாசிகளாகிய நமக்கு கிடைத்திருக்கிற மிகப்பெரிய சிலாக்கியம்.

கர்த்தர் வருமளவும், கர்த்தருடைய அப்பத்தைப் புசித்து, அவருடைய பாத்திரத்தில் பானம்பண்ணுவது நம்முடைய கடமை. இதன்மூலமாய் நமக்கு சரீரத்திற்குரிய ஆசீர்வாதங்களும், ஆவிக்குரிய ஆசீர்வதங்களும் கிடைக்கும். நாம் இந்த ஆசீர்வாதங்களை பெற்றுக் கொள்ளக்கூடாதபடிக்கு, சாத்தான் நமக்கு விரோதமாக கிரியை செய்வான். கர்த்தருடைய பந்தியில் நாம் பங்குபெறாதவாறு நம்மைத் தடைபண்ணுவான். நம்முடைய இருதயத்தைச் சோர்வடையச்செய்வான்.

கர்த்தர் வருமளவும் அவருடைய பந்தியில் நாம் பங்குபெறவேண்டும். கர்த்தருடைய அப்பத்தைப் புசித்து அவருடைய பாத்திரத்தில் பானம்பண்ணி, கர்த்தர் வருமளவும் அவரை நினைவுகூரவேண்டும் அவருடைய மரணத்தைத் தெரிவிக்கவேண்டும்.

கொரிந்தியர்கள் கர்த்தருடைய பந்தியில் பங்குபெற வரும்போது கர்த்தருடைய சரீரம் இன்னதென்று நிதானித்து அறியாமல், போஜனபானம் பண்ணுகிறார்கள். தங்களுக்கு ஆக்கினைத்தீர்ப்பு வரும்படி கர்த்தருடைய பந்தியில் பங்குபெறுகிறார்கள். கர்த்தருடைய பந்திக்கும் உலகப்பிரகாரமான பந்திக்கும் வித்தியாசம் தெரியாமலிருக்கிறார்கள். இதினிமித்தம் அவர்களில் அநேகர் பலவீனரும், வியாதியுள்ளவர்களுமாயிருக் கிறார்கள். அநேகர் நித்திரையும் அடைந்திருக்கிறார்கள் (1கொரி 11:30).

நாம் கர்த்தரால் சிட்சிக்கப்படும்போதும் அவரால் ஆசீர்வதிக்கப்படுகிறோம். நாம் நியாயந்தீர்க்கப்படும்போது உலகத்தோடே ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படக் கூடாது. அதற்காகவே கர்த்தராலே சிட்சிக்கப்படுகிறோம். நம்மை நாமே நிதானித்து அறிந்தால் நாம் நியாந்தீர்க்கப் படோம். நாம் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படக்கூடாது என்பதற்காகவே கர்த்தர் நம்மைச் சிட்சிக்கிறார்.

கர்த்தர் யாரை அதிகமாய் நேசிக்கிறாரோ, அவர்கள் கெட்டுக்போகக்கூடாது என்பதற்காகவும், அவர்கள் உலகத்தோடே ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படக் கூடாது என்பதற்காகவும், கர்த்தர் அவர்களை அவ்வப்போது சிட்சிக்கிறார். பிள்ளைகள் சீர்கெட்டுப்போகக்கூடாது என்பதற்காக பெற்றோர் பிரம்பைக் கையாளுகிறார்கள். அதை மென்மையாகப் பயன்படுத்துகிறார்கள். அதுபோலவே கர்த்தர் நம்மை சிட்சிக்கும்போது, ஒரு தகப்பன் தன் பிள்ளையை அன்பாய் நேசித்து திருத்துவதுபோல நம்மை திருத்துகிறார். இப்போது நாம் சிட்சிக்கப்படவில்லையென்றால், முடிவில் அழிந்துபோவது நிச்சயம். நாம் நித்தியமாய் அழிந்துபோகக்கூடாது என்பதற்காகவே கர்த்தர் நம்மை சிட்சிக்கிறார்.

கர்த்தருடைய பந்தியில் பங்குபெற வருகிறவர்கள் தங்களைத் தாங்களே நிதானித்து அறியவேண்டும். கர்த்தருடைய பரிசுத்த பந்தியில் பங்குபெற வரும்போது நம்முடைய இருதயத்தை நாம் சோதித்துப் பார்க்கவேண்டும். கர்த்தருடைய பரிசுத்த நியமத்தில் சுத்தமுள்ள இருதயத்தோடு பங்குபெறவேண்டும்.

கலியாண விருந்தில் கலியாண வஸ்திரம் தரித்து, அந்தப் பந்தியில் பங்குபெறுவதுபோல, கர்த்தருடைய பரிசுத்தமான பந்தியில், நாம் பரிசுத்தமான இருதயத்தோடு பங்குபெறவேண்டும். நம்மை நாமே நிதானித்து அறியவேண்டும். நம்மிடத்தில் பாவம் காணப்படுமானால், கர்த்தருடைய சமுகத்தில் நம்முடைய பாவங்கள் மன்னிக்கப்பட வேண்டுமென்று பயபக்தியோடு அறிக்கை செய்யவேண்டும். தன் பாவங்களை மறைக்கிறவன் வாழ்வடையமாட்டான். அவற்றை அறிக்கை செய்து விட்டுவிடுகிறவனோ தேவனுடைய சமுகத்தில் இரக்கம் பெறுவான்.

நாம் மற்றவர்களை குற்றவாளிகளென்று தீர்க்கக்கூடாது. நாம் மற்றவர்களைத் தீர்க்கிற தீர்ப்பின்படியே நாமும் தீர்க்கப்படுவோம். மற்றவர்களை நாம் குற்றவாளிகளாகத் தீர்க்கும்போது, நாமும் குற்றவாளிகளென்று தீர்க்கப்படுவோம். நாம் மற்றவர்களுக்கு அளக்கிற அளவின்படியே நமக்கும் அளக்கப்படும் (மத் 7:1,2). ஆகையினால் நாம் மற்றவர்களை நியாயந்தீர்ப்பதற்குப் பதிலாக, நம்மை நாமே நிதானித்து அறிந்துகொள்ளவேண்டும். அப்போது நாம் குற்றவாளிகளென்று நியாயந்தீர்க்கப்பட மாட்டோம். பிதாவின் ஆக்கினைத் தீர்ப்புக்குத் தப்பித்துக்கொள்வோம்.

கர்த்தருடைய பந்தியில் பங்குபெறுகிறவர்கள் பரிசுத்தத்தோடும், ஒழுக்கத்தோடும், கிரமத்தோடும் பங்குபெறவேண்டும். போஜனம்பண்ண கூடிவரும்போது விசுவாசிகள் ஒருவருக்காக ஒருவர் காத்திருக்கவேண்டும். பசிக்காக புசிப்பதும், சந்தோஷத்திற்காகப் புசிப்பதும் வீட்டில் நடைபெறவேண்டிய காரியம். ஒருவனுக்குப் பசியாயிருந்தால் அவன் வீட்டிலே சாப்பிடக்கடவன் என்று பவுல் சொல்லுகிறார்.

கர்த்தர் நமக்கு நியமித்திருக்கிற பரிசுத்தமான கடமைகளை பரிசுத்தமாய் நிறைவேற்றவேண்டும். நம்முடைய கடமைகளை அசுத்தப்படுத்தினால் நமக்கு ஆக்கினைத்தீர்ப்பு உண்டாகும். கர்த்தருடைய பந்தியில் போஜனம் பண்ணக்கூடிவருவது நம்முடைய ஆசீர்வாதத்திற்கு ஏதுவானதாயிருக்க வேண்டும். நம்முடைய ஆக்கினைக்கு ஏதுவாக நாம் கூடிவந்துவிடக்கூடாது. பரிசுத்தமான காரியங்களை பரிசுத்தமாய் ஆசரித்தால் நமக்கு ஆசீர்வாதமுண்டு. அவற்றை பரிசுத்தமாய் ஆசரிக்கவில்லையென்றால் நமக்கு ஆக்கினைத்தீர்ப்பே உண்டு.

## 12 அதிகாரம்

ஆவிக்குரிய வரங்களைக் குறித்து கொரிந்துவிலுள்ள விசுவாசிகள் அறிந்திருக்கவேண்டுமென்று பவுல் விரும்புகிறார். வரங்களில் வித்தியாசங்கள் உண்டு. எல்லா வரங்களும் தேவனிடமிருந்தே நமக்கு வருகிறது (1கொரி 12:1-11). பல்வேறு விதமான வரங்களை விளக்குவதற்காக பவுல் மனுஷசரீரத்தின் அவயவங்களை உவமையாகப் பயன்படுத்திச் சொல்லுகிறார் (1கொரி 12:12-26). சபையானது கிறிஸ்துவின் சரீரமாயிருக்கிறது (1கொரி 12:27-30). நாம் மேலான வரங்களை நாடவேண்டும் (1கொரி 12:31).

### ஆவிக்குரிய வரங்கள் 1கொரி 12 : 1-11

**1கொரி 12:1. அன்றியும், சகோதரரே, ஆவிக்குரியவரங்களைக் குறித்து நீங்கள் அறியாதிருக்க எனக்கு மனதில்லை.**

**1கொரி 12:2. நீங்கள் அஞ்ஞானிகளாயிருந்த போது ஏவப்பட்டபடியே, ஊமையான விக்கிரகங்களிடத்தில் மனதைச் செலுத்தினீர்களென்று உங்களுக்குத் தெரியுமே.**

**1கொரி 12:3. ஆதலால், தேவனுடைய ஆவியினாலே, பேசுகிற எவனும் இயேசுவைச் சபிக்கப்பட்டவனென்று சொல்லமாட்டானென்றும், பரிசுத்த ஆவியினாலேயன்றி இயேசுவைக் கர்த்தரென்று ஒருவனும் சொல்லக் கூடாதென்றும், உங்களுக்குத் தெரிவிக்கிறேன்.**

**1கொரி 12:4. வரங்களில் வித்தியாசங்கள் உண்டு, ஆவியானவர் ஒருவரே.**

**1கொரி 12:5. ஊழியங்களிலேயும் வித்தியாசங்கள் உண்டு, கர்த்தர் ஒருவரே.**

**1கொரி 12:6. கிரியைகளிலேயும் வித்தியாசங்கள் உண்டு, எல்லாருக்குள்ளும் எல்லாவற்றையும் நடப்பிக்கிற தேவன் ஒருவரே.**

**1கொரி 12:7. ஆவியினுடைய அநுக்கிரகம் அவனவனுடைய பிரயோஜனத்திற்கென்று அளிக்கப் பட்டிருக்கிறது.**

**1கொரி 12:8. எப்படியெனில், ஒருவனுக்கு ஆவியினாலே ஞானத்தைப் போதிக்கும் வசனமும், வேறொருவனுக்கு அந்த ஆவியினாலேயே அறிவை உணர்த்தும் வசனமும்,**

**1கொரி 12:9. வேறொருவனுக்கு அந்த ஆவியினாலேயே விசுவாசமும், வேறொருவனுக்கு அந்த ஆவியினாலேயே குணமாக்கும் வரங்களும்,**

**1கொரி 12:10. வேறொருவனுக்கு அற்புதங்களைச் செய்யும் சக்தியும், வேறொருவனுக்குத் தீர்க்கதரிசனம் உரைத்தலும், வேறொருவனுக்கு ஆவிகளைப் பகுத்தறிதலும், வேறொருவனுக்கு பற்பல பாஷைகளைப் பேசுதலும், வேறொருவனுக்கு பாஷைகளை வியாக்கியானம் பண்ணுதலும் அளிக்கப்படுகிறது.**

**1கொரி 12:11. இவைகளையெல்லாம் அந்த ஒரே ஆவியானவர் நடப்பித்து, தமது சித்தத்தின்படியே அவனவனுக்குப் பகிர்ந்து கொடுக்கிறார்.**

### நீங்கள் அறியாதிருக்க எனக்கு மனதில்லை

**அன்றியும், சகோதரரே, ஆவிக்குரியவரங்களைக் குறித்து நீங்கள் அறியாதிருக்க எனக்கு மனதில்லை (1கொரி 12:1).**

கர்த்தர் கொரிந்து சபையிலுள்ள விசுவாசிகளுக்கு ஏராளமான வரங்களைக் கொடுத்திருக்கிறார். ஆனால் அவர்களோ அந்த வரங்களைத் தவறாகப் பயன் படுத்துகிறார்கள். அவிசுவாசிகளுடைய பாவங்களை அவர்களுக்கு உணர்த்துவதற்காகவும், சுவிசேஷத்தைப் பிரசங்கம்பண்ணுவதற்காகவும் கர்த்தர் வரங்களைக் கொடுக்கிறார். வரங்கள் வேறு. கிருபை வேறு. தேவன் இவை இரண்டையுமே தம்முடைய பிள்ளைகளுக்கு இலவசமாகக் கொடுக்கிறார்.

தேவகிருபையை பெற்றிருக்கிறவர்கள் இரட்சிக்கப்படுகிறார்கள். ஆத்துமாக்களின் இரட்சிப்புக்காக தேவன் அவர்களுக்குக் கிருபையைக் கொடுக்கிறார். இரட்சிக்கப்பட்டவர்கள் மற்றவர்களை இரட்சிப்புக்குள்ளாக வழிநடத்தவேண்டும். கர்த்தருக்கு ஊழியம் செய்யவேண்டும். இந்த ஊழியத்தை வல்லமையோடு செய்வதற்காக தேவன் ஊழியக்காரர்களுக்கு வரங்களைக் கொடுக்கிறார். கொரிந்து சபையில் அநேக வரங்கள் கிரியை செய்கிறது. ஆனால் விசுவாசிகளோ அவற்றை சரியாகப் பயன்படுத்தவில்லை.

ஆவிக்குரிய வரங்கள் தங்களுக்கு எங்கிருந்து வந்திருக்கிறது என்பதும், அவற்றை எப்படிப் பயன்படுத்தவேண்டும் என்பதும் விசுவாசிகளுக்குத் தெரியவில்லை. எல்லா வரங்களும் தேவனிடமிருந்தே வந்திருக்கிறது. இவற்றைத் தேவனுடைய நாமமகிமைக்காகவே பயன்படுத்த வேண்டும். ஆனால் கொரிந்தியரோ ஆவிக்குரிய வரங்களைப்பற்றி அறியாதவர்களாக இருக்கிறார்கள். ஆவிக்குரிய சத்தியங்களை சரியாய் அறிந்துகொள்ளும்போது, நமக்கு அநேக ஆசீர்வாதங்கள் உண்டாகும். ஆவியின் வரங்களைப் பெற்றிருக்கிறவர்கள் அவற்றைப்பற்றி நன்றாக அறிந்திருக்க வேண்டும். அப்போதுதான் அவற்றைத் தேவநாம மகிமைக்காகப் பயன்படுத்த முடியும்.

## அஞ்ஞானிகள்

**நீங்கள் அஞ்ஞானிகளாயிருந்தபோது ஏவப்பட்டபடியே, ஊமையான விக்கிரகங்களிடத்தில் மனதைச் செலுத்தினீர்களென்று உங்களுக்குத் தெரியுமே (1கொரி 12:2).**

அஞ்ஞானிகள் என்னும் வார்த்தை புறஜாதியாரைக் குறிக்கிறது. கொரிந்து சபையிலுள்ள விசுவாசிகள் ஒரு காலத்தில் புறஜாதியாராக இருந்தார்கள். அப்போது அவர்கள் ஊமையான விக்கிரகங்களிடத்தில் தங்கள் மனதைச் செலுத்தினார்கள். அப்போது அவர்களிடத்தில் ஆவிக்குரிய வரங்கள் எதுவும் இல்லை. கிறிஸ்துவின் ஆவியை உடையவர்களிடத்தில்தான் ஆவிக்குரிய வரங்கள் இருக்கும்.

அவர்கள் அஞ்ஞானியாக இருந்தபோது தேவனுடைய காணியாட்சிக்குப் புறம்பானவர்களாகயிருந்தார்கள். அவர்கள் அப்போது தேவனுடைய விசேஷித்த ஜனங்களல்ல. யூதர்கள் மாத்திரமே தேவனுடைய காணியாட்சிக்குட்பட்டு, அவருக்கு விசேஷித்த ஜனமாகயிருந்தார்கள். தேவன் யூதர்களைத் தெரிந்தெடுத்தார். தம்முடைய விசேஷித்த ஆசீர்வாதங்களையும், கிருபைகளையும், சிலாக்கியங்களையும் அவர்களுக்குக் காண்பித்தார். அவர்கள் மெய்யான தேவனை ஆராதனை செய்தார்கள். அக்காலத்தில் யூதரைத் தவிர மற்ற ஜாதியாரெல்லாரும் தேவனுடைய உடன்படிக்கைக்குட்படாத புறஜாதியாராயிருந்தார்கள்.

இரட்சிக்கப்படுவதற்கு முன்பு விசுவாசிகளின் பழைய ஜீவியத்தைப்பற்றி பவுல் இவ்வாறு சொல்லுகிறார் "ஆனபடியினால் முன்னே மாம்சத்தின்படி புறஜாதியாராயிருந்து, மாம்சத்தில் கையினாலே செய்யப்படுகிற விருத்த சேதனமுடையவர்களால் விருத்த சேதனமில்லாதவர்களென்னப்பட்ட நீங்கள், அக்காலத்திலே கிறிஸ்துவைச் சேராதவர்களும், இஸ்ரவேலுடைய காணியாட்சிக்குப் புறம்பானவர்களும், வாக்குத்தத்தத்தின் உடன்படிக்கைகளுக்கு அந்நியரும், நம்பிக்கையில்லாதவர்களும், இவ்வுலகத்தில் தேவனற்றவர்களுமாயிருந்தீர்களென்று நினைத்துக் கொள்ளுங்கள். முன்னே தூரமாயிருந்த நீங்கள் இப்பொழுது கிறிஸ்து இயேசுவுக்குள் கிறிஸ்துவின் இரத்தத்தினாலே சமீபமானீர்கள்" (எபே 2:11-13).

கொரிந்து சபையிலுள்ள விசுவாசிகள் தாங்கள் ஒரு காலத்தில் புறஜாதியாராயிருந்ததை நினைவுகூர வேண்டும். தற்பொழுது கர்த்தரை ஆராதிக்க தங்களுக்குக் கிடைத்திருக்கிற சிலாக்கியத்திற்காக, அவர்கள் கர்த்தருக்கு நன்றியுள்ளவர்களாக இருக்கவேண்டும். ஊமையான விக்கிரகங்களிடத்தில் இவர்கள் ஒரு காலத்தில் தங்கள் மனதைச் செலுத்தினார்கள். இப்போதோ பரிசுத்த ஆவியானவர் இவர்களுடைய மனதில் நிரம்பியிருக்கிறார். இவர்களைத் தம்முடைய வரங்களினால் நிரப்பியிருக்கிறார்.

சங்கீதக்காரர் விக்கிரங்களைப் பற்றியும், விக்கிரகாராதனைக்காரரைப் பற்றியும் இவ்வாறு சொல்லுகிறார். "அவர்களுடைய விக்கிரகங்கள் வெள்ளியும் பொன்னும், மனுஷருடைய கைவேலையுமாயிருக்கிறது. அவைகளுக்கு வாயிருந்தும் பேசாது; அவைகளுக்குக் கண்களிருந்தும் காணாது. அவைகளுக்குக் காதுகளிருந்தும் கேளாது; அவைகளுக்கு மூக்கிருந்தும் முகராது. அவைகளுக்குக் கைகளிருந்தும் தொடாது; அவைகளுக்குக் கால்களிருந்தும் நடவாது; தங்கள் தொண்டையால் சத்தமிடவும் மாட்டாது. அவைகளைப் பண்ணுகிறவர்களும், அவைகளை நம்புகிறவர்கள் யாவரும், அவைகளைப்போலவே இருக்கிறார்கள்" (சங் 115:4-8).

## தேவனுடைய ஆவி

**ஆதலால், தேவனுடைய ஆவியினாலே, பேசுகிற எவனும் இயேசுவைச் சபிக்கப்பட்டவனென்று சொல்லமாட்டானென்றும், பரிசுத்த ஆவியினாலேயன்றி இயேசுவைக் கர்த்தரென்று ஒருவனும் சொல்லக் கூடாதென்றும், உங்களுக்குத் தெரிவிக்கிறேன் (1கொரி 12:3).**

எல்லா வரங்களும் தேவனிடமிருந்தே வந்திருக்கிறது. பரிசுத்த ஆவியானவரே வரங்களைக் கொடுக்கிறவர். தேவனுடைய ஆவியினாலே பேசுகிற எவனும் இயேசுவைச் சபிக்கப்பட்டவனென்று சொல்லமாட்டான். யூதரும் புறஜாதியாரும் இயேசுகிறிஸ்துவுக்கு விரோதமாக தூஷண வார்த்தைகளைப் பேசுகிறார்கள். இயேசுகிறிஸ்து சிலுவை மரத்தில் தொங்கி சபிக்கப்பட்டவர் என்று தூஷிக்கிறார்கள். இவர்கள் தேவனுடைய ஆவியினாலோ, அல்லது தேவனுடைய ஆவியானவரின் வல்லமையினாலோ இவர்கள் பேசவில்லை.

இயேசுகிறிஸ்துவே தேவனுக்கும் மனுஷருக்கும் நடுவே மத்தியஸ்தராயிருக்கிறார். பிதாவாகிய தேவனிடத்தில் அவர் நமக்காகப் பரிந்து பேசுகிறார். ஆகையினால் பரிசுத்த ஆவியினாலேயன்றி இயேசுவைக் கர்த்தரென்று ஒருவனும் சொல்லக்கூடாது என்று பவுல் தெளிவுபடுத்துகிறார். இயேசுகிறிஸ்துவை கர்த்தரென்று சொல்லுகிறவன், அவரைத் தன்னுடைய ஜீவியத்திற்கு ஆண்டவராக ஏற்றுக்கொள்ளவேண்டும். அவருடைய உபதேசத்திற்குக் கீழ்ப்படிந்து ஜீவிக்கவேண்டும். இந்த விசுவாசம் பரிசுத்த ஆவியினால் மாத்திரமே உண்டாகும்.

**வரங்களில் வித்தியாசங்கள் உண்டு**

**வரங்களில் வித்தியாசங்கள் உண்டு, ஆவியானவர் ஒருவரே. ஊழியங்களிலேயும் வித்தியாசங்கள் உண்டு, கர்த்தர் ஒருவரே. கிரியைகளிலேயும் வித்தியாசங்கள் உண்டு, எல்லாருக்குள்ளும் எல்லாவற்றையும் நடப்பிக்கிற தேவன் ஒருவரே. ஆவியினுடைய அநுக்கிரகம் அவனவனுடைய பிரயோஜனத்திற்கென்று அளிக்கப்பட்டிருக்கிறது. எப்படியெனில், ஒருவனுக்கு ஆவியினாலே ஞானத்தைப் போதிக்கும் வசனமும், வேறொருவனுக்கு அந்த ஆவியினாலேயே அறிவை உணர்த்தும் வசனமும், வேறொருவனுக்கு அந்த ஆவியினாலேயே விசுவாசமும், வேறொருவனுக்கு அந்த ஆவியினாலேயே குணமாக்கும் வரங்களும், வேறொருவனுக்கு அற்புதங்களைச் செய்யும் சக்தியும், வேறொருவனுக்குத் தீர்க்கதரிசனம் உரைத்தலும், வேறொருவனுக்கு ஆவிகளைப் பகுத்தறிதலும், வேறொருவனுக்கு பற்பல பாஷைகளைப் பேசுதலும், வேறொருவனுக்கு பாஷைகளை வியாக்கியானம் பண்ணுதலும் அளிக்கப்படுகிறது. இவைகளையெல்லாம் அந்த ஒரே ஆவியானவர் நடப்பித்து, தமது சித்தத்தின்படியே அவனவனுக்குப் பகிர்ந்து கொடுக்கிறார் (1கொரி 12:4-11).**

ஆவியானவர் ஒருவரே. அவரே வரங்களைக் கொடுக்கிறவர். வரங்களில் வித்தியாசங்கள் உண்டு. ஊழியங்களிலேயும் வித்தியாசங்கள் உண்டு. கிரியைகளிலும் வித்தியாசங்கள் உண்டு. ஆனாலும் கர்த்தர் ஒருவரே. எல்லாருக்குள்ளும் எல்லாவற்றையும் நடப்பிக்கிற தேவன் ஒருவரே. வரங்கள் வித்தியாசமாகயிருந்தாலும், இவையெல்லாம் ஒரே தேவனிடமிருந்து வருகிறது. பவுல் அந்த வரங்களில் சிலவற்றை இங்கு ஒவ்வொன்றாகக் குறிப்பிடுகிறார்.

"ஒருவனுக்கு ஆவியினாலே ஞானத்தைப் போதிக்கும் வசனமும், வேறொருவனுக்கு அந்த ஆவியினாலேயே அறிவை உணர்த்தும் வசனமும், வேறொருவனுக்கு அந்த ஆவியினாலேயே விசுவாசமும், வேறொருவனுக்கு அந்த ஆவியினாலேயே குணமாக்கும் வரங்களும் வேறொருவனுக்கு அற்புதங்களைச் செய்யும் சக்தியும், வேறொருவனுக்குத் தீர்க்கதரிசனம் உரைத்தலும், வேறொருவனுக்கு ஆவிகளைப் பகுத்தறிதலும், வேறொருவனுக்கு பற்பல பாஷைகளைப் பேசுதலும், வேறொருவனுக்கு பாஷைகளை வியாக்கியானம் பண்ணுதலும் அளிக்கப்படுகிறது" (1கொரி 12:8-10).

கர்த்தர் ஒருவனுக்கு ஆவியினாலே ஞானத்தைப்போதிக்கும் வசனத்தைக் கொடுக்கிறார். சுவிசேஷத்தின் இரகசியங்களை அறிந்துகொள்ளும் அறிவையும், இந்த இரகசியத்தின் பொருளை மற்றவர்களுக்கு தெளிவாகப் போதிக்கிற ஆற்றலையும் கொடுக்கிறார். ஆவியானவர் வேறொருவனுக்கு அந்த ஆவியினாலே அறிவை உணர்த்தும் வசனத்தைக் கொடுக்கிறார். தேவஇரகசியங்களைப்பற்றிய அறிவை தேவன் கொடுப்பதாக இந்த வரத்திற்குப் பொருள் சொல்லுகிறார்கள். "நாங்களோ உலகத்தின் ஆவியைப் பெறாமல், தேவனால் எங்களுக்கு அருளப்பட்டவைகளை அறியும்படிக்குத் தேவனிலிருந்து புறப்படுகிற ஆவியையே பெற்றோம். அவைகளை நாங்கள் மனுஷஞானம் போதிக்கிற வார்த்தைகளாலே பேசாமல், பரிசுத்த ஆவி போதிக்கிற வார்த்தைகளாலே பேசி, ஆவிக்குரியவைகளை ஆவிக்குரியவைகளோடே சம்பந்தப் படுத்திக் காண்பிக்கிறோம்" (1கொரி 2:12,13). குழப்பமான சூழ்நிலைகளில் இந்த வரத்தைப் பெற்றிருக்கிறவர்கள் ஆவியானவரின் ஆலோசனையைச் சொல்ல ஆயத்தமாயிருப்பார்கள்.

ஆவியானவர் ஒருவனுக்கு விசுவாசத்தைக் கொடுக்கிறார். இந்த வரத்தைப் பெற்றிருக்கிறவர்கள் தங்கள் ஜீவியத்தின் எல்லா சூழ்நிலைகளிலும் தேவனை விசுவாசிப்பார்கள். அவரையே சார்ந்திருப்பார்கள். இந்த ஆவியினாலேயே வேறொருவனுக்கு குணமாக்கும் வரங்கள் கொடுக்கப்படுகிறது. இவர்கள் வியாதியஸ்தர்கள்மீது தங்கள் கைகளை வைத்து, அவர்களுடைய வியாதிகளை இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே குணப்படுத்துவார்கள்.

தேவன் ஒரு சிலருக்கு அற்புதங்களைச் செய்யும் சக்தியைக் கொடுக்கிறார். வேறொருவனுக்கு தீர்க்கதரிசனம் உரைக்கிற வரத்தைக் கொடுக்கிறார். இவர்கள் ஆவியானவரின் விசேஷித்த வரத்தினால் வேதவாக்கியத்தை விவரித்துச் சொல்லுவார்கள். தேவன் ஒரு சிலருக்கு ஆவிகளைப் பகுத்தறியும் வரத்தைக் கொடுத்திருக்கிறார். இவர்கள் கள்ளத்தீர்க்கதரிசிகளுக்கும் நல்ல தீர்க்கதரிசிகளுக்கும் வித்தியாசம் காண்பிப்பார்கள்.

ஆவியானவர் சிலருக்கு பற்பல பாஷைகளைப் பேசுகிற வரத்தைக் கொடுக்கிறார். இவர்கள் தேவஆவியின் ஏவுதலினால் பல பாஷைகளைப் பேசுகிறார்கள். இதே ஆவியானவர் வேறொருவனுக்கு பாஷைகளை வியாக்கியானம்பண்ணுகிற வரத்தைக் கொடுக்கிறார். இந்த வரத்தையுடையவர்கள் அந்நிய பாஷைகளை வியாக்கியானம் பண்ணுவார்கள்.

ஆவியினுடைய அநுக்கிரகம் அவனவனுடைய பிரயோஜனத்திற்கென்று அளிக்கப்பட்டிருக்கிறது. ஆவியானவரின் வரங்களைப் பெற்றிருக்கிறவர்கள் தங்களுடைய சுயபிரயோஜனத்திற்காக இவற்றைப் பயன்படுத்தாமல், சபையின் பொதுவான பிரயோஜனத்திற்காகவே பயன்படுத்தவேண்டும். ஆவியானவர் தம்முடைய பிள்ளைகளுக்கு எந்த வரத்தைக் கொடுத்தாலும், அவர்கள் அந்த வரங்களை விசுவாசித்தோடு பயன்படுத்தி நன்மை செய்யவேண்டும். கர்த்தர் தம்முடைய பிள்ளைகளை நம்பி அவர்களுடைய கரங்களில் வரங்களை ஒப்புக்கொடுத்திருக்கிறார். வரங்களை ஒரு காட்சிப்பொருளாகக் காண்பிக்கக்கூடாது. ஊழியத்தில் பயன்படுத்த வேண்டும்.

எல்லா வரங்களையும் ஒரே ஆவியானவர் நடப்பிக்கிறார். தம்முடைய சித்தத்தின்படியே இந்த வரங்களை அவனவனுக்குப் பகிர்ந்து கொடுக்கிறார். வரங்களெல்லாம் தேவனுடைய ஆவியானவருக்குச் சொந்தமானவை. தமக்குச் சொந்தமான வரங்களை தம்முடைய சித்தத்தின் பிரகாரம் பகிர்ந்து கொடுப்பதற்கு அவருக்கு உரிமை உண்டு. மனுஷருடைய சித்தத்தின் பிரகாரமோ அல்லது மனுஷருடைய விருப்பத்தின் பிரகாரமோ வரங்கள் கொடுக்கப் படுவதில்லை. ஆவியானவருடைய சித்தத்தின் பிரகாரமும், அவருடைய விருப்பத்தின் பிரகாரமுமே வரங்கள் பகிர்ந்து கொடுக்கப்படுகிறது.

## சரீரம் ஒன்று, அதற்கு அவயவங்கள் அநேகம் 1கொரி 12 : 12-26

**1கொரி 12:12. எப்படியெனில், சரீரம் ஒன்று, அதற்கு அவயவங்கள் அநேகம்; ஒரே சரீரத்தின் அவயவங்களெல்லாம் அநேகமாயிருந்தும், சரீரம் ஒன்றாகவேயிருக்கிறது; அந்தப்பிரகாரமாகக் கிறிஸ்துவும் இருக்கிறார்.**

**1கொரி 12:13. நாம் யூதராயினும், கிரேக்கராயினும், அடிமைகளாயினும், சுயாதீனராயினும், எல்லாரும் ஒரே ஆவியினாலே ஒரே சரீரத்திற்குள்ளாக ஞானஸ்நானம் பண்ணப்பட்டு, எல்லாரும் ஒரே ஆவிக்குள்ளாகவே தாகந்தீர்க்கப்பட்டோம்.**

**1கொரி 12:14. சரீரமும் ஒரே அவயவமாயிராமல் அநேக அவயவங்களாயிருக்கிறது.**

**1கொரி 12:15. காலானது நான் கையாயிராதபடியினாலே, நான் சரீரத்தின் அவயவமல்லவென்றால், அதினாலே அது சரீரத்தின் அவயவமாயிராதோ?**

**1கொரி 12:16. காதானது நான் கண்ணாயிராதபடியினாலே, நான் சரீரத்தின் அவயவமல்லவென்றால், அதினாலே அது சரீரத்தின் அவயவமாயிராதோ?**

**1கொரி 12:17. சரீரம் முழுவதும் கண்ணானால், செவி எங்கே? அது முழுவதும் செவியானால், மோப்பம் எங்கே?**

**1கொரி 12:18. தேவன் தமது சித்தத்தின்படி, அவயவங்கள் ஒவ்வொன்றையும் சரீரத்திலே வைத்தார்.**

**1கொரி 12:19. அவையெல்லாம் ஒரே அவயவமாயிருந்தால், சரீரம் எங்கே?**

**1கொரி 12:20. அவயவங்கள் அநேகமாயிருந்தும் சரீரம் ஒன்றே.**

**1கொரி 12:21. கண்ணானது கையைப்பார்த்து: நீ எனக்கு வேண்டுவதில்லையென்றும்; தலையானது கால்களை நோக்கி: நீங்கள் எனக்கு வேண்டுவதில்லையென்றும் சொல்லக்கூடாது.**

**1கொரி 12:22. சரீர அவயவங்களில் பலவீனமுள்ளவைகளாய்க் காணப்படுகிறவைகளே மிகவும் வேண்டியவைகளாயிருக்கிறது.**

**1கொரி 12:23. மேலும், சரீர அவயவங்களில் கனவீனமாய்க் காணப்படுகிறவைகளுக்கே அதிக கனத்தைக் கொடுக்கிறோம்; நம்மில் இலட்சணமில்லாதவைகளே அதிக அலங்காரம் பெறும்;**

**1கொரி 12:24. நம்மில் இலட்சணமுள்ளவைகளுக்கு அலங்கரிப்பு வேண்டியதில்லை.**

**1கொரி 12:25. சரீரத்திலே பிரிவினையுண்டாயிராமல், அவயவங்கள் ஒன்றைக் குறித்து ஒன்று கவலையாயிருக்கும்படிக்கு, தேவன் கனத்தில் குறைவுள்ளதற்கு அதிக கனத்தைக் கொடுத்து, இப்படிச் சரீரத்தை அமைத்திருக்கிறார்.**

**1கொரி 12:26. ஆதலால் ஒரு அவயவம் பாடுபட்டால் எல்லா அவயவங்களும் கூடப்பாடுபடும்; ஒரு அவயவம் மகிமைப்பட்டால் எல்லா அவயவங்களும் கூடச் சந்தோஷப்படும்.**

அப்போஸ்தலர் பவுல் கிறிஸ்துவின் சபையை மனுஷருடைய சரீரத்தோடு ஒப்பிட்டு விவரிக்கிறார். கொரிந்து சபையில் ஆவியின் வரங்களைப் பெற்றவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் தாங்கள் பெற்றிருக்கிற வரத்தை தேவனுடைய நாமமகிமைக்காகவும், சபையின் பிரயோஜனத்திற்காகவும் பயன்படுத்தவேண்டும். ஒரே சரீரத்தில் அநேக அவயவங்கள் உள்ளன. ஒரே சரீரத்தின் அவயவங்களெல்லாம் அநேகமாயிருந்தும், சரீரம் ஒன்றாகவே இருக்கிறது. சபையிலுள்ள விசுவாசிகளெல்லோரும் ஒரே ஆவியினாலே, ஒரே சரீரத்திற்குள்ளாக ஞானஸ்நானம் பண்ணப்பட்டிருக்கிறார்கள். எல்லா விசுவாசிகளும் ஒரே ஆவிக்குள்ளாகவே தாகம் தீர்க்கப்படுகிறார்கள்.

விசுவாசிகள் ஞானஸ்நானத்தின் மூலமாக சபையாகிய சரீரத்தின் அவயவங்களாயிருக்கிறார்கள். எல்லா விசுவாசிகளும் ஒரே சரீரத்திற்குள்ளாக ஞானஸ்நானம் பண்ணப்படுகிறார்கள். சபையின் எல்லா நியமங்களையும் விசுவாசிகள் கைக்கொள்ளும்போது, எல்லா விசுவாசிகளும் ஒரே ஆவிக்குள்ளாக பானம்பண்ணுகிறார்கள். தாகம் தீர்க்கப்படுகிறார்கள். இந்த வாக்கியம் பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானத்தைக் குறிக்கிறது. ஆவியானவரின் ஞானஸ்நானத்தினால் நம்முடைய உள்ளான மனுஷன் புதுப்பிக்கப்படுகிறது.

ஒரே ஆவியினால் நாமெல்லோரும் தாகம் தீர்க்கப்படுவதினால், கிறிஸ்துவின் சரீரத்தில் நாமெல்லோரும் மெய்யான அவயவங்களாகயிருக்கிறோம். கிறிஸ்துவின் ஆவியுள்ளவர்கள் எல்லோரும் கிறிஸ்துவின் அவயவங்களாகயிருக் கிறார்கள். விசுவாசிகள் யூதராகயிருந்தாலும், கிரேக்கராக யிருந்தாலும், அடிமைகளாக யிருந்தாலும், சுயாதீனராகயிருந்தாலும் எல்லாரும் ஒரே ஆவியினாலே, ஒரே சரீரத்திற்குள்ளாக ஞானஸ்நானம் பண்ணப்படுகிறோம்.

சரீரத்தின் ஒவ்வொரு அவயவத்திற்கும் ஒரு உருவமும், அதற்குரிய பயன்பாடும் உண்டு. சரீரத்தில் ஒவ்வொரு அவயவமும் அதற்குரிய ஸ்தானத்தில் வைக்கப்பட்டிருக்கிறது. சரீர அவயவங்களில் பலவீனமுள்ள அவயவங்களும் உண்டு, பலமுள்ள அவயவங்களும் உண்டு. கனவீனமாய்க் காணப்படுகிற அவயவங்களும் உண்டு. கனமுள்ளவைகளாய் காணப்படுகிற அவயவங்களும் உண்டு. தேவன் தமது சித்தத்தின்படி அவயவங்கள் ஒவ்வொன்றையும் சரீரத்தில் வைத்திருக்கிறார். சரீரத்தின் அவயவங்களில் எல்லாமே சரீரத்திற்குத் தேவை.

கைகளும் கண்களும் மிகவும் பிரயோஜனமானவை. கால்களையும் செவிகளையும்விட இவை இரண்டும் மிகவும் முக்கியமானவை. அதற்காக கால்களும் செவிகளும் சரீரத்தின் அவயவங்களல்ல என்று சொல்ல முடியாது. காலானது கையாயிராவிட்டாலும் அதுவும் சரீரத்தின் அவயவமே. அதுபோலவே காதானது கண்ணாயிரா விட்டாலும் அதுவும் சரீரத்தின் அவயவமே.

எல்லா அவயவமும் சரீரத்தின் ஒரே இடத்தில் வைக்கப்படவில்லை. தேவன் தமது சித்தத்தின்படி, அவயவங்கள் ஒவ்வொன்றையும், சரீரத்தில் அதன் அதன் இடத்தில் வைத்திருக்கிறார். சரீர அவயவங்களில் பலவீனமுள்ளவைகளாய்க் காணப்படுகிறவைகளே மிகவும் வேண்டியவைகளாயிருக்கிறது. அது போலவே சரீர அவயவங்களில் கனவீனமாய் காணப்படுகிறவைகளுக்கே அதிக கனத்தைக் கொடுக்கிறோம். நம்மில் லட்சணமில்லாதவைகளே அதிக அலங்காரம் பெறும். லட்சணமுள்ளவைகளுக்கு அலங்கரிப்பு வேண்டியதில்லை.

ஒரு சரீரத்திலுள்ள எல்லா அவயவங்களுமே அந்தச் சரீரத்திற்குத் தேவை. எல்லா அவயவங்களும் சரீரத்திற்கு முக்கியமானது. அதுபோலவே எல்லா விசுவாசிகளும் கிறிஸ்துவின் சரீரமாகிய சபைக்கு தேவைப்படுகிறார்கள். எல்லா விசுவாசிகளும் முக்கியமானவர்கள். விசேஷித்தவர்கள். ஒரு சரீரத்தில் அவயவங்கள் அநேகமாயிருந்தும், அந்தச் சரீரம் ஒன்றே. கிறிஸ்துவின் சரீரமும் இதுபோலவே இருக்கிறது. விசுவாசிகள் அநேகராயிருந்தாலும் கிறிஸ்துவின் சபையானது ஒன்றே.

ஒரு சரீரத்தில் வெவ்வேறு விதமான அவயவங்கள் இருப்பது அதற்கு அழகைக் கொடுக்கிறது. அதுபோல சபையில் வெவ்வேறுவிதமான வரங்களைப் பெற்றுள்ள விசுவாசிகள் இருப்பது, அது அந்தச் சபைக்கு அலங்கரிப்பாயிருக்கிறது. தேவன் தமது சித்தத்தின்படி அவயவங்கள் ஒவ்வொன்றையும் சரீரத்தில் வைத்திருக்கிறார். அதுபோலவே தம்முடைய சரீரமாகிய சபையிலும், தமது சித்தத்தின்படி, தம்முடைய வரங்கள் ஒவ்வொன்றையும் விசுவாசிகளுக்குக் கொடுக்கிறார்.

தேவன் சபையில் நம்மை எந்த ஸ்தானத்தில் வைத்திருக்கிறாரோ அந்த ஸ்தானத்தில் நாம் நிலைத்திருக்க வேண்டும். நமக்கு நியமிக்கப்பட்டிருக்கிற கடமைகளை நாம் நேர்த்தியாய்ச் செய்து முடிக்கவேண்டும். நாம் மற்றவர்களோடு வாக்குவாதம்பண்ணக் கூடாது. மற்றவர்கள் பெற்றிருக்கிற வரத்தைப் பார்த்து பொறாமைப்படக்கூடாது. அப்படிப்பட்ட வரங்கள் நமக்கு இல்லையே என்று ஏங்கவும் கூடாது. கண்ணானது கையைப்பார்த்து, "நீ எனக்கு வேண்டுவதில்லை" என்று சொல்லக் கூடாது. அதுபோலவே தலையானது கால்களை நோக்கி, "நீங்கள் எனக்கு வேண்டுவதில்லை" என்றும் சொல்லக்கூடாது. எல்லா அவயங்களுமே சரீரத்திற்குத் தேவை. எல்லாமே பிரயோஜனமுள்ளது. ஒவ்வொரு அவயவமும் அதனதன் வேலையைச் செய்யவேண்டும். அப்போதுதான் சரீரம் நேர்த்தியாக இயங்கும்.

சரீரத்திலுள்ள அவயவங்கள் எல்லாவற்றிற்கும் ஒரே மாதிரியான முக்கியத்துவம் இருப்பதில்லை. எல்லாம் ஒன்றுபோல பெலமுள்ளதாகவும் இருப்பதில்லை. சரீர அவயவங்களில் பலவீனமுள்ளவைகளாய்க் காணப் படுகிறவைகளும் சரீரத்திற்குத் தேவையாயிருக்கிறது. ஒவ்வொரு அவயவமும் சரீரத்திற்கு நன்மை செய்கிறது. தேவன் ஒவ்வொரு அவயவத்தையும் ஒரு நோக்கத்தோடு சரீரத்திலே வைத்திருக்கிறார். அவயவங்கள் ஒன்றுக்கொன்று ஒத்தாசையாயிருக்க வேண்டும். ஒரு அவயவம் பாடுபட்டால் எல்லா அவயவங்களும் கூடப்பாடுபடும். ஒரு அவயவம் மகிமைப்பட்டால் எல்லா அவயவங்களும் கூடச் சந்தோஷப்படும்.

கிறிஸ்துவின் சரீரமாகிய சபையில் எல்லா விசுவாசிகளுமே முக்கியமானவர்கள். தேவையானவர்கள். பிரயோஜனமுள்ளவர்கள். தேவன் ஒவ்வொரு விசுவாசிக்கும் தம்முடைய சித்தத்தின் பிரகாரம் வரங்களையும், ஊழியங்களையும் கொடுக்கிறார். ஒவ்வொரு விசுவாசியையும் சபையில் ஒரு குறிப்பிட்ட ஸ்தானத்தில் வைக்கிறார். விசுவாசிகள் தங்களுடைய ஸ்தானத்தை உணர்ந்து, தங்களுடைய வரங்களைப் புரிந்துகொண்டு, சபையின் பிரயோஜனத்திற்காக ஊழியம் செய்யவேண்டும். சபைக்கு மற்ற விசுவாசிகள் வேண்டுவதில்லையென்று சொல்லி, யாரையும் உதாசீனப்படுத்தக்கூடாது. எல்லோரும் தேவையென்று சொல்லவேண்டும்.

ஒரு சிலருக்கு அதிகமான வரங்கள் கொடுக்கப்பட்டிருக்கும். ஒரு சிலர் தங்களுக்குக் கொடுக்கப்பட்ட வரத்தை நல்லமுறையில் பயன்படுத்துவார்கள். தங்கள் வரம் உயர்ந்தது என்று சொல்லுவார்கள். அப்படிப்பட்டவர்கள்கூட மற்ற விசுவாசிகளை உதாசீனப்படுத்தக்கூடாது. மற்றவர்கள் பெற்றிருக்கிற வரம், தங்கள் வரத்தைப்போல பலமுள்ளதல்ல என்றோ, கனமுள்ளதல்ல என்றோ சொல்லக்கூடாது. ஒருவேளை அவர்கள் தங்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற மற்ற வரங்களில் தேர்ச்சி பெற்றவர்களாகயிருக்கலாம்.

சரீரத்திலுள்ள கண்ணுக்கு கையின் உதவி தேவைப்படுகிறது. அதுபோலவே தலைக்கு காலின் உதவியும் தேவைப்படுகிறது. எந்த அவயவமும் மற்ற அவயவத்தைப் பார்த்து, தனக்குத் தேவையில்லையென்று விலக்கி வைக்கக்கூடாது. தேவன் கனத்தில் குறைவுள்ளதற்கு அதிக கனத்தைக்கொடுத்து, இப்படி சரீரத்தை அமைத்திருக்கிறார் (1கொரி 12:24). சரீரத்திலே பிரிவினை இருக்கக்கூடாது. அவயவங்கள் ஒன்றைக்குறித்து ஒன்று கரிசனையோடிருக்கவேண்டும்.

கிறிஸ்துவின் சரீரமாகிய சபையிலுள்ள விசுவாசிகளும் ஒருவரைக்குறித்து ஒருவர் கரிசனையோடிருக்க வேண்டும். தேவனுடைய கிருபையினாலே சபையில் பிரிவினை உண்டாயிராமல், ஒவ்வொரு விசுவாசியும் ஐக்கியமாக இணைந்திருக்கவேண்டும். சரீரத்திலே பிரிவினை உண்டாயிருப்பது தேவனுடைய சித்தமல்ல.

சரீரத்தில் ஒரு அவயவம் பாடுபட்டால் எல்லா அவயவங்களும் கூடப்பாடுபடும். அதுபோல சபையில் ஒரு விசுவாசிக்கு துன்பம் வந்தால் எல்லா விசுவாசிகளும் அவருடைய துன்பத்தைப் பகிர்ந்துகொள்ளவேண்டும். சரீரத்தில் ஒரு அவயவம் மகிமைப்பட்டால் எல்லா அவயவங்களும் கூடச்சந்தோஷப்படும். அதுபோல சபையில் ஒரு விசுவாசி சந்தோஷப்பட்டால், மற்ற விசுவாசிகளும் அவருடைய சந்தோஷத்தைப் பகிர்ந்து கொண்டு, அவருடனேகூட சந்தோஷப்படவேண்டும்.

## முக்கியமான வரங்கள் 1கொரி 12 : 27-31

**1கொரி 12:27. நீங்களே கிறிஸ்துவின் சரீரமாயும், தனித்தனியே அவயவங்களாயுமிருக்கிறீர்கள்.**

**1கொரி 12:28. தேவனானவர் சபையிலே முதலாவது அப்போஸ்தலரையும், இரண்டாவது தீர்க்கதரிசிகளையும், மூன்றாவது போதகர்களையும், பின்பு அற்புதங்களையும், பின்பு குணமாக்கும் வரங்களையும், ஊழியங்களையும் ஆளுகைகளையும், பலவித பாஷைகளையும் ஏற்படுத்தினார்.**

**1கொரி 12:29. எல்லாரும் அப்போஸ்தலர்களா? எல்லாரும் தீர்க்கதரிசிகளா? எல்லாரும் போதகர்களா? எல்லாரும் அற்புதங்களைச் செய்கிறவர்களா?**

**1கொரி 12:30. எல்லாரும் குணமாக்கும் வரங்களுடையவர்களா? எல்லாரும் அந்நியபாஷைகளைப் பேசுகிறார்களா? எல்லாரும் வியாக்கியானம் பண்ணுகிறார்களா?**

**1கொரி 12:31. இப்படியிருக்க, முக்கியமான வரங்களை நாடுங்கள்; இன்னும் அதிக மேன்மையான வழியையும் உங்களுக்குக் காண்பிக்கிறேன்.**

அப்போஸ்தலர் பவுல் சரீரத்தின் அவயவங்களை ஒப்புமையாகச் சொல்லி, கிறிஸ்துவின் சபையை விவரிக்கிறார். ஒவ்வொரு விசுவாசியும் கிறிஸ்துவோடும், மற்ற விசுவாசிகளோடும் ஐக்கியமாகயிருக் கிறார்கள். விசுவாசிகளெல்லோரும் கிறிஸ்துவின் சரீரமாயும், தனித்தனியே அவயவங்களாயும் இருக்கிறார்கள். எல்லா விசுவாசிகளுக்கும் ஒருவருக்கொருவர் ஒரு பொதுவான உறவு இருக்கிறது. ஒரு பொதுவான ஐக்கியம் நியமிக்கப்பட்டிருக்கிறது. நாமெல்லோருமே கிறிஸ்துவில் இசைவாய் இசைக்கப்பட்டிருக்கிறோம்.

கிறிஸ்துவானவர் சபையிலே வெவ்வேறு ஊழியங்களை ஸ்தாபித்திருக்கிறார். சபையின் விசுவாசிகளுக்கு தமது சித்தத்தின்படி வெவ்வேறு வரங்களையும் கொடுத்திருக்கிறார்.

கிறிஸ்துவானவர் சபையிலே ஒரு குறையும் வைக்கவில்லை. சகலவற்றையும் சம்பூரணமாய் ஆசீர்வதித்திருக்கிறார். சபைக்கு எந்தவிதமான குறைவுமில்லாமல் வரங்களையும் ஊழியங்களையும் தாராளமாய்க் கொடுத்திருக்கிறார். தம்முடைய கிருபைகளையும், சிலாக்கியங்களையும், ஆசீர்வாதங் களையும் கர்த்தர் தம்முடைய பிள்ளைகளுக்கு அளவில்லாமல், தாராளமாய்க் கொடுக்கிறவர். சபையில் நமக்கு ஒரு குறைவுமில்லை. எல்லாம் நிறைவாயிருக்கிறது. நம்முடைய தேவைக்கு அதிகமாகவே சபையில் ஆசீர்வாதங்கள் உள்ளன.

தேவன் சபைக்குக் கொடுத்திருக்கிற வரங்களையும் ஊழியங்களையும் அப்போஸ்தலர் பவுல் இங்கு ஒவ்வொன்றாகக் குறிப்பிடுகிறார். அதிகப்பிரயோஜனமுள்ள ஊழியத்தை முதலாவதாகச் சொல்லுகிறார். தேவனுக்கு ஒவ்வொரு ஊழியத்தின் மதிப்பும், ஒவ்வொரு வரத்தின் மதிப்பும் தெரியும். தேவன் எல்லாவற்றையும் ஆராய்ந்து நிதானிக்கிறவர். சரீரத்திலே கனமுள்ள அவயவங்களும் கனவீனமுள்ள அவயவங்களும் இருக்கும். அதுபோலவே ஊழியங்களில் அதிகக்கனமுள்ள ஊழியமும் உண்டு. கனத்தில் குறைவுள்ள ஊழியமும் உண்டு. இதன் பிரகாரமாக, தேவன் சபையிலே முதலாவது அப்போஸ்தலரை ஏற்படுத்துகிறார். எல்லாவற்றிற்கும் கடைசியாக பலவித பாஷைகளை ஏற்படுத்துகிறார்.

கொரிந்து சபையிலுள்ள விசுவாசிகளுக்கே தேவன் வரங்களைக் கொடுத்திருக்கிறார். அவர்கள் தாங்கள் பெற்றிருக்கிற வரங்களுக்காகப் பெருமைப்படுகிறார்கள். மற்றவர்களை ஏளனப்படுத்துகிறார்கள். ஒருவரும் தாங்கள் பெற்றிருக்கிற வரத்தை ஒழுங்காகப் பயன்படுத்துவதில்லை. பெருமையுள்ளவர்களால் ஊழியம் செய்யமுடியாது. பெருமை அவர்கள் கண்களை மூடும். வரங்களின் உண்மையான மதிப்பை பெருமையுள்ளவர்களால் காணமுடியாது. பெருமைப்படுகிறவன் கனவீனமுள்ளதற்கு கனத்தைக்கொடுப்பான். கனமுள்ளதை கனவீனப்படுத்திவிடுவான். இது மனுஷருடைய இயல்பான சுபாவம். இந்த சுபாவம் கொரிந்து சபையில் அதிகமாய்க் காணப்படுகிறது.

தேவனானவர் சபையிலே பல்வேறு ஊழியங்களையும், பல்வேறு வரங்களையும் ஏற்படுத்தியிருக்கிறார். சபையிலுள்ள விசுவாசிகளெல்லோரும் அப்போஸ்தலர்களல்ல. அவர்களெல்லோரும் தீர்க்கதரிசிகளுமல்ல. அவர்களெல்லோரும் போதகர்களுமல்ல. அவர்களெல்லோரும் அற்புதங்களைச் செய்கிறவர்களுமல்ல. எல்லோரும் குணமாக்கும் வரங்களை உடையவர்களுமல்ல. எல்லோரும் அந்நிய பாஷைகளைப் பேசவில்லை. எல்லோரும் வியாக்கியானம்பண்ணவுமில்லை.

தேவன் சபையிலே ஏற்படுத்தியிருக்கிற ஊழியங்களும் வரங்களும் அவருடைய சித்தத்தின்படி விசுவாசிகளுக்கு பகிர்ந்து கொடுக்கப்பட்டிருக்கிறது. சபையின் பிரயோஜனத்திற்கு எல்லா ஊழியங்களும் தேவை. எல்லா வரங்களும் தேவை. ஒரே விசுவாசி எல்லா ஊழியத்தையும் செய்வதில்லை. ஒரே விசுவாசியிடம் எல்லா வரங்களும் இருப்பதில்லை. தேவன் தம்முடைய வரங்களையும் ஊழியங்களையும் எல்லோருக்கும் பகிர்ந்து கொடுத்திருக்கிறார்.

ஆவியானவர் நமக்குக் கொடுத்திருக்கிற ஊழியத்திலும் வரத்திலும் நாம் திருப்தியோடிருக்க வேண்டும். நமக்கு நியமிக்கப்பட்டிருக்கிற ஸ்தானத்தில் நாம் உண்மையோடு நிலைத்திருக்கவேண்டும். நாம் ஒருவருக்கொருவர் உதவியாய் ஊழியம் செய்யவேண்டும். சபையின் நன்மைக்காக, சகவிசுவாசிகளின் பிரயோஜனத்திற்காக எல்லோரும் சேர்ந்து ஊழியம் செய்ய வேண்டும். யார்மீதும் பொறாமைப்படக் கூடாது. நாம் விரும்புகிற வரங்கள் நமக்குக் கொடுக்கப்படவில்லை என்று கோபப்பட்டு, நமக்கு கொடுக்கப்பட்டிருக்கிற வரத்தைப் பயன்படுத்தாமல் இருந்துவிடக்கூடாது.

பவுல் இந்த அதிகாரத்தை முடிக்கும்போது, "இப்படியிருக்க முக்கியமான வரங்களை நாடுங்கள்" என்று ஆலோசனை சொல்லுகிறார். ஒவ்வொரு விசுவாசியும் முக்கியமான வரங்களை நாடவேண்டும். எந்த வரம் பிரயோஜனமுள்ளதோ அதை நாடிப் பெற்றுக்கொள்ளவேண்டும். வரங்களைப் பெற்றுக்கொள்வதற்கு முன்பாக தேவனுடைய கிருபைகளைப் பெற்றுக் கொள்ளவேண்டும். பவுல் "முக்கியமான வரங்களை நாடுங்கள்" என்று அதை ஆலோசனையாகச் சொல்லவில்லை என்றும், அதைக் கட்டளையாகச் சொல்லுகிறார் என்றும் ஒரு சிலர் பொருள் சொல்லுகிறார்கள்.

# 1 கொரிந்தியர் - விரிவுரை
# I CORINTHIANS - COMMENTARY



கொரிந்து சபையிலுள்ள விசுவாசிகள் மற்றவர்களிடத்திலிருக்கிற வரங்களைப்பார்த்து பொறாமைப் படுகிறார்கள். யாருக்கு மேன்மை உண்டாகவேண்டும் என்பதில் அவர்களுக்குள் போட்டியும் பொறாமையும் உண்டாயிற்று. மாம்சசிந்தைக்கு இடங்கொடுத்தால் போட்டியும் பொறாமையும் வரும். அன்பு நம்மை ஆளுகை செய்யவேண்டும். பரிசுத்த ஆவியானவரின் சித்தத்திற்கு நம்மை ஒப்புக்கொடுக்கவேண்டும். அன்பு இருக்கிற இடத்தில் போட்டியும் பொறாமையும் இருக்காது. விசுவாசிகள் ஒருவருக்கொருவர் அன்புகூரவேண்டும். ஒவ்வொரு விசுவாசியும் தன்னுடைய நன்மையை மாத்திரம் பாராமல் பிறருடைய நன்மையையும் பார்க்கவேண்டும்.

அப்போஸ்தலர் பவுல் வரங்களைக் குறிப்பிட்டுவிட்டு, "இன்னும் அதிக மேன்மையான வழியையும் உங்களுக்குக் காண்பிப்பேன்" என்று சொல்லுகிறார். அன்பே அந்த மேன்மையான வழி. அன்பைப்பற்றி அடுத்த அதிகாரத்தில் பவுல் விரிவாகப் பேசுகிறார்.

## 13 அதிகாரம்

அப்போஸ்தலர் பவுல் இந்த நிருபத்தின் 12-ஆவது அதிகாரத்தில் "இன்னும் அதிக மேன்மையான வழியையும் உங்களுக்குக் காண்பிக்கிறேன்" என்று எழுதியிருந்தார். இந்த அதிகாரத்தில் அந்த மேன்மையான வழியை கொரிந்து சபையிலுள்ள விசுவாசிகளுக்குக் காண்பிக்கிறார். அன்பு மிகவும் முக்கியமானது. நமக்கு அன்பு இல்லையென்றால் நாம் ஒன்றுமில்லை (1கொரி 13:1-3). அன்பின் குணாதிசயங்கள் (1கொரி 13:4-7). அன்பே பெரியது (1கொரி 13:8-13).

### அன்பு
### 1கொரி 13 : 1-13

1கொரி 13:1. நான் மனுஷர் பாஷைகளையும் தூதர்பாஷைகளையும் பேசினாலும், அன்பு எனக்கிராவிட்டால், சத்தமிடுகிற வெண்கலம் போலவும், ஓசையிடுகிற கைத்தாளம் போலவும் இருப்பேன்.

1கொரி 13:2. நான் தீர்க்கதரிசன வரத்தை உடையவனாயிருந்து, சகல இரகசியங்களையும், சகல அறிவையும் அறிந்தாலும், மலைகளைப்பேர்க்கத்தக்க சகல விசுவாசமுள்ளவனாயிருந்தாலும் அன்பு எனக்கிராவிட்டால் நான் ஒன்றுமில்லை.

1கொரி 13:3. எனக்கு உண்டான யாவற்றையும் நான் அன்னதானம் பண்ணினாலும், என் சரீரத்தைச் சுட்டெரிக்கப் படுவதற்குக் கொடுத்தாலும், அன்பு எனக்கிராவிட்டால் எனக்குப் பிரயோஜனம் ஒன்றுமில்லை.

1கொரி 13:4. அன்பு நீடிய சாந்தமும் தயவுமுள்ளது; அன்புக்குப் பொறாமையில்லை; அன்பு தன்னைப் புகழாது, இறுமாப்பாயிராது.

1கொரி 13:5. அயோக்கியமானதைச் செய்யாது, தற்பொழிவை நாடாது, சினமடையாது, தீங்கு நினையாது,

1கொரி 13:6. அநியாயத்தில் சந்தோஷப்படாமல், சத்தியத்தில் சந்தோஷப்படும்.

1கொரி 13:7. சகலத்தையும் தாங்கும், சகலத்தையும் விசுவாசிக்கும், சகலத்தையும் நம்பும், சகலத்தையும் சகிக்கும்.

1கொரி 13:8. அன்பு ஒருக்காலும் ஒழியாது. தீர்க்கதரிசனங்களானாலும் ஒழிந்துபோம், அந்நிய பாஷைகளானாலும் ஓய்ந்துபோம், அறிவானாலும் ஒழிந்துபோம்.

1கொரி 13:9. நம்முடைய அறிவு குறைவுள்ளது, நாம் தீர்க்கதரிசனஞ் சொல்லுதலும் குறைவுள்ளது.

1கொரி 13:10. நிறைவானது வரும்போது குறைவானது ஒழிந்துபோம்.

1கொரி 13:11. நான் குழந்தையாயிருந்தபோது குழந்தையைப்போலப் பேசினேன், குழந்தையைப்போலச் சிந்தித்தேன், குழந்தையைப்போல யோசித்தேன்; நான் புருஷனானபோதோ குழந்தைக்கேற்றவைகளை ஒழித்துவிட்டேன்.

1கொரி 13:12. இப்பொழுது கண்ணாடியிலே நிழலாட்டமாய்ப் பார்க்கிறோம், அப்பொழுது முகமுகமாய்ப் பார்ப்போம்; இப்பொழுது நான் குறைந்த அறிவுள்ளவன், அப்பொழுது நான் அறியப்பட்டிருக்கிறபடியே அறிந்துகொள்ளுவேன்.

1கொரி 13:13. இப்பொழுது விசுவாசம், நம்பிக்கை, அன்பு இம்மூன்றும் நிலைத்திருக்கிறது; இவைகளில் அன்பே பெரியது.

அப்போஸ்தலர் பவுல் அதிக மேன்மையான வழி என்று சொல்லும்போது, அன்பே அந்த வழியென்று குறிப்பிடுகிறார். உண்மையான அன்பு தேவனிடத்திலும் அன்புகூரும், மனுஷரிடத்திலும் அன்புகூரும். அன்பு இல்லையென்றால் நமக்கு எத்தனை வரங்கள் இருந்தாலும் அவற்றால் பிரயோஜனமில்லை.

அன்பைப்பற்றிச் சொல்லும்போது, பவுல் அந்நிய பாஷைகளில் பேசுவதைப்பற்றிச் சொல்லுகிறார். தேவனுடைய சமுகத்திற்கு முன்பாக அந்நிய பாஷைகளைவிட அன்பே அங்கீகரிக்கப்படுகிறது. நாம் மனுஷர் பாஷைகளைப் பேசினாலும், தூதர் பாஷைகளைப் பேசினாலும், அன்பு நமக்கு இராவிட்டால் நம்மிடத்தில் ஒன்றுமில்லை. அன்பு இல்லையென்றால் நம்முடைய பாஷையும் பேச்சும் சத்தமிடுகிற வெண்கலம் போலவும், ஓசையிடுகிற கைத்தாளம் போலவுமே இருக்கும்.

தீர்க்கதரிசன வரம் மிகவும் முக்கியமானது. இந்த வரத்தையுடையவர்கள் சகல இரகசியங்களையும், சகல அறிவையும் அறிந்திருப்பார்கள். இந்த வரத்தையுடைவர்களுக்கும் அன்பு வேண்டும். இவர்களிடத்தில் அன்பு இராவிட்டால் இவர்களும் ஒன்றுமில்லை. தலை மாத்திரம் பெரியதாகயிருந்தால் போதாது. சரீரத்தின் இருதயம் அன்பு நிறைந்ததாகயிருக்கவேண்டும். நமக்கு எவ்வளவு அறிவு இருந்தாலும், அன்பு நம்மிடத்தில் இல்லையென்றால் நாம் ஒன்றுமில்லை. நம்மிடத்தில் எவ்வளவு அறிவு இருக்கிறது என்பதை தேவன் கணக்குப் பார்ப்பதில்லை. அதற்குப் பதிலாக நம்மிடத்தில் எவ்வளவு அன்பு இருக்கிறது என்பதையே தேவன் கணக்குப் பார்க்கிறார்.

நம்மிடத்தில் விசுவாச வரம் காணப்படலாம். மலைகளை பெயர்க்கத்தக்கதாக நம்மிடத்தில் விசுவாசமிருக்கலாம். மலைகளைப் பெயர்ப்பது மனுஷருக்கு மிகப்பெரிய காரியம். ஆனாலும் தேவனுடைய பார்வையில் மலைகளைப் பெயர்ப்பதைவிட, நாம் அன்புள்ளவர்களாயிருக்க வேண்டுமென்பதே முக்கியமாயிருக்கிறது. இந்த உலகத்தில் நமக்கு ஆழமான விசுவாசங்கள் இருக்கலாம். இதைவிட நம்மிடத்தில் ஆழமான அன்பு இருக்கவேண்டும். அன்பும், இரட்சிக்கும் விசுவாசமும் இணைந்து கிரியை செய்யும். அற்புதங்களைச் செய்கிற விசுவாசம் சில சமயங்களில் அன்பில்லாமலேயே கிரியை நடப்பிக்கும். அன்பில்லாமல் நடைபெறுகிற எல்லா கிரியைகளும் விருதாகவே இருக்கிறது.

ஒரு சிலர் பிறருக்கு ஏராளமான உதவிகளைச் செய்வார்கள். தானதருமங்களை அள்ளிக்கொடுப்பார்கள். தங்களுக்குண்டான யாவற்றையும் அவர்கள் அன்னதானம் பண்ணுவார்கள். பிறருக்குக் கொடுப்பதற்காக இவர்களுடைய கைகள் எப்போதும் திறந்தேயிருக்கும். இப்படிப்பட்டவர்களுக்கு கூட அன்பு இராவிட்டால் அவர்களுக்குப் பிரயோஜனம் ஒன்றுமில்லை. தானதருமமும், அன்னதானமும் செய்யவேண்டும். அதை அன்போடு செய்யவேண்டும். அப்போதுதான் நாம் செய்கிற உதவிகளை தேவன் அங்கீகரிப்பார்.

ஒரு சிலர் சுவிசேஷத்தினிமித்தமாக அநேக பாடுகளை அனுபவிப்பார்கள். வேதனைகளைத் தாங்கிக்கொள்வார்கள். தங்கள் விசுவாசத்திற்காக எல்லாவிதமான தியாகங்களையும் செய்ய ஆயத்தமாயிருப்பார்கள். தங்கள் சரீரங்களை சுட்டெரிக்கப்படுவதற்கு ஒப்புக்கொடுப்பார்கள். இப்படிப் பட்டவர்களுக்குக்கூட அன்பு இல்லையென்றால், இவர்களுக்கு ஒரு பிரயோஜனமுமில்லை.

உண்மையான அன்புதான் கிறிஸ்தவ மார்க்கத்தின் மையப்பகுதியாயிருக்கிறது. இதுவே நம்முடைய உபதேசத்தின் இருதயமும், ஜீவனும், ஆவியும் ஆகும். நம்முடைய இருதயங்களில் அன்பு நிறைந்திருக்கவேண்டும். அன்பில்லாத இருதயம் ஜீவனற்ற இருதயம். இந்த இருதயத்தை சத்தியத்திற்காக நாம் சுட்டெரிக்கப்படுவதற்கு ஒப்புக்கொடுத்தாலும், இந்த இருதயத்திற்குள் அன்பு இல்லையென்றால், நம்முடைய தியாகத்தினால் ஒரு பிரயோஜனமுமில்லை.

### அன்பின் குணம்
### 1கொரி 13 : 4-7

**1கொரி 13:4. அன்பு நீடிய சாந்தமும் தயவுமுள்ளது; அன்புக்குப் பொறாமையில்லை; அன்பு தன்னைப் புகழாது, இறுமாப்பாயிராது.**

**1கொரி 13:5. அயோக்கியமானதைச் செய்யாது, தற்பொழிவை நாடாது, சினமடையாது, தீங்கு நினையாது,**

**1கொரி 13:6. அநியாயத்தில் சந்தோஷப்படாமல், சத்தியத்தில் சந்தோஷப்படும்.**

**1கொரி 13:7. சகலத்தையும் தாங்கும், சகலத்தையும் விசுவாசிக்கும், சகலத்தையும் நம்பும், சகலத்தையும் சகிக்கும்.**

அன்பு நீடிய சாந்தமுள்ளது. இது தீமையைச் சகிக்கும். அன்புள்ளவர்கள் தங்களுக்கு விரோதமாகப் பேசப்படுகிற தூஷண வார்த்தைகளைச் சகித்துக் கொள்வார்கள். தங்களுக்கு விரோதமாகத் தீங்குசெய்தவர்களை பழிவாங்கவேண்டும் என்னும் கோபவுணர்வு அன்புள்ளவர்களிடத்தில் காணப்படாது. ஒவ்வொரு காரியத்தையும் அன்புள்ளவர்கள் நீடிய சாந்தத்தோடு சகித்துக்கொள்வார்கள். நல்ல காரியங்களை பொறுமையோடு செய்வார்கள்.

அன்பு தயவுள்ளது. நம்மிடத்தில் உள்ள தயவு நம்முடைய வார்த்தைகளில் வெளிப்படும். தயவுள்ளவர்கள் பிறருக்குப் பிரயோஜனமுள்ளவர்களாயிருப்பார்கள். பிறருக்கு நன்மை செய்ய ஒரு வாய்ப்பு கிடைக்கும்போது, அதைச் செய்யாமல் விட்டுவிடமாட்டார்கள். நன்மை செய்வதற்கு வாய்ப்பு கிடைக்குமா என்று தயவுள்ளவர்கள் தேடிப்பார்ப்பார்கள். தேடிப்பார்த்து நன்மை செய்வார்கள்.

அன்புக்கு பொறாமையில்லை. மற்றவர்கள் நன்றாயிருக்கும்போது அன்புள்ளவர்கள் அவர்களைப்பார்த்து பொறாமைப்படமாட்டார்கள். பொறாமை துர்க்குணத்தின் விளைவினால் உண்டாகிறது. நாம் பிறருக்கு எப்போதும் நன்மை செய்கிறவர்களாகவே இருக்கவேண்டும். எந்தச் சூழ்நிலையிலும் நாம் யாருக்கும் தீங்கு செய்யக்கூடாது. பிறருக்கு நன்மை செய்கிறவர்கள், எல்லோரும் நன்றாயிருக்கவேண்டுமென்று வாழ்த்துவார்கள். யாருக்கும் தீங்கு நினைக்கமாட்டார்கள். யார்மீதும் பொறாமைப்படமாட்டார்கள்.

அன்பு தன்னைப் புகழாது, இறுமாப்பாயிராது. சுயபெருமை பேசாது. சுயஇச்சையை நிறைவேற்றவேண்டுமென்று ஆசைப்படாது. உண்மையான அன்புள்ளவர்கள் பிறருடைய நன்மையை நாடுவார்கள். தங்களுடைய சுயநலத்தைக் குறைத்துக்கொண்டு, பிறருடைய நலத்தில் அதிக அக்கரை காண்பிப்பார்கள். அன்புள்ளவர்கள் பிறருக்குக் கண்ணியாயிருக்கமாட்டார்கள். பிறரை கண்ணியில் சிக்கவைக்கவும் மாட்டார்கள். அன்புள்ளவர்கள் பிறரை தேவையில்லாமல் முகஸ்துதி செய்யமாட்டார்கள். மாய்மாலமாய் பேசமாட்டார்கள். உள்ளதை உள்ளது என்றும், இல்லாததை இல்லாதது என்றும் தெளிவாகவும் உறுதியாகவும் பேசுவார்கள்.

அன்பு அயோக்கியமானதைச் செய்யாது. அன்புள்ளவர்கள் ஏற்றவேளையில் ஏற்ற காரியங்களைச் செய்வார்கள். காலத்திற்கும் சூழ்நிலைக்கும் தகுந்தவாறு நடந்துகொள்வார்கள். எல்லோரோடும் கண்ணியமாய்ப் பேசிப்பழகுவார்கள். அன்பு தன்னைப் புகழாது. அன்புக்கு சுயநலமில்லை. எல்லா மனுஷரும் இயல்பாகவே தங்களை நேசிப்பார்கள். அன்புள்ளவர்களோ தங்களையும் நேசிப்பார்கள். தங்களைப்போல பிறரையும் நேசிப்பார்கள். இப்படிப்பட்டவர்கள் பலவேளைகளில் தங்களைவிட பிறரை அதிகமாய் நேசிப்பார்கள்.

இயேசுகிறிஸ்துவின் அன்பு பெரிது. அவருடைய அன்பின் ஆழத்தையும் அகலத்தையும், நீளத்தையும் நம்மால் அளந்து பார்க்கமுடியாது. நாம் பாவிகளாகயிருக்கையிலேயே, கிறிஸ்து இயேசு நமக்காக சிலுவையில் மரித்தார். இயேசுகிறிஸ்துவிடம் பிரதிபலன் எதிர்பாராத அன்புள்ளது. கர்த்தருடைய பிள்ளைகளாகிய நம்மிடத்திலும் அப்படிப்பட்ட அன்பு காணப்படவேண்டும். நாம் நம்மை நேசிப்பதுபோல பிறரையும் நேசிக்கவேண்டும். அன்புள்ளவர்கள் பிறருக்குத் தீங்கு செய்து, தங்களுக்கு நன்மை செய்யவேண்டும் என்று விரும்பமாட்டார்கள். யார் கெட்டுப்போனாலும், தாங்கள் மாத்திரம் நன்றாயிருந்தால் போதுமென்று சுயநலத்தோடிருக்க மாட்டார்கள். அன்புள்ளவர்கள் மற்றவர்களுக்காக தங்களையே தியாகம் செய்வார்கள்.

அன்பு சினமடையாது. அன்பின் அக்கினி எரிந்து கொண்டிருக்கும் இடத்தில் கோபத்தின் சுடர் அணைந்து போகும். அன்பு கோபத்தைத் தூண்டிவிடாது. கோபம் பற்றியெறியாதவாறு, அதை தடைசெய்து அணைத்துப்போடும். அன்பு ஆளுகை செய்கிற இடத்தில் கோபம் வாசம்பண்ணாது. நம்மீது அன்பு கூருகிறவர்களிடத்தில் நம்மால் கோபப்படமுடியாது. நாம் ஒருவரிடத்தில் அன்புகூரும்போது, அவரிடத்தில் கோபப்படமாட்டோம். அன்பு ஒருபோதும் சினமடையாது.

அன்பு தீங்கு நினையாது. அன்பு பழிவாங்காது. பிறருக்கு ஒரு கெடுதலும் செய்யாது. மற்றவர்கள் நமக்குத் தீங்கு செய்வார்களோ என்று அன்புள்ளவர்கள் சந்தேகப்படமாட்டார்கள். மற்றவர்களிடத்தில் குற்றம் குறைகள் காணப்பட்டாலும், அதைப் பெரியதாய் எடுத்துக்கொள்ளமாட்டார்கள். அதை மூடி மறைத்துவிடுவார்கள். பிறரிடத்தில் என்னென்ன குறைபாடுகள் உள்ளது என்று அன்புள்ளவர்கள் தேடி ஆராய்ந்து பார்த்துக் கொண்டிருக்கமாட்டார்கள். நம்முடைய அன்பு பிறருடைய குற்றம் குறைகளை மூடும். பிறர்மீது சந்தேகப்படாது. எல்லோரையும் நம்பும்.

அன்பு அநியாயத்தில் சந்தோஷப்படாது. சத்தியத்தில் சந்தோஷப்படும். அன்புள்ளவர்கள் பிறருக்குத் தீங்குசெய்யமாட்டார்கள். அன்பில்லாதவர்கள் பிறருக்குத் தீங்குசெய்து, அவர்கள் படுகிற வேதனையைப் பார்த்து சந்தோஷப்படுவார்கள். ஆனால் அன்புள்ளவர்களோ அநியாயத்தில் சந்தோஷப்படமாட்டார்கள். பிறர் கஷ்டப்படும்போது வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்க மாட்டார்கள். மனதுருகி உதவிசெய்வார்கள்.

அன்புள்ளவர்கள் சத்தியத்தில் சந்தோஷப்படுவார்கள். மனுஷர் மத்தியிலே நீதியும் சத்தியமும் ஜெயிக்கும்போது மிகுந்த சந்தோஷமடைவார்கள். வழக்குகளில் நீதியான தீர்ப்பு கிடைக்கவேண்டுமென்று விரும்புவார்கள். தேவையில்லாமல் வழக்காடமாட்டார்கள். பிறரை நம்புவார்கள். பிறருடைய நம்பிக்கைக்குப் பாத்திரமாக நடந்துகொள்வார்கள்.

அன்பு சகலத்தையும் தாங்கும். பிறர் நமக்கு தீங்குசெய்தாலும், நம்மிடத்தில் மெய்யான அன்பு இருக்கும்போது, மற்றவர்கள் செய்த தீங்குகளை சகித்துத் தாங்கிக்கொள்ளுவோம். மற்றவர்கள் நமக்கு விரோதமாக பேசிய தூஷண வார்த்தைகளை மறந்துவிட்டு, அவர்கள்மீது அன்புகூருவோம். மற்றவர்களிடத்தில் காணப்படுகிற தப்பிதங்களை எல்லோருக்கும் விளம்பரம் செய்யமாட்டோம். பிறரிடத்தில் தப்பிதங்கள் காணப்பட்டாலும், அதைப் பெரிதுபடுத்தாமல், அதைச் சகித்துக்கொள்வோம்.

கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் மற்ற விசுவாசிகளிடத்தில் காணப்படுகிற தப்பிதங்களை, அவர்களுக்குத் தனிமையில் உணர்த்தவேண்டும். அவர்களுடைய தவற்றை எல்லோருக்கும் விளம்பரம் செய்து, சபையார் மத்தியில் அவர்களை அவமானப்படுத்தி விடக்கூடாது. அன்புள்ளவர்கள் எளிதில் கோபப்படமாட்டார்கள். நீடிய பொறுமையுள்ளவர்களாக இருப்பார்கள். நம்முடைய இருதயத்தில் அன்பு நிரம்பியிருக்கும்போது நமக்குள் கலக்கம் இருக்காது.

அன்பு சலகத்தையும் விசுவாசிக்கும். சகலத்தையும் நம்பும். அன்பு விசுவாசத்திற்கு எதிரியல்ல. ஞானம் அன்போடு வாசம்பண்ணும். ஞானமுள்ளவர்கள் பிறரிடத்தில் எச்சரிக்கையோடு பழகுவார்கள். அன்புள்ளவர்கள் எல்லோரையும் நம்பி அவர்களிடத்தில் பழகுவார்கள். பிறரிடத்தில் தீயகுணங்கள் காணப்பட்டாலும், அவர்களிடத்தில்கூட ஏதாவது நற்குணம் காணப்படுகிறதா என்று தேடிப்பார்ப்பார்கள். அன்புள்ளவர்கள் சகலத்தையும் நம்பி, நீதியாய் நியாயந்தீர்ப்பார்கள்.

அன்புள்ளவர்களால் பிறருக்கு நன்மை செய்ய முடியாமல் போனாலும், பிறர் நன்றாயிருக்கவேண்டும் என்றே விரும்புவார்கள். தங்களால் பிறருக்கு உபகாரம் செய்யமுடியாமல் போனாலும், யாருக்கும் உபத்திரவம் பண்ணமாட்டார்கள். நம்முடைய இருதயத்தில் அன்பு பற்றியெரியவேண்டும். உண்மையான அன்புள்ளவர்கள் பாக்கியவான்கள். இவர்கள் கர்த்தரால் ஆசீர்வதிக்கப்படுவார்கள்.

## அன்பே பெரியது
## 1கொரி 13 : 8-13

**1கொரி 13:8. அன்பு ஒருக்காலும் ஒழியாது. தீர்க்க தரிசனங்களானாலும் ஒழிந்துபோம், அந்நிய பாஷைகளானாலும் ஓய்ந்துபோம், அறிவானாலும் ஒழிந்துபோம்.**

**1கொரி 13:9. நம்முடைய அறிவு குறைவுள்ளது, நாம் தீர்க்கதரிசனஞ் சொல்லுதலும் குறைவுள்ளது.**

**1கொரி 13:10. நிறைவானது வரும்போது குறைவானது ஒழிந்துபோம்.**

**1கொரி 13:11. நான் குழந்தையாயிருந்த போது குழந்தையைப்போலப் பேசினேன், குழந்தையைப்போலச் சிந்தித்தேன், குழந்தையைப்போல யோசித்தேன்; நான் புருஷனான போதோ குழந்தைக்கேற்றவைகளை ஒழித்துவிட்டேன்.**

**1கொரி 13:12. இப்பொழுது கண்ணாடியிலே நிழலாட்டமாய்ப் பார்க்கிறோம், அப்பொழுது முகமுகமாய்ப் பார்ப்போம்; இப்பொழுது நான் குறைந்த அறிவுள்ளவன், அப்பொழுது நான் அறியப்பட்டிருக்கிறபடியே அறிந்துகொள்ளுவேன்.**

**1கொரி 13:13. இப்பொழுது விசுவாசம், நம்பிக்கை, அன்பு இம்மூன்றும் நிலைத்திருக்கிறது; இவைகளில் அன்பே பெரியது.**

கொரிந்தியர்கள் ஆவியின் வரங்களில் அநேக வரங்களைப் பெற்றிருக்கிறார்கள். தாங்கள் பெற்றிருக்கிற வரங்களைக் குறித்து இருதயத்தில் பெருமையோடிருக்கிறார்கள். வரங்களைவிட அன்பே பெரியது என்பதை பவுல் கொரிந்தியருக்கு விவரித்துச் சொல்லுகிறார்.

அன்பு ஒருக்காலும் ஒழியாது. தேவனுடைய கிருபை மாறாதது. அது நிலைத்து நிற்கும். நித்திய காலம் வரைக்கும் தேவகிருபை மாறாமல் நிலைத்தே நிற்கும். அதுபோலவே அன்பும் ஒழியாது. தீர்க்கதரிசனங்களும் ஒழிந்துபோகும். அந்நிய பாஷைகளும் ஒழிந்துபோகும். பரலோகத்தில் நாமெல்லோரும் ஒரே பாஷையை மாத்திரமே பேசுவோம். பரிபூரணமான பரலோகத்தில் பாஷைகளினால் குழப்பமுண்டாகாது.

அறிவு ஒழிந்துபோகும். நம்முடைய ஆத்துமா பரிசுத்தமாயும், சந்தோஷமாயும் இருப்பதே மெய்யான அறிவு. கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை அறிந்திருப்பதே மெய்யான ஞானம். வரங்களைவிட அன்பே பெரியது என்று பவுல் விவரித்துச்சொல்லுகிறார். அன்பு ஒழிந்துபோகமல் நிலைத்துநிற்கக்கூடியது. ஆகையினால் அன்பே முக்கியமானது. மற்ற வரங்களெல்லாம் ஒழிந்துபோகக்கூடியது. ஆகையினால் வரங்களைவிட அன்பே முக்கியமானது. பரலோகத்தில் வரங்களுக்கு வேலையில்லை. ஆனால் அன்பு பரலோகத்திற்குள்ளும் பிரவேசிக்கும்.

நம்முடைய அறிவு குறைவுள்ளது. நாம் தீர்க்கதரிசனம் சொல்லுவதும் குறைவுள்ளது. அப்போஸ்தலர் மூலமாயும், ஊழியக்காரர்கள் மூலமாயும் தேவனைப்பற்றிய இரகசியங்களை ஓரளவு மாத்திரமே நாம் பெற்றிருக்கிறோம். தேவனுடைய குணாதிசயங்களைப் பூரணமாய் விவரிக்கக்கூடிய அறிவு மனுஷரிடத்திலில்லை. தீர்க்கதரிசனம் சொல்லுகிறவர்கள் தேவனுடைய இரகசியத்தைச் சொல்லுகிறார்கள். இவர்களுக்கும் தேவனுடைய இரகசியத்தில் ஒரு பகுதி மாத்திரமே வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. தீர்க்கதரிசிகள் தங்களுடைய குறைவான அறிவினால், குறைவான இரகசியத்தை மாத்திரமே தீர்க்கதரிசனமாகச் சொல்லுகிறார்கள்.

இப்பிரபஞ்சத்திலுள்ள கிறிஸ்துவின் சபை பரிபூரணமில்லாமலிருக்கிறது. பரிபூரணமில்லாத சபைக்கு தீர்க்கதரிசனம் தேவைப்படுகிறது. விசுவாசிகளாகிய நாம் பரலோகத்திற்குப் போகும்போது அங்கு நமக்கு தீர்க்கதரிசனம் தேவைப்படாது. தேவனுடைய இரகசியங்களெல்லாமே நமக்குப் பிரத்தியட்சமாய் வெளிப்படுத்தப்பட்டிருக்கும். ஆனால் அன்போ ஒரு காலும் ஒழியாது. அன்பு பரலோகத்திற்குள்ளும் பிரவேசிக்கும்.

அப்போஸ்தலர் பவுல் இப்பிரபஞ்சத்திலுள்ள சபையையும், பரலோகத்தையும் ஒப்பிட்டுச் சொல்லுகிறார். பரலோகம் எல்லாவிதத்திலும் மேன்மையானது. நாமெல்லோருமே பரலோகத்தை நோக்கித்தான் பிரயாணம் பண்ணுகிறோம். அதுவே நிறைவானது. இப்பிரபஞ்சத்திலுள்ள சபை குறைவானது. நிறைவானது வரும்போது, குறைவானது ஒழிந்துபோகும். பரலோகத்திலுள்ள சபை பரிபூரணமாயிருக்கும். அறிவிலும் பரிசுத்தத்திலும் அது பூரணமாயிருக்கும்.

பரலோகத்தில் எல்லா விசுவாசிகளுக்கும் தேவனைப்பற்றிய பரிபூரணமான வெளிப்படும் உண்டாயிருக்கும். அங்கு குழப்பமிருக்காது. எல்லாம் தெளிவாயிருக்கும். பரலோகத்து வாசிகள் ஒருவர்மீது ஒருவர் பொறாமைப்படமாட்டார்கள். அங்கு பொறாமையிருக்காது. அன்பு இருக்கும்.

இப்பிரபஞ்சத்தில் நாம் பல காரியங்களைக் குறித்து குழப்பத்திலிருக்கிறோம். ஒரே காரியத்தைக்குறித்து மனுஷருக்கு பல்வேறுவிதமான கருத்து வேறுபாடுகள் உண்டாயிருக்கிறது. சரீரப்பிரகாரமாக வளர்ச்சி பெற்றிருக்கிறவர், தன்னுடைய வளர்ச்சிக்கேற்ற பிரகாரம் சிந்திப்பார், பேசுவார், செயல்படுவார். நாம் குழந்தையாயிருந்தபோது, குழந்தையைப்போல பேசினோம், குழந்தையைப்போல சிந்தித்தோம், குழந்தையைப்போல யோசித்தோம். நாம் புருஷரான போதோ, குழந்தைக்கேற்றவைகளை ஒழித்து விட்டோம். நிறைவானது வரும்போது குறைவானது ஒழிந்துபோகும்.

நாம் பரலோகத்திற்குப் போகும்போது நம்முடைய மனக்கண்கள் தெளிவாய்த் திறக்கப்படும். இதுவரையிலும் நாம் அறிந்து கொள்ளாத இரகசியங்களையெல்லாம் பரலோகத்தில் அறிந்துகொள்வோம். அப்போது நம்முடைய அறிவு பூரணமாயிருக்கும். நம்முடைய அறிவில் குறைவோ, பிழையோ இருக்காது.

நாம் பரலோகத்தில் தேவனை முகமுகமாய்த் தரிசிப்போம். இப்போதோ கண்ணாடியிலே நிழலாட்டமாய்ப் பார்க்கிறதுபோலவே அவரைப் பார்க்கிறோம். பரலோகத்திற்குப் போனபின்போ நாம் அவரை முகமுகமாய்ப் பிரத்தியட்சமாய் பார்ப்போம். இந்தப்பிரபஞ்சத்திலிருந்து நாம் பரலோகத்திற்குள் பிரவேசிக்கும்போது நமக்கு பலமாற்றங்கள் உண்டாகும். இருளிலிருந்து வெளிச்சத்திற்கு மாறுவோம். மேகமூட்டத்திலிருந்து நீதியின் சூரியனுடைய வெளிச்சத்திற்கு மாறுவோம். தேவனுடைய வெளிச்சத்தில் நாம் எல்லாவற்றையும் தெளிவாகக் காண்போம். நாம் இந்தப் பூமியிலிருக்கும்போது தேவனுடைய வெளிச்சம் நமக்கு குறைவாகவே கொடுக்கப்பட்டிருக்கிறது. பரலோகமே நமக்கு நிறைவானது. இந்தப் பிரபஞ்சம் குறைவானது.

இப்பொழுது, இப்பிரபஞ்சத்தில் நாம் குறைந்த அறிவுள்ளவர்களாக இருக்கிறோம். பரலோகத்தில் நம்முடைய அறிவு பூரணப்பட்டிருக்கும். அப்போது ஒவ்வொரு சத்தியத்தையும் அறிந்து கொள்ளவேண்டிய பிரகாரமாக அறிந்துகொள்வோம். நாம் இந்தப் பூமியில் வாசம்பண்ணுவது கொஞ்சக்காலம். பரலோகமே நமக்கு நித்திய வாசஸ்தலம். இந்தப் பூமி குறைவுள்ளது. பரலோகம் நிறைவானது.

அப்போஸ்தலர் பவுல் விசுவாசம், நம்பிக்கை, அன்பு ஆகிய இம்மூன்றையும் ஒப்பிட்டுச் சொல்லுகிறார். இம்மூன்றுமே தேவனுடைய கிருபையினால் நமக்குக் கொடுக்கப்படுகிறது. இம்மூன்றில் அன்பே பெரியது. விசுவாசத்தினால் தேவனுடைய வெளிப்பாடுகளைப் பார்க்கிறோம். நம்முடைய நம்பிக்கையினால் வருங்காலத்தை நோக்கிப்பார்த்து, அந்தக் காலம் வருவதற்காக நம்பிக்கையோடு காத்துக்கொண்டிருக்கிறோம். ஆனால் அன்போ தேவனுடைய பரிபூரணத்தோடு நிலைத்து நிற்கிறது. நம்மை தேவனோடு இணைத்து ஐக்கியப்படுத்துகிறது.

பரலோகத்தில் விசுவாசம், நம்பிக்கை, அன்பு ஆகிய மூன்றும் இடம்பெற்றிருக்கும். இவற்றில் அன்பே பிரதானமாகவும் பூரணமாகவும் இருக்கும். நாம் தேவனிடத்தில் பரிபூரணமாய் அன்புகூருவோம். பரலோக வாசிகள் ஒவ்வொருவரிடத்திலும் பரிபூரணமாய் அன்புகூருவோம். பரலோகத்தில்கூட விசுவாசமும் நம்பிக்கையும் ஒழிந்துபோகும். அங்கும் அன்பே நிலைத்து நிற்கும். ஆகையினால் அன்பே பெரியது. பரலோகத்தில் நாம் தேவனை முகமுகமாகத் தரிசிக்கப்போகிறோம். அங்கு அன்பே பூரணமாயிருக்கும். அன்பே பெரியதாயிருக்கும்.

## 14 அதிகாரம்

அப்போஸ்தலர் பவுல் ஆவிக்குரிய வரங்களைக்குறித்து இந்த அதிகாரத்தில் மறுபடியுமாக விவரித்துச் சொல்லுகிறார். தீர்க்கதரிசன வரத்தை விசுவாசிகள் விரும்பவேண்டுமென்று ஆலோசனை சொல்லுகிறார் (1கொரி 14:1-5). அந்நிய பாஷைகளில் பேசினால் விசுவாசிகளுக்கு என்ன பிரயோஜனம் என்று கேட்கிறார் (1கொரி 14:6-14). நாம் ஆவியோடும் கருத்தோடும் கர்த்தரை ஆராதனை செய்யவேண்டும் (1கொரி 14:15-20). அந்நிய பாஷையில் பேசுவது அவிசுவாசிகளுக்கு அடையாளமாயிருக்கிறது(1கொரி 14:21-25). தேவன் கலகத்திற்கு தேவனாயிராமல், சமாதானத்திற்குத் தேவனாயிருக்கிறார் (1கொரி 14:26-33). சபைகளில் ஸ்திரீகள் பேசுவதை பவுல் தடைபண்ணுகிறார் (1கொரி 14:34,35). சகலமும் நல்லொழுக்கமாயும் கிரமமமாயும் செய்யப்படக்கடவது (1கொரி 14:36-40).

### தீர்க்கதரிசன வரம் 1கொரி 14 : 1-5

**1கொரி 14:1. அன்பை நாடுங்கள்; ஞானவரங்களையும் விரும்புங்கள்; விசேஷமாய்த் தீர்க்க தரிசன வரத்தை விரும்புங்கள்.**

**1கொரி 14:2. ஏனெனில், அந்நிய பாஷையில் பேசுகிறவன், ஆவியினாலே இரகசியங்களைப் பேசினாலும், அவன் பேசுகிறதை ஒருவனும் அறியாதிருக்கிறபடியினாலே, அவன் மனுஷரிடத்தில் பேசாமல், தேவனிடத்தில் பேசுகிறான்.**

**1கொரி 14:3. தீர்க்கதரிசனஞ் சொல்லுகிறவனோ மனுஷருக்கு பக்திவிருத்தியும், புத்தியும், ஆறுதலும் உண்டாகத்தக்கதாகப் பேசுகிறான்.**

**1கொரி 14:4. அந்நியபாஷையில் பேசுகிறவன் தனக்கே பக்திவிருத்தி உண்டாகப் பேசுகிறான்; தீர்க்கதரிசனஞ் சொல்லுகிறவனோ சபைக்கு பக்திவிருத்தி உண்டாகப் பேசுகிறான்.**

**1கொரி 14:5. நீங்களெல்லாரும் அந்நியபாஷைகளைப் பேசும்படி விரும்புகிறேன்; ஆகிலும், அந்நியபாஷைகளில் பேசுகிறவன் சபைக்கு பக்திவிருத்தி உண்டாகும்படிக்கு அர்த்தத்தையும் சொல்லாவிட்டால், தீர்க்கதரிசனஞ் சொல்லுகிறவன் அவனிலும் மேன்மையுள்ளவன்; ஆதலால் நீங்கள் தீர்க்கதரிசனஞ் சொல்லுகிறவர்களாக வேண்டுமென்று அதிகமாய் விரும்புகிறேன்.**

வரங்களில் வித்தியாசமுண்டு. ஞானவரங்களை நாம் விரும்பவேண்டும். அந்த வரங்களில் தீர்க்கதரிசன வரத்தை விசேஷமாய் விரும்பவேண்டும். அன்பையும் மறந்துவிடக்கூடாது. அதையும் நாடவேண்டும். அன்பே எல்லா கிருபைகளுக்கும் ஆதாரமாகயிருக்கிறது. அன்பில்லையென்றால் நமக்கு ஒன்றுமில்லை. ஆகையினால் முதலாவதாக நாம் அன்பை நாடவேண்டும்.

நாம் ஞானவரங்களை விரும்பவேண்டும். தேவன் நாம் விரும்புகிற பிரகாரமாக நமக்கு வரங்களைக் கொடுக்கிறார். ஆனாலும் எல்லா வரங்களும் தேவனுடைய கிருபைக்கும் அன்புக்கும் கீழ்ப்பட்டே கிரியை செய்யும். ஞானவரங்களில் தீர்க்கதரிசன வரத்தை, விசுவாசிகள் விசேஷமாய் விரும்பவேண்டுமென்று பவுல் ஆலோசனை சொல்லுகிறார். அதற்கான காரணத்தையும் இங்கு தெரியப்படுத்துகிறார். தீர்க்கதரிசனவரத்தை மற்ற எல்லா வரங்களோடும் ஒப்பிட்டுச் சொல்லாமல், அந்நிய பாஷையில் பேசுகிற வரத்தோடு மாத்திரம் ஒப்பிட்டுச் சொல்லுகிறார்.

அந்நிய பாஷையில் பேசுகிறவன் ஆவியினாலே இரகசியங்களைப் பேசுகிறான். சாதாரணமாக வேதவசனங்களை வியாக்கியானம் பண்ணுவதைவிட, ஆவியினாலே அந்நிய பாஷையில் பேசுவது மிகவும் விசேஷமானது. அந்நிய பாஷையில் பேசுகிறவன் மனுஷரிடத்தில் பேசாமல் தேவனிடத்தில் பேசுகிறான். ஆனாலும் அவன் பேசுகிறதை ஒருவரும் அறியமாட்டார்கள்.

விசுவாசிகள் சத்தியத்தைப் புரிந்துகொள்ளவில்லையென்றால் அது அவர்களுக்குப் பிரயோஜனமாயிராது. புரிந்துகொள்ளப்படாத சத்தியம் அவர்களுக்கு ஆவிக்குரிய போஜனமாயிராது. ஆனால் தீர்க்கதரிசனஞ் சொல்லுகிறவனோ மனுஷருக்கு பக்திவிருத்தியும், புத்தியும், ஆறுதலும் உண்டாகத்தக்கதாகப் பேசுகிறான். அந்நிய பாஷையில் பேசுகிறவன் தனக்கே பக்திவிருத்தி உண்டாகப் பேசுகிறான். இவனுடைய பேச்சின் மூலமாக வேறு யாருக்கும் எந்தப் பிரயோஜனமும் உண்டாகாது. பேசுகிறவனுக்கு மாத்திரமே பக்திவிருத்தி உண்டாகும். மற்றவர்களுக்கு பக்திவிருத்தி உண்டாகாது.

தீர்க்கதரிசனஞ் சொல்லுகிறவன் சபைக்கு பக்திவிருத்தியுண்டாகப் பேசுகிறான். அவனுடைய தீர்க்கதரிசன வாக்கியங்களை சபையார் புரிந்துகொண்டு பக்தி விருத்தியடைவார்கள். சபைக்கு எந்த வரம் அதிக நன்மையைச் செய்கிறதோ அந்த வரமே மிகவும் முக்கியமான வரம். ஆவிக்குரிய எல்லா வரங்களும் தேவனுடைய கிருபையினாலே நமக்கு இலவசமாகக் கொடுக்கப்படுகிறது. ஆனாலும் அந்த வரங்களில் சில வரங்கள் மிகவும் பிரயோஜனமுள்ளவை. அதிக மதிப்புள்ளவை.

அந்நிய பாஷைகளில் பேசுகிறவன், சபைக்கு பக்திவிருத்தியுண்டாகும்படிக்கு அர்த்தத்தையும் சொல்லவேண்டும். சொல்லாவிட்டால், தீர்க்கதரிசனஞ் சொல்லுகிறவன் அவனிலும் மேன்மையுள்ளவன். சபைக்கு பக்திவிருத்தியை உண்டாக்குகிற வரமே மேன்மையான வரம். ஆகையினால் விசுவாசிகள் தீர்க்கதரிசனஞ் சொல்லுகிறவர்களாக வேண்டுமென்று பவுல் அதிகமாய் விரும்புகிறார்.

விசுவாசிகள் தங்களிடத்திலுள்ள வரத்தைக்குறித்து பெருமைப்படுவதினால் ஒரு பிரயோஜனமுமில்லை. அவற்றை சபையின் பக்திவிருத்திக்காக பயன்படுத்தும்போதுதான், வரங்களினால் பிரயோஜனமுண்டாகும். அந்த வரங்களுக்கும், அந்த வரங்களைப் பயன்படுத்துகிறவர்களுக்கும் மேன்மையுண்டாகும்.

## அந்நிய பாஷைகளில் பேசுதல்
## 1கொரி 14 : 6-14

**1கொரி 14:6. மேலும், சகோதரரே, நான் உங்களிடத்தில் வந்து உங்களுக்கு இரகசியங்களை வெளிப்படுத்துவதற்காவது, அறிவு உண்டாக்குவதற்காவது, தீர்க்க தரிசனத்தை அறிவிக்கிறதற்காவது, போதகத்தைப் போதிக்கிறதற்காவது ஏதுவானதைச் சொல்லாமல், அந்நியபாஷைகளில் பேசினால் என்னாலே உங்களுக்குப் பிரயோஜனம் என்ன?**

**1கொரி 14:7. அப்படியே புல்லாங்குழல், சுரமண்டலம் முதலாகிய சத்தமிடுகிற உயிரில்லாத வாத்தியங்கள் தொனிகளில் வித்தியாசம் காட்டாவிட்டால், குழலாலே ஊதப்படுகிறதும், சுரமண்டலத்தாலே வாசிக்கப்படுகிறதும் இன்னதென்று எப்படித் தெரியும்?**

**1கொரி 14:8. அந்தப்படி எக்காளமும் விளங்காத சத்தமிட்டால் எவன் யுத்தத்திற்கு ஆயத்தம்பண்ணுவான்?**

**1கொரி 14:9. அதுபோல, நீங்களும் தெளிவான பேச்சை நாவினால் வசனியாவிட்டால் பேசப்பட்டது இன்னதென்று எப்படித் தெரியும்? ஆகாயத்தில் பேசுகிறவர்களாயிருப்பீர்களே.**

**1கொரி 14:10. உலகத்திலே எத்தனையோவிதமான பாஷைகள் உண்டாயிருக்கிறது, அவைகளில் ஒன்றும் அர்த்தமில்லாததல்ல**

**1கொரி 14:11. ஆயினும், பாஷையின் கருத்தை நான் அறியாமலிருந்தால், பேசுகிறவனுக்கு அந்நியனாயிருப்பேன், பேசுகிறவனும் எனக்கு அந்நியனாயிருப்பான்.**

**1கொரி 14:12. நீங்களும் ஆவிக்குரிய வரங்களை நாடுகிறவர்களானபடியால், சபைக்குப் பக்தி விருத்தி உண்டாகத்தக்கதாக அவைகளில் தேறும்படி நாடுங்கள்;**

**1கொரி 14:13. அந்தப்படி அந்நியபாஷையில் பேசுகிறவன் அதின் அர்த்தத்தையும் சொல்லத்தக்கதாக விண்ணப்பம்பண்ணக்கடவன்.**

**1கொரி 14:14. என்னத்தினாலெனில், நான் அந்நிய பாஷையிலே விண்ணப்பம் பண்ணினால், என் ஆவி விண்ணப்பம் பண்ணுமேயன்றி, என் கருத்து பயனற்றதாயிருக்கும்.**

ஊழியக்காரர்கள் சபையாரிடத்தில் தேவரகசியத்தை வெளிப்படுத்தவேண்டும். சத்திய வசனங்களை விளக்கிச் சொல்லி விசுவாசிகள் மத்தியில் வேதஅறிவை உண்டாக்கவேண்டும். தீர்க்கதரிசனத்தை அறிவிக்கவேண்டும். சத்திய வசனத்தைப் போதிக்கவேண்டும். ஊழியக்காரர்களின் ஊழியம் இவற்றிற்கு ஏதுவானதைச் செய்யவேண்டும். இப்படிச் செய்யாமல் ஊழியக்காரர்கள் அந்நிய பாஷைகளில் பேசினால், அவர்களால் சபையாருக்கு ஒரு பிரயோஜனமுமில்லை.

நாம் பேசுகிற பாஷைகளை விசுவாசிகள் புரிந்துகொள்ளவேண்டும். புரியாத பாஷையினால் பிரயோஜனம் ஒன்றுமில்லை. புல்லாங்குழலும் சுரமண்டலமும் தொனிகளில் வித்தியாசம் காண்பிக்கவேண்டும். அப்போதுதான் எது என்ன இசை என்பது கேட்போருக்குத் தெரியும். தொனிகளில் வித்தியாசமில்லையென்றால் அது வெறும் ஓசையாகவே இருக்கும். இசையாகயிராது. எக்காள சத்தம் கேட்கும்போது யுத்தவீரர்கள் யுத்தத்திற்கு ஆயத்தம்பண்ணுவார்கள். எக்காளம் விளங்காத சத்தமிட்டால் ஒருவனும் யுத்தத்திற்கு ஆயத்தம்பண்ணமாட்டான்.

அர்த்தமில்லாத வார்த்தைகளினால் நமக்குப் பிரயோஜனமில்லை. அர்த்தமில்லாத வார்த்தைகள் நம்முடைய மனதிற்கு எந்த உபதேசத்தையும், போதகத்தையும் தராது. புரிந்துகொள்ளாத வார்த்தைகள் அர்த்தமற்றவை. நம்முடைய பிரசங்கத்தை சபையார் புரிந்துகொள்ளவேண்டும். அதற்கேற்ற பிரகாரம் வார்த்தைகளைப் பயன்படுத்தவேண்டும். நம்முடைய பிரசங்கச் செய்தியை சபையார் புரிந்து கொள்ளவில்லையென்றால், நம்முடைய பிரசங்கத்தினால் ஒரு பிரயோஜனமுமில்லை. நாம் ஜனத்தாரிடத்தில் பேசாமல், ஆகாயத்தில் பேசுகிறவர்களாகயிருப்போம். நம்முடைய நாவினால் தெளிவான பேச்சை வசனிக்கவேண்டும். வெறும் சத்தமிட்டால், பேசப்பட்டது இன்னதென்று யாருக்கும் தெரியாது.

இந்த உலகத்தில் எத்தனையோ விதமான பாஷைகள் உண்டாயிருக்கிறது. அவைகளெல்லாமே அர்த்தமுள்ளவை. அந்நிய பாஷைகளில் பேசுகிறவன் அதின் அர்த்தத்தையும் சொல்லவேண்டும். அர்த்தத்தைச் சொல்லாமல் அந்நிய பாஷையில் பேசும்போது, அந்தப் பாஷையின் கருத்தை நாமும் அறியமாட்டோம். மற்றவர்களும் அறியமாட்டார்கள். அந்நிய பாஷையில் பேசுகிறவர்கள் கேட்கிறவர்களுக்கு அந்நியராயிருப்பார்கள். இந்தப் பாஷைகளைக் கேட்கிறவர்களும் பேசுகிறவர்களுக்கு அந்நியராயிருப்பார்கள்.

ஆகையினால் பாஷைகளில் பேசுகிறவர்கள் அர்த்தமுள்ள வார்த்தைகளைப் பயன்படுத்திப் பேசவேண்டும். நம்முடைய வார்த்தைகளைக் கேட்போருக்கு புரியும் வண்ணமாகப் பேசவேண்டும். இல்லையென்றால் பேசுகிறவரும் கேட்கிறவரும் ஒருவருக்கொருவர் அந்நியராகவே இருப்பார்கள். பேசப்படுகிற வார்த்தைகள் அர்த்தமற்ற வெறும் ஓசைகளாகவே இருக்கும். அர்த்தத்தைச் சொல்லாமல் சபையில் அந்நிய பாஷையில் பேசுகிறவன், சபையாருக்கும் அந்நியராகவே இருக்கிறான். சபையாரும் இவனுக்கு அந்நியராகவே இருப்பார்கள்.

விசுவாசிகள் ஆவிக்குரிய வரங்களை நாடவேண்டும். சபைக்கு பக்திவிருத்தி உண்டாகத்தக்கதாக அந்த வரங்களில் தேறும்படி நாடவேண்டும். மனுஷருடைய ஆத்துமாக்களுக்கு அதிக நன்மை செய்யக்கூடிய வரங்களை நாம் நாடி பெற்றுக்கொள்ளவேண்டும். நாம் அந்நிய பாஷைகளில் பேசுகிறவர்களாகயிருப்போமென்றால், நாம் பேசுவதன் அர்த்தத்தையும் சொல்லக்கூடிய வரத்தைக் கர்த்தர் நமக்குக் கொடுக்கவேண்டுமென்று அவரிடத்தில் விண்ணப்பம் பண்ணவேண்டும் (1கொரி 14:13). வார்த்தைகளைச் சபையார் புரிந்துகொள்ளவேண்டும். அப்போதுதான் விசுவாசிகள் பக்திவிருத்தியடைவார்கள்.

சபையில் நாம் எந்த வரத்தைப் பயன்படுத்தினாலும், அந்த வரங்கள் சபையாருக்குப் பிரயோஜனமுள்ளதாகயிருக்க வேண்டும். மற்ற விசுவாசிகளும் நம்மோடு சேர்ந்து ஆவிக்குரிய போஜனத்தைப்பெற்று, தங்கள் ஆவிக்குரிய ஜீவியங்களில் வளர்ச்சி பெறவேண்டும். அந்நிய பாஷையில் பேசுவதைப்பற்றி விவரிக்கும்போது, பவுல் தன்னையே எடுத்துக்காட்டாகச் சொல்லுகிறார். தான் அந்நிய பாஷையில் விண்ணப்பம்பண்ணினால், தன்னுடைய ஆவி மாத்திரமே விண்ணப்பம்பண்ணும் என்றும், தன்னுடைய கருத்து பயனற்றதாயிருக்குமென்றும் அறிக்கை செய்கிறார்.

ஆகையினால் நாம் விண்ணப்பம்பண்ணும்போதும், கர்த்தரைத் துதித்துப்பாடும்போதும் ஆவியோடும், கருத்தோடும் விண்ணப்பம்பண்ண வேண்டும், அப்படியே பாடவேண்டும். நம்முடைய ஆராதனையில் ஆவியும் இருக்கவேண்டும். கருத்தும் இருக்கவேண்டும். நாம் விண்ணப்பம் பண்ணுவது மற்ற விசுவாசிகளுக்கு பயனுள்ளதாகயிருக்கவேண்டும்.

## ஆவியோடும் கருத்தோடும் 1கொரி 14 : 15-20

**1கொரி 14:15. இப்படியிருக்க, செய்யவேண்டுவதென்ன? நான் ஆவியோடும் விண்ணப்பம் பண்ணுவேன், கருத்தோடும் விண்ணப்பம் பண்ணுவேன்; நான் ஆவியோடும் பாடுவேன், கருத்தோடும் பாடுவேன்.**

**1கொரி 14:16. இல்லாவிட்டால், நீ ஆவியோடு ஸ்தோத்திரம் பண்ணும்போது, கல்லாதவன் உன் ஸ்தோத்திரத்திற்கு ஆமென் என்று எப்படிச் சொல்லுவான்? நீ பேசுகிறது இன்னதென்று அவன் அறியானே.**

**1கொரி 14:17. நீ நன்றாய் ஸ்தோத்திரம்பண்ணுகிறாய், ஆகிலும் மற்றவன் பக்திவிருத்தியடைய மாட்டானே.**

**1கொரி 14:18. உங்களெல்லாரிலும் நான் அதிகமாய் பாஷைகளைப் பேசுகிறேன், இதற்காக என் தேவனை ஸ்தோத்திரிக்கிறேன்.**

**1கொரி 14:19. அப்படியிருந்தும், நான் சபையிலே அந்நியபாஷையில் பதினாயிரம் வார்த்தைகளைப் பேசுகிறதிலும், மற்றவர்களை உணர்த்தும்படி என் கருத்தோடே ஐந்து வார்த்தைகளைப் பேசுகிறதே எனக்கு அதிக விருப்பமாயிருக்கும்.**

**1கொரி 14:20. சகோதரரே, நீங்கள் புத்தியிலே குழந்தைகளாயிராதேயுங்கள்; துர்க்குணத்திலே குழந்தைகளாயும், புத்தியிலோ தேறினவர்களாயுமிருங்கள்.**

சபை ஆராதனையிலும் பொது இடங்களிலும் நாம் எவ்வாறு ஜெபிக்கவேண்டும் என்றும், ஸ்தோத்திரப்பாடல்களை எவ்வாறு பாடவேண்டும் என்றும் அப்போஸ்தலர் பவுல் ஆலோசனை சொல்லுகிறார். நாம் விண்ணப்பம் பண்ணுவதையும், பாடுவதையும் மற்ற விசுவாசிகள் புரிந்துகொள்ளவேண்டும். நம்மோடு சேர்ந்து அவர்களும் ஜெபிக்கவேண்டும். பொதுவான ஆராதனையை எல்லோருக்கும் புரியும்படியாக நடத்தவேண்டும். பவுல் இதற்கான காரணத்தை இந்த வசனப்பகுதியில் விவரிக்கிறார்.

ஆராதனையில் கல்வி கற்றவர்களும் இருப்பார்கள். கல்லாதவர்களும் இருப்பார்கள். ஒருவேளை கற்றவர்களுக்கு நாம் ஆவியோடு ஸ்தோத்திரம்பண்ணுவது புரிந்திருக்கலாம். கல்லாதவர்களுக்கு புரியாமலிருக்கலாம். புரியாவிட்டால் கல்லாதவன் நம்முடைய ஸ்தோத்திரத்திற்கு ஆமென் என்று சொல்லமாட்டான். நாம் பேசுவதை இன்னதென்றும் அறிந்துகொள்ளமாட்டான்.

ஆராதனையில் பங்குபெறுகிற எல்லோருமே, ஜெபங்கள் ஏறெடுக்கப்படும் போது, தங்கள் இருதயத்தில் ஆமென் என்று சொல்லவேண்டும். மனதிற்கு ஆமென் என்று சொல்லுவதை, எல்லோரும் கேட்கும் வண்ணமாக ஆமென் என்று சாட்சியாக அறிவிப்பதில் தவறு ஒன்றுமில்லை. விண்ணப்பம் பண்ணுவதையும் ஸ்தோத்திரம் பண்ணுவதையும் புரிந்துகொண்டவர்களால் மாத்திரமே ஆமென் என்று சொல்லமுடியும். புரிந்து கொள்ளாதவர்களால் ஆமென் என்று சொல்லமுடியாது.

அந்நியபாஷையிலே பொது ஆராதனையை நடத்தும்போது, அது அநேகருக்குப் புரியாததாகவே இருக்கிறது. புரியவில்லையென்றால் ஆராதனையின் நோக்கம் நிறைவேறாது. அந்நிய பாஷையில் நன்றாய் ஸ்தோத்திரம் பண்ணினாலும், மற்றவன் அதினால் பக்திவிருத்தியடையமாட்டான். அந்நிய பாஷையில் பேசுகிறவன் சபைக்கு பக்திவிருத்தி உண்டாகும்படிக்கு அதன் அர்த்தத்தையும் சொல்லவேண்டும். நாம் அந்நிய பாஷையில் பேசுவதன் அர்த்தத்தைச் சொல்லவில்லையென்றால், நாம் பேசுகிறது இன்னதென்று மற்றவன் அறிந்துகொள்ளமாட்டான். நம்மோடு இசைந்து ஆமென் என்று சொல்லவும் மாட்டான். புரியாமல் ஆமென் என்று சொல்வதினால் பிரயோஜனமில்லை.

பவுல் இந்த ஆலோசனையைச் சொல்லுவதற்கு தன்னையே ஒரு எடுத்துக்காட்டாகப் பயன்படுத்துகிறார். பவுலிடத்தில் ஆவிக்குரிய வரங்கள் அநேகமுள்ளது. கொரிந்து சபையிலுள்ள எல்லாரிலும் பவுல் அதிகமாய்ப் பாஷைகளைப் பேசுகிறார். இதற்காக தேவனைத் துதிக்கிறார். பவுல் கொரிந்து சபையிலுள்ள வரங்களைப் பார்த்து, பொறாமைப்பட்டு, தன்னைப்பற்றி இங்கு மேன்மையாகப் பேசவில்லை. அவர்களுக்கு ஆவிக்குரிய வரங்களின் அர்த்தத்தைப் போதிப்பதற்காகவே பவுல் இங்கு தன்னைப்பற்றிப் பேசுகிறார்.

பவுல் கொரிந்து சபையார்மீது பொறாமைப்படவில்லை. பவுலிடத்தில் அநேக வரங்கள் கிரியை செய்வதைப்பார்த்து, அவர்களைவிட பவுல் அதிகமாய்ப் பாஷைகளைப் பேசுவதைப் பார்த்து, அவர்கள்தான் பவுல்மீது பொறாமைப்பட்டிருப்பார்கள். தங்களிடத்தில் மேன்மையானது ஒன்றுமில்லாமலிருந்தும், கொரிந்தியர்கள் தங்களை மேன்மைப்படுத்துகிறார்கள். அவர்களுக்குப் புகழ்ச்சி எதுவும் இல்லாதிருந்தும், தற்புகழ்ச்சியடைகிறார்கள். அவர்களுக்கு அவர்களுடைய உண்மை நிலமையை விளக்கிக் காண்பிக்கவேண்டும். அதற்காகவே இங்கு பவுல் தன்னைப்பற்றிச் சொல்லுகிறார்.

அவர்களெல்லாரிலும் பவுல் அதிகமாய்ப் பாஷைகளைப் பேசுகிறார். அப்படியிருந்தும் சபையிலே அந்நிய பாஷையில் அதிகமான வார்த்தைகளைப் பேச அவருக்கு விருப்பமில்லை. அதற்குப் பதிலாக மற்றவர்களை உணர்த்தும்படி, தன் கருத்தோடே ஒரு சில வார்த்தைகளைப் பேசுவதே பவுலுக்கு விருப்பமாயிருக்கிறது (1கொரி 14:19). ஒவ்வொரு விசுவாசியும் பவுலைப்போலவே, பிறருடைய ஆத்துமாவுக்கு உதவிசெய்ய விரும்பவேண்டும். மற்றவர்கள் தங்களைப் பாராட்டவேண்டும் என்பதற்காக ஊழியம் செய்யக்கூடாது. நம்முடைய ஊழியம் பிறருக்கு நன்மை செய்யவேண்டும். தேவனுடைய நாமம் மகிமைப்படவேண்டும். விசுவாசிகள் பிரயோஜனமடையவேண்டும்.

விசுவாசிகளெல்லோரும் வரங்களை விரும்புகிறார்கள். சிலரிடத்தில் ஆவிக்குரிய முதிர்ச்சி காணப்படவில்லை. அவர்கள் சிறு குழந்தைகளைப்போல வரங்களைத் தங்களுடைய சுய சந்தோஷத்திற்காகவும், சுயமேன்மைக்காகவும் விரும்புகிறார்கள். கொரிந்து சபையிலுள்ள விசுவாசிகள் தங்கள் புத்தியிலே குழந்தைகளாக இருக்கிறார்கள். குழந்தைக்கேற்ற பிரகாரமாகச் சிந்திக்கிறார்கள்.

சிறுபிள்ளைகள் வேடிக்கைகளையும், விளையாட்டுக்களையும் விரும்புவார்கள். அதுபோலவே கொரிந்து சபையிலுள்ள விசுவாசிகள் வரங்களின் முக்கியத்துவத்தைப் புரிந்துகொள்ளாமல், எல்லோரும் தங்களை வேடிக்கை பார்க்கவேண்டுமென்றும், தங்களைப் பாராட்டி புகழவேண்டுமென்றும் ஆசைப்பட்டு, அந்நிய பாஷையிலே அநேக வார்த்தைகளைப் பேசுகிறார்கள். பவுல் அவர்களுக்கு ஆலோசனை சொல்லும்போது, அவர்கள் புத்தியிலே குழந்தைகளாகயிருக்கக்கூடாது என்றும், தேறினவர்களாகயிருக்கவேண்டும் என்றும் சொல்லுகிறார். மேலும் அவர்கள் துர்க்குணத்திலே குழந்தைகளாயிருக்க வேண்டும்மென்றும் ஆலோசனை சொல்லுகிறார்.

சிறு பிள்ளைகள் ஒன்றுமில்லாத காரியங்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுப்பார்கள். சாதாரண பிரயோஜனமில்லாத காரியங்கள் அவர்களுக்கு அதிகப் பிரயோஜனமுள்ளதாய்த் தெரியும். அவர்கள் புத்தியிலே குழந்தைகளாயிருக்கிறார்கள். கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் துர்க்குணத்தில் தான் குழந்தைகளாகயிருக்க வேண்டும். நம்முடைய புத்தியிலோ தேறினவர்களாகயிருக்க வேண்டும். நம்மிடத்திலுள்ள ஞானமும் அறிவும் வளர்ச்சியடைந்து பக்குவப்பட்டிருக்க வேண்டும்.

## அந்நியபாஷைகள் அவிசுவாசிகளுக்கு அடையாளம் 1கொரி 14 : 21-25

1கொரி 14:21. மறுபாஷைக்காரராலும், மறு உதடுகளாலும் இந்த ஜனங்களிடத்தில் பேசுவேன்; ஆகிலும் அவர்கள் எனக்குச் செவி கொடுப்பதில்லையென்று கர்த்தர் சொல்லுகிறார் என்று வேதத்தில் எழுதியிருக்கிறதே.

1கொரி 14:22. அப்படியிருக்க, அந்நியபாஷைகள் விசுவாசிகளுக்கு அடையாளமாயிராமல், அவிசுவாசிகளுக்கு அடையாளமாயிருக்கிறது; தீர்க்கதரிசனமோ அவிசுவாசிகளுக்கு அடையாளமாயிராமல், விசுவாசிகளுக்கு அடையாளமாயிருக்கிறது.

1கொரி 14:23. ஆகையால், சபையாரெல்லாரும் ஏகமாய்க் கூடிவந்து, எல்லாரும் அந்நிய பாஷைகளிலே பேசிக்கொள்ளும் போது, கல்லாதவர்களாவது, அவிசுவாசிகளாவது உள்ளே பிரவேசித்தால், அவர்கள் உங்களைப் பைத்தியம் பிடித்தவர்களென்பார்களல்லவா?

1கொரி 14:24. எல்லாரும் தீர்க்கதரிசனஞ் சொல்லுகையில், அவிசுவாசியொருவன், அல்லது கல்லாதவனொருவன், உள்ளே பிரவேசித்தால், அவன் எல்லாராலும் உணர்த்துவிக்கப்பட்டும், எல்லாராலும் நிதானிக்கப்பட்டும் இருப்பான்.

1கொரி 14:25. அவனுடைய இருதயத்தின் அந்தரங்கங்களும் வெளியரங்கமாகும்; அவன் முகங்குப்புற விழுந்து, தேவனைப் பணிந்துகொண்டு, தேவன் மெய்யாய் உங்களுக்குள்ளே இருக்கிறாரென்று அறிக்கையிடுவான்.

கொரிந்து சபையில் அநேக விசுவாசிகள் அந்நிய பாஷைகளில் பேசுகிறார்கள். இதனால் யாருக்கும் பக்திவிருத்தி உண்டாகவில்லை. அவர்கள் அந்நிய பாஷையில் பேசுவதன் மூலமாய் தேவனுடைய இரக்கம் யாருக்கும் காண்பிக்கப்படவில்லை. அவர்கள் அந்நிய பாஷையில் பேசுவது தேவனிடத்திலிருந்து வரும் நியாயத்தீர்ப்புக்கு அடையாளமாயிருக்கிறது. மறு பாஷைக்காரராலும் மறுஉதடுகளாலும் இந்த ஜனங்களிடத்தில் பேசுவேன். ஆகிலும் அவர்கள் எனக்குச் செவிகொடுப்பதில்லையென்று கர்த்தர் சொல்லுகிறார்.

கர்த்தருடைய பிள்ளைகள் கர்த்தரைவிட்டுப் பின்வாங்கி, அவருடைய சமுகத்தைவிட்டு விலகிப்போகும்போது, கர்த்தர் அவர்களை மற்ற பாஷைகளைப் பேசுகிற அந்நிய ஜனத்தாரிடம் ஒப்புக்கொடுத்து விடுகிறார். மறுபாஷைக்காரரும் மறுஉதடுகள் உள்ள ஜனங்களும் கர்த்தருடைய ஜனங்களை ஆளுகை செய்வார்கள். அவர்கள் மூலமாய்க் கர்த்தர் பேசுவார். ஆகிலும் அவர்கள் கர்த்தருக்குச் செவி கொடுப்பதில்லை. அந்நிய தேசத்திற்குப் போனாலும் அவர்களுடைய இருதயம் குணப்படாமலேயே இருக்கிறது.

பவுல் இஸ்ரவேல் ஜனத்தாரின் வரலாற்றை இங்கு ஒரு எடுத்துக்காட்டாகச் சொல்லுகிறார். தங்கள் வரலாற்றில் அவர்கள் அநேக அந்நிய பாஷைகளைக் கேட்டிருக்கிறார்கள். ஆனாலும் அவர்களுக்கு அந்நிய பாஷைகளினால் ஒரு பிரயோஜனமும் உண்டாகவில்லை.

இப்போது கொரிந்து சபையிலுள்ள விசுவாசிகளில் அநேகர் அந்நிய பாஷைகளில் பேசுகிறார்கள். தாங்கள் அந்நிய பாஷையில் பேசுவதற்கு அர்த்தம் சொல்லாமலேயே பேசுகிறார்கள். இதனால் ஒருவருக்கும் பக்திவிருத்தி உண்டாகவில்லை. தேவனுடைய கிருபையையும் இரக்கத்தையும் யாரும் பெற்றுக்கொள்ளவில்லை. தேவன் தம்முடைய நியாயத்தீர்ப்பை அவர்களுக்குச் சொல்லுகிறார் என்பதையும் அவர்கள் புரியாதவர்களாகவே இருக்கிறார்கள்.

கொரிந்து சபையிலுள்ள ஊழியக்காரர்கள், ஆவியினால் ஏவப்பட்டு, அந்நிய பாஷைகளில் அவர்களுக்குச் செய்திகளைக் கொடுக்கிறார்கள். கொரிந்து சபை விசுவாசிகளோ செய்தியின் பொருளை அறியாதவர்களாகவே இருக்கிறார்கள்.

அந்நிய பாஷைகள் விசுவாசிகளுக்கு அடையாளமல்ல. அது அவிசுவாசிகளுக்கு அடையாளமாயிருக்கிறது. சுவிசேஷப் பிரபலியத்திற்கு அந்நிய பாஷைகளின் வரம் பிரயோஜமுள்ளதாயிருக்கிறது. அவிசுவாசிகளை உணர்த்தவேண்டும். வேதவாக்கியங்களை அவர்களுக்குப் புரிகிற பாஷைகளில் பேசவேண்டும். அப்போதுதான் அவர்கள் தங்கள் பாவங்களைக் குறித்து உணர்வடைவார்கள்.

வேத வாக்கியங்களை விசுவாசிகளுக்குப் புரிகிற பாஷைகளில் வியாக்கியானம் சொல்லி விளக்கவேண்டும். அப்போதுதான் ஏற்கெனவே விசுவாசிகளாக இருக்கிறவர்கள் பக்தி விருத்தியடைவார்கள். ஆவியானவர் கொடுக்கிற வரங்களை சரியாகப் பயன்படுத்தவேண்டும். ஆவியானவர் எந்த நோக்கத்திற்காக நமக்கு வரங்களைக் கொடுக்கிறாரோ அந்த நோக்கம் நிறைவேறுவதற்காகவே வரங்களைப் பயன்படுத்தவேண்டும். நம்முடைய சுயபெருமைக்காகவோ, சுய புகழ்ச்சிக்காகவோ வரங்களைப் பயன்படுத்தக்கூடாது.

அந்நிய பாஷைகள் அவிசுவாசிகளுக்கு அடையாளமாயிருக்கிறது. அவிசுவாசிகளோடு பேசும்போது அந்நிய பாஷைகளின் வரம் நமக்குத் தேவை. அவர்களுக்குப் புரிகிற பாஷைகளில் பேசினால்தான் அவர்கள் சுவிசேஷத்தின் அர்த்தத்தைப் புரிந்துகொள்வார்கள். ஆகையினால் சபையில் அந்நிய பாஷையில் பேசுவதற்குப் பதிலாக, அவர்களுக்குப் புரிகிற பாஷையில் மாத்திரமே பேசவேண்டும். அந்நிய பாஷைகள் விசுவாசிகளுக்கு அடையாளமல்ல. தீர்க்கதரிசனமே விசுவாசிகளுக்கு அடையாளமாயிருக்கிறது.

அப்போஸ்தலர் பவுல் அந்நிய பாஷைகளில் பேசுவதையும், தீர்க்கதரிசனஞ்சொல்லுவதையும் இங்கு ஒப்பிட்டுப் பேசுகிறார். சபையில் தீர்க்கதரிசனமே விசுவாசிகளுக்கு அடையாளமாயிருக்கிறது. விசுவாசிகள் மத்தியில் அந்நிய பாஷைகளில் பேசுவதற்குப் பதிலாக, தீர்க்கதரிசன வார்த்தைகளைப் பேசவேண்டும்.

விசுவாசிகள் சபையாகக் கூடிவந்திருக்கும்போது எல்லாரும் அந்நிய பாஷைகளில் பேசினால் அது கல்லாதவர்களுக்கும் அவிசுவாசிகளும் புரியாது. தங்களுக்குப் புரியாமல் அந்நிய பாஷைகளில் பேசுகிறவர்களை பைத்தியம் பிடித்தவர்கள் என்பார்கள். புறஜாதியார் மத்தியில் கிறிஸ்துவின் நாமம் தூஷிக்கக்கப்படக்கூடாது. இப்படிப்பட்ட சூழ்நிலைகளில் அந்நிய பாஷைகளில்பேசி அவமானப்படுவதற்குப் பதிலாக, எல்லோருக்கும் புரிகிற பாஷையில் பேசி தேவனுடைய நாமத்தை மகிமைப்படுத்தலாம்.

தீர்க்கதரிசனஞ் சொல்லும்போது அவிசுவாசியோ அல்லது கல்லாதவனோ சபைக்குள் பிரவேசிக்கும்போது அவன் தீர்க்கதரிசன வார்த்தைகளினால் உணர்த்துவிக்கப்படுவான். தீர்க்கதரிசனஞ் சொல்லுகிறவர்களெல்லோரும் அவனை நிதானித்து அறிவார்கள். அவனுடைய இருதயத்தின் அந்தரங்கங்கள் வெளியரங்கமாகும். அவன் முகங்குப்புற விழுந்து தேவனைப்பணிந்து கொள்வான். சபையில் தேவன் மெய்யாயிருக்கிறாரென்று அறிக்கை செய்வான். தன்னுடைய பாவங்கள் உணர்த்தப்பட்டு, கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவிடத்தில் தன்னுடைய பாவங்களை அறிக்கையிட்டு இரக்கம் பெறுவான். ஆத்துமாவில் இரட்சிக்கப்படுவான்.

அந்நிய பாஷைகளில் பேசுவது அவிசுவாசிகளுக்கு அடையாளமாயிருக்கிறது. தீர்க்கதரிசனம் பேசுவது விசுவாசிகளுக்கு அடையாளமாயிருக்கிறது. தீர்க்கதரிசனம் பேசும்போது விசுவாசிக்கு பக்திவிருத்தி உண்டாகிறது. அவிசுவாசிக்கு இரட்சிப்பு உண்டாகிறது. சுயபெருமைக்காகவோ, சுயபுகழ்ச்சிக்காகவோ ஆவியானவரின் வரங்களைப் பயன்படுத்தக்கூடாது. ஆத்துமாக்களின் இரட்சிப்புக்காகவும், சபையின் பக்திவிருத்திக்காகவும் ஆவியின் வரங்களைப் பயன்படுத்தவேண்டும்.

## சமாதானத்திற்குத் தேவன் 1கொரி 14 : 26-33

**1கொரி 14:26. நீங்கள் கூடிவந்திருக்கிறபோது, உங்களில் ஒருவன் சங்கீதம் பாடுகிறான், ஒருவன் போதகம்பண்ணுகிறான், ஒருவன் அந்நியபாஷையைப் பேசுகிறான், ஒருவன் இரகசியத்தை வெளிப்படுத்துகிறான், ஒருவன் வியாக்கியானம் பண்ணுகிறான். சகோதரரே, இது என்ன? சகலமும் பக்திவிருத்திக்கேதுவாகச் செய்யப்படக்கடவது.**

**1கொரி 14:27. யாராவது அந்நிய பாஷையிலே பேசுகிறதுண்டானால், அது இரண்டுபேர்மட்டில், அல்லது மிஞ்சினால் மூன்றுபேர்மட்டில் அடங்கவும், அவர்கள் ஒவ்வொருவராய்ப் பேசவும், ஒருவன் அர்த்தத்தைச் சொல்லவும் வேண்டும்.**

**1கொரி 14:28. அர்த்தஞ் சொல்லுகிறவனில்லாவிட்டால், சபையிலே பேசாமல், தனக்கும் தேவனுக்கும் தெரியப் பேசக்கடவன்.**

**1கொரி 14:29. தீர்க்கதரிசிகள் இரண்டுபேராவது மூன்றுபேராவது பேசலாம், மற்றவர்கள் நிதானிக்கக்கடவர்கள்.**

**1கொரி 14:30. அங்கே உட்கார்ந்திருக்கிற மற்றொருவனுக்கு ஏதாகிலும் வெளிப்படுத்தப்பட்டால், முந்திப் பேசினவன் பேசாமலிருக்கக்கடவன்.**

**1கொரி 14:31. எல்லாரும் கற்கிறதற்கும் எல்லாரும் தேறுகிறதற்கும், நீங்கள் அனைவரும் ஒவ்வொருவராகத் தீர்க்கதரிசனஞ்சொல்லலாம்.**

**1கொரி 14:32. தீர்க்கதரிசிகளுடைய ஆவிகள் தீர்க்கதரிசிகளுக்கு அடங்கியிருக்கிறதே.**

**1கொரி 14:33. தேவன் கலகத்திற்கு தேவனாயிராமல், சமாதானத்திற்கு தேவனாயிருக்கிறார்; பரிசுத்த வான்களுடைய சபைகளெல்லாவற்றிலேயும் அப்படியே இருக்கிறது.**

சபையில் ஒரு சிலர் குழப்பத்தை உண்டுபண்ணுகிறார்கள். விசுவாசிகள் கூடிவந்திருக்கிற போது சகலமும் பக்திவிருத்திகேதுவாக செய்யப்பட வேண்டும். ஆனால் அவர்களோ, சகலவற்றையும் நல்லொழுக்கமாயும், கிரமமமாயும் செய்வதற்குப் பதிலாக, தங்களுடைய சுயஇஷ்டத்தின் பிரகாரம் செய்கிறார்கள். அவர்களில் ஒருவன் சங்கீதம் பாடுகிறான், ஒருவன் போதகம்பண்ணுகிறான், ஒருவன் அந்நிய பாஷையைப் பேசுகிறான், ஒருவன் இரகசியத்தை வெளிப்படுத்துகிறான். ஒருவன் வியாக்கியானம் பண்ணுகிறான். சபையில் நடைபெறுகிற இந்த சம்பவங்களையெல்லாம் பார்த்து, பவுல் அவர்களிடம் "சகோதரரே, இது என்ன" என்று கேட்கிறார். ஏனெனில் இவை பக்திவிருத்திகேதுவாக செய்யப்படவில்லை.

கொரிந்து சபையில் காணப்படுகிற குழப்பத்தை பவுல் திருத்துகிறார். யாராவது அந்நிய பாஷையில் பேசுகிறதுண்டானால், அது இரண்டு பேர் மட்டில் அல்லது மூன்றுபேர் மட்டில் பேசவேண்டும். அவர்களும் ஒவ்வொருவராய் பேசவேண்டும். ஒருவன் அந்நிய பாஷையில் பேசப்பட்டதன் அர்த்தத்தையும் சொல்லவேண்டும். அர்த்தம் சொல்லுகிறவன் இல்லாவிட்டால், விசுவாசிகள் சபையில் அந்நிய பாஷையில் பேசவேண்டாம் என்று பவுல் சொல்லுகிறார். அவன் சபையில் வெளிப்படையாகப் பேசாமல், தனக்கும் தேவனுக்கும் தெரியப்பேசலாம். ஆகையினால் அந்நிய பாஷையில் பேசும்போது, அதற்கு அர்த்தம் சொல்லுவது அவசியமாயிருக்கிறது.

தீர்க்கதரிசனமும் எப்படி சொல்லவேண்டுமென்று பவுல் ஆலோசனை சொல்லுகிறார். விசுவாசிகள் கூடிவந்திருக்கிறபோது, இரண்டுபேராவது, மூன்றுபேராவது பேசலாம். மற்றவர்கள் நிதானிக்கவேண்டும். தீர்க்கதரிசனம் சொல்லுகிறவர்கள் நல்ல தீர்க்கதரிசிகளாகவும் இருக்கலாம், கள்ளத்தீர்க்கதரிசிகளாகவும் இருக்கலாம். ஆகையினால் விசுவாசிகள் தீர்க்கதரிசனம் சொல்லுகிறவர்களை நிதானிக்கவேண்டும். தேவனுடைய ஆவியினால் அவர்கள் ஏவப்பட்டு பேசுகிறார்கள் என்பதை சபையார் நிதானித்து அறியவேண்டும்.

ஒருவர் தீர்க்கதரிசனம் சொல்லும்போது, அங்கே உட்கார்ந்திருக்கிற மற்றொருவனுக்கு ஏதாகிலும் வெளிப்படுத்தப்பட்டால், முந்திப் பேசினவன் பேசாமலிருக்கவேண்டும் என்றும் பவுல் யோசனை சொல்லுகிறார். இவருக்கு புதிய வெளிப்பாடு கிடைத்திருக்கிறது. தேவன் கொடுத்திருக்கிற புதிய வெளிப்பாட்டை தீர்க்கதரிசனமாகச் சொல்லுவதற்கு சபையில் முன்னுரிமை கொடுக்கப்பட வேண்டும். மேலும் முந்தி தீர்க்கதரிசனம் சொன்னவன் பேசாமலிருந்து, மற்றவன் தீர்க்கதரிசனம் சொல்லுவதற்கு வாய்ப்புக் கொடுக்கவேண்டும். இதனால் விசுவாசிகள் அனைவரும் ஒவ்வொருவராக தீர்க்கதரிசனம் சொல்லுவதற்கு வாய்ப்பு கிடைக்கும்.

புறஜாதி ஜனங்கள் விக்கிரகாராதனையின்போது, தங்கள் சத்தத்தை உயர்த்தி, சரீரத்தைக் குலுக்கி, மகாசத்தமாய் ஒலமிட்டு, விக்கிரகங்களின் வார்த்தைகளைச் சொல்லுவார்கள். அவர்களுடைய சத்தத்தை அவர்களால் அடக்க முடியாது. கட்டுப்பாடில்லாமல் கத்துவார்கள். பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்டு தீர்க்கதரிசனம் சொல்லுகிறவர், புறஜாதியாரைப்போல கட்டுக்கடங்காமல் பேசக்கூடாது. தீர்க்கதரிசிகளின் ஆவிகள் தீர்க்கதரிசிகளுக்கு அடங்கியிருக்கிறது. ஆகையினால் கர்த்தருடைய தீர்க்கதரிசிகள் நிதானமாயும், அமைதியாயும் தீர்க்கதரிசனங்களை தெளிந்த வார்த்தைகளினால் பேசவேண்டும்.

தேவனுடைய ஆவியினால் ஏவப்பட்டு தீர்க்கதரிசனம் சொல்லுகிறவர், சபையின் இயல்பான நடவடிக்கைகளை கவனித்துக்கொண்டிருக்கிறார். அவர் மயக்க நிலையில் இல்லை. சுயாதீன நிலையில்தான் இருக்கிறார். ஆகையினால் கர்த்தர் கொடுக்கிற தீர்க்கதரிசன வெளிப்பாடுகளை, பயபக்தியோடு, சபையின் பக்திவிருத்திக்கு ஏதுவாக, தெளிவாய்ப் பேசவேண்டும்.

அந்நிய பாஷையில் பேசுவதற்கும், தீர்க்கதரிசனம் சொல்லுவதற்கும் பவுல் இதுபோல கட்டுப்பாடுகளைச் சொல்லிவிட்டு, இந்தக் கட்டுப்பாடுகளைக் கடைப்பிடிக்க வேண்டியதன் காரணத்தையும் சொல்லுகிறார். அந்நிய பாஷையில் பேசுவதும், தீர்க்கதரிசனம் சொல்லுவதும் சபையின் பக்திவிருத்திக்கேதுவாக செய்யப்பட வேண்டும். தேவஆவியினால் ஏவப்பட்டு பேசும்போது சபையில் சந்தோஷமும் சமாதானமும், ஒற்றுமையும் ஒருமனமும் உண்டாகவேண்டும். கலகத்தை உண்டுபண்ணிவிடக்கூடாது. தேவன் கலகத்திற்குத் தேவனாயிராமல், சமாதானத்திற்குத் தேவனாயிருக்கிறார்.

சபையார் குழப்பத்திலும் கலகத்திலும் இருக்கும்போது அவர்களால் கர்த்தரை ஆவியோடும், உண்மையோடும், சமாதானத்தோடும் ஆராதிக்க முடியாது. விசுவாசிகள் கலகத்திலும் குழப்பத்திலும் இருக்கும்போது, அவர்களுடைய தேவனும் கலகத்திற்குத் தேவனென்று புறஜாதியார் நிதானிப்பார்கள். ஆனால் கர்த்தரோ கலத்திற்குத் தேவனாயிராமல் சமாதானத்திற்குத் தேவனாயிருக்கிறார். குழப்பத்திற்கு விரோதியாயிருக்கிறார். சகலமும் நல்லொழுக்கமாயும் கிரமமாயும் செய்யப்படவேண்டுமென்பது தேவனுடைய சித்தம்.

கொரிந்து சபை மாத்திரமல்லாமல், பரிசுத்தவான்களுடைய எல்லா சபைகளிலும் கர்த்தர் சமாதானத்திற்குத் தேவனாயிருக்கிறார். ஆகையினால் எல்லா சபைகளிலும் சகலமும் நல்லொழுக்கமாயும் கிரமமாயும் செய்யப்படவேண்டும். ஆவியானவர் விசுவாசிகளுக்கு ஏராளமான வரங்களைக் கொடுக்கும்போது, அவற்றை தாறுமாறாகப் பயன்படுத்தக்கூடாது. சபையில் பக்திவிருத்தி உண்டாவதற்குப் பதிலாக, சபையில் குழப்பமும் கலகமும் வருவதற்கு வரங்களைப் பயன்படுத்தி விடக்கூடாது. ஒவ்வொரு வரத்தையும் நல்லொழுக்கமாயும் கிரமமாயும் பயன்படுத்தவேண்டும்.

## ஸ்திரீகள்
## 1கொரி 14 : 34,35

**1கொரி 14:34. சபைகளில் உங்கள் ஸ்திரீகள் பேசாமலிருக்கக் கடவர்கள்; பேசும் படிக்கு அவர்களுக்கு உத்தரவில்லை; அவர்கள் அமர்ந்திருக்கவேண்டும்; வேதமும் அப்படியே சொல்லுகிறது.**

**1கொரி 14:35. அவர்கள் ஒரு காரியத்தைக் கற்றுக் கொள்ள விரும்பினால், வீட்டிலே தங்கள் புருஷரிடத்தில் விசாரிக்கக்கடவர்கள்; ஸ்திரீகள் சபையிலே பேசுகிறது அயோக்கியமாயிருக்குமே.**

சபைகளில் ஸ்திரீகள் எப்படி நடந்துகொள்ளவேண்டுமென்று பவுல் ஏற்கெனவே ஆலோசனை சொல்லியிருக்கிறார் (1கொரி 11:5-15). அதே ஆலோசனையை பவுல் இங்கு மறுபடியுமாகச் சொல்லுகிறார். ஸ்திரீயானவள் தேவனை நோக்கி ஜெபம்பண்ணலாம். விசுவாசிகளுக்கு தீர்க்கதரிசனமும் சொல்லலாம். பவுல் இதைத் தடைபண்ணவில்லை. ஆனால் ஸ்திரீகள் ஜெபம்பண்ணுகிறபோதும், தீர்க்கதரிசனம் சொல்லுகிறபோதும் எப்படி நடந்துகொள்ள வேண்டுமென்று ஆலோசனை சொல்லுகிறார் (1கொரி 11:4).

சபைகளில் ஸ்திரீகள் பேசாமலிருக்கவேண்டும். பேசும்படிக்கு அவர்களுக்கு உத்தரவில்லை. அவர்கள் அமர்ந்திருக்கவேண்டுமென்று, வேதமும் அப்படியே சொல்லகிறது என்றும் பவுல் ஆலோசனை சொல்லுகிறார். ஸ்திரீகள் சபையிலே பேசுகிறது அயோக்கியமாயிருக்கும் என்றும் சொல்லுகிறார். அவர்கள் ஒரு காரியத்தை கற்றுக்கொள்ள விரும்பினால், வீட்டிலே தங்கள் புருஷரிடத்தில் விசாரித்துக் கொள்ளலாம் என்றும் பவுல் ஆலோசனை சொல்லுகிறார்.

ஸ்திரீகள் ஜெபம்பண்ணலாமென்றும், தீர்க்கதரிசனம் சொல்லலாமென்றும் பவுல் அனுமதித்திருக்கிறார். ஆனாலும் சபைகளில் ஸ்திரீகள் பேசாமல் அமர்ந்திருக்கவேண்டும் என்றும் ஆலோசனை சொல்லுகிறார். சபைகளில் பேசும்படிக்கு ஸ்திரீகளுக்கு உத்தரவு இல்லை.

பவுலின் ஆலோசனையின் பிரகாரம் ஸ்திரீகள் சபைகளில் உபதேசம் பண்ணக்கூடாது. உபதேசம்பண்ணுகிற புருஷர்களிடம் ஸ்திரீகள் சபைகளில் விவாதம்பண்ணக்கூடாது. போதகத்தை அமைதியாகக் கவனித்துக் கேட்கவேண்டும். அமைதியாகயிருந்து உபதேசத்தைக் கற்றுக்கொள்ளவேண்டும். பிரசங்கச் செய்தியில் அவர்களுக்கு ஏதாவது சந்தேகமிருக்குமென்றால், அல்லது ஒரு சத்தியத்தை இன்னும் அதிகமாய்க் கற்றுக்கொள்ள வேண்டுமென்று விரும்பினால், அவர்கள் தங்கள் வீட்டிலே, தங்கள் புருஷரிடத்தில் அதைப் பற்றி விசாரிக்கவேண்டும். தங்கள் புருஷரிடத்திலிருந்து கற்றுக்கொள்ளவேண்டும்.

ஸ்திரீயானவள் புருஷனுக்குக் கீழ்ப்படிந்து சத்தியத்தைக் கற்றுக்கொள்ளவேண்டும். இது அவளுக்கு நியமிக்கப்பட்டிருக்கிற கடமை. புருஷனும் தன் மனைவிக்கு போதகம்பண்ணும் அளவுக்கு வேதவசனத்தில் கற்றுத் தேர்ச்சி பெற்றவனாகயிருக்கவேண்டும். தன்னுடைய மனைவியை ஆளுகை செய்யக்கூடிய ஆற்றலும் புருஷனுக்கு இருக்கவேண்டும். இது புருஷனுக்கு நியமிக்கப்பட்டிருக்கிற கடமை.

ஸ்திரீகள் சபையில் பேசுகிறது அயோக்கியமாயிருக்கும். ஆகையினால் அங்கு அவர்கள் அமைதியாயிருக்க வேண்டும். புருஷர்கள் சபையில் பேசவேண்டும். வீட்டில் தன் மனைவி தன்னிடத்தில் சத்தியத்தை உபதேசிக்குமாறு கேட்கும்போது, அவளுக்கு உபதேசிக்கவும் ஆயத்தமாயிருக்கவேண்டும். இப்படிப்பட்ட சூழ்நிலைகளில் புருஷன் பேசாமலிருப்பது அயோக்கியமாயிருக்கும்.

சபையில் ஸ்திரீகள் பேசுவது அயோக்கியமாயிருக்கும் என்று பவுல் சொல்லும்போது, இது கண்ணியமாயிருக்காது என்று பொருள்படுமாறு சொல்லுகிறார். ஸ்திரீயானவள் தன் ஸ்தானத்திலிருந்து விலகி, சபையில் ஏற்றுக் கொள்ளக்கூடாததைச் செய்வதற்குப் பதிலாக, அவள் அமைதியாகயிருக்கலாம். புருஷனுக்கு மனைவி கீழ்ப்படிந்திருக்கவேண்டும். அவள் தன்னுடைய கீழ்ப்படிதலில் திருப்தியடைய வேண்டும். சந்தோஷப்படவேண்டும்.

## நல்லொழுக்கமாயும் கிரமமாயும் 1கொரி 14 : 36-40

**1கொரி 14:36. தேவவசனம் உங்களிடத்திலிருந்தா புறப்பட்டது? அது உங்களிடத்துக்கு மாத்திரமா வந்தது?**

**1கொரி 14:37. ஒருவன் தன்னைத் தீர்க்கதரிசியென்றாவது, ஆவியைப் பெற்றவனென்றாவது எண்ணினால், நான் உங்களுக்கு எழுதுகிறவைகள் கர்த்தருடைய கற்பனைகளென்று அவன் ஒத்துக்கொள்ளக்கடவன்.**

**1கொரி 14:38. ஒருவன் அறியாதவனாயிருந்தால், அவன் அறியாதவனாயிருக்கட்டும்.**

**1கொரி 14:39. இப்படியிருக்க, சகோதரரே, தீர்க்கதரிசனஞ்சொல்ல நாடுங்கள், அந்நிய பாஷைகளைப் பேசுகிறதற்கும் தடைபண்ணாதிருங்கள்.**

**1கொரி 14:40. சகலமும் நல்லொழுக்கமாயும் கிரமமாயும் செய்யப்படக்கடவது.**

கொரிந்து சபையிலுள்ள விசுவாசிகள் சுய பெருமையோடிருக்கிறார்கள். சுயபுகழ்ச்சி பேசுகிறார்கள். தேவனுடைய கிருபை தங்களுக்கு மாத்திரமே கிடைத்திருப்பதாக எண்ணி பெருமைப்படுகிறார்கள். தெய்வீக இரகசியங்கள் தங்களுக்கு மாத்திரமே விசேஷமாக வெளிப்படுத்தப்பட்டிருப்பதாக நினைத்து பெருமையோடிருக்கிறார்கள்.

பவுல் அவர்களுக்கு சொல்லுகிற ஆலோசனை, பவுலின் சுயவார்த்தைகளல்ல. இது தேவனுடைய கட்டளை. தீர்க்கதரிசியென்று தன்னை எண்ணுகிறவனும், தன்னை ஆவியைப் பெற்றவனென்று எண்ணுகிறவனும், பவுலின் வார்த்தைகளைக் கர்த்தருடைய கற்பனைகளென்று ஒத்துக்கொள்ள வேண்டும். அவர்களுடைய தீர்க்கதரிசன வார்த்தைகளும், பவுலின் வார்த்தைகளும் முரண்பட்டிருக்குமென்றால், இவ்விரண்டு பேருடைய வார்த்தைகளில் யாரோ ஒருவருடைய வார்த்தை தேவனிடத்திலிருந்து வந்திருக்கிறது. மற்றவருடைய வார்த்தை தேவனிடத்திலிருந்து வரவில்லை. கொரிந்து சபையிலுள்ள தீர்க்கதரிசியோ அல்லது பவுலோ, இவர்களில் ஒருவர் கள்ளத்தீர்க்கதரிசியாக இருக்கவேண்டும்.

தான் எழுதுகிற வார்த்தைகள் கர்த்தருடைய கற்பனைகளென்று பவுல் உறுதியாய்ச் சொல்லுகிறார். தேவஆவியைப் பெற்றிருக்கிறவர்களும், தங்களை தீர்க்கதரிசிகள் என்று சொல்லுகிறவர்களும், பவுலின் வார்த்தைகளைக் கர்த்தருடைய கற்பனைகளென்று அங்கீகரிக்கவேண்டும். இதை அவர்கள் அறியாதவர்களாயிருந்தால், அவர்கள் அறியாதவர்களாகவே இருந்துவிடட்டும் என்று பவுல் அவர்களை உதாசீனம்பண்ணுகிறார். அவர்கள் வெளிச்சத்தைக் காணக்கூடாதவாறு தங்கள் கண்களை, தாங்களாகவே மூடிக்கொள்கிறார்கள்.

அவர்கள் தீர்க்கதரிசனம் சொல்லுவதையோ, அந்நிய பாஷைகளைப் பேசுவதையோ பவுல் தடைபண்ணவில்லை. தீர்க்கதரிசனம் சொல்ல நாடவேண்டுமென்றும், அந்நிய பாஷைகளைப் பேசுகிறதற்கு தடைபண்ணாதிருக்கவேண்டுமென்று பவுல் ஆலோசனை சொல்லுகிறார். அவர்கள் புத்தியிலே குழந்தைகளாயிருக்கக்கூடாது. ஆவியின் வரங்களைப் பயன்படுத்துவதில் தேறினவர்களாகயிருக்க வேண்டும். தங்களை அவிசுவாசிகள் பைத்தியம் பிடித்தவர்கள் என்று சொல்லிவிடாதவாறு, விசுவாசிகள் புத்தியிலே தேறினவர்களாகயிருக்க வேண்டும். துர்க்குணத்திலே குழந்தைகளாயிருக்க வேண்டும். சபையிலே கலகம்பண்ணிவிடக்கூடாது. விசுவாசிகள் கூடிவந்திருக்கும்போது, ஆராதனையின் எல்லா காரியங்களும் நல்லொழுக்கமாயும் கிரமமாயும் செய்யப்படவேண்டும்.

## 15 அதிகாரம்

இயேசுகிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுந்தார் (1கொரி 15:1-11). மரித்தோரின் உயிர்த்தெழுதல் இல்லாவிட்டால் கிறிஸ்துவும் எழுந்திருக்கவில்லை (1கொரி 15:12-19). கிறிஸ்துவுக்குள் எல்லாரும் உயிர்ப்பிக்கப்படுவார்கள் (1கொரி 15:20-34). பவுல் அநுதினமும் சாகிறார் (1கொரி 15:30-32). விசுவாசிகள் மோசம் போகாதிருக்க வேண்டும் (1கொரி 15:33-34). மரித்தோர் எழுந்திருக்கும் விதம் (1கொரி 15:35-50). கடைசி எக்காளம் தொனிக்கும் (1கொரி 15:51-57). கர்த்தருக்குள் நாம் படுகிற பிரயாசம் விருதாவாயிராது (1கொரி 15:58).

### கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுந்தார்
### 1கொரி 15 : 1-11

1கொரி 15:1. அன்றியும், சகோதரரே, நான் உங்களுக்குப் பிரசங்கித்த சுவிசேஷத்தை மறுபடியும் உங்களுக்குத் தெரியப்படுத்துகிறேன்; நீங்களும் அதை ஏற்றுக் கொண்டு, அதிலே நிலைத்திருக்கிறீர்கள்

1கொரி 15:2. நான் உங்களுக்குப் பிரசங்கித்த பிரகாரமாய், நீங்கள் அதைக் கைக்கொண்டிருந்தால், அதினாலே நீங்கள் இரட்சிக்கப் படுவீர்கள்; மற்றப்படி உங்கள் விசுவாசம் விருதாவாயிருக்குமே

1கொரி 15:3. நான் அடைந்ததும் உங்களுக்குப் பிரதானமாக ஒப்புவித்ததும் என்னவென்றால், கிறிஸ்துவானவர் வேதவாக்கியங்களின் படி நமது பாவங்களுக்காக மரித்து,

1கொரி 15:4. அடக்கம்பண்ணப்பட்டு, வேதவாக்கியங்களின் படி மூன்றாம்நாளில் உயிர்தெழுந்து,

1கொரி 15:5. கேபாவுக்கும், பின்பு பன்னிருவருக்கும் தரிசனமானார்.

1கொரி 15:6. அதன்பின்பு அவர் ஐந்நூறுபேருக்கு அதிகமான சகோதரருக்கு ஒரேவேளையில் தரிசனமானார்; அவர்களில் அநேகர் இந்நாள்வரைக்கும் இருக்கிறார்கள், சிலர் மாத்திரம் நித்திரையடைந்தார்கள்.

1கொரி 15:7. பின்பு யாக்கோபுக்கும், அதன் பின்பு அப்போஸ்தலரெல்லாருக்கும் தரிசனமானார்.

1கொரி 15:8. எல்லாருக்கும் பின்பு, அகாலப்பிறவி போன்ற எனக்கும் தரிசனமானார்.

1கொரி 15:9. நான் அப்போஸ்தலரெல்லாரிலும் சிறியவனாயிருக்கிறேன்; தேவனுடைய சபையைத் துன்பப் படுத்தினதினாலே, நான் அப்போஸ்தலனென்று பேர் பெறுவதற்கும் பாத்திரன் அல்ல.

1கொரி 15:10. ஆகிலும் நான் இருக்கிறது தேவ கிருபையினாலே இருக்கிறேன்; அவர் எனக்கு அருளிய கிருபை விருதாவாயிருக்கவில்லை; அவர்களெல்லாரிலும் நான் அதிகமாய்ப் பிரயாசப்பட்டேன்; ஆகிலும் நான் அல்ல, என்னுடனே இருக்கிற தேவ கிருபையே அப்படிச் செய்தது.

1கொரி 15:11. ஆகையால் நானாகிலும் அவர்களாகிலும் இப்படியே பிரசங்கித்து வருகிறோம், நீங்களும் இப்படியே விசுவாசித்திருக்கிறீர்கள்.

மரித்தோரின் உயிர்த்தெழுதலைப் பற்றிய உபதேசத்தை அப்போஸ்தலர் பவுல் இந்த அதிகாரத்தில் உறுதிபண்ணுகிறார். கொரிந்து சபையிலுள்ள விசுவாசிகளில் சிலர் மரித்தோரின் உயிர்த்தெழுதல் இல்லையென்று சொல்லுகிறார்கள் (1கொரி 15:12). மரித்தோரின் உயிர்த்தெழுதலை இவர்கள் மறுதலிப்பதினால், வரப்போகிற மேன்மையான ஆசீர்வாதங்களை இவர்கள் இழந்துபோகிறார்கள். பவுல் மரித்தோரின் உயிர்த்தெழுதலை நிரூபிப்பதற்கு கிறிஸ்துவின் சுவிசேஷத்தை ஆதாரமாகச் சொல்லுகிறார்.

கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பவுல் கொரிந்தியருக்குப் பிரசங்கம்பண்ணினார். அந்தச் சுவிசேஷத்தை இப்போது அவர்களுக்கு மறுபடியுமாகத் தெரியப்படுத்துகிறார். பவுல் இந்தச் சுவிசேஷத்தைத்தான் தொடர்ந்து பிரசங்கம் பண்ணிக்கொண்டு வந்திருக்கிறார். அவர் இதுவரையிலும் பிரசங்கம்பண்ணிய அதே சுவிசேஷத்தைத்தான், இப்போதும் பிரசங்கம்பண்ணுகிறார், இனிமேலும் பிரசங்கம்பண்ணுவார். இந்தச் சுவிசேஷத்தையே கொரிந்தியரும் பெற்றிருக்கிறார்கள்.

பவுல் பிரசங்கித்த சுவிசேஷம் நூதன உபதேசமல்ல. அவர் கிறிஸ்துவின் சுவிசேஷத்தையே பிரசங்கித்தார். இந்தச் சுவிசேஷத்தை அவர்கள் ஏற்றுக்கொண்டு, இப்போதும் அதிலே நிலைத்திருக்கிறார்கள். கிறிஸ்துவின் மரணமும், அவருடைய உயிர்த்தெழுதலும் கிறிஸ்தவ மார்க்கத்தின் அஸ்திபாரம். இந்த அஸ்திபாரத்தை அகற்றிப்போட்டால், அதின்மேல் கட்டப்பட்டுவது விழுந்துபோகும். கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் கைக்கொண்டால் நாம் இரட்சிக்கப்படுவோம். மற்றபடி நம்முடைய விசுவாசம் விருதாவாயிருக்கும்.

நம்முடைய இரட்சிப்பு கிறிஸ்துவின் மரணத்திலும், அவருடைய உயிர்த்தெழுதலிலும் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. இந்தச் சத்தியத்தை நாம் கைக்கொண்டால் நாம் இரட்சிக்கப்படுவோம். நாம் இந்தச் சத்தியத்தை நம்முடைய மனதில் பதிய வைத்திருக்கவேண்டும். இதை நம்முடைய இருதயத்தில் பற்றிக்கொள்ளவேண்டும். நமக்குப் பிரசங்கிக்கப்பட்ட சுவிசேஷத்தை விசுவாசிக்கவேண்டும். அப்போதுதான் நமக்கு இரட்சிப்பு உண்டாகும். கிறிஸ்துவின் மரணத்தையும் அவருடைய உயிர்த்தெழுதலையும் நாம் தொடர்ந்து விசுவாசிக்கவேண்டும். இதை விசுவாசிக்கவில்லையென்றால், நம்முடைய விசுவாசம் விருதாவாயிருக்கும்.

கிறிஸ்துவைப்பற்றிய நம்முடைய விசுவாசம் உறுதியாய் நிலைத்திருக்கவேண்டும். அவருடைய மரணத்தையும் உயிர்த்தெழுதலையும் நாம் நிரந்தரமாய் நம்பவேண்டும். தற்காலிகமான விசுவாசம் நம்முடைய இரட்சிப்புக்கு பிரயோஜனப்படாது. கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலை நாம் மறுதலித்தால், கிறிஸ்துவில் நாம் வைத்திருக்கிற விசுவாசமும் விருதாவாயிருக்கும். ஏனெனில் கிறிஸ்தவ உபதேசத்தில், கிறிஸ்துவின் மரணமும் அவருடைய உயிர்த்தெழுதலும் அஸ்திபாரமாயிருக்கிறது. கிறிஸ்தவ உபதேசத்தில், கிறிஸ்துவின் மரணத்தையும் அவருடைய உயிர்த்தெழுதலையும் நீக்கிப்போட்டால், கிறிஸ்தவ உபதேசத்தில் ஜீவன் இருக்காது. இது விருதாவான உபதேசமாகவே இருக்கும்.

பவுல் கிறிஸ்துவின் உபதேசத்தை கர்த்தரிடமிருந்து பெற்று, அதை கொரிந்தியருக்கு உபதேசித்தார். இதைப்பற்றிச் சொல்லும்போது, "நான் அடைந்ததும் உங்களுக்கு பிரதானமாக ஒப்புவித்ததும்" என்று குறிப்பிடுகிறார். கிறிஸ்துவின் உபதேசம் பிரதானமானது. இதுவே நம்முடைய விசுவாசத்திற்குத் தேவையான சத்தியம். கிறிஸ்துவானவர் வேதவாக்கியங்களின்படி நமது பாவங்களுக்காக மரித்தார். அடக்கம்பண்ணப்பட்டார். மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்தார். இதுவே சுவிசேஷத்தின் சத்தியம்.

கிறிஸ்துவின் மரணமும் உயிர்த்தெழுதலும் பழைய ஏற்பாட்டில் முன்னறிவிக்கப்பட்டிருக்கிறது. அவர் நம்முடைய பாவங்களுக்காக மரித்தார். அடக்கம்பண்ணப்பட்டார். வேத வாக்கியங்களில் சொல்லப்பட்டிருக்கிற தீர்க்கதரிசனங்களின் பிரகாரம், மரித்து அடக்கம்பண்ணப்பட்ட இயேசுகிறிஸ்து மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்தார். நமக்கு அறிவிக்கப்பட்டிருக்கிற இந்தச் சுவிசேஷம் பழைய ஏற்பாட்டில் முன்னறிவிக்கப்பட்டிருக்கிறது. பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசனங்களும், சுவிசேஷத்தின் சத்தியமும் இசைந்திருக்கிறது.

இயேசுகிறிஸ்து உயிர்த்தெழுந்ததற்கு பலர் சாட்சிகளாகயிருக்கிறார்கள். கிறிஸ்து மரித்து உயிர்த்தெழுந்ததை பலர் தங்கள் கண்களால் தரிசித்திருக்கிறார்கள். பல்வேறு வேளைகளில் உயிர்த்தெழுந்த கிறிஸ்துவை பலர் தரிசனம் பண்ணியிருக்கிறார்கள். எல்லோருக்கும் பின்பு அகாலப்பிறவியான தனக்கும் உயிர்த்தெழுந்த கிறிஸ்து தரிசனமானார் என்று பவுல் சாட்சியாகச் சொல்லுகிறார் (1கொரி 15:7).

பவுல் தமஸ்குவுக்குப் போகும் சாலையில் கர்த்தராகிய இயேசுகிறிஸ்து அவருக்குத் தரிசனமானார் (அப் 9:17). பவுல் தேவனுக்கு மிகவும் பிரியமானவர். ஆனால் பவுலோ தன்னைப்பற்றிச் சொல்லும்போது, "அகாலப்பிறவி" என்று சொல்லி தன்னைத் தாழ்த்துகிறார்.

இயேசுகிறிஸ்து மரித்து அடக்கம்பண்ணப்பட்டு, மூன்றாம்நாளில் உயிர்த்தெழுந்தார். பன்னிரண்டு அப்போஸ்தலருக்குத் தரிசனமானார். அதன்பின்பு ஐநூறு பேருக்கு அதிகமான சகோதரருக்கு ஒரே வேளையில் தரிசனமானார். அதன் பின்பு அகாலப்பிறவி போன்ற தனக்கும் தரிசனமானார் என்று பவுல் சொல்லுகிறார். தன்னை அகாலப்பிறவி என்று சொல்லும்போது, மற்ற அப்போஸ்தலரைப்போல தான் முதிர்ச்சி பெறவில்லை என்பதை பவுல் அங்கீகாரம்பண்ணுகிறார். இயேசுகிறிஸ்து இந்த உலகத்தில் ஜீவித்தபோது, மற்ற அப்போஸ்தலர்கள் அவரோடு கூடயிருந்தார்கள். இயேசுகிறிஸ்து அவர்களோடு பிரதியட்சமாக சம்பாஷணை செய்திருக்கிறார். ஆனால் பவுலுக்கு இந்தச் சிலாக்கியம் கிடைக்கவில்லை. கிறிஸ்துவின் ஜீவியகாலத்திற்குப் பின்புதான் பவுல் ஊழியத்திற்கு வருகிறார்.

மற்ற அப்போஸ்தலரெல்லாரிலும் தான் சிறியவனாகயிருப்பதாக பவுல் தன்னைப்பற்றிச் சொல்லுகிறார் (1கொரி 15:9). தான் அப்போஸ்தலனென்று பேர் பெறுவதற்கும் பாத்திரனல்ல என்று தன்னை முழுவதுமாகத் தாழ்த்துகிறார். பவுலின் ஊழியத்தில் அவருக்கு அநேக வெற்றிகள் கிடைத்தாலும், கிறிஸ்துவுக்காக அவர் வல்லமையாக ஊழியம் செய்தாலும், அவரிடத்தில் தாழ்மையின் ஆவி நிரம்பியிருக்கிறது. கர்த்தருடைய பிள்ளைகளாகிய நமக்கு தாழ்மையே மெய்யான அலங்காரமாகயிருக்கிறது.

பவுல் தன்னைப்பற்றிச் சொல்லும்போது தான் தேவனுடைய சபையை அதிகமாய்த் துன்பப்படுத்தியதை நினைவுகூருகிறார். கிறிஸ்துவுக்கு விரோதமாகவும், அவருடைய விசுவாசிகளுக்கு விரோதமாகவும் பவுல் அநேக தீமையான காரியங்களைச் செய்திருக்கிறார். அவர்களைத் துன்பப்படுத்தியிருக்கிறார். தம்முடைய சபையைத் துன்பப்படுத்திய பவுலை, கர்த்தராகிய இயேசுகிறிஸ்து சந்தித்து, அவருக்குள் மிகப்பெரிய மாற்றத்தை உண்டுபண்ணியிருக்கிறார். கர்த்தருடைய சபையைத் துன்பப்படுத்திய பவுல், இரட்சிக்கப்பட்ட பின்பு, கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்காக அநேக பாடுகளையும், துன்பங்களையும் மனப்பூர்வமாக சகித்துக்கொள்கிறார்.

பாவிகள் தேவனுடைய கிருபையினாலே பரிசுத்தவான்களாக்கப் படுகிறார்கள். பரிசுத்தவான்கள் தங்கள் ஆவிக்குரிய ஜீவியத்தில் பெருமைப்படக்கூடாது. தங்களுடைய பழைய பாவவாழ்க்கையை நினைவுகூர்ந்து மனத்தாழ்மையோடிருக்க வேண்டும். தங்களுடைய ஜீவியத்தில் இப்படிப்பட்ட நல்லமாற்றத்தை உண்டுபண்ணிய கர்த்தரை நன்றியோடு துதித்து, அவருக்கு உண்மையோடு ஊழியம் செய்யவேண்டும்.

பவுல் தன்னைப்பற்றி தாழ்த்திப் பேசி, தேவனுடைய கிருபையை உயர்த்துகிறார். தான் இப்போது இருக்கிறது தேவனுடைய கிருபையினாலே இருப்பதாக அங்கீகாரம்பண்ணுகிறார். கர்த்தர் பவுலுக்கு அருளிய கிருபை விருதாவாயிருக்கவில்லை. தேவன் நம்மை எப்படி உண்டுபண்ணியிருக்கிறாரோ அப்படியே நாம் இருக்கிறோம். நாம் அவருடைய கரத்தின் கிரியையாயிருக்கிறோம். அவர் நம்மை உருவாக்கிய விதமாகவே நாம் இப்போதிருக்கிறோம். நாம் இப்போது இவ்வாறு இருப்பது தேவனுடைய கிருபை.

பவுல் மற்ற அப்போஸ்தலர்களைவிட கிறிஸ்துவுக்காக அதிகமாய்ப் பிரயாசப்பட்டார். மிகுந்த பக்திவைராக்கியமாயிருந்தார். அதிகமாய் ஊழியம் செய்தார். ஆனாலும் தேவனுடைய கிருபைக்கு தன்னை கடனாளியாக ஒப்புக்கொடுக்கிறார். கர்த்தருக்காகப் பவுல் அதிகமாக ஊழியம் செய்தாலும், அந்த ஊழியத்தைத் தான் செய்யவில்லையென்றும், தன்னுடனே இருக்கிற தேவகிருபையே அந்த ஊழியத்தை அப்படி செய்ததாகவும் பவுல் அங்கீகாரம்பண்ணுகிறார்.

பவுல் அதிகமாய்ப் பிரயாசப்பட்டார். ஆத்துமாக்களுக்கு அதிகமாய் நன்மை செய்தார். அதிகமாய்த் தன்னைத் தாழ்த்துகிறார். தேவனுடைய கிருபையை அதிகமாய் உயர்த்துகிறார். தான் பிரசங்கித்த சுவிசேஷத்தை மாற்றாமல் இதுவரையிலும் பிரசங்கித்து வருவதாக பவுல் சொல்லுகிறார். எல்லா இடங்களிலும், எல்லா வேளைகளிலும், பவுல் பிரசங்கிக்கிற சுவிசேஷம் மாறாமல் ஒன்றுபோலிருக்கிறது. பவுல் மாத்திரமல்ல. அப்போஸ்தலர்களும் இதே சுவிசேஷத்தையே பிரசங்கித்து வருகிறார்கள். பவுலும் மற்ற அப்போஸ்தலர்களும், பிரசங்கிக்கிற சுவிசேஷம் ஒன்றுதான்.

கிறிஸ்துவானவர் வேத வாக்கியங்களின்படி நமது பாவங்களுக்காக மரித்து, அடக்கம் பண்ணப்பட்டு, வேதவாக்கியங்களின்படி மூன்றாம்நாளில் உயிர்த்தெழுந்தார் என்பதுதான் மெய்யான சுவிசேஷம். இதே சுவிசேஷத்தையே பவுலும் மற்ற அப்போஸ்தலர்களும் பிரசங்கித்து வருகிறார்கள். இதே சுவிசேஷத்தையே கொரிந்து சபையாரும் விசுவாசித்து வருகிறார்கள். இந்த விசுவாசத்தினால் நாம் பிழைக்கிறோம். இந்த விசுவாசத்தில்தான் நாம் மரிக்கிறோம்.

## மரித்தோரின் உயிர்த்தெழுதல்
## 1கொரி 15 : 12-19

**1கொரி 15:12. கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுந்தாரென்று பிரசங்கிக்கப்பட்டிருக்க, மரித்தோரின் உயிர்த் தெழுதலில்லையென்று உங்களில் சிலர் எப்படிச் சொல்லலாம்?**

**1கொரி 15:13. மரித்தோரின் உயிர்தெழுதலில்லாவிட்டால், கிறிஸ்துவும் எழுந்திருக்கவில்லையே.**

**1கொரி 15:14. கிறிஸ்து எழுந்திருக்கவில்லையென்றால், எங்கள் பிரசங்கமும் விருதா, உங்கள் விசுவாசமும் விருதா.**

**1கொரி 15:15. மரித்தோர் உயிர்தெழாவிட்டால், தேவன் எழுப்பாத கிறிஸ்துவை அவர் எழுப்பினாரென்று நாங்கள் தேவனைக் குறித்துச் சாட்சி சொன்னதினாலே, தேவனுக்காகப் பொய்ச் சாட்சி சொல்லுகிறவர்களாகவும் காணப் படுவோமே.**

**1கொரி 15:16. மரித்தோர் உயிர்த்தெழாவிட்டால், கிறிஸ்துவும் எழுந்திருக்கவில்லை.**

**1கொரி 15:17. கிறிஸ்து எழுந்திராவிட்டால், உங்கள் விசுவாசம் வீணாயிருக்கும்; நீங்கள் இன்னும் உங்கள் பாவங்களில் இருப்பீர்கள்.**

**1கொரி 15:18. கிறிஸ்துவுக்குள் நித்திரையடைந்தவர்களும் கெட்டிருப்பார்களே.**

**1கொரி 15:19. இம்மைக்காகமாத்திரம் நாம் கிறிஸ்துவின்மேல் நம்பிக்கையுள்ளவர்களாயிருந்தால், எல்லா மனுஷரைப்பார்க்கிலும் பரிதபிக்கப்படத்தக்கவர்களாயிருப்போம்.**

அப்போஸ்தலர் பவுல் கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலைப்பற்றிய சத்தியத்தை இந்த வசனப்பகுதியில் உறுதிபண்ணுகிறார். கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுந்தாரென்று பவுலும், மற்ற அப்போஸ்தலர்களும் பிரசங்கித்து வருகிறார்கள். ஆனால் கொரிந்தியரில் சிலர் மரித்தோரின் உயிர்த்தெழுதல் இல்லையென்று சொல்லுகிறார்கள். இயேசுகிறிஸ்து நமது பாவங்களுக்காக மரித்து, அடக்கம்பண்ணப்பட்டு, மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்திருக்கவேண்டும் என்று வேதவாக்கியங்களின்படி முன்னறிவிக்கப்பட்டிருக்கிறது. வேத வாக்கியங்களின்படி இயேசு கிறிஸ்துவானவர் மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்தார். அவர் உயிர்த்தெழுந்த பின்பு பன்னிரு அப்போஸ்தலருக்கும், ஐநூறு பேருக்கு அதிகமான சகோதரருக்கும் ஒரே வேளையில் தரிசனமானார். கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் இந்த தரிசனத்தின் மூலமாக நிரூபிக்கப்பட்டிருக்கிறது.

கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுந்தார் என்பது நம்முடைய உபதேசத்திற்கு ஆதாரம். இதுவே நம்முடைய விசுவாசத்திற்கு அஸ்திபாரம். இந்த சத்தியத்தை நாம் மறுதலித்தால் நம்முடைய விசுவாசம் விருதாவாயிருக்கும். மரித்தோரின் உயிர்த்தெழுதல் இல்லாவிட்டால், கிறிஸ்துவும் எழுந்திருக்கவில்லை. கிறிஸ்து எழுந்திருக்கவில்லை யென்றால், அப்போஸ்தலரின் பிரசங்கமும் விருதா, விசுவாசிகளின் விசுவாசமும் விருதா.

கிறிஸ்துவைத் தேவன் எழுப்பினாரென்று, அப்போஸ்தலர்கள் தேவனைக்குறித்து சாட்சி சொல்லுகிறார்கள். மரித்தோர் உயிர்த்தெழாவிட்டால், தேவன் கிறிஸ்துவை எழுப்பினாரென்று அப்போஸ்தலர்கள் சாட்சி சொல்லுவது பொய்ச்சாட்சியாயிருக்கும். ஏனெனில் மரித்தோர் உயிர்த்தெழாவிட்டால் கிறிஸ்துவும் எழுந்திருக்கவில்லை. அப்போஸ்தலரின் பிரசங்கமும் வீணாயிருக்கும். அவர்களுடைய விசுவாசமும் வீணாயிருக்கும். கிறிஸ்து உயிர்த்தெழாவிட்டால் சுவிசேஷமும் ஜீவனில்லாமல் வெறுமையாயிருக்கும். விசுவாசிகள் இன்னும் பாவங்களில்தான் இருப்பார்கள். கிறிஸ்துவுக்குள் நித்திரையடைந்தவர்களும் கெட்டிருப்பார்கள்.

இயேசுகிறிஸ்துவின் இரத்தமே நம்முடைய பாவங்களைக் கழுவி நம்மைச் சுத்திகரிக்கிறது. நம்மை மீட்கும் கிரயமாக இயேசுகிறிஸ்து தம்முடைய சொந்த இரத்தத்தையே செலுத்தியிருக்கிறார். கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினுடைய பாவநிவாரண பலியின் மூலமாய் நமக்கு பாவமன்னிப்பு உண்டாயிருக்கிறது. இயேசுகிறிஸ்து உயிர்த்தெழவில்லையென்றால் அவர் இன்னும் மரித்தவராகவே இருந்திருப்பார். மரித்துப்போன கிறிஸ்துவானவரால் மரணத்தின் வல்லமையிலிருந்து நம்மை மீட்கமுடியாது. கிறிஸ்து நம்மை உயிர்த்தெழச்செய்வார் என்னும் விசுவாசமும் வீணாயிருக்கும். இயேசு கிறிஸ்து உயிர்த்தெழவில்லையென்றால் நமக்கு இரட்சிப்புமில்லை. நாம் நீதிமானாக்கப்படுவதுமில்லை. நாம் இன்னும் நம்முடைய பாவங்களிலேயே நிலைத்திருப்போம்.

மனுஷனுக்கு மரணமே முடிவு என்று கொரிந்தியரில் சிலர் சொல்லுகிறார்கள். இவர்கள் இம்மையை மாத்திரம் பார்க்கிறார்கள். சரீர மரணமே மனுஷனுடைய முடிவு என்று சொல்லுகிறார்கள். நாம் மரித்தாலும் உயிர்த்தெழுவோம் என்னும் நம்பிக்கை கொரிந்தியரில் பலருக்கு இல்லை. கிறிஸ்து உயிர்த்தெழுந்ததினால் நமக்கு உயிர்த்தெழுதல் உண்டு என்று நாம் விசுவாசிக்கிறோம். நமக்கு உயிர்த்தெழுதல் இல்லையென்றால் நம்முடைய விசுவாசம் வீணாயிருக்கும்.

ஒருவர் கிறிஸ்துவை விசுவாசித்து, உயிர்த்தெழுதலை விசுவாசிக்க வில்லையென்றால், அவர் இம்மைக்காக மாத்திரம் கிறிஸ்துவின்மேல் நம்பிக்கையுள்ள வராயிருக்கிறார். இப்படிப்பட்டவர்கள் எல்லா மனுஷரைப் பார்க்கிலும் பரிதபிக்கப்படத்தக்கவர்கள்.

நாம் இம்மைக்காக மாத்திரம் கிறிஸ்துவின்மேல் நம்பிக்கையுள்ளவர் களாயிராமல், மறுமைக்காகவும் அவர்மேல் நம்பிக்கையுள்ளவர்களாக இருக்க வேண்டும். நாம் இந்த உலகத்திற்கு சிலுவையில் அறையப்பட்டவர்களாகயிருக் கிறோம். வரப்போகிற உலகத்தை விசுவாசத்தோடு நோக்கிப் பார்த்து ஜீவிக்கிறோம். நமக்கு இந்தப்பிரபஞ்சம் நித்திய வாசஸ்தலமல்ல. பரலோகமே நம்முடைய வாசஸ்தலம். உயிர்த்தெழுந்த மறுஜீவனுக்காக கிறிஸ்துவின்மேல் நாம் நம்பிக்கையுள்ளவர்களாக இருக்க வேண்டும்.

## கிறிஸ்துவுக்குள் எல்லாரும் உயிர்ப்பிக்கப்படுவார்கள்
## 1கொரி 15 : 20-34

**1கொரி 15:20. கிறிஸ்துவோ மரித்தோரிலிருந்தெழுந்து, நித்திரை யடைந்தவர்களில் முதற்பலனானார்.**

**1கொரி 15:21. மனுஷனால் மரணம் உண்டானபடியால், மனுஷனால் மரித்தோரின் உயிர்த்தெழுதலும் உண்டாயிற்று.**

**1கொரி 15:22. ஆதாமுக்குள் எல்லாரும் மரிக்கிறது போல, கிறிஸ்துவுக்குள் எல்லாரும் உயிர்ப்பிக்கப்படுவார்கள்.**

**1கொரி 15:23. அவனவன் தன்தன் வரிசையிலே உயிர்ப்பிக்கப்படுவான், முதற்பலனானவர் கிறிஸ்து; பின்பு அவர் வருகையில் அவருடையவர்கள் உயிர்ப்பிக்கப்படுவார்கள்.**

**1கொரி 15:24. அதன்பின்பு முடிவு உண்டாகும்; அப்பொழுது அவர் சகல துரைத்தனத்தையும் சகல அதிகாரத்தையும் வல்லமையையும் பரிகரித்து, தேவனும் பிதாவுமாயிருக்கிறவருக்கு ராஜ்யத்தை ஒப்புக்கொடுப்பார்.**

**1கொரி 15:25. எல்லாச் சத்துருக்களையும் தமது பாதத்திற்குக் கீழாக்கிப்போடும் வரைக்கும், அவர் ஆளுகை செய்யவேண்டியது.**

**1கொரி 15:26. பரிகரிக்கப்படுங் கடைசிச் சத்துரு மரணம்.**

**1கொரி 15:27. சகலத்தையும் அவருடைய பாதத்திற்குக் கீழ்ப்படுத்தினாரே; ஆகிலும் சகலமும் அவருக்குக் கீழ்ப்படுத்தப்பட்டதென்று சொல்லியிருக்கும்போது, சகலத்தையும் அவருக்குக் கீழ்ப்படுத்தினவர் கீழ்ப்படுத்தப்பட வில்லையென்பது வெளியரங்கமாயிருக்கிறது.**

**1கொரி 15:28. சகலமும் அவருக்குக் கீழ்ப்பட்டிருக்கும்போது, தேவனே சகலத்திலும் சகலமுமாயிருப்பதற்கு, குமாரன் தாமும் தமக்குச் சகலத்தையும் கீழ்ப் படுத்தினவருக்குக் கீழ்ப்பட்டிருப்பார்.**

**1கொரி 15:29. மேலும் மரித்தோர் உயிர்த்தெழாவிட்டால், மரித்தவர்களுக்காக ஞானஸ்நானம் பெறுகிறவர்கள் என்ன செய்வார்கள்? மரித்தவர்களுக்காக ஏன் ஞானஸ்நானம் பெறுகிறார்கள்?**

**1கொரி 15:30. நாங்களும் ஏன் எந்நேரமும் நாசமோசத்திற்கு ஏதுவாயிருக்கிறோம்?**

**1கொரி 15:31. நான் அநுதினமும் சாகிறேன்; அதை நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவினால் உங்களைக் குறித்து, நான் பாராட்டுகிற மேன்மையைக் கொண்டு சத்தியமாய்ச் சொல்லுகிறேன்.**

**1கொரி 15:32. நான் எபேசுவிலே துஷ்டமிருகங்களுடனே போராடினேனென்று மனுஷர் வழக்கமாய்ச் சொல்லுகிறேன்; அப்படிப் போராடினதினாலே எனக்குப் பிரயோஜனமென்ன? மரித்தோர் உயிர்த்தெழாவிட்டால், புசிப்போம் குடிப்போம், நாளைக்குச் சாவோம் என்று சொல்லலாமே?**

**1கொரி 15:33. மோசம்போகாதிருங்கள்; ஆகாத சம்பாஷணைகள் நல்லொழுக்கங்களைக் கெடுக்கும்.**

**1கொரி 15:34. நீங்கள் பாவஞ்செய்யாமல் நீதிக்கேற்க விழித்துக் கொண்டு, தெளிந்தவர்களாயிருங்கள்; சிலர் தேவனைப் பற்றி அறிவில்லாதிருக்கிறார்களே; உங்களுக்கு வெட்கமுண்டாக இதைச் சொல்லுகிறேன்.**

## கிறிஸ்து முதற்பலனானார்

**கிறிஸ்துவோ மரித்தோரிலிருந்தெழுந்து, நித்திரையடைந்தவர்களில் முதற்பலனானார். மனுஷனால் மரணம் உண்டானபடியால், மனுஷனால் மரித்தோரின் உயிர்த்தெழுதலும் உண்டாயிற்று. ஆதாமுக்குள் எல்லாரும் மரிக்கிறது போல, கிறிஸ்துவுக்குள் எல்லாரும் உயிர்ப்பிக்கப்படுவார்கள். அவனவன் தன்தன் வரிசையிலே உயிர்ப்பிக்கப்படுவான், முதற்பலனானவர் கிறிஸ்து; பின்பு அவர் வருகையில் அவருடையவர்கள் உயிர்ப்பிக்கப்படுவார்கள். அதன்பின்பு முடிவு உண்டாகும்; அப்பொழுது அவர் சகல துரைத்தனத்தையும் சகல அதிகாரத்தையும் வல்லமையையும் பரிகரித்து, தேவனும் பிதாவுமாயிருக்கிறவருக்கு ராஜ்யத்தை ஒப்புக்கொடுப்பார் (1கொரி 15:20-24).**

கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் உயிர்த்தெழுவார்களென்று பவுல் உபதேசம்பண்ணுகிறார். கிறிஸ்துவுக்குள் அநேகர் நித்திரையடைந்திருக்கிறார்கள். அவர்கள் உயிர்த்தெழுவதற்கு முன்பாக கிறிஸ்து மரித்தோரிலிருந்து முதலாவதாக உயிர்த்தெழுந்து, நித்திரையடைந்தவர்களில் முதற்பலனாகயிருக்கிறார். இயேசுகிறிஸ்து உயிர்த்தெழுந்ததினால், கிறிஸ்துவுக்குள் மரித்தவர்களும் உயிர்த்தெழுவார்கள். கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் நம்முடைய உயிர்த்தெழுதலுக்கு அச்சாரமாகயிருக்கிறது.

அப்போஸ்தலர் பவுல் கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலையும், நம்முடைய உயிர்த்தெழுதலையும் விவரிப்பதற்காக முதலாம் ஆதாமுக்கும், இரண்டாம் ஆதாமுக்கும் இடையிலுள்ள சம்பந்தத்தைத் தெளிவுபடுத்துகிறார். ஆதாமின் பாவத்தினால் நாமெல்லோருமே பாவத்திற்குள்ளாக மரிக்கிறோம். கிறிஸ்துவின் உயிர்த்தெழுகிற வல்லமையினால், பாவத்திற்குள் மரித்திருக்கிற நாமெல்லோரும் உயிரோடு எழுப்பப்படுகிறோம்.

ஆதாமுக்குள் எல்லோரும் மரித்துப்போவார்கள். அவர்களெல்லோரும் கிறிஸ்துவுக்குள் உயிர்ப்பிக்கப்படுவதில்லை. கிறிஸ்துவுக்குள் மரித்தோர் மாத்திரமே அவருக்குள் உயிர்ப்பிக்கப்படுவார்கள். இவர்கள் கிறிஸ்துவுக்குள் நித்திரையடைந்தவர்கள். இவர்களில் இயேசுகிறிஸ்து மரித்தோரிலிருந்தெழுந்து முதற்பலனானார். அதன்பின்பு கிறிஸ்து வருகையில் அவருடையவர்கள் உயிர்ப்பிக்கப்படுவார்கள் (1கொரி 15:23).

கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் அவருடைய உயிர்த்தெழுதலின் வல்லமையினால் உயிர்ப்பிக்கப்படுவார்கள். மனுஷனால் மரணமுண்டாயிற்று. மனுஷனால் மரித்தோரின் உயிர்த்தெழுதலும் உண்டாயிற்று. ஆதாமுக்குள் எல்லோரும் பாவத்திற்குள் மரித்துப்போனார்கள். கிறிஸ்துவுக்குள் அவருடையவர்கள் எல்லோரும் உயிர்ப்பிக்கப்படுவார்கள்.

கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் வரிசையாக உயிர்ப்பிக்கப்படுவார்கள். அவனவன் தன் தன் வரிசையில் உயிர்ப்பிக்கப்படுவான். முதற்பலனானவர் கிறிஸ்து. கிறிஸ்துவே முதலாவதாக உயிர்ப்பிக்கப்படுவார். அதன்பின்பு கிறிஸ்து வருகையில், அவருடையவர்கள், தன் தன் வரிசையிலே, உயிர்ப்பிக்கப்படுவார்கள். அந்த வரிசை எப்படியிருக்கும் என்பது நமக்கு தெளிவுபடுத்தப்படவில்லை. கிறிஸ்துவே முதற்பலனானவர் என்றும், அவரே முதலாவது உயிர்த்தெழுவார் என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதன்பின்பு கிறிஸ்துவின் வருகையில் அவருடையவர்கள், உயிர்ப்பிக்கப் படுவார்கள் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. அவனவன் தன் தன் வரிசையில் உயிர்ப்பிக்கப்படுவான் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த வரிசை நமக்கு வெளிப்படுத்தப்படாத இரகசியமாகவே இருக்கிறது.

## கடைசி சத்துரு மரணம்

**அதன்பின்பு முடிவு உண்டாகும்; அப்பொழுது அவர் சகல துரைத்தனத்தையும் சகல அதிகாரத்தையும் வல்லமையையும் பரிகரித்து, தேவனும் பிதாவுமாயிருக்கிறவருக்கு ராஜ்யத்தை ஒப்புக்கொடுப்பார். எல்லாச் சத்துருக்களையும் தமது பாதத்திற்குக் கீழாக்கிப்போடும் வரைக்கும், அவர் ஆளுகை செய்ய வேண்டியது. பரிகரிக்கப்படுங் கடைசிச் சத்துரு மரணம் சகலத்தையும் அவருடைய பாதத்திற்குக் கீழ்ப்படுத்தினாரே; ஆகிலும் சகலமும் அவருக்குக் கீழ்ப்படுத்தப்பட்டதென்று சொல்லியிருக்கும்போது, சகலத்தையும் அவருக்குக் கீழ்ப்படுத்தினவர் கீழ்ப்படுத்தப் படவில்லையென்பது வெளியரங்கமாயிருக்கிறது. சகலமும் அவருக்குக் கீழ்ப்பட்டிருக்கும்போது, தேவனே சகலத்திலும் சகலமுமாயிருப்பதற்கு, குமாரன் தாமும் தமக்குச் சகலத்தையும் கீழ்ப்படுத்தினவருக்குக் கீழ்ப் பட்டிருப்பார் (1கொரி 15:24-28).**

இயேசுகிறிஸ்து சகல துரைத்தனத்தையும், சகல அதிகாரத்தையும் வல்லமையையும் பரிகரிப்பார். அதன்பின்பு தேவனும் பிதாவுமாயிருக்கிறவருக்கு ராஜ்யத்தை ஒப்புக்கொடுப்பார். அவர் எல்லா சத்துருக்களையும் தமது பாதத்திற்கு கீழாக்கிப்போடும்வரைக்கும் ஆளுகை செய்வார். இயேசுகிறிஸ்து மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்தார். தம்முடைய கரங்களில் சகல அதிகாரத்தையும் வல்லமையையும் பெற்றுக்கொள்வதற்காக, தம்முடைய மரணத்திலிருந்து அவர் உயிரோடு எழும்பினார். இப்பிரபஞ்சத்தின் ராஜ்யம் முடிவுக்கு வரும். அவர் வருகையில் அவருடையவர்கள் உயிர்பிக்கப்படுவார்கள். அதன்பின்பு முடிவு உண்டாகும்.

இயேசுகிறிஸ்து சகல துரைத்தனத்தையும், சகல அதிகாரத்தையும், வல்லமையையும் பரிகரிப்பதே மெய்யான முடிவாயிருக்கும். எல்லா சத்துருக்களையும் இயேசுகிறிஸ்து தமது பாதத்திற்கு கீழாக்கிப்போடும்வரைக்கும் அவருடைய ஆளுகை நியமிக்கப்பட்டிருக்கிறது. இயேசுகிறிஸ்துவின் சத்துருக்களில் பிரதான சத்துரு மரணம். அவர் அந்த சத்துருவையும் அழிக்கவேண்டும். பரிகரிக்கப்படும் கடைசி சத்துரு மரணம்.

மரணம் பரிகரிக்கப்பட வேண்டுமென்றால், கிறிஸ்துவுக்குள் மரித்துப்போன பரிசுத்தவான்களெல்லோரும் உயிரோடு எழும்பவேண்டும். பரிசுத்த வான்கள் உயிர்த்தெழவில்லையென்றால், அவர்களுடைய கல்லறைகளுக்கு அவர்கள்மீது இன்னும் அதிகாரம் இருக்கும். பரிசுத்தவான்கள் உயிர்த்தெழுந்து, நித்தியகாலமாக ஜீவிப்பார்கள். அவர்களுக்கு மரணம் நேரிடாது. அது வரையிலும் மரணம் பரிகரிக்கப் படவில்லை. அவர்களெல்லோரும் உயிர்த்தெழுந்த பின்பே, மரணமானது, கடைசி சத்துருவாக பரிகரிக்கப்படுகிறது.

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து மனுஷஅவதாரம் எடுத்து மனுஷனாகவும் இருக்கிறார். அவரே தேவனுக்கும் மனுஷருக்கும் மத்தியஸ்தராகயிருக்கிறார். அவர் மனுஷராகயிருக்கும்போது மனுஷருக்குரிய எல்லா சுபாவமும் அவரிடத்திலிருக்கிறது. அவருடைய அதிகாரமெல்லாம் பிதாவினால் அவருக்குக் கொடுக்கப்பட்டது. இயேசுகிறிஸ்து தேவனுக்கும் மனுஷருக்கும் நடுவே மத்தியஸ்தராக ஊழியம் செய்கிறபோது, அவரிடத்தில் மனுஷத்துவமும், தெய்வத்துவமும் சேர்ந்திருக்கிறது. அவர் தேவனையும் மனுஷரையும் ஒப்புரவாக்குகிறார்.

இயேசுகிறிஸ்து தம்முடைய மரணத்திலிருந்து உயிர்த்தெழுந்தார். எல்லா சபைகளுக்கும் கிறிஸ்துவே தலையாகயிருக்கிறார். இயேசுகிறிஸ்து சபையை சகல சத்துருக்களுக்கும் விலக்கி பாதுகாக்கிறார். சபையை ஆளுகை செய்கிற அதிகாரம் கிறிஸ்துவுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. முடிவில் இயேசுகிறிஸ்து எல்லா சத்துருக்களையும் தமது பாதத்திற்குக் கீழாக்கிப்போடுவார். அதுவரையிலும் கிறிஸ்துவின் ஆளுகை இருக்கும். இயேசு கிறிஸ்துவில் விசுவாசம் வைத்திருக்கிறவர் களெல்லோரும் இரட்சிக்கப்படும் வரையிலும் கிறிஸ்துவின் ஆளுகையிருக்கும்.

இயேசுகிறிஸ்து சகல துரைத்தனத்தையும், சகல அதிகாரத்தையும், சகல வல்லமையையும் பரிகரித்து, பிதாவானவர் தம்மிடத்தில் ஒப்புக்கொடுத்த ராஜ்யத்தை, தேவனும் பிதாவுமாயிருக்கிறவருக்கு ஒப்புக்கொடுப்பார். ராஜ்யத்தை யாரிடத்திலிருந்து பெற்றுக்கொண்டாரோ, அவரிடத்திலே திருப்பிக் கொடுத்துவிடுவார். கிறிஸ்துவானவர் இந்த அதிகாரத்தை இந்தக் குறிப்பிட்ட காலம் வரையிலும் தம்முடைய பிதாவினிடத்தில் பெற்றிருக்கிறார்.

கிறிஸ்துவின் சத்துருக்க ளெல்லோரும் அழிக்கப்படும் வரையிலும் மீட்பர் ஆளுகை செய்யவேண்டும். இந்த முடிவு உண்டானபின்பு கிறிஸ்து தம்மிடத்தில் கொடுக்கப்பட்ட அதிகாரத்தை, பிதாவினிடத்தில் திரும்பக் கொடுப்பார். தம்முடைய பிள்ளைகளின் எல்லா சத்துருக்களும் அழிக்கப்படும் வரையிலும் கிறிஸ்துவானவர் ஆளுகை செய்யவேண்டும். மரணமும் அழிக்கப்படவேண்டும். ஏனெனில் கர்த்தருடைய பரிசுத்தவான்களுக்கு மரணமும் சத்துருவாகயிருக்கிறது. கடைசி சத்துருவாகிய மரணம் பரிகரிக்கப்படும் வரையிலும் கிறிஸ்து ஆளுகை செய்வார். அதுவரையிலும் பூமியிலும் பரலோகத்திலும் இயேசுகிறிஸ்துவுக்கு அதிகாரமும் ஆளுகையும் இருக்கும்.

இப்பிரபஞ்சத்தில் ஜீவிக்கிற பரிசுத்தவான்களுக்கு அநேக பாடுகளும், போராட்டங்களும், சோதனைகளும் உண்டு. இவையெல்லாவற்றிற்கு நடுவிலும் கிறிஸ்துவின் உதவியும் ஒத்தாசையும் நமக்குக் கிடைக்கிறது. இயேசுகிறிஸ்து சகல துரைத்தனத்தையும், சகல அதிகாரத்தையும், சகல வல்லமையையும் பரிகரித்து, எல்லா சத்துருக்களையும் தமது பாதத்திற்கு கீழாக்கிப்போடுவார். அப்போது கர்த்தருடைய பரிசுத்தவான்களை உபத்திரவப்படுத்த சத்துருக்கள் யாரும் இருக்கமாட்டார்கள். எல்லா சத்துருக்களையும் கிறிஸ்துவானவர் தமது பாதத்திற்கு கீழாக்கிப்போட்டுவிடுகிறார்.

இந்தச் சம்பவம் நடைபெற்ற பிறகு, மனுஷத்துவத்திலிருக்கிற இயேசுகிறிஸ்து, தேவனும் பிதாவுமாயிருக்கிறவருக்கு ராஜ்யத்தை ஒப்புக்கொடுப்பார். தேவனே சகலத்திலும் சகலமுமாயிருப்பார். நம்முடைய இரட்சிப்பும் தேவனுடைய தெய்வீக திட்டத்தினால் நிறைவேறியதாகவே இருக்கும். நம்முடைய இரட்சிப்பில், நம்முடைய மனுஷசுபாவம் ஈடுபட்டிருந்தாலும், நம்முடைய இரட்சிப்புக்கு தேவனே சகலத்திலும் சகலமுமாயிருக்கிறார்.

## மரித்தவர்களுக்காக ஞானஸ்நானம்

**மேலும் மரித்தோர் உயிர்த்தெழாவிட்டால், மரித்தவர்களுக்காக ஞானஸ்நானம் பெறுகிறவர்கள் என்ன செய்வார்கள்? மரித்தவர்களுக்காக ஏன் ஞானஸ்நானம் பெறுகிறார்கள்? (1கொரி 15:29)**

அப்போஸ்தலர் பவுல் மரித்தோரின் உயிர்த்தெழுதலைப்பற்றி விவரிக்கும்போது, மரித்தோருக்காக ஒரு சிலர் ஞானஸ்நானம் பெறுவதையும் இங்கு குறிப்பிட்டுச் சொல்லுகிறார். இந்த வாக்கியம் இரத்தசாட்சியாக மரித்தவர்களை குறிப்பிடுவதாக ஒரு சிலர் சொல்லுகிறார்கள். தங்களுடைய விசுவாசத்திற்காக இவர்கள் இரத்தசாட்சியாக மரித்தார்கள். முன்னோர்கள் இவர்களுடைய மரணத்தை "இரத்தத்தில் ஞானஸ்நானம்" என்று அழைத்தார்கள்.

வேறு சிலரோ இந்த வாக்கியத்திற்கு வேறுவிதமாக வியாக்கியானம் சொல்லுகிறார்கள். அக்காலத்தில் மரித்தவர்களுக்காக உயிரோடிருக்கிறவர்கள் ஞானஸ்நானம் பெறுகிற விநோதப்பழக்கம் இருந்தது. ஆதித்திருச்சபையில் ஒருசிலர் ஞானஸ்நாம் பெறாமலேயே மரித்துப்போனார்கள். அவர்கள் கல்லறையில் அடக்கம்பண்ணப்பட்டார்கள். அவர்களும் ஞானஸ்நானம் பெறவேண்டும் என்பதற்காக, மரித்துப்போன அவர்களுக்குப் பதிலாக, அவர்களுடைய உற்றார் உறவினரோ, அல்லது அவர்களுடைய சிநேகிதரோ ஞானஸ்நானம் பெற்றார்கள். கொரிந்தியர் மத்தியில் இப்படிப்பட்ட பழக்கம் காணப்பட்டது. ஆகையினால் மரித்தோரின் உயிர்த்தெழுதலைப்பற்றிச் சொல்லும்போது, பவுல் மரித்தவர்களுக்காக ஞானஸ்நானம் பெறுவதைப்பற்றியும் விவரிக்கிறார்.

## அனுதினமும் சாகிறேன்

**நாங்களும் ஏன் எந்நேரமும் நாசமோசத்திற்கு ஏதுவாயிருக்கிறோம்? நான் அநுதினமும் சாகிறேன்; அதை நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவினால் உங்களைக் குறித்து, நான் பாராட்டுகிற மேன்மையைக் கொண்டு சத்தியமாய்ச் சொல்லுகிறேன். நான் எபேசுவிலே துஷ்ட மிருகங்களுடனே போராடினேனென்று மனுஷர் வழக்கமாய்ச் சொல்லுகிறேன்; அப்படிப் போராடினதினாலே எனக்குப் பிரயோஜனமென்ன? மரித்தோர் உயிர்த்தெழாவிட்டால், புசிப்போம் குடிப்போம், நாளைக்குச் சாவோம் என்று சொல்லலாமே? (1கொரி 15:30-32)**

விசுவாசிகளில் பலர் சத்தியத்திற்காக அநேக பாடுகளையும் வேதனைகளையும் அனுபவிக்கிறார்கள். இவர்கள் தேவையில்லாமல் கஷ்டப் படுகிறார்களென்று உலகப்பிரகாரமான ஜனங்கள் விசுவாசிகளைப் பார்த்து குறை சொல்கிறார்கள். கர்த்தருடைய பிள்ளைகளாகிய நமக்கு, நம்முடைய மரணத்திற்குப் பின்பும் ஒரு ஜீவன் உண்டு என்னும் நம்பிக்கையுள்ளது. இந்த நம்பிக்கையில்லையென்றால் நாம் அனுபவிக்கிற பாடுகளும் வேதனைகளும் வீணானவையே.

பரலோகத்திற்குள் பிரவேசிக்க வேண்டுமென்பதற்காக, ஏராளமான விசுவாசிகள் இந்தப்பிரபஞ்சத்தின் ஆசாபாசங்களை விட்டு விலகி ஜீவிக்கிறார்கள். பாவமான காரியங்களில் பங்குபெறாமல் அவற்றை வெறுத்து ஒதுக்குகிறார்கள். உலகப்பிரகாரமான ஆசீர்வாதங்களையும், சம்பத்துக்களையும் குப்பை என்று எண்ணுகிறார்கள். தங்களுக்கு விரோதமாகப் பேசப்படும் தூஷண வார்த்தைகளை சகித்துக் கொள்கிறார்கள். தங்களுக்கு விரோதமாகச் செய்யப்படும் அநியாயமான காரியங்களை இயேசுகிறிஸ்துவின் நாமத்தினிமித்தம் பொறுத்துக் கொள்கிறார்கள்.

இவர்கள் இக்காலத்தின் பாடுகளைப் பார்க்காமல், வரப்போகிற நித்திய காலத்தின் மகிமையை நோக்கிப் பார்க்கிறார்கள். மரித்தோரின் உயிர்த்தெழுதல் இல்லையென்றால் இவர்கள் அனுபவிக்கிற பாடுகளினால் ஒரு பிரயோஜனமுமில்லை. ஆகையினால் பவுல் தன்னைப்பற்றிச் சொல்லும்போது "நான் அனுதினமும் சாகிறேன்" என்று சொல்லுகிறார்.

பவுலுக்கு தொடர்ந்து மரண ஆபத்து உண்டாயிற்று. அவர் தன்னுடைய கரங்களில் தன்னுடைய ஜீவனைச் சுமந்து செல்கிறார். அவருக்கு பல சத்துருக்கள் இருந்தார்கள். பல வேதனைகளையும், பல சோதனைகளையும் அவர் தாங்கிவந்தார். ஒவ்வொரு வேளையிலும் அவருடைய ஜீவனுக்கு ஆபத்து உண்டாயிற்று. எபேசுவிலே துஷ்டமிருகங்களுடனே பவுலுக்கு போராட்டமுண்டாயிற்று. பவுல் செத்துப் போனார் என்று சொல்லத்தக்கதாக ஒரு சமயம் அவரை அடித்துப்போட்டார்கள் (அப் 19:24-41). பவுலுக்கு விரோதமாகக் கலகமுண்டாயிற்று. எபேசுவிலே துஷ்டமிருகங்கள் என்பது, அந்தப் பட்டணத்தில் பவுலுக்கு விரோதமாக எழும்பிய சத்துருக்களைக் குறிக்கிற வார்த்தையாகும்.

பவுல் துஷ்டமனுஷரோடு போராடினார். அவர்களோடு போராடினதினால் தனக்கு என்ன பிரயோஜனம் என்று ஒரு கேள்வி கேட்கிறார். மரித்தோர் உயிர்த்தெழாவிட்டால், பவுலின் பாடுகளினால் ஒரு பிரயோஜனமுமில்லை. இப்பிரபஞ்சத்தில் பவுல் பல பாடுகளை அனுபவித்தாலும், அவர் மரித்தபின்பு உயிர்த்தெழுவார். உயிர்த்தெழுந்த பின்பு பரலோகத்தில் நித்திய காலமாக ஜீவிப்பார். இதற்காகவே பவுல் இக்காலத்துப் பாடுகளையும் சகித்துக்கொள்கிறார்.

மரித்தோர் உயிர்த்தெழாவிட்டால், அவரும், உலகப்பிரகாரமான ஜனங்களைப்போல, புசிப்போம் குடிப்போம் நாளைக்குச் சாவோம் என்று உலகப்பிரகாரமாகப் பேசலாம்.

பவுலும், அவருடைய உடன்ஊழியரும் எந்நேரமும் நாசமோசத்திற்கேதுவாக இருக்கிறார்கள். அநுதினமும் சாகிறார்கள். மரணம் எப்போதுமே அவர்களுக்கு அருகாமையிலிருக்கிறது. பவுலின் ஜீவியம் அவருடைய மரணத்தோடு முடிந்து போகவில்லை. அவர் மரித்து உயிர்த்தெழுந்து நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்று, விசுவாசத்தோடு, இவ்வுலகத்தின் பாடுகளையெல்லாம் சகித்துக்கொள்கிறார். மரித்தோர் உயிர்த்தெழாவிட்டால், பவுல் சகித்துக்கொண்ட பாடுகளினால், அவருக்கு ஒரு பிரயோஜனமுமில்லை. கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் இந்த உலகத்தின் பாடுகளையே நோக்கிப் பார்த்துக் கொண்டிருக்காமல், பவுலைப் போல, மரித்தோரின் உயிர்த்தெழுதலையும், அதன்பின்பு நாம் பெற்றுக்கொள்ளப் போகிற நித்திய ஜீவனையும் நோக்கிப்பார்க்கவேண்டும்.

மரித்தோரின் உயிர்த்தெழுதல் இல்லையென்றால், இப்பிரபஞ்சத்தில் நமக்கு இஷ்டமானபடி ஜீவிக்கலாம். கொரிந்தியர்கள் துஷ்டமிருகங்களைப்போல ஜீவிக்கிறார்கள். அதைப்போல நாமும் ஜீவிக்கலாம். இந்த உலகத்தில் எதையும் தியாகம்பண்ணாமல், எல்லாவற்றையும் நம்முடைய மனம்போல அனுபவிக்கலாம். இந்த உலகமே பெரிது என்று நினைத்தால், இந்த உலகத்திற்காக வாழலாம். ஆனால் கர்த்தருடைய பிள்ளைகளாகிய நமக்கோ இந்த உலகம் பெரிதல்ல. இனிமேல் வரப்போகிற உலகமே பெரிது.

இந்த நம்பிக்கை நம்மிடத்தில் இருப்பதினால், நாம் இந்த உலகத்திற்கு ஒத்த வேஷம் தரியாமல், கர்த்தருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து, பயபக்தியோடும், விசுவாசத்தோடும் ஜீவிக்கவேண்டும். மரித்து உயிர்த்தெழுந்த பின்பு, நாம் பெற்றுக் கொள்ளப்போகிற ஆசீர்வாதங்களை நோக்கிப் பார்த்து, இவ்வுலகத்தின் பாடுகளை சகித்துக்கொள்ளவேண்டும். பரலோகத்தை நோக்கிப் பார்த்தால்தான் இப்பிரபஞ்சத்தின்மீது நாம் வைத்திருக்கிற ஆசை குறையும். வரப்போகிற மேன்மையை நோக்கிப்பார்த்தால்தான், இப்போதுள்ள உலகப்பிரகாரமான சந்தோஷங்களையும், வசதிகளையும் தியாகம்பண்ணுவதற்கு மனம்வரும்.

## மோசம்போகாதிருங்கள்

**மோசம்போகாதிருங்கள்; ஆகாத சம்பாஷணைகள் நல்லொழுக்கங்களைக் கெடுக்கும். நீங்கள் பாவஞ்செய்யாமல் நீதிக்கேற்க விழித்துக்கொண்டு, தெளிந்தவர்களாயிருங்கள்; சிலர் தேவனைப் பற்றி அறிவில்லாதிருக் கிறார்களே; உங்களுக்கு வெட்கமுண்டாக இதைச் சொல்லுகிறேன் (1கொரி 15:33,34).**

அப்போஸ்தலர் பவுல் மரித்தோரின் உயிர்த்தெழுதலைப்பற்றி கொரிந்தியருக்குச் சொல்லும்போது, தன்னுடைய உபதேசத்தின் முடிவில் அவர்களுக்கு ஒரு எச்சரிப்பின் வார்த்தையையும் சொல்லுகிறார். அவர்களிடத்தில் ஆகாதசம்பாஷணைகள் இருக்கிறது. அவர்களுடைய நல்லொழுக்கம் கெட்டுப்போகியிருக்கிறது. அவர்கள் பரிசுத்தமாய் ஜீவிக்காமல், தங்களுடைய மனம்போன போக்கில் ஜீவிக்கிறார்கள். உலக இன்பங்களை அனுபவிக்க வேண்டுமென்பதே அவர்களுடைய பிரதான நோக்கமாகயிருக்கிறது. கொரிந்தியரிடம் பாவசுபாவங்கள் அதிகமாய்க் காணப்படுவதினால், பவுல் அவர்களை "மோசம்போகாதிருங்கள்" என்று சொல்லி எச்சரிக்கிறார்.

கொரிந்தியரில் சிலர் மரித்தோரின் உயிர்த்தெழுதல் இல்லையென்று சொல்லி, தங்கள் மாம்சத்தின் இச்சைகளுக்கு இடங்கொடுத்து, பாவத்தில் ஜீவிக்கிறார்கள். புசிப்போம், குடிப்போம் நாளைக்குச் சாவோம் என்று ஆகாத சம்பாஷணைகளைப் பேசுகிறார். இவர்களைக்குறித்து விசுவாசிகள் எச்சரிக்கையாயிருக்க வேண்டும். அவர்களுடைய வாயின் வார்த்தைகள் ஆபத்தானவைகள். இப்படிப்பட்ட ஆகாத சம்பாஷணைகள் கொரிந்தியரின் நல்லொழுக்கங்களைக் கெடுத்துவிடும். வரப்போகிற மேன்மையை நோக்கிப் பார்ப்பதற்குப் பதிலாக, இப்பூமியில் புசித்து குடித்து பூரிப்பாயிருப்பதையே நோக்கிப் பார்ப்பார்கள். மரித்தோரின் உயிர்த்தெழுதலை நோக்கிப் பார்ப்பதற்கு பதிலாக, இவர்கள் தங்கள் மரணத்தை மாத்திரமே நோக்கிப் பார்ப்பார்கள்.

ஆகாத சம்பாஷணைகளைப் பேசுகிறவர்கள் விசுவாசிகளில் பலருடைய நல்லொழுக்கங்களை கெடுத்துப் போட்டிருக்கிறார்கள். பரிசுத்தமாய் ஜீவித்த விசுவாசிகள், இவர்களுடைய பேச்சைக் கேட்டு, பாவத்தில் ஜீவிக்கிறார்கள். கர்த்தருக்காக ஜீவிக்கவேண்டும் என்னும் பக்திவைராக்கியம் இவர்களைவிட்டு நீங்கிப்போய், புசிப்போம் குடிப்போம் என்று சொல்லுகிறார்கள். மரித்தோரின் உயிர்த்தெழுதலை எதிர்பார்த்து ஜீவித்த இவர்கள், இப்போது அதை நம்பாமல், நாளைக்குச் சாவோம் என்று விரக்தியோடு சொல்லுகிறார்கள்.

நல்லொழுக்க முள்ளவர்கள் நல்லொழுக்க முள்ளவர்களோடு ஐக்கியமாகயிருக்கவேண்டும். பாவம் ஒரு தொற்றுநோயைப் போன்றது. ஆகாதசம் பாஷணைகளைப் பேசுகிறவர்களோடு நாம் ஐக்கியம் வைத்திருந்தால், நம்முடைய நல்லொழுக்கம் கெட்டுப்போகும்.

கொரிந்துவிலுள்ள விசுவாசிகள் தங்கள் விசுவாசத்தையும், பரிசுத்தமான ஜீவியத்தையும் எவ்வாறு காத்துக்கொள்வது என்று பவுல் அவர்களுக்கு ஆலோசனை சொல்லுகிறார். அவர்கள் பாவம் செய்யக்கூடாது. நீதிக்கேற்க விழித்துக்கொள்ளவேண்டும். தெளிந்தவர்களாயிருக்க வேண்டும். ஆகாதசம் பாஷணைகளைக்கேட்டு தங்களுடைய மனதைக் கெடுத்துப் போடக்கூடாது. உலகப்பிரகாரமான ஜனங்களின் ஆசை வாழ்க்கைகளுக்குச் செவிக்கொடுத்து, கிறிஸ்துவைப் பின்பற்றுவதை விட்டு விலகிப்போய்விடக்கூடாது. பாவிகளின் ஆகாதசம்பாஷணை நம்முடைய விசுவாசத்தைக் கெடுத்துப்போடக்கூடாது.

கர்த்தருடைய பிள்ளைகளாகிய நம்முடைய இருதயத்தில், மரித்தோரின் உயிர்த்தெழுதலையும், நித்திய ஜீவனையும் பற்றிய சிந்தனை நிரம்பியிருக்கவேண்டும். வருங்காலத்தைக்குறித்து நமக்கு நம்பிக்கையில்லையென்றால், நம்முடைய ஆவிக்குரிய ஜீவியம் பாழாய்ப்போகும். மரித்தோரின் உயிர்த்தெழுதலும், நித்திய ஜீவனும் உண்டு. இதை விசுவாசிக்கிற நாம் இந்த உபதேசத்திற்கேற்ற பிரகாரம் ஜீவிக்கவேண்டும்.

கொரிந்து சபையிலுள்ள ஜனங்களில் சிலர் தேவனைப்பற்றிய அறிவில்லாதிருக்கிறார்கள். விசுவாசிகள் தாங்கள் ஆராதிக்கிற தேவனைப்பற்றி அறியாதிருக்கக்கூடாது. கர்த்தரைப் பின்பற்றுகிறேன் என்று சொல்லிக்கொண்டு, கர்த்தரைப்பற்றி அறியாதவர்களாக இருக்கக்கூடாது. தேவனைப்பற்றி அறிவில்லாதவர்கள் மரித்தோரின் உயிர்த்தெழுதலையும், நித்திய ஜீவனையும் நம்பமாட்டார்கள். இவர்களுடைய அவிசுவாசம் இவர்களை அழித்துப்போடும்.

தேவனைப் பற்றி அறிந்திருக்கிறவர்கள், தம்முடைய பிள்ளைகளுக்கு அவர் கொடுக்கிற ஆசீர்வாதங்களையும், சிலாக்கியங்களையும் அறிந்திருப்பார்கள். வரப்போகிற ஆசீர்வாதத்தை எதிர்பார்த்து, இப்போது சந்தோஷமாய் ஜீவிப்பார்கள். பரலோகமே இவர்களுடைய நம்பிக்கையாகவும் சந்தோஷமாகவும் இருக்கும். வரப்போகிற ஆசீர்வாதத்தை எதிர்பார்த்து, தற்போது தாங்கள் அனுபவிக்கிற வேதனைகளையும், சோதனைகளையும், பாடுகளையும் சகித்துக்கொள்வார்கள். தங்களுடைய பிரயாசம் வீணாய்ப்போகாது என்றும், தாங்கள் இலக்கு இல்லாமல் ஓடவில்லையென்றும் அறிந்திருப்பார்கள். கர்த்தரை நோக்கிப் பார்த்து தங்களுடைய விசுவாச ஓட்டத்தில் முன்னேறிச்செல்வார்கள்.

இவ்வுலகத்திலுள்ள ஜனங்கள் எல்லோரும் ஒன்றுபோலிருப்பதில்லை. ஒரு சிலர் ஐசுவரியவான்களாகவும் ஒரு சிலர் தரித்திரராகவும் இருக்கிறார்கள். துன்மார்க்கர் ஐசுவரியவான்களாகவும், நல்லவர்கள் தரித்திரராகவும்கூட இப்பிரபஞ்சத்தில் அநேகர் இருக்கிறார்கள். கர்த்தருடைய பிள்ளைகள் இதையெல்லாம் பார்த்து சோர்ந்து போய்விடக்கூடாது. இப்பிரபஞ்சத்தில் இப்படிப்பட்ட காரியங்கள் இருக்கலாம். பரலோகத்தில் இவையெல்லாம் சரிசெய்யப்படும். கர்த்தருடைய பிள்ளைகளாகிய நமக்கு பரலோகத்தில் ஒரு நன்மையும் குறைவாயிராது.

## மரித்தோர் எப்படி எழுந்திருப்பார்கள் 1கொரி 15:35-50

**1கொரி 15:35. ஆகிலும், மரித்தோர் எப்படி எழுந்திருப்பார்கள், எப்படிப்பட்ட சரீரத்தோடே வருவார்களென்று ஒருவன் சொல்வானாகில்,**

**1கொரி 15:36. புத்தியீனனே, நீ விதைக்கிற விதை செத்தாலொழிய உயிர்க்கமாட்டாதே.**

**1கொரி 15:37. நீ விதைக்கிறபோது இனி உண்டாகும் மேனியை விதையாமல், கோதுமை, அல்லது மற்றொரு தானியத்தினுடைய வெறும் விதையையே விதைக்கிறாய்.**

**1கொரி 15:38. அதற்குதேவன் தமது சித்தத்தின் படியே மேனியைக் கொடுக்கிறார்; விதை வகைகள் ஒவ்வொன்றிற்கும் அதற்கேற்ற மேனியையே கொடுக்கிறார்.**

**1கொரி 15:39. எல்லா மாம்சமும் ஒரேவிதமான மாம்சமல்ல; மனுஷருடைய மாம்சம் வேறே, மிருகங்களுடைய மாம்சம் வேறே, மச்சங்களுடைய மாம்சம் வேறே, பறவைகளுடைய மாம்சம் வேறே.**

**1கொரி 15:40. வானத்துக்குரிய மேனிகளுமுண்டு, பூமிக்குரிய மேனிகளுமுண்டு; வானத்துக்குரிய மேனிகளுடைய மகிமையும் வேறே, பூமிக்குரிய மேனிகளுடைய மகிமையும் வேறே;**

**1கொரி 15:41. சூரியனுடைய மகிமையும் வேறே, சந்திரனுடைய மகிமையும் வேறே, நட்சத்திரங்களுடைய மகிமையும் வேறே, மகிமையிலே நட்சத்திரத்துக்கு நட்சத்திரம் விசேஷித்திருக்கிறது.**

**1கொரி 15:42. மரித்தோரின் உயிர்த்தெழுதலும் அப்படியே இருக்கும். அழிவுள்ளதாய் விதைக்கப்படும், அழிவில்லாததாய் எழுந்திருக்கும்;**

**1கொரி 15:43. கனவீனமுள்ளதாய் விதைக்கப்படும், மகிமையுள்ளதாய் எழுந்திருக்கும்; பலவீனமுள்ளதாய் விதைக்கப்படும், பலமுள்ளதாய் எழுந்திருக்கும்.**

**1கொரி 15:44. ஜென்மசரீரம் விதைக்கப்படும், ஆவிக்குரிய சரீரம் எழுந்திருக்கும்; ஜென்மசரீரமுமுண்டு, ஆவிக்குரிய சரீரமுமுண்டு.**

**1கொரி 15:45. அந்தப்படியே முந்தின மனுஷனாகிய ஆதாம் ஜீவாத்துமாவானான் என்றெழுதியிருக்கிறது; பிந்தின ஆதாம் உயிர்ப்பிக்கிற ஆவியானார்.**

**1கொரி 15:46. ஆகிலும் ஆவிக்குரிய சரீரம் முந்தினதல்ல, ஜென்மசரீரமே முந்தினது; ஆவிக்குரிய சரீரம் பிந்தினது.**

**1கொரி 15:47. முந்தின மனுஷன் பூமியிலிருந்துண்டான மண்ணானவன்; இரண்டாம் மனுஷன் வானத்திலிருந்து வந்த கர்த்தர்.**

**1கொரி 15:48. மண்ணானவன் எப்படிப் பட்டவனோ மண்ணானவர்களும் அப்படிப் பட்டவர்களே; வானத்துக்குரியவர் எப்படிப் பட்டவரோ, வானத்துக்குரியவர்களும் அப்படிப்பட்டவர்களே.**

**1கொரி 15:49. மேலும் மண்ணானவனுடைய சாயலை நாம் அணிந்திருக்கிறது போல, வானவருடைய சாயலையும் அணிந்துகொள்வோம்.**

**1கொரி 15:50. சகோதரரே, நான் சொல்லுகிறதென்னவெனில், மாம்சமும் இரத்தமும் தேவனுடைய இராஜ்யத்தைச் சுதந்தரிக்க மாட்டாது; அழிவுள்ளது அழியாமையைச் சுதந்தரிப்பதுமில்லை.**

கொரிந்து சபையிலே மரித்தோரின் உயிர்த்தெழுதலைக் குறித்து வாக்குவாதமுண்டாயிற்று. ஒரு சிலர் மரித்தோரின் உயிர்த்தெழுதல் உண்டு என்றும், வேறு சிலரோ இல்லையென்றும் விவாதம்பண்ணுகிறார்கள். மரித்தோரின் உயிர்த்தெழுதல் உண்டு என்று நம்ப மறுக்கிறார்கள். இவர்களுடைய அவநம்பிக்கைக்கு இரண்டு காரணங்கள் உள்ளன. அவையாவன: 1. மரித்தோர் எப்படி எழுந்திருப்பார்கள். 2. எப்படிப்பட்ட சரீரத்தோடே வருவார்கள்.

மரித்தோர் எந்த வல்லமையினால் உயிர்த்தெழுவார்கள் என்று மரித்தோரின் உயிர்த்தெழுதலை நம்பாதவர்கள் கேட்கிறார்கள். மரித்தோரை உயிர்த்தெழச் செய்கிற வல்லமை எது என்பது இவர்களுடைய கேள்வி. இந்தக் கேள்வியைக் கேட்கிறவர்கள் மரித்தோரின் உயிர்த்தெழுதலை சிறிதும் நம்பாதவர்கள். வேறு சிலரோ இந்த உபதேசத்தை நம்புகிறார்கள். ஆனால் தங்கள் நம்பிக்கையில் தெளிவில்லாதவர்களாக, குழப்பத்தோடிருக்கிறார்கள். உயிர்த்தெழும் போது அவருடைய சரீரம் எப்படியிருக்கும் என்பதை அறிந்து கொள்வதில் ஆர்வத்தோடிருக்கிறார்கள்.

தேவனுடைய தெய்வீக வல்லமையினாலேயே மரித்தோரின் உயிர்த்தெழுதல் உண்டாகும். இந்தச் சத்தியத்தை விளக்குவதற்கு, ஒரு விதை விதைக்கப்பட்டு, அது எப்படி முளைத்து, பயிராகி, மேனியைத் தருகிறது என்று பவுல் ஒரு உவமானத்தைச் சொல்லுகிறார். நாம் ஒவ்வொரு வருஷமும் தானிய விதைகளை விதைக்கிறோம். இவை நிலத்தில் செத்துப்போகிறது. செத்துப்போன விதை உயிர்ப்பெற்று முளைக்கிறது. முளைத்து பயிராகி அறுவடைக்கு ஆயத்தமாக மேனியைத் தருகிறது.

விதை முளைத்துப் பயிராகவேண்டுமென்றால் அது மரிக்கவேண்டும். விதை செத்த பின்பே அதற்கு உயிர் உண்டாகிறது. இது நம்முடைய அன்றாட வாழ்வில் நடைபெறுகிற சம்பவம். தேவனுடைய வல்லமையினாலேயே விதை செத்துப்போய் முளைக்கிறது. மனுஷராகிய நாமும் செத்துப்போகிறோம். தேவனுடைய வல்லமையினாலே நாம் மறுபடியும் உயிரோடு எழும்புவோம். இதை நம்பாதவர்கள் ஒரு விதை எப்படி செத்து உயிர்பெறுகிறது என்பதை நோக்கிப் பார்க்கவேண்டும்.

நாம் விதைக்கிற விதைக்கும், அதை அறுவடைபண்ணுகிற மேனிக்கும் வித்தியாசமுண்டு. விதைக்கிற விதையில் மாற்றமுண்டாகும். தேவன் தம்முடைய சித்தத்தின் பிரகாரமாக விதைக்கு மேனியைக் கொடுக்கிறார். விதை வகைகள் ஒவ்வொன்றிற்கும் தேவன் அதற்கேற்ற மேனியை கொடுக்கிறார். விதைக்கப்படும் விதை பலவிதமான மாற்றங்கள் வழியாகக் கடந்துவருகிறது. அது முளைத்து எழும்புவதற்கு முன்பாக, விதைக்கப்பட்ட விதை செத்துப்போகிறது.

எல்லா மாம்சமும் ஒரே விதமான மாம்சமல்ல. மாம்சங்களில் வித்தியாசமுண்டு. மனுஷருடைய மாம்சம் வேறு. மிருகங்களுடைய மாம்சம் வேறு. பறவைகளுடைய மாம்சம் வேறு. மாச்சங்களுடைய மாம்சமும் வேறு.

மேனிகளிலும் வித்தியாசமுண்டு. வானத்திற்குரிய மேனிகள் வேறு. பூமிக்குரிய மேனிகள் வேறு. இவற்றின் மகிமை வேறு. வானத்திற்குரிய மேனிகளுடைய மகிமை வேறு. பூமிக்குரிய மேனிகளுடைய மகிமை வேறு. சூரியனுடைய மகிமை வேறு. சந்திரனுடைய மகிமை வேறு. நட்சத்திரங்களுடைய மகிமை வேறு.

மரித்துப்போன சரீரம் உயிர்த்தெழும் போது, அதற்குப் பலவிதமான மாற்றங்கள் உண்டாகும். சரீரங்களுக்கு வெவ்வேறு விதமான மகிமைகள் உண்டாயிருக்கும். தேவனுடைய வல்லமையே மரித்துப்போன சரீரத்தை உயிரோடு எழுப்புகிறது. தேவனுடைய இதே வல்லமையே வானத்திற்குரிய மேனிகளுக்கும், சூரியனுக்குரிய மேனிகளுக்கும், வானமண்டலங்களில் உள்ளவைகளுக்கும் வெவ்வேறுவிதமான மகிமையைக் கொடுக்கிறது. தேவன் அததற்குரிய மேனிகளையும் மகிமையையும் தம்முடைய வல்லமையினால் கொடுக்கிறார். இப்படிப்பட்ட சர்வவல்லமையுள்ள தேவனால் மரித்தோரை உயிரோடு எழுப்ப முடியும்.

வெவ்வேறு விதமான மகிமையைப்பற்றி பவுல் சொல்லும்போது, மரித்தோரின் உயிர்த்தெழுதலும் அப்படியே இருக்கும் என்று சொல்லுகிறார். மரித்தோரை அடக்கம்பண்ணுவது என்பது ஒரு விதையை நிலத்தில் விதைப்பதற்குச் சமம். அந்த விதையை பூமிக்கு ஒப்புக்கொடுப்பதுபோல, மரித்துப்போன சரீரத்தை பூமியில் அடக்கம் பண்ணுகிறோம். முளைக்க வேண்டுமென்பதற்காகவே விதையை விதைக்கிறோம். அதுபோலவே உயிர்த்தெழ வேண்டுமென்பதற்காகவே சரீரத்தை பூமியில் அடக்கம்பண்ணுகிறோம்.

மரித்தோர் மறுபடியும் உயிரோடு எழும்பும்போது, அவர்கள் கல்லறையின் வல்லமையிலிருந்து விடுதலை பெற்று எழும்புகிறார்கள். இனிமேல் மரணத்திற்கோ, கல்லறைக்கோ, உயிர்த்தெழுந்த சரீரங்கள் மேல் அதிகாரமில்லை. நம்முடைய சரீரம் அழிவுள்ளதாய் விதைக்கப்படும் அழிவில்லாததாய் எழுந்திருக்கும். கனவீனமுள்ளதாய் விதைக்கப்படும். மகிமையுள்ளதாய் எழுந்திருக்கும். பலவீனமுள்ளதாய் விதைக்கப்படும். பலமுள்ளதாய் எழுந்திருக்கும். ஜென்ம சரீரம் விதைக்கப்படும். ஆவிக்குரிய சரீரம் எழுந்திருக்கும்.

நம்முடைய சரீரம் அற்பமானது (பிலி 3:21). இயேசுகிறிஸ்து நம்முடைய அற்பமான சரீரத்தை தம்முடைய மகிமையான சரீரத்திற்கு ஒப்பாக மறுரூபப்படுத்துவார். நம்முடைய சரீரம் உயிர்த்தெழும்போது, அது கிறிஸ்துவின் மகிமையுள்ள சரீரத்திற்கு ஒப்பாகயிருக்கும். கிறிஸ்துவின் சரீரம் பிரகாசிப்பதுபோல நம்முடைய மறுரூபமான சரீரமும் பிரகாசிக்கும்.

நம்முடைய சரீரம் மரித்துப்போகும் போது அது பூமியில் அடக்கம் பண்ணப்படுகிறது. செத்துப்போன சரீரம் மரணத்தின் வல்லமையிலிருக்கிறது. செத்துப்போன சரீரத்தினால் ஒன்றும் செய்யமுடியாது. அந்தச் சரீரத்திற்கு நம்பிக்கையே இல்லை. ஆனால் தேவனோ தம்முடைய தெய்வீக வல்லமையினால் மரித்துப்போன நம்முடைய சரீரத்தை மறுபடியும் உயிரோடு எழுப்புகிறார். நம்முடைய சரீரங்கள் உயிரோடு எழும்பும் போது தேவன் அதற்கு பரலோகத்தின் ஜீவனையும், மகிமையையும் தருகிறார்.

நாம் மரித்து அடக்கம்பண்ணப்படும் போது நம்முடைய சரீரம் அழிவுள்ளதாக அடக்கம் பண்ணப்பட்டாலும், நாம் உயிரோடு எழும்பும்போது அழிவில்லாததாய் எழுந்திருப்போம். வானத்திலும் பூமியிலும் தேவன் பெரிய காரியங்களைச் செய்கிறார். அவரால் எல்லாம் கூடும். அவரால் கூடாத காரியம் ஒன்றுமில்லை. வானத்திற்குரிய மேனிகளுமுண்டு. பூமிக்குரிய மேனிகளுமுண்டு. அவற்றிற்கு மகிமையுமுண்டு. இவையெல்லாவற்றையும் தேவன் தம்முடைய வல்லமையினால் உண்டுபண்ணுகிறார்.

மரித்தோரின் உயிர்த்தெழுதலை கொரிந்தியருக்கு உபதேசம் பண்ணுவதற்காக முந்திய ஆதாமையும் பிந்தின ஆதாமையும் அப்போஸ்தலர் பவுல் இங்கு ஒப்பிட்டுச் சொல்லுகிறார். முந்திய ஆதாம் பூமியிலிருந்து உண்டான மண்ணானவன். பிந்தின ஆதாம் வானத்திலிருந்து வந்த கர்த்தராகிய இயேசுகிறிஸ்து. முந்திய மனுஷனாகிய ஆதாம் ஜீவாத்துமாவானான். பிந்தின ஆதாமாகிய இயேசுகிறிஸ்து உயிர்ப்பிக்கிற ஆவியானார்.

நம்முடைய ஜென்ம சரீரம் முந்திய ஆதாமிலிருந்து வந்திருக்கிறது. பிந்தின ஆதாமாகிய இயேசுகிறிஸ்துவிடமிருந்து நம்முடைய ஆவிக்குரிய சரீரம் வந்திருக்கிறது. ஆவிக்குரிய சரீரம் முந்தினதல்ல. ஜென்ம சரீரமே முந்தினது. ஆவிக்குரிய சரீரம் பிந்தினது. முந்தின ஆதாம் ஜீவாத்துமாவானதுபோல நாமும் ஜீவாத்துமாக்களாகயிருக்கிறோம். பிந்தின ஆதாமாகிய இயேசுகிறிஸ்து உயிர்ப்பிக்கிற ஆவியாகயிருக்கிறார். அவரே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாகயிருக்கிறார். முந்தின ஆதாம் நமக்கு ஜென்ம சரீரத்தைக் கொடுக்கவில்லையென்றால், பிந்தின ஆதாமாகிய இயேசு கிறிஸ்துவினால் நமக்கு ஆவிக்குரிய சரீரத்தைக் கொடுக்க முடியாது.

ஆகையினால் நாம் ஆவிக்குரிய சரீரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு, நமக்கு ஜென்ம சரீரம் அவசியமாயிருக்கிறது. அழிவுள்ளது அழியாமையை சுதந்தரிப்பதில்லை. பரிசுத்தவான்களின் சரீரம் உயிர்த்தெழும்போது, அதில் அநேக மாற்றங்கள் உண்டாகிறது. அழிவுள்ளதிலிருந்து அழியாமையாக மாறுகிறது. பலவீனமுள்ளதிலிருந்து பலமுள்ளதாய் மாறுகிறது. கனவீனமுள்ளதிலிருந்து மகிமையுள்ளதாய் மாறுகிறது. ஜென்ம சரீரமாக விதைக்கப்பட்டு ஆவிக்குரிய சரீரமாக எழும்புகிறது.

## கடைசி எக்காளம்
## 1கொரி 15 : 51-57

**1கொரி 15:51. இதோ, ஒரு இரகசியத்தை உங்களுக்கு அறிவிக்கிறேன்; நாமெல்லாரும் நித்திரையடைவதில்லை; ஆகிலும் கடைசி எக்காளம் தொனிக்கும்போது, ஒரு நிமிஷத்திலே, ஒரு இமைப்பொழுதிலே, நாமெல்லாரும் மறுரூபமாக்கப்படுவோம்.**

**1கொரி 15:52. எக்காளம் தொனிக்கும், அப்பொழுது மரித்தோர் அழிவில்லாதவர்களாய் எழுந்திருப் பார்கள்; நாமும் மறுரூபமாக்கப்படுவோம்.**

**1கொரி 15:53. அழிவுள்ளதாகிய இது அழியாமையையும், சாவுக்கேதுவாகிய இது சாவாமையையும் தரித்துக்கொள்ளவேண்டும்.**

**1கொரி 15:54. அழிவுள்ளதாகிய இது அழியாமையையும், சாவுக்கேதுவாகிய இது சாவாமையையும் தரித்துக்கொள்ளும்போது, மரணம் ஜெயமாக விழுங்கப்பட்டது என்று எழுதியிருக்கிற வார்த்தை நிறைவேறும்.**

**1கொரி 15:55. மரணமே! உன் கூர் எங்கே? பாதாளமே! உன் ஜெயம் எங்கே?**

**1கொரி 15:56. மரணத்தின் கூர் பாவம், பாவத்தின் பெலன் நியாயப்பிரமாணம்.**

**1கொரி 15:57. நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலே நமக்கு ஜெயங்கொடுக்கிற தேவனுக்கு ஸ்தோத்திரம்.**

அப்போஸ்தலர் பவுல் விசுவாசிகளுக்கு ஒரு இரகசியத்தைச் சொல்லுகிறார். பரிசுத்தவான்களெல்லோரும் மரித்துப் போவதில்லை. ஆனால் நாமெல்லோரும் மறுரூபமாக்கப்படுவோம். எல்லா பரிசுத்தவான்களும் அழிவுள்ளதிலிருந்து அழியாமையைச் சுதந்தரிப்பதில்லை. மரித்துப்போன சரீரத்தில் மாத்திரமே இப்படிப்பட்ட மாற்றங்கள் உண்டாகும். ஏனெனில் மாம்சமும் இரத்தமும் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிக்கமாட்டாது. அழிவுள்ளது அழியாமையைச் சுதந்தரிப்பதில்லை.

கர்த்தருடைய இரண்டாம் வருகையின்போது உயிரோடிருக்கிற பரிசுத்தவான்கள் மரித்துப்போகாமல், மறுரூபமாக்கப்படுவார்கள். கடைசி எக்காளம் தொனிக்கும்போது, ஒரு நிமிஷத்திலே, ஒரு இமைப்பொழுதிலே, உயிரோடிருக்கிற பரிசுத்தவான்களெல் லோரும் மறுரூபமாக்கப்படுவார்கள்.

கடைசி எக்காளம் தொனிக்கும்போது மரித்துப்போன பரிசுத்தவான்கள் உயிரோடு எழும்புவார்கள். மரித்தோர் அழிவில்லாதவர்களாக இருந்திருப்பார்கள். உயிரோடிருக்கிற பரிசுத்தவான்களும் மறுரூபமாக்கப்படும் போது, அழிவில்லாதவர்களாக மறுரூபப் படுத்தப்படுவார்கள்.

நம்முடைய சரீரம் அழிவுள்ளது. இது சாவுக்கேதுவானது. அழிவுள்ளதாகிய நம்முடைய சரீரம் அழியாமையைத் தரித்துக்கொள்ள வேண்டும். சாவுக்கேதுவாகிய இந்தச் சரீரம் சாவாமையைத் தரித்துக்கொள்ளவேண்டும். ஆகையினால்தான் மரித்துப்போன பரிசுத்தவான்கள் உயிரோடு எழுப்பப்படுகிறார்கள். எக்காளம் தொனிக்கும்போது உயிரோடிருக்கிற பரிசுத்தவான்கள் மறுரூபமாக்கப் படுகிறார்கள். மரித்துப்போன பரிசுத்தவான்களும் உயிரோடிருக்கிற பரிசுத்தவான்களும் அழியாமையையும் சாவாமையையும் தரித்துக்கொள்கிறார்கள்.

கிறிஸ்துவுக்குள் மரித்தோர்களும் உயிரோடிருக்கிறவர்களும் மறுரூபமாக்கப் படுகிறார்கள். அழிவுள்ளதாகிய சரீரம் அழியாமையைத் தரித்துக்கொள்கிறது. சாவுக்கேதுவாகிய சரீரம் சாவாமையைத் தரித்துக்கொள்கிறது. அப்போது மரணம் ஜெயமாக விழுங்கப்பட்டது என்று எழுதியிருக்கிற வார்த்தை நிறைவேறுகிறது. கர்த்தருடைய பரிசுத்தவான்கள் மரிக்கும்போது மரணம் அவர்களை விழுங்காது. கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் உயிரோடு எழும்பும்போதுதான் மரணம் ஜெயமாக விளங்கப்படுகிறது.

கடைசி சத்துருவாகிய மரணம் பரிகரிக்கப்படுகிறது. அப்போது உயிர்தெழுந்த பரிசுத்தவான்கள் "மரணமே உன் கூர் எங்கே" என்று சொல்லுவார்கள். நமக்கு மரண பயம் இருக்காது. நாம் பாதாளத்தைப்பார்த்து உன் ஜெயம் எங்கே என்று சொல்லுவோம். மரித்துப்போன பரிசுத்தவான்கள் மரணத்தின் கல்லறையில் கட்டுண்டவர்களாக யிருந்தார்கள். அவர்கள் உயிர்த்தெழும்போதோ, கல்லறையின் வாசல்கள் திறக்கப்படுகிறது. அவர்கள் நித்திய விடுதலையைப் பெற்றுக்கொள்கிறார்கள். மரணம் ஜெயமாக விழுங்கப்படுகிறது. கர்த்தருடைய பரிசுத்தவான்களை அடிமைப்படுத்திய மரணம், இப்போது அவர்களுடைய உயிர்த்தெழுதலினால் அடிமைப்படுத்தப்படுகிறது.

மரணத்திற்கு ஜெயமிருந்தபோது, பாவமே அதன் கூராகயிருந்தது. மரணத்தின் கூர் பாவம். மரணத்தின் கூரில் ஆத்துமாவை அழித்துப்போடுகிற விஷம் இருந்தது. பாவமே மரணத்திற்குக் காரணம். பாவம் மனுஷருக்குத் தீயகாரியங்களைச் செய்கிறது. பாவம் மனுக்குலத்தைச் சபிக்கிறது. கர்த்தருடைய பரிசுத்தவான்களோ இயேசுகிறிஸ்துவின் மூலமாய் ஜெயம்பெறுகிறார்கள்.

மரணத்தின் கூர் பாவம். ஆனால் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவோ, கல்வாரி சிலுவையில் தம்முடைய ஜீவனை ஒப்புக்கொடுத்து மரித்ததன் மூலமாக, மரணத்தின் கூராகிய பாவத்தை நீக்கிப்போட்டார். இனிமேல் மரணத்தின் கூர் பரிசுத்தவான்களைத் தீண்டலாம். ஆனால் நமக்கு அதனால் ஒரு பாதிப்பும் உண்டாகாது.

பாவத்தின் பெலன் நியாயப்பிரமாணம். நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவோ நியாயப்பிரமாணத்தின் சாபத்தை நீக்கிப்போட்டார். அவர் நமக்காக சாபமானார். ஆகையினால் இயேசுகிறிஸ்துவின் மூலமாய் பாவம் தன்னுடைய பெலத்தையும், கூரையும் இழந்துவிட்டது. பாவத்தின் கூரும் பெலனும் அகற்றப்பட்டு விட்டது.

கர்த்தருடைய வருகையின் நாள் வரப்போகிறது. அந்நாளில் அவர்களுடைய கல்லறைகளெல்லாம் திறக்கும். கர்த்தருக்குள் மரித்துப்போன பரிசுத்தவான்கள் உயிரோடு எழும்புவார்கள். அவர்கள் நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்வார்கள். இனிமேல் மரணத்தினால் அவர்கள்மேல் பெலன் செய்யமுடியாது. கர்த்தருடைய பரிசுத்தவான்கள், தங்களுடைய உயிர்த்தெழுதலின்போது, தங்களுக்குக் கிடைக்கப்போகிற ஜெயத்தை நினைத்து, இப்போதே சந்தோஷப்படுகிறார்கள்.

மரணத்தின்மீது தங்களுக்கு ஜெயம் கிடைக்குமென்று எதிர்பார்த்து சந்தோஷப்படுகிறார்கள். பரிசுத்தவான்கள் தங்கள் நித்திரையிலிருந்து மகிமையோடு எழும்பும்போது, அவர்களுக்கு மரணத்தின்மீது பிரத்தியட்சமான ஜெயமுண்டாகும். இவையெல்லாவற்றிற்கும் இயேசுகிறிஸ்துவில் நமக்குக் கிடைத்திருக்கிற தேவனுடைய கிருபையே காரணம்.

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலே, தேவன் நமக்கு ஜெயங்கொடுக்கிறார். கிறிஸ்துவினாலே நம்முடைய பாவம் மன்னிக்கப்படுகிறது. மரணம் ஜெயமாக விழுங்கப்படுகிறது. கர்த்தருடைய பரிசுத்தவான்களுக்கு அவர்களுடைய சுயபெலத்தினால் ஜெயமுண்டாவதில்லை. தேவனாலேயே ஜெயம் உண்டாகிறது. இதற்காக பரிசுத்தவான்கள் தேவனை "நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினாலே நமக்கு ஜெயம்கொடுக்கிற தேவனுக்கு ஸ்தோத்திரம்" என்று துதிக்கிறார்கள் (1கொரி 15:57).

தேவனுக்குரிய கனத்தையும் மகிமையையும் நாம் அவருக்குச் செலுத்தவேண்டும். அப்போதுதான் கர்த்தர் நமக்குக் கொடுக்கிற ஆசீர்வாதத்தையும் ஜெயத்தையும் நம்மால் அனுபவிக்க முடியும். கர்த்தரைத் துதிக்கும்போது நம்முடைய ஆத்துமாவுக்குத் திருப்தி உண்டாகும். கர்த்தருக்குரிய பங்கை நாம் வைத்துக்கொள்ளக்கூடாது. தேவனே துதிகளுக்குப் பாத்திரர். நம்முடைய துதிகளையும் ஸ்தோத்திரங்களையும் நாம் அவருக்கு ஏறெடுக்கும்போது, நம்முடைய உள்ளத்தின் சந்தோஷம் பெருகும்.

மரணத்தின் வல்லமையில் கட்டப்பட்டிருக்கிறவர்களினால் கர்த்தரைத் துதிக்க முடியாது. அவர்களுடைய இருதயத்தில் கர்த்தரைத் துதிக்கும் துதி இருக்காது. மரணத்தின்மீது நமக்கு ஜெயம் கிடைக்கும் என்று நம்புகிறவர்கள் மாத்திரமே தேவனைத் துதிப்பார்கள். இந்த ஜெயம் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினாலே உண்டாகும் என்பதை அங்கீகரித்து, தேவனைத் துதிப்பார்கள். நம்முடைய இருதயத்தில் ஜெயத்தின் நம்பிக்கை நிரம்பியிருக்கும்போது, நம்முடைய நாவின் வார்த்தைகள் கர்த்தரைத் துதிக்கும். விசுவாசமுள்ள வார்த்தைகளைப் பேசும். நாம் கர்த்தருக்கு ஸ்தோத்திர பலிகளை ஏறெடுப்போம். நம்முடைய அவிசுவாச வார்த்தைகளெல்லாம் நம்மைவிட்டு நீங்கிப்போகும்.

நம்முடைய நித்திரையிலிருந்து நாம் உயிரோடு எழும்பும்போது, "தேவனுக்கு ஸ்தோத்திரம்" என்று துதித்து எழும்புவோம். நாம் கர்த்தரைத் துதிக்கும் போது தூதர்களும் நம்மோடு சேர்ந்து கர்த்தரைத் துதிப்பார்கள். நம்முடைய உயிர்த்தெழுதலின்போது மரணத்தின் கூர் மழுங்கிப்போகும். பாதாளம் தோற்றுப் போகும். பாவத்தின் பெலன் அற்றுப்போகும். இயேசு கிறிஸ்துவுக்குள் நமக்கு புதிய ஜீவன் உண்டாகும். அந்த ஜீவன் நித்திய ஜீவனாயிருக்கும்.

## கர்த்தருக்குள் படுகிற பிரயாசம்

**ஆகையால், எனக்குப் பிரியமான சகோதரரே, கர்த்தருக்குள் நீங்கள் படுகிற பிரயாசம் விருதாவாயிராதென்று அறிந்து, நீங்கள் உறுதிப் பட்டவர்களாயும், அசையாதவர்களாயும், கர்த்தருடைய கிரியையிலே எப்பொழுதும் பெருகுகிறவர்களாயும் இருப்பீர்களாக (1கொரி 15:58).**

கொரிந்து சபையிலுள்ள விசுவாசிகளுக்குப் பவுல் மூன்று ஆலோசனைகளைச் சொல்லுகிறார். அவையாவன : 1. அவர்கள் சுவிசேஷத்தை விசுவாசிக்கிற விசுவாசத்தில் உறுதிப் பட்டவர்களாயிருக்க வேண்டும். 2. கிறிஸ்துவுக்குள் தாங்கள் மரித்தாலும் தேவன் தம்முடைய வல்லமையினால் மரித்துப்போன தங்களுடைய சரீரங்களை உயிரோடு எழுப்புவார் என்னும் விசுவாசத்தில் அசையாதவர்களாகயிருக்க வேண்டும். அவர்கள் கேட்ட சுவிசேஷத்தினால் உண்டாகும் நம்பிக்கையைவிட்டு அசையாமல், ஸ்திரமாயும் உறுதியாயும் விசுவாசத்தில் நிலைத்திருக்கவேண்டும் (கொலோ 1:22). கிறிஸ்துவைப்பற்றிய நம்பிக்கை அவர்களுக்கு நிலையும் உறுதியும் ஆத்தும நங்கூரமுமாயிருக்கிறது (எபி 6:19). 3. கர்த்தருடைய கிரியையிலே அவர்கள் எப்பொழுதும் பெருகுகிறவர்களாகயிருக்க வேண்டும். நீடிய பொறுமையோடும், விடா முயற்சியோடும் கர்த்தருக்கு ஊழியம் செய்யவேண்டும்.

BELLWETHER INTERNATIONAL

# 1 கொரிந்தியர் - விரிவுரை

# I CORINTHIANS - COMMENTARY

GOOD NEWS PUBLISHERS

இந்தப் பிரபஞ்சத்தில் நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தைக் கட்டியெழுப்புவதற்கு நமக்கு நல்ல அஸ்திபாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. கிறிஸ்து உயிர்த்தெழுந்தார். ஆகையினால் நாமும் உயிர்த்தெழுவது நிச்சயம். கர்த்தருக்குள் நாம் படுகிற பிரயாசம் விருதாவாயிராது. தேவனுக்காக நாம் ஒரு சில காரியங்களை இழந்துபோகலாம். ஆனால் தேவனால் நமக்கு ஒரு இழப்பும் உண்டாகாது.

நாம் கர்த்தருக்காகப்படுகிற பிரயாசத்தை அவர் ஒருபோதும் மறந்துவிடமாட்டார். அதை அவர் மறப்பதற்கு அநீதியுள்ள தேவனல்ல. நாம் கேட்டுக்கொள்வதற்கும் நினைப்பதற்கும் அதிகமாக தேவன் நமக்குக் கொடுக்கிறவர். தேவனுக்காக ஊழியம் செய்கிறவர்கள் நல்ல பலனைப் பெறுவார்கள். நாம் இம்மையில் தேவனுக்கு ஊழியம் செய்தால், மறுமையில் அவரை முகமுகமாய்த் தரிசிப்போம். நாம் கர்த்தருக்காக எவ்வளவு ஊழியம் வேண்டுமானாலும் செய்யலாம். அதற்குத் தடை ஏதுமில்லை. கர்த்தர் தம்முடைய ஊழியக்காரருக்கு ஏற்ற பலனைக்கொடுப்பார். நம்மையும் மரித்தோரிலிருந்து உயிர்த்தெழச்செய்வார். மகிமையினாலும் கனத்தினாலும் நம்மை முடிசூட்டுவார். நித்திய ஜீவனை நமக்கு சுதந்தரிக்கக் கொடுப்பார்.

# 16 அதிகாரம்

யூதேயாவிலுள்ள சபைகளுக்கு தர்மப்பணம் சேகரிப்பதைக் குறித்து பவுல் ஆலோசனை சொல்லுகிறார் (1கொரி 16:1-4). பவுல் அவர்களிடத்தில் வந்து சில காலம் தங்கியிருப்பதைப் பற்றியும் எழுதுகிறார் (1கொரி 16:5-9). தீமோத்தேயுவைப்பற்றி நல்வார்த்தை சொல்லுகிறார். அப்பொல்லோவும் அவனுக்கு நற்சமயம் உண்டாயிருக்கும்போது அவர்களிடத்திற்கு வருவானென்று எழுதுகிறார் (1கொரி 16:10-12). விசுவாசிகள் விழித்திருக்கவேண்டுமென்று ஆலோசனை சொல்லுகிறார். தன்னுடைய உடன் ஊழியருக்கு பவுல் உரிய மரியாதைக் கொடுக்கிறார் (1கொரி 16:13-19). விசுவாசிகளுக்கு வாழ்த்துதல்கூறி பவுல் இந்த நிருபத்தை நிறைவு செய்கிறார்.

## தர்மப்பணம்
## 1கொரி 16 : 1-4

**1கொரி 16:1. பரிசுத்தவான்களுக்காகச் சேர்க்கப்படும் தர்மப்பணத்தைக்குறித்து நான் கலாத்தியா நாட்டுச் சபைகளுக்குப் பண்ணின திட்டத்தின் படியே நீங்களும் செய்யுங்கள்.**

**1கொரி 16:2. நான் வந்திருக்கும்போது பணஞ்சேர்க்குதல் இராதபடிக்கு, உங்களில் அவனவன் வாரத்தின் முதல்நாள்தோறும், தன்தன் வரவுக்குத் தக்கதாக எதையாகிலும் தன்னிடத்திலே சேர்த்துவைக்கக்கடவன்.**

**1கொரி 16:3. நான் வரும்போது உங்கள் உபகாரத்தை எருசலேமுக்குக் கொண்டு போகும்படிக்கு, நீங்கள் தகுதியுள்ளவர்களாகக் குறிக்கிறவர்கள் எவர்களோ, அவர்களிடத்தில் நிருபங்களைக் கொடுத்து, அவர்களை அனுப்புவேன்.**

**1கொரி 16:4. நானும் போகத்தக்கதானால், அவர்கள் என்னுடனேகூட வரலாம்.**

பவுல் இந்த அதிகாரத்தோடு இந்த நிருபத்தை நிறைவு செய்கிறார். யூதேயா தேசத்திலுள்ள விசுவாசிகளுக்கு துன்பமும் பஞ்சமும் உண்டாயிற்று. அவர்களுக்கு உதவி செய்யும் வண்ணமாக பவுல் சபைகளில் தர்மப்பணம் சேகரித்து அனுப்புகிறார். இந்த ஆலோசனையை பவுல் கலாத்தியா நாட்டு சபைகளுக்கும் சொல்லியிருக்கிறார். அங்குள்ள சபைகளுக்குப் பண்ணின திட்டத்தின்படியே, கொரிந்து சபையாரும் செய்யவேண்டுமென்று அவர்களுக்கு ஆலோசனை சொல்லுகிறார்.

மற்ற சபைகளில் நடைபெறுகிற காரியங்களை, கொரிந்து சபையாரின் பக்திவிருத்திக்காகவும், அவர்களை உற்சாகப்படுத்தும் வண்ணமாகவும் தெரியப்படுத்துகிறார். கொரிந்தியர்கள் தாராளமாயும் மனப்பூர்வமாயும் தர்மப்பணம் கொடுக்கவேண்டும். கலாத்தியா நாட்டு சபைகளைப்பற்றி இவர்களுக்குச் சொல்லி, தர்மப்பணம் கொடுப்பதற்கு இவர்களை உற்சாகப்படுத்துகிறார்.

ஒரு சபை ஆவிக்குரிய வரங்களில் அதிகமாய் நிரம்பியிருக்கும்போது, அந்த சபையார் கஷ்டத்திலிருக்கிற மற்ற சகோதரருக்கு தாராளமாய் உதவி செய்வார்கள். மற்றவர்களுடைய துன்பங்களையும் பகிர்ந்துகொள்வார்கள்.

கலாத்தியா நாட்டு சபைகளைப்பற்றி பவுல் தங்களிடம் சொல்லும்போது, கொரிந்தியர்கள் அவர்கள்மீது பொறாமைப்படக்கூடாது. கலாத்தியரை உயர்த்திப் பேசவேண்டும் என்னும் எண்ணத்தோடு, பவுல் அவர்களைப்பற்றி இங்கு சொல்லவில்லை. கொரிந்தியரை உற்சாகப்படுத்துவதற்காகவே பவுல் கலாத்தியா நாட்டு சபைகளைப்பற்றி இங்கு குறிப்பிடுகிறார். கொரிந்து சபையார் இதுவரையிலும் மற்ற சபைகளிலுள்ள விசுவாசிகளுக்கு உதவி செய்யவில்லை. இப்போது உதவி செய்ய அவர்களுக்கு ஒரு வாய்ப்பு கிடைத்திருக்கிறது. யூதேயா தேசத்திலுள்ள சபையாருக்கு உதவி தேவைப்படுகிறது. கலாத்தியா நாட்டு சபையார் யூதேயா தேசத்து சபையாருக்கு உதவிசெய்கிறார்கள். அவர்களைப்போலவே கொரிந்து சபையாரும் உதவி செய்ய முன்வரவேண்டும். கர்த்தருடைய பிள்ளைகள் தங்களுடைய நலனை மாத்திரம் பார்த்துக்கொண்டால் போதாது. பிறருடைய நன்மைகளையும் விசாரிக்கவேண்டும். தங்களை மாத்திரம் நேசித்தால் போதாது. பிறரையும் தங்களைப்போல நேசிக்கவேண்டும்.

தர்மப்பணத்தை எப்படி சேகரிக்கவேண்டும் என்றும் பவுல் ஆலோசனை சொல்லுகிறார். கொரிந்து சபையிலுள்ள ஒவ்வொருவரும், வாரத்தின் முதல்நாள் தோறும், தன்தன் வரவுக்குத்தக்கதாக, எதையாகிலும் தன்னிடத்தில் சேர்த்து வைக்கவேண்டும். இதை ஒழுங்கும் கிரமுமமாக சேர்க்கவேண்டும். ஒவ்வொரு வாரமும் இதைத் தொடர்ந்து சேகரிக்கவேண்டும். நல்ல காரியங்களுக்காக இதுபோல பணம் சேகரிப்பது மிகவும் நல்லது. களஞ்சியத்தில் பொருள் சேகரிப்படும்போது, அது தேவைப்படுகிற சமயங்களில் பேருதவியாகயிருக்கும்.

பிறருக்கு உதவிசெய்வதற்காக, கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம், நம்முடைய வரவுக்குத்தக்கதாக எதையாவது சேர்த்துவைக்கவேண்டும். அதை எப்போதாவது சேர்த்து வைக்காமல், தொடர்ச்சியாக, ஒரு குறிப்பிட்ட நாள்தோறும் சேர்த்துவைக்கவேண்டும்.

நம்முடைய வரவுக்குத்தக்கதாக நாம் உற்சாகமாய்க் கொடுக்கவேண்டும். இதை நம்மால் கொடுக்க முடியும் என்று நம்பி, மனப்பூர்வமாய்க் கொடுக்க வேண்டும். பிறருக்குப் பயன்படவேண்டுமென்பதற்காக, நம்மால் கொடுக்க முடிந்ததை சேகரித்து, அதை மொத்தமாகக் கொடுக்கலாம். கொரிந்து சபையிலுள்ளவர்கள் வாரத்தின் முதல்நாள்தோறும் தர்மப்பணத்தை தங்களிடத்தில் சேகரித்து வைக்கவேண்டும் என்று பவுல் ஆலோசனை சொல்லுகிறார்.

ஒவ்வொரு விசுவாசியும் எவ்வளவு கொடுக்கவேண்டும் என்பதையும் பவுல் தெளிவாகச் சொல்லுகிறார். ஒவ்வொருவரும் தன்தன் வரவுக்குத்தக்கதாக கொடுக்கவேண்டும். ஒவ்வொரு விசுவாசியும் கர்த்தர் தன்னை ஆசீர்வதிக்கிற அளவுக்குத்தக்கதாக கொடுக்கவேண்டும். தேவனே நமக்கு தொழிலையும், வருமானத்தையும் கொடுக்கிறார். கர்த்தர் நமக்குக் கொடுத்ததை, நாம் அவருடைய ஊழியத்திற்குக் கொடுக்கிறோம்.

தேவனுடைய ஆசீர்வாதம் இல்லையென்றால் நமக்கு ஒரு வருமானமும் இருக்காது. நம்முடைய சுயமுயற்சியினால் நம்மால் வருமானம் பண்ணமுடியாது. கர்த்தருடைய அநுக்கிரகம் இருந்தால் மாத்திரமே நம்மால் வருமானம்பண்ண முடியும். நம்மிடத்திலுள்ளதெல்லாம் கர்த்தர் நமக்கு கிருபையாய்க் கொடுத்தது என்னும் எண்ணம் நம்முடைய உள்ளத்திலிருக்கவேண்டும்.

கர்த்தருடைய பிள்ளைகளுக்கு பொருளாதார உதவி செய்வது, கர்த்தருடைய ஊழியத்தின் ஒரு பகுதி. நமக்கு பல செலவுகள் இருந்தாலும், கஷ்டப்படுகிற விசுவாசிகளையும் நாம் ஆதரிக்கவேண்டும். கர்த்தர் நமக்கு அதிகமான ஆசீர்வாதங்களைக் கொடுக்கும் போது, அவையெல்லாவற்றையும் நமக்கே வைத்துக்கொள்ளவேண்டும் என்று சுயநலம் பாராட்டக்கூடாது. தேவன் நமக்குக் கொடுத்ததை, நாம் பிறருக்குக் கொடுக்கவேண்டும். கர்த்தருடைய ஆசீர்வாதத்தின் பாத்திரமாக நாம் பயன்படவேண்டும்.

நாம் தேவனிடத்திலிருந்து எவ்வளவு அதிகமாகப் பெற்றிருக்கிறோமோ, அவ்வளவு அதிகமாய் நாம் மற்றவர்களுக்குக் கொடுக்கவேண்டும். கர்த்தர் நம்மை ஆசீர்வதித்து, நம்மூலமாய் பிறரை ஆசீர்வதிக்க சித்தமுள்ளவராயிருக்கிறார். கர்த்தர் கொடுக்கிற ஆசீர்வாதத்திற்கு நாம் உண்மையுள்ளவர்களாக இருக்கவேண்டும். தேவன் நமக்குக் கொடுத்திருக்கிற வருமானத்தில், ஒரு பகுதியை, பிறருக்குக் கொடுக்க சேகரித்து வைக்கவேண்டும் என்று பவுல் ஆலோசனை சொல்லுகிறார். ஒவ்வொரு விசுவாசியும் தன்தன் வரவுக்குத்தக்கதாக எதையாகிலும் தன்னிடத்தில் சேர்த்துவைக்கவேண்டும். இது பிறருக்குரியது.

நம்முடைய வரவு அதிகமாயிருக்கும்போது நாம் அதிகமாய்ச் சேகரிக்கவேண்டும். பிறருக்கு அதிகமாய்க் கொடுக்க கர்த்தர் நமக்கு வாய்ப்புக் கொடுக்கும்போது, நம்முடைய கரங்கள் விரிவாய்த் திறக்கப்படவேண்டும். நம்முடைய இருதயம் மனப்பூர்வமாயும் சந்தோஷமாயும் கொடுக்கவேண்டும். கர்த்தர் நமக்கு அதிகமாய்க் கொடுக்கும்போது, நாம் பிறருக்கு கொஞ்சமாய்க் கொடுக்கக்கூடாது.

கர்த்தர் நமக்கு கொஞ்சம் வரவைக்கொடுத்தால், நம்மால் பிறருக்கு அதிகமாய்க் கொடுப்பதற்கு வாய்ப்பு இருக்காது. ஆனாலும் நம்முடைய வரவுக்குத்தக்கதாக கொடுக்க முன்வரவேண்டும். நாம் குறைவாகக் கொடுத்தாலும், நம்முடைய இருதயத்தின் நிறைவினால் அதைக் கொடுக்கவேண்டும். மனப்பூர்வமாயும் உற்சாகமாயும் கொடுக்கவேண்டும். நம்முடைய வரவுக்குத்தக்கதாய், தாராளமாய்க் கொடுக்கவேண்டும்.

கர்த்தர் நமக்கு கொஞ்சமாய்க் கொடுத்து, நம்மிடத்திலிருந்து அதிகமாய் எதிர்பார்க்கமாட்டார். அவர் நமக்கு கொடுக்கிற வரவுக்குத்தக்கதாகவே, நம்மிடத்திலிருந்து எதிர்பார்க்கிறார். கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் ஒவ்வொருவரும் கர்த்தருக்கு கணக்கு ஒப்புவிக்கவேண்டும். கர்த்தரிடத்திலிருந்து எவ்வளவு பெற்றுக்கொள்கிறோமோ அவ்வளவுக்கு மாத்திரம் கணக்கு ஒப்புவித்தால் போதுமானது.

ஒவ்வொரு விசுவாசியும் தன் வரவுக்குத்தக்கதாக எப்பொழுது சேர்த்துவைக்கவேண்டும் என்றும் பவுல் ஆலோசனை சொல்லுகிறார். நாம் வாரத்தின் முதல்நாள் தோறும் சேர்த்து வைக்கவேண்டும். வாரத்தின் முதல்நாள் என்பது கர்த்தருடைய நாள். இது பரிசுத்தமான ஓய்வுநாள். இப்பிரபஞ்சத்தின் வேலைகளில் ஈடுபடாமல், கர்த்தருடைய ஓய்வுநாளில் நாம் கர்த்தருக்குரிய காரியங்களைத் தியானிக்கிற நாள். நம்முடைய வயிற்றுப் பிழைப்புக்காக இந்த ஓய்வுநாளில் உழைக்கக்கூடாது. அதற்குப் பதிலாக பிறருக்கு இரக்கம் காண்பிப்பதற்காக பிரயாசப்படவேண்டும்.

வாரத்தின் முதல்நாளில் நாம் கர்த்தருக்கு ஊழியம் செய்யவேண்டும். கர்த்தருடைய பிள்ளைகளுக்கு உதவிசெய்யவேண்டும். இது நம்முடைய கடமையென்று நினைவுகூரவேண்டும். பிறருக்கு உதவிசெய்யும்போது அதை பயபக்தியோடு செய்யவேண்டும். ஏழைக்கு இரங்குகிறவன் கர்த்தருக்குக் கடன்கொடுக்கிறான்.

நாம் உண்மையான அன்போடு பிறருக்கு இரக்கம் காண்பிக்கும்போது, நம்மூலமாய் தேவனுடைய அன்பு வெளிப்படுகிறது. அன்பின் கனி நம்மிடத்தில் காணப்படுகிறது. வாரத்தின் முதல்நாளில் நாம் மற்ற பரிசுத்தவான்களுக்கு உதவிசெய்தாலும், அது கர்த்தருக்குச் செய்கிற ஊழியமாகவே இருக்கும். வாரத்தின் முதல்நாள்தோறும் ஒவ்வொரு விசுவாசியும், தன்தன் வரவுக்குத்தக்கதாக சேர்த்துவைப்பது கர்த்தருக்குப் பிரியமான காரியம்.

விசுவாசிகளிடத்திலுள்ள பணத்தின் மீது பவுல் அதிகாரம் செலுத்தவில்லை. அவர்களுடைய விசுவாசத்தை வர்த்திக்கப்பண்ணவேண்டும் என்பதிலேயே பவுல் ஆர்வம் காண்பிக்கிறார். பவுல் பணத்திற்காக ஊழியம் செய்கிறவரல்ல. அவர்களுடைய அனுமதியில்லாமல், அவர்களுடைய பணத்தை, பவுல் தன் சுயஇஷ்டம்போல செலவுபண்ணமாட்டார். கொரிந்து சபையிலுள்ள விசுவாசிகள் யாரை தகுதியுள்ளவர்களாக குறிக்கிறார்களோ, அவர்களையே தர்மப்பணம் சேகரிக்கிற ஊழியத்தில் பவுல் பயன்படுத்துகிறார். கொரிந்தியர்கள் கொடுக்கிறார்கள். யார் மூலமாகக் கொடுக்கவேண்டுமென்பதை அவர்களே தீர்மானம் செய்துகொள்ளலாம். இந்த விஷயத்தில் பவுல் அவர்கள்மீது அதிகாரம் செலுத்தவில்லை.

எருசலேமிலுள்ள விசுவாசிகள் பஞ்சத்தினால் கஷ்டப்படுகிறார்கள். துன்பப்படுகிற விசுவாசிகளுக்கு நாம் உதவிசெய்யவேண்டும். இது ஒரு நற்கிரியை. நம்முடைய கிறிஸ்தவ அன்பு இதன் மூலமாய் வெளிப்படுகிறது. கொரிந்தியரும் எருசலேமிலுள்ள விசுவாசிகளுக்கு மனப்பூர்வமாய் உதவிசெய்ய விரும்புகிறார்கள். எருசலேம் தூரத்திலுள்ள நகரமாகயிருந்தாலும், தங்கள் சபையிலுள்ள விசுவாசிகளில் ஒருவரை, இந்த நீண்ட பிரயாணத்திற்கு ஒப்புக்கொடுத்து, தங்கள் உபகாரங்களை எருசலேமுக்கு அனுப்புகிறார்கள். இதன் மூலமாய் மற்ற விசுவாசிகள்மீது கொரிந்து சபையார் காண்பிக்கிற மெய்யான அன்பு வெளிப்படுகிறது.

மற்ற விசுவாசிகளுக்கு நாம் உதவிசெய்தால் மாத்திரம் போதாது. அவர்கள்மீது நாம் வைத்திருக்கிற இரக்கமும், மெய்யான அன்பும் வெளிப்பட வேண்டும். அவர்கள்மீது நாம் மனதுருக்கமாயிருக்க வேண்டும். விசுவாசிகள் சேர்த்துவைத்திருக்கிற தர்மப்பணத்தை, தான் மாத்திரமே பெற்றுக்கொள்ளவேண்டுமென்று பவுல் விரும்பவில்லை. ஒவ்வொரு ஊழியத்தையும் அதற்குரிய முறைப்படி செய்யவேண்டும் என்று பவுல் விரும்புகிறார். அதிலும் விசேஷமாக பணவிஷயத்தைக் குறித்த காரியங்களில் பவுல் மிகவும் எச்சரிப்போடிருக்கிறார்.

தர்மப்பணத்தை சேகரித்து வைத்திருக்கிற கொரிந்து சபையாருக்கு முக்கியத்துவம் கொடுக்கிறார். தாங்கள் சேகரித்து வைத்திருக்கிற தர்மப்பணத்தை, யாரிடம் கொடுத்து அனுப்பவேண்டும் என்பதை அவர்களே தீர்மானம் செய்துகொள்ளலாம் என்று பவுல் சொல்லுகிறார். கர்த்தருடைய ஊழியக் காரர்களாகிய நாமும், பணவிஷயங்களைப் பொருத்தகாரியங்களில், அந்த ஊழியத்தை எப்படி செய்யவேண்டுமோ, அப்படி மாத்திரம் செய்யவேண்டும். ஊழியக்காரர்கள் பணவிஷயத்தில் தங்கள் சாட்சியை கெடுத்துப்போடக்கூடாது.

## உங்களிடத்திற்கு வருவேன்
## 1கொரி 16 : 5-9

**1கொரி 16:5. நான் மக்கெதோனியா நாட்டின் வழியாய்ப் போகிறபடியால், மக்கெதோனியா நாட்டைக் கடந்தபின்பு உங்களிடத்திற்கு வருவேன்.**

**1கொரி 16:6. நான் எங்கே போனாலும் நீங்கள் என்னை வழிவிட்டனுப்பும் படிக்கு, நான் உங்களிடத்தில் சிலகாலம் தங்கவேண்டியதாயிருக்கும்; ஒருவேளை மழைகாலம் முடியும்வரையும் இருப்பேன்.**

**1கொரி 16:7. இப்பொழுது வழிப்பிரயாணத்திலே உங்களைக் கண்டுகொள்ளமாட்டேன்; கர்த்தர் உத்தரவுகொடுத்தால் உங்களிடத்தில் வந்து சிலகாலம் தங்கியிருக்கலாமென்று நம்புகிறேன்.**

**1கொரி 16:8. ஆகிலும் பெந்தெகொஸ்தே பண்டிகைவரைக்கும் எபேசு பட்டணத்தில் இருப்பேன்.**

**1கொரி 16:9. ஏனெனில் இங்கே பெரிதும் அநுகூலமுமான கதவு எனக்குத் திறக்கப்பட்டிருக்கிறது; விரோதஞ்செய்கிறவர்களும் அநேகர் இருக்கிறார்கள்.**

அப்போஸ்தலர் பவுல் தன்னுடைய பிரயாணத்தின் நோக்கத்தை கொரிந்தியருக்குச் சொல்லுகிறார். அவர் மக்கெதோனியா நாட்டின் வழியாகப் போகிறார். அந்த நாட்டை கடந்தபின்பு கொரிந்தியரிடத்திற்கு வரப்போவதாகச் சொல்லுகிறார். அங்கு வந்தால் ஒருவேளை மழைகாலம் முடியும் வரையிலும் சிலகாலம் தங்கியிருப்பதாகச் சொல்லுகிறார். கொரிந்து சபையில் நீண்டகாலமாக பவுல் ஊழியம் செய்திருக்கிறார். அவர்கள் மத்தியிலே அநேக நன்மைகளைச் செய்திருக்கிறார். அப்படிப்பட்ட விசுவாசிகளைப் பார்க்கவேண்டுமென்று பவுல் வாஞ்சையோடிருக்கிறார்.

கர்த்தருடைய ஊழியக்காரர்கள், தங்கள் ஊழியக்காலத்தில், தாங்கள் ஊழியம் செய்த ஊழியஸ்தலங்களை மறந்துவிடக்கூடாது. தங்கள் மூலமாய் இரட்சிக்கப்பட்ட விசுவாசிகளையும் மறந்துவிடக்கூடாது. கர்த்தர் நம்மை எங்கெல்லாம், யாரிடத்திலெல்லாம் பயன்படுத்தினாரோ, அவர்களை நினைவுகூர்ந்து, அவர்களுக்காக ஜெபம்பண்ணவேண்டும்.

கொரிந்து சபையிலுள்ள விசுவாசிகளில் சிலர் வேறு ஊழியக்காரர்களைப் பின்பற்றி, பவுலுக்கு விரோதமாக எழும்பியிருக்கிறார்கள். இருந்தாலும், அந்த சபையிலுள்ள விசுவாசிகளில் அநேகர் பவுலின்மீது சிநேகமாகவே இருக்கிறார்கள். ஆகையினால்தான் பவுல் அவர்களிடத்திற்கு வரவேண்டுமென்றும், அவர்களிடத்தில் சிலகாலம் தங்கியிருக்க வேண்டுமென்றும் விரும்புகிறார்.

பவுல் கொரிந்து சபையாரைப் பார்ப்பதில் அவருக்கு ஒரு நோக்கமுள்ளது. தான் எங்கே போனாலும், அவர்கள் தன்னை வழிவிட்டனுப்ப வேண்டும் என்று எதிர்பார்க்கிறார். அவர்களும் தன்னோடு கூடப்பிரயாணம் பண்ணவேண்டும் என்பது பவுலின் நோக்கமல்ல. பவுலின் பிரயாணத்திற்கும் ஊழியத்திற்கும் அவர்கள் ஊழியம் செய்யவேண்டும். பவுல் பல தேசங்களுக்கும் சென்று கர்த்தருடைய ஊழியத்தைச் செய்கிறார். அந்த ஊழியத்தின் தேவைகளைச் சந்திப்பதற்கு கொரிந்தியர்கள் முன்வரவேண்டும். பவுலின் பிரயாணத்திற்குத் தேவையான காரியங்களை அவர்கள் கொடுத்து உதவிசெய்யவேண்டும். ஊழியத்தில் அவர்கள் பவுலை உற்சாகப்படுத்த வேண்டும். பவுல் அவர்களோடு தங்கியிருக்கும்போது, அவர்கள் மூலமாய் தனக்கு உபகாரம் கிடைக்கும் என்று எதிர்பார்க்கிறார்.

பவுல் இப்பொழுது மக்கெதோனியா நாட்டின் வழியாய்ப் பிரயாணமாய்ப் போகிறார். ஆனால் இந்தப் பிரயாணத்தில் பவுல் அவர்களைக் கண்டுகொள்ள மாட்டார். இப்போது அவரால் அவர்களோடு தங்கியிருக்க முடியாது. அவர்களோடு தங்கியிருக்காமல், அவர்களிடத்தில் வந்தவுடனேயே புறப்பட்டுப்போய்விட்டால், பவுலுக்கோ அல்லது கொரிந்தியருக்கோ எவ்வித நன்மையும் உண்டாகாது. ஆத்தும திருப்தி ஏற்படாது. பவுலின் ஊழியத்திற்கு அது பிரயோஜனமாயிராது. ஆகையினால் வந்தவுடனே போய்விடாமல், அவர்களோடு சிலகாலம் தங்கியிருக்கும் பிரகாரமாக, ஏற்றவேளையிலே அவர்கள் மத்தியில் வர பவுல் பிரயாசப்படுகிறார்.

பவுல் கொரிந்து சபையாரை அதிகமாய் நேசிக்கிறார். ஆகையினால் அங்கு வந்தவுடன் போய்விடாமல், அவர்களோடு சிலகாலம் தங்கியிருக்க வேண்டுமென்று விரும்புகிறார். இது பவுலுக்குப் பிரியமானது. கொரிந்தியருக்கு ஊழியம் செய்ய ஒரு வாய்ப்பு உண்டாகும். கொரிந்தியருக்கு ஆவிக்குரிய ஆசீர்வாதங்கள் கிடைக்கும். பவுலுக்கு பொருளாதார ஆசீர்வாதங்கள் கிடைக்கும்.

பவுல் தன்னுடைய பிரயாணத்தைப்பற்றிச் சொல்லும்போது, "கர்த்தர் உத்தரவு கொடுத்தால், உங்களிடத்தில் வந்து சிலகாலம் தங்கியிருக்கலாமென்று நம்புகிறேன்" என்று சொல்லுகிறார். பவுலைப்போலவே நாம் செய்கிற எல்லா காரியத்திலும் கர்த்தருடைய சித்தத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கவேண்டும். கர்த்தர் உத்தரவு கொடுத்தால், இந்தக் காரியத்தை செய்ய விரும்புகிறேன்" என்றுதான் நாம் சொல்லவேண்டும். தேவனுடைய கிருபையில்லாமல் நம்மால் ஒன்றும் செய்யமுடியாது. தேவனுடைய சித்தத்திற்கு விரோதமாக நாம் ஒருபோதும் யுத்தம்பண்ணக்கூடாது. தேவனுடைய வல்லமையும், தேவனுடைய உத்தரவும் நமக்குத் தேவை.

பவுல் எபேசு பட்டணத்தில் இருப்பதாகச் சொல்லுகிறார். அங்கு அவர் பெந்தெகொஸ்தே பண்டிகை வரையிலும் இருப்பார். பவுல் எபேசு பட்டணத்திலிருக்கும்போது இந்த நிருபத்தை எழுதினாரென்று வேத பண்டிதர்கள் சொல்லுகிறார்கள். ஏனெனில் இந்த நிருபத்தில் "ஆசியா நாட்டிலுள்ள சபையார் உங்களை வாழ்த்துகிறார்கள்" (1கொரி 16:19) என்று எழுதுகிறார்.

பவுல் எபேசு பட்டணத்திலிருப்பதற்கு ஒரு முக்கியமான காரணமுள்ளது. பவுலின் ஊழியம் இங்கு மிகவும் சிறப்பாக நடைபெறுகிறது. கர்த்தருடைய சுவிசேஷத்தைப் பிரசங்கம்பண்ணுவதற்கு, எபேசுவிலே பெரிதும், அநுகூலமுமான கதவு பவுலுக்குத் திறக்கப்பட்டிருக்கிறது. ஆகையினாலேயே, பவுல் எபேசு பட்டணத்தில் சிலகாலம் தங்கியிருக்க வேண்டுமென்று விரும்புகிறார். ஆத்துமாக்கள் இரட்சிக்கப்படுகிறார்கள். ஊழியம் சிறப்பாக நடைபெறுகிறது. ஆத்துமாக்கள் அறுவடைக்கு ஆயத்தமாயிருக்கிறார்கள். சுவிசேஷத்தை ஆர்வத்தோடு கேட்கிறார்கள். இப்படிப்பட்ட இடங்களில் ஊழியக்காரர்கள் இன்னும் சிலகாலம் தங்கியிருந்து, கர்த்தருடைய ஊழியத்தைத் தொடர்ந்து செய்யவேண்டும்.

எபேசு பட்டணத்திலே பவுலுக்கு ஊழியவாய்ப்பும் அதிகமாயிருக்கிறது. அதேவேளையில் அவருக்கு விரோதமாக தீங்கு செய்கிறவர்களும் இங்கு அதிமாகயிருக்கிறார்கள். சுவிசேஷ ஊழியம் நன்றாய் நடைபெறும்போது, பிசாசானவன் அநேக சத்துருக்களை நமக்கு விரோதமாக எழுப்புவான். தேவனுடைய ராஜ்யம் ஸ்தாபிக்கப்படுவதை பிசாசு விரும்பமாட்டான். தேவனுடைய ராஜ்யத்தை ஸ்தாபிப்பதற்காகவும், அதை விஸ்தாரம்பண்ணுவதற்காகவும் நாம் எடுக்கிற எல்லா பிரயாசங்களுக்கும் சத்துரு தடையாயிருப்பான். நமக்கு விரோதமாகக் கிரியை செய்வான்.

பவுலின் ஊழியத்திற்கு விரோதமாய் தீங்கு செய்கிறவர்கள் அநேகராயிருக்கிறார்கள். அவர்களுக்குப் பயந்து பவுல் எபேசு பட்டணத்தைவிட்டு ஓடிப்போய்விடவில்லை. அதற்குப் பதிலாக அங்கு இன்னும் சிலகாலம் தங்கியிருக்க வேண்டுமென்று தீர்மானம்பண்ணுகிறார். எதிர்ப்புக்களுக்கு மத்தியிலும் பவுல் உற்சாகமாய் ஊழியம் செய்கிறார். அவர் சத்துருக்களைப் பார்க்கவில்லை. ஊழியம் செய்வதற்கு விரிவாய்த் திறக்கப்பட்டிருக்கிற அநுகூலமான கதவுகளையே பார்க்கிறார்.

கர்த்தருடைய ஊழியக்காரர்களாகிய நமக்கு எதிர்ப்புக்கள் வரலாம். சத்துரு நமக்கு விரோதமாய்க் கிரியை செய்யலாம். இதைப் பார்த்து நாம் பயந்துபோய்விடக்கூடாது. சோர்வடைந்து ஊழியத்தைவிட்டே ஓடிப்போய்விடக்கூடாது. நம்முடைய ஊழியத்திற்கு விரோதமாக எழும்புகிற எதிர்ப்புக்களைப் பார்த்து, நாம் பக்திவைராக்கியமடைய வேண்டும். கர்த்தரிடத்தில் நாம் இன்னும் அதிகமாய் விசுவாசத்தோடிருக்க வேண்டும். ஆர்வமில்லாமல் சோர்வோடு ஊழியம் செய்தால் ஒரு பிரயோஜனமும் உண்டாகாது. உற்சாகமில்லாமல் செய்கிற ஊழியம் வீணாய்ப்போகும். ஊழியத்தில் நமக்கு உற்சாகமில்லையென்றால் நம்முடைய இருதயம் உடைந்துபோகும். நம்முடைய பேச்சிலும் செயலிலும் சோர்வு உண்டாகும். நாம் மற்ற விசுவாசிகளையும், ஊழியக்காரர்களையும் சோர்வடையச்செய்வோம்.

கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் எல்லா சூழ்நிலைகளிலும் அவரையே நோக்கிப் பார்க்கவேண்டும். கர்த்தர் நம்மை கைவிடமாட்டார், கர்த்தர் நமக்காக யுத்தம்பண்ணுவார், கர்த்தர் நம்மை ஊழியத்தில் பயன்படுத்துவார் என்று விசுவாசத்தோடு கர்த்தருக்கு ஊழியம் செய்யவேண்டும். அப்போதுதான் நம்முடைய ஊழியத்தில் ஜீவனும் பலனும் இருக்கும்.

ஊழியக்காரர்கள் சத்துருவின் எதிர்ப்புக்களைப் பார்த்து சோர்ந்து போகக்கூடாது. சுவிசேஷத்தைக் கேட்கிறவர்கள் தங்கள் இருதயத்தைக் கடினப்படுத்தும்போது நமக்கு சோர்வு உண்டாகாலாம். விசுவாசிகள் பின்மாற்றமடைந்து கர்த்தருடைய சமுகத்தைவிட்டு விலகிப்போகும்போது நமக்கு சோர்வு உண்டாகலாம். இது நம்முடைய இருதயத்தை வருத்தமடையச்செய்யலாம்.

ஊழியத்தின்மீது நமக்குள்ள ஆர்வத்தினாலும், விசுவாசிகளின் ஆத்தும இரட்சிப்பின்மீது நமக்குள்ள அக்கரையினாலும் நமக்கு இப்படிப்பட்ட கவலைகளும், சோர்வுகளும் உண்டாகிறது. கர்த்தர் ஊழியத்தில் ஜெயம் தருவார் என்று விசுவாசித்து, உற்சாகமாய் ஊழியம் செய்யவேண்டும்.

## தீமோத்தேயு
## 1கொரி 16 : 10-12

**1கொரி 16:10. தீமோத்தேயு உங்களிடத்திற்கு வந்தானேயாகில், அவன் உங்களிடத்தில் பயமில்லாமலிருக்கப் பாருங்கள்; என்னைப் போல அவனும் கர்த்தருடைய கிரியையை நடப்பிக்கிறானே.**

**1கொரி 16:11. ஆனபடியினால் ஒருவனும் அவனை அற்பமாய் எண்ணாதிருப்பானாக; சகோதரரோடேகூட அவன் வருகிறதற்கு நான் காத்திருக்கிறபடியால், என்னிடத்தில் வரும்படிக்கு அவனைச் சமாதானத்தோடே வழிவிட்டனுப்புங்கள்.**

**1கொரி 16:12. சகோதரனாகிய அப்பொல்லோவைக் குறித்தோவெனில், சகோதரரோடேகூட உங்களிடத்தில் வரும்படிக்கு அவனை மிகவும் வேண்டிக்கொண்டேன். ஆகிலும் இப்பொழுது வர அவனுக்கு மனதில்லை; அவனுக்கு நற்சமயம் உண்டாயிருக்கும்போது வருவான்.**

அப்போஸ்தலர் பவுல் கொரிந்து சபையாரிடத்தில் தீமோத்தேயுவைக் குறித்து நல்வார்த்தைகளைச் சொல்லி அறிமுகம் செய்கிறார். கொரிந்து சபையில் சில உபதேச குழப்பங்கள் காணப்பட்டன. விசுவாசிகள் மத்தியில் ஒழுக்கக்கேடுகள் நிரம்பியிருந்தன. இவற்றை சரி செய்வதற்காக பவுல் தீமோத்தேயுவை கொரிந்தியர் மத்தியில் அனுப்பியிருந்தார். அவர்களுக்கு உபதேசம்பண்ணுவதற்காக மாத்திரமல்ல, அவர்களை கடிந்துகொள்வதற்காகவும் பவுல் தீமோத்தேயுவை அனுப்பினார். கொரிந்து சபையிலுள்ள விசுவாசிகள் ஒருவரையொருவர் நேசியாமல் பகையோடிருக்கிறார்கள். ஒருவருக்கு விரோதமாக ஒருவர் தீங்கு செய்கிறார்கள்.

கொரிந்து சபையிலுள்ள விசுவாசிகளிடத்தில் பெருமையின் ஆவி கிரியை செய்கிறது. கண்டித்து உணர்த்தினால் மாத்திரமே விசுவாசிகளை விட்டு பெருமை நீங்கும். சாதாரண வார்த்தைகளைச் சொன்னால் விசுவாசிகள் குணப்படமாட்டார்கள். அவர்களுக்கு கண்டித்து உபதேசம்பண்ண வேண்டுமென்றால், அதற்கேற்ற ஊழியக்காரரை அனுப்ப வேண்டும். தீமோத்தேயு ஒரு வாலிபர். கடினமான வார்த்தைகளைச் சொல்லி கண்டித்து உபதேசம்பண்ணுவதற்கு தீமோத்தேயு ஏற்றவர். இவருடைய வாலிபவயதும் இப்படிப்பட்ட கண்டித்து உணர்த்தும் உபதேசத்திற்கு உதவியாயிருக்கிறது.

கொரிந்து சபையிலுள்ள விசுவாசிகள் தீமோத்தேயுவை ஏற்றுக்கொள்ளவேண்டும். அவரைப் பயமுறுத்திவிடக்கூடாது. அவருக்குரிய மரியாதையைக் கொடுத்து அவரைக் கனப்படுத்தவேண்டும். அவருடைய உபதேசத்தைக் கேட்கவேண்டும். கர்த்தருடைய ஊழியத்தைச் செய்கிற தீமோத்தேயுவை உற்சாகப்படுத்தவேண்டும். அவரோடு எதிர்த்து நிற்கக்கூடாது. அவரைப் பயமுறுத்தக்கூடாது. தீமோத்தேயு அவர்களைக் கண்டித்து உணர்த்தும்போது, விசுவாசிகள் அவருடைய உபதேசத்தைக் கேட்காமல் ஓடிப்போய்விடவும் கூடாது. கொரிந்து சபையிலுள்ள ஒருவனும் தீமோத்தேயுவை அற்பமாய் எண்ணக்கூடாது.

தீமோத்தேயு ஒரு வாலிபன். அவனுடைய வாலிபவயதை விசுவாசிகள் அசட்டைபண்ணக்கூடாது. கொரிந்து சபையார் ஏற்கெனவே தங்கள் இருதயத்தில் பெருமைப்படுகிறவர்கள். யாரையும் மதிக்கமாட்டார்கள். தங்களுக்கு எல்லாம் தெரியும் என்று இறுமாப்பாயிருக்கிறவர்கள். எல்லோரையும் அற்பமாய் எண்ணுகிறவர்கள். அவர்கள் தீமோத்தேயுவையும் அற்பமாய் எண்ணி, அவருடைய பிரசங்கத்தை அசட்டைபண்ணிவிடக்கூடாது.

கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் பிறரை அற்பமாய் எண்ணுகிற விஷயத்தில் மிகுந்த கவனத்தோடிருக்கவேண்டும். ஊழியக்காரரை ஒருபோதும் அற்பமாய் எண்ணக்கூடாது. தீமோத்தேயு கொரிந்தியர் மத்தியிலிருக்கும்போது, அங்குள்ள விசுவாசிகள் தங்களுடைய ஆவிக்குரிய பிரயோஜனத்திற்காக அவரைப் பயன்படுத்திக்கொள்ளவேண்டும். அங்கிருந்து தீமோத்தேயுவை வழிவிட்டனுப்பும்போது சகோதர சிநேகத்தோடே அனுப்பவேண்டும். பவுல் தீமோத்தேயுவின் வருகைக்காக காத்திருக்கிறார். கொரிந்தியர்கள் தீமோத்தேயுவை சமாதானத்தோடே வழிவிட்டனுப்புமாறு பவுல் கேட்டுக்கொள்கிறார்.

பவுலும் தீமோத்தேயுவும் கர்த்தருடைய ஊழியத்தைச் செய்கிறார்கள். பவுலைப்போல தீமோத்தேயுவும் கர்த்தருடைய கிரியையை நடப்பிக்கிறார். பவுல் எந்த அதிகாரத்தோடு கர்த்தருடைய ஊழியத்தைச் செய்கிறாரோ, அதே அதிகாரத்தோடேயே தீமோத்தேயுவும் ஊழியம் செய்கிறார். ஆகையினால் அவர்கள் தீமோத்தேயுவை அற்பமாய் எண்ணக்கூடாது. பவுலுக்குக் கொடுக்கிற மரியாதையை தீமோத்தேயுவுக்கும் கொடுக்கவேண்டும்.

தீமோத்தேயு கொரிந்தியர் மத்தியிலே பவுலின் ஊழியத்தைச் செய்ய வரவில்லை. தீமோத்தேயு பவுலின் பிரதிநிதியாகவும் தீமோத்தேயு அங்கு வரவில்லை. கர்த்தருடைய கிரியையை நடப்பிப்பதற்காகவே அங்கு வருகிறார். கர்த்தருடைய ஊழியத்தைச் செய்கிற ஒவ்வொரு விசுவாசியையும் நாம் கனப்படுத்தவேண்டும். அவர்களுக்கு மதிப்பும் மரியாதையும் கொடுக்கவேண்டும். ஊழியக்காரர்கள் விசுவாசிகள் மத்தியில் தங்கள் சுயகிரியைகளை நடப்பிக்கக்கூடாது. அவர்கள் கர்த்தருடைய கிரியையை நடப்பிக்க வேண்டும்.

போதகர்களையும், உபதேசியார் களையும், மேய்ப்பர்களையும், அப்போஸ்தலர் களையும், சுவிசேஷகர்களையும் கனப்படுத்த வேண்டும். விசுவாசிகள் அவர்களுக்குரிய மரியாதையை கொடுக்கவேண்டும். கொரிந்தியர்கள் தீமோத்தேயுவுக்கு உரிய மரியாதையை கொடுக்கவில்லையென்றாலும், தீமோத்தேயு கர்த்தருடைய கிரியைச் செய்கிறார் என்பதை உணர்ந்து, ஒரு ஊழியக்காரருக்குக் கொடுக்கவேண்டிய மரியாதையை அவர்கள் கொடுக்கவேண்டும். தீமோத்தேயுவின் நிமித்தம் கொரிந்தியர்கள் அவருக்கு மரியாதை காண்பிக்கவில்லையென்றாலும், பவுலின் நிமித்தமாவது தீமோத்தேயுவுக்கு மரியாதை கொடுக்கவேண்டும்.

தீமோத்தேயு வருவதற்கு பவுல் காத்துக்கொண்டிருக்கிறார். தீமோத்தேயு பவுலிடத்தில் வரும்போது, கொரிந்தியரைப்பற்றி நல்ல செய்தியைக் கொண்டுவரவேண்டும். தன்னைக் கொரிந்தியர்கள் பயப்படுத்தவில்லை என்றும், தன்னை அவர்கள் அற்பமாய் எண்ணவில்லையென்றும் தீமோத்தேயு பவுலிடத்தில் கொரிந்தியரைப்பற்றி நற்சாட்சி சொல்லவேண்டும். தீமோத்தேயு பவுலிடத்தில் வந்து, கொரிந்தியரைப்பற்றி துர்ச்செய்தியைச் சொன்னால், பவுலின் இருதயம் வேதனைப்படும். அவருடைய ஆவி கலங்கும்.

அப்பொல்லோவும் கொரிந்தியரை காண வேண்டுமென்று ஆர்வத்தோடிருக்கிறார். கொரிந்தியரில் சிலர் தங்களை அப்பொல்லோவைச் சேர்ந்தவர்கள் என்று சொல்லிக் கொள்கிறார்கள். விசுவாசிகளுக்குள் ஒரு பிரிவினையை உண்டு பண்ணியிருக்கிறார்கள். அதற்கு அப்பொல்லோவை தலைவராக நியமித்திருக்கிறார்கள். இந்தப் பிரிவைச் சேர்ந்தவர்கள் பவுலுக்கு விரோதமாகப் பேசுகிறார்கள். ஆனாலும் பவுல் அப்பொல்லோவைக் குறித்து நல்வார்த்தைகளைப் பேசுகிறார். அப்பொல்லோ கொரிந்து சபையாரிடத்தில் போவதற்கு, பவுல் அவரைத் தடைபண்ணவில்லை.

கர்த்தருடைய உண்மையுள்ள ஊழியக்காரர்கள் ஒருவருக்கொருவர் பொறாமைப்பட மாட்டார்கள். அவர்களிடத்தில் உண்மையான அன்பும் சகோதர சிநேகமும் நிரம்பியிருக்கும். ஊழியக்காரர்கள் மற்ற ஊழியக்காரர்களுக்கு விரோதமாக தீங்கு நினைக்கமாட்டார்கள். தீங்கு செய்யவும் மாட்டார்கள்.

அப்பொல்லோ இப்போது கொரிந்து சபைக்குப் போகவில்லை. தங்களுக்கு அப்பொல்லோதான் தலைவர் என்று கொரிந்து சபையின் விசுவாசிகளில் சிலர் சொன்னாலும், அந்தத் தலைமைப்பொறுப்பை ஏற்க அப்பொல்லோ அங்கு ஆசைப்பட்டுப் போகவில்லை. ஏனெனில் எல்லா விசுவாசிகளுக்கும் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவே தலையாகயிருக்கிறார். சபையானது கிறிஸ்துவின் சரீரமாயிருக்கிறது. நாமெல்லோரும் இந்தச் சரீரத்தில் அவயவங்களாயிருக்கிறோம்.

அப்பொல்லோ இந்த வேளையில் கொரிந்து சபைக்குப் போவதற்குப் பதிலாக, வேறு சமயத்தில் அங்குபோக வேண்டுமென்று தீர்மானிக்கிறார். ஊழியத்திற்கு எப்போது அநுகூலமாகயிருக்குமோ, அப்போது அங்கு போய், கர்த்தருடைய ஊழியத்தை சிறப்பாகச் செய்ய விரும்புகிறார். ஊழியக்காரர்கள் ஒருவருக்கொருவர் கலந்துபேசி இணைந்து ஊழியம் செய்கிறார்கள். பவுலும் அப்பொல்லோவும் பிரிந்து ஊழியம் செய்யாமல், இணைந்து ஊழியம் செய்கிறார்கள். தேவனுடைய ராஜ்யத்தை ஸ்தாபிப்பதற்கும், விஸ்தாரம்பண்ணுவதற்கும், பவுலும் அப்பொல்லோவும் கலந்து ஆலோசனை செய்து, ஒற்றுமையாய் ஊழியம் செய்கிறார்கள்.

அப்பொல்லோ இப்போது கொரிந்து சபைக்கு போனால் அங்கு பிரிவினை அதிகரிக்கும். தன்னுடைய பிரயாணத்தைப்பற்றி அப்பொல்லோ பவுலிடத்தில் கலந்துபேசி, தான் அங்கு இப்போது போவதைத் தவிர்த்துவிடுகிறார். இப்போது அங்குபோக அப்பொல்லோவுக்கு மனமில்லை. அங்கு ஏற்ற சூழ்நிலை உண்டாகும்போது, அப்பொல்லோ அங்குபோய், கர்த்தருடைய கிரியைகளைச் செய்ய சித்தமாயிருக்கிறார்.

## விழித்திருங்கள்
## 1கொரி 16 : 13-18

**1கொரி 16:13. விழித்திருங்கள், விசுவாசத்திலே நிலைத்திருங்கள், புருஷராயிருங்கள், திடன் கொள்ளுங்கள்.**

**1கொரி 16:14. உங்கள் காரியங்களெல்லாம் அன்போடே செய்யப்படக்கடவது.**

**1கொரி 16:15. சகோதரரே, ஸ்தேவானுடைய வீட்டார் அகாயா நாட்டிலே முதற்பலனானவர்களென்றும், பரிசுத்தவான்களுக்கு ஊழியஞ் செய்யும்படிக்குத் தங்களை ஒப்புவித்திருக்கிறார்களென்றும் அறிந்திருக்கிறீர்களே.**

**1கொரி 16:16. இப்படிப்பட்டவர்களுக்கும், உடன் வேலையாட்களாய்ப் பிரயாசப்படுகிற மற்ற யாவருக்கும் நீங்கள் கீழ்ப்படிந்திருக்க வேண்டுமென்று உங்களுக்குப் புத்திசொல்லுகிறேன்.**

**1கொரி 16:17. ஸ்தேவான், பொர்த்துனாத்து, அகாயுக்கு என்பவர்கள் வந்ததற்காகச் சந்தோஷமாயிருக்கிறேன், நீங்கள் எனக்குச் செய்ய வேண்டியதாயிருந்ததை அவர்கள் செய்திருக்கிறார்கள்.**

**1கொரி 16:18. அவர்கள் என் ஆவிக்கும் உங்கள் ஆவிக்கும் ஆறுதல் செய்தார்கள்; இப்படிப்பட்டவர்களை அங்கீகாரம்பண்ணுங்கள்.**

அப்போஸ்தலர் பவுல் கொரிந்தியருக்கு சில பொதுவான ஆலோசனைகளைச் சொல்லுகிறார். அவர்கள் விழித்திருக்கவேண்டும். கொரிந்தியரின் ஆவிக்குரிய ஜீவியத்திற்கு விரோதமாக பல்வேறு விதமான ஆபத்துக்கள் உண்டாயிருக்கிறது. சபைக்குள்ளிருந்தும், சபைக்கு வெளியிலிருந்தும் அவர்களுக்குப் பிரச்சனைகள் உண்டு. விசுவாசிகள் சுயபெருமையோடிருக்கிறார்கள். அவர்கள் மத்தியிலே ஒழுக்கம் காணப்படவில்லை. விசுவாசிகள் ஒருவரையொருவர் வஞ்சிக்கிறார்கள். இப்படிப்பட்ட ஆபத்தான சூழ்நிலைகளில், அவர்கள் தங்கள் ஆவிக்குரிய ஜீவியத்தில் விழித்திருக்க வேண்டியது மிகவும் அவசியம்.

கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம், இப்பொழுது நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தில் பாதுகாப்பாக நின்றாலும், நம்மைக் காத்துக்கொள்ளவேண்டும். கீழே விழுந்து விடாதவாறு எச்சரிக்கையோடிருக்க வேண்டும். விசுவாசத்தில் நிலைத்திருக்கவேண்டும். சுவிசேஷத்தின் விசுவாசத்தில் நாம் நிலைபெற்றவர்களாக இருக்கவேண்டும். இந்த விசுவாசத்தில் நாம் உறுதியோடிருந்தால்தான் சோதனைகளை எதிர்கொள்ள முடியும். இந்த உலகத்தை ஜெயிக்கமுடியும். தேவனால் பிறப்பதெல்லாம் உலகத்தை ஜெயிக்கும் நம்முடைய விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம் (1யோவா 5:4).

விசுவாசிகள் புருஷராயிருக்க வேண்டுமென்று பவுல் ஆலோசனை சொல்லுகிறார். அவர்கள் புருஷரைப்போல திடமுள்ளவர்களாக இருக்கவேண்டும். பெலத்த கிரியைகளை நடப்பிக்கவேண்டும். தங்களுடைய உறுதியினாலும், பெலத்தினாலும் விசுவாசிகள் தங்களை கிறிஸ்துவுக்குள் புருஷராகக் காண்பிக்க வேண்டும். தீர்மானங்கள் உறுதியாயிருக்க வேண்டும். நாம் நியாயந்தீர்ப்பதிலும் உறுதியுள்ளவர்களாக இருக்கவேண்டும். தங்கள் விசுவாசத்தைக் காத்துக் கொள்வதில் விசுவாசிகள் புருஷரைப்போல உறுதியோடிருக்கவேண்டும்.

கொரிந்தியர்கள் தங்கள் காரியங்களையெல்லாம் அன்போடு செய்யவேண்டுமென்று பவுல் ஆலோசனை சொல்லுகிறார். புருஷராக இருக்கவேண்டுமென்று நினைத்து எந்தக் காரியத்தையும் அன்பில்லாமல் முரட்டுத்தனமாகச் செய்யக்கூடாது. நம்முடைய கிரியைகளில் பிசாசின் சுபாவம் வெளிப்படக்கூடாது. நம்முடைய விசுவாசத்தில் நாம் உறுதியுள்ளவர்களாயிருக்க வேண்டும். நம்முடைய கிரியைகளில் நாம் அன்புள்ளவர்களாயிருக்கவேண்டும்.

கர்த்தருடைய பிள்ளைகளாகிய நமக்கு, நம்முடைய இருதயங்களில் அன்பு இருந்தால் மாத்திரம் போதாது. நம்முடைய ஜீவியத்திலும் அன்பு வெளிப்படவேண்டும். சகோதரர்கள் நமக்கு விரோதமாகத் தவறுசெய்யும்போது, அவர்கள்மீது அன்பு கூர்ந்து, அவர்களைச் சகித்துக் கொள்ள வேண்டும். நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்திற்கு அன்பே பிரதானம். அன்பில்லாமல் நம்முடைய விசுவாச ஜீவியம் கனி தராது. நம்முடைய சத்துருக்களைகூட, நாம் அன்போடுதான் கடிந்துகொள்ளவேண்டும்.

பவுலின் ஊழியத்தில் ஒரு சிலர் அவருக்கு மிகவும் உதவியாயிருக்கிறார்கள். அவர்கள் ஆவிக்குரிய ஜீவியத்தில் முன்னேறி இருக்கிறார்கள். கிறிஸ்துவுக்குள் முதற்பலனானவர்களாக ஜீவிக்கிறார்கள். அப்படிப்பட்ட ஒரு சிலரை பவுல் இங்கு குறிப்பிடுகிறார். அவர்களுடைய சுபாவத்தை கொரிந்தியருக்கு எடுத்துச் சொல்லுகிறார்.

பவுல் முதலாவதாக ஸ்தேவானுடைய வீட்டாரைப்பற்றி இங்கு சொல்லுகிறார். அவர்கள் அகாயா நாட்டிலே முதற்பலனானவர்களாக இருக்கிறார்கள். ஆதித்திருச்சபையில், விசுவாசிகளாகயிருப்பது அவர்களுக்குக் கிடைத்திருக்கிற பெரிய சிலாக்கியம். ஆரம்பத்திலேயே சபையில் விசுவாசிகளாக சேருவது மிகவும் ஆசீர்வாதமானது. இவர்களே முதற்பலனானவர்கள். மற்ற விசுவாசிகளெல்லாம் இவர்களுக்குப் பின்பு சபையில் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள். ஸ்தேவானுடைய வீட்டார் கர்த்தருக்கும் ஊழியம் செய்கிறார்கள், கர்த்தருடைய பரிசுத்தவான்களுக்கும் ஊழியம் செய்கிறார்கள். இதற்காக தங்களை ஒப்புவித்திருக்கிறார்கள். கர்த்தருடைய ஊழியக்காரர்கள் தங்களுடைய ஊழியங்களை நன்றாகச் செய்வதற்கு ஸ்தேவானுடைய வீட்டார் உதவியாகயிருக்கிறார்கள். அவர்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்து அவர்களுக்கு ஆதரவாயிருக்கிறார்கள்.

ஸ்தேவானுடைய வீட்டாரைப்பற்றிச் சொல்லிவிட்டு, பவுல் ஸ்தேவான், பொர்த்துனாத்து, அகாயுக்கு என்பவர்களைப்பற்றிய இங்கு குறிப்பிடுகிறார். இவர்கள் கொரிந்து சபையிலிருந்து பவுலிடத்தில் வந்திருக்கிறார்கள். கொரிந்து சபையார் பவுலுக்கு செய்யவேண்டியதாயிருந்த உபகாரங்களை இவர்கள் அவருக்குச் செய்கிறார்கள். அவர்கள் பவுலின் ஆவிக்கும், சபையாரின் ஆவிக்கும் ஆறுதல் செய்கிறார்கள்.

பவுல் தன்னுடைய நிருபங்களின் மூலமாக சபைக்கு உபதேசம்பண்ணுகிறார். ஆவிக்குரிய ஆலோசனைகளைச் சொல்லுகிறார். சில சமயங்களில் கடிதம் மூலமாகச் சொல்லுவதைவிட, பிறர் மூலமாய், வாயின் வார்த்தையினால் சொல்லி அனுப்புவது அதிகப்பலனைத் தருகிறது. பவுல் கொரிந்தியருக்கு நிருபம் எழுதி, அவர்கள் பவுலுக்கு நிருபம் எழுதுவதற்குப் பதிலாக, தங்கள் சபையிலிருந்து ஒரு சிலரை பவுலிடத்திற்கு அனுப்புகிறார்கள். அவர்கள் சபையின் செய்திகளைப் பவுலுக்கு அறிவிக்கிறார்கள். இதனால் பவுலின் ஆவிக்கு ஆறுதல் உண்டாயிற்று. கொரிந்து சபையார் தங்கள் ஆவிக்குரிய ஜீவியத்தில் கர்த்தரால் ஆசீர்வதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்னும் செய்தி பவுலுக்குச் சந்தோஷத்தைத் தருகிறது. இவர்கள் சமாதானம் பண்ணுகிறவர்களாக பவுலிடத்தில் வந்திருக்கிறார்கள்.

கர்த்தருடைய ஊழியக்காரர்கள் பல இடங்களுக்கும் சென்று, அங்குள்ள ஜனங்களுக்கு ஊழியம் செய்கிறார்கள். அவர்களைப்பற்றிய நற்செய்தியைக் கேட்கும்போது ஊழியக்காரர்களுக்கு மிகுந்த சந்தோஷமுண்டாகும். நாம் நேசிக்கிறவர்களைப்பற்றி துர்ச்செய்தி கேட்கும்போது நமக்குத் துன்பம் உண்டாகும். நமக்குப் பிரியமானவர்களைப்பற்றி, நாம் கேள்விப்பட்ட துர்ச்செய்தி, பொய்யானது என்பதை அறிந்துகொள்ளும்போது, நம்முடைய ஆவிக்கு மிகுந்த ஆறுதல் உண்டாகும். பவுல் கொரிந்தியரைப்பற்றி அநேக துர்ச்செய்திகளைக் கேள்விப்பட்டிருக்கிறார். அந்தச் சபையிலிருந்து பவுலிடத்தில் வந்த விசுவாசிகள், கொரிந்து சபையைப்பற்றி நற்செய்தியை அறிவிக்கிறார்கள். இதனால் பவுலின் ஆவிக்கு ஆறுதல் உண்டாயிற்று.

அப்போஸ்தலர் பவுல் தீமோத்தேயுவை கொரிந்தியரிடத்திற்கு அனுப்புகிறார். தீமோத்தேயுவை அவர்கள் அற்பமாய் எண்ணக்கூடாது. அவரை அங்கீகரிக்கவேண்டும். தீமோத்தேயுவை அங்கீகரித்து, அவருக்குரிய மரியாதையைக் கொடுக்கவேண்டும். மேலும் கொரிந்து சபையிலிருந்து பவுலிடத்திற்கு ஒரு சில சகோதரர்கள் வந்திருக்கிறார்கள். அவர்கள் திரும்பி கொரிந்து சபைக்குப் போகும்போது அவர்களையும் அங்கீகரிக்கவேண்டும். அவர்கள் பவுலின் ஆவிக்கு ஆறுதல் சொல்லியிருக்கிறார்கள்.

கர்த்தருடைய ஊழியக்காரர்களுக்கு நாம் கீழ்ப்படியவேண்டுமென்று பவுல் புத்தி சொல்லுகிறார். ஊழியக்காரர்களுக்கு ஊழியம் செய்கிற விசுவாசிகளுக்கும் நாம் கீழ்ப்படிந்திருக்கவேண்டும் என்று பவுல் புத்திசொல்லுகிறார் (1கொரி 16:16). கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் ஒருவரையொருவர் கனம்பண்ணவேண்டும். கர்த்தரே நம்முடைய எல்லா கனத்திற்கும் பாத்திரர். நாம் கர்த்தர்மீது அன்புகூரும்போது, அவருடைய பிள்ளைகளிடத்திலும் அன்புகூருவோம்.

**வாழ்த்துகிறார்கள்**
**1கொரி 16 : 19-24**

**1கொரி 16:19. ஆசியா நாட்டிலுள்ள சபையார் உங்களை வாழ்த்துகிறார்கள். ஆக்கில்லாவும் பிரிஸ்கில்லாளும் தங்கள் வீட்டிலே கூடுகிற சபையோடுங்கூடக் கர்த்தருக்குள் உங்களை மிகவும் வாழ்த்துகிறார்கள்.**

**1கொரி 16:20. சகோதரரெல்லாரும் உங்களை வாழ்த்துகிறார்கள். ஒருவரையொருவர் பரிசுத்த முத்தத்தோடே வாழ்த்துங்கள்.**

**1கொரி 16:21. பவுலாகிய நான் என் கையெழுத்தாலே உங்களை வாழ்த்துகிறேன்.**

**1கொரி 16:22. ஒருவன் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினிடத்தில் அன்புகூராமற்போனால், அவன் சபிக்கப்பட்டவனாயிருக்கக் கடவன், கர்த்தர் வருகிறார்.**

**1கொரி 16:23. கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினுடைய கிருபை உங்களுடனேகூட இருப்பதாக.**

**1கொரி 16:24. கிறிஸ்து இயேசுவுக்குள்ளான என்னுடைய அன்பு உங்களெல்லாரோடுங்கூட இருப்பதாக. ஆமென்.**

இந்த நிருபத்தின் முடிவுரையாக அப்போஸ்தலர் பவுல் கொரிந்து சபையாரை வாழ்த்துகிறார். முதலாவதாக ஆசியா நாட்டிலுள்ள சபையார் அவர்களை வாழ்த்துவதாகச் சொல்லுகிறார். பவுல் இந்த நிருபத்தை எழுதும்போது ஆக்கில்லாவும் பிரிஸ்கில்லாளும் எபேசு பட்டணத்திலிருக்கிறார்கள். இவர்களுடைய வீட்டில் விசுவாசிகளெல்லோரும் சபையாகக் கூடிவந்து கர்த்தரை ஆராதனை செய்கிறார்கள். இந்த சபையாரும் மேலும், எபேசுவிலுள்ள சகோதரரெல்லாரும் (1கொரி 16:20) கொரிந்து சபையாரை வாழ்த்துகிறார்கள். பவுல் யாருக்கு நிருபம் எழுதினாலும், அவர்களுக்கு வாழ்த்துதல் சொல்ல தவறுவதில்லை. சிநேகிதருக்கு வாழ்த்துதல் சொல்லுவது பவுலின் சுபாவம்.

கர்த்தருடைய ஊழியக்காரராகிய நாம் பிறரிடத்தில் அன்புகூரவேண்டும். பிறரை வாழ்த்தவேண்டும். பிறரோடு சிநேகமாயிருக்கவேண்டுமென்று விரும்ப வேண்டும். நாம் ஒருவரை வாழ்த்தும்போது, அவரிடத்தில் நம்மைப்பற்றி தவறான அபிப்பிராயம் இருந்தால் அது குறையும். அவர்களும் நம்மிடத்தில் அன்புகூருவதற்கு வாய்ப்பு உண்டாகும்.

ஆசியா நாட்டிலுள்ள சபையார், கொரிந்து சபையாரை கர்த்தருக்குள் மிகவும் வாழ்த்துகிறார்கள். நம்முடைய வாழ்த்துதல் உலகப்பிரகாரமான வாழ்த்துதலாகயிருக்கக்கூடாது. நம்முடைய வாழ்த்துதலில் தேவகிருபையும் அவருடைய ஆசீர்வாதமும் வெளிப்படவேண்டும்.

பவுல் இந்த நிருபத்தில் ஒரு வீட்டு சபையைப்பற்றி எழுதுகிறார். ஆக்கில்லா, பிரிஸ்கில்லாள் ஆகியோருடைய வீட்டில் விசுவாசிகள் சபையாகக் கூடிவந்து கர்த்தரை ஆராதிக்கிறார்கள். ஒவ்வொரு விசுவாசியின் வீடும் ஒரு சபையாகயிருக்க வேண்டும். இப்படிப்பட்ட வீட்டு சபைகள் எல்லா விசுவாசிகளுடைய வீடுகளிலும் இயங்கவேண்டும். எங்கே இரண்டுபேர், மூன்றுபேர் இயேசுகிறிஸ்துவின் நாமத்தினால் கூடியிருக்கிறார்களோ, அங்கே அவர்கள் கர்த்தரை ஆராதிக்கவேண்டும். இயேசுகிறிஸ்துவின் பிரசன்னம் அவர்கள் மத்தியிலிருக்கிறது. ஆரம்பத்தில் வீட்டு சபை சிறியதாகயிருந்தாலும், பின்பு இது வளர்ச்சி பெற்று, பெரிய சபையாகப் பெருகுவதற்கு வாய்ப்புள்ளது.

ஒருவரையொருவர் பரிசுத்த முத்தத்தோடு வாழ்த்துங்களென்று பவுல் ஆலோசனை சொல்லுகிறார் (1கொரி 16:20). இந்த வார்த்தைக்கு நல்எண்ணத்தோடும், நல்உள்ளத்தோடும், பிரிவினைகளில்லாமலும், மனக்கசப்பும், பேதங்களும் இல்லாமலும் வாழ்த்துவது என்று பொருள். விசுவாசிகளுக்குள் சகோதர சிநேகம் காணப்படவேண்டும். நாம் மற்ற சகோதரரை சிநேகித்தால்தான், அவர்களும் நம்மை சிநேகிப்பார்கள்.

கொரிந்து சபையாரை ஆசியா நாட்டிலுள்ள சபையாரெல்லாரும் வாழ்த்தும் போது, பவுலும் அவர்களை வாழ்த்துகிறார். பவுல் தன்னுடைய கையெழுத்தாலும் அவர்களை வாழ்த்துகிறார். தன்னுடைய நிருபத்தின் முடிவில், பவுல் தன் கையொப்பமிட்டு இந்த நிருபத்தை எழுதி முடிக்கிறார். இந்த நிருபம் பவுலுடைய நிருபம்தான் என்பதை அவருடைய கையெழுத்து உறுதிபண்ணுகிறது. பவுல் தன்னுடைய எல்லா நிருபங்களையும் அவருடைய கையினால் எழுதினாரென்று உறுதியாய்ச் சொல்லமுடியாது. ஆனாலும் அவர் தன் கையெழுத்தாய் அதிகமாய் எழுதியிருக்கிறார் (கலா 6:11).

பவுல் கொரிந்து சபையாரை வாழ்த்தினாலும், அவர்களுக்கு எச்சரிப்பின் வார்த்தையையும் சொல்லுகிறார். சில சமயங்களில் எச்சரிப்பின் வார்த்தைகள் நம்மை பயமுறுத்துவதுபோல இருக்கும். கர்த்தருக்குள் நமக்கு பயமும் பக்தியும் இருக்கவேண்டும். நாம் பரிசுத்தமாய் ஜீவிப்பதற்கு பயபக்தி தேவை. பவுல் எல்லோரையும் கடின வார்த்தைகளால் எச்சரிக்கவில்லை. கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினிடத்தில் அன்பு கூராமல் போகிறவர்களை மாத்திரம் பவுல் எச்சரிக்கிறார். அப்படிப்பட்டவர்கள் சபிக்கப்பட்டவர்களாகயிருப்பார்கள் என்று சொல்லுகிறார். கொரிந்து சபையிலுள்ள விசுவாசிகளில் சிலர் இயேசு கிறிஸ்துவினிடத்தில் அன்புகூரவில்லை. அவர்கள் உலகத்தில் அன்புகூருகிறார்கள். தங்கள் மாம்சத்தில் அன்புகூருகிறார்கள். அப்படிப்பட்டவர்கள் சபிக்கப்பட்டவர்கள்.

ஒருவன் தன்னை கிறிஸ்துவின் விசுவாசி என்று சொல்லிக்கொண்டு, அவன் கிறிஸ்துவிடத்தில் அன்புகூரவில்லையென்றால், அவன் கிறிஸ்துவுக்கு விரோதமாகப் பாவம் செய்கிறான். இப்படிப்பட்டவனுக்கு ஆத்தும அழிவு சடுதியில் வரும். ஒரு சிலர் இயேசுகிறிஸ்துவின் நாமத்தை வாயினால் மாத்திரம் சொல்லுவார்கள். ஆனால் அவர்களுடைய இருதயத்தில் கிறிஸ்துவின் மீது உண்மையான அன்பு இராது.

நாம் இயேசுகிறிஸ்துவின்மீது உண்மையாய் அன்புகூரவில்லையென்றால், அவருடைய கற்பனைகளையும் பிரமாணங்களையும் கைக்கொள்ள மாட்டோம். கிறிஸ்துவில் அன்புகூராதவர்கள் இந்தப் பிரபஞ்சத்திலும், தங்கள் மாம்சத்திலும் அன்புகூருவார்கள்.

கிறிஸ்துவினிடத்தில் அன்புகூராமல் போகிறவர்கள் சபிக்கப்பட்டவர்கள் என்று சொல்லிவிட்டு, கர்த்தர் வருகிறாரென்று பவுல் சொல்லுகிறார். "கர்த்தர் வருகிறார்" என்பதை அறிவிக்க, "மாரநாதா" என்னும் வார்த்தையைப் பயன்படுத்துகிறார். இது சீரிய பாஷையின் வார்த்தை. இந்த வார்த்தைக்கு "கர்த்தர் வருகிறார்" என்று பொருள். ஜனங்கள் எந்தக் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினிடத்தில் அன்புகூராமல் போனார்களோ, அந்தக் கர்த்தர் அவர்களை நியாயந்தீர்ப்பதற்காக வருகிறார். அப்படிப்பட்டவர்கள் சபிக்கப் பட்டவர்களாகயிருப்பார்கள். கர்த்தரால் ஆக்கினைத் தீர்ப்புக்கு உட்படுத்தப்பட்டவர்கள் அழிந்து போவார்கள். இயேசுகிறிஸ்துவினிடத்தில் நமக்கு உண்மையான விசுவாசம் இருக்கும்போது, நாம் மெய்யாகவே அவரிடத்தில் அன்புகூருவோம். இயேசு கிறிஸ்துவிடத்தில் அன்புகூராதவர்கள், அவரை விசுவாசியாதவர்களாகவே இருப்பார்கள்.

பவுல் இந்த நிருபத்தை எழுதி முடிக்கும்போது கொரிந்து சபையார் எல்லோரையும் வாழ்த்துகிறார். இயேசுகிறிஸ்துவுக்குள்ளான தன்னுடைய அன்பு, அவர்களெல்லோடுங்கூட இருப்பதாக என்று வாழ்த்துகிறார். கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் கிருபையே சகல நன்மையையும் செய்கிறது. அவருடைய கிருபை மாறாதது. நித்திய காலத்திற்கும் நிலைத்து நிற்கக்கூடியது.

நாம் சகவிசுவாசிகளை வாழ்த்தும் போது, "கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் கிருபை உங்களோடுகூடயிருப்பதாக" என்று சொல்லி வாழ்த்தவேண்டும். இதற்கு அதிகமாக நாம் வாழ்த்தவேண்டிய அவசியமில்லை. இதற்கு குறைவாகவும் நாம் வாழ்த்தக்கூடாது. நம்முடைய வாழ்த்துலில் பூரண அன்பு நிரம்பியிருக்க வேண்டும். பவுல் அவர்கள்மீது அன்புகூருவதினால்தான், அவர்களை மென்மையாகக் கடிந்துகொள்கிறார். அவர்கள் சபிக்கப்படக்கூடாது என்பதில் அக்கறையோடிருக்கிறார்.

பவுல் கொரிந்து சபையிலுள்ள விசுவாசிகளின் நன்மையை நாடுகிறார். கிறிஸ்து இயேசுவுக்குள் பவுல் அவர்களிடத்தில் அன்புகூருகிறார். இந்த நிருபத்தை எழுதி முடிக்கும்போது, தன்னுடைய அன்பை அவர்களுக்கு எடுத்துச்சொல்லி, இந்த நிருபத்தை நிறைவுசெய்கிறார். பவுல் அவர்களை விட்டுப் பிரிந்திருந்தாலும், அவருடைய இருதயம் அவர்களோடு கூடவே இருக்கிறது. அவர்களுடைய இருதயம் இயேசுகிறிஸ்துவில் நிலைத்திருக்கும் போது, இயேசுகிறிஸ்துவுக்குள்ளான பவுலின் அன்பு அவர்களோடு எப்போதும் கூடவே இருக்கும்.

கிறிஸ்துவுக்குள் விசுவாசி களாகயிருக்கிற எல்லோரிடத்திலும் நாம் அன்புகூர வேண்டும். எல்லா மனுஷரிடத்திலும் நம்மால் அன்புகூர முடியாமல் போகலாம். ஆனாலும் கிறிஸ்துவுக்குள்ளான விசுவாசிகளிடத்தில் நாம் அன்புகூரவேண்டியது மிகவும் அவசியம். கிறிஸ்துவை சிநேகிக்கிறவர்களை நாமும் சிநேகிக்க வேண்டும். கிறிஸ்துவுக்கு நெருக்கமாகயிருக்கிறவர்கள் நமக்கும் நெருக்கமாகயிருக்க வேண்டும். இயேசுகிறிஸ்துவுக்குள்ளான தன்னுடைய அன்பை வெளிப்படுத்தி பவுல் இந்த நிருபத்தை நிறைவு செய்கிறார்.